1255 19/5

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
[illegible]
PHONE [illegible]

சிவாகமசித்தாந்த ஸாரமது அம்சத்தினுள்ள

நிபுகீதை

இது

நிருவிடைமருதூர் ஸ்ரீ பிகூடசாஸ்திரிகள் என்னும்

உலகநாத சுவாமிகளால்

மொழிபெயர்க்கப்பெற்று

கோவிலூர்

ஸ்ரீமத்துராமலிங்க ஞானதேசிகாவர்களின் ஆதீனம்

பொன்னம்பல ஞானதேசிகரவர்களால்

பரிசோதித்தச்சிட்டதற்கிணங்க

டி கோவிலூர்

ஸ்ரீ மகாதேவ ஞானதேசிகரவர்களின்

உத்தரவின்படி

கோட்டையூர்

க. வீ. சொ. வீ. அழகப்பையாவாலும்

பனையப்பட்டி

சி. மு. சி. சின்னையா செட்டியாராலும்

சென்னை சுந்தரி பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு.

சுக்லஆடி மகாமீ

1930ஆம்

1563

காபிரைட் ரிஜிஸ்தர்]

[விலை ரூபா. 2.

Acc-No: 1563
Q23

சிறப்புப்பாயிரம்

தஞ்சைமாநகரம்-சதாவதானம்

ம-ரா-ரா-ஸ்ரீ

சுப்பிரமணிய ஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பொன்பூத்த விதழிமலர்த் தொடைமிடையுஞ் சடையுடையான்
புகன்ற மெய்ம்மை
இன்பூத்த சிவரகசி யப்பெயர்த்த விதிகாசத்
திருமூன் றென்னுந்
தன்பூத்த வம்சமதாம் ரிபுகீதை தனேயினிதாத்
தமிழிற் றந்தான்
தென்பூத்த விடைமருதூ ருறையுலக நாதமறை
தேர்தூ யோனே. (1)

அன்னதுதொன் னுட்பிரதி யாய்ப்பலவா யுறுபிழையை
யகற்றி மாறும்
வன்னமெலா மூன்னுள்ள வண்ணமென வேயுலகில்
வழங்கத் தந்தான்
மன்னியமா மாயையினுன் மறைந்திடுமான் மாவையவ்வா
வரண நீக்கி
முன்னுளவண் ணங்காட்டு மியலெனப்பொன் னம்பலப்பேர்
முனிவன் ருனே. (2)

அப்பிரதி தனேத்தஞ்சை வீரபத்ர மெய்ப்புலவ
னகிலத் தோர்கள்
இப்பிரதி யேதோமில் மெய்ப்பிரதி யென்றுமகிழ்ந்
தேற்கும் வண்ணம்
எப்பிரதி மானிடரும் புகழரவக் குறிச்சியில்வா
ழிராம சாமி
மெய்ப்பிரபு கைப்பொருளே மெய்ப்பொருளென் றச்சியற்றி
விளக்கி ஞனே. (3)

உ

திருவையாற்றில்

ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகள் பரம்பரையில் எழுந்தருளிய

சிவானந்த சுவாமிகள்

மாணக்கருளொருவராகிய

கருவூரைச்சார்ந்த

நல்லமாகாளிப்பட்டி-

சு. தெய்வசிகாமணிக்குருக்கள்

இயற்றிய

பஃறொடை வெண்பா.

சீர்பூத்த வேதாந்த சித்தாந்தத் துட்பொருளாய்ப்
பார்பூத்த மூக்கட் பரஞ்சுடராய்க்—கார்பூத்த

வண்ணப் பெருமானு மாமலர்வாழ் வாணுங்கண்
ணெண்ணப் படுமா யிரத்தானும்—விண்ணப்பஞ்

சாற்றிப் பணியுந் தனிமுதலாய்த் தொண்டாகம்
வீற்றிருக்கு ஞான விளக்கொளியாய்—மாற்றமனங்

காண்டற் கதோசரமாய்க் கற்பனையொன் றில்லாதாய்
வேண்டெவ் வுயிர்க்கும் விலட்சணமாய்க்—காண்டகுசீர்த்

தொண்டரெலா மூய்வான்சிற் சோதி யருண்மேனி
கொண்டு மதிநதிவேய் கோடீரம்—வெண்டலைகொள்

மாலிகையெண் டோளத்த மான்மழுவெண் மால்விடையோர்
பாலிகையெண் ணுன்கறஞ்செய் பார்ப்பதியாள்—வாலியசிற்

றங்கண்மணி மாலை யனைத்துந் துலங்கிடவே
செங்கயிலை வாழுஞ் சிவபெருமான்—றுங்கமிகுஞ்

சந்நிதியின் முன்னர்ச் சதுர்முகவன் சேயெனப்பேர்
மன்னி யுதித்தரிபு மாமுனிவ—னுன்னதமாப்

பெற்றவருண் மெஞ்ஞானப் பேரின்ப நிண்ணயத்தை
யுற்ற நிதாகனுக்கங் குள்ளபடி—சொற்றதெனுங்

தூய வடமொழியிற் சொன்னமா விதிகாச
மாயசிவ ராசியத்தா ரூமதிச—மேயபுக

ழுள்ளரிபு கீதையினை யுள்ளபடி யெல்லோருங்
கள்ளமற வெளிதாக் கற்றுணரத்—தெள்ளுமறை

யின்மொழியோர் கோமா னிடைமருதூர்க் கண்ணெழுந்த
நன்மொழியோ ரேத்துலக நாதமகான்—றென்மொழியி

னத்தியா ரும்பரவு நாற்பத்து நான்கென்னு
மத்தியா யத்தொருநூ லாக்கினை—னத்தகைசே

ரிந்நூலை யாரு மெளிதிலுணர்ந் துய்யும்வணம்
முன்னூ லுரைத்த முறைவழுவா—தெந்நாளு

மேரோங்கு சைவத் தியலோங்கு பத்தியுளான்
பாரோங்கு மேழிப் பதாகையுளான்—சீரோங்குங்

கங்கைகுலத் தெண்ணீர்க் கடலிலெழு வின்மணியான்
செங்குவளை மாலையணி திண்புயத்தா—னங்கருணை

மெய்யுடையான் கல்வி வியப்புடையான் கற்பகநேர்
கையுடையான் ஞானக் களிப்புடையான்—செய்யமகப்

பேறுடையான் செல்வப் பெருக்குடையான் சென்னிமிசை
யாறுடையா னன்பரடிக் கன்புடையான்—வீறுடைமை

மங்காத கொங்கு வளநா டதிற்சிறந்த
நங்காஞ்சி யென்னு நதிசூழ்ந்து—கொங்காருந்

தண்டா மரைமலரா டன்முகமென் றெம்முகமுங்
கொண்டா டரவக் குறிச்சியுளான்—கண்டார்கட்

கின்பைப் பெருக்கு மிராமசா மிக்குரிசி
லன்புடனே யச்சிட் டளித்தியெனத்—துன்பகற்றும்

பல்லுயிர்மேற் காருண்யம் பாச வயிராக்யம்
நல்லசிவ பத்திபா ஞானமெனச்—சொல்லலுறு

மிந்நான்கு மொன்ரு விசைந்தோர் வடிவெடுத்த
நன்னு டெனும்பாண்டி நாட்டினிடைப்—பன்னுழம்

பொன்னிலவு கோயிலூர்ப் பொன்னம் பலநாதன்
முன்னிலையி லிந்நூன் முழுதாய்ந்து—நன்னயமா

வச்சிட் டளித்தனன்வை யத்திடையென் போல்வாரு
மெய்ச்சிட்டர் தாமும் விமலான்ம—நிச்சயமா

மெய்வாழ் வடைந்து வினைவாழ்வை வோறுத்திங்
குய்வா னருளே யுருவாகி—யையாற்றிற்

றங்குஞ் சிவாநந்த சற்குருவின் பொற்பாத
பங்கயத்திற் குள்ளன்பு பற்றியே—துங்கமிகுஞ்

சீலம் புனையுந் திருப்பணிசெய் மெய்த்தொண்டன்
ஞாலம் புகழ்சோழ நன்னுட்டிற்—சோலை

மருக்கதிர்சூழ் மேன்மாட மாளிகைசூழ் தஞ்சைத்
திருக்கரந்தை யம்பதிவாழ் சீரோன்—விருப்பொன்றின்

மேவடியார் நட்புடையான் வீரபத்தி ரக்கவிஞன்
ஓவலிலா வன்பா லுவந்து.

இ ஃ து

இந்நூலில் முன்னுள்ளது

எல்லீசர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருவிடைமா மருதூரில் வசிப்போ னெகித்
தியக்கமிலாப் பிரமகுலத் துதித்தோ னெகி

யிருமையிலா வகண்டவுணர் விசைந்தோ னெகி
யெப்போது மின்பமிகு முலக நாத

னிருமலமாம் வடமொழியா னிகழ்த்தப் பட்ட
நிரதிசய மகிமையுள வின்த நூலை

யருள்வடிவாம் பரமசிவ னருளி னலே
யற்புதமாந் தமிழ்க்கவியா லமைத்தா னன்றே.

19/5

உ

தஞ்சைமாநகரம்

நா. வீரபத்திரபிள்ளை

விளம்பிய

எஸ்ரீர்க்கழிநெடிலடி

யாசிரிய

விருத்தம்.

அத்தனன்றருள் வண்ணம் ரிபுமுனி
யாய்ந்தாகற் கருள்வடநூலினை
அத்தியாயங்க ணைற்பத்திலைஞ்ஞூள்
ளாயிரத்துத் தொளாயிரத்தோடிரு
பத்திலைஞ்சு விருத்தத்தமிழிறை
பாடினனிடை மாமருதூருளான்
உத்தமாநந்தத் தாண்டவற்கன்புளா
னுலகநாத னெனும்மறைவல்லனே. (1)

அன்னநூலை யரவக்குறிச்சிவா
ழஷ்டலட்சுமி வாசன்மெய்யன்புடன்
றன்னதுள்ளத் தலத்திடைத்தேசிகன்
ரூலைவைத்தநற் சைவசிகாமணி
இந்திலம்புகழ் கங்கைகுலாதிப
னிராமசாமி யெனுஞ்சுகுணகரன்
பன்னுமச்சிற் பதித்திடவேண்டியிப்
பாரொளாஞ்சுகம் பற்றச்செய்தானரோ. (2)

சிதம்பரம் ஸ்ரீமத் பொன்னம்பல ஞானதேசிகர் மடாலயம்

ஸ்ரீமத் சிதம்பரஞானதேசிகரின் மாணவர்

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர்

ஸ்ரீமத் நாராயணசுவாமிகளியற்றிய

சிறப்புப்பாயிரம்.

பாடல்சால்சிறப்பிற்
பாண்டிநாடே
நூதல்விழிநாட்டத்து
றமிழமிழ்தந்குங்
சேதுகாவலர்
வைகியநகரா
திருமலிதருவின்
விசும்பிடைச்செலீஇ
லொளிகளுன்மலரொடு
மிகைகொளீஇவிரிந்து
போன்பவெள்ளம்
தேக்கெறிந்துநசையைப்
தம்மொடுபயின்ற
ளெடுங்கியவுளத்த
யோகைநனிகொளூ
யண்மியதாண்டவ
மட்டுண்வாழ்க்கையர்
கட்டழகதனிற்
னழியிழியின்பத்
வுள்ளுவர்ப்புறீ இ
வாய்நீருமிழ்ந்து
நகைப்பதுபோலு
தண்டலைஞமிர்ந்த
மறையவர்முழக்கு
வணிகர்முழக்குங்
முழுநர்முழக்குந்
கோவிலூரதனின்
நெல்லைநாயகிதன்
யொன்றேபொருளென
வென்றூழனவே
முத்திராமலிங்க
தண்ணளிக்கிலக்கா
ஞாலத்தின்புணீ இக்
கண்டமெய்த்துறவார்
ளோங்கியதுறவினைத்
வருணசலப்பேர்க்
வடமொழியதனி

பரதத்தோங்கிய
பழம்பதியெனப்புகழ்
முதல்வனுட்டினிற்
கமழ்தருமினிய
பாதுகாவலில்
மைமுகிறவழுந்
பருவரைதழீ இ
யசும்புறுதேற
தளவமதன்றலை
தகைபடக்கிடப்பது
பெருகமாந்தி
போக்கியமுனிவரர்
செம்மையதாதலி
துடலதாய்வணங்கி
வும்பர்நாடதனை
ரவாப்பெருக
மங்கையர்சிறந்த
கட்டுண்டிறத்தின—ராதலி,
தழுந்தினாரிவரென
யொடுங்காதெள்ளுபு
வானவர்தம்மை
நரூநதிவைகரைத்
வண்டறைமுழக்கு
நறுமணமுழக்கும்
கணிகையர்முழக்கு
தொழுநர்முழக்கு—விலைபெறும்,
மேவுறுமளிவிழி
னெல்லையிலருள்பெறீ இ
வுலகமுணரிய
யெழில்பெறவிளங்கு
முனிகுருபரன்சீர்
யுண்ணசையொழீ இ
காலுமடையெனக்
தொண்டர்தங்குழுவினு
தாங்கியபெருமைய
கருணைகரன்மூன்
னடைபெறுரிபுமொழி

கீதையைத்தமிழி
வளம்பலபொலியுந்
பம்பியபுகழ்பெறு
விடைமருதூரி
பெற்றுயர்ஞானப்
னந்தணர்குலத்தில்
னலகிலுயர்தவத்
பூண்டதுறவறக்
மொழிபெயர்த்தனன்மெய்
பனையிதழதனில்
யெழுதாவெழுத்தினிற்
துறவினிற்சுகளு
பதிகருணிதி
தில்லையில்வதிதரு
பொன்னம்பலனெம்
பதிப்பித்தனன்முன்
புத்தகங்கிடைத்தில
பதிப்பியுமெனவே
பலமெனப்போந்த
ஞானதேசிகளுய்
மந்தமிலாப்பொரு
தண்ணளிசுரக்கும்
குருமகாதேவத்
ஞணையிட்டன
வாட்டமில்செல்வக்
வாழ்தருவணிகன்
சொல்லொணாப்புகழ்பெறு
வீரசேகரன்றாள்
வடியவர்குழுவினுட்
வழகப்பவேளொடு
புதுவைநாடதனிற்
பனைசையில்வாழும்
னேவராயினுந்
குளத்தினிற்கொண்ட
ணுண்ணைகிழ்புருகி
பேணிப்பணியும்
சீஞமூஞச்
மண்மினருவக்கு
செம்மலாரிய
றூட்டுணைபரவி
கற்றுத்துறைபோகிய
சுப்பையமுனிவரன்
பதிப்பித்தனரால்

லோதியருள்கென
தலம்பலவற்றினும்
செம்பிநாடதனி
னடவிறையருண்மிகப்
பெட்புறுசீல
வந்தவதரித்தோ
துலகநாதப்பேர்
காண்டகுமுனிவரன்
விழிபெறவெவரும்
வனெபெறுமதனே
பழுதேயிலாது
யறிவினிற்சனகளுய்ப்
பொதிதருமுளத்தளுய்த்
மெல்லையில்பெருமைய
புனிதகுருபரன்
படிப்போர்க்கின்ஞள்
தாதலிற்புதிதாய்ப்
பாரவர்தவத்தின்
நலமுறுகோவிலூர்
மாணவர்க்கென்று
டந்தெவர்தமக்குந்
புண்ணியக்குரிசில்
தெருண்மிகுமுனிவர
னதுதலைக்கொளீ இ
கோட்டையூரதனில்
ழுழ்வறுதனிகன்
வெல்லுறுபொறிய
வேண்டிப்பணிந்த
படிதருகவீசொ
மழவேற்றண்ணல்வாழ்
கதுவியசெல்வப்
தனமிகுவணிக
தாவறுநீற்றினைக்
கொள்கையராயி
யுவப்புடனவர்தமைப்
பெருந்தவச்செல்வன்
சின்னையவேளு
மணிதிலைவாழுமெஞ்
சிதம்பரமுனிவரன்
வேட்டவைவிடஇக்
முற்றவக்குரிசில்
றுணைகொடு
பண்புமீக்கொளவே.

பக்கம்.	அத்தியாயத்தெண்.	அத்தியாயம்.	பாட்டெண்ணிகை.
1	1	நூல்வரலாறு மான்மநிர்ணயமுஞ் சுவாநுபவமு முரைக்கு மத்தியாயம்.	85
23	2	பிரமசொரூப நீயேயென்றுபதேசிக்கு மத்தியாயம்.	50
36	3	சருவமு மித்தையென்றுஞ் சருவமுஞ் சின்மாத்ரமென்றுங்கூறி நிர்க்குண பூசையுமுரைக்கு மத்தியாயம்.	44
47	4	அகண்டைகரச நிர்ணயமு மகண்டாநுபூதியு முரைக்கு மத்தியாயம்.	43
58	5	அனேத்துஞ் சசவிஷாணமென்று மவையெல்லாம் பிரமமென்று முரைக்கு மத்தியாயம்.	40
69	6	பிரமதீர்த்த ஸ்நானமும் பிரமமந்திரமு முரைக்கு மத்தியாயம்.	41
79	7	பிரமதர்ப்பணமும் பிரமவோமமு முரைக்கு மத்தியாயம்.	39
89	8	சிவன்முத்தனிலக்கண முரைக்கு மத்தியாயம்.	30
97	9	விதேக முத்தனிலக்கண முரைக்கு மத்தியாயம்.	30
105	10	சருவமு மான்மசொரூபமென் றுரைக்கு மத்தியாயம்.	36
114	11	சருவமும் பிரமமென்று மதுவே நானென்றும் போதமுரைக்கு மத்தியாயம்.	44
125	12	சருவமும் பிரமமாத்திர மென்றுரைக்கு மத்தியாயம்.	47
137	13	அனேத்து மசத்தென்று மவையெல்லாஞ் சித்தென்று முரைக்கு மத்தியாயம்.	51
150	14	அகண்ட சொரூபாநுசந்தான முரைக்கு மத்தியாயம்.	41
160	15	சித்தஜயோபாய முரைக்கு மத்தியாயம். ...	51
173	16	சித்தசாந்தி யுரைக்கு மத்தியாயம். ...	51
185	17	பரசொரூபஞானத்தாற் பரசொரூபஸ்திதியுரைக்கு மத்தியாயம்.	54

பக்கம்.	அத்தியாய எண்.	அத்தியாயம்.	பாடற் றொகை.
199	18	அகண்டசொரூபத்தியான மூரைக்குமத்தியாயம்.	51
212	19	ஞானியினது மகிமை யுரைக்கு மத்தியாயம்.	61
227	20	பரசொரூப நிச்சயத்தாற் பரமுத்தி யுரைக்கு மத்தியாயம்.	51
240	21	பிரமான்ம சிந்தனை யுரைக்கு மத்தியாயம் ...	48
252	22	அகண்டசொரூப நிச்சய முரைக்கு மத்தியாயம்.	43
263	23	அத்துவித வுண்மை யுரைக்கு மத்தியாயம் ...	33
273	24	ஆநந்த சொரூபபாவனையா லாநந்தாப்தி யுரைக்கு மத்தியாயம்.	33
281	25	சுத்தப்பிரம பாவனையாற் பரமுத்தி யுரைக்கு மத்தியாயம்.	36
290	26	அத்துவித சொரூபத்தி லபேதநிட்டை யுரைக்கு மத்தியாயம்	45
301	27	சுத்தசொரூபாநு சந்தானத்தாற் சாந்தி யுரைக்கு மத்தியாயம்.	45
312	28	நான்கு மகாவாக்கியார்ந்த முரைக்கு மத்தியாயம்.	61
328	29	சன்மாத்ர சொரூப நிதித்தியாச முரைக்கு மத்தியாயம்.	43
339	30	பரப்பிரம நிச்சயத்தாற் பரமாநந்தமுரைக்கு மத்தியாயம்.	34
347	31	அறுபத்துநான்கு திட்டாந்தத்தோ டத்துவித வுண்மையுரைக்கு மத்தியாயம்.	35
356	32	பரவத்து பாவனையாற் பரசொரூபத் திதி யுரைக்கு மத்தியாயம்.	42
366	33	அகண்டான்ம ஞான மகிமையுரைக்கு மத்தியாயம்.	34
375	34	சகலமும் பிரமமென்று மான்மாவே சகல முமென்றுங்கூறி யகம்பிரம நிச்சயத்தின் மகிமையுரைக்கு மத்தியாயம்.	53
388	35	அத்துவித நிச்சயஞானத்தி லான்மாவிலம ர்கின்ற சமாதியுரைக்கு மத்தியாயம்.	47

பக்கம்.	அத்தியாயத்தெண்.	அத்தியாயம்.	பாடற் றொகை.
400	36	அகண்ட பரபாவனையான்மனோநாசஞ்செய்யென்று மகம்பிரமபாவனையாலஞ்ஞானுதி நசிக்குமென்று முரைக்குமத்தியாயம்.	47
412	37	அகண்டபர நிச்சயத்தினு லத்துவிதப்பிரமாவாயென் றுரைக்கு மத்தியாயம்.	33
420	38	இந்நூன்மகிமையுரைக்கு மத்தியாயம். ...	51
433	39	ரிபு நிதாகனே யநுபவம்வினவ வன்னோன்றனதகண்டாநு பூதியினுற் குருவருளேயன்பின்வியந்துதுதிக்கு மத்தியாயம்.	31
441	40	நிதாகன் றனதநுபவத்தினுற் றிருசியமேயில்லையென்றுந்திருக்கான பிரமமேநானென்றுங் குரவனுக்கு நமஸ்காராதிசெய்யவிட மில்லையென்று முரைக்கு மத்தியாயம்.	38
451	41	நிதாகன் றன்னநுபவத்தினுல் நானே சராசரப்பிரபஞ்சமெல்லா மானேனென்று நானே சத்தியஞான வநந்தாநந்தப் பிரமமானேனென்று முரைக்கு மத்தியாயம்.	31
459	42	நிதாகன்றன் னநுபவத்தினு லிந்நூன்மகிமையுமிந்நூலநுக்கிரகிக்குங் குருமகிமையுமிந்நூலிற்சொன்ன ஞானஞ் சிவகிருபையால் வரவேண்டுமென்று முரைக்கு மத்தியாயம்.	26
466	43	நிதாக ஞசாரியர்கிருபையா லவித்தை முதலானவுபாதிநீங்கி நித்தசுத்த புத்தமுத்த சிதாகாய சொரூபமாய்ச் சீவன் முத்தித்தன்மையடைந்ததை யுரைக்கு மத்தியாயம்.	35
475	44	பரமசிவ கருணைக்கு முக்கிய வேதுவான நித்தியாசனமுட னிந்நூலின் மகத்துவஞ் சொல்லி முடிக்கு மத்தியாயம்.	52

ஆக அத்தியாயம் 44-க்கு திருவிருத்தம் 1924.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகணேசாயநம :

ரிபுகீதை.

முதலாவது

நூல்வரலாறும், ஆன்மநிர்ணயமும், சுவானுபவமும்
உரைக்கும் அத்தியாயம்.

பரசிவ வணக்கம்.

ஆனைமுக னுறுமுக னருளாந் தேவி
யநந்தகண மளவற்ற முனிவர் தேவ
ரேனையுள நல்லன்ப ரியாவ ராலு
மெப்பயனும் பெறவேண்டி யிதயத் தின்க
ணானமற வுபாசிக்கப் பட்டன் னேர்க்கிங்
குவந்தபய னருள்கருணை மூர்த்தி யாகி
வானமென வகண்டசிதா காய மான
வத்துவதாம் பரசிவனை வணங்கல் செய்வாம். (1)

நடேசர்.

சுத்தசிதா காயமதா மெந்த வத்து
சுதந்தரமாந் தனதுபர சத்தி யோடே
பத்தரெலா முய்யும்வணங் கருணை யாலே
பரதத்வ வடிவாகத் திரண்டெ ழுந்தே
யத்துவிதா நந்தமுண ராநுப வத்தி
னதிசயமிங் கெல்லோரு மறியும் வண்ண
நித்தமுமே யாநந்த நடனஞ் செய்யு
நிதமந்த வத்துவினை நினைவில் வைப்பாம். (2)

இதுவுமது.

எவ்வடிவி னிடப்பாக மிலங்கா நின்ற
விவ்வுலக மனைத்துக்கு மாதா வாகு
மெவ்வடிவின் வலப்பாக மிலங்கா நின்ற
விவ்வுலக மனைத்துக்கும் பிதாவு மாகு
மெவ்வடிவின் பதத்திலுள சிலம்பி னோசை
யெவ்விதமா நூலுக்கு மேது வாகு
மெவ்வடிவின் விழிமூன்று லிலங்கு மியாவு
மிணையற்ற வவ்வடிவே யெம்மைக் காக்க. (3)

சிவன் முதலியோர் வணக்கம்.

அகிலசகன் னுயகனு யநந்த சத்தி
யமைவுற்ற வகண்டசிவன் சரணம் போற்றி
நிகிலசகன் மாதாவாய் நித்யா நந்த
நிசவடிவா மம்பிகையின் சரணம் போற்றி
சகலவித விக்கினமுந் தீர்த்தெல் லோர்க்குஞ்
சாதகமாம் விநாயகனற் சரணம் போற்றி
தகைமைமிகு மன்பர்க்குச் சிவஞா னத்தைத்
தந்தருளுஞ் சண்முகனற் சரணம் போற்றி. (4)

நூல்வரலாறு.

சகமெவையுங் கற்பித்த பரேச னிந்தச்
சகத்திலுள சீவரெலா முய்ய வேண்டி
வெகுவிதமாங் கருமமுபா சனைகண் ஞானம்
விளம்பியிடும் வேதத்தை முன்புண் டாக்கி
மிகவுமகா நுண்மையதா மவ்வே தத்தின்
மெய்ப்பொருளை நன்றுக வுணரும் வண்ணம்
பகர்மிருதி புராணமிதி காச மற்றும்
பலவிதமா நூற்களையும் படைத்தா னன்றே. (5)

அகிலவித நூற்களினு மேலாய் நின்ற
வருமறையின் முக்கியத்தாற் பரிய மான்
விகலமுறு வத்துவித நிர்ண யத்தை
விளம்பியிடும் புராணமிதி காசங் கட்கு
ளிகழ்வில்சிவ ரகசியமென் றுரைக்கு நாம
மிசைந்தவொரு விதிகாச மிகவு மேலாம்
புகலியவிவ் விதிகாசம் பனிரண் டம்சம்
பொருந்தியதர் மெத்தவுமே புனித மாகும். (6)

பரஷியவிவ் விதிகாசந் தன்னை முன்னம்
பரமசிவன் பரமசிவைக் குபதே சித்தா
னருள்வடிவா மம்பிகைமற் றிந்த நூலை
யருளுடனே சண்முகனுக் குபதே சித்தா
ளரியசிவ பத்திமிகுஞ் சைகே ஷவ்யற்
குவகையுடன் கந்தனிதை யுபதே சித்தான்
விரவுசிவ கருணையினு லனைத்தும் பெற்ற
வியாதனிதைச் சூதமுனிக் குபதே சித்தான். (7)

சூதமுனி மற்றைமகா முனிவர்க் கெல்லாஞ்
சூட்சுமமா மிந்நூலை யுபதே சித்தா
னேஞ்சியவிவ் வகையாக வுலகத் தின்க
ணுத்தமமா யுளவிந்நூல் விளங்க லாயிற்
றிதிஷுள வம்சங்கள் பனிரண் டுக்கு
ளத்யந்த மதிசயமா மாறு மம்ச
மீதினைமுன் பொருகாலங் கைலா யத்தி
லிணையில்சிவன் ரிபுவுக்குத் தனித்து ரைத்தான். (8)

அரியதினு மரிதான விவ்வம் சத்தி
லமைவுற்ற வத்யாய மைம்ப தாகும்
பரவுமிதி னுற்பத்து நான்கத் யாயம்
பரமசிவ னருள்செய்த பரிசே யாக
திருமலமாய் ரிபுமுனிவ னிதாக ஞதி
நிகிலமகா முனிவர்க்கு நிகழ்த்த லாலே
யுரைதருமிவ் வத்யாய மனைத்து மிங்கே
யுத்தமமாம் ரிபுகீதை யென்ன லாகும். (9)

இன்னவிதம் வடமொழியா லீசன் ருனே
யியம்பியிடு மிவ்வாறு மம்சத் தின்கண்
முன்னருள வாமொருமூன் றத்யா யங்கண்
முடிவிலுள வாமொருமூன் றத்யா யங்கள்
பன்னியிடுங் கருத்துடனே நடுவி லுள்ள
பரமான நாற்பத்து நான்கத் யாய
மன்னியவிக் கீதையினை முழுமுட்சு வெல்லா
மதிக்கும்வணந் தமிழ்க்கவியா யமைக்கின் றேன்யான்.()

சருவஞ்ஞ சிகாமணியாம் பரேச னேரே
சாரமதாம் வடமொழியா லுரைத்த நூலே
யொருசிறிது மறியாவென் புன்மை வாக்கா
லானமற வுரைத்திடுத லொவ்வா தென்றே
கருதிவெறி தேயிருந்த வென்க ருத்தைக்
காரியாக நின்றெவையு மசைக்குமீச
னரியதினு மரிதான விந்தூநூலே
யமைக்கும்வண மசைப்பித்த நிறமை யென்னே. (11)

சருவசரா சரங்கட்குஞ் சாட்சி யாகிச்
சகலத்து மாந்தரமா யந்தர் யாமி
சொருபமதாம் பரமசிவ ஞஞ்ஞை யாலே
சுதந்தரமே செறியாத வென்றன் வாக்கா
லுரைதருமிந் நூற்கவியி லுள்ள தோட
மொன்றையுமே சாதுக்கண் மதித்தி டாமற்
பெருமைமிகு மிந்நூலின் பொருளை நாடிப்
பிழைகளெலாம் பொறுத்திதனைப் பேணல் வேண்டும். ()

சூதமுனி நைமிசவா ரணியத் துள்ள
சுத்தமகா முனிவரரை நோக்கிச் சொல்வான்
வேதியரே மீளவுமச் சைகீ ஷவ்யன்
விமலசிவன் சுதனுன கந்தன் றன்னைக்
காதலுறு மனேகமுனி கணங்க ளோடுங்
கறையற்ற வனேகசிவ கணங்க ளோடும்
வீதலுரு மகிழ்வுடனே யிறைஞ்சி யேத்தி
விநயமுட னிவ்விதமாய் வினவி னனுல். (13)

அருள்வடிவே யருள்வடிவாம் பரேசன் சேயே
யடைக்கலமென் றடைந்தவரை யாளுங் கோவே
சருவமுணர் சிகாமணியே சிவமே நோக்குஞ்
சண்முகவா நினதருளா லிந்தம் சங்க
ளிருளறவே கேட்டனன்மே லாரு மம்ச
மினியருளி நின்வசனச் சுதையி னுலே
கருகுபவ தாபமெலா நீக்கி யென்னைக்
காத்திடுவா யெனலோடுங் கந்தன் சொல்வான். (14)

உரியகுண மேலான சைகே ஷவ்யா
வுனதுதிட பத்தியினன் மகிழ்வுற் றேம்யாஞ்
சருவசகன் னுயகனும் பரேசன் றனே
சாட்சாதாய்ச் சகலருக்கு மிதமே யாக
நிருமலமாம் ரிபுமுனியை நோக்கி முன்பு
நிகரற்ற கைலாய கிரியிற் சொன்ன
விருமையிலா ஞானமகா வர்ண வத்தை
யெல்லோர்க்கு மிதமாக விங்குச் சொல்வாம். (15)

மூன்பொருகாற் சமமுதலா நற்கு ணங்கண்
முழுதுமுள ரிபுமுனிவன் கைலா யத்திற்
றுன்பமெலாந் தீர்க்கின்ற வென்பி தாவைத்
துகளறவே தரிசித்து மிக வணங்கி
யின்பமிகு மகண்டபர ஞானம் வேண்டி
யீசனரு ளாமாகக் கிடைப்ப தற்கச்
சம்புவினைக் குறித்துமிகு மன்பி னோடே
சாலவுமே விநயமுடன் போற்ற லுற்றான். (16)

போற்றியபின் பரசிவனை நோக்கிச் சொல்வான்
பூரணமாஞ் சற்குருவே யின்றெ னக்குத்
தோற்றியவித் துவிதமெலாந் துடைக்கத் தக்க
துகளற்ற வத்துவித ஞானந் தன்னை
யேற்றியநற் கருணையினு லுபதே சித்திங்
கெல்லோரு மிதன்வழியா யுய்யும் வண்ணஞ்
சாற்றியருள் செய்திடுவா யென்ன லோடுஞ்
சங்காரனுஞ் சரியெனவே யருளிச் செய்தான். (17)

அயன்சுதனும் ரிபுமுனிவா! வேதாந் தத்தி
னருத்தமெலா மழுக்கறவே தெரிவிக் கின்ற
வியல்புளதாஞ் சூத்திரமோர் நான்கத் யாய
மியாமருளிச் செய்தநிதன் விசாரத் தாலே
பயமருவா வகண்டபர ஞான முண்டாம்
பவநீங்கும் பரப்பிரமா நந்த மெய்து
மயலறநீ கேளெனவே யதனை முற்று
மகிழ்வுடனே ரிபுவுக்கு மகேசன் சொன்னன். (18)

சொன்னவுடன் ரிபுமுனிவன் சூத்தி ரத்தின்
சூட்சுமமாம் பொருளெலாங் கேட்ட வண்ணம்
பின்னமற மனதினிடை மனனஞ் செய்து
பின்னுமதைத் தியானித்துப் பூன்ற ஞான
மன்னியகாற் பவத்துன்ப மனைத்து நீங்கி
மகத்தான வானந்த மருவி னோனை
யன்னசிவன் றிருவுருவை யிறைஞ்சி யேத்தி
யதிசயமா மன்புடனே போற்ற லானன். (19)

அருள்வடிவா யெனையாண்ட சிவமே போற்றி
யானந்த கனமான சிவமே போற்றி
சருவவிலட் சணமான சிவமே போற்றி
சகலர்க்கு மிதமான சிவமே போற்றி
நிருமலமாய் நின்றபர சிவமே போற்றி
நீக்கமற நிறைந்தபர சிவமே போற்றி
யிருமையிலா வேகபர சிவமே போற்றி
யெங்குமுள வகண்டபர சிவமே போற்றி. (20)

அகிலசகக் காரணமாஞ் சிவமே போற்றி
யம்பிகையி னுயகமாஞ் சிவமே போற்றி
நிகிலபரி பூரணமாஞ் சிவமே போற்றி
நிரவயவ நிட்களமாஞ் சிவமே போற்றி
விகலமிலா விபுவான சிவமே போற்றி
வேதாந்த வேத்தியமாஞ் சிவமே போற்றி
சகலசகன் னுயகமாஞ் சிவமே போற்றி
சத்தியசிற் சுகனமாஞ் சிவமே போற்றி. (21)

சரமசர மெவைக்குமதிட் டான மான
சன்மயமாஞ் சங்கரனின் சரணம் போற்றி
பரமபரம் யாவையுமே விளக்கா நின்ற
பரஞ்சுடராம் பரசிவனின் சரணம் போற்றி
விரவியவெவ் வுயிர்கட்கு மின்ப நல்கும்
விமலசுக வடிவேனின் சரணம் போற்றி
யரியயனே முதலான வனேக கோடி-
யமரர்கணம் வணங்கியனின் சரணம் போற்றி. (22)

பத்தருடைப் பவதாப மனைத்து நீக்கிப்
பரமசுக நல்கியநின் சரணம் போற்றி
சுத்தபர ஞானத்தை யெளிதாய்த் தந்து
சோர்வையெலா நீக்கியநின் சரணம் போற்றி
சித்தமுதற் கப்பாலாய்ச் செறிந்து நின்ற
சிதாகாய வடிவேநின் சரணம் போற்றி
வித்தரமாம் வேதாந்தப் பொருளே யெல்லாம்
விளக்கியசற் குருவேநின் சரணம் போற்றி. (23)

இன்னவிதம் பரசிவனைத் துதித்துப் பின்னு
மிறைஞ்சியவ னதுஞ்ஞையினு லவிடம் விட்டுப்
பின்னமிலா வானந்த வநுப வத்தின்
பெலமுடனே யங்கங்கே சஞ் சரித்து
ம்ன்னுசில வதிகாரிக் கிஞ்ஞா னத்தை
மகிழ்வுடனே யங்கங்கே யுபதே சித்த
பின்னர்சில வேதுவினுற் புவியின் கண்ணே
பிறங்கியதாங் கேதாரத் தலத்தில் வந்தான். (24)

பாரின்மிசை யிமகிரியின் சிகரத் தின்கட்
பற்றியதாங் கேதாரத் தலத்தி ருந்து
பூரணமாய்ப் பொருந்தியவக் கேதா ரேசன்
பூசனையே புரிந்துமிக விரத்தி கூர்ந்து
முறுதீர சிவபத்தி சிவஞா னங்க
டிடமாகி விபூதியுட னுருத்தி ராக்க
வாரமுதற் சிவசின்ன மனைத்தும் பூண்ட
வயன்சுதனும் ரிபுமுனியை முனிவர் கண்டார். (25)

கண்டவுட னிதாகசுக ராதி யான
களங்கமிலா முனிவரெலா மன்பு கூர்ந்து
தண்டெனவே நன்முக வணங்கி யேத்தித்
தகைமைமிகும் ரிபுமுனியை நோக்கிச் சொல்வார்
பண்டொரு காற் பரசிவனைக் கைலா யத்திற்
பத்தியுடன் பாங்காக வாரா திக்தவ்
வண்டர்பிரான் கருணையினு லகண்ட ஞான
மகிலர்க்கு மிதமாக வடைந்தா யன்றே. (26)

சலனமிலா வகண்டபர ஞானம் பெற்ற
சற்குருவே பரமசிவன் கருணை யாலே
கலனமிலாச் சுருதிமுடிச் சூத்தி ரத்தின்
கருத்தான வகண்டபர சிவஞா னத்தை
யலைவறவே நீமுன்ன மடைந்த வண்ண
மத்யந்த கருணையினு லெங்கட் கெல்லா
முலைவுதரு பவபந்த மறுத்து நீங்கி
யுத்தமமா முத்திபெற வருள்செய் வாயே. (27)

தேசிகனின் கருணையினுற் கிடைப்ப தான
திவ்வியமா ஞானமெனு நாவாய் கொண்டே
நீசமுறுஞ் சமுசார சாக ரத்தி
னின்றமல பரப்பிரம நீர மேறிச்
சாசுவத சொரூபமதா யிருப்ப மென்றே
சகலருமே விநயமுடன் சாற்ற லோடு
மாசணுகா சிவமுனியு மதனைக் கேட்டு
மகிழ்வுடனம் முனிவரரை நோக்கிச் சொல்வான். (28)

பரமசிவன் பூசனையே முதலாம் பத்தி
பண்ணியதா லவனருளுக் குரிய ரான
நிருமலமா முனிவரரே யுங்கட் கெல்லா
நிகழ்த்தவொணு ரகசியமாம் பொருளே யில்லை
யரியசிவ னடியார்க்கு மறைக்கத் தக்க
தானபொரு ளெங்கேனு மெவையு முண்டோ
வுரியவரே யாதலினு லுங்கட் கின்றே
யுத்தமமா ஞானத்தை யுபதே சிப்பாம். (29)

குறைவற்ற பரமசிவன் முன்பெ னக்குக்
குறைவறவே கருணையினு லுரைத்த வண்ணங்
கறையற்ற சுருதிமுடிச் சூத்தி ரத்தின்
கருத்தான ஞானத்தை யுரைப்பக் கேண்மின்
மறுவற்ற முனிவரரே யிஞ்ஞா னத்தான்
மகத்தான பவபந்த முடனே நீங்கி
நிறைவுற்ற பரப்பிரம வடிவே யாகி
நீரென்று நிச்சலமாய் நின்று வாழ்வீர். (30)

இந்தவித நிதாகசுக ராதி யான
விம்முனிவர் தமைநோக்கிப் பொதுவா யோதிப்
பிந்திமகா தேவனைமுக் காணத் தாலும்
பிரியமுடன் வணங்கிமிக வன்பு கூர்ந்த
வந்தரிபு மாமுனிவ னிதாக னென்னு
மரியமகா முனிதனையே தலைமை யாக்கித்
தொந்தமுறு வகண்டபர சிவஞா னத்தைத்
துகளறவே யருள்செய்யத் தொடங்கி னனால். (31)

பூரணமா யகண்டசிதா காயமாகப்
பொருந்தியுமா பதியான பரசி வன்றான்
பாரினையே முதலான சகத்தை யெல்லாம்
படைத்தவுபா தானநிமித் தங்க ளென்னுங்
காரணபா மன்றியுமச் சகத்தை யெல்லாங்
கலந்துண்மை தருவோனு மொளிசெய் வோனுஞ்
சாரமிலா வவற்றிற்கின் பஞ்செய் வோனுஞ்
சத்தியசிற் சுகனமாஞ் சம்பு தானே. (32)

அருளுருவாம் பரமசிவ னநந்த சத்திக்
காதார மாகவமர்ந் திருப்ப தாலே
சருவசகக் காரணமா மவ்வீ சற்குச்
சமமேனு மல்லதவற் கதிக மேனு
மொருபொருளு மிலையதனா லன்னோன் றானே
யோதுமுபா தானநிமித் தங்க ளாவன்
கருதியவவ் வீசற்கு மேலாய் வேறோர்
காரணமு மொருகாலு மெங்கு மில்லை. (33)

செவ்வியசிற் சுகனமாம் வத்து தானே
சின்மயமாந் தனதுபர சத்தி யாலே
திவ்வியமங் களவடிவாய்த் தோன்றி டெழுந்து
திரிபுரசங் காரமுக லீலை செய்திங்
கெவ்வமெலாந் தீர்த்தன்ப ரெல்லோருக்கு
மிதமான போகமொடு மோட்ச நல்கு
மவ்விதமாம் பரமசிவ வத்து தானே
யருளதனா லெம்மையெலா மென்றுங் காக்க. (34)

ஆன்மநிர்ணயம்

நிகிலவித சாதனமு நேரப் பெற்ற
நிதாகநினக் கினியான்ம நிர்ண யத்தை
யகிலசகன் னயகனும் பரேசன் முன்ன
மத்யந்த கருணையினு லறைந்த வண்ணஞ்
சகலருமே யறியும்வணஞ் சுருங்கச் சொல்வாஞ்
சாலவுமே ரகசியமா மிவ்வர்க் கதத்தை
யிகழ்வறவே நன்முகக் கேட்டு ணர்ந்தோ
ரெப்போதும் பரப்பிரம வடிவே யாவர். (35)

ஏகபரி பூரணமா மறிவே யான்மா
விவ்வறிவே விவகார திசையின் மைந்தா
வாகமுத லநந்தவித வுபாதி கட்கு
மதிட்டான வடிவாக வமர்ந்து நிற்குந்
தேகமுத லனைத்துக்குஞ் சாட்சி யாகுந்
திருசியமாம் பொருட்கெல்லா மதீத மாகும்
பாகமற விசாரிக்கி லிவ்வான் மாவே
பகுப்பற்ற பரப்பிரம சொரூப மாமே. (36)

அறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யழியாம லிருப்பதனுற் சத்து மாகு
மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யனைத்தையுமே விளக்குவதாற் சித்து மாகு
மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யகிலர்க்கும் பிரியமதாற் சுகமு மாகு
மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யந்தமிலா திருப்பதனு லநந்த மாமே. (37)

அத்துவித வறிவுருவே பிரம மாகு
மவைதானே யகிலவதிட் டான மாகு
மித்துவித மனைத்துக்கு மதீத மாகு
மேகபரி பூரணமா யிலங்கா நிற்கு
நித்தியநிர்க் குணமாகு நிம்ல மாகு
நிரஞ்சனமா நிட்கிரிய சுபாவ மாகுஞ்
சத்தியசிற் சுககனமாஞ் சாந்த மாகுஞ்
சந்ததமுஞ் சகலர்க்கு மான்மா வாமே. (38)

ஒருவெளியா யிருக்கின்ற வானந் தானே
யுற்றகட மடமென்னு முபாதி யாலே
யிருவெளிபோற் கடவான மடவா னென்றே
யிவ்வுலகி லிலங்கியிடு நீதியே போ
லொருவடிவா மறிவான வத்து தானே
யுண்மையிலா வவித்தைமுத லுபாதி யாலே
யிருவடிவ மானதுபோ லான்மா வென்று
மெங்குமுள பிரமமென்று மிலங்கு மன்றே. (39)

கடமடமா முபாதிகளே நேதி செய்யிற்
கடவானு மடவானு மொன்றே போல
மடமைமுத லுபாதிகளே நேதி செய்யின்
மாசற்ற வான்மாவும் பரமு மொன்றே
யிடமருவும் வேதாந்த விசாரத் தாலே
யிருமைதரு முபாதியெலா நேதி பண்ணித்
தடமருவு மான்மபர வைக்கி யத்தைத்
தடையறவே முமுட்சுவெலா முணர வேண்டும். (40)

ஏதமுறு மவித்தைமுத லான்மோ பாதி
யிலங்கியிடு மாயைமுதற் பிரமோ பாதி
பேதமெலா மான்மாவுக் கபின்ன மான
பிரமத்திற் கற்பிதமாய்த் தோற்ற லாலே
யீதெவையு மதிட்டானந் தனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நேதி பண்ணி
யாதிமுடி வொன்றுமிலா வகண்ட மான
வான்மபர வைக்கியமே யறிய வேண்டும். (41)

சுத்திகையிற் கற்பிதமாம் ரசத மந்தச்
சுத்தியலா தன்னியமா யிலாத தேபோற்
சத்தியசிற் சுகதனமா மான்மா வின்கட்
சலனமுதற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
வித்துவிதம் யாவையுமிவ் வான்மா வன்றி
யிதரமதா யிலையெனவே நேதி பண்ணி
யத்துவித பூரணமா யமர்ந்து நின்ற
வான்மபர வைக்கியமே யறிய வேண்டும். (42)

ஆன்மாவிற் கற்பிதமாய்க் காண்ப் தெல்லா
மான்மாவுக் கயலாக வென்று மில்லை
யான்மாவுக் கயலாகப் பிரம மில்லை
யப்பிரமந் தனக்கயலா யான்மா வில்லை
யான்மாவே பிரமமதாம் பிரமந் தானே
யான்மாவா மணுவுமிதி லேய மில்லை
யான்மாவா மகம்பிரம மென்றெப் போது
மான்மபர வைக்கியமே யறிய வேண்டும். (43)

அறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யறையுமனுன் மாவெனுமோர் வாக்கு மில்லை
யறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யறியுமனுன் மாவெனுமோர் மதியு மில்லை
யறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யமருமனுன் மாவெனுமோர் சகத்து மில்லை
யறிவுருவா மான்மாவே யென்று மெங்கு
மசஞ்சலமா யமர்ந்தகென நிச்சயிப் பாய். (44)

அறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யன்னியமா மவித்தையிலை மாயை யில்லை
யறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யன்னியமாஞ் சங்கற்ப விகற்ப மில்லை
யறிவுருவா மான்மாவே யிருப்ப தாலே
யன்னியமா மாகார மணுவு மில்லை
யறிவுருவா மான்மாவே யென்று மெங்கு
மசஞ்சலமா யமர்ந்தகென நிச்சயிப் பாய். (45)

சித்தமுத லொருபொருளு மிலாமை யாலே
சிந்திக்கத் தகுபொருளு மென்று மில்லை
சத்தியமாய்த் தேகமுத லிலாமை யாலே
சரைமரண முதலியவை யென்று மில்லை
யத்தமுத லவயவமே யிலாமை யாலே
யாதான முதலியவோர் செயலு மில்லை
நித்தவறி வுருவான வான்மா வொன்றே
நிச்சலமாய் நீலைத்தகென நிச்சயிப் பாய். (46)

விரிந்தசகக் காரணமாம் விதியி லாதால்
விசித்திரமாய்ப் பகுப்புற்ற சகத்தே யில்லை
தரந்தரமாஞ் சகத்தில்லாத் தன்மை யாலே
தயங்குசகப் பாலகனு மரியு மில்லை
பொருந்துசரா சரமெவையு மிலாமை யாலே
புகலுசகன் ஞசகனு மரனு மில்லை
நிரந்தரமாய் நிறைவுற்ற வான்மா வொன்றே
நிச்சலமாய் நிலைத்தென நிச்ச யிப்பாய். (47)

அகரமுதல் வன்னமிலாத் தன்மை யாலே
யதனையுரை யாடியிடும் வாக்கு மில்லை
தகமைமிகுங் குரவனிலாத் தன்மை யாலே
தற்பரனுய் நிற்கின்ற மானு னில்லை
வெகுவிதமா நூற்களிலாத் தன்மை யாலே
விதியுடனே நிடேதமுத லெவையுமில்லை
யிகழ்வுபெரு வறிவுருவா மான்மாவொன்றே
யெப்போது மிருப்பதென நிச்சயிப் பாய். (48)

ஒன்றிலதாந் தன்மையினு லிரண்டு மில்லை
யுபயமிலாத் தன்மையினு லொன்று மில்லை
துன்றுபய மிலாமையினு லபய மில்லை
தொடரபய மிலாமையினுற் பயமு மில்லை
நின்றசுப மிலாமையினு லசுப மில்லை
நிகழசுப மிலாமையினுற் சுபமு மில்லை
யென்றுமறி வுருவான வான்மா வொன்றே
யெப்போது மிருப்பதென நிச்ச யிப்பாய். (49)

சத்திலதாந் தன்மையினு லசத்து மில்லை
சஞ்சலமா மசத்திலதாற் சத்து மில்லை
சுத்தமிலாத் தன்மையினு லசுசி யில்லை
சொலுமசுசி யிலாமையினுற் சுசியு மில்லை
தொத்துமிட நிலாமையினுற் சுகமு மில்லை
தொடர்ந்தசுக மிலாமையினு லிடரு மில்லை
யித்துவித மெவையுமிலா வான்மா வொன்றே
யெப்போது மிருப்பதென நிச்ச யிப்பாய். (50)

நித்தமுநீ யிலாமையினு னனு மில்லை
நிகழ்த்தியநா னிலாமையினு னீயு மில்லை
கத்துருவே யிலாமையினுற் காண மில்லை
காணமிலாத் தன்மையினுற் கர்த்தா வில்லை
பத்தனிலாத் தன்மையினுன் முத்த னில்லை
பகர்முத்த னிலாமையினுற் பத்த னில்லை
யித்துவித மெவையுமிலா வான்மா வொன்றே
யெப்போது மிருப்பதென நிச்ச யிப்பாய். (51)

சனனமிலாத் தன்மையினுன் மரண மில்லை
சாதலிலாத் தன்மையினுற் சனன மில்லை
யனியமிலாத் தன்மையினு லகமு மில்லை
யகமிலதாந் தன்மையினு லனிய மில்லை
மனமிலதாந் தன்மையினுன் மயக்க மில்லை
மயக்கமிலாத் தன்மையினுன் மனது மில்லை
கனவறிவாய் நிறைவுற்ற வான்மா வொன்றே
கலங்காத வத்துவென நிச்ச யிப்பாய். (52)

அந்தமிலாத் தன்மையினு லாதி யில்லை
யாதியிலாத் தன்மையினு லந்த மில்லை
தொந்தமிலாத் தன்மையினுற் றோற்ற மில்லை
தோற்றமிலாத் தன்மையினுற் றொந்த மில்லை
பந்தமிலாத் தன்மையினுல் வீடு மில்லை
பரவியவீ டின்மையினுற் பந்த மில்லை
சந்ததமுஞ் சின்மயமா மான்மா வொன்றே
சலியாத வத்துவென நிச்ச யிப்பாய். (53)

புகலுமொரு காரியமு மிலாமை யாலே
பொருந்தியிடுங் காரணமு மொன்று மில்லை
திகழுமொரு திருசியமு மிலாமை யாலே
தெரிசிக்குந் திருக்குமொரு காது மில்லை
வெகுவிதமாந் துவிதமெலா மிலாமை யாலே
வேறுபடா வத்துவிதந் தானு மில்லை
யகிலபரி பூரணமா மான்மா வொன்றே
யழியாத வத்துவென நிச்ச யிப்பாய். (54)

ஒருபொருளு மாந்தரமா யிலாமை யாலே
யொன்றியிடும் வாகியமாம் பொருளு மில்லை
சருவமெனச் சாற்றுபொரு ளிலாமை யாலே
சந்ததமுங் கிஞ்சிலெனும் பொருளு மில்லை
புரணமிலாப் பொருளெவையு மிலாமை யாலே
பூரணமாய்ப் பொருந்துபொரு டானு மில்லை
பாவியசிற் கனமான வான்மா வொன்றே
பழுதற்ற வத்துவென நிச்ச யிப்பாய். (55)

இதுவதுவென் றியம்பியிடும் பொருளு மில்லை
யிலையுளதென் றியம்பியிடும் பொருளு மில்லை
திதமெனவே நிகழ்த்தியிடும் பொருளு மில்லை
திட்டாந்தந் தாட்டாந்த மெவையு மில்லை
விதம்விதமாய் விளங்கியிடும் பொருளு மில்லை
விசித்திரமாஞ் சீவபர சகத்தே யில்லை
நிதமுமெலா மகண்டபரப் பிரமந் தானு
நிமலபரப் பிரமமதே யான்மா வாகும். (56)

நிகிலமெனத் தோற்றுவதும் பிரமந் தானு
நீயெனவே தோற்றுவதும் பிரமந் தானு
மகமெனவே தோற்றுவதும் பிரமந் தானு
மன்னியராய்த் தோற்றுவதும் பிரமந் தானு
மிகழ்சகமாய்த் தோற்றுவதும் பிரமந் தானு
மீசனெனத் தோற்றுவதும் பிரமந் தானு
மகிலவிதத் தோற்றமுமே பிரமந் தானு
மகண்டபரப் பிரமமதே யான்மா வாகும். (57)

சத்தியசிற் சுகனமா மான்ம ரூபஞ்
சகலபரி பூரணமா மான்ம ரூப
நித்தியநிர்க் குணமாகு மான்ம ரூப
நிரஞ்சனநிட் களமாகு மான்ம ரூபஞ்
சுத்தசிதம் பரமாகு மான்ம ரூபஞ்
சூட்சுமத்துஞ் சூட்சுமமா மான்ம ரூப
மத்துவிதப் பொருளாகு மான்ம ரூப
மகண்டைக ரசமாகு மான்ம ரூபம். (58)

ஆதலினு லகண்டைக ரசமே யான
வான்மாவுக் கன்னியமா யணுவு மில்லை
போதகன மாகியவவ் வான்மா வேஈ
புகன்றதிலோ ரணுவேனு மைய மில்லை
மாதவவிவ் வான்மாவா நானெப் போது
மகத்தான பரப்பிரம சொரூப மென்றே
பேதமிலா வகண்டான்ம நிச்ச யத்தைப்
பெற்றதனுற் பவபாச முத்த னுவாய். (59)

இந்தவிதம் யாவர்க்கு மிதமே யாக
விருமையிலா வகண்டான்ம நிர்ண யத்தை
யந்தமிலா மகிமையுறு மகேசன் முன்ன
மருளியவா நிதாகனினக் கடக்கிச் சொன்னேஞ்
தொந்தமுறு விவ்வான்ம நிர்ண யத்தைத்
துகளற்ற மனதுடனே யொரு காலேனும்
புந்தியுறத் திடமாகக் கேட்டு ணர்ந்தோர்
பூரணமாம் பரப்பிரம வடிவே யாவர். (60)

சுவானுபவம்.

என்றருளும் ரிபுமுனியை மகிழ்வாய் நோக்கி
யெனையாளுஞ் சற்குருவே கைலா யத்தி
லன்றுசிவ கருணையினு லடையப் பட்ட
வற்புதமா நின்சொருப வநுப வத்தை
யின்றருளா லுரைசெய்திப் பவதுன் பங்கள்
யாவையுமே நீக்கியெனை யாள்வா யென்றே
நின்றடைவாய் வினவியவந் நிதாக னுக்கு
நேரான வுத்தரமம் முனியுஞ் சொல்வான். (61)

சத்தியஞா னநந்தப் பிரம நானே
சமுசார சங்கமிலாப் பிரம நானே
நித்தியநிட் களமான பிரம நானே
நிராகார மானபரப் பிரம நானே
தத்துவமாய்த் தனித்தபரப் பிரம நானே
தான்றனாய் நின்றபரப் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானே
யகண்டபரி பூரணமாம் பிரம நானே. (62)

சன்மயமாய் நின்றபரப் பிரம நானே
சதானந்த மானபரப் பிரம நானே
சின்மயமாய் நின்றபரப் பிரம நானே
சிதாகாய மானபரப் பிரம நானே
நின்மலமாய் நின்றபரப் பிரம நானே
நிரஞ்சனமாய் நிறைந்தபரப் பிரம நானே
யென்மயமாய் நின்றபரப் பிரம நானே
யேகபரி பூரணமாம் பிரம நானே. (63)

சாதிகுல மற்றபரப் பிரம நானே
சங்கமெலாம் விட்டபரப் பிரம நானே
யாதிமுடி வற்றபரப் பிரம நானே
யனர்த்தமெலாம் விட்டபரப் பிரம நானே
கேதமெலா மற்றபரப் பிரம நானே
கெம்பீர முற்றபரப் பிரம நானே
பேதமெலா மற்றபரப் பிரம நானே
பிணிப்பெவையு மிற்றபரப் பிரம நானே. (64)

இதுவெனுமோர் பொருளுமிலாப் பிரம நானே
யானெனுமோர் பொருளுமிலாப் பிரம நானே
யதுவெனுமோர் பொருளுமிலாப் பிரம நானே
யயலெனுமோர் பொருளுமிலாப் பிரம நானே
திதமெனுமோர் பொருளுமிலாப் பிரம நானே
நிருசியமே தொன்றுமிலாப் பிரம நானே
நித்முமொரு வடிவான பிரம நானே
நிச்சலமாய் நின்றபரப் பிரம நானே. (65)

அத்யந்த நித்தபரப் பிரம நானே
யத்யந்த சுத்தபரப் பிரம நானே
யத்யந்த புத்தபரப் பிரம நானே
யத்யந்த முத்தபரப் பிரம நானே
யத்யந்த மமலபரப் பிரம நானே
யத்யந்த மசங்கபரப் பிரம நானே
யத்யந்த மசலபரப் பிரம நானே
யத்யந்த மகண்டபரப் பிரம நானே. (66)

அத்யந்த சற்கனமாம் பிரம நானே
யத்யந்த சிற்கனமாம் பிரம நானே
யத்யந்த சுககனமாம் பிரம நானே
யத்யந்த சூட்சுமமாம் பிரம நானே
யத்யந்த பாவனமாம் பிரம நானே
யத்யந்த சோபனமாம் பிரம நானே
யத்யந்த சாசுவதப் பிரம நானே
யத்யந்த சாந்தபரப் பிரம நானே. (67)

கேவலசன் மாத்ரபரப் பிரம நானே
கேவலசின் மாத்ரபரப் பிரம நானே
கேவலநன் மாத்ரபரப் பிரம நானே
கேவலநா தாந்தபரப் பிரம நானே
கேவலவா காரபரப் பிரம நானே
கேவலவா காயபரப் பிரம நானே
கேவலகே வலமான பிரம நானே
கேவலகெம் பீரபரப் பிரம நானே. (68)

பகுதியுடை விகாரமிலாப் பிரம நானே
பகுதிக்கு மப்பாலாம் பிரம நானே
சகலமனத் துகளுமிலாப் பிரம நானே
சங்கற்ப விகற்பமிலாப் பிரம நானே
வெகுவிதமா நாமமிலாப் பிரம நானே
விசித்திரமா முருவமிலாப் பிரம நானே
யகமருவா வனகபரப் பிரம நானே
யகண்டசிதா காயபரப் பிரம நானே. (69)

சகலபரி பூரணமாம் பிரம நானே
சரீரமுத லுபாதியிலாப் பிரம நானே
விகலமிலா விபுவான பிரம நானே
விஞ்ஞான கனமான பிரம நானே
நிகிலவதிட் டானபரப் பிரம நானே
நிகிலமுமாய் நிகழ்கின்ற பிரம நானே
யகிலவிலட் சணமான பிரம நானே
யனைத்துமிலா வகண்டபரப் பிரம நானே. (70)

பூதமெனும் பேதமிலாப் பிரம நானே
புவனமெனும் பேதமிலாப் பிரம நானே
சாதமெனும் பேதமிலாப் பிரம நானே
சகலமெனும் பேதமிலாப் பிரம நானே
வேதமெனும் பேதமிலாப் பிரம நானே
விநிமுதலாம் பேதமிலாப் பிரம நானே
யேதுமொரு பேதமிலாப் பிரம நானே
யெப்போது மேகபரப் பிரம நானே. (71)

ஆகமிலா வறிவுருவாம் பிரம நானே
யதுரூத மானபரப் பிரம நானே
மோகமிலா வறிவுருவாம் பிரம நானே
முத்தாப ரகிதபரப் பிரம நானே
பாகமிலா வறிவுருவாம் பிரம நானே
பரிச்சேத ரகிதபரப் பிரம நானே
சோகமிலா வறிவுருவாம் பிரம நானே
சுயஞ்சோதி யானபரப் பிரம நானே. (72)

நிருமலமாய் நின்றபரப் பிரம நானே
நிட்கிரிய மானபரப் பிரம நானே
யெருவடிவா யுள்ளபரப் பிரம நானே
யொன்றுலு முணரவொணாப் பிரம நானே
யிருமையிலா வேகபரப் பிரம நானே
யெப்போது மெங்குமுள பிரம நானே
சருவபரி பூரணமாம் பிரம நானே
சன்மாத்ர மானபரப் பிரம நானே. (73)

சந்ததமுஞ் சலனமிலாப் பிரம நானே
சந்தேக லேசமிலாப் பிரம நானே
யந்தமிலா வநந்தபரப் பிரம நானே
யகம்பாவ லேசமிலாப் பிரம நானே
தொந்தமிலாத் தூயபரப் பிரம நானே
துக்கசுக லேசமிலாப் பிரம நானே
பந்தமிலாப் பரமான பிரம நானே
பவபாச லேசமிலாப் பிரம நானே (74)

அயன்முதலெம் மூர்த்தியிலாப் பிரம நானே
யைந்துவித கிர்த்யமிலாப் பிரம நானே
மயலணுவு மருவாத பிரம நானே
மாசற்ற மகத்தான பிரம நானே
சுயவொளியாய்ச் சொலிக்கின்ற பிரம நானே
சுத்தசிதம் பரமான பிரம நானே
செயலெவையுஞ் செறியாத பிரம நானே
சின்மாத்ர மானபரப் பிரம நானே. (75)

அஞ்சனமா மவித்தையிலாப் பிரம நானே
யதன்செய்கை யெவையுமிலாப் பிரம நானே
பஞ்சவித கோசமிலாப் பிரம நானே
பரமபர மெவையுமிலாப் பிரம நானே
கிஞ்சிலிலாக் கேவலமாம் பிரம நானே
கிரியையுத லெவையுமிலாப் பிரம நானே
விஞ்சைமுதல் வேறிலதாம் பிரம நானே
வெறிதான விமலபரப் பிரம நானே. (76)

அகிலத்து மூலபரப் பிரம நானே
யனைத்துக்கு மதீதபரப் பிரம நானே
நிகிலத்து நிறைந்தபரப் பிரம நானே
நித்தபரி சுத்தபரப் பிரம நானே
சகலத்துஞ் சாரபரப் பிரம நானே
சைதன்ய மாத்ரபரப் பிரம நானே
மிகமுத்த மானபரப் பிரம நானே
மெய்யுணர்வா நந்தபரப் பிரம நானே. (77)

அகமென்றுந் தேகமலன் பொறிக ளல்ல
னகமென்று முயிர்களல னுள்ள மல்ல
னகமென்றும் புந்தியலன் சித்த மல்ல
னகமென்றும் புன்மையகங் கார மல்ல
னகமென்று மதன்மூலா வித்தை யல்ல
னகமென்றும் வியட்டியலன் சமட்டி யல்ல
னகமென்று மறிவுற்ற தெவையு மல்ல
னகமென்று மகண்டபரப் பிரமந் தானே. (78)

அகமென்றுஞ் சாதனலன் சிசுவு மல்ல
னகமென்றுங் தருணனலன் விருத்த னல்ல
னகமென்றுஞ் சிறியனலன் பெரிய னல்ல
னகமென்றுஞ் சிதைவுற்று மரிப்போ னல்ல
னகமென்றுஞ் சீவனல னீச னல்ல
னகமென்றுஞ் சடாசடமாஞ் சகத்து மல்ல
னகமென்று மெவையுமிலா தகமாய் நின்ற
வத்துவிதா கண்டபரப் பிரமந் தானே. (79)

அகமனிசஞ் சன்மயமாம் பிரம ரூப
மகமனிசஞ் சின்மயமாம் பிரம ரூப
மகமனிச நன்மயமாம் பிரம ரூப
மகமனிசந் தன்மயமாம் பிரம ரூப
மகமனிச நின்மலமாம் பிரம ரூப
மகமனிச நிர்க்குணமாம் பிரம ரூப
மகமனிச மசஞ்சலமாம் பிரம ரூப
மகமனிச மகண்டபரப் பிரம ரூபம். (80)

அருந்தவனே யநந்தவித மறைந்நிங் கென்ன
வகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றுரந்தருமிவ் வகண்டபர நிச்ச யந்தா
னுத்தமனுஞ் சிவனருளா லியா மடைந்த
நிரந்தரமா மதுபூதி யைய மில்லை
நிமலபர சிவனுணை யுண்மை சொன்னேனும்
பொருந்தியவிவ் வர்த்தத்தை யொருகா லேனும்
புந்தியுறக் கேட்டுணர்வோர் பரமே யாவர். (81)

அற்பமுமோர் பேதமிலா தகண்ட மான
வத்துவித பரசிவமே வேதாந் தங்க
ணிர்ப்பயமாய் நிகழ்த்தியநற் பொருளாய் நின்று
நிகழுமனச் சுத்தியிலா மூட செல்லாம்
பற்பலவா நூற்களினுற் பேத புத்தி
பற்றியதா லகண்டைக பரசிவத் தைத்
தற்பரமாஞ் சுருதிமுடி முதலா நூலின்
முற்பரியப் பொருளாக வறியா சென்றும். (82)

நித்தசிவார்ச் சனைமுதலாம் பத்தி செய்து
நிகழுமனச் சுத்தியினைப் பெற்ற தீர
சத்துவித பரசிவமே மறையீ ருந்தி
யனைத்துக்குந் தாற்பரியப் பொருளா மென்றுஞ்
சத்தியமா மச்சிவமே நாமே யென்றுஞ்
சலனமிலா வகண்டசிவ ஞானம் பெற்று
மித்தையதாம் பவபந்த மனைத்து நீக்கி
மெய்யுணர்வா நந்தபர சிவமே யாவர். (83)

பரமசிவன் கருணையினு லருளிச் செய்த
பாங்காக ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கிருமையிலா வகண்டான்ம நிர்ண யத்தோ
டிலகியதன் சுவானுபவ மிசைத்தா னென்றே
யருமையுடன் வினவியிடும் சைகே ஷவ்யற்
ககிலமுமே யடைவாக வறிந்த கந்த
னிருமலமா யுரைசெய்தா னெனவே சூத
னிகிலமகா முனிவர்க்கு நிகழ்த்தி னனால். (84)

வேறு.

அகிலபூரண மாகிய கண்டமா
மான்மரூபத்தி னிர்ணய மோதலு
நிகரில்சத்திய சிற்சுக மாகவே
நின்றநின்மல மானபரம் பொரு
ளகமெனுவக மப்பரமே யென
வயலிலாவது பூதியு ரைத்தலுந்
நிகழுமாநந்தத் தாண்டவ மாடுநந்
தேவதேவ னகண்ட சொரூபமே. (85)

முதலாவது அத்தியாயம்

முற்றிற்று.

++

இரண்டாவது

பிரமசொரூபம் நீயேயென்று உபதேசமுரைக்கும் அத்தியாயம்.

குருவானே பரப்பிரம ஞானம் பெற்றுக்
கூறியவப் பரப்பிரம மாவ தற்கிங்
குரியவனு ருரித்தான ஞான மேதா
மூனமிலா வெனதுநிச சொரூப மேகாம்
விரிவுறவே யிதற்குரிய வுத்த ரத்தை
விமலசிவன் விளம்பியவா றருள்வா யென்றே
பரிவுடனே வினவியிடு நிகாக னுக்குப்
பாங்கான வுத்தரமம் முனியுஞ் சொல்வான். (1)

பயனெவையும் விரும்பாமற் பலசென் மத்திற்
பழுதறவே யநுட்டித்த வறங்க ளாலே
மயலணுவு மருவாமன் மனதின் சுத்தி
மன்னியதாற் சாதனமோர் நான்கும் பெற்றே
ரியல்புடனே யியற்றியிடுஞ் சிரவ ணாதி
யேதுவினற் பரப்பிரம ஞானம் பெற்றிங்
கயலணுவு மணுகாத வகண்ட மான
வத்துவித பரப்பிரம மாவ ரன்றே. (2)


கற்பிதமாஞ் சீவபர வுபாதி யெல்லாங்
களங்கமுறு விசாரத்தா னேதி பண்ணி
யற்பமிலா வகண்டபரப் பிரமந் தன்னே
யனகவகம் பிரமாஸ்மி யென்ப தாக
நிர்ப்பயமா யறிவதுவே பிரமா கார
நிலைமைபெற வுரித்தான ஞான மாகு
மிப்பிரம ஞானத்தை யிசைந்த தீர
ரீனமுறு பவபாச மெய்தா ரென்றும். (3)

சத்தியசிற் சுககனமாய்ச் சலன மின்றிச்
சூக்கனமாய்ச் சாலவுப சாந்த மாகி
நித்தியநிர்க் குணமாகி நிருவிட் சேப
நிராவரண நிட்களமாய் நிமல மாகி
யித்துவித கற்பனையோ நிறைவு மின்றி
யேகபரி பூரணமா யிஷ்டயொன் றில்லா
வத்துவிதா கண்டபரப் பிரமந் தானே
யனவரத நினதுநிச சொரூப மாமே. (4)

சன்மாத்ர மானபரப் பிரம நீயே
சகலபரி பூரணமாம் பிரம நீயே
சின்மாத்ர மானபரப் பிரம நீயே
செகசீவ பரங்களிலாப் பிரம நீயே
நன்மாத்ர மானபரப் பிரம நீயே
நாமமுரு வெவையுமிலாப் பிரம நீயே
தன்மாத்ர மானபரப் பிரம நீயே
தான்றானுய்த் தனித்தபரப் பிரம நீயே. (5)

வானமென வடிவிலதாம் பிரம நீயே
வழுவற்ற வத்துவதாம் பிரம நீயே
ஞானகன மானபரப் பிரம நீயே
ஞாலமுத லெவையுமிலாப் பிரம நீயே
சூனியமாய் நின்றபரப் பிரம நீயே
சுத்தசிதா காயபரப் பிரம நீயே
யானியிலா வத்துவிதப் பிரம நீயே
யகண்டபரி பூரணமாம் பிரம நீயே. (6)

சகலவநிட் டானபரப் பிரம நீயே
சகலத்துஞ் சான்றான பிரம நீயே
யகிலவிலட் சணமான பிரம நீயே
யனேத்துக்கு மதீதபரப் பிரம நீயே
ககனமுதல் வத்துவிலாப் பிரம நீயே
காலமொடு தேசமிலாப் பிரம நீயே
நிகழுமய லெவையுமிலாப் பிரம நீயே
நிருமலமாய் நின்றபரப் பிரம நீயே. (7)



சற்கனமாய் நின்றபரப் பிரம நீயே
சதாநந்த கனமான பிரம நீயே
சிற்கனமாய்ச் செறிந்தபரப் பிரம நீயே
சிதாநந்த மயமான பிரம நீயே
துக்கசுக மெவையுமிலாப் பிரம நீயே
துவந்துவமே தொன்றுமிலாப் பிரம நீயே
யக்கரமா யமர்ந்தபரப் பிரம நீயே
யகண்டைக ரசவடிவாம் பிரம நீயே. (8)

சத்தியமாம் பரப்பிரம சொரூப நீயே
சனாதனமாம் பரப்பிரம சொரூப நீயே
நித்தியமாம் பரப்பிரம சொரூப நீயே
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப நீயே
சுத்தமதாம் பரப்பிரம சொரூப நீயே
சுயம்புவதாம் பரப்பிரம சொரூப நீயே
முத்தமதாம் பரப்பிரம சொரூப நீயே
மோகமிலாப் பரப்பிரம சொரூப நீயே. (9)

சமமதுவாம் பரப்பிரம சொரூப நீயே
சாந்தமதாம் பரப்பிரம சொரூப நீயே
மமர்மருவாப் பரப்பிரம சொரூப நீயே
மகத்தான பரப்பிரம சொரூப நீயே
விமலமதாம் பரப்பிரம சொரூப நீயே
வியாபகமாம் பரப்பிரம சொரூப நீயே
யமலமதாம் பரப்பிரம சொரூப நீயே
யசஞ்சலமாம் பரப்பிரம சொரூப நீயே. (10)

நிருமலமாம் பரப்பிரம சொரூப நீயே
நிராமயமாம் பரப்பிரம சொரூப நீயே
யிருமையிலாப் பரப்பிரம சொரூப நீயே
யேகமதாம் பரப்பிரம சொரூப நீயே
புரமருவாப் பரப்பிரம சொரூப நீயே
பூரணமாம் பரப்பிரம சொரூப நீயே
பரசிவமாம் பரப்பிரம சொரூப நீயே
பராற்பரமாம் பரப்பிரம சொரூப நீயே. (11)

தேகமிலாச் சின்மாத்ர சொரூப நீயே
திவ்வியமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
சோகமிலாச் சின்மாத்ர சொரூப நீயே
சுககனமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
யேகமதாஞ் சின்மாத்ர சொரூப நீயே
யிருமையிலாச் சின்மாத்ர சொரூப நீயே
பாகமுறுச் சின்மாத்ர சொரூப நீயே
பங்கமிலாச் சின்மாத்ர சொரூப நீயே. (12)

நிராவரண சின்மாத்ர சொரூப நீயே
நிட்களமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
புராதனமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
பூரணமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
சராதியிலாச் சின்மாத்ர சொரூப நீயே
சலனமிலாச் சின்மாத்ர சொரூப நீயே
பராபரமாஞ் சின்மாத்ர சொரூப நீயே
பாவனமாஞ் சின்மாத்ர சொரூப நீயே. (13)

ஏதமிலாச் சின்மாத்ர சொரூப நீயே
யெங்குமுள சின்மாத்ர சொரூப நீயே
பேதமிலாச் சின்மாத்ர சொரூப நீயே
பெரிதான சின்மாத்ர சொரூப நீயே
சோதியதாஞ் சின்மாத்ர சொரூப நீயே
சுதசித்த சின்மாத்ர சொரூப நீயே
யாதியிலாச் சின்மாத்ர சொரூப நீயே
யகண்டமதாஞ் சின்மாத்ர சொரூப நீயே. (14)

சகமயலோ ரணுவுமிலாச் சொரூப நீயே
சங்கற்ப விகற்பமிலாச் சொரூப நீயே
யகமயலோ ரணுவுமிலாச் சொரூப நீயே
யழுக்கற்ற வறிவான சொரூப நீயே
துகளணுகாத் தூரியபர சொரூப நீயே
தூரியத்து மதீதபர சொரூப நீயே
சுககனமாய் நிறைந்தபர சொரூப நீயே
சுத்தபரப் பிரமமெனுஞ் சொரூப நீயே. (15)

ஈப்போது மெங்குமுள சொரூப நீயே
யிருமையிலா வேகபர சொரூப நீயே
தற்போத சூனியமாஞ் சொரூப நீயே
தான்றுணுக் கனித்தபர சொரூப நீயே
கற்போல வசைவற்ற சொரூப நீயே
கற்பனையோ ரணுவுமிலாச் சொரூப நீயே
சற்போத சுககனமாஞ் சொரூப நீயே
சாலவுப சாந்தபர சொரூப நீயே. (16)

நித்தியநிர்க் குணமான சொரூப நீயே
நிராகார மானபர சொரூப நீயே
சத்தியஞா னநந்த சொரூப நீயே
சாசுவத மானபர சொரூப நீயே
சுத்தபர வெளியான சொரூப நீயே
சுயஞ்சோதி யொளியான சொரூப நீயே
யத்துவித பூரணமாஞ் சொரூப நீயே
யாநந்த கனமான சொரூப நீயே. (17)

அங்கமிலா வனங்கபர சொரூப நீயே
யாதிமுடி வற்றபர சொரூப நீயே
சங்கமிலா வசங்கபர சொரூப நீயே
சட்பாவ ரகிதபர சொரூப நீயே
பங்கமிலாப் பரமான சொரூப நீயே
பவபாச லேசமிலாச் சொரூப நீயே
மங்கலிலாப் பாஞ்சோதி சொரூப நீயே
மாசற்ற பரப்பிரம சொரூப நீயே. (18)

வேறுபடா விபுவான சொரூப நீயே
வேதாந்த வேத்தியமாஞ் சொரூப நீயே
கூறுபடாக் குணரீத சொரூப நீயே
குணங்குறிக ளெவையுமிலாச் சொரூப நீயே
மாறுபடா மகத்தான சொரூப நீயே
மனவாக்குக் கெட்டாத சொரூப நீயே
யீறுபடா வேகான்ம சொரூப நீயே
யித்துவித மெவையுமிலாச் சொரூப நீயே. (19)

சத்துக்குஞ் சத்தான சொரூப நீயே
சதசத்துக் கப்பாலாஞ் சொரூப நீயே
சித்துக்குஞ் சித்தான சொரூப நீயே
சிதசித்துக் கப்பாலாஞ் சொரூப நீயே
வித்துக்கும் வித்தான சொரூப நீயே
வேறற்ற விமலபர சொரூப நீயே
யெத்துக்கு மெட்டாத சொரூப நீயே
யிருந்தபடி யிருக்கின்ற சொரூப நீயே. (20)

குருவுக்குங் குருவான சொரூப நீயே
குணதோட மெவையுமிலாச் சொரூப நீயே
யருளுக்கு மருளான சொரூப நீயே
யகளங்க மானபர சொரூப நீயே
தெரிவிக்குந் தெரிவான சொரூப நீயே
திருசியமோ ரணுவுமிலாச் சொரூப நீயே
சுருதிக்குஞ் சொல்லவொணாச் சொரூப நீயே
சும்மாவே யிருக்கின்ற சொரூப நீயே. (21)

கண்ணுக்குங் கண்ணான சொரூப நீயே
கருத்துக்குங் கருத்தான சொரூப நீயே
விண்ணுக்கும் விண்ணான சொரூப நீயே
விபுவுக்கும் விபுவான சொரூப நீயே
யெண்ணிக்கைக் கெட்டாத சொரூப நீயே
யெம்மயலுங் கிட்டாத சொரூப நீயே
வர்ணிக்கக் கூடாத சொரூப நீயே
வாக்குமுத லுடாத சொரூப நீயே. (22)

காரணகா ரணமான சொரூப நீயே
காரியமோ ரணுவுமிலாச் சொரூப நீயே
பூரணபூ ரணமான சொரூப நீயே
போக்குவர வெவையுமிலாச் சொரூப நீயே
சீரணமில் சின்மயமாஞ் சொரூப நீயே
சிதாகாய மானபர சொரூப நீயே
யாரணவீ றறிவிக்குஞ் சொரூப நீயே
யகண்டைக ரசமான சொரூப நீயே. (23)

கேவலகே வலமான சொரூப நீயே
கெம்பீர மானபர சொரூப நீயே
பாவனபா வனமான சொரூப நீயே
பரமபர மெவையுமிலாச் சொரூப நீயே
யோவலிலா வுணர்வுருவாஞ் சொரூப நீயே
யொன்றுலு முணரவொணைச் சொரூப நீயே
மேவவொணு மிகவரிதாஞ் சொரூப நீயே
மெய்யுணர்வா நந்தபர சொரூப நீயே. (24)

கற்பதலட் சியமான பொருளு நீயே
துவம்பதலட் சியமான பொருளு நீயே
யற்பமிலா வசிபதமார் பொருளு நீயே
யகண்டார்த்த மானபரம் பொருளு நீயே
நிர்ப்பயமாய் நிலைபெற்ற பொருளு நீயே
நிரதிசயா நந்தபரம் பொருளு நீயே
சற்பதமே முதலவற்றின் பொருளு நீயே
சகலவித சத்தத்தின் பொருளு நீயே. (25)

பயிலுமறை முடிவிலுள பதவாக் யங்கள்
பலவற்றின் ருற்பரியப் பொருளு நீயே
யயலணுகாப் பிரஞ்ஞானம் பிரம மாதி
யகிலமகா வாக்குகளின் பொருளு நீயே
யியலுமகா வாக்குகளின் பிரிவு மின்றி
யின்னதென வியம்பவொணைப் பொருளு நீயே
சுயமதுவாய்ச் சொற்பொருளோ ரணுவு மின்றிச்
சுதந்தரமாய் நின்றபரம் பொருளு நீயே. (26)

அயன்முதலா மைந்துவித மூர்த்தி பேத
மணுவுமிலா வகண்டபர தெய்வ நீயே
பயிலுமொரு கற்பனையு மிலாது நின்ற
பரமார்த்த மானபர தெய்வ நீயே
மயலணுவு மருவாத தெரிவாய் நின்ற
மகத்துக்கு மகத்தான தெய்வ நீயே
செயலெவையுஞ் செறியாத சிவமாய் நின்ற
சிதாகாய மானபர தெய்வ நீயே. (27)

சந்ததமுஞ் சலியாது நிடமாய் நின்ற
சன்மாத்ர மானபர தெய்வ நீயே
சிந்தைமுதற் றிருசியமோ ரணுவு மில்லாச்
சின்மாத்ர மானபர தெய்வ நீயே
நிந்தையுறு பவதுக்க நிணவே யில்லா
நிசாநந்த மானபர தெய்வ நீயே
பந்தமொடு மோட்சமுத லெவையு மில்லாப்
பரிபூன்ற மானபர தெய்வ நீயே. (28)

பின்னமிலாப் போறிவாய்ப் பெருவிண் ணகிப்
பெரிதுக்கும் பெரிதான பிரம நீயே
சென்னியமா முபாதிகளோர் சிறிது மின்றிச்
சிற்கனமாய்ச் செறிந்தபரப் பிரம நீயே
யன்னியமோ ரணுவுமிலா தகண்ட மான
வான்மாவுக் கபின்னபரப் பிரம நீயே
தன்னிடையே தானுகத் தனித்து நின்ற
தன்மாத்ர மானபரப் பிரம நீயே. (29)

பேதமுறப் பலவிதமாய்ப் பேசி யென்ன
பிரிவற்ற வகண்டபரப் பிரமந் தானே
மாதவனின் னிசமான சொரூப மாகு
மகாதேவ னருளியவா வகுத்துச் சொன்னே
மீதிலணு வளவேனு மைய மில்லை
யீசனிரு பதத்தாணை யிசைத்த துண்மை
யாதலினு லகம்பிரம மென்னு ஞான
மடைந்ததனு லகண்டபரப் பிரம மாவாய். (30)

இன்னவித மருளியிடும் ரிபுவை நோக்கி
யிணையற்ற வின்பமடைந் தன்பு கூர்ந்தங்
குன்னவொணு வியப்புடனே யிறைஞ்சி யேத்தி
யுத்தமனே மற்றுமெனக் ககண்ட ஞான
மன்னும்வணங் கருணையினு லருள்வா யென்றே
மகிழ்வுடனே வினவியிடு நிதாகன் றன்னை
யன்னரிபு மாமுனிவன் பரிந்து நோக்கி
யதற்கான வுத்தரமே யாரம் பித்தான். (31)

அகிலவித சீவர்க்குஞ் சுகமே செய்யு
மருள்வடிவாஞ் சங்கரன்மூன் கைலா யத்தி
னிகழ்வுறவே யருள்செய்த நீதி யாக
நிதாகனினக் ககண்டபர நிர்ண யத்தை
வெகுதிடமாய் மனத்தினிடை விளங்கும் வண்ணம்
விசித்திரமாய் மேன்மேனும் விரித்துச் சொல்வாம்
புகலியவிவ் வகண்டபர நிர்ண யத்தைப்
புரையற்ற மனத்துடனே பொருந்திக் கேளாய். (32)

சத்தியமா யொருகாலுஞ் சகத்தே யில்லை
சகமெவையு மொருகாலுஞ் சனிக்க வில்லை
வித்தாரமா யொருகாலு மிருக்க வில்லை
விளக்கமற வொருகாலு மிறக்க வில்லை
சித்திரமாஞ் சகத்தோற்றஞ் சிறிது மின்றிச்
சின்மாத்ர மானபரப் பிரம மொன்றே
நித்தியமாய் நிலைபெற்று நிற்கும் வத்து
நிதாகவிதி லையமில நிச்ச யந்தான். (33)

இத்துவித சகத்தெவையும் விவகா ரத்தில்
யாவர்க்கு மெதிராகத் தோற்ற லாலே
சித்தினது விவர்த்தமதாஞ் சித்தந் தானே
சகமெனத்தோற் றுகின்றதெனச் சில்லோர் சொல்வர்
சித்தமது நன்றாக விசாரிக் குங்காற்
சின்மயமாம் பிரமமலா தில்லை யில்லை
புத்திரனே யாதலினு லெக்கா லத்தும்
பூரணமா யுளதுபரப் பிரம மொன்றே. (34)

சுத்திகையின் விவர்த்தமதாம் ரசதந் தன்னைச்
சோதிக்கிற் சுத்தியலால் ரசத மில்லை
யித்திறமே சித்தினது விவர்த்த மாக
விலங்கியிடுஞ் சித்தகதைச் சோதிக் குங்காற்
சித்தையலாற் சித்தமெனச் சிறிது மில்லை
சித்தமிலாத் தன்மையினுற் செகத்து மில்லை
புத்திரனே யாதலினு லெக்கா லத்தும்
பூரணமா யுளதுபரப் பிரம மொன்றே. (35)

அகிலவதிட் டானபரப் பிரமத் தின்க
ணயலெனவே கற்பிதமாய்த் தோன்று நின்ற
சகலமுமே நன்றுகச் சோதிக் குங்காற்
சன்மயமாம் பிரமமலால் வேறே யில்லை
யிகழ்வுறவே யிரச்சுவினிற் றோற்றுஞ் சர்ப்ப
மிரச்சுவலாற் சோதிக்கில் வேறே யுண்டோ
புகழ்மகனே யாதலினு லெக்கா லத்தும்
பூரணமா யுளதுபரப் பிரம மொன்றே. (36)

மாயையிலை மாயைசெயுஞ் செயலு மில்லை
மயக்கமிலை மயக்கமுறுஞ் சகத்து மில்லை
தீயவகங் காரமிலை சித்த மில்லை
நியங்கியிடு மனதுமிலை மதியு மில்லை
காயமிலை கருமமிலை கார்த்தா வில்லை
கரணமிலை காட்சியிலை காண்பா னில்லை
யேயவுபா தேயங்க ளெவையு மின்றி
யெப்போது முளதுபரப் பிரம மொன்றே. (37)

ஆகமுத லனேகவித வுபாதி யில்லை
யஞ்ஞான மவிவேக மனைத்து மில்லை
சேகரமாஞ் சாதனசம் பத்தி யில்லை
சிரவணமே முதலியஞா னங்க ளில்லை
சோகமறு சமாதியிலை ஞான மில்லை
சோர்வுதரும் பந்தமிலை மோட்ச மில்லை
யேகபரி பூரணமா யிகழாச் சத்தா
யெப்போது முளதுபரப் பிரம மொன்றே. (38)

விடயமுத லநுபந்த நான்கு மில்லை
விளம்பியிடுஞ் சம்பந்த மூன்று மில்லை
சடமருவும் பூதங்க ளைந்து மில்லை
சதாசிவனே முதலியவை மூர்த்தி யில்லை
கடபடமே முதலியவாம் வத்து வில்லை
காலமொடு தேசமுமற் றெவையு மில்லை
யிடர்மருவா வின்புருவா யிலங்குஞ் சித்தா
யெப்போது முளதுபரப் பிரம மொன்றே. (39)

பூதமொடு பஞ்சியமாம் பொருளு மில்லை
புலமுறவே நிகழ்கின்ற பொருளு மில்லை
சேதுகையை கங்கைமுதற் றீர்த்த மில்லை
சேஷிக்குஞ் சிவன்முதலாந் தெய்வ மில்லை
நீதியொடு நிறைவேற்றும் விரத மில்லை
நிரைநிரையாப் பெறுகின்ற பலனு மில்லை
யேதுமிலாச் சன்மாத்ர வடிவே யாகி
யெப்போது மூளதுபரப் பிரம மொன்றே. (40)

வன்னமுட னுச்சிரம பேதமில்லை
வகுப்புற்ற பாவமற மெவையு மில்லை
துன்னியிடுஞ் சுவர்க்கநர காதி யில்லை
துக்கசுக முதலியதாந் தொந்த மில்லை
யன்னியமா மிருமையிலை யொருமை யில்லை
யசத்தான வாரோப மனுவு மில்லை
சன்னியமில் சன்மாத்ர சுபாவ மாகிச்
சலியாம லுளதுபரப் பிரம மொன்றே. (41)

புந்தியினு லுறுதியிடும் பொருளு மில்லை
புரைமனத்தான் மனனமிடும் பொருளு மில்லை
சிந்தையினுற் சிந்திக்கும் பொருளு மில்லை
செறிவாக்கால் வசனிக்கும் பொருளு மில்லை
தொந்தமதாய்த் தோற்றியிடுந் துவித மில்லை
துவிதத்தாற் றொடர்கின்ற பயமு மில்லை
சந்ததமுஞ் சன்மாத்ர சுபாவ மாகிச்
சலியாம லுளதுபரப் பிரம மொன்றே. (42)

சனனமுதற் சட்பாவ விகார மில்லை
சரீரமுதற் சட்பாவ விகாரி யில்லை
நனவுமுத னுன்குவித வவத்தை யில்லை
நாநாவா மவற்றினபி மானி யில்லை
பனுவலிடும் பாவமுட னபாவ மில்லை
பலவிதமாம் வியட்டியிலை சமட்டி யில்லை
யனியமிலா வறிவுருவா யகண்ட சத்தா
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (43)

சகலமுமே யில்லையெனுஞ் சொலவு மில்லை
சருவமுமே மித்தையெனுஞ் சொலவு மில்லை
யகிலமுமே பிரமமெனுஞ் சொலவு மில்லை
யனிசமகம் பிரமமெனுஞ் சொலவு மில்லை
நிகழ்பிரம மகமெனுமிச் சொலவு மில்லை
நீநானென் றிவைமுதலாஞ் சொலவு மில்லை
யகிலவிதச் சொலவுமிலா தகண்ட மாகி
யசஞ்சலமா யுளதுபரப் பிரமமொன்றே. (44)

சத்துவமே முதலியமுக் குணங்க ளில்லை
சாற்றியவக் குணங்களினவ் விகார மில்லை
யத்துவிதந் துவிதமுதன் மதமு மில்லை
யவையருளுங் குருசீட ராரு மில்லை
யித்துவிதப் பிராந்தியிறை யளவு மில்லை
யில்லையென வியம்பியவிச் சொல்லு மில்லை
சுத்தசிதா காயமதாய்ச் சுபாவ சித்தாய்ச்
சுகனமா யுளதுபரப் பிரம மொன்றே. (45)

ஓதியவிவ் வகண்டபர நிச்ச யத்தா
லுலைமனத்தின் விகற்பங்க ளனைத்து நீக்கி
ராதிமுடி வொன்றுமிலா தகண் டமான
வத்துவிதப் பரப்பிரம மானே ருக்கே
மாதவவிவ் வுரைபவ பந்த நீங்கு
மற்றவருக் கிப்பந்த மென்று நீங்கா
தாதலினு லகண்டபர நிச்சயத்தா
லநவரத மகண்டபரப் பிரம மாவாய். (46)

மருவுமநிட் டானபரப் பிரமத் நின்கண்
மாயையினுற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மொருசிறிது மிலையெனவே நேரி பண்ணி
யூனமற மிஞ்சியதே பிரம மென்று
நீருமலமா மகண்டபர நிர்ண யத்தை
நிமலசிவ னிகழ்த்தியவா நினக்குச் சொன்னேம்
பாவியவிவ் வர்த்தத்தை யொருகா லேனும்
பங்கமறக் கேட்டுணர்வோர் பாமே யாவர். (47)

வாரிதியி லலைகுமிழி நுரைக டோன்றும்
வகையெனவே வரையற்ற பாசி வத்திற்
சாரமிலாச் சகலசரா சரமுந் தோன்றுஞ்
சலனமுரு விசாரணையா லவைய னைத்தும்
பூரணமாம் பரமசிவ சொரூப மென்றே
புரையற்ற போதவுரம் பொருந்தி னோரே
கோரமதாம் பவபாச மனைத்து நீங்கிக்
குறைவற்ற பரமசிவ சொரூப மாவர். (48)

இன்னவிதம் பரமசிவ னருளிச் செய்த
வியல்பெனவே ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பின்னபிலா வகண்டபர நிர்ண யத்தைப்
பிரியமுட னருள்செய்தா னெனவே கந்த
னுன்னவொணாக் கருணையிறற் சைகே ஷவ்யற்
குத்தமமா மிப்பொருளை யுரைத்தா னென்றே
தன்னியனுஞ் சூதமுனி முனிவர்க் கெல்லாந்
தற்பிரம நிர்ணயமே சாற்றினனால். (49)

வேறு.

நித்தநிர்க்குண மாகிய வத்துவே
நீயெனத்நிட மாகநி கழ்த்தலுஞ்
சுத்தலாத சகங்க ளனைத்துமே
சற்றுமில்லை யிலையெனச் சாற்றலு
மித்தையன்றியின் மிஞ்சிய வத்துவே
மெய்யதான பரம்பொரு ளென்னலு
முத்தமாநந்தத் தாண்டவ மாடுநம்
மும்பர்கோன்ற னகண்ட சொரூபமே. (50)

இரண்டாம் அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம்-2க்கு திருவிருத்தம்-135.

மூன்றாவது

சருவமும் மித்தையென்றும் சருவமும் சின்மாத்ரமென்றுங் கூறி நிர்க்குணபூசையும் உரைக்கும் அத்தியாயம்.

பரமசிவ னருளியவா பின்னுஞ் சொல்வேன்
பலவிதமாம் பூதம்பொய் புவனம் பொய்யே
யுரைதருபா வாபாவ மியாவும் பொய்யே
யுற்பத்தி திதிநாச மனைத்தும் பொய்யே
விரிவுபெற்று போகம்பொய் பந்தம் பொய்யே
விடயமுத லியாவும்பொய் விதியும் பொய்யே
சுருதியொடு நூலும்பொய் சொல்லும் பொய்யே
சுகனனமாம் பரப்பிரம மொன்றே மெய்யாம். (1)

வெகுவிதமா மாபத்துஞ் சம்பத்தும் பொய்
விசித்திரமாம் வீடும்பொய் வித்தம் பொய்யே
தகுகுரவன் சீடன்பொய் குணதோடம் பொய்
தடையறவே போக்கும்பொய் வரவும் பொய்யே
மிகமறைவும் வெளியும்பொய் கணிதம் பொய்யே
மேவியவெவ் வசனமுமெப் பொருளும் பொய்யே
யிகபரமாங் கதியும்பொய் பயமும் பொய்யே
யிகழ்வுபெறுப் பரப்பிரம மொன்றே மெய்யாம். (2)

கருதியிடும் புராணம்பொய் யிதிகா சம்பொய்
காரியகா ரணமும்பொய் யீசன் பொய்யே
பாவியிடு முலகும்பொய் யுயிர்க ளும்பொய்
பந்தமொடு மோட்சசுக துக்கம் பொய்யே
சுரரசுர ரெவரும்பொய் தியானம் பொய்யே
சுத்தமதா மனதும்பொய் வாக்கும் பொய்யே
யுரமருவாக் கௌணம்பொய் முக்யம் பொய்யே
யுணர்வுருவாம் பரப்பிரம மொன்றே மெய்யாம். (3)

புத்தியினு லுறுதியிடும் பொருளும் பொய்யே
புகன்மனத்தான் மனனமிடும் பொருளும் பொய்யே
சிந்தையினுற் சிந்திக்கும் பொருளும் பொய்யே
செறிவாக்கால் வசனிக்கும் பொருளும் பொய்யே
யிந்திரிய விடயமதாம் பொருளும் பொய்யே
யிதுவெனவே காண்பிக்கும் பொருளும் பொய்யே
கொந்தமதாய் விரிவுறுமெப் பொருளும் பொய்யே
துகளற்ற பரப்பிரம மொன்றே மெய்யாம். (4)

சோத்திரமு மஃதுணருஞ் சத்தம் பொய்யே
சுழலுருக்கு மஃதுணரும் பரிசம் பொய்யே
நேத்திரமு மஃதுணரு மூருவம் பொய்யே
நிகழ்நாக்கு மஃதுணரு மிரதம் பொய்யே
காத்திரமார் மூக்குமதன் விடயம் பொய்யே
காணமுமவ் வநிட்டான கெய்வம் பொய்யே
கோத்திரமுஞ் சூத்திரமுங் குலமும் பொய்யே
குறைவற்ற பரப்பிரம மொன்றே மெய்யாம். (5)

விரிவுபெறு மதுவிதுவு மெதுவும் பொய்யே
விளம்பியநா னீயனிய ரியாரும் பொய்யே
பரமிகமென் றெண்ணியவை யாவும் பொய்யே
பலவிதமாம் பழக்கமுடன் குய்யம் பொய்யே
சருவமெனுஞ் சகத்திலுள வெவையும் பொய்யே
சருவசகக் காரணமுஞ் சுத்தப் பொய்யே
திருசியமாய்த் தோற்றியவை யாவும் பொய்யே
திருக்கான பரப்பிரம மொன்றே மெய்யாம். (6)

சகலசரா சரமென்னுஞ் சொல்லும் பொய்யே
சகலத்தின் பேதமெனுஞ் சொல்லும் பொய்யே
நிகிலமெனுஞ் சங்கற்ப மயலும் பொய்யே
நிகிலத்தின் மூடமெனு மயலும் பொய்யே
யகிலசகக் காரணமாம் விதியும் பொய்யே
யகிலத்தின் பாலகனு மரியும் பொய்யே
பகருசகன் ஞசகனு மரணும் பொய்யே
பங்கமிலாப் பரப்பிரம மொன்றே மெய்யாம். (7)

தவமோடு செபமும்பொய் தீர்த்தமும் பொய்
தன்வேதாத் யயனம்பொய் யோமம் பொய்யே
சிவஞான பூசனைபொய் மந்திரம் பொய்
செறிவன்னச் சிரமங்கண் முற்றும் பொய்யே
சுவமான சற்சங்க மாதியும் பொய்
சுழல்பூத முதலான காலம் பொய்யே
யவமான சகத்தோற்ற மனைத்தும் பொய்யே
யழிவற்ற பரப்பிரம மொன்றே மெய்யாம். (8)

தூயவனே விதம்விதமாய்த் தோற்றப் பட்ட
தோற்றமெலா முண்மையினி லிலவே யில்லை
மாயையினுற் றோற்றியவெத் தோற்றந் தானு
மயக்கமுறும் பொய்யெனவே நிச்ச யிப்பாய்
நீயறியும் படிமற்றுங் குய்ய மான
நிர்ணயமே பரமசிவன் சொனவா சொல்வே
னுயசக சீவபர மனைத்து மென்று
மறிவுருவாம் பரப்பிரம மாத்தி ரந்தான். (9)

இருள்வடிவா மவித்தையதன் பேத மியாவு
மிருமைதருஞ் சித்தத்தின் பேத மியாவும்
பாவியிடுஞ் சகத்துடைய பேத மியாவும்
பலகோடி பிரமாண்ட பேத மியாவுந்
திரிவிதமா மூலகமுதற் பேத மியாவுந்
திரளுற்ற குணதோட பேத மியாவு
மருள்வடிவா மாசிரியன் வசன மியாவு
மறிவுருவாம் பிரமமென நிச்ச யிப்பாய். (10)

உத்தமமு மத்திமமு மதம மியாவு
மோங்கார மகாரமுதல் வன்ன மியாவும்
வித்தாரமாய்ச் சுபாசுபமாங் கரும மியாவும்
விதம்விதமாச் செயலுற்ற செய்கை யாவு
மத்திரமாய்க் காண்கின்ற பதார்த்த மியாவு
மங்கங்கே கேட்கின்ற பதார்த்த மியாவுஞ்
சித்திரமாய்ச் சகத்திலுள பதார்த்த மியாவுஞ்
சின்மயமாம் பிரமமென நிச்ச யிப்பாய். (11)

வகைவகையாய்ச் சாரலுறும் பொருட்க ளியாவும்
வசனத்தால் வசனிக்கும் பொருட்க ளியாவு
மிகழ்வுறவே தள்ளியிடும் பொருட்க ளியாவு
மினிமையுடன் கூட்டியிடும் பொருட்க ளியாவு
மிகமிகவு நல்கியிடும் பொருட்க ளியாவு
மேன்மேலாய்ச் செயலுறுகா ரியங்க ளியாவு
நிகழ்வுறவே நீரோடன் முதலா யியாவு
நிருமலமாம் பிரமமென நிச்ச யிப்பாய். (12)

இதுவெனவே வெகுவிதமாய்த் தோற்று நின்ற
வெவைகளுமே பிரமமென நிச்ச யிப்பாய்
நிதமுமக மகமெனவே நிகழா நின்ற
நிகிலமுமே பிரமமென நிச்ச யிப்பா
யெதுவெதுதான் நிருசியமா யெங்கே யெங்கே
யெவ்விதமாய்த் தோற்றினுமத் தோற்ற மெல்லாந்
நிதமருவுந் நிருக்கான பிரம மென்றே
நிடமாக வெப்போது நிச்ச யிப்பாய். (13)

பின்னுமகா ரகசியமாய் மிகவி யப்பாய்ப்
பிறங்கியநற் கைலமலை தன்னி லீச
னென்னிடைமுன் னருளியதா நிர்ண யத்தை
யாவர்க்கு மிதமாக வியம்பக் கேளாய்
பின்னமெனத் தோற்றியவை யாவு மென்றும்
பேதமிலாச் சின்மாத்ர சொரூப மாகும்
பன்னியவச் சின்மாத்ர சொரூபந் தானே
பகுப்பற்ற பரப்பிரம சொரூப மாமே. (14)

இங்ஙகமென் றெண்ணுவதுஞ் சின்மாத் ரந்தா
னிதுவெனவே காண்பதுவுஞ் சின்மாத் ரந்தான்
றுங்கசிதா பாசனுமே சின்மாத் ரந்தான்
றோற்றியவிவ் வுலகமுமே சின்மாத் ரந்தா
னங்கவனீ நானெனலுஞ் சின்மாத் ரந்தா
னுகாயங் காற்றனலுஞ் சின்மாத் ரந்தான்
பொங்குபுனல் பிருதுவியுஞ் சின்மாத் ரந்தான்
புகல்பஞ்ச மூர்த்திகளுஞ் சின்மாத் ரந்தான். (15)

பூதமொடு பவிடியமுஞ் சின்மாத் ரந்தான்
புகல்வர்த்த மானமுமே சின்மாத் ரந்தான்
பேதமுறு திரவியமுஞ் சின்மாத் ரந்தான்
பேசியிடுங் குணமுதலுஞ் சின்மாத் ரந்தான்
ஞாதுருவு ஞானமுமே சின்மாத் ரந்தான்
ஞானமுறு ஞேயமுமே சின்மாத் ரந்தா
ஞதியுட னந்தமுமே சின்மாத் ரந்தா
னகிஞ்சிலொடு கிஞ்சிலுமே சின்மாத் ரந்தான். (16)

வகைவகையாம் வசனங்கள் சின்மாத் ரந்தான்
வசனிக்கும் வாக்குகளுஞ் சின்மாத் ரந்தான்
ரூகைதொகையாய்த் தோற்றுவதுஞ் சின்மாத் ரந்தான்
ரூற்றியதைத் தொடருவதுஞ் சின்மாத் ரந்தான்
மிகமிகவும் வேண்டுவதுஞ் சின்மாத் ரந்தான்
மேவியதை வெறுப்பதுவுஞ் சின்மாத் ரந்தா
னிகபரமா யுளவெவையுஞ் சின்மாத் ரந்தா
னின்மையுமற் றுண்மையுமே சின்மாத் ரந்தான். (17)

பலவிதமாச் செயுமயனுஞ் சின்மாத் ரந்தான்
பாலகனு மாதவனுஞ் சின்மாத் ரந்தா
னிலைமையறச் செயுமாலுஞ் சின்மாத் ரந்தா
னிகிலசரா சுரர்நரருஞ் சின்மாத் ரந்தா
னலைவுபெறுந் நிரியக்குஞ் சின்மாத் ரந்தா
னகிலசரா சரசகமுஞ் சின்மாத் ரந்தான்
றலைமையுறுங் குருசிடர் சின்மாத் ரந்தான்
றந்தைசுத ராதியருஞ் சின்மாத் ரந்தான். (18)

திருசியமுந் திருக்குருவுஞ் சின்மாத் ரந்தான்
றிகழ்ஞான ஞேயமுமே சின்மாத் ரந்தான்
றுருவமொடுத் தருவமுமே சின்மாத் ரந்தான்
றூலமொடு சூக்கவுடல் சின்மாத் ரந்தான்
மருவியகா ரணவுடலுஞ் சின்மாத் ரந்தான்
மாயைமக தாதிகளுஞ் சின்மாத் ரந்தான்
கருதியமூர்த் தாமூர்த்தஞ் சின்மாத் ரந்தான்
காரியகா ரணமெவையுஞ் சின்மாத் ரந்தான். (19)

கொடர்வேக வேதாந்தஞ் சின்மாத் ரந்தான்
றுவிதமொடக் துவிதமுமே சின்மாத் ரந்தான்
படர்நிக்கு விநிக்குகளுஞ் சின்மாத் ரந்தான்
பகர்நிக்குப் பாலகருஞ் சின்மாத் ரந்தான்
கடபடமே முதலெவையுஞ் சின்மாத் ரந்தான்
கண்டபல விவகாரஞ் சின்மாத் ரந்தா
னடர்நாம முருவெவையுஞ் சின்மாத் ரந்தா
னகிலபதார்த் தங்களுமே சின்மாத் ரந்தான். (20)

பலவிதமாம் பூதங்கள் சின்மாத் ரந்தான்
பரவியிடும் புவனங்ஙள் சின்மாத் ரந்தா
னலிவுபெறும் பிராணன்கள் சின்மாத் ரந்தா
னலிகின்ற காரணங்கள் சின்மாத் ரந்தா
னலமருவாக் கோசங்கள் சின்மாத் ரந்தா
னல்வினைக டீவினைகள் சின்மாத் ரந்தான்
சலனமுறுஞ் சீவர்களுஞ் சின்மாத் ரந்தான்
சந்ததமுஞ் சகலமுமே சின்மாத் ரந்தான். (21)

நிலைமையுறு நித்தியமுஞ் சின்மாத் ரந்தா
னிலைமருவா வநித்தியமுஞ் சின்மாத் ரந்தான்
றலைமையுறுஞ் சத்தியமுஞ் சின்மாத் ரந்தான்
றவிர்கின்ற வசத்தியமுஞ் சின்மாத் ரந்தான்
சலனமுறு வாதாரஞ் சின்மாத் ரந்தான்
சஞ்சலமா மாதேயஞ் சின்மாத் ரந்தான்
பலவிதமாஞ் சுகதுக்கஞ் சின்மாத் ரந்தான்
பகுப்புற்ற பதார்த்தமெலாஞ் சின்மாத் ரந்தான். (22)

சதுர்விதமாஞ் சாதனமுஞ் சின்மாத் ரந்தான்
சலனமிலா முத்தியுமே சின்மாத் ரந்தான்
விதம்விதமாய் மருவியதுஞ் சின்மாத் ரந்தான்
வேதங்கள் விளம்புவதுஞ் சின்மாத் ரந்தா
னநிசயதா லறைவதுவுஞ் சின்மாத் ரந்தா
னணுகியது மணுகாதுஞ் சின்மாத் ரந்தா
னெதுவெதுதா னெவ்விதமா யெங்கே யெங்கே
யிலங்கினுமே யவையாவுஞ் சின்மாத் ரந்தான். (23)

சின்மாத்ர மன்றியிலோர் பந்த மில்லை
சின்மாத்ர மன்றிலோர் மோட்ச மில்லை
சின்மாத்ர மன்றியிலோர் சீவ னில்லை
சின்மாத்ர மன்றியிலோ ரீச னில்லை
சின்மாத்ர மன்றியிலோர் சகமு மில்லை
சின்மாத்ர மன்றியிலோ ரணுவு மில்லை
சின்மாத்ர மெதுவதுவே சிதையா தெங்குஞ்
செறிகின்ற பரப்பிரம சோரூப மாமே. (24)

சங்காரஞ் சாற்றியதா மிந்த வர்த்தஞ்
சத்தியமே சத்தியமே சங்கை யில்லை
துங்கமதாம் பரமசிவன் றுணைப்பா தத்தைத்
தொட்டிதனைச் சத்தியமாச் சொல்ல லுற்றே
னங்கமுறும் வேதமெலா மறையா நின்ற
வருத்தமிதே யருத்தமிதே யைய மில்லை
யிங்கிதனை யன்புடனே யொருகாற் கேட்டோ
னேகமதாம் பரப்பிரம மாவ னன்றே. (25)

பரிவுடனே யுபநிடத பாடத் தாலும்
பரமசிவ பத்தர்க்கே தானத் தாலும்
புரையறவே திவ்வியமா மிலிங்கத் தின்கண்
பூரணமாம் பரமசிவ பூசை யாலும்
பரவுசிவ தலங்களிலே வாசத் தாலும்
பலவிதமா மற்றுமுறு நியமத் தாலும்
பிரமமதாம் பரமசிவ னருளுண் டாகிப்
பின்னமிலா வகண்டான்ம போதமுண்டாம். (26)

புராணமதாம் பரசிவனுக் காவா கித்தல்
பொருந்தியிடும் வகையெங்ங னகிலா தாரப்
பரசிவனுக் காசனமிங் களிப்ப தெங்ஙன்
பரிசுத்தன் றனக்குரிய பாத்தி யாதி
தருவதெங்ங ணென்றுலு நினைக்க வொண்ணைத்
தற்பரனுக் கபிடேகஞ் செய்வ தெங்ஙன்
பரவுதிகம் பரனுகி விபுவாய் நின்ற
பரனுக்குத் துகிலொன்றைச் சாத்த லெங்ஙன். (27)

ஓதியவன் ஞச்சிரம மொன்று மில்லா
வுருவோனுக் குபவீதஞ் சாத்த லெங்ஙன்
பேதமிலா நிராகார சொரூப னுக்குப்
பிறங்கியவா பாணங்க ளணிவ தெங்ங
னேதுமொரு பற்றுமிலா வசங்க னுக்கிங்
கினிதான கந்தத்தைப் பூச லெங்ஙன்
வாதனையே தொன்றுமிலா வடிவோ னுக்கு
வாமலரா லர்ச்சிக்கும் வகைதா னெங்ஙன். (28)

நாசிகையே முதலின்றிச் சுத்த மாக
நண்ணுசுயஞ் சோதிக்குத் தூப தீப
நேசமுடன் காண்பிக்கும் வகைதா னெங்ங
னிசமான வாநந்த நிருத்த னுக்குப்
போசனமா னைவேத்யஞ் செய்வ தெங்ஙன்
புவனமெலா மாநந்தஞ் செய்வோ னுக்கு
மாசறவே தாம்பூல மளிப்ப தெங்ஙன்
மற்றுமுள வுபசாஞ் செய்வ தெங்ஙன். (29)

கனன்முதலே விளக்கியிடுஞ் சிற்சோ திக்குக்
கற்பூர வாரத்தி செய்வ தெங்ஙன்
பனுவுமொரு பரிச்சேத மில்லா தோனைப்
பங்கமற வலமாக வருவ தெங்ங
னனவரத மத்துவித மானோன் றன்னை
யட்டாங்க பூருவமாய் வணங்க லெங்ஙன்
மனவாக்கு முதலியவைக் கெட்டா தான
மாதேவன் றனைவாக்கால் வழுத்த லெங்ஙன். (30)

புத்திரவுள் வெளியெங்கும் பூன்ற னுகப்
பொருந்தியுள பானுக்கு விசர்க்க மெங்ங
னித்திறமாய் வாகியமா முபசாரத்தா
லீசற்குப் பூசனையிங் கொவ்வா தேனுஞ்
சத்தியஞா னநந்த சம்பு வுக்குச்
சலனமிலாப் பாவனை யாம்பூசை தன்னை
வித்தரமாம் வேதாந்த நூலிற் சொன்ன
விதமாக விளம்பியிட விரும்பிக் கேளாய். (31)

மாயைமுதற் கற்பிதமாம் பொருளே யில்லை
மாய்வற்ற பரசிவனு நானே சேட
மாயுளனென் றெண்ணுவதே பாவா கித்த
லசைவறவே தன்னிடையே தானுய் நின்ற
தூயவனும் பரசிவனே நானென் றெண்ண
றுகளற்ற வாசனமா மனத்தின் சங்க
மேயமதாந் தீவினைநல் வினைக ளொன்று
மெனக்கிலையென் றெண்ணுவதே பாத்தி யங்காண். (32)

வெகுகால மாகியுள வவித்தை யென்னும்
விரிவான சலாஞ்சலியை விடுத ருனே
தகுமான்ம லிங்கத்துக் கருக்கியங் காண்
டடையற்ற பரமசிவா நந்த மென்னு
நிகழ்வான வாரிதியின் லேசா லேச
நிகிலருமே பருகுவரென் றெண்ணருனே
வகையான வாசமன மாகு மைந்தா
வாமருவு மபிடேக வித்தியுங் கேளாய். (33)

பூணைமாஞ் சுகவாரி யான வென்னுற்
புவனமெலா நினைப்புற்ற தென்று நானே
காரியமா முதகத்தா னனைக்க வொண்ணுக்
களங்கமிலாப் பிரமமெனுந் தியானந் தானே
சாரமதா மபிடேக மற்றென் றுலுஞ்
சற்றேனும் புனையவொ ணாப் பூன்ற னனென்
றேருவதே பரமான்ம லிங்கத் துக்கிங்
குரித்தான வத்திரமென் றுணர்தி மைந்தா. (34)

திரிகுணமா மூலகமெனுஞ் சூத்தி ரத்தைத்
திரட்டிராளாய்த் தரிக்குமதிட் டான மான
பரசிவனே நானென்னுந் தியானந் தானே
பரமான்ம லிங்கத்துக் குபவீ தங்கா
ணருவமதா யகிலவிசே டமுமே யற்ற
வான்மாவே யகமென்னல் பணிக ளாகும்
விரிபலவாம் வாதனைசேர் சகந்த ரிக்கும்
விபுநானென் றெண்ணுவதே கந்த மாகும். (35)

மூக்குணமாம் விருத்திகளே விடுத ருனே
மூலவிலிங் கத்துக்கட் சதைக ளாகு
மிக்குருநா னீசனெனும் பேத மூன்றை
யிகழ்ந்திடலே வில்லுவபத் திரங்க ளாகுந்
தூர்க்குணமாம் வாசனையைத் தவிர்த ருனே
தூபமதாஞ் சுயஞ்சோதி யாயி லங்கு
நிர்க்குணமாம் பரசிவனே நானென் றெண்ணு
நிரந்தரமாம் பாவனையே தீப மாகும். (36)

பலகோடி பிரமாண்ட நானே யென்னல்
பரமசிவ லிங்கத்தி னைவேத் யங்கா
ணலையாத பிரமசுக மனுப விக்கு
மகண்டமதாம் விருத்தியதே வியஞ்ச னங்காண்
சலியாத ஞானமெனு முதகத் தாலே
சஞ்சலமூ லாஞ்ஞான மென்னப் பட்ட
தொலையாத வுச்சிட்ட சேடந் தன்னைத்
துடைத்திடலே யத்தங்க டுலக்க லாகும். (37)

வெகுவிதமா யிராகமுறும் விடயந் தன்னை
விடுத்திடலே தாம்பூல மளிப்ப தாகும்
நிகழ்வுபெரு வஞ்ஞான விருளைப் போக்கு
நிருமலமாம் பிரமான்ம ஞானந் தானே
திகழ்வுறுநீ ராஞ்சனமாம் விவித மாகத்
தெரிவதெலாம் பிரமமெனுந் திட்டி தானே
சுகனமாம் பரமசிவ லிங்கத் துக்குச்
சுத்தமுறு மலர்மாலை யாகுந் தூயோய். (38)

பூரணவா நந்தான்மா வகமென் றெண்ணல்
புகழ்புட்பாஞ் சலியாகு மநந்த கோடி
காரியமாம் பிரமாண்ட மென்னி டத்தே
கற்பிதமாய்ச் சுழலுமெனுந் தியானந் தானே
நேரதுவாய் வலம்வாலா மென்று மென்னே
நிகிலருமே வந்திப்பார் நானெப் போது
மாரையுமே வந்திக்கே னென்னுந் தியான
மான்மமகா லிங்கத்தின் வணங்க லாமே. (39)

அண்டமதா மென்னிடையி னும ரூப
மணுவுமிலை யென்றுசெயுங் கிந்தை தானே
புகன்றபர பூசனையி லுரிய தாகப்
புகல்கின்ற வரநாம கீர்த்த னங்காண்
சகந்தனிலே கர்த்தவ்ய மான தொன்றுஞ்
சற்றுமெனக் கில்லையெனச் செய்யுந் தியானந்
தகுந்தமனே பாவனையாற் செய்யும் பூசை
தனின்மற்று முள்ளவுப சாரமாமே. (40)

சகலமனே மயக்கங்கள் விட்சே பங்கள்
சற்றுமிலா வசைவற்ற சமாதி தானே
விகலமிலாப் பரமசிவ லிங்கத் தூக்கு
விசர்ச்சனமா மிவ்வண்ணம் வேதாந் தத்திற்
புகலமல பூசனையை யொருகா லேனும்
புரிந்திடுவோன் வாதனைக ளெவையுந் தள்ளி
யகிலமதா மஞ்ஞான மரந்தை யாவு
மகற்றிமகா மோட்சசுக மடைவ னன்றே. (41)

ஓதியவிப் பூசனையைச் செய்வ தற்கிங்
குரித்தான வுணர்வில்லோர் மூர்த்தி யாதி
மீதுபர சிவன்றனைநல் லன்பி னேடே
மேவியிடு வாகியமா முபசா ரத்தால்
நீதியதாப் பூசனைசெய் நிடினு மீச
னிகரில்லாக் கருணையினு லன்னே ருக்கும்
போதமுடன் மோட்சத்தை மெள்ள மெள்ளப்
பொருந்தியிடச் செய்திடுவன் புரையற் றேனே. (42)

இந்தவிதம் பரமசிவ னருளிச் செய்த
வியல்பாக ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பந்தமறும் பரமார்த்த நிர்ண யத்தைப்
பாங்காகக் கருணையினற் பகர்ந்தா னென்றே
யந்தமிலா வருளுடனே சைகே ஷவ்யற்
கறுமுகவ னடைவாக வறைந்தா னென்றே
சந்ததமுஞ் சருவமுமே யுணர்ந்த சூதன்
சகலமகா முனிவர்க்குஞ் சாற்றி னனல். (43)

வேறு

மிகவிசித்திர மாம்பல கோற்றமு
மித்தையேயென விங்கு விளம்பலு
மஃதுமாயில தற்கநிட் டானமா
மறிவுமாத்திர மென்றுரை செய்தலு
நிகழுநிர்க்குண மானத பூசனை
நீதியாக நிகழ்த்தலு மியாவுமே
மகிழுமாநந்தக் காண்டவ மாடுநம்
மாசிலீச னகண்ட சொரூபமே. (44)

மூன்றுவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 3-க்கு திருவிருத்தம்-179

++

நான்காவது

அகண்டைகரசநிர்ணயமும் அகண்டாநுபூதியும் உரைக்கும் அத்தியாயம்.

சகலவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரிதாயற் புதமு மாகி
நிகழ்மறைநூ லெவற்றினுமே சார மாக
நிகழ்த்துமகண் டைகரச நிர்ணயத்தைச்
சுகவடிவாம் பரமசிவ னருளான் முன்னஞ்
சொன்னவித மாகநினக் கின்னஞ் சொல்வேன்
வெகுவிதமாஞ் சீவேச சகங்க ளியாவும்
வேறற்ற வகண்டைக ரசமேயாகும். (1)

மேதினியீ தகண்டைக ரசசெசா ரூப
மேவுசல மகண்டைக ரசசெசா ரூபஞ்
சோதியன லகண்டைக ரசசெசா ரூபஞ்
சுழல்வாயு வகண்டைக ரசசெசா ரூப
மோதியவிண் ணகண்டைக ரசசெசா ரூப
மொலிமுதலு மகண்டைக ரசசெசா ரூபம்
பூதமெலா மகண்டைக ரசசெசா ரூபம்
புகல்கிரியை யகண்டைக ரசசெசா ரூபம். (2)

மருவுபய னகண்டைக ரசசெசா ரூப
மகிழ்விடரு மகண்டைக ரசசெசா ரூப
நரகமுத லகண்டைக ரசசெசா ரூப
நாகமுமே யகண்டைக ரசசெசா ரூபம்
விரியுலகு மகண்டைக ரசசெசா ரூபம்
விரிஞ்சனுமே யகண்டைக ரசசெசா ரூப
மரியாணு மகண்டைக ரசசெசா ரூப
மமரெலா மகண்டைக ரசசெசாரூபம். (3)

எறியினணு மகண்டைக ரசசெசா ரூப
மிந்துவுமே யகண்டைக ரசசெசா ரூப
மறைபொருளு மகண்டைக ரசசெசா ரூப
மறையாது மகண்டைக ரசசெசா ரூப
மறைபொருளு மகண்டைக ரசசெசா ரூப
மறையாது மகண்டைக ரசசெசா ரூப
முறுபெயரு மகண்டைக ரசசெசா ரூப
முருவமெலா மகண்டைக ரசசெசா ரூபம். (4)

நிகழ்பாணு மகண்டைக ரசசெசா ரூப
நிகழ்பரையு மகண்டைக ரசசெசா ரூப
மகிழ்குருவு மகண்டைக ரசசெசா ரூப
மாணுக்க னகண்டைக ரசசெசா ரூபந்
திகழொளியு மகண்டைக ரசசெசா ரூபந்
தெரிபொருளு மகண்டைக ரசசெசா ரூப
மகிலமுமே யகண்டைக ரசசெசா ரூப
மான்மாவு மகண்டைக ரசசெசா ரூபம்.

இகழுடலு மகண்டைக ரசசொ ரூப
மிந்தியமு மகண்டைக ரசசொ ரூபம்
புகன்மனது மகண்டைக ரசசொ ரூபம்
புந்தியுமே யகண்டைக ரசசொ ரூப
மகமதுவு மகண்டைக ரசசொ ரூப
மமர்சித்த மகண்டைக ரசசொ ரூபம்
பகர்சீவ னகண்டைக ரசசொ ரூபம்
பரப்பிரம மகண்டைக ரசசொ ரூபம். (6)

மருவுபிதா வகண்டைக ரசசொ ரூப
மாதாவு மகண்டைக ரசசொ ரூபம்
பரவுபதி யகண்டைக ரசசொ ரூபம்
பாரியுமே யகண்டைக ரசசொ ரூபங்
கருதுதம ரகண்டைக ரசசொ ரூபங்
கலவாரு மகண்டைக ரசசொ ரூபஞ்
சரமெவையு மகண்டைக ரசசொ ரூபந்
தாவாரு மகண்டைக ரசசொ ரூபம். (7)

காத்திரமு மகண்டைக ரசசொ ரூபங்
காமுதலு மகண்டைக ரசசொ ரூபஞ்
சோத்திரமு மகண்டைக ரசசொ ரூபஞ்
சொலுமொழியு மகண்டைக ரசசொ ரூப
நேத்திரமு மகண்டைக ரசசொ ரூப
நிகழுருவு மகண்டைக ரசசொ ரூபம்
பாத்திரமு மகண்டைக ரசசொ ரூபம்
பலபொருளு மகண்டைக ரசசொ ரூபம். (8)

கோத்திரமு மகண்டைக ரசசொ ரூபங்
குலமுதலு மகண்டைக ரசசொ ரூபந்
தோத்திரமு மகண்டைக ரசசொ ரூபந்
துதிப்பவனு மகண்டைக ரசசொ ரூபஞ்
சூத்திரமு மகண்டைக ரசசொ ரூபஞ்
சொற்பொருளு மகண்டைக ரசசொ ரூபஞ்
சாத்திரமு மகண்டைக ரசசொ ரூபஞ்
சகலமுமே யகண்டைக ரசசொ ரூபம். (9)

அசுபவுட லகண்டைக ரசசொ ரூப
மவத்தையெலா மகண்டைக ரசசொ ரூபம்
விசுவன்முத லகண்டைக ரசசொ ரூபம்
விராட்டாதி யகண்டைக ரசசொ ரூபம்
பசுபதியு மகண்டைக ரசசொ ரூபம்
பாசமெலா மகண்டைக ரசசெர ரூப
நசுவரமு மகண்டைக ரசசொ ரூப
நசியாது மகண்டைக ரசசொ ரூபம். (10)

காரணமு மகண்டைக ரசசொ ரூபங்
காரியமு மகண்டைக ரசசொ ரூபம்
பூரணமு மகண்டைக ரசசொ ரூபம்
புன்மையுமே யகண்டைக ரசசொ ரூப
மாரணமு மகண்டைக ரசசொ ரூப
மதன்பொருளு மகண்டைக ரசசொ ரூபங்
தாரணமு மகண்டைக ரசசொ ரூபங்
தவிர்வதுவு மகண்டைக ரசசொ ரூபம். (11)

அகல்புறமு மகண்டைக ரசசொ ரூப
மாசர்களு மகண்டைக ரசசொ ரூப
மகிழ்திருவு மகண்டைக ரசசொ ரூப
மற்றுளது மகண்டைக ரசசொ ரூபங்
தகுசெபமு மகண்டைக ரசசொ ரூபங்
தந்திரமு மகண்டைக ரசசொ ரூபங்
திகழ்தியான மகண்டைக ரசசொ ரூபங்
திடஞான மகண்டைக ரசசொ ரூபம். (12)

உள்வெளியு மகண்டைக ரசசொ ரூப
முறுபகமு மகண்டைக ரசசொ ரூபங்
கொள்பொருளு மகண்டைக ரசசொ ரூபங்
கூடாது மகண்டைக ரசசொ ரூபங்
தெள்பொருளு மகண்டைக ரசசொ ரூபங்
தெளியாது மகண்டைக ரசசொ ரூபம்
விள்பொருளு மகண்டைக ரசசொ ரூபம்
விள்ளாது மகண்டைக ரசசொ ரூபம். (13)

புகல்போக மகண்டைக ரசசொ ரூபம்
போக்கியமு மகண்டைக ரசசொ ரூபந்
தகுசெயலு மகண்டைக ரசசொ ரூபந்
தங்கிடமு மகண்டைக ரசசொ ரூபஞ்
சகலமுமே யகண்டைக ரசசொ ரூபஞ்
சாட்சியுமே யகண்டைக ரசசொ ரூப
மகல்பாமு மகண்டைக ரசசொ ரூப
மைக்கியமு மகண்டைக ரசசொ ரூபம். (14)

அகண்டைக ரசமலது வித்தை யில்லை
யகண்டைக ரசமலது முத்தி யில்லை
யகண்டைக ரசமலது சுகமு மில்லை
யகண்டைக ரசமலது சுத்த மில்லை
யகண்டைக ரசமலது சருவ மில்லை
யகண்டைக ரசமலது கிஞ்சி லில்லை
யகண்டைக ரசமதிலங் கெவையு மில்லை
யகண்டைக ரசமதுவே யனைத்து மாகும். (15)

அகண்டைக ரசமலது தூல மில்லை
யகண்டைக ரசம்லது சூக்க மில்லை
யகண்டைக ரசமதிலங் கணித்தை யில்லை
யகண்டைக ரசமலதோ ரணுவு மில்லை
யகண்டைக ரசமலது நீயு மில்லை
யகண்டைக ரசமலது நானு மில்லை
யகண்டைக ரசமலதிங் காரு மில்லை
யகண்டைக ரசமதுவே யனைத்து மாகும். (16)

அகண்டைக ரசமலது சகமு மில்லை
யகண்டைக ரசமலது சிருட்டி யில்லை
யகண்டைக ரசமலது திதியு மில்லை
யகண்டைக ரசமலது நாச மில்லை
யகண்டைக ரசமலதிங் குண்மை யில்லை
யகண்டைக ரசமலதிங் கின்மை யில்லை
யகண்டைக ரசமலதோ ரிறையு மில்லை
யகண்டைக ரசமதுவே யனைத்து மாகும். (17)

அகண்டைக ரசமலது கருத்தா வில்லை
யகண்டைக ரசமலது போத்தா வில்லை
யகண்டைக ரசமலது ஞாதா வில்லை
யகண்டைக ரசமலது சீவ னில்லை
யகண்டைக ரசமலதிங் கீச னில்லை
யகண்டைக ரசமலது சகத்து மில்லை
யகண்டைக ரசமலதோ ரணுவு மில்லை
யகண்டைக ரசமதுவே யனைத்து மாமே. (18)

புகல்பொருளி லோரணுவு மைய மில்லை
பூரணமாம் பரமசிவ னறியச் சொன்னேன்
சகலசகன் ஞயகஞ யநந்த சத்தி
சார்ந்தவஞ யாநந்த கனமா மீச
னகிலமுமே யகண்டைக ரசசொ ரூப
மானதென வருளியவிங் நிர்ண யத்தை
மிகவுமுறு மன்புடனே கேட்டு ணர்ந்தோன்
மெய்யுணர்வா நந்தபரப் பிரம மாவான். (19)

சகத்தினிடை யெவ்விடத்து மடைவ தற்குச்
சாலவுமே யரிதாகிக் குய்ய மாகி
மகத்ததுவா மாச்சரிய மான வென்றன்
மாறுத வனுபவமாம் பாக்கி யத்தை
வகுத்துனைக் கின்னமுமே நிதாக சொல்வேன்
வாங்காத மனதுடனே பொருந்திக் கேளாய்
பகுத்திடுமோர் பேதமிலா தகண்ட மான
பரமசிதா காயபரப் பிரம நானே. (20)

அகமென்றும் பரமார்த்த சத்தா கின்றே
னகமென்றும் பரமார்த்த சித்தா கின்றே
னகமென்று மாநந்த கனமா கின்றே
னகமென்று மகண்டைக ரசமா கின்றே
னகமென்று மகிலமுமே யாகா நின்றே
னகமென்று மணுவளவு மிலாது நின்றே
னகமென்றும் பகுப்பறவே நிறைந்து நின்றே
னகமென்றும் பரப்பிரம மாகா நின்றேன். (21)

அகமகில காரணமாஞ் சொரூப மாமே
னகமகில பூரணமாஞ் சொரூப மாமே
னகமகில வாதார சொரூப மாமே
னகமகில வாகார சொரூப மாமே
னகமமல விஞ்ஞான சொரூப மாமே
னகமணுவும் விகாரமிலாச் சொரூப மாமே
னகமனிசம் பங்கமிலாச் சொரூப மாமே
னகமமல பரப்பிரம சொரூப மாமேன். (22)

அகமென்றும் பரமசிவ சொரூப மாமே
னகமென்றும் பாகுருவாஞ் சொரூப மாமே
னகமென்றுஞ் சத்தியமாஞ் சொரூப மாமே
னகமென்றுஞ் சனகனமாஞ் சொரூப மாமே
னகமென்றுஞ் சுத்தமதாஞ் சொரூப மாமே
னகமென்றுஞ் சூட்சுமமாஞ் சொரூப மாமே
னகமென்றும் பந்தமுறுச் சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப மாமேன். (23)

அகமென்று நிர்க்குணமாஞ் சொரூப மாமே
னகமென்று நிர்த்தொந்த சொரூப மாமே
னகமென்று நிட்களமாஞ் சொரூப மாமே
னகமென்று நிட்கிரிய சொரூப மாமே
னகமென்று நிராமயமாஞ் சொரூப மாமே
னகமென்று நிராகார சொரூப மாமே
னகமென்று நிரவயவ சொரூப மாமே
னகநிமல பரப்பிரம சொரூப மாமேன். (24)

தொடருமொரு விசேடமிலாச் சொரூப நானே
துஷ்டமொடத் துவிதமிலாச் சொரூப நானே
யிடரின்ப மெவையுமிலா சொரூப நானே
யிருளொளியு மிலாதயர சொரூப நானே
மடமையுணர் வொன்றுமிலாச் சொரூப நானே
மானுவ மானமிலாச் சொரூப நானே
படர்பாவா பாவமிலாச் சொரூப நானே
பகுப்பற்ற பரப்பிரம சொரூப நானே. (25)

ஆகுமகங் காரமிலாச் சொரூப நானே
யாதாரா தேயமிலாச் சொரூப நானே
தேகமுத லுபாதியிலாச் சொரூப நானே
தெளிவான சைதன்ய சொரூப நானே
மோகமன மாதியிலாச் சொரூப நானே
மோட்சமொடு பந்தமிலாச் சொரூப நானே
யூகமுறு விசாரமிலாச் சொரூப நானே
யொன்றுமிலாப் பரப்பிரம சொரூப நானே. (26)

சித்தமுத லெவையுமிலாச் சொரூப நானே
செவ்விய தாய் விசாரிக்குஞ் சொரூப நானே
புத்தியினுற் றியானிக்குஞ் சொரூப நானே
பொருந்துதியா ஞதியிலாச் சொரூப நானே
விக்தரமா மகாமுதற் சொரூப நானே
விளங்கியிடு மோங்கார சொரூப நானே
மெத்தவுமே புனிதமதாஞ் சொரூப நானே
மெய்யான பரப்பிரம சொரூப நானே. (27)

பெரிதுக்கும் பெரிதான சொரூப நானே
பேதமறப் பிறங்கியிடுஞ் சொரூப நானே
யரிதுக்கு மரிதான சொரூப நானே
யகண்டைக ரசமான சொரூப நானே
சுருதிக்கு மெட்டாக சொரூப நானே
சொலும்பொருளுங் கிட்டாத சொரூப நானே
சருவத்துக் கப்பாலாஞ் சொரூப நானே
சலனமிலாப் பரப்பிரம சொரூப நானே. (28)

அறுவிதமாம் விகாரமிலாச் சொரூப நானே
யறுகோச மிலாதபர சொரூப நானே
குறைவுகருஞ் சடூர்மியிலாச் சொரூப நானே
கூறுமரி சட்கமிலாச் சொரூப நானே
யுறுமிதயக் கிரந்தியிலாச் சொரூப நானே
யுள்ளுக்கு முள்ளான சொரூப நானே
செறிதேச காலமிலாச் சொரூப நானே
சின்மாத்ர மானபர சொரூப நானே. (29)

மனமுதலே யசைக்கின்ற சொரூப நானே
மாசற்ற சின்மயமாஞ் சொரூப நானே
யனகசித்தா காயபர சொரூப நானே
யகிலசக தாகார சொரூப நானே
யெணையலதே தா ரணுவுமிலாச் சொரூப நானே
யில்லையெனுஞ் சொல்லுமிலாச் சொரூப நானே
புனிதவகண் டாகார விருத்தி தன்னிற்
பொருந்தியிடும் பூரணமாஞ் சொரூப நானே, (30)

பூரணசின் மாத்திரமாஞ் சொரூப நானே
பொய்யுலக மெவையுமிலாச் சொரூப நானே
காரணகா ரியமிலதாஞ் சொரூப நானே
காலமொரு மூன்றுமிலாச் சொரூப நானே
சாரமறு சரீரமிலாச் சொரூப நானே
சரீரவபி மானியிலாச் சொரூப நானே
கோரமுறு காமமுதற் குற்ற மொன்றுங்
கூடாத பரப்பிரம சொரூப நானே. (31)

சலமுற்ற குணங்களிலாச் சொரூப நானே
சதசத்துக் காப்பாலாஞ் சொரூப நானே
யலைவுற்ற பந்தமிலாச் சொரூப நானே
யத்யந்த முத்தமதாஞ் சொரூப நானே
தொலைவற்ற சற்கனமாஞ் சொரூப நானே
துகளற்ற சிற்கனமாஞ் சொரூப நானே
நிலைபெற்ற சுககனமாஞ் சொரூப நானே
நீக்கமிலாப் பரப்பிரம சொரூப நானே. (32)

போக்குவர வொன்றுமிலாச் சொரூப நானே
போகின்ற தேசமிலாச் சொரூப நானே
சாக்கிரமே முதலுமிலாச் சொரூப நானே
சந்ததமுஞ் சாந்தமதாஞ் சொரூப நானே
நீக்கமற நிறைகின்ற சொரூப நானே
நிகழ்ச்சி தானந்த சொரூப நானே
வாக்குமன தொன்றுக்கு மெட்டா தான
வத்துவதாம் பரப்பிரம சொரூப நானே. (33)

சூனியமு மசூனியமு மிலாது நின்ற
சுத்தமதாம் பரப்பிரம சொரூப நானே
யானியுமோர் பேறுமிலா தமர்ந்து நின்ற
வகண்டமதாம் பரப்பிரம சொரூப நானே
யேனையுமோர் சுபமசுப மிலாது நின்ற
வேகமதாம் பரப்பிரம சொரூப நானே
வானமுத லொருபொருளு மிலாது நின்ற
வத்துவதாம் பரப்பிரம சொரூப நானே. (34)

ஒன்றுடனே யிரண்டுமுதற் கணித மியாவு
மொன்றுத பரப்பிரம சொரூப நானே
நின்றிடுமோர் சதசத்து மிலாம லெங்கு
நிறைவுற்ற பரப்பிரம சொரூப நானே
யன்றியுமே சமமசம மொன்று மின்றி
யமைவுற்ற பரப்பிரம சொரூப நானே
யென்றுமெலாப் பொருளுமிலா தேக மாக
விலங்கியிடும் பரப்பிரம சொரூப நானே. (35)

தொடருமொரு சங்கற்ப பேத மின்றித்
துச்சமிலாத் தூயபரப் பிரம நானே
நெடியபல விட்சேப லேச மின்றி
நிராவரண மானபரப் பிரம நானே
மடமைதரும் விவிதான்ம பேத மின்றி
மகத்தாகி நின்றபரப் பிரம நானே
கடபடமே முதலியதோ ரணுவு மின்றிக்
களங்கமற நிறைந்த பரப் பிரம நானே. (36)

சருவவித சகத்துக்குஞ் சாட்சியான
சத்தியஞா னநந்த சொரூப நானே
கருதியிடுங் கண்முதலாங் கரண மியாவுங்
கலவாத சின்மாத்ர சொரூப நானே
திருசியமா ஞாதிருஞா ஞதி யென்னுந்
திரிபுடியே தொன்றுமிலாச் சொரூப நானே
பரவியிடும் லட்சியலட் சணமே தொன்றும்
பற்றுத பரப்பிரம சொரூப நானே. (37)

கிளர்கிரியை யாவுக்கு மிதமாய் நின்றுங்
கேவலமாம் பரப்பிரம சொரூப நானே
வளர்வுமுதல் விகாரமிலா நிருவி காரா
வத்துவதாம் பரப்பிரம சொரூப நானே
தளர்வுதருந் துக்கசுகஞ் சற்று மின்றித்
தனியான பரப்பிரம சொரூப நானே
யளவுபடும் பொருளெவையு மணுவு மின்றி
யகண்டமதாம் பரப்பிரம சொரூப நானே. (38)

இகழ்வறவே வேதாந்த நடையுற் றோர்க்கிங்
கெளிதாகக் கிட்டியிடுஞ் சொரூப நானே
சகலவித வேதாந்த நூற்க ளாலுஞ்
சந்ததமுஞ் சோதிக்குஞ் சொரூப நானே
யகிலமகா மௌனத்தின் பலமாய் நின்ற
வாநந்த கனமான சொரூம நானே
பகருமனக் கிரந்திகளைச் சிதைக்கா நின்ற
பரசித்தாம் பரப்பிரம சொரூப நானே. (39)

போற்றியிடும் பரமசிவன் கருணை யாலே
பொருந்தியவென் சுவாநுபவ பாக்கி யத்தைத்
தோற்றியிட யாவர்க்கு மிதமாச் சொன்னேன்
றுகளறவே சொல்லியவிவ் வர்த்தந் தன்னை
யேற்றியநல் லன்புடனே யொருகா லேனு
மிதயத்திற் றிடமாகக் கேட்டு ணர்ந்தோன்
சாற்றியவஞ் ஞானமுத லியாவுந் தள்ளிச்
சந்ததமும் பரப்பிரம மாவ னன்றே. (40)

திகழுமுமா நாயகனுய்த் திடபோ தத்தைத்
தெரிவிக்கும் பரசிவனே யாரா தித்தப்
பகவனருட் கருணையினற் பாவ மியாவும்
பற்றறவே தீர்ந்துமனச் சுத்தி பெற்றே
ரகிலசக தான்மாவா யரூப மாகி
யகண்டசிதா காயமதாய் நிறைந்து நின்ற
சுகனமாம் பரசிவமே நாமென் றெண்ணிச்
சோகமெலாந் தீர்ந்துபர சிவமே யாவர். (41)

பன்னியவா பரமசிவன் கருணை சாராப்
பாதகர்க்க டேகாதி நாமென் றெண்ணி
மன்னியவன் ஞச்சிரம வபிமா னத்தான்
மயங்கி வெகு கன்மங்கள் செய்து சோர்ந்து
துன்னியிடும் விடயாசை கூர்ந்த லுந்து
துக்கிகளா யநவரதந் நிரிவ ரென்றே
யன்னரிபு கருணையுட னிதாக னுக்கங்
ககண்டபர மார்த்தத்தை யருள்செய் தானல். (42)

வேறு.

அகிலமான சராசரத் தோற்றமு
மகண்டவேக ரசமென் றறைந்தது
நிகரில்சத்திய சிற்சுக பூரண
நிருமலப்பர நாமென் றுரைத்தது
மகிலநாயக ஞய்ப்பர வித்தையா
மம்பிகைக்கனு கூலசொ ரூபனுய்த்
திகழுமாநந்தத் தாண்டவ மாடுநந்
தேவதேவ னகண்ட சொரூபமே. (43)

நான்காவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம்-4க்கு திருவிருத்தம்-222.

ஐந்தாவது

அனைத்தும் சசவிஷாணமென்றும் அவையெல்லாம் பிரமமென்றும் உரைக்கும் அத்தியாயம்.

சகலசரா சரசகமுஞ் சசவிஷாண
சமமெனவே பரமசிவ னருளிச் செய்த
மிகவரிதா நிர்ணயமிங் குனக்குச் சொல்வேன்
மேவுமனத் தொருமையுட னிதனைக் கேளாய்
வெகுவிதமாய்க் காண்பனவுஞ் சசவி ஷாணம்
விசித்திரமாய்க் கேட்பனவுஞ் சசவி ஷாணம்
நிகிலமதாந் திருசியமுஞ் சசவி ஷாணை
நிகழ்கின்ற திருக்கதுவுஞ் சசவி ஷாணம். (1)

பரவியவிண் வாயுவன னீர்மண் ணென்னும்
பஞ்சமகா பூதமுமே சசவி ஷாணம்
விரவியவப் பூதத்தால் விளைவ தான
வெகுவிதமாம் பௌதிகமுஞ் சசவி ஷாண
மருவுமனம் புந்தியகங் காரஞ் சித்த
மற்றுமுள தேசெவையுஞ் சசவி ஷாண
முருவமதாம் பிரமாண்ட மவற்றி லுள்ள
வுலகங்க ளுயிர்களெலாஞ் சசவி ஷாணம். (2)

புகல்சனனஞ் சரைமரண மாதி வ்யாதி
புண்ணியபா வங்களெலாஞ் சசவி ஷாண
மிகல்காமங் கோபமுட னுலோப மோக
மீனமத மச்சரமுஞ் சசவி ஷாண
மகிழ்வுதருந் தைரியமும் வெற்றி தோல்வி
மானமவ மானமுமே சசவி ஷாணந்
தகுகுருவு மாணவனு மன்னோர் செய்யத்
தகுமுபதே சாதிகளுஞ் சசவி ஷாணம். (3)

ஆதியொடு மத்தியமு மந்தந் தானு
மவனிவனீ முதலெவையுஞ் சசவி ஷாணம்
பூதமொடு பவிடியமும் வர்த்த மானப்
பொருளெவையு மெப்போதுஞ் சசவி ஷாணங்
காதலுறுந் தூலவுடல் சூக்க தேகங்
காரணமாந் தேகமெலாஞ் சசவி ஷாணஞ்
சாதமுறுங் காரியமு மற்று முள்ள
சகலமுமே சந்ததமுஞ் சசவி ஷாணம். (4)

மமதையுறும் போக்கியமும் போகந் தன்னை
மருவியிடும் போத்காவுஞ் சசவி ஷாணஞ்
சமமுடனே சந்தோடம் விசாரஞ் சாது
சங்கமுதற் சற்குணமுஞ் சசவி ஷாணம்
யமநியமா சனமுடனே யியற்றும் ப்ராணா
யாமமுத லியோகமுமே சசவி ஷாண
மமர்விவித லட்சியலட் சணமுஞ் சித்த
மலைவதுமற் றலையாதுஞ் சசவி ஷாணம். (5)

ஏதமினித் தாநித்த விவேக மாதி
யெனுநான்கு சாதனமுஞ் சசவி ஷாணம்
பேதமுற விருபத்து நான்க தாகப்
பேசியிடுந் தத்துவமுஞ் சசவி ஷாண
மோதியிடு முடன்மூன்று மவத்தை மூன்று
மூபயவித விந்தியமுஞ் சசவி ஷாணம்
பூதமதன் பஞ்சகமும் விரிஞ்ச ஞநிப்
புகல்தேவ பஞ்சகமுஞ் சசவி ஷாணம். (6)

பலவிதவன் ஞச்சிரம மவற்றின் செய்கை
பயில்குலகோத் திரமெவையுஞ் சசவி ஷாண
நீலமருவாப் போகேச்சை மோட்ச விச்சை
நிகழ்த்துமதன் சாதனமுஞ் சசவி ஷாணஞ்
சலனமுறுஞ் சசாதீய முதலாம் பேதஞ்
சாற்றுபரிச் சேதமுமே சசவி ஷாணந்
திலமளவு முதலியதாக் காணப் பட்ட
திருசியமுந் தெரிசனமுஞ் சசவி ஷாணம். (7)

சிந்தையினற் பலவிதமாய் நிணைக்கப் பட்டுச்
செறிகின்ற பொருளெவையுஞ் சசவி ஷாணம்
புந்தியினற் பலவிதமா யுறுதிப் பட்டுப்
பொருந்தியிடும் பொருளெவையுஞ் சசவி ஷாணந்
தொந்தமுறும் வாக்காலே வசனிப் புற்றுத்
தொடர்கின்ற பொருளெவையுஞ் சசவி ஷாண
மிந்திரிய மெவையாலு முணரப் பட்ட
வெப்பொருளு மெப்போதுஞ் சசவி ஷாணம். (8)

வெகுவிதமாம் பூதங்கள் சசவி ஷாணம்
விசித்திரமாம் புவனங்கள் சசவி ஷாணஞ்
சகலவித தீர்த்தங்கள் சசவி ஷாணஞ்
சகலமதாந் தலங்களுமே சசவி ஷாண
மகிலமத தருமங்கள் சசவி ஷாண
மகிலமதாம் பலங்களுமே சசவி ஷாண
நிகிலவித வேதங்கள் சசவி ஷாண
நிகிலமதா நூற்களுமே சசவி ஷாணம். (9)

சருவமதா மவித்தையுமே சசவி ஷாணஞ்
சருவமதாம் வித்தையுமே சசவி ஷாணஞ்
சருவமதாம் பந்தமுமே சசவி ஷாணஞ்
சருவமதா முத்தியுமே சசவி ஷாணஞ்
சருவமதாங் காலமுமே சசவி ஷாணஞ்
சருவமதாங் கருமமுமே சசவி ஷாணஞ்
சருவமுணர் ஞானமுமே சசவி ஷாணஞ்
சருவத்தி னீசனுமே சசவி ஷாணம். (10)

சகலவித சீவருமே சசவி ஷாணஞ்
சகலத்தின் சங்கமுமே சசவி ஷாணஞ்
சகலவித துவிதமுமே சசவி ஷாணஞ்
சகலத்தி னுண்மையுமே சசவி ஷாணஞ்
சகலவித சாத்திரமுஞ் சசவி ஷாணஞ்
சாற்றுமதன் ரகசியமுஞ் சசவி ஷாணஞ்
சகலவித வேதாந்த சித்தாந் தங்கள்
சருவமுமே சந்ததமுஞ் சசவி ஷாணம். (11)

குறைவெனவே தள்பொருளுஞ் சசவி ஷாணங்
கூட்டியிடத் தகுபொருளுஞ் சசவி ஷாண
நிறைவெனவே நிஜபொருளுஞ் சசவி ஷாண
நேயமதாய் நிஜபொருளுஞ் சசவி ஷாணம்
பிறருடைய பொருளெவையுஞ் சசவி ஷாணம்
பின்றனது பொருளெவையுஞ் சசவி ஷாண
மறிவுறுமான் மாணுன்ம விவேக மாதி
யகிலமுமே யநவரதஞ் சசவி ஷாணம். (12)

சருவமெனக் காண்பதுவுஞ் சசவி ஷாணஞ்
சத்தியமாய்த் தோற்றுவதுஞ் சசவி ஷாணம்
பிரியமதாய்ச் சொல்லுவதுஞ் சசவி ஷாணம்
பேணியதைக் கேட்பதுவுஞ் சசவி ஷாண
மருமையதா யோருவதுஞ் சசவி ஷாண
மயனுலகைப் படைப்பதுவுஞ் சசவி ஷாண
மரியுலகைக் காப்பதுவுஞ் சசவி ஷாண
மானதனை யழிப்பதுவுஞ் சசவி ஷாணம். (13)

மேவுபுரா ணங்களெலாஞ் சசவி ஷாண
மிருநியிதி காசமெலாஞ் சசவி ஷாணம்
பாவனமா முபநிடதஞ் சசவி ஷாணம்
பலவிதமா நூற்பொருளுஞ் சசவி ஷாணஞ்
சீவபர சகமியாவுஞ் சசவி ஷாணஞ்
செறிகின்ற சம்சாரஞ் சசவி ஷாணங்
கேவலமாம் பரப்பிரம மொன்றே யென்றுங்
கெம்பீர மாகவுள வத்து மைந்தா. (14)

கோலமுறுஞ் சீவசக பரங்க ளாகக்
கூறியிடுந் துவிதமெலாஞ் சசவி ஷாணம்
போலவெறும் பொய்யாகு மென்று மெங்கும்
பூரணமாய் நின்றபரப் பிரம மொன்றே
காலமொரு மூன்றிலுமே நாச மின்றிக்
களங்கமிலாப் பரமார்த்த வத்து வென்னுஞ்
சாலவுமே ரகசியமா மிவ்வர்த் தத்தைச்
சலனமறக் கேட்டுணர்வோன் பிரம மாவன். (15)

நரர்சுரர்க ளெல்லோர்க்கு மெவ்வி டத்து
நண்ணமிக வரிதாகிக் குய்ய மான
சருவமுமே பிரமமெனு நிச்ச யத்தைச்
சம்புவெனக் கருளியவா சாற்றக் கேளாய்
மருவுமகம் விருத்திக்கு விடய மாயு
மற்றுமிதம் விருத்திக்கு விடய மாயுந்
திருவியமா யெவையெவைதான் ரூற்ற லாகுந்
தெரிவுற்ற வவையெல்லாம் பிரம ரூபம். (16)

தேகோக மென்றுணரு நினைவு தானே
தெரிவுற்ற வுட்காண மென்ன லாகுந்
தேகோக மென்றுணரு நினைவு தானே
நியக்கமுறு சம்சார மென்ன லாகுந்
தேகோக மென்றுணரு நினைவு தானே
நிரளுற்ற பீதியெலாஞ் செய்வ தாகுந்
தேகோக மெனுமந்த நினைவெப் போதுந்
நினையளவு மில்லையெலாம் பிரம ரூபம். (17)

தேகோக மென்றுணரு நினைவு தானே
தெரிவுற்ற சகலசக மென்ன லாகுந்
தேகோக மென்றுணரு நினைவு தானே
திடமுற்ற பந்தமெனச் செப்ப லாகுந்
தேகோக மென்றுணரு நினைவு தானே
திரளுற்ற துன்பமெனச் செப்பலாகுந்
தோகோக மெனுமந்த நினைவெப் போதுந்
நிலமளவு மில்லையெலாம் பிரம ரூபம். (18)

தேகமக மென்றறியு மறிவு தானே
தெரிவற்ற வஞ்ஞான மென்ன லாகுந்
தேகமக மென்றறியு மறிவு தானே
திடவிதயக் கிரந்தியெனச் செப்ப லாகுந்
தேகமக மென்றறியு மறிவு தானே
நிகழ்பாவா பாவமெனச் செப்ப் லாகுந்
தேகமக மெனுமந்த வறிவெப் போதுந்
நினையளவு மில்லையெலாம் பிரமந் தானே. (19)

ஆகமக மென்றறியு மறிவு தானே
யலையுற்ற மனதெனவே யறைய லாகு
மாகமக மென்றறியு மறிவு தானே
யமர்மனை வாதனைக ளென்ன லாகு
மாகமக மென்றறியு மறிவு தானே
யநந்தவித நரகமென வறைய லாகு
மாகமக மெனுமந்த வறிவெப் போது
மணுவுமில யுள்ளதெலாம் பிரமந் தானே. (20)

ஆகமக மென்றறியும் புந்தி தானே
யலைகின்ற சீவனென வறைய லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யளவுபடும் பரிச்சின்ன மென்ன லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யநந்தவித சோகமென வறைய லாகு
மாகமக மெனுமந்தப் புந்தி யென்று
மணுவுமில யுள்ளதெலாம் பிரமந் தானே. (21)

ஆகமக மென்றறியும் புந்தி தானே
யளவற்ற சங்கமென வறைய லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யமர்சனன சராமரண மென்ன லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யகிலமகா பாவமென வறைய லாகு
மாகமக மெனுமந்தப் புந்தி யென்று
மனுவுமிலை யுள்ளதெலாம் பிரமந் தானே. (22)

ஆகமக மென்றறியும் புந்தி தானே
யளவற்ற வமங்களமா வறைய லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யளவற்ற வாசையென வறைய லாகு
மாகமக மென்றறியும் புந்தி தானே
யநந்தவித தோடமென வறைய லாகு
மாகமக மெனுமந்தப் புந்தி யென்று
மனுவுமிலை யுள்ளதெலாம் பிரமந் தானே. (23)

ஆகமக மென்றறியு நினைவு தானே
யகிலமகா மலமெனவே யறைய லாகு
மாகமக மென்றறியு நினைவு தானே
யளவற்ற சந்தேக மென்ன லாகு
மாகமக மென்றறியு நினைவு தானே
யனர்த்தமெலா மடைந்திடவோர் மூல மாகு
மாகமக மெனுமந்த நினைவெப் போது
மனுவுமிலை யுள்ளதெலாம் பிரமந் தானே. (24)

நினைவெதுவோ வதுதானே சீவ னாகு
நினைவெதுவோ வதுதானே யீச னாகு
நினைவெதுவோ வதுதானே சகமு மாகு
நினைவெதுவோ வதுதானே மனது மாகு
நினைவெதுவோ வதுதானே காம மாகு
நினைவெதுவோ வதுதானே கரும மாகு
நினைவெதுவோ வதுதானே தக்க மாகு
நினைவெதுவோ வதுதானே யனைத்து மாமே. (25)

நினைவின்றி நிற்பதுவே யகண்ட மாகு
நினைவின்றி நிற்பதுவே நிட்டை யாகு
நினைவின்றி நிற்பதுவே ஞான மாகு
நினைவின்றி நிற்பதுவே மோட்ச மாகு
நினைவின்றி நிற்பதுவே சகச மாகு
நினைவின்றி நிற்பதுவே பிரம மாகு
நினைவின்றி நிற்பதுவே சிவமு மாகு
நினைவணுவு மில்லையெலாம் பிரமந் தானே. (26)

சங்கற்ப நினைவுகளுக் கணுவும் பேதஞ்
சார்வதிலை நினைவதுவே சங்கற்பங் காண்
சங்கற்ப மெதுவதுவே மகத்தா மோகஞ்
சங்கற்ப மெதுவதுவே யாதிவ் யாதி
சங்கற்ப மெதுவதுவே காமங் கோபஞ்
சங்கற்ப மெதுவதுவே யத்தி யாசஞ்
சங்கற்ப மெதுவதுவே தாபம் யாவுஞ்
சங்கற்ப மெதுவதுவே சகல துன்பம். (27)

சங்கற்ப மெதுவதுவே மகத்தாந் தோடஞ்
சங்கற்ப மெதுவதுவே மலங்கள் யாவுஞ்
சங்கற்ப மெதுவதுவே காலந் தேசஞ்
சங்கற்ப மெதுவதுவே நாநா ரூபஞ்
சங்கற்ப மெதுவதுவே சகம யக்கஞ்
சங்கற்ப மெதுவதுவே சீவ ரூபஞ்
சங்கற்ப மெதுவதுவே யீச ரூபஞ்
சங்கற்ப மெதுவதுவே சகல ரூபம். (28)

சங்கற்ப மாத்திரமே மூலாஞ் ஞானஞ்
சங்கற்ப மாத்திரமே விவித பேதஞ்
சங்கற்ப மாத்திரமே சகல ஞானஞ்
சங்கற்ப மாத்திரமே சகல தொந்தஞ்
சங்கற்ப மாத்திரமே சகல கன்மஞ்
சங்கற்ப மாத்திரமே நரகஞ் சொர்க்கஞ்
சங்கற்ப மாத்திரமே பூதம் யாவுஞ்
சங்கற்ப மாத்திரமே புவனம் யாவும். (29)

சங்கற்ப மாத்திரமே தேக மாதி
சங்கற்ப மாத்திரமே சிரவ ணாதி
சங்கற்ப மாத்திரமே யான்ம சிந்தை
சங்கற்ப மாத்திரமே மற்றும் யாவுஞ்
சங்கற்ப மாத்திரமெங் கெங்கே தோற்றுஞ்
சகசிவ பரங்களுமங் கங்கே தோற்றுஞ்
சங்கற்ப மாத்திரமே சற்று மில்லை
சத்தியமாச் சகலமுமே பிரம ரூபம். (30)

மனதுக்குஞ் சங்கற்பந் தனக்கும் பேத
மற்றணுவு மில்லைமனதே சகங்கள் யாவு
மனததுவே மகத்தான பகையா மற்று
மனததுவே மகத்தான பவமு மாகு
மனததுவே சன்மசரா மரண மாகு
மனததுவே மகத்தான துக்க மாகு
மனததுவே மகத்தான மலமு மாகு
மனததுவே காலமுத லெவையு மாமே. (31)

மனமதுவே சங்கற்ப விகற்ப மாகு
மனமதுமே புத்தியுமாஞ் சித்த மாகு
மனமதுவே யகங்கார மாகு மற்று
மனமதுவே பொதுவந்தக் கரண மாகு
மனமதுவே சீவனுமாம் பந்த மாகு
மனமதுவே கத்துருபோத் துருவு மாகு
மனமதுவே மண்ணுதக மனலு மாகு
மனமதுவே மருத்துமகல் விண்ணு மாமே. (32)

மனமதுவே சத்தமொடு பரிச மாகு
மனமதுவே ரூபமுட னிரத மாகு
மனமதுவே கந்தமெனத் தோற்ற லாகு
மனமதுவே யன்னமய கோச மாகு
மனமதுவே பிராணமய கோச மாகு
மனமதுவே மனோமயமாங் கோச மாகு
மனமதுவே விஞ்ஞான கோச மாகு
மனமதுவே யாநந்த கோச மாமே. (33)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307

மனமதுவே [illegible]
மனமதுவே [illegible]
மனமதுவே காரணம்நந் தேக மாகு
மனமதுவே சாக்கிரமுங் கனவு மாகு
மனமதுவே தொந்தமிலாச் சுழுத்தி யாகு
மனமதுவே விசுவனெனத் தோற்ற லாகு
மனமதுவே தைசதனுய்த் தோற்ற லாகு
மனமதுவே பிராஞ்ஞனெனத் தோற்ற லாமே. (34)

மனமதுவே சமட்டியெனு மியாவு மாகு
மனமதுவே வியட்டியெனு மியாவு மாகு
மனமதுவே வெகுவிதமாந் தேவ ராகு
மனமதுவே விதிமுதலெம் மூர்த்தி யாகு
மனமதுவே தெரிவுற்ற பொருளு மாகு
மனமதுவே தெரியாத பொருளு மாகு
மனமதுவே சடசித்தா மெவையு மாகு
மனமதுவே தோற்றியவெத் துவித முங்காண். (35)

மனமதுதா னெப்போது மித்தை யாகு
மனதுமகேந் திரசால நிகரே யாகு
மனமதுதான் மலடியுடை மைந்த னாகு
மனமதுதா னொருகாலு மிலவே யில்லை
மனமிலதாற் சங்கற்ப முதலு மில்லை
மனமிலதாற் குருசீடர் முதலு மில்லை
மனமிலதாற் சகசீவன் முதலு மில்லை
மனோமயமாஞ் சருவமுமே பிரம ரூபம். (36)

மனமுமிலை மனோமயமாஞ் சகசீ வாதி
மற்றுமொரு பொருளுமிலை யென்று மெல்லா
மனகசதா நந்தசிதா காய மான
வகண்டமதாம் பரப்பிரம சொரூப மேயா
மெனுமிநிலோ சையமிலை சத்தி யந்தா
னெங்குமுள பரமசிவ னறியச் சொன்னே
னனியுமகா ரகசியமா மிவ்வர்த் தத்தை
நன்முகக் கேட்டுணர்வோன் பிரம மாவன். (37)

சுத்தமுறும் வேதாந்த விசாரத் தாலுஞ்
சுகநல்குஞ் பரமசிவ பத்தி யாலும்
விக்தமுத லேடணையை விடுத லாலும்
விமலமதாம் பரமசிவத் தியானத் தாலும்
முத்திதரும் பரப்பிரம ஞான முண்டாய்
மொழிந்தமன முபசாந்தி மேவு மன்றி
சத்தமிகுங் குதர்க்கமுத லெவைக ளாலுஞ்
சாந்திகனே மேவாது மனதெப் போதும். (38)

திருசியமே தொன்றுமிலாத் திருக்கே யாகித்
தியங்குமனே விகற்பமிலா கிலேநின் ரேர்க்கு
மருவியிடு ணனவுகளுச் சுழுத்தி யில்லை
மரணமில்லை யுய்வதில்லை மற்ரென் றில்லை
பிரிவறவே மனதுவெறி திருக்கு நிட்டைப்
பெருமையினை யென்சொல்வோ மென்றிவ் வண்ணம்
பரிவுடனே ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பரமார்த்த வுறுதியினைப் பகர்ந்தா னன்றே. (39)

வேறு.

சகலமான சராசரத் தோற்றமுஞ்
சசவிஷாண சமானமென் ரேதலுந்
துகளதாகிய சொப்பனம் போலவே
தொடர்மனோமய மாயெங்குந் தோற்றிய
வகிலசீவ பரேச சகங்களு
மகண்டமாம்பர ரூபமென் ரேதலு
மிகழ்விலாநந்தத் தாண்டவ மாடுநம்
மீசன்றன் பரிபூரண ரூபமே. (40)

ஐந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 5-க்கு திருவிருத்தம்-262.

†††

ஆ ரூ வ து

பிரமதீர்த்த ஸ்நானமும் பிரமமந்திரமும் உரைக்கும் அத்தியாயம்.

தினதயா பரகுருவே நித்த மெந்தத்
தீர்த்தத்தி னீதான மாடு கின்றுய்
*தானமதன் சொரூபந்தா னெவித மாகுந்
தானத்துக் குரியமகா மந்தி ரந்தா
னெனதெவை யதற்குரிய தர்ப்ப ணந்தா
னமைவதெவை யோமந்தா னெவித மாகு
நீநலமா யிவையெல்லா மருள்வா யென்ற
நிதாகற்கு ரிபுமுனிவ னிகழ்த்த லானன். (1)

பூரணமா யான்மாவுக் கபின்ன மாகப்
பொருந்துபரப் பிரமமெனுந் தீர்த்தத் தின்கண்
சாரமதா யெப்போதுந் தான மாடல்
சகலத்தின் மேலான தான மாகுந்
தீரமிகும் புத்திரனே யிதனை யன்றித்
தீர்த்தமெதி லாடலுமே தான மன்று
போறிவாம் பரப்பிரம தீர்த்தத் தின்கட்
பேதமற நானென்று மாடு கின்றேன். (2)

நிகழுமகம் பிரமாஸ்மி யென்று ரத்த
நிச்சயமே மேலான தான மைந்தா
பகருமிதன் சொரூபத்தை விசால மாகப்
பரமசிவ னருளியவா பகரக் கேளா
யகமனிசம் பரப்பிரம சொரூப மானே
னகஞ்சச்சி தாநந்த சொரூப மானே
னகமனிசம் பரமசிவ சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (3)

---

* (தானமென்பது-நீராடல்)

.அகமனிசங் கேவலமாம் பரசொ ரூப
னகமனிசங் கேவலமாஞ் சாந்த ரூப
.னகமனிசங் கேவலமா நித்த ரூப
னகமனிசங் கேவலமாஞ் சுத்த ரூப
.னகமனிசங் கேவலமாம் புத்த ரூப
னகமனிசங் கேவலமா முத்த ரூப
.னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (4)

.அகமனிச நிமலான்ம சொரூப மாமே
னகமனிச நிரந்தரமாஞ் சொரூப மாமே
.னகமனிச நிட்களமாஞ் சொரூப மாமே
னகமனிச நிட்கிரிய சொரூப மாமே
.னகமனிச நிரஞ்சனமாஞ் சொரூப மாமே
னகமனிச நிராமயமாஞ் சொரூப மாமே
.னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (5)

.அகமனிச நிருமலமாஞ் சொரூப மாமே
னகமனிச நிராவரண சொரூப மாமே
.னகமனிச நிரவயவ சொரூப மாமே
னகமனிச நிர்க்குணமாஞ் சொரூப மாமே
.னகமனிசஞ் சருவான்ம சொரூப மாமே
னகமனிசஞ் சருவமிலாச் சொரூப மாமே
.னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (6)

.அகமனிச மகந்தையிலாச் சொரூப மாமே
னகமனிச மிதந்தையிலாச் சொரூப மாமே
.னகமனிசஞ் சங்கமிலாச் சொரூப மாமே
னகமனிசம் பங்கமிலாச் சொரூப மாமே
.னகமனிசந் துரியமதாஞ் சொரூப மாமே
னகந்துரியா தீதபர சொரூப மாமே
.னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (7)

அகமகில விகற்பமிலாச் சொரூப மானே
னகமாதி யந்தமிலாச் சொரூப மானே
னகமனிய மொன்றுமிலாச் சொரூப மானே
னகமென்று மளவுபடாச் சொரூப மானே
னகமகில பூரணமாஞ் சொரூப மானே
னகமகில காரணமாஞ் சொரூப மானே
னகமனிசம் பரப்பிரம சொரூப மென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (8)

அகமகில பூரணவா னந்த மானே
னகமபரிச் சின்னமகா னந்த மானே
னகமனிச நிமலபரா னந்த மானே
னகமனிச நிரதிசயா னந்த மானே
னகமனிசஞ் சதாநந்த கனமே யானே
னகமனிசஞ் சிதாநந்த கனமே யானே
னகமனிசம் பரப்பிரம மானே னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (9)

அகமுண்மை மாத்திரமாஞ் சொரூப மானே
னகமுணர்வு மாத்திரமாஞ் சொரூப மானே
னகமின்ப மாத்திரமாஞ் சொரூப மானே
னகமேக மாத்திரமாஞ் சொரூப மானே
னகமசல மாத்திரமாஞ் சொரூ மானே
னகமாண்ம மாத்திரமாஞ் சொரூப மானே
னகம்பிரம மாத்திரமாஞ் சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (10)

அகமனிச மகாகாய சொரூப மானே
னகமனிச மகத்தான சொரூப மானே
னகமனிசஞ் சிதாகாய சொரூப மானே
னகமனிசஞ் சிற்கனமாஞ் சொரூப மானே
னகமனிசம் பராகாய சொரூப மானே
னகமனிசம் பரமான்ம சொரூப மானே
னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (11)

அகமனிச மூடல்பொறிக ளுயிர்க ளுள்ள
மகங்கார மாதியிலாச் சொரூப மானே
னகமனிச மறிவுற்ற நாம ரூப
மணுவுமிலா வத்துவித சொரூப மானே
னகமணுவும் பந்தமிலா நித்த முத்த
மாகுமகண் டைகாச சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (12)

அகமனிசந் தேகமுக லஞ்ஞா னந்த
மனைத்துக்கும் விலட்சணமாஞ் சொரூப மானே
னகமனிச மனவாக்குக் கெட்டா தான
வத்துவிதா கண்டபர சொரூப மானே
னகமகில வாதார மாகி நின்று
மதன்சங்க மணுவுமிலாச் சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (13)

அகமனிச மறிவுற்ற திருசி யங்க
ளனைத்துக்கு மதீதபர சொரூப மானே
னகமனிச மறைமுடியா லறியத் தக்க
வான்மாவுக் கபின்னபர சொரூப மானே
னகமனிய மணுவுமிலா தகமே யாக
வமர்கின்ற வகண்டபர சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (14)

அகமகில ரிதயத்து மிருந்த வற்றை
யசைக்கினுமே யசஞ்சலமாஞ் சொரூப மானே
னகமகில பூதமொடு பௌதி கங்க
ளமர்சீவ ராதியிலாச் சொரூப மானே
னகமகில காலமொடு தேசம் வத்து
வனைத்துமிலா வத்துவித சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தானம். (15)

இந்தவிதம் பரப்பிரம தீர்த்தத் தின்க
ணெளிதாக வியற்றியிடுந் தானஞ் சொன்னேன்
மைந்தவிதை மகிழ்வுடனே யொருகா லேனு
மயக்கமறக் கேட்டுணர்வோன் பிரம மாவன்
பந்தமறு பரப்பிரம மந்தி ரத்தைப்
பாமசிவன் பகர்ந்தவணம் பகரக் கேளாய்
சந்தகமுஞ் சகலமகா மந்தி ரத்துஞ்
சாலவுமிம் மந்திரமே சார மாகும். (16)

அகமனிசஞ் சத்தான பிரம மாமே
னகமனிசஞ் சித்தான பிரம மாமே
னகமனிசஞ் சுகமான பிரம மாமே
னகமனிசஞ் சுத்தமதாம் பிரம மாமே
னகமனிச மத்துவிதப் பிரம மாமே
னகமனிச மகண்டபரப் பிரம மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்தி ரங்காண். (17)

அகமகில காரணமாம் பிரம மாமே
னகமகில பூரணமாம் பிரம மாமே
னகமகில விலட்சணமாம் பிரம மாமே
னகமனிய மணுமிலாப் பிரம மாமே
னகமகமா யமர்கின்ற பிரம மாமே
னகமனிச மகண்டபரப் பிரம மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்தி ரங்காண். (18)

அகமனிச மாயையிலாப் பிரம மாமே
னகமாயா விகாரமிலாப் பிரம மாமே
னகமனிச மவித்தையிலாப் பிரம மாமே
னகமவையின் விகாரமிலாப் பிரம மாமே
னகமிருமை யெவையுமிலாப் பிரம மாமே
னகமென்று மேகபரப் பிரம மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்தி ரங்காண். (19)

அகமனிசஞ் சற்கனமாம் பிரம மாமே
னகமனிசஞ் சன்மயமாம் பிரம மாமே
னகமனிசஞ் சிற்கனமாம் பிரம மாமே
னகமனிசஞ் சின்மயமாம் பிரம மாமே
னகமனிசஞ் சுகனமாம் பிரம மாமே
னகமனிசஞ் சூக்கபரப் பிரம மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்திரங் காண். (20)

அகமனிச நித்தபரப் பிரம மாமே
னகமனிசஞ் சுத்தபரப் பிரம மாமே
னகமனிசம் புத்தபரப் பிரம மாமே
னகமனிச முத்தபரப் பிரம மாமே
னகமனிச மமலபரப் பிரம மாமே
னகமனிச மகண்டபரப் பிரம மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்திரங் காண். (21)

அகமனிசம் பிரஞ்ஞான சொரூப மாமே
னகமனிசம் பரமான்ம சொரூப மாமே
னகமனிசம் பரமசிவ சொரூப மாமே
னகமனிசம் பரிசுத்த சொரூப மாமே
னகமனிசம் பராற்பரமாஞ் சொரூப மாமே
னகமனிசம் பரப்பிரம சொரூப மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்திரங் காண். (22)

அகமனிச நிரஞ்சனமாஞ் சொரூப மாமே
னகமனிச நிர்க்குணமாஞ் சொரூப மாமே
னகமனிச நிராவரண சொரூப மாமே
னகமனிச நிட்கிரிய சொரூப மாமே
னகமனிச நிராமயமாஞ் சொரூப மாமே
னகநிமல பரப்பிரம சொரூப மென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்திரங் காண். (23)

அகமனிசஞ் சங்கமிலாச் சொரூப மானே
னகமனிசஞ் சாந்தபர சொரூப மானே
னகமனிசம் பங்கமிலாச் சொரூப மானே
னகமனிசம் பரமார்த்த சொரூப மானே
னகமனிசம் பாசமிலாச் சொரூப மானே
னகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்தி ரங்காண். (24)

அகமகில சகசீவ பரமாய் நின்று
மப்பேத மணுவுமிலாச் சொரூப மானே
னகமகில வேதமுடி நூல்க ளாலு
மறியுமகண் டைகரச சொரூப மானே
னகமனிசஞ் சத்தியசித் சுகமாய் நின்ற
வத்துவித பரப்பிரம சொரூப னென்னு
மகமிலகம் பிரமாஸ்மி நிச்ச யந்தா
னனைத்துக்கு மேலான மந்திரங் காண். (25)

நிகரிலகம் பிரமாஸ்மி மந்தி ரத்தை
நித்தமுமே யாதரவா யிடை விடாமல்
வெகுகால பரியந்தஞ் செபித்துக் கொண்டே
விமலபர ஞானத்தைப் பழகல் வேண்டு
மகிழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
மகத்தான பாவமெலா நாசஞ் செய்யுந்
துகளிலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றுவிதத்தால் வருந்துயரை நாசஞ் செய்யும். (26)

புகழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பொய்யான பேதமெலா நாசஞ் செய்யுந்
திகழுமகம் பிரமாஸ்மி மந்திரந் தான்
றிடநிந்தா ரோகமெலா நாசஞ் செய்யு
மகிழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
மனதிலுள வியாதியெலா நாசஞ் செய்யும்
பகருமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பலவாதி வியாதிகளை நாசஞ் செய்யும். (27)

நிகழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னினைவுற்ற சோகமெலா நாசஞ் செய்யு
மகலுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னகத்திலுள காமமெலா நாசஞ் செய்யுந்
திகழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றிரளுற்ற கோபமெலா நாசஞ் செய்யு
மிகவுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
மேவியசங் கற்பமெலா நாசஞ் செய்யும். (28)

பகருமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பலவிதமாஞ் சிந்தைகளே நாசஞ் செய்யு
மகலுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னகமென்னுங் துயரையெலா நாசஞ் செய்யு
மிகழ்விலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னிதுவென்னுங் துயரையெலா நாசஞ் செய்யுந்
திகழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றிருசியமாம் யாவையுமே நாசஞ் செய்யும். (29)

அமலவகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னஞ்ஞான மனைத்தையுமே நாசஞ் செய்யு
மமலவகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னவிவேக மனைத்தையுமே நாசஞ் செய்யு
மமலவகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னபிமான மனைத்தையுமே நாசஞ் செய்யு
மமலவகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னரந்தைமிகும் பவத்தையெலா நாசஞ் செய்யும். (30)

திகழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றேகத்தின் ரூடமெலா நாசஞ் செய்யு
மிகழ்விலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னிந்திரிய தோடமெலா நாசஞ் செய்யு
மகிழுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
மனமுதலின் ரூடமெலா நாசஞ் செய்யும்
பகருமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பலகோடி தோடமுமே நாசஞ் செய்யும். (31)

ஏற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னெந்திரதந் திரமெல்லா நாசஞ் செய்யுந்
தேற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றிட்டமதிட் டங்களெலா நாசஞ் செய்யு
மாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னசத்தான மயக்கமெலா நாசஞ் செய்யுந்
தோற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றேன்றியவெத் துஷிதமுமே நாசஞ் செய்யும். (32)

போற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பூதங்க ளைனத்தையுமே நாசஞ் செய்யுந்
தோற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றெடர்புவன மியாவையுமே நாசஞ் செய்யு
மாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னனுன்மவுணர் வினைத்தையுமே நாசஞ் செய்யுஞ்
சாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
சகசீவ பரமெவையு நாசஞ் செய்யும். (33)

சாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
சந்தகமாந் தியானத்தைச் சாரப் பண்ணுஞ்
சாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
சவிகற்ப சமாதியினைச் சாரப் பண்ணுஞ்
சாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
சகலவிகற் பமுமற்ற சமாதி நல்குஞ்
சாற்றுமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
சலனமிலா வபரோட்ச ஞான நல்கும். (34)

நிகரிலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னிகழ்சத்வா பத்தியெனும் பூமி நல்கு
மிகழ்விலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னிசைசத்தவசுஞ் சத்தியெனும் பூமி நல்கும்
பகருமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
பதார்த்தாபா வனையென்னும் பூமி நல்குந்
தகளிலகம் பிரமாஸ்மி மந்தி ரந்தான்
றுரியகையென் றேதியநற் பூமி நல்கும். (35)

அனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னமலான்ம ஞானத்தை விளக்கு விக்கு
மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னமலான்ம லோகத்தின் செயத்தை நல்கு
மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னநிசயமா மான்மசுகந் தனையே நல்கு
மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னகண்டமந்தா மோட்சசுக மளிக்கு மன்றே. (36)

அரியவகம் பிரமாஸ்மி மந்தி ரத்துக்
கநிசயமா மந்திரமே யொன்று மில்லை
பரவுமெழு கோடிமகா மந்தி ரந்தான்
பலகோடி சன்மங்க டருவ தன்றி
மருவியிடுஞ் சன்மங்கண் மாற்று தென்று
மற்றதனு லனைத்துக்கு மேலா கின்ற
தூரிசிலகம் பிரமாஸ்மி மந்தி ரத்தைத்
தொடர்ந்தகில மந்திரமுந் தொலைக்க வேண்டும். (37)

பலவிதமா மந்திரமுந் தந்ரத் தள்ளிப்
பயிலுமகம் பிரமாஸ்மி மந்தி ரத்தைத்
நிலையுறவே யாதரவா யிடை விடாம
னித்தமுமே முமுட்சுவெலாம் பழகல் வேண்டுஞ்
சலனமிலாப் பழக்கத்தான் ஞான மோட்சஞ்
சகலமுமே சடநியினிற் சித்தி யாகுந்
தலைமையுறும் பரமசிவன் சரணந் தொட்டுத்
தத்துவமாய் நவில்கின்றேன் சங்கை யில்லை. (38)

சகலமதாம் வேதத்தும் வேதாந் தத்துஞ்
சகலவிதி காசத்துஞ் சாத்தி ரத்தும்
மிகவுமகா ரகசியமா மிவ்வர்த் தத்தை
மெய்யுணர்வா நந்தகன மான வீச
னகிலர்க்கு மிதமாக வென்னி டத்தே
யருளியவா நிதாகநினைக் கருளிச் செய்தேன்
புகலுமிதை யாதரவாக் கேட்டுணர்ந் தோன்
பூரணமாம் பரப்பிரம மாவ னன்றே. (39)

கற்பிதமாய்க் காண்பதெலா மென்றும் பொய்யே
களங்கமிலாப் பரமசிவ மொன்றே மெய்யாந்
தூர்ப்பலமா மனவாக்குப் பொறிக ளொன்றுற்
றுடரவொணாப் பேரறிவா நந்த மான
தற்பரமே யகமென்னும் புந்தி தானே
தகுமோட்ச காரணமீ தறுதி யென்றே
நிர்ப்பயமாய் ரிபுமுனிவ னிதாக னுக்கு
நீராடன் மந்திரமு னிகழ்த்தி னனல். (40)

வேறு.

நிருவிகார நிரஞ்சன நிர்க்குண
நித்தநிட்கள நின்மல மாகிய
பிரிவில்சத்திய சிற்சுக பூரண
பிரமநானெனப் பேசிய தானமு
மருவகம்பிர மாஸ்மி யெனச்சொலு
மாசின்மந்திர மும்மற்றி யாவுமே
பரமவானந்தத் தாண்ட்வ மாடுநம்
பரசிவபரி பூரண ரூபமே. (41)

ஆறுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம்-6க்கு திருவிருத்தம்-303.

++

ஏழாவது
பிரமதர்ப்பணமும் பிரமவோமமும் உரைக்கும் அத்தியாயம்.

சதாமருவுந் தானமொடு மந்தி ரத்தைச்
சகலர்க்கு மிதமாக முந்து மோதித்
னிதாகனினக் கருள்செய்தே னிந்த வோதித்
னித்தியமாந் தருப்பணமோ டோமந் தன்னை
யுதாரமதாய்ப் பரமசிவன் சொனவாச் சொல்வே
னுலகத்தும் வேதத்துஞ் சாத்தி ரத்தும்
நிதானமுடை யிவையரிதா மிவ்வர்த் தத்தை
நிலையுடைய மனதுடனே நின்று கேளாய். (1)

ஒருக்காலும் பிரபஞ்ச மோரி டத்து
மோரணுவு மூண்மையதா யிலவே யில்லை
திருக்கான பரப்பிரம மாத்தி ரந்தான்
றிரமாக வெப்போது மிருப்ப தென்றே
யிருக்காதி வேதமுடி வனைத்தி னுலு
மியம்பியசிற் பரப்பிரம நானே யென்று
தருக்காதி யுதவியினு லுறுதிப் பட்ட
தகுபிரம நிச்சயமே தருப்பணங் காண். (2)

சகலபரி பூரணமாம் பிரம நானே
சத்தியஞா னநந்தப் பிரம நானே
யகிலவதிட் டானபரப் பிரம நானே
யன்னியமோ ரணுவுமிலாப் பிரம நானே
நிகரில்சிதா காயபரப் பிரம நானே
நிமலான்மா காரபரப் பிரம நானே
யிகழுமுரு வெவையுமிலாப் பிரம நானே
யெனும்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (3)

சோகமிலாச் சுகனமாஞ் சொரூப நானே
சுத்தமதாம் பரமான்ம சொரூப நானே
யாகுமொரு விகற்பமிலாச் சொரூப நானே
யத்துவித வானந்த சொரூப நானே
மோகமிலாப் பரிசுத்த சொரூப நானே
மூதுணர்வாம் பரஞ்சோதி சொரூப நானே
யேகமதாம் பரப்பிரம சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (4)

உவமையிலா வொன்றுன சொரூப நானே
யொன்றென்னுங் கணிதமுமுச் சொரூப நானே
விவிதமிலா விமலபர சொரூப நானே
விண்ணினுமே நுண்ணியதாஞ் சொரூப நானே
தவிர்தலிலாத் தற்பரமாஞ் சொரூப நானே
தகுசத்தா மாத்திரமாஞ் சொரூப நானே
யெவையுமிலாப் பரப்பிரம சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (5)

சொல்லுமொரு பொருளுமிலாச் சொரூப நானே
சும்மாவே யிருக்கின்ற சொரூப நானே
கல்லெனவே யசைவற்ற சொரூப நானே
காண்பானுங் காட்சியுமில் சொரூப நானே
யல்லலிலா வகண்டசுக சொரூப நானே
யயலற்ற பரமோட்ச சொரூப நானே
யெல்லையிலாப் பரப்பிரம சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே கருப்பணங் காண். (6)

சதாநந்த மயமான சொரூப நானே
சந்ததமுஞ் சாந்தபர சொரூப நானே
சிதாநந்த மயமான சொரூப நானே
சின்மயமாம் பரமசிவ சொரூப நானே
யுதாரபரி பூரணமாஞ் சொரூப நானே
யொன்றுலு முன்னவொணாச் சொரூப நானே
யெதாகினுமோ ரணுவுமிலாச் சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே கருப்பணங் காண். (7)

நிருமலமாம் பரப்பிரம சொரூப நானே
நிர்க்குணமாம் பரப்பிரம சொரூப நானே
நிருபமமாம் பரப்பிரம சொரூப நானே
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப நானே
நிரவயவ பரப்பிரம சொரூப நானே
நிட்களமாம் பரப்பிரம சொரூப நானே
யிருமையிலாப் பரப்பிரம சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே கருப்பணங் காண். (8)

சாட்சியமா யொருபொருளு மிலாமை யாலே
சாட்சியெனுந் தன்மையிலாச் சொரூப நானே
காட்சியுடன் காண்பானு மிலாமை யாலே
கலக்கமிலாக் கேவலமாஞ் சொரூப நானே
மோட்சமுடன் பந்தமுமே யிலாமை யாலே
மொழியுமொரு விசேடமிலாச் சொரூப நானே
யீட்சணமே முதலில்தாஞ் சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே கருப்பணங் காண். (9

உடல்பொறிக ளுயிர்கண்மனம் புந்தி சித்த
மோங்குமகங் காரமிலாச் சொரூப நானே
மடமையதன் காரியமா நாம ரூப
மயலணுவு மருவாத சொரூப நானே
படருமலே வாக்குகளுக் கெட்டா தான
பங்கமிலாச் சைதன்ய சொரூப நானே
யிடரில்பரா நந்தகன சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே தருப்ப ணங்காண். (10)

சத்தியசிற் சுகனமாஞ் சொரூப நானே
சலனமிலா வேகான்ம சொரூப நானே
நித்தியமா நிருவாண சொரூப நானே
நிறைவுற்ற மகாமௌன சொரூப நானே
யுத்தமமாந் துரியபர சொரூப நானே
யோய்ந்ததுரி யாதீத சொரூப நானே
யித்தனையு மிலாதபர சொரூப நானே
யெனும்பிரம நிச்சயமே தருப்பணங் காண் (11)

சனனமுதல் விகாரமிலாச் சொரூப நானே
சஞ்சலமாங் கிரியையிலாச் சொரூப நானே
நனவுகளுச் சுழுத்தியிலாச் சொரூப நானே
நவில்விசுவ ஞதியிலாச் சொரூப நானே
பனுவுபுர மூன்றுமிலாச் சொரூப நானே
பாசேவ சகங்களிலாச் சொரூப நானே
யநவரதம் பரப்பிரம சொரூப நானென்
றமர்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (12)

சந்ததமுஞ் சன்மாத்ர சொரூப நானே
சலனமிலாச் சின்மாத்ர சொரூப நானே
தொந்தமிலாச் சுகமாத்ர சொரூப நானே
துவிதமிலா வத்துவித சொரூப நானே
பந்தமிலாப் பரமுத்த சொரூப நானே
பரமசிதா காயபர சொரூப நானே
யந்தமிலாப் பரப்பிரம சொரூப நானென்
றமர்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (13)

அதுவிதுநீ நான்முதலாய்க் காண்ப வெல்லா
மணுவுமிலை யணுவுமிலை யணுவு மில்லை
யெதுவெதுதான் றிருவியமா யெங்கே யெங்கே
யெவ்விதமாய்த் தோன்றினுமத் தோற்ற மெல்லாந்
திதமருவுந் திருக்கான பிரம மேயாந்
நிலமளவு மையமிலை சத்தி யந்தா
னிதமனைய பரப்பிரம நானே யென்று
நிகழ்பிரம நிச்சயமே தருப்பணங் காண். (14)

இவ்விதமே பரப்பிரம தருப்ப ணத்தை
யெல்லோர்க்கு மிதமாக விசைத்தேன் மைந்தா
செவ்வியதா மிப்பொருளை யொருகா லேனுஞ்
சிரத்தையுடன் கேட்டுணர்வோன் பிரம மாவ
னவ்விதமே பரமசிவ னருளிச் செய்த
வதிசயமாம் பரப்பிரம வோமந் தன்னைத்
தெவ்வியமா நிதாகவினி யுனக்குச் சொல்வேன்
றியங்கியிடா மனதுடனே திருந்தக் கேளாய். (15)

அகமனிசம் பரப்பிரம சொரூப மாமே
னகமனிசம் பரமான்ம சொரூப மாமே
னகமனிசம் பரமசிவ சொரூப மாமே
னகமனிசம் பராற்பரமாஞ் சொரூப மாமே
னகமனிசம் பரமசுக சொரூப மாமே
னகமனிசம் பரிபூன்ற சொரூப மாமே
னகமனிசம் பிரஞ்ஞான சொரூப மென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (16)

கிருமலமாம் பரப்பிரம சொரூப மேநா
னிக்கியமாம் பரப்பிரம சொரூப மேநான்
பரியதாம் பரப்பிரம சொரூப மேநான்
பரிசுத்த பரப்பிரம சொரூப மேநான்
பிரிவுபெறாப் பரப்பிரம சொரூப மேநான்
பிரணவார்த்த பரப்பிரம சொரூப மேநா
னருவமதாம் பரப்பிரம சொரூப நான்என்
றகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (17)

சதாநந்த பரப்பிரம சொரூப மேநான்
சாந்தமதாம் பரப்பிரம சொரூப மேநான்
சிதாநந்த பரப்பிரம சொரூப மேநான்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மேநா
னுதாரமதாம் பரப்பிரம சொரூப மேநா
னேர்வடிவாம் பரப்பிரம சொரூப மேநா
னதாகியநற் பரப்பிரம சொரூப நானென்
றகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (18)

கருகவொணாப் பரப்பிரம சொரூப மேநான்
களங்கமிலாப் பரப்பிரம சொரூப மேநா
னுருவமிலாப் பரப்பிரம சொரூப மேநா
னுணர்வுருவாம் பரப்பிரம சொரூப மேநான்
கிரியையிலாப் பரப்பிரம சொரூப மேநான்
கேவலமாம் பரப்பிரம சொரூப மேநா
னருவமதாம் பரப்பிரம சொரூப நானென்
றகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (19)

அகமென்றுந் தேகமலன் பொறிக ளல்ல
னகமென்றும் பிராணனலன் மனது மல்ல
னகமென்றும் புத்தியலன் சித்த மல்ல
னகமென்று மாங்காரந் தானு மல்ல
னகமென்று மிதன்மூலாஞ் ஞான மல்ல
னகநனவு கனவுதுயி லடைந்தே னல்ல
னகமென்று மெவைக்கும்விலட் சணமே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (20)

அகமென்றுந் தூலமுத லுடன் மூன்றல்ல
னகம்விசுவ ஞதியபி மானி யல்ல
னகமென்று மன்னமய மாதி யல்ல
னகமென்று மவ்வினபி மானி யல்ல
னகமென்று மறைந்தவையின் றிரளு மல்ல
னகநாம ரூபங்க ளெவையு மல்ல
னகமென்று மெவைக்கும்விலட் சணமே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (21)

ஓதியுணர் சிரவணமு மெனக்கிங் கில்லை
யூகமுறு மனனமுமே யெனக்கிங் கில்லை
பேதமிலாத் தியானமுமே யெனக்கிங் கில்லை
பிரிவற்ற சமாதியுமே யெனக்கிங் கில்லை
யேதுமிலா ஞானமுமே யெனக்கிங் கில்லை
யிருமையிலா முத்தியுமே யெனக்கிங் கில்லை
யாதியிலாப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (22)

சுகதமுதற் பேதங்கண் மூன்று மில்லை
சூக்கமகா பூதங்க ளைந்து மில்லை
புகன்மன தமுதலியவோர் நான்கு மில்லை
பூதமுதற் காலங்கண் மூன்று மில்லை
விகலமுறு குணங்களொரு மூன்று மில்லை
விதிமுதலா மூர்த்தியொரு மூன்று மில்லை
யகமனிசம் பரப்பிரம சொரூப னென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (23)

வேதங்க ளனைத்துமில்லை நூற்க ளில்லை
விளம்பியவவ் வேதாதிப் பொருளு மில்லை
பூதங்க ளனைத்துமில்லை யப்பூ தத்தாற்
பொருந்துவதாஞ் சரமசர மெவையு மில்லை
பேதங்க ளனைத்துமில்லை யப்பே தத்தாற்
பின்னமெனப் பேசியிடும் பொருளு மில்லை
யாதங்க மற்றபர நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (24)

அகிலவித தத்துவமு மசத்தே யாகு
மகிலவித வுலகமுமே யசத்தே யாகு
மகிலவித வன்னமுமே யசத்தே யாகு
மகிலவித வாச்சிரம மசத்தே யாகு
மகிலவித நாமங்க ளசத்தே யாகு
மகிலவித ரூபங்க ளசத்தே யாகு
மகிலமிலாப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (25)

சுருதியுணர் ஞானமுமே யசத்தே யாகுஞ்
சூக்குமநூன் ஞானமுமே யசத்தே யாகு
சருவவித தீர்த்தமுமே யசத்தே யாகுஞ்
சகலதவந் தானமுமே யசத்தே யாகுங்
குரவனெடு சீடனுமே யசத்தே யாகுங்
குருசொல்லு மந்திரமு மசத்தே யாகு
மருவமதாம் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (26)

தொந்தமுற நினைப்பவெலா மசத்தே யாகுந்
துஷிதமதாய்க் காண்பவெலா மசத்தே யாகும்
பந்தமுறு தேகமுத லசத்தே யாகும்
பலவிதமாஞ் சீவர்களு மசத்தே யாகுஞ்
சிந்தையுறும் போகமெலா மசத்தே யாகுஞ்
செறிகின்ற வினைகளெலா மசத்தே யாகு
மந்தமிலாப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (27)

விந்தரமாய் விளம்புவது மசத்தே யாகும்
விருப்பமுடன் கேட்பதுவு மசத்தே யாகுஞ்
சத்தியமாய்ப் பார்ப்பதுவு மசத்தே யாகுஞ்
சஞ்சலமா யுணருவது மசத்தே யாகு
மெத்திரமாய்த் தோற்றுவது மசத்தே யாகு
மெவ்விதமாந் திருஷியமு மசத்தே யாகு
மத்தமிலாப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (28)

குறைவற்ற பரப்பிரம மான வென்னிற்
குறுக்குநெடுக் கானவெலா மசத்தே யாகுங்
கறையற்ற பரப்பிரம மான வென்னிற்
காரியகா ரணமெல்லா மசத்தே யாகு
மறைவற்ற பரப்பிரம மான வென்னின்
மயங்கியிடுந் தோற்றமெலா மசத்தே யாகு
மறிவுற்ற கெவையுமிலாப் பரநா னென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (29)

சருவமொடு கிஞ்சிலுமே யசத்தே யாகுஞ்
சஞ்சலமாஞ் சுகதுக்க மசத்தே யாகும்
புரணமொடு பரிச்சின்ன மசத்தே யாகும்
புண்ணியபா வங்களெலா மசத்தே யாகு
மருவுசெய மபசெயமு மசத்தே யாகு
மகிழுமிலா பாலாப மசத்தே யாகு
மருவமதாம் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (30)

சித்தமுத லெப்பொருளு மசத்தே யாகுஞ்
சிறுமைதரும் பகுதியுமே யசத்தே யாகும்
வித்தரமாம் வித்தையெலா மசத்தே யாகும்
விதம்விதமாந் தோற்றமெலா மசத்தே யாகுஞ்
சத்தமுத லேம்புலனு மசத்தே யாகுஞ்
சகலசரா சரசகமு மசத்தே யாகு
மத்தமிலாப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (31)

புத்திரனே யுட்பொருளு மசத்தே யாகும்
புரையற்ற வெளிப்பொருளு மசத்தே யாகும்
பத்திசெயு நீதானு மசத்தே யாகும்
பகர்கின்ற நான்முனு மசத்தே யாகும்
வித்தரமா மற்றோரு மசத்தே யாகும்
விரிந்தசக சீவபர மசத்தே யாகு
மத்துவிதப் பரப்பிரம நானே யென்னு
மகம்பிரம நிச்சயமே யரிதா மோமம். (32)

அகம்பிரம நிச்சயமே தான மற்று
மகம்பிரம நிச்சயமே மந்தி ரங்கா
ணகம்பிரம நிச்சயமே தருப்ப ணம்மற்
றகம்பிரம நிச்சயமே யோம மைந்தா
வகம்பிரம நிச்சயமே மற்று முள்ள
வறங்களெலா மாதலினன் முழுமுட்சு வாஞை
ரகம்பிரம நிச்சயமே யிடை விடாம
லநவரத மாதரவாய்ப் பழகல் வேண்டும். (33)

இவ்விதமே பரமசிவ னிசைத்த வண்ண
மீனமிலாத் தானமுத லோம மீரும்ச்
செவ்வியவாம் பொருளேயெலாஞ் செப்பி னேனுன்
செப்பியதி லேயமிலே சத்தி யந்தான்
றிவ்வியமாய் நிறைந்தெங்கு நின்ற வீசன்
றிருப்பாதந் தன்னுணை யுரைத்த துண்மை
யவ்விதமா மிப்பொருளே யொருகா லேனு
மன்புடனே கேட்டுணர்வோன் பிரம மாவன். (34)

உலகமெலா மெதனிடையி லுதித் தொடுங்கு
மொளிர்பானு விந்துவன லுடுக்கண் மின்னற்
பலவொளியு மெதனுலே விளக்க லாகும்
பகருமவை யெதனினிதம் விளக்க மாட்டா
விலகுசுரா சுரரெவரு மெதன் பயத்தா
லெக்காலுந் தஞ்செயலே யியற்று நிற்ப
ரலையுமறி பொருளேயெலா மகற்றி யந்த
வறிவுருவாஞ் சிவத்தையுபா சிக்க வேண்டும். (35)

அகண்டவறி வானபர சிவமே நானென்
றநவரத மிடையறவே செய்யுந் த்யானம்
புகன்றவுபா சனையாகு மதனு லுண்மை
பொருந்தியநற் புந்தியினுற் பரசி வத்தை
நிகழ்ந்திடவே யறிந்திடலா மற்றொன் றுலு
நிருமலமா யறியவொணு தாதலாலே
பகர்ந்தகுரு வசனத்தாற் பரசி வத்தைப்
பத்தியுட னென்றுமுபா சிக்க வேண்டும். (36)

சகலசக வதிட்டான மாகா நின்ற
சத்தியஞா னநந்த சிவமே யென்று
மகமெனவே யனீயமற வறியா,தோர்க்கிங்
கநந்தவித துன்பத்துக் கேது வான
விகல்பவமாம் வாரிதியி னின்றெ முந்தவ்
வேகபர சிவமென்னுந் தீரஞ் சார்ந்து
சுகமுறுவ தியலதனற் பரசி வத்தைச்
சொன்னவண மெவ்விதமு மறிய வேண்டும். (37)

சந்ததமுஞ் சகலசகன் ஞான ஞேய
சகலர்க்கு மிதமான போக மோட்ச
மெந்தவித புருடார்த்தந் தனையு நல்கு
மியல்புள்ள பரமசிவ னிசைத்த வண்ண
மந்தரிபு மாமுனிவ னிதாக னுக்கங்
ககத்திலுள சங்கையெலாந் தீரும் வண்ணம்
பந்தமறு தருப்பணமோ டோமந் தன்னைப்
பரிவுடனே பாங்காகப் பகர்ந்தா னன்றே. (38)

வேறு.

சருவபூரண மாகிய கண்டமாய்ச்
சாந்தமாய்ச்சச்சி தாநந்த ரூபமாய்த்
திருசியங்க ளனைத்து மிலாமலே
திருக்குமாத்திர மாய்த்திக ழாநின்ற
பிரிவிலாப்பர நானென்று பேசிய
பிரமதர்ப்பண மும்பர வோமமு
மரியவாநந்தத் தாண்டவ மாடுநம்
மாண்டவன்பரி பூரண ரூபமே. (39)

ஏழாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம், 7-க்கு திருவிருத்தம்-342.

எட்டாவது
சீவன்முத்த னிலக்கணம் உரைக்கும்
அத்தியாயம்.

நிதாகனினக் கிவ்வோத்திற் சீவன் முத்த
னிகழுமிலக் கணமான போதஞ் சொல்வேன்
சதாநந்த கனமான வான்மா வாகச்
சாந்திமிகுந் திருப்போனே சீவன் முத்த
னுதாரபரி பூரணமா யொழிவில் சத்தா
யுணர்வுருவா மான்மாவுக் கபின்ன மான
சிதாநந்த பரப்பிரம நானே யென்று
செறிகின்ற துணிவுடையோன் சீவன் முத்தன். (1)

சத்துவமே முதலியமுக் குணமு மின்றிச்
சத்தியமாய்ப் பராற்பரமாய்ப் பரமா நந்த
சித்துருவாம் பரப்பிரம நானே யென்று
சின்னமிலாத் துணிவுடையோன் சீவன் முத்த
னத்திரமாந் தேகங்கண் மூன்று மின்றி
யறிவுருவா யாநந்த கனமா யொன்றாய்
நித்தியமாம் பரமான்மா நானே யென்று
நிரந்தரமாந் துணிவுடையோன் சீவன் முத்தன். (2)

தேகமுத லபிமான மணுவு மின்றித்
திடமாகப் பரப்பிரம நானே யென்று
மேகமதாந் துணிவுற்றுப் பரமா நந்த
மெப்போது மிசைந்திடுவோன் சீவன் முத்தன்
சோகமுறு மகங்கார மிறையு மின்றிச்
சுத்தபர சின்மாத்ர சொரூப மாக
மோகமற நின்றுமகா நந்தம் பெற்று
மோனமடைந் திடுவோனே சீவன் முத்தன். (3)

தூயமனந் தனிலென்றுஞ் சின்மாத் ரத்தைத்
தொடர்பவனுய்ச் சின்மாத்ர சொரூப னாகி
மாயைமுதற் கற்பிதமாம் பொருளா யெல்லா
மதியாத மனதுடையோன் சீவன் முத்தன்
காயமுத லெவ்விடத்து நிறைந்து நின்றுங்
கற்பிதமா மொன்றேடும் பற்றே யின்றி
நேயமதா நித்தசுக திருத்த னாகி
நிச்சலமாய் நின்றவனே சீவன் முத்தன். (4)

எப்போதும் பரமான்மா பரனே யாகி
யேகமதாம் பிரஞ்ஞான மகமென் றெண்ணித்
தற்போத மின்றிமகா நந்த ரூபந்
தானாகி நிற்பவனே சீவன் முத்தன்
கற்போல மனமுதலின் சலன மின்றிக்
களங்கமிலாக் கேவலனுய்ச் சுத்தான் மாவாய்ச்
சற்போத வானந்த வநுப வத்தைச்
சந்ததமுஞ் சார்ந்தவனே சீவன் முத்தன். (5)

அன்னியமாஞ் சிந்தையெலா மறவுந் தள்ளி
யகண்டைக ரூபமதாய்ச் சாந்த ஞகிப்
பின்னமுறும் பொய்யான பொருளே யின்றிப்
பேதமற நிற்பவனே சீவன் முத்த
னுன்னவொணு மாயைமனம் புந்தி சித்த
மோங்குமகங் காரமுயிர் பொறிக டேக
மென்னுமிவை யெனக்கில்லை பிரம மேநா
னென்றுநிட நிச்சயவான் சீவன் முத்தன். (6)

சத்தமுத லைம்புலனு மெனக்கிங் கில்லை
சத்துருவாங் காமமில்லை கோப மில்லை
புத்தியுறுந் தோடமில்லை குணமு மில்லை
பொய்யான மற்றவொரு பொருளு மில்லை
சித்தமுத லெவையுமிலாத் தன்மை யாலே
சிறுமைதரும் பந்தமில்லை முத்தி யில்லை
யித்தனையு மில்லாத பிரம மேநா
னென்றுநிட நிச்சயவான் சீவன் முத்தன். (7)

எனக்கயலாய்த் தூலமுதற் றேக மில்லை
யெனக்கயலாய் நனவுமுத லவத்தை யில்லை
யெனக்கயலாய் விசுவன்முத லாரு மில்லை
யெனக்கயலாய்ச் சமட்டிவியட் டிகளு மில்லை
யெனக்கயலா யாந்தரமாஞ் சகத்து மில்லை
யெனக்கயலாய் வாசியமாஞ் சகத்து மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பிரம மேநா
னென்றுரமா யிருந்திடுவோன் சீவன் முத்தன். (8)

எனக்கயலாய்த் தீர்த்தமில்லை தான மில்லை
யெனக்கயலாய்த் தலங்களில்லை தெய்வ மில்லை
யெனக்கயலாய்த் தெய்வத்தின் சேவை யில்லை
யெனக்கயலாய்த் தருமமில்லை பாவ மில்லை
யெனக்கயலாய்ச் சனனமில்லை பந்த மில்லை
யெனக்கயலாய் ஞானமில்லை மோட்ச மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பிரம மேநா
னென்றுரமா யிருந்திடுவோன் சீவன் முத்தன். (9)

எனக்கயலாய் வேதமில்லை நூலு மில்லை
யெனக்கயலாய் விதியுமில்லை நிடேத மில்லை
யெனக்கயலாய்க் குருவுமில்லை சீட னில்லை
யெனக்கயலா யுபதேச வாக்கு மில்லை
யெனக்கயலாய்ப் பாமுணரும் போத மில்லை
யெனக்கயலாய்க் காலமில்லை தேச மில்லை
யெனக்கயலா யென்றுமொரு பொருளு மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன். (10)

எனக்கயலாய்ப் பூதமில்லை புவன மில்லை
யெனக்கயலாய்ப் பௌதிகமா மெவையு மில்லை
யெனக்கயலாய்ச் சருவமில்லை கிஞ்சி லில்லை
யெனக்கயலா யொருபையில்லை யிருமை யில்லை
யெனக்கயலாய்த் தூரமில்லை யண்மை யில்லை
யெனக்கயலா யுயர்வுமில்லை தாழ்வு மில்லை
யெனக்கயலாய்ப் புகழ்வுமில்லை யிகழ்வு மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன். (11)

எனக்கயலாய்ச் சாதியில்லை நீதி யில்லை
யெனக்கயலாய்க் கோத்திரமுங் குலமு மில்லை
யெனக்கயலாய்க் கருமமில்லை பயனு மில்லை
யெனக்கயலாய்க் காரியகா ரணமு மில்லை
யெனக்கயலாய் வித்தையில்லை யவித்தை யில்லை
யெனக்கயலாய்த் தியானமில்லை சமாதி யில்லை
யெனக்கயலாய் நாதமில்லை சத்த மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன். (12)

எனக்கயலாய்ச் செபமுமில்லை தவமு மில்லை
யெனக்கயலாய் மந்திரதந் திரமு மில்லை
யெனக்கயலா யோமமில்லை சாந்தி யில்லை
யெனக்கயலா யிரவுமில்லை பகலு மில்லை
யெனக்கயலாய் விதியுமில்லை யரியு மில்லை
யெனக்கயலாய் யாதுமில்லை யினனு மில்லை
யெனக்கயலாய்த் தேவதைக ளாரு மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன். (13)

சீதமுடன் ரூபமுமே யெனக்கிங் கில்லை
செயமுடனே யபசெயமு மெனக்கிங் கில்லை
பீதியுட னபீதியுமே யெனக்கிங் கில்லை
பிணிபோன்ற பசிதாக மெனக்கிங் கில்லை
யாதியுடன் வியாதியுமே யெனக்கிங் கில்லை
யடிமுடிமேற் கீழொன்று மெனக்கிங் கில்லை
போதகன பரப்பிரம நானே யென்று
பூரணமா மறிவுடையோன் சீவன் முத்தன். (14)

பனுவியிடுந் திக்குவிதிக் கெனக்கிங் கில்லை
பாகியமு மாந்தரமு மெனக்கிங் கில்லை
வினவியிடத் தகுபொருளு மெனக்கிங் கில்லை.
விளம்பியிடத் தகுபொருளு மெனக்கிங் கில்லை
நினைவிலுறத் தகுபொருளு மெனக்கிங் கில்லை
நின்றுணரத் தகுபொருளு மெனக்கிங் கில்லை
யனியமிலாப் பரப்பிரம நானே யென்னு
மகண்டபர வறிவுடையோன் சீவன் முத்தன். (15)

பலவிதமாம் போக்கியமு மெனக்கிங் கில்லை
பற்றியிடும் போகமுமே யெனக்கிங் கில்லை
யலைவுதரு மிராகமுமே யெனக்கிங் கில்லை
யமர்கின்ற சாந்தியுமே யெனக்கிங் கில்லை
நிலைமருவா வவிவேக மெனக்கிங் கில்லை
நீக்கவொணாப் பாசமுமே யெனக்கிங் கில்லை
சலனமிலாப் பரப்பிரம நானே யென்று
சந்ததமுந் துணிவுடையோன் சீவன் முத்தன். (16)

பிரியமுட னப்பிரிய மெனக்கிங் கில்லை
பிரமோத மோதமுமே யெனக்கிங் கில்லை
யிருமையெனு மாரோப மெனக்கிங் கில்லை
யில்லையெனு மபவாத மெனக்கிங் கில்லை
நிருமலமா மிலக்கியமு மெனக்கிங் கில்லை
நிலைபெற்ற யோகமுமே யெனக்கிங் கில்லை
யொருவடிவாம் பரப்பிரம நானே யென்னு
முரமான துணிவுடையோன் சீவன் முத்தன். (17)

பிறந்திடுத லிருந்திடுதல் வளர்தலில்லை
பெருத்திடுத லிளைத்திடுதன் மரித்த லில்லை
செறிந்தபல சருமாதி தாது வில்லை
சிறுமையுட னெவ்வனமுஞ் சரையு மில்லை
யறிந்திடுமோ ருபாதியுமே யெனக்கிங் கில்லை
யத்துவிதந் துவிதமுத லெவையு மில்லை
நிறைந்தவறி வானபர நானே யென்று
நிலைபெற்று நிற்பவனே சிவன் முத்தன். (18)

கருமையில்லை வெண்மையில்லை செம்மை யில்லை
கண்டபல வுருவமில்லை நாம மில்லை
மருளுமில்லை தெருளுமில்லை வெளியு மில்லை
மறைவுமில்லை யிருளுமில்லை யொளியு மில்லை
விரதமில்லை யின்பமில்லை துன்ப மில்லை
வேறுன பொருளொன்று மெனக்கிங் கில்லை
புராணமதாம் பரப்பிரம நானே யென்று
புரையறவே யிருந்திடுவோன் சிவன் முத்தன். (19)

ஏதமெனத் தள்ளியிடும் பொருளு மில்லை
யிதமெனவே கூட்டியிடும் பொருளு மில்லை
யோதியிடுங் குருசீடர் முதலு மில்லை
யொளிர்ஞான ஞாதுருஞே யங்க ளில்லை
சேதனமுஞ் சித்தலதாஞ் செடமு மில்லை
செறிகின்ற சுபாசுபமு மெனக்கிங் கில்லை
பேதமிலாப் பரப்பிரம நானே யென்று
பிரிவறவே யிருந்திடுவோன் சிவன் முத்தன். (20)

அற்புதமா யொருபொருளு மெனக்கிங் கில்லை
யான்மாவு மனன்மாவு மெனக்கிங் கில்லை
கற்பிதமாஞ் சுவர்க்கமுநற் பலமு மில்லை
களங்கமறப் பழகியிடுங் கல்வி யில்லை
பற்பலவாஞ் சங்கைசமா தான மில்லை
பயில்சாந்தி தாந்திமுத லெனக்கிங் கில்லை
சற்பதமாம் பரப்பிரம நானே யென்று
தளர்வறவே யிருந்திடுவோன் சிவன் முத்தன். (21)

பங்கமுறு விகற்பங்க ளெனக்கிங் கில்லை
பலவிதமா முலகங்க ளெனக்கிங் கில்லை
யிங்கிகழுத் தகுபொருளு மெவையு மில்லை
யியற்றியிடத் தகுபொருளு மெவையு மில்லை
மங்கலற வசனிக்கும் வாக்கு மில்லை
மவுனமடைந் திடுநிலையு மெனக்கிங் கில்லை
துங்கமதாம் பரப்பிரம நானே யென்னுந்
துணிவுடனே யிருந்திடுவோன் சீவன் முத்தன். (22)
திரிகுணமுஞ் சமமான பகுதி யில்லை
திகழ்சத்வ மேலான மாயை யில்லை
யிருகுணமு மேலான வவித்தை யில்லை
யிருண்மேலாந் தாமதமாம் பகுதி யில்லை
யுரைசெயுமோ ருபாதியுமே யிலாமை யாலே
யோதியிடும் பரசீவ சகமே யில்லை
யிருமையற வுளதுபரப் பிரம மொன்றே
யிதுவேநா னெனவுணர்வோன் சீவன் முத்தன். (23)
சுத்தியஞா னநந்த சொரூப மேநான்
சுத்தியஞா னநந்த சொரூப மேநா
னித்தியஞா னனந்த சொரூப மேநா
னித்தியஞா னனந்த சொரூப மேநான்
சுத்தபரி பூரணமாஞ் சொரூப மேநான்
சுத்தபரி பூரணமாஞ் சொரூப நானென்
றித்திறமாய்த் திடமான நிச்ச யத்தை
யிடையறவே யிசைந்திடுவோன் சீவன் முத்தன். (24)
தன்னிடையே தானுக விலங்கா நின்ற
தற்பதமாம் பரப்பிரமந் தானே யென்று
பின்னமிலா வறிவுற்றுப் பிரமா காரம்
பெற்றவனே பிணிப்பற்ற சீவன் முத்த
னன்னியமே யில்லாத வான்மா வின்க
ணமர்ந்தாங்கே ரமிப்போ ரகண்ட மான
தன்னிடையே தானுகத் தனித்து நின்று
தன்னின்பம் புசிப்பவனே சீவன் முத்தன். (25)
அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றறிதிடமா-நிச்சயமே யடைந்த வற்றூற்

றகும்பிரம சொரூபத்தி னிட்டை கூடித்
தங்குமனே விகற்பமெலாந் தவிர்ந்தோ னுகிச்
சகம்பாரா னீதெனவே தோற்றுந் தோற்றஞ்
சகலமுமே மறந்துமகா நந்தம் பெற்று
மிகும்பிரம ஞானத்தி னுரம்பெற் றுமேனை
மிகமேலாய் விளம்பியிடுஞ் சீவன் முத்தன். (26)

இன்னவிதம் பரமசிவ னெனக்கு முன்ன
மினிமையுட னருள்செய்த சீவன் முத்தன்
றுன்னுமிலக் கணமான நிடபோ தத்தைக்
துகளறவே நீதாகனினக் கருளிச் செய்தேன்
சொன்னவிவை வேதத்துஞ் சாத்தி ரத்துஞ்
சூக்குமமா மரிதாகுங் குய்ய மாகும்
பன்னுமிதைப் பரிவுடனே யொருகா லேனும்
பங்கமறக் கேட்டுணர்வோன் பரமே யாவன். (27)

ஈசனிலை யெனும்வாத மியம்பு வோரா
யிருக்குமுதல் வேதத்தின் கரும காண்டம்
பேசியிடுங் கருமத்தாற் றந்தே கத்தைப்
பேதமதி கொண்டுமிகக் கிலேசப் பித்துச்
சாசுவத சுவர்க்கத்தைச் சார்வோ மென்று
சஞ்சலமா மதியுடையோ ரொருகா லத்து
மாசிலதாம் பிரமசுக மருவா ரென்று
மகத்தான பவதுக்கந் தானே சார்வார். (28)

பரமசிவா ராதனையே செய்த வற்ருற்
பற்றுவதா மகண்டானந்த ஞான மென்னுந்
திரமருவு நாவாயாற் பரேச பத்தன்
தீர்க்கமுறும் பவவாரி கடப்ப னன்றிப்
பரியினது கோடெனவே வெறும் பொய் யேனும்
பவவாரி யிதைமற்றோர் கடவா ரென்றே
யரியரிபு நிதாகற்குச் சீவன் முத்த
னமைவுற்ற விலக்கணமங் கருள்செய் தானுல். (29)

வேறு.

தன்னுமாயையவித்தைகடாமிலை தொடருமீசனுஞ்சீவனுந்தாமிலை
பின்னமின்றிபகண்டமதாகிய பிரமமேயகமென்றுதெரிந்திடுஞ்
சின்னமில்நிடமாகியபோதமே சீவன்முத்தனுக்கானவிலக்கண
மென்னலாநந்தத்தாண்டவமாடுநம் மீசன்றன் பரிபூரண ரூபமே (30)

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம், 8-க்கு திருவிருத்தம் - 372.

ஒன்பதாவது

விதேகமுத்தனிலக்கணம் உரைக்கும் அத்தியாயம்.

இங்குமிக வரிதான விதேக முத்த
னிலக்கணமே நிதாகனினக் கியம்பக் கேளாய்
தங்குநினை வனைத்தையுமே கவிர்ந்து சுத்த
கற்பரனே கானுகிச் சாந்த னுகித்
துங்கசுக கனமாகித் துச்ச ரூபத்
தொடர்பின்றி மகாமவுன நிலைபெற் றேனுய்
மங்கலிலா வுணர்வுருவாம் பிரம ரூப
மாத்திரமா யிருப்பவனே விதேக முத்தன். (1)

பின்னமிலாச் சருவான்ம சொரூப மாகிப்
பிரிவற்ற பரசாந்த சொரூப மாகித்
தன்னியிடும் பந்தமிலாச் சொரூப மாகித்
தொடர்மோட்சந் தானுமிலாச் சொரூப மாகி
யுன்னுமொரு வடிவுமிலாச் சொரூப மாகி
யுண்மையுணர் வானந்த சொரூப மாகி
மன்னுபரி பூரணமாம் பிரம ரூப
மாத்திரமா யிருப்பவனே விதேக முத்தன். (2)

பயிலுமகா வாக்கினிலக் கியவான் மாவாய்ப்
பரமசுக கனமான பரமான் மாவாய்ச்
செயலெவையு மில்லாத சுத்தான் மாவாய்ச்
சின்மயமாய்ச் செறிகின்ற சகசான் மாவா
யயலனுவு மணுகாத வெறுமான் மாவா
யறுவிதமாம் விகாரமிலா வகண்டான் மாவாய்
மயலில்பரி பூரணமாம் பிரமான் மாவாய்
மன்னியிருந் திடுவோனே விதேக முத்தன். (3)

பிரமமக மகம்பிரம மென்றிவ் வண்ணம்
பெறுகின்ற தியானமுநிச் சயமு மின்றி
நிருமலமாஞ் சின்மாத்ர சொரூப மாக
நிற்பவனே நிலைபெற்ற விதேக முத்த
னரியபர மகமென்று மல்ல வென்று
மகிலமுமே யுளதென்று மில்லை யென்று
மொருவிதமாம் விகற்பமுமே யின்றி யென்று
மோர்வடிவா யிருப்பவனே விதேக முத்தன். (4)

எப்போது மெவ்விடத்து மெதனை யேனு
மெண்ணியிடும் விகற்பங்க ளிறையு மின்றித்
தற்போதந் தவிர்ந்துபரப் பிரம ரூபந்
தானுகி யிருப்பவனே விதேக முத்தன்
கற்போல விருப்பனெனு நினைவு மின்றிக்
கற்பிதமாய்த் தோற்றியவெப் பொருளு மின்றிச்
சற்போத சுகசனமாம் பரமே யாகச்
சலனமிலா திருப்பவனே விதேக முத்தன். (5)

பூதமுதற் பலவிதமாங் கால பேதம்
பொய்யான வெகுவிதமாந் தேச பேத
மோதியிடும் பலவான வத்து பேத
மொன்றுமிலா திருப்பவனே விதேக முத்த
னீதுதீ யிவனவ னிவளே யாதி
யெவ்விதமாம் பேதமுமோ ரணுவு மின்றிப்
போதகனப் பரப்பிரம வடிவே யாகப்
பொருந்தியிருந் திடுவோனே விதேக முத்தன். (6)

நிருமலமாய் நிர்க்குணமாய் நித்தான் மாவாய்
நிலைபெற்ற வறிவுருவாய் நுண்மை யாகிப்
பரவியகா லான்மாவாய்க் கால மின்றிப்
பலவிததே வர்ன்மாவாய்த் தெய்வ மின்றிச்
சருவசக தான்மாவாய்ச் சருவ மின்றிச்
சத்தியமாய்ச் சுகசனமாய்ச் சாந்த மாகிப்
புராணமதாம் பரப்பிரம வடிவே யாகப்
பொருந்தியிருந் திடுவோனே விதேக முத்தன். (7)

ஞாதருளூ ஞதியிலாச் சுத்தான் மாவாய்
ஞாலமிலாக் கேவலமாம் பரமான் மாவா
யேதுமொரு சடமுமிலாப் போதான் மாவா
யிறையுமனுன் மாவின்றி யேகான் மாவாய்ப்
பீதிசெயும் விகற்பமிலா வபயான் மாவாய்ப்
பேதமிலா மெய்யுணர்வா நந்தான் மாவா
யாதியிலா வகண்டபரப் பிரமான் மாவா
யமர்ந்தசைவற் றிருப்பவனே விதேக முத்தன். (8)

ஏதுமொரு பந்தமிலா முத்தான் மாவா
யிருமையிலாப் பரசத்தா மாத்தான் மாவாய்ப்
பேதமிலாக் கேவலமா ஞானுன் மாவாய்ப்
பிரிவற்ற கேவலவா நந்தான் மாவாய்த்
தீதுசெயு மகங்கார ரகிதான் மாவாய்த்
திருசியமே யில்லாத திகழ்வான் மாவாய்
வீதலிலா வகண்டபரப் பிரமான் மாவாய்
வெறிதாக விருப்பவனே விதேக முத்தன். (9)

சிவனெனு மீசனெனுஞ் செகத்தி தென்னுஞ்
செப்பியிடுஞ் சுருதியெனு மிருகி யென்னும்
பாவனமாம் புராணமிகி காச மென்னும்
பலவிதவா கமமென்னு நூல்க ளென்னு
மேவுபொருள் சகலமுமே பிரம மென்னு
மெய்ப்பிரம நானென்னு மயலன் றென்னும்
பாவனையீ தொன்றுமிலா தென்றுஞ் சுத்த
பரமாக விருப்பவனே விதேக முத்தன். (10)

சகலசக சிவபர மான தோற்றஞ்
சந்ததமுஞ் சற்றேனு மில்லை யென்று
மகிலமுமே யறிவுருவாம் பிரம மென்று
மவ்விதமாம் பரப்பிரம நானே யென்றும்
புகலுமொரு பாவனையுஞ் சிறிது மின்றிப்
பூரணசை தன்னியமாத் திரமே யாகிச்
சுகனமாய்ச் சுத்தமதாய்ச் சாந்த மாகிச்
சும்மாவே யிருந்திடுவோன் விதேக முத்தன். (11)

அற்பமுமே யளவுபடா வபரிச் சின்ன
வறிவருவா யணுவுக்கு மணுவாய்த் தூய்தாய்ச்
சொற்பமுமே யயலற்ற துரியா தீத
சொரூபமதா யிருப்பவனே விதேக முத்தன்
கற்பிதமா நாமமுரு வொன்று மின்றிக்
களங்கமிலாப் பரமசுக கனமாய்ச் சுத்த
தற்பதமாம் பரப்பிரமந் தானே யாகித்
தனித்தென்று மிருப்பவனே விதேக முத்தன். (12)

சகலசரா சரத்துக்கு மதீத மாகிச்
சன்மயமாய்ச் சுபமசுபஞ் சற்று மின்றி
யிகழ்வுதருங் கட்டுவிட லிரண்டு மின்றி
யேகபரி பூரணமா யகண்டான் மாவாய்
திகரில்பராற் பரமாகி நிகிலான் மாவாய்
நிகிலமுமே யின்றிநிரந் தரமாய் நின்ற
திகழுசிதா காயபரப் பிரமந் தானுய்த்
திரும்பியிடா திருப்பவனே விதேக முத்தன். (13)

தத்துவமு மதத்துவமுஞ் சற்று மின்றித்
தங்குசடா சடங்களுமே சற்று மின்றி
யத்திரமா மறியாமை யறிவு மின்றி
யசமாதி சமாதிகளு மணுவு மின்றி
யித்திறமே சிந்தையசிந் தைகளு மின்றி
யிலக்கியமு மலக்கியமு மிறையு மின்றி
நித்தியமாம் பரப்பிரமந் தானே யாகி
நிலைபெற்று நிற்பவனே விதேக முத்தன். (14)

சுத்தியஞா னைந்த சொரூப மாகிச்
சந்ததமு மூபசாந்த சொரூப மாகி
மெத்தவுமே வியாபகமாஞ் சொரூப மாகி
மிகப்பெரிதாஞ் சிதாகாய சொரூப மாகி
நித்தியசின் மாத்திரமாஞ் சொரூப மாகி
நிகிலபரி பூரணமாய் நிறைந்து நின்ற
சுத்தமதாம் பரப்பிரமந் தானே யாகிச்
சும்மாவே யிருந்திடுவோன் விதேக முத்தன். (15)

எப்போதும் பரப்பிரம மயமே யாகி
யெப்போதும் பகுப்பறவே யிருப்போ னாகி
யெப்போதுஞ் சன்மயமாஞ் சொரூப மாகி
யெப்போதுஞ் சலியாம லிருப்போ னாகி
யெப்போதுஞ் சின்மயமாஞ் சொரூப மாகி
யெப்போதுஞ் சிதானந்த மயமே யாகி
யெப்போது மகண்டைக ரசமே யாகி
யிருமையிலா திருப்பவனே விதேக முக்தன். (16)

சற்போத சுகனமாஞ் சொரூப மாகிச்
சகலபரி பூரணமாய்ச் சலன மின்றிக்
கற்போலப் பிரஞ்ஞான கனமே யாகிக்
களங்கமிலாப் பரிசுத்த சுபாவ மாகி
யெப்போது மெவைகட்கு மதீத மாகி
யியங்குமனோ வாக்குகளுக் கெட்டா தான
தற்போத ரகிதபரப் பிரமந் தானுய்த்
தன்மயமா யிருப்பவனே விதேக முக்தன். (17)

தேகமுதற் கற்பிதமா மூபாதி யின்றித்
திருசியமாம் விடயங்கள் யாவு மின்றி
மோகமதன் காரியமா மெவையு மின்றி
மோனமதா யிருப்பவனே விதேக முக்தன்
யாகமுறு நினைவெவையுஞ் சற்று மின்றிப்
பலவிதமாம் வாதனையுஞ் சிறிது மின்றி
யேகமதாம் பரப்பிரமந் தானே யாகி
யிருமையிலா திருப்பவனே விதேக முக்தன். (18)

நிதாகபல வுலகத்தி னினைவு மின்றி
நிகரில்பரப் பிரமத்தி னினைவு மின்றிச்
சதாநந்த மயமான பரமே யாகிச்
சன்மயமா யிருப்பவனே விதேக முக்த
னுதாரபரி பூரணவா நந்த மாகி
யுவமையிலா நிரதிசயா நந்த மாகிச்
சிதாநந்த மயமான பரமே யாகிச்
சின்மயமா யிருப்பவனே விதேக முக்தன். (19)

பலவிதமாய்த் தோற்றியவோர் நினைவு மின்றிப்
பரவுகுண விகாரங்களெவையு மின்றி
யிலகுசுயஞ் சோதியதாம் பரமே யாகி
யிருளறவே யிருந்திடுவோன் விதேக முத்த
னலையுமலை விருத்திகளே யணுவு மின்றி
யவ்விதமாங் காரணங்க ளனைத்து மின்றிச்
சலனமிலாப் பரப்பிரமந் தானே யாகிச்
சலியாம லிருப்பவனே விதேக் முத்தன். (20)

தேகமவை யொருமூன்றுஞ் சிறிது மின்றித்
தேகமெனத் தெரிந்திடுமோர் நினைவு மின்றி
யாகமுறு பெருத்தன்முதல் விகார மின்றி
யணுவுக்கு மணுவாகி யகண்ட மாகிச்
சோகமுறு துவிதத்தின் ரூற்றம் யாவுஞ்
சொற்பமுமே யின்றியசிற் சுபாவ மான
பாகமுரூப் பரப்பிரமந் தானே யாகிப்
பங்கமற விருப்பவனே விதேக முத்தன். (21)

பரசிவமாய்ப் பராற்பரமாய்ப் பரமான் மாவாய்ப்
பரசுகமாய்ப் பரிசுத்த சொரூப மாகி
யொருவரினுற் காணவொணு வுண்மை யாகி
யுள்வெளிக ளொன்றுமிலா தகண்ட மாகிச்
சுருதிமுடிச் சாரமதாய்ச் சுத்த சித்தாய்ச்
சொற்பொருள்கள் சொற்பமுமே யின்றி நின்ற
நிருமலமாம் பரப்பிரமந் தானே யாகி
நிச்சலமா யிருப்பவனே விதேக முத்தன். (22)

இதுவதுவென் றியம்பவொணு வேகான் மாவா
யென்றுமுள பரமார்த்த சத்தே யாகி
மதிமுதலுக் கெட்டாத மகத்தாஞ் சித்தாய்
மனவாக்குக் ககோசரவா நந்த மாகித்
திதமருவாத் துவிதங்க ளெவையு மின்றித்
திரமருவு மத்துவித சுபாவ மாகி
தியமுமொரு வடிவான பரமே யாக
நிலைபெற்று நிற்பவனே விதேக முத்தன். (23)

பிரமசுதா ரசந்தனிலே யிருப்போ ஞகிப்
பிரமசுதா ரசந்தனையே புசிப்போ ஞகிப்
பிரமசுதா ரசந்தனிலே ரமிப்போ ஞகிப்
பிரமசுதா ரசந்தனிஞற் சுகிப்போ ஞகிப்
பிரமசுதா ரசந்தனிலே மூழ்கி ஞைஞப்
பிரமசுதா ரசந்தனிஞற் றிருத்த ஞகிப்
பிரமசுதா ரசமதுவே தானுய் நின்ரூன்
பின்னமிலாப் பரமான விதேக முத்தன். (24)

பிரமமகா நந்தத்நில் வசிப்போ ஞகிப்
பிரமமகா நந்தமது பவிப்போ ஞகிப்
பிரமமகா நந்தத்தான் மகிழ்வோ ஞகிப்
பிரமமகா நந்தத்தாற் பிறங்கு வோனுய்ப்
பிரமமகா நந்தத்தா னிறைந்தோ ஞகிப்
பிரமமகா நந்தத்நில் லயிப்போ ஞகிப்
பிரமமகா நந்தமதே தானுய் நின்ரூன்
பின்னமிலாப் பரமான விதேக முத்தன். (25)

பிரமமகா நந்தசரீ ராதி யுற்றுப்
பிரமமகா நந்தமெனுங் குடும்பம் பெற்றுப்
பிரமமகா நந்தசிவார்ச் சனையுற்ரூ னுய்ப்
பிரமமகா நந்தசெயம் பெற்ரூ ஞகிப்
பிரமமகா நந்தசுதா திருத்த ஞகிப்
பிரமமகா நந்தமதே தான் மத்த ஞகிப்
பிரமமகா நந்தமதே தானுய் நின்ரூன்
பின்னமிலாப் பரமான விதேக முத்தன். (26)

சகபரசீ வன்களெனத் தோன்ரு நின்ற
சம்சார விவகாரஞ் சற்றுமின்றி
யகிலபரி பூரணமா யகண்ட சத்தா
யறிவுருவா யாநந்த கனமா யொன்ரூய்
நிகரில்பர மாகாய சொரூப மாக
நிகழ்கின்ற பரப்பிரமந் தானே யாகிப்
புகலுமொரு விகற்பமுமே யின்றி யென்றும்
பூரணமா யிருப்பவனே விதேக முத்தன். (27)

பரமசிவன் கருணையினு லெனக்கு ரைத்த
பாங்காகப் பரமான விதேக முத்தன்
மருவியிடு மகத்தான விலக்க ணத்தை
மயலறவே நிதாகநினைக் கருளிச் செய்தேன்
சுருதிமுடி வனைத்திலுமே சார மாகிச்
சூக்குமமா யிரிதான விவ்வர்த் தத்தை
யருமையுடன் றிடமாகக் கேட்டு ணர்ந்தோ
னசரீர பரப்பிரம மாவ னன்றே. (28)

சின்மயமாஞ் சிவத்தினிடைச் சித்தம் வைத்துச்
சிவமதுவே நாமென்றிங் கறியா தோர்க்குச்
சன்மயமாம் பரப்பிரமந் தானே யாகிச்
சலியாம லிருப்பதுவாம் விதேக முக்தத்
தன்மையொரு காலத்துஞ் சித்தி யாது
தத்துவமாய் நவில்கின்றே னிதாக வென்றே
நின்மலமாய் ரிபுமுனிவன் விதேக முக்த
னிலைபெற்ற விலக்கணமே நிகழ்த்தி னனால். (29)

வேறு.

தோற்றுகின்ற சகபர சீவரின்
ரெடர்பியா தொன்றுஞ் சற்றுமிலாமலே
சாற்றுவாக்கு மனங்கட் ககோசர
சச்சிதாநந்த தற்பர மாகவே
வேற்றுமையின்றி யென்று மிருப்பதே
விதேகமுக்த னிலக்கண மென்றிட
லேற்றுமாநந்தத் தாண்டவ மாடுநம்
மீசன்றன்பரி பூரணரூபமே. (30)

ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம்-9க்கு திருவிருத்தம்-402.

பத்தாவது

சருவமும் ஆன்மரூபமென்று உரைக்கும்

அத்தியாயம்.

அடையமிக வரிதாகிச் சார மான
வான்மாவின் மகிமையினை யறையக் கேளாய்
சடமலதாய்ச் சத்தியசித் சுகமா யொன்றுய்ச்
சாந்தமதா மான்மாவே யுளதா மெங்குந்
தடமருவு மவ்வான்மா தானே யாகுந்
தன்வடிவா மான்மாவுக் கயலே யில்லை
கடபடமே முதலியவாய் நாநா வாகக்
காண்கின்ற விவையெல்லா மான்ம ரூபம். (1)

அகிலபரி பூரணமா மான்ம ரூப
மகிலத்துக் கப்பாலா மான்ம ரூபஞ்
சகலமதன் சொரூபமதா மான்ம ரூபஞ்
சகலத்தின் பரமாகு மான்ம ரூப
மிகவுமுப சாந்தமதா மான்ம ரூப
மெய்யுணர்வா நந்தமதா மான்ம ரூப
நிகரிலதா மான்மாவுக் கயலே யில்லை
நிகிலமுமே நித்தியமு மான்ம ரூபம். (2)

சகலர்க்கும் பிரியமதா மான்ம ரூபஞ்
சாசுவத சொரூபமதா மான்ம ரூப
மகிழ்வுக்கோ ரிடமாகு மான்ம ரூப
மகத்துக்கு மகத்தாகு மான்ம ரூப
மிகழுமறு விகாரமிலா தான்ம ரூப
மிருளற்ற நிருமலமா மான்ம ரூபஞ்
சுகனமா மான்மாவுக் கயலே யில்லை
சொற்பொருளாஞ் சகலமுமே மான்ம ரூபம். (3)

சீவபர பேதமிலா தான்ம ரூபஞ்
சித்தமுத லெவையுமிலா தான்ம ரூப
மேவுமனன் மாவிலதா மான்ம ரூப
மிகுபரமாத் துவிதமதா மான்ம ரூப
மோவலிலாச் சின்மயமா மான்ம ரூப
மோர்வடிவா யுள்ளதுவா மான்ம ரூபம்
பாவனமா மான்மாவுக் கயலே யில்லை
பார்க்கின்ற பார்வையெலா மான்ம ரூபம். (4)

அத்துவிதந் துவிதமுமா மான்ம ரூப
மவ்விதமாஞ் சொலவுமிலா தான்ம ரூப
முத்தமுமாம் பெத்தமுமா மான்மரூப
முத்தமுதற் சொலவுமிலா தான்ம ரூப
மத்திறமே யகிலமிலா தான்ம ரூப
மகண்டபரி பூரணமா மான்ம ரூபஞ்
சத்தியமா யான்மாவுக் கயலே யில்லை
சந்தகமுஞ் சகலமுமே மான்ம ரூபம். (5)

சங்கற்பஞ் சற்றுமிலா தான்ம ரூபஞ்
சதாநந்த சொரூபமதா மான்ம ரூபந்
தங்குற்ற பந்தமிலா தான்ம ரூபந்
தயங்குபர தேவதையா மான்ம ரூப
மங்குற்ற மலமிலதா மான்ம ரூப
மாறுபடா நிட்களமா மான்ம ரூபம்
பொங்குற்ற வான்மாவுக் கயலே யில்லை
போக்கியபோ கங்களெலா மான்ம ரூபம். (6)

சாதமுறுச் சனுதனமா மான்ம ரூபஞ்
சத்தியசிற் சுககனமா மான்ம ரூப
மீதெனவே யெண்ணவொணு தான்ம ரூப
மெப்போது மிறப்பிலதா மான்ம ரூபம்
பேதமிலா தகிலமுமா மான்ம ரூபம்
பிரமாணு தீதமதா மான்ம ரூப
மாதியிலா வான்மாவுக் கயலே யில்லை
யயலெனவே காண்பவெலா மான்ம ரூபம். (7)

துரியமதாந் தெளிவாகு மான்ம ரூபந்
துவிதத்தின் கரியாகு மான்ம ரூப
மரியபரப் பிரமமதா மான்ம ரூப
மபரோட்ச வறிவுருவா மான்ம ரூப
மருவுமசத் தணுவுமிலா தான்ம ரூப
மற்றனிய மெவையுமிலா தான்ம ரூபம்
பிரமமதா மான்மாவுக் கயலே யில்லை
பிரிவெனவே காண்பவெலா மான்ம ரூபம். (8)

சாதனமோர் நான்குமிலா தான்ம ரூபஞ்
சாத்தியமாம் வித்தையிலா தான்ம ரூப
மேதமுறு மவித்தையிலா தான்ம ரூப
மிதன்செய்கை யெவையுமிலா தான்ம ரூப
மாதவனே மிகத்தூய்தா மான்ம ரூப
மானுவ மானமிலா தான்ம ரூபம்
போதகன வான்மாவுக் கயலே யில்லை
புலமுறவே காண்பவெலா மான்ம ரூபம். (9)

அன்னமய கோசமிலா தான்ம ரூப
மமர்பிராண கோசமிலா தான்ம ரூப
மின்னுமனே கோசமிலா தான்ம ரூபம்
விஞ்ஞான கோசமிலா தான்ம ரூபந்
தன்னுசுக கோசமிலா தான்ம ரூபந்
தொடர்பஞ்ச கோசமிலா தான்ம ரூபம்
பின்னமுறு வான்மாவுக் கயலே யில்லை
பிரிவெனவே காண்பவெலா மான்ம ரூபம். (10)

தூலமுத லுடன்மூன்று மிலதா மான்மா
துவிதமுண ரவத்தைகளு மிலதா மான்மா
மூலமதா மஞ்ஞான மிலதா மான்மா
முத்திதரும் விஞ்ஞான மிலதா மான்மா
நாலுமகா வாக்கியமு மிலாதா மான்மா
நவிலாறு சமாதிகளு மிலதா மான்மா
ஞாலமிலா வான்மாவுக் கயலே யில்லை
ஞாதருளா ஞதியெலா மான்ம ரூபம். (11)

ஓங்கார முதலெவையு மிலதா மான்மா
வொழிவற்ற வுணர்வுருவா யொளிரு மான்மா
வாங்கார முதலெவையு மிலதா மான்மா
வாநந்த பூரணமா யமரு மான்மா
நீங்காத சன்மாத்ர மாகு மான்மா
நிச்சலமாய் நிலைபெற்று நிற்கு மான்மா
பாங்கான வான்மாவுக் கயலே யில்லை
பலவிதமாய்ப் பார்ப்பவெலா மான்ம ரூபம். (12)

மூன்றுவித காலத்து முளதா மான்மா
மூகனடுவு முடிவுமிலா திருக்கு மான்மா
தோன்றுமொரு விகற்பமுமே யிலதா மான்மா
துகளற்ற சின்மாத்ர மாகு மான்மா
வூன்றுமொரு நிரிபுடியு மிலதா மான்மா
வொன்றுமிலா வோர்வடிவா யுளதா மான்மா
சான்றவனே யான்மாவுக் கயலே யில்லை
சகலமுமே சந்ததமு மான்ம ரூபம். (13)

துவிதமொடத் துவிதமுமே யிலதா மான்மா
துரியத்து மதீதமதா யிருக்கு மான்மா
நவையில்சுயஞ் சோதியதாய் நிகழு மான்மா
நமதுநிச சுபாவமதாய் நண்ணு மான்மா
விவையவைமற் றெவைகளுமே யிலதா மான்மா
வேகபரி பூரணமா யிருக்கு மான்மா
தவிர்தலுரு வான்மாவுக் கயலே யில்லை
தனித்தனியாய்க் காண்பவெலா மான்ம ரூபம். (14)

பானமுமற் றபானமுமே யிலதா மான்மா
பரமசிதா காயமதா யிருக்கு மான்மா
மானமெனு மனவாக்குக் கெட்டா தான்மா
மகத்தான வாநந்த கனமா மான்மா
வூனமற வெப்பொருளு மாகு மான்மா
வுண்மையினி லோர்பொருளு மாகா தான்மா
ஞானகன வான்மாவுக் கயலே யில்லை
ஞாலமுயிர் பரமெவையு மான்ம ரூபம். (15)

நிதாகநின தான்மாவுக் கயலில் லாத
நேர்மையினு னீயென்று நின்னுன் மாவை
யுதாமுறப் பாவித்து மதுப விக்து
முன்னிடையே யுன்னுன்மா நந்தந் தன்னைச்
சதாமருவிப் புசித்துமிகச் சாந்த ஞகிச்
சந்தோட வாரிதியின் மிகவு மூழ்கி
யெதாகினுமோர் துயருமிலா தெக்கா லத்து
மின்பகன வடிவாக விருப்பாய் மைந்தா. (16)

அகண்டசுக வான்மாவை யறிய வேண்டி
யடைவாகச் சிரவணமுன் செய்ய வேண்டு
மகண்டசுக வான்மாவை யறிய வேண்டி
யநுதினமுந் நிடமனனஞ் செய்ய வேண்டு
மகண்டசுக வான்மாவை யறிய வேண்டி
யநவரதந் நிடத்தியானஞ் செய்ய வேண்டு
மகண்டசுக வான்மாவை யறிய வேண்டி
யகம்பிரம மென்றனிசம் பழக வேண்டும். (17)

அகண்டசுக வான்மாவை யுரைக்க வேண்டு
மகண்டசுக வான்மாவை யுணர்த்த வேண்டு
மகண்டசுக வான்மாவை நினைக்க வேண்டு
மகண்டசுக வான்மாவை துதிக்க வேண்டு
மகண்டசுக வான்மாவில் ரமிக்க வேண்டு
மகண்டசுக வான்மாவிற் சுகிக்க வேண்டு
மகண்டசுக வான்மாவிற் கலக்க வேண்டு
மகண்டசுக வான்மாவா யிருக்க வேண்டும். (18)

அகண்டசுக வான்மாவே யாவ ருக்கு
மநவரதம் பிரியமதா யிருப்ப தாலவ்
வகண்டசுக வான்மாவை ஞானுப் யாச
வர்ச்சனையா லர்ச்சிக்க வேண்டு மென்று
மகண்டசுக வான்மாவை யெவ்வி தத்து
மகமெனவே யபரோட்ச மாய நிந்தவ்
வகண்டசுக வான்மாவா யிருப்ப தான
வமலசுக மோட்சத்தை யடைய வேண்டும். (19)

ஆதலினு லகண்டசுக வான்ம ரூப
மகமென்று மவ்வகமே யனைத்து மென்னும்
பேதமிலா வகண்டான்ம போதந் தன்னைப்
பெற்றவனுய்ப் பவதுக்கம் யாவுந் தீர்ந்து
போதகன வாநந்த வான்மா வாகப்
பூரணமா யெப்போதும் பொருந்தி நிற்பாய்
மாதவனே யான்மாவே யனைத்து மன்றி
மற்றணுவு மான்மாவுக் கயலே யில்லை. (20)

ஆன்மாவே மூக்குணமாம் பகுதி யாகு
மான்மாவே யதன் செய்கை யனைத்து மாகு
மான்மாவே யகங்காரம் புத்தி யாகு
மான்மாவே மனதாகுஞ் சித்த மாகு
மான்மாவே யுயிராகும் பொறிக ளாகு
மான்மாவே யுடலாகும் புலன்க ளாகு
மான்மாவே மற்றுமுள தெவையு மாகு
மான்மாவுக் கயலாயோ ரணுவு மில்லை. (21)

ஆன்மாவே புவியாகுங் கந்த மாகு
மான்மாவே யப்பாகு மிரத மாகு
மான்மாவே வெளியாகு முருவ மாகு
மான்மாவே மருத்தாகும் பரிச மாகு
மான்மாவே வானுகு மொலியு மாகு
மான்மாவே பூதங்க ளனைத்து மாகு
மான்மாவே புவனங்க ளனைத்து மாகு
மான்மாவுக் கயலாயோ ரணுவு மில்லை. (22)

ஆன்மாவே விசுவனுமா னனவு மாகு
மான்மாவே தைசதனுங் கனவு மாகு
மான்மாவே பிராஞ்ஞனுமாந் துயிலு மாகு
மான்மாவே துரியனுமாந் துரிய மாகு
மான்மாவே விராட்டுமுதற் சமட்டி யாகு
மான்மாவே விசுவன்முதல் வியட்டி யாகு
மான்மாவே யறிவுற்ற தனைத்து மாகு
மான்மாவுக் கயலாயோ ரணுவு மில்லை. (23)

ஆன்மாவே மந்திரதந் திரங்க ளாகு
மான்மாவே செபங்களுடன் றபங்க ளாகு
மான்மாவே யநந்தவித கரும மாகு
மான்மாவே சுகதுக்க மனைத்து மாகு
மான்மாவே யுலகிலுள சனங்க ளாகு
மான்மாவே யுணர்வுற்ற பொருட்க ளாகு
மான்மாவே காரண காரியங்க ளாகு
மான்மாவுக் கயலாயோ ரணுவு மில்லை. (24)

ஆன்மாவே யயன்முதலெம் மூர்த்தி யாகு
மான்மாவே யருக்கன்முதற் றேவ ராகு
மான்மாவே தியானமுடன் யோக மாகு
மான்மாவே யதன்பயனு மனைத்து மாகு
மான்மாவே விவகாரத் துவித மாகு
மான்மாவே பரமார்த்தாத் துவித மாகு
மான்மாவே யகண்டைக சொரூப மாகு
மான்மாவுக் கயலாயோ ரணுவு மில்லை. (25)

பூதங்கள் சகலமுமே யான்ம ரூபம்
புவனங்கள் சகலமுமே யான்ம ரூபஞ்
சாதங்கள் சகலமுமே யான்ம ரூபஞ்
சார்நூல்கள் சகலமுமே யான்ம ரூபம்
வேதங்கள் சகலமுமே யான்ம ரூபம்
வேண்டுபலஞ் சகலமுமே யான்ம ரூபம்
பேதங்கள் சகலமுமே யான்ம ரூபம்
பிரிவுற்ற சகலமுமே யான்ம ரூபம். (26)

ஆகங்கள் சகலமுமே யான்ம ரூப
மாருயிர்கள் சகலமுமே யான்ம ரூபம்
போகங்கள் சகலமுமே யான்ம ரூபம்
போக்கியமாஞ் சகலமுமே யான்ம ரூப
மோகங்கள் சகலமுமே யான்ம ரூப
மூதுணர்வு சகலமுமே யான்ம ரூபம்
யோகங்கள் சகலமுமே யான்ம ரூபம்
யோக்கியமாஞ் சகலமுமே யான்ம ரூபம். (27)

தாகங்கள் சகலமுமே யான்ம ரூபந்
தகுகிரியை சகலமுமே யான்ம ரூப
மூகங்கள் சகலமுமே யான்ம ரூப
மூறுபேறு சகலமுமே யான்ம ரூபம்
போகின்ற சகலமுமே யான்ம ரூபம்
பொருந்துவதாஞ் சகலமுமே யான்ம ரூப
மாகின்ற சகலமுமே யான்ம ரூப
மறிவுற்ற சகலமுமே யான்ம ரூபம். (28)

பாவுசனஞ் சகலமுமே யான்ம ரூபம்
பதிபாரி சகலமுமே யான்ம ரூபங்
குருசீடர் சகலமுமே யான்ம ரூபங்
கூறுபொருள் சகலமுமே யான்ம ரூபந்
தெரிவித்தை சகலமுமே யான்ம ரூபந்
தீர்த்தங்கள் சகலமுமே யான்ம ரூபம்
வருபதிகள் சகலமுமே யான்ம ரூபம்
வானவர்கள் சகலமுமே யான்ம ரூபம். (29)

பனுவுதிசை சகலமுமே யான்ம ரூபம்
பயில்தேசஞ் சகலமுமே யான்ம ரூப
மனியமகஞ் சகலமுமே யான்ம ரூப
மாங்காரஞ் சகலமுமே யான்ம ரூப
மனமுதலாஞ் சகலமுமே யான்ம ரூப
மால்வெகுளி சகலமுமே யான்ம ரூப
நினைவிலுறுஞ் சகலமுமே யான்ம ரூப
நிகழ்கின்ற சகலமுமே யான்ம ரூபம். (30)

தருமமுதற் செய்வவெலா மான்ம ரூபந்
தைரியமா யிருப்பவெலா மான்ம ரூப
மிருமையெனக் காண்பவெலா மான்ம ரூப
மின்னல்செயும் பீதியெலா மான்ம ரூப
மொருமையெனக் காண்பவெலா மான்ம ரூப
மோய்வுதரு மபயமெலா மான்ம ரூபம்
பிரிவுசெயுஞ் சிந்தை யெலா மான்ம ரூபம்
பிரிவற்ற சிந்தையெலா மான்ம ரூபம். (31)

பேதமுறு மித்தையெலா மான்ம ரூபம்
பிரிவற்ற சத்தையெலா மான்ம ரூபங்
கோதறவே காண்பவெலா மான்ம ரூபங்
குய்யமெனக் காண்பவெலா மான்ம ரூபம்
போதமெனக் காண்பவெலா மான்ம ரூபம்
புனிதமதாய்க் காண்பவெலா மான்ம ரூப
ஞாதருளா ஞதியெலா மான்ம ரூப
ஞாலபா சீவரெலா மான்ம ரூபம் (32)

தங்காத பூரணசற் கனமா மான்மா
தளர்வற்ற வாநந்த கனமா மான்மா
மங்காத பிரஞ்ஞான கனமா மான்மா
மாறுபடா வகண்டைக ரசமா மான்மா
விங்கான்மா வங்கான்மா வெங்கு மான்மா
வேகபரி பூரணமா யிருக்கு மான்மா
துங்கான்மா வலதயலோ ரணுவு மில்லை
துஷிதமெனக் காண்பவெலாம் பூர ணான்மா. (33)

சருவபரி பூரணமா மான்மா வன்றிச்
சகசீவன் முதலியவை யணுவு மில்லை
பரவுசக சீவபர மனைத்து மென்றும்
பராற்பரமாம் பரமான்ம சொரூப மேயாந்
திரமதுவா யுரைசெய்த விவ்வர்த் தத்திற்
றினையளவு மையமிலை சத்தி யந்தா
னுரைதருமிவ் வர்த்தத்தை யொருகா லேனு
மூடமாகக் கேட்டுணர்வோன் பிரம மாவன். (34)

அருள்வடிவா முமாபதியா யநந்த சத்தி
யமர்ந்தவனுய்ச் சுவாதீன மாயை யுற்ற
பரசிவனே விசித்திரகா ரியமா மிந்தப்
பார்முதலாஞ் சகத்துக்கோ ரேது வாகுங்
கருதியிடிற் காரியமாஞ் சகத்த னைத்துங்
காரணமாம் பரமசிவ சொரூப மென்றே
யரியரிபு மாமுனிவ னிதாக னுக்கங்
ககண்டான்ம மகிமைதனை யருள்செய் தானால். (35)

வேறு.

பிரிவுபெற்றுப் பிறங்கியசீவரும் பேணும்பேது கடந்தருளீசனும்
விரிவுபெற்று விதம்விதமாகவே விளங்கலுற்றவிசித்திரஞாலமுஞ்[ல்
சருவபூரணவான்மசொரூபமேசற்றும்வேறிலையென்றிங்குச்சாற்றுத
பரமவாகத்தத் தாண்டவமாடிடும் பரசிவன்பரி பூரணரூபமே. (36)

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 10-க்கு திருவிருத்தம்-438.

பதினொன்றாவது

சருவமும் பிரமமென்றும் அதுவே நானென்றும் போத முரைக்கும் அத்தியாயம்.

துகளணுவுந் தொடராத நிதாக கேளாய்
துவிதமெனுஞ் சொலவுமொரு காலு மில்லை
சகலமுமே சந்ததமும் பிரம ரூபஞ்
சத்தியமே சத்தியமே சங்கை யில்லை
யகிலபரி பூரணமாஞ் சிவன்றன் ஞான
யறைகின்றே னையமில்லை யைய மில்லை
சுகசனமாம் பரமசிவ னருளிச் செய்த
சுருதிமுடிப் பொருளினது சுருக்க மீதே. (1)

சத்தியமாய்ச் சின்மயமாய்ச் சாந்த மாகிச்
சதாநந்த கனமாகிச் சூக்க மாகி
நித்தியமாய் நிர்க்குணமாய் நிமல மாகி
நிரஞ்சனமாய் நிராகார சொரூப மாகி
யத்துவித பூரணமா யசல மாகி
யான்மாவுக் கபின்னமதாம் பிரம மன்றி
யித்தனையாஞ் சீவசக மாதி யில்லை
யிவையாவு மெப்போதும் பிரம ரூபம். (2)

சங்கற்ப விகற்பமெலாம் பிரம ரூபஞ்
சாகின்ற வுலகமெலாம் பிரம ரூப
மங்குற்ற தேகமெலாம் பிரம ரூப
மவைமருவும் பொறிகளெலாம் பிரம ரூப
மிங்குற்ற சீவரெலாம் பிரம ரூப
மிவர்துய்க்கும் போகமெலாம் பிரம ரூபம்
பங்கற்ற பிரமமலா தணுவு மில்லை
பார்க்கின்ற பார்வையெலாம் பிரம ரூபம். (3)

வித்காரமாம் விடயமெலாம் பிரம ரூபம்
விதம்விதமாய்க் காண்பவெலாம் பிரம ரூப
நித்தியமாய்க் காண்பதுவும் பிரம ரூப
நிலையிலதாய்க் காண்பதுவும் பிரம ரூப
மத்திரமா மஞ்ஞானம் பிரம ரூப
மதன்செயலா மகிலமுமே பிரம ரூபஞ்
சத்தியமாம் பிரமமலா தணுவு மில்லை
சந்ததமுஞ் சகலமுமே பிரம ரூபம். (4)

வானமுத லம்பூதம் பிரம ரூபம்
வந்தபல பௌதிகமும் பிரம ரூப
மூனமுறு முடன்மூன்றும் பிரம ரூப
மொருமூன்றெ னவத்தைகளும் பிரம ரூப
மானவபி மானிகளும் பிரம ரூப
மறிவுற்ற தகிலமுமே பிரம ரூப
ஞானகனப் பிரமமலா தணுவு மில்லை
ஞாலமுத லெப்பொருளும் பிரம ரூபம். (5)

மாயையெனத் தோற்றுவதும் பிரம ரூப
மனமுதலாய்த் தோற்றுவதும் பிரம ரூபங்
காயமெனத் தோற்றுவதும் பிரம ரூபங்
காண்பனவாய்த் தோற்றுவதும் பிரம ரூப
நேயமெனத் தோற்றுவதும் பிரம ரூப
நிலைமையதாய்த் தோற்றுவதும் பிரம ரூபந்
தூயபரப் பிரமமலா தணுவு மில்லை
தோற்றியிடுந் தோற்றமெலாம் பிரம ரூபம். (6)

குறைவெனவே தோற்றுவதும் பிரம ரூபங்
குணகுணமாய்த் தோற்றுவதும் பிரம ரூப
நிறைவெனவே தோற்றுவதும் பிரம ரூப
நீனாயுய்த் தோற்றுவதும் பிரம ரூப
மிறைவனெனத் தோற்றுவதும் பிரம ரூப
மிவன்செயலாய்த் தோற்றுவதும் பிரம ரூப
மறிவுருவாம் பிரமமலா தணுவு மில்லை
யகிலவிதத் தோற்றமுமே பிரம ரூபம். (7)

அகிலசுரா சுரர்களுமே பிரம ரூப
மயன்முதலும் மூர்த்திகளும் பிரம ரூபம்
புகலுமவர் செய்கையுமே பிரம ரூபம்
பூரணமா மாதேவன் பிரம ரூபந்
திகழுமுமா தேவியுமே பிரம ரூபந்
திகழ்கந்த விநாயகரும் பிரம ரூப
நிகழுபரப் பிரமமலா கணுவு மில்லை
நினைக்கின்ற நினைவெவையும் பிரம ரூபம். (8)

பரமசிவ கணங்களெலாம் பிரம ரூபம்
பாவுமகா முனிவரெலாம் பிரம ரூபஞ்
சுருதிமுடி சுருதியெலாம் பிரம ரூபஞ்
சொல்லியிடு மிருதியெலாம் பிரம ரூப
மருவுபுரா ணங்களெலாம் பிரம ரூப
மற்றுமுள நூல்களெலாம் பிரம ரூபம்
பிரிவில்பரப் பிரமமலா கணுவு மில்லை
பின்னமெனக் காண்பவெலாம் பிரம ரூபம். (9)

அமலமதாம் பிரணவமும் பிரம ரூப
மநந்தமகா வாக்கியமும் பிரம ரூப
நிமலமதாஞ் சிரவணமும் பிரம ரூப
நீதியுறு மனனமுமே பிரம ரூபம்
விமலமதாந் நியானமுமே பிரம ரூபம்
வேறுபடா ஞானமுமே பிரம ரூபஞ்
சமமதுவாம் பிரமமலா கணுவு மில்லை
சந்ததமுஞ் சகலமுமே பிரம ரூபம். (10)

பேசியநூல் விடயமுமே பிரம ரூபம்
பெறுகின்ற நூற்பயனும் பிரம ரூப
மாசறுநூற் சம்பந்தம் பிரம ரூப
மவையினதி காரியுமே பிரம ரூப
மாசிலதாஞ் சாதனமும் பிரம ரூப
மருவியிடுஞ் சாத்தியமும் பிரம ரூபஞ்
சாசுவதப் பிரமமலா கணுவு மில்லை
சந்ததமுஞ் சகலமுமே பிரம ரூபம். (11)

ஏதமிலாப் பத்தியுமே பிரம ரூப
மீசனது பாவனையும் பிரம ரூபம்
ஓதமுதற் காலமுமே பிரம ரூபம்
பொருந்துபல தேசமுமே பிரம ரூபம்
பேதமுறு வத்துவுமே பிரம ரூபம்
பேசுபல பேதமுமே பிரம ரூபம்
போதகனப் பிரமமலா தணுவு மில்லை
புலமுறவே காண்பவெலாம் பிரம ரூபம். (12)

ஆனபல சேத்திரமும் பிரம ரூப
மங்குசெயு மறம்பாவம் பிரம ரூப
மேனியுள கருமமெலாம் பிரம ரூப
மிகழ்நரக சுவர்க்கமெலாம் பிரம ரூப
ஞானனிய ரெனுமயலும் பிரம ரூப
நரகபயஞ் சுவர்க்கசுகம் பிரம ரூப
ஞானகனப் பிரமமலா தணுவு மில்லை
ஞாதருஞா ஞேயெலாம் பிரம ரூபம். (13)

துக்கசுகந் துதியிகழ்வும் பிரம ரூபந்
தொடர்சனன மரணமுமே பிரம ரூபந்
தக்கசெய மபசெயமும் பிரம ரூபந்
தயங்குசடா சடங்களுமே பிரம ரூப
மிக்கசர மசாமுமே பிரம ரூப
மிருபந்த முத்திகளும் பிரம ரூப
மக்காமாம் பிரமமலா தணுவு மில்லை
யன்னியமாய்க் காண்பவெலாம் பிரம ரூபம். (14)

சித்தமுத லெப்பொருளும் பிரம ரூபஞ்
செறிபஞ்ச கோசமுமே பிரம ரூபம்
வித்தாரமாம் விசுவமெலாம் பிரம ரூபம்
வியட்டியுடன் சமட்டியெலாம் பிரம ரூப
நித்தியமாம் பிரமமலா தணுவுமில்லை
நிகழ்கின்ற நிகழ்வெவையும் பிரம ரூபஞ்
சத்தியமாய் நவில்கின்றேன் சிவன்றன் ஞேன
சங்கையிலை சங்கையிலை சத்தி யந்தான். (15)

ஆதியுட னந்தமுமே பிரம ரூப
மடிமுடிவு நடுவெவையும் பிரம ரூபம்
பூதமொடு பஞ்சியமும் பிரம ரூபம்
பொருந்திநிகழ் பொருளெவையும் பிரம ரூபம்
பேதமிலாப் பிரமமலா தணுவு மில்லை
பிரிவெனவே காண்பவெலாம் பிரம ரூப
மாதியிலாப் பரமசிவன் பதந்தன் ஞாண
யறைகின்றே னையமிலை சத்தி யந்தான். (16)

திருவியமாய்க் காண்பதுவும் பிரம ரூபந்
திருக்காகக் காண்பதுவும் பிரம ரூபம்
பிரிவெனவே காண்பதுவும் பிரம ரூபம்
பேதமறக் காண்பதுவும் பிரம ரூபம்
புராணமதாம் பிரமமலா தணுவு மில்லை
புலனுறவே காண்பவெலாம் பிரம ரூபஞ்
சருவபரி பூரணமாஞ் சிவன்றன் ஞாண
சாற்றியதிற் சங்கையிலை சத்தி யந்தான். (17)

துகளுற்ற வஞ்ஞானம் பிரம ரூபந்
துவிதமெனு மதன்செயலும் பிரம ரூப
மகிழ்வுற்ற விஞ்ஞானம் பிரம ரூப
மாறுபடாச் சகசநிலை பிரம ரூபந்
திகழ்வுற்ற பிரமமலா தணுவு மில்லை
தெரிகின்ற தெரிவெல்லாம் பிரம ரூப
நிகரற்ற பரம சிவன் பதந்தன் ஞாண
நிகழ்த்தியதி லையமிலை சத்தி யந்தான். (18)

விரிவான சகமெவையும் பிரம ரூபம்
விவகாரம் யாவையுமே பிரம ரூபம்
பரமார்த்தம் யாவையுமே பிரம ரூபம்
பரசீவர் யாவையுமே பிரம ரூபம்
பிரியாத பிரமமலா தணுவு மில்லை
பின்னமெனக் காண்பவெலாம் பிரம ரூபங்
குருவான பரமசிவன் பதந்தன் ஞாண
கூறியதி லையமிலை சத்தி யந்தான். (19)

சீவபர சகத்வெனவே காண்ப வெல்லாஞ்
சின்மயமாம் பிரமத்நிற் கற்பி தந்தா
னுவதனு லாரோப சீவ ஞநி
யநிட்டான மானபரப் பிரம மென்றுங்
கேவலமா மப்பிரம நானே யென்றுங்
கிலேசமற வறிந்ததனுன் முத்த னுவாய்
பாவனமாம் பரமசிவன் பதந்தன் னுணை
பகர்ந்தநிலோ சையமில சத்தி யந்தான். (20)

சகலவநிட் டானபரப் பிரம மேநான்
சருவான்ம சொரூபபரப் பிரம மேநான்
றிகழ்வுமிகுஞ் சின்மயமாம் பிரம மேநான்
றிடசத்தா மாத்நிரமாம் பிரம மேநான்
னிகரில்சுக கனமான பிரம மேநா
னிருமலநிட் களமான பிரம மேநா
னகிலபரி பூரணமாம் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (21)

கித்தியநிர்க் குணமான பிரம மேநா
னிரந்தரமாய் நிறைவுற்ற பிரம மேநான்
சத்தியசிற் சுககனமாம் பிரம மேநான்
சந்ததமுஞ் சலனமிலாப் பிரம மேநான்
மெத்தவுமே ரகசியமாம் பிரம மேநான்
மிகவுமுப சாந்தபரப் பிரம மேநா
னத்தமிலா வகண்டபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (22)

சுனுதனமாம் பரப்பிரம சொரூப மேநான்
சாசுவத பரப்பிரம சொரூப மேநான்
விநாசமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
விபுவான பரப்பிரம சொரூப மேநான்
மனுதியிலாப் பரப்பிரம சொரூப மேநான்
மகத்தான பரப்பிரம சொரூப மேநா
னனுமயமாம் பரப்பிரம சொரூப நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (23)

பங்கமிலா துள்ளபரப் பிரம மேநான்
பாஞ்சோதி யானபரப் பிரம மேநான்
கங்குல்பக லெவையுமிலாப் பிரம மேநான்
காரியகா ரணமுமிலாப் பிரம மேநா
னெங்குமுள வேகபரப் பிரம மேநா
னிருமையிலா வகண்டபரப் பிரம மேநா
னங்கமிலா வமலபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (24)

குருவுக்குங் குருவான பிரம மேநான்
குணாதீத மானபரப் பிரம மேநான்
றெரிவுக்குந் தெரிவான பிரம மேநான்
றிருசியமோ ரணுவுமிலாப் பிரம மேநான்
சுருதிக்கு மெட்டாத பிரம மேநான்
சுத்தசிதம் பரமான பிரம மேநா
னருளுக்கு மருளான பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (25)

காரணமு மாகாத பிரம மேநான்
கற்பனையு மருவாத பிரம மேநா
னேரணுவு மாகாத பிரம மேநான்
னென்றுலு மூணரவொணாப் பிரம மேநான்
பூரணசின் மாத்திரமாம் பிரம மேநான்
புராதனசன் மாத்திரமாம் பிரம மேநா
னாணமு மறியாத பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (26)

நிரதிசயா நந்தகனப் பிரம மேநா
னித்தநிரஞ் சனமான பிரம மேநான்
மருளணுவு மருவாத பிரம மேநான்
மகாவாக்கின் பொருளான பிரம மேநான்
பரவுபாற் பரமான பிரம மேநான்
பரசிவ பேதமிலாப் பிரம மேநா
னருவமதா மகண்டபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (27)

கித்தியமங் களமான பிரம மேநா
னிகிலமுமே நிகழ்த்தியிடும் பிரம மேநான்
சத்தியஞா னநந்தப் பிரம மேநான்
சகசீவ பரங்களிலாப் பிரம மேநான்
வித்தாரமாய் வியாபிக்கும் பிரம மேநான்
வேதாந்த வேத்தியமாம் பிரம மேநா
னத்துவிதா கண்டபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (28)

சிற்பதமாம் பரப்பிரம சொரூப மேநான்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
கற்பனையில் பரப்பிரம சொரூப மேநான்
களங்கமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
றற்பதமாம் பரப்பிரம சொரூப மேநான்
றடையற்ற பரப்பிரம சொரூப மேநா
னற்புதமாம் பரப்பிரம சொரூப நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (29)

கித்தியமுஞ் சுத்தபரப் பிரம மேநா
னித்தியமும் புத்தபரப் பிரம மேநா
னித்தியமு முத்தபரப் பிரம மேநா
னித்தியமுந் திருத்தபரப் பிரம மேநா
னித்தியவா நந்தபரப் பிரம மேநா
னித்தநிரா வரணபரப் பிரம மேநா
னத்துவிதா கண்டபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (30)

சதாநந்த மயமான பிரம மேநான்
சதாநந்த மயமான பிரம மேநான்
சிதாநந்த மயமான பிரம மேநான்
சிதாநந்த மயமான பிரம மேநா
னுதாரபரி பூரணமாம் பிரம மேநா
னுதாரபரி பூரணமாம் பிரம மேநா
னதானசிதா காயபரப் பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (31)

அகமகமென் றிலங்கியிடும் பிரம மேகா
ஞன்மாவுக் கபின்னமதாம் பிரம மேகான்
சகலமுமாய்த் தோற்றியிடும் பிரம மேகான்
சற்றுமெது மாகாத பிரம மேகா
னிகிலபரி பூரணமாம் பிரம மேகா
னிரந்தரமாய் நிலைபெற்ற பிரம மேகா
னகிலவிலட் சணமான பிரம நானென்
றநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (32)

அகண்டபரப் பிரமமலா தணுவு மில்லை
யணுவுமில்லை யணுவுமில்லை யணுவு மில்லை
யகண்டபரப் பிரமமதே யனைத்து மாகு
மதுவேநீ யதுவேநா னதுவே யாரு
மகண்டபரப் பிரமமதாஞ் சிவன்றன் ஞான
யறைந்திலோ மையமில்லை யைய மில்லை
யகண்டபரப் பிரமமது நானே யென்றிங்
கநவரத மயலறவே யறிவாய் மைந்தா. (33)

என்னிடையே கற்பிதமாய்த் தோன்று நின்ற
விசசக சீவரெலா மென்னை யன்றிப்
பின்னமதா யொருகாலு மிலவே யில்லை
பிறங்கியவச் சீவேச சகத்த னைத்து
மன்னுபரப் பிரமமதா நானே யென்று
மயக்கமற வறிந்தகனன் முத்த னுவாய்
சொன்னதிலோ மையமில்லை சத்தி யந்தான்
சுதந்தரமாஞ் சிவஞான யுண்மை சொன்னேன். (34)

அறிவினிடைக் கற்பிதமாய்க் காண்ப வெல்லா
மதிட்டான வறிவன்றி யனிய மாகா
தறிவுருவே பரப்பிரம மறிவே நீயு
மாதலினு லறிவான நின்னி டத்தி
லறிவுறவே காண்பவெலா மறிவா நீயே
யவ்வண்ணந் திடமாக வறிந்த வற்று
லறிவுருவாம் பரப்பிரம வடிவே யாகி
யனுதினபவ பாசத்தான் முத்த னுவாய். (35)

அப்பினிடைக் காண்கின்ற வலையே யாதி
யகிலமுமவ் வப்பாகு நீதியே போற்
சிற்பாமா நின்னிடையிற் காணு நின்ற
செகசீவ பரங்களெலாஞ் சித்தா நீயே
செப்பியவிவ் வுகத்தான் மறைமா னத்தாற்
சிவாஞ்ஞையினு லெல்லாமு நானே யென்று
மற்பமிலா நான்முனே பிரம மென்று
மறிந்தகனுற் பவபாச முத்த னுவாய். (36)

சித்தினிடைக் காண்கின்ற செகசீ வாதி
சித்துருவாம் பிரமத்துக் கயலே யாகா
கத்திறமாம் பிரமத்துக் கயனு னுகே
னவ்விதமா மெனக்கயலும் பிரம மாகா
தெத்திறமாந் தோற்றமுமே பிரம மென்று
மிருமையுமு வப்பிரம நானே யென்று
மத்துவிதா கண்டபரப் போதந் தன்னே
யடைந்தகனுற் பவபாச முத்த னுவாய். (37)

சகலமுமே சற்கனமாம் பிரம ரூபஞ்
சகலமுமே சிற்கனமாம் பிரம ரூப
மகிலமுமே சுகனமாம் பிரம ரூப
மகிலமுமே யகண்டபரப் பிரம ரூபம்
புகலியவவ் வகண்டபரப் பிரம நானே
பூரணமா நானந்தப் பிரமந் தானென்
றிகழ்வறவே யகண்டபர போதந் தன்னே
யிசைந்தகனுற் பவபாச முத்த னுவாய். (38)

என்னையலா லோரணுவு மயலே யில்லை
யென்னையலா லோரணுவு மயலே யில்லை
பின்னமிலா நானென்றும் பிரமந் தானே
பின்னமிலா நானென்றும் பிரமந் தானே
யன்னியமி லகண்டபரப் பிரம நானே
யன்னியமி லகண்டபரப் பிரம நானென்
றின்னவிதந் திடமான வகண்ட போத
மிசைந்தகனுற் பவபாச முத்த னுவாய். (39)

சந்தமுஞ் சகலமுமே பிரம மென்றுஞ்
சலனமிலா வப்பிரம நானே யென்று
மிந்தவித முணரும்வகை யெனவே யீச
னெனக்கருளா லருளியவிவ் வர்த்தந் தன்னைப்
பந்தமுறு முமுட்சுவெலா நன்று யோர்ந்து
பவநீங்கிப் பரமுத்தி யடையும் வண்ணம்
மைந்தனினக் குரைசெய்தே னிதனை யன்பான்
மயக்கமறக் கேட்டுணர்வோன் பரமே யாவன். (40)

பன்னியவிவ் வர்த்தத்தைப் பகர்ந்த வண்ணம்
பழுதறவே பார்த்துணர வசத்த னேனு
மன்னியநல் லன்புடனே யிதனை நிக்க
மாறுது படித்தாலும் பாவித் தாலு
மன்னியருக் குரைத்தாலு மதனை லன்னே
னகத்திலுள வழுக்கற்றுச் சுத்தி பெற்றுப்
பின்னமிலா வகண்டபர போத முற்றுப்
பேதமிலாப் பரப்பிரம மாவ னன்றே. (41)

சுத்தியசிற் சுகபூன்ற பரசி வத்தைச்
சலியாது நிரந்தரமா யாரா நிப்போ
னித்தியநிட் களமான வச்சி வத்தை
நிச்சலமா யறிந்துமனக் கிரந்தி தீர்ந்து
சுத்தபர சிவத்தினிடைக் கலந்து மோட்ச
சுகமுற்றிங் கச்சிவமே யாவ னன்றிப்
பத்தியிலா வெறுமூட ரொருகா லத்தும்
பரமான மோட்சசுகம் பற்று ரன்றே. (42)

ஆதலினுன் முமுட்சுவெலாம் பரசி வத்தை
யநவரத மடைவார்க வாரா நித்தவ்
வேதமிலாப் பரமசிவன் கருணை யாலே
யெல்லாமும் பரப்பிரம மதுவே நாமென்
றேதியவிஞ் ஞானத்தால் முத்தி தன்னை
யுறவேண்டு மென்றுரிபு நிதாக துக்கங்
காதியிலாப் பவபாச மனைத்துந் தீர
வகண்டபர போதத்தை யருளிச் செய்தான். (43)

வேறு.

திருசியப்பொரு ளாகத் தெரிந்திடுந்
தெரிவெலாந்திருக் காகிய சிற்கனப்
பிரமமல்லது வேறியா யப்பரப்
பிரமநானெனும் போத மூரைத்திட
வுரைமனங்கட் ககோசர மாகினு
மொன்றினேர்பவ துன்பம் விடுக்கவே
யரியவாநந்தத் தாண்டவ மாடுநம்
மாண்டவன்ற னகண்ட சொரூபமே. (44)

பதின்னென்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம், 11-க்கு திருவிருத்தம்-482.

பன்னிரண்டாவது
சருவமும் பிரமமாத்திர மென்றுரைக்கும்
அத்தியாயம்.

மிகவுமகா ரகசியமாய் ரகசி யத்து
மெத்தவுமே ரகசியமாய் மேவு தற்கு
வெகுவரிதா யுள்ளபொரு ணிர்ண யத்தை
வேதாந்த வேத்தியனும் பரேசன் முன்ன
நிகழ்வுறவே யருள்செய்த வண்ண மீண்டு
நிகிலர்க்கு மிதமாக நினக்குச் சொல்வேன்
றகுமனநி னெருமையுட னிவ்வர்த் தத்தைத்
தப்பாது கேட்டுணர்நி தகைமை மைந்தா. (1)

அகிலமுமே யநவரதம் பிரம மாத்ர
மஞ்ஞான மதன்செயலும் பிரம மாத்ரஞ்
சகலசடா சடங்களுமே பிரம மாத்ரஞ்
சதசத்தாய்க் காண்பவெலாம் பிரம மாத்ரம்
வெகுவிதமாம் பூதங்கள் பிரம மாத்ரம்
விதம்விதமாம் புவனங்கள் பிரம மாத்ர
மிகழ்வுமிகுஞ் சரீரமெலாம் பிரம மாத்ர
மிவைமருவு முயிர்களெலாம் பிரம மாத்ரம். (2)

பனுவுமகா மந்திரமும் பிரம மாத்ரம்
பத்தியுடன் கேட்பதுவும் பிரம மாத்ரம்
வினவுமகா வாக்கியமும் பிரம மாத்ரம்
வேத்தியமா மதன்பொருளும் பிரம மாத்ர
மனியமிலாப் பாவுணர்வும் பிரம மாத்ர
மகண்டமதா முத்தியுமே பிரம மாத்ர
நனிமருவும் பந்தமுமே பிரம மாத்ர
நாநாவாய்க் காண்பவெலாம் பிரம மாத்ரம். (3)

பலவிதமாங் கிரியைகளும் பிரம மாத்ரம்
பற்றியிடும் பலன்களுமே பிரம மாத்ர
மிலகுகுணு குணங்களுமே பிரம மாத்ர
மிகழ்வுதுதி யாவையுமே பிரம மாத்ர
நிலைமருவாக் காலமெலாம் பிரம மாத்ர
நிரைநிரையாந் தேசமெலாம் பிரம மாத்ரஞ்
சலனமுறும் வத்துவெலாம் பிரம மாத்ரஞ்
சந்ததமுஞ் சகலமுமே பிரம மாத்ரம். (4)

ஓதவொணு வவித்தையுமே பிரம் மாத்ர
மூறுமந்தக் காரணமுமே பிரம மாத்ரந்
தீதுசெயு மகங்காரம் பிரம மாத்ரந்
தியங்குமனம் புந்தியுமே பிரம மாத்ரஞ்
சாதமுறு சித்தமுமே பிரம மாத்ரஞ்
சஞ்சலமாம் பொறிகளுமே பிரம மாத்ரம்
வீதலுறுந் தேகமுமே பிரம மாத்ரம்
விசித்ரமாம் விடயமெலாம் பிரம மாத்ரம். (5)

தூலமுடன் சாக்ரமும் பிரம மாத்ரஞ்
சூக்கமுடன் சொப்பனமும் பிரம மாத்ர
மூலமுடன் சுழுத்தியுமே பிரம மாத்ர
மூன்றினபி மானிகளும் பிரம மாத்ரங்
கோலமுறும் வியட்டியுமே பிரம மாத்ரங்
கூட்டமுறுஞ் சமட்டியுமே பிரம மாத்ரங்
காலமுத லெப்பொருளும் பிரம மாத்ரங்
காண்கின்ற காட்சியெலாம் பிரம மாத்ரம். (6)

தொந்தமறு துரியமுமே பிரம மாத்ரந்
துரியவபி மானியுமே பிரம மாத்ர
மைந்துவித கோசமுமே பிரம மாத்ர
மவையினபி மானிகளும் பிரம மாத்ரம்
வந்தபல பௌதிகமும் பிரம மாத்ரம்
வான்முதலும் பூதமே பிரம மாத்ரஞ்
சிந்தையுறு மெப்பொருளும் பிரம மாத்ரஞ்
செறிந்தசரா சரங்களெலாம் பிரம மாத்ரம். (7)

இவனவனு மிவளவளும் பிரம மாத்ர
மிதுவதுவு மற்றெதுவும் பிரம மாத்ர
நவில்புருடர் பெண்களுமே பிரம மாத்ர
நடுவான நபுஞ்சகரும் பிரம மாத்ரம்
விவிதசக சீவருமே பிரம மாத்ரம்
விபுவான வீசனுமே பிரம மாத்ர
மெவையெவைதா னெவ்விதமா யெங்கே யெங்கே
யிலங்கினுமே யவையாவும் பிரம மாத்ரம். (8)

இருப்பதெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
மில்லையெனத் தோற்றுவதும் பிரம மாத்ரந்
திருக்கதெனத் தோற்றுவதும் பிரம மாத்ரந்
திருகியமாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரந்
தரித்ததெனத் தோற்றுவதும் பிரம மாத்ரந்
தங்கியதாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரம்
விரித்ததெனத் தோற்றுவதும் பிரம மாத்ரம்.
விதம்விதமாந் தோற்றமெலாம் பிரம மாத்ரம். (9)

விந்தரமாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரம்
விரிவிலதாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரஞ்
சித்திரமாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரஞ்
சிறப்பிலதாய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
மத்திரமாய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
மழுத்தமுறத் தோற்றுவதும் பிரம மாத்ர
மெத்திறமாய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
மிதரமெனுந் தோற்றமெலாம் பிரம மாத்ரம். (10)

ஏகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
மிருமையெனத் தோற்றுவ தும் பிரம மாத்ரம்
பாகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ரம்
பங்கறவே தோற்றுவதும் பிரம மாத்ர
நாகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
நரகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
மோகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
மூதுணர்வாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரம். (11)

ஆகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
மறிபவனுய்த் தோற்றுவ தும் பிரம மாத்ரங்
காகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ரங்
கண்பொருளாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரஞ்
சோகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ரஞ்
சுகமதுவாய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
மூகமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
முணர்பொருளாய்த் தோற்றுவதும் பிரம மாத்ரம். (12)

நீனுனுய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
நிகிலமெனத் தோற்றுவதும் பிரம மாத்ர
நாநாவாய்த் தோற்றுவதும் பிரம மாத்ர
நமதெனவே தோற்றுவதும் பிரம மாத்ர
மானுவ மானமுமே பிரம மாத்ர
மகிழுமிலா பாலாபம் பிரம மாத்ரங்
காணுநி தருமமுமே பிரம மாத்ரங்
களர்வுத்ரும் பாவமுமே பிரம மாத்ரம். (13)

தங்குற்ற கிரிநதிகள் பிரம மாத்ரங்
தலங்களொடு தீர்த்தங்கள் பிரம மாத்ர
மங்குற்ற தேவதைகள் பிரம மாத்ர
மத்தேவர் சேவைகளும் பிரம மாத்ரம்
பொங்குற்ற வாரிதிகள் பிரம மாத்ரம்
பொருந்துபல தீவுகளும் பிரம மாத்ரம்
பங்குற்ற வனங்களெலாம் பிரம மாத்ரம்
பறவைமுகற் செந்துகளும் பிரம மாத்ரம். (14)

பிரமன்முதற் றேவர்களும் பிரம மாத்ரம்
பிரமாண்ட கோடிகளும் பிரம மாத்ர
மரன்முதலோ ருலகமெலாம் பிரம மாத்ர
மங்குள்ள பேதமெலாம் பிரம மாத்ரம்
பரமிகமா யுணர்வதெலாம் பிரம மாத்ரம்
பார்ப்பதுவு நினைப்பதுவும் பிரம மாத்ரஞ்
சருவஷித வுபாதிகளும் பிரம மாத்ரஞ்
சகசீவ பரங்களெலாம் பிரம மாத்ரம். (15)

சத்தியசிற் சுகனமாம் பிரம ரூபஞ்
சகலபரி பூரணமாம் பிரம ரூப
நித்தநிரஞ் சனமாகும் பிரம ரூப
நிட்களநின் மலமாகும் பிரம ரூபஞ்
சுத்தநிரா காரமதாம் பிரம ரூபஞ்
சுயஞ்சோதி வடிவாகும் பிரம ரூப
மத்துவித வத்துவதாம் பிரம ரூப
மகண்டபரி பூரணமாம் பிரம ரூபம். (16)

பராற்பரமாம் பொருளாகும் பிரம ரூபம்
பரமபதப் பொருளாகும் பிரம ரூப
நிராவரணப் பொருளாகும் பிரம ரூப
நிட்கிரியப் பொருளாகும் பிரம ரூபஞ்
சாதியிலாப் பொருளாகும் பிரம ரூபஞ்
சலனமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
புராதனமாம் பொருளாகும் பிரம ரூபம்
பூரணமாம் பொருளாகும் பிரம ரூபம். (17)

மனுதியிலாப் பொருளாகும் பிரம ரூப
மகத்தான பொருளாகும் பிரம ரூபஞ்
சனுதனமாம் பொருளாகும் பிரம ரூபஞ்
சாசுவதப் பொருளாகும் பிரம ரூபம்
விநாசமிலாச் சத்தாகும் பிரம ரூபம்
விளங்கியிடுஞ் சித்தாகும் பிரம ரூப
மனுதிசுக கனமாகும் பிரம ரூப
மகண்டைக ரசமாகும் பிரம ரூபம். (18)

சற்போத சுககனமாம் பிரம ரூபஞ்
சாலவுப சாந்தமதாம் பிரம ரூபந்
தற்போத சூனியமாம் பிரம ரூபந்
தான்ரூ யிருப்பதுவாம் பிரம ரூபங்
கற்போல வசைவிலதாம் பிரம ரூபங்
களங்கமிலாக் கேவலமாம் பிரம ரூப
மெப்போது மொருவடிவாம் பிரம ரூப
மேகபரி பூரணமாம் பிரம ரூபம். (19)

ஞானகன வடிவாகும் பிரம ரூப
ஞாலமிலாப் பரமாகும் பிரம ரூப
மோனமுறு நிலையாகும் பிரம ரூப
முத்தருறும் பதமாகும் பிரம ரூப
மீனமிலாப் பொருளாகும் பிரம ரூப
மெவைக்கும்விலட் சணமாகும் பிரம ரூப
மானியிலாப் பொருளாகும் பிரம ரூப
மகண்டசிதா காயமதாம் பிரம ரூபம். (20)

அறிவுக்கு மறிவாகும் பிரம ரூப
மனத்துக்கு மப்பாலாம் பிரம ரூப
நிறைவுக்கு நிறைவாகும் பிரம ரூப
நிகிலத்து மேலாகும் பிரம ரூபங்
குறைவற்ற விபுவாகும் பிரம ரூபங்
குணங்களிலா நிர்க்குணமாம் பிரம ரூப
மறுவற்ற மகிழ்வாகும் பிரம ரூப
மனவாக்குக் கெட்டாதாம் பிரம ரூபம். (21)

சத்துக்குஞ் சத்தாகும் பிரம ரூபஞ்
சகலத்துஞ் சாரமதாம் பிரம ரூபஞ்
சித்துக்குஞ் சித்தாகும் பிரம ரூபஞ்
சின்னமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
வித்துக்கும் வித்தாகும் பிரம ரூபம்
வேதாந்த வேத்நியமாம் பிரம ரூப
மெத்துக்கும் வேரூகும் பிரம ரூப
மெங்குமுள பொருளாகும் பிரம ரூபம். (22)

கேவலமாம் பொருளாகும் பிரம ரூபங்
கிலேசமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
பாவனமாம் பொருளாகும் பிரம ரூபம்
பரமார்த்தப் பொருளாகும் பிரம ரூபங்
காவலிலாப் பொருளாகும் பிரம ரூபங்
கத்துவமாம் பொருளாகும் பிரம ரூப
மோவலிலாப் பொருளாகும் பிரம ரூப
மொன்றுமிலா வொருபொருளாம் பிரம ரூபம். (23)

சத்தியமாம் பொருளாகும் பிரம ரூபஞ்
சங்கமிலாப் பொருளாகும் பிரம ரூப
நித்தியமாம் பொருளாகும் பிரம ரூப
நீக்கமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
வித்தாரமாம் பொருளாகும் பிரம ரூபம்
விசேடமிலாப் பொருளாகும் பிரம ரூபஞ்
சுத்தமதாம் பொருளாகும் பிரம ரூபஞ்
சுதந்தரமாம் பொருளாகும் பிரம ரூபம். (24)

பிரமமதே பேசியிடுங் கற்ப தார்த்தம்
பிரமமதே பேசியிடுந் துவம்ப தார்த்தம்
பிரமமதே பேசியிடு மசிப தார்த்தம்
பிரமமதே யகண்டைக ரசப தார்த்தம்
பிரமமதே யகமென்னும் பதத்தி னர்த்தம்
பிரமமதே பிரமமெனும் பதத்தி னர்த்தம்
பிரமமதே யஸ்மியெனும் பதத்தி னர்த்தம்
பிரமமதே யகண்டைக ரசப தார்த்தம். (25)

பிரமமதே யழிவற்ற சற்ப தார்த்தம்
பிரமமதே மகிழ்வுற்ற சிற்ப தார்த்தம்
பிரமமதே பிரியமெனுஞ் சுகப தார்த்தம்
பிரமமதே யகண்டைக ரசப தார்த்தம்
பிரமமதே சகமென்னும் பதத்தி னர்த்தம்
பிரமமதே சிவனெனும் பதத்தி னர்த்தம்
பிரமமதே யீசனெனும் பதத்தி னர்த்தம்
பிரமமதே யகண்டைக ரசப தார்த்தம். (26)

.பிரமமதே மாயையெனக் காண்ப தாகும்
பிரமமதே யஷித்தையெனக் காண்ப தாகும்
.பிரமமதே சித்தமெனக் காண்ப தாகும்
பிரமமதே செகத்தெனவுங் காண்ப தாகும்
.பிரமமதே சீவனெனக் காண்ப தாகும்
பிரமமதே யீசனெனக் காண்ப தாகும்
.பிரமமதே குரவனெனக் காண்ப தாகும்
பிரமமதே சீடனெனக் காண்ப தாமே. (27)

.பிரமமதே யயனெனவுங் காண்ப தாகும்
பிரமமதே யரியெனவுங் காண்ப தாகும்
.பிரமமதே யரனெனவுங் காண்ப தாகும்
பிரமமதே யமரெனக் காண்ப தாகும்
.பிரமமதே சிருட்டியெனக் காண்ப தாகும்
பிரமமதே திதியெனவுங் காண்ப தாகும்
.பிரமமதே நாசமெனக் காண்ப தாகும்
பிரமமதே நிகிலமுமாய்க் காண்ப தாமே. (28)

.எங்கெங்கே யெவ்விதமாய்க் கண்ட போது
மிதமெனக் கண்டிடுமக் காட்சி யெல்லா
.மங்கங்கே யுள்ளவதிட் டான மான
வறிவுருவாம் பிரமமலா தனிய மாகா
.தெங்கெங்கே யலைமுதலாய்க் கண்ட போது
மிவையெல்லா மாழியலா தனிய மாமோ
.வங்கங்கே காண்கின்ற காட்சி யெல்லா
மப்படியே பிரமமலா தயலே யாகா. (29).

.அப்புருவாம் வாரிதியிற் ரோன்றி யாங்கே
யடங்கியிடு மனேகவித வலையு மந்த
.வப்புருவே யாவதலான் மத்தி யத்தி
லன்னியமா யாரேனுங் கண்ட துண்டோ
.சிற்பிரம வாரிதியிற் ரோன்றி யாங்கே
திதைகின்ற செகமுதலா மலையு மந்தச்
.சிற்பிரம மாவதலான் மத்தி யத்திற்
றிறிதுமய லாகாது சத்தி யந்தான். (30)

மண்ணினிடைக் காண்கின்ற விகார மெல்லா
மருவியவம் மண்ணேயா நீதி போலுங்
*தண்ணினிடைக் காண்கின்ற விகார மெல்லாந்
தங்கியவத் தண்ணேயா நீதி போலும்
விண்ணினிடைக் காண்கின்ற விகார மெல்லாம்
விரவியவவ் விண்ணேயா நீதி போலுங்
திண்ணியசிற் பிரமத்திற் காணு நின்ற
செகசீவ பாங்களெலாம் பிரம மேயாம். (31)

வெருளுடனே தருவினிடைக் கண்ட கள்ளன்
வெறிகான தருவேயா நீதி போலு
மருளுடனே சுத்நிகையிற் கண்ட வெள்ளி
மற்றந்தச் சுத்நிகையா நீதி போலு
மிருளுடனே யிரச்சுவினிற் கண்ட சர்ப்ப
மெப்போது மிரச்சுவதா நீதி போலும்
பிரமமதிற் காண்கின்ற சகசீ வாதி
பேதமெலா மெப்போதும் பிரம மேயாம். (32)

அன்னியமா மாரோப மனைத்து மெங்கு
மந்தந்த வதிட்டான மாவதே போற்
றுன்னுமதிட் டானபரப் பிரமத் தின்கட்
டோன்றியவா ரோபமதாஞ் சக சீவாதி
மன்னுமதிட் டானபரப் பிரமங் தானு
மறைமுடியின் சித்காந்த மனைத்து மீதே
யன்னசிவ னருளியசித் தாந்த மீதே
யறிஞருடை யநுபவசித் தாந்த மீதே. (33)

ஆதலினற் பிரமமலா தணுவு மில்லை
யகிலமுமே யெப்போதும் பிரம மாத்ரம்
பாதகமாம் வாதனையாற் சீவன் போலாய்ப்
பவக்கடலின் மூழ்குவதும் பிரம மாத்ரஞ்
சாதகமாம் வாதனையாற் சிரவ ணாதி
சாதனமே பழகுவதும் பிரம மாத்ரம்
பேதமிலா வாதனையாற் பிரம மாகிப்
பீதியற விருப்பதுவும் பிரம மாத்ரம். (34)

(*தண்ணென்பது நீர்.)

சித்தியதை மித்திகமாங் கருமந் தன்னை
நியமமுடன் செய்வதுவும் பிரம மாத்ர
மத்திரமாங் கருமத்தாற் சித்த சுத்தி
யடைவாக வடைவதுவும் பிரம மாத்ரஞ்
சித்தமதன் சுத்தியொடு சிரவ ணத்தைச்
செவ்வியதாச் செய்வதுவும் பிரம மாத்ரம்
பத்தியுடன் சந்ததமு மனனந் தன்னைப்
பாங்காகப் பழகுவதும் பிரம மாத்ரம். (35)

எப்போதுந் தொடர்பாகத் தியானந் தன்னை
யிடையறவே யியற்றுவதும் பிரம மாத்ரஞ்
சற்போத பிரமத்திற் பழகா நின்ற
சவிகற்ப சமாதியுமே பிரம மாத்ரந்
தற்போத சூனியமா நிருவி கற்ப
சமாதியினைச் சார்வதுவும் பிரம மாத்ரங்
கற்போல வசைவற்றுப் பிரம மாகிக்
களங்கமற விருப்பதுவும் பிரம மாத்ரம். (36)

மாயைமுத லுபாதியினை நாவென்றே
மயக்கமுற மதிப்பதுவும் பிரம மாத்ர
நேயபர ஞானத்தாற் பிரம மொன்றே
நிலைத்ததெனு நிர்ணயமும் பிரம மாத்ர
மாயதன தவித்தையினாற் சீவ னெனென்
றனியமுற வறிவதுவும் பிரம மாத்ரந்
தூயபர வித்தையினாற் பரனு னென்றே
துவிதமறத் துணிவதுவும் பிரம மாத்ரம். (37)

மூன்றியதா மஞ்ஞான்ம் பிரம மாத்ர
மூலாத்தவதன் செய்கையுமே பிரம மாத்ரம்
பந்தமறு விஞ்ஞானம் பிரம மாத்ரம்
பரமான முத்தியுமே பிரம மாத்ரந்
தொந்தமுறு விவகாரம் பிரம மாத்ரந்
துவிதமிலாப் பரமார்த்தம் பிரம மாத்ரஞ்
சந்ததமுஞ் சகலமுமே பிரம மாத்ரஞ்
சம்புபதந் தன்னுணை சங்கை யில்லை. (38)

நித்தியமாய்ச் சித்தித்த் பிரம மல்லா
னிலையாக வென்றுமொரு பொருளு மில்லை
யெத்திறமா யெவ்வெவைதா னெங்கே யெங்கே
யிலங்கினுமத் திறமான வவை யனைத்து
மத்துவித பூரணமா யழியாச் சத்தா
யான்மாவா யமர்ந்தபரப் பிரம மேயாஞ்
சத்தியசிற் சுகவடிவாஞ் சிவன்றன் ஞான
சாற்றியது சத்தியமே சங்கை யில்லை. (39)

பிரமமதே நானென்றுஞ் சங்கை யில்லை
பிரமமதே நானென்றுஞ் சங்கை யில்லை
பிரமமதே நீயென்றுஞ் சங்கை யில்லை
பிரமமதே நீயென்றுஞ் சங்கை யில்லை
பிரமமதே மற்றோருஞ் சங்கை யில்லை
பிரமமதே மற்றோருஞ் சங்கை யில்லை
பிரமமதே சகலமுமாஞ் சங்கை யில்லை
பிரமமதே சகலமுமாஞ் சங்கை யில்லை. (40)

பிரமமலா தணுவுமில்லை யணுவு மில்லை
பிரமமலா தணுவுமில்லை யணுவு மில்லை
சருவமுமே சந்ததமும் பிரமந் தானுஞ்
சருவமுமே சந்ததமும் பிரமந் தானும்
பரமசிவ னுபயநிருப் பதந்தன் ஞான
பரமசிவ னுபயநிருப் பதந்தன் ஞான
யுரைதருமிவ் வர்த்தமெலாஞ் சத்தி யந்தா
னுரைதருமிவ் வர்த்தமெலாஞ் சத்தி யந்தான். (41)

சகசிவ பாங்களெனத் தோன்று நின்ற
சகலமுமே சந்ததமும் பிரம மென்றே
புகல்கின்ற விப்பொருளே யாவ ரேனும்
புகன்றாலும் பிறருக்குப் போதித் தாலுஞ்
சுகமாகக் கேட்டாலு மதனை யன்னோர்
சுத்தபர ஞானத்தை விரைவிற் பெற்றிவ்
வகமேவு மாக்கையெலா முட்டே நீங்கி
யாநந்த பூரணமாம் பிரம மாவர். (42)

எள்ளளவு மயலன்றி யெல்லா மென்று
மேகபரப் பிரமமதா யிருந்த போதுங்
கள்ளமுறு மனதுடையோர் பாசி வத்தின்
கருணையிலாக் குற்றத்தால் வேறு வேறு
யுள்ளமதி லுணர்ந்துமகா பவதுக் கத்தை
யுறுவதனுன் முமுட்சுவெலா மெவ்வி தத்துங்
கள்ளவொணுப் பரமசிவன் கருணை பெற்றே
தமதுபவ துக்கத்தைத் தவிர்க்க வேண்டும். (43)

பரமசிவன் கருணையினு லகண்ட ஞானம்
பற்றியதாற் பவதுக்கம் விடுப்ப தற்கிங்
கரியமறை யாதியினு லந்த வந்த
வதிகாரிக் கனுகுணமா யறையப் பட்ட
சிரியைமுத லநேகவித வேது வுண்டு
கிளத்தியவவ் வேதுக்குட் சிரவ ணாதி
யுரமதுவா மவற்றுக்குட் பிரமத் தியான
முத்தமமா மதனுலவ் வருள்சித் திக்கும் (44)

ஆதலினு லறிவுற்றுக் காண்ப வெல்லா
மகண்டவறி வானபரப் பிரம மென்று
மோதியவப் பரப்பிரம நானே யென்று
மொழிவறவே செய்கின்ற பிரமத் யான
சாதனையாற் பரமசிவ னருளைச் சார்ந்து
சலனமிலா வகண்டான்ம ஞானம் பெற்றுப்
போதகன பரப்பிரமந் தானே யாகிப்
பொல்லாத பவத்துயரைப் போக்க வேண்டும். (45)

சதானந்த வடிவான பரேசன் முன்னஞ்
சாலவுமே கருணையினு லருளிச் செய்த
வுதாரமதாம் பொருளிதனை யின்றெல் லோர்க்கு
முபகார மாகநினக் கிங்கு சைத்தே
னெதாகினுமோ ரணுவுமிதி லைய மில்லை
யெமதீச னியம்பியதி லைய மேது
நிதாகவென சிவமுனிவ னன்னேனுக்கு
நிச்சலமாம் பரம்பொருளை நிகழ்த்தி னனால். (46)

வேறு.

சின்னமேவும் விசித்திரசீவருஞ் சிறிதிலாதெங்கும் வியாபிக்குமீச னும், பின்னமேவும் விசித்திரஞாலமும் பிரமமாத்திர மென்றிங்குப் பேசுதல், துன்னுமன்பர்கண் மேவியவிப்பவத் துன்பம்யாவுந் து டைத்திடவேண்டியே, யன்னவாகத்தத் தாண்டவமாடுமம் மாண்டவ ன்ற னகண்டசொரூபமே. (47)

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 12-க்கு திருவிருத்தம்-529.

++

பதின்மூன்றுவது

அனேத்துமசத்தென்றும், அவையெல்லாஞ் சித்தென்றுமுரைக்கும் அத்தியாயம்.

சுருதியிலு மிருதியிலு மாக மத்துஞ்
சூக்குமமா னூற்களிலு மற்று மெங்கு
மருவமிக வரிதான நிர்ண யத்தை
மறித்துமுனக் கருள்செய்வே னெருமை யாய்க்கேள்
பிரமமதற் கயலாகக் காணப் பட்ட
பேதமெலா மெப்போது மசத்தே யாகுஞ்
சருவமதற் கப்பலாய்ச் சலன மில்லாச்
சத்தியமா யுளதென்றும் பிரம மொன்றே. (1)

எவ்விதமா யறிவதுவு மசத்தே யாகு
மெவ்விதமாய் நினைவதுவு மசத்தே யாகு
மெவ்விதமாய்க் காண்பதுவு மசத்தே யாகு
மெவ்விதமாய்க் கேட்பதுவு மசத்தே யாகு
மெவ்விதமாய் வினவுவது மசத்தே யாகு
மெவ்விதமாய்ச் சொல்லுவது மசத்தே யாகு
மெவ்விதமாய்ப் புசிப்பதுவு மசத்தே யாகு
மெப்போது மூலதுபரப் பிரம மொன்றே. (2)

எவ்விதமாந் தலங்களுமே யசத்தே யாகு
மெவ்விதமாந் தீர்த்தமுமே யசத்தே யாகு
மெவ்விதமாந் தேவதையு மசத்தே யாகு
மெவ்விதமாஞ் சேவையுமே யசத்தே யாகு
மெவ்விதமாந் தவங்களுமே யசத்தே யாகு
மெவ்விதமாஞ் செபங்களுமே யசத்தே யாகு
மெவ்விதமாந் திருமியமு மசத்தே யாகு
மெப்போது மூலதுபரப் பிரம மொன்றே. (3)

எவ்விதமாம் பொறிகளுமே யசத்தே யாகு
மெவ்விதமாம் புலன்களுமே யசத்தே யாகு
மெவ்விதமாம் போத்தாவு மசத்தே யாகு
மெவ்விதமாம் போக்கியமு மசத்தே யாகு
மெவ்விதமா மகந்தைகளு மசத்தே யாகு
மெவ்விதமா மிதந்தைகளு மசத்தே யாகு
மெவ்விதமாம் பேதமுமே யசத்தே யாகு
மெப்போது முளதுபரப் பிரம மொன்றே. (4)

வித்தாரமா மாயையுமே யசத்தே யாகும்
விரிந்தவதன் காரியமு மசத்தே யாகுந்
தொத்துமகங் காரமுமே யசத்தே யாகுந்
தொடருமதன் காரியமு மசத்தே யாகும்
புத்தியதன் காரியமு மசத்தே யாகும்
புகன்மனதின் காரியமு மசத்தே யாகுஞ்
சித்தமதன் காரியமு மசத்தே யாகுஞ்
சிதையாம வுளதென்றும் பிரம மொன்றே. (5)

சாதமுறுந் தூலவுடம் பசத்தே யாகுஞ்
சஞ்சலமாஞ் சாக்கிரமு மசத்தே யாகும்
பேதமுறுஞ் சூக்கவுடம் பசத்தே யாகும்
பிரிவுற்ற சொப்பனமு மசத்தே யாகு
மேதமுறு மூலவுடம் பசத்தே யாகு
மிருமையிலாச் சுழுத்தியுமே யசத்தே யாகு
மோதியிடும் பேதமெலா மசத்தே யாகு
மொழிவறவே யுளதென்றும் பிரம மொன்றே. (6)

விசுவனெடு தைசதனு மசத்தே யாகும்
விகற்பமுறுப் பிராஞ்ஞனுமே யசத்தே யாகு
மசுபமிலாத் தூரியமுமே யசத்தே யாகு
மவையினபி மானியுமே யசத்தே யாகும்
மிசிரமுறு சமட்டியுமே யசத்தே யாகும்
மேவியிடும் வியட்டியுமே யசத்தே யாகும்
நிசமருவாப் பேதமெலா மசச்தே யாகும்
நீங்காம வுளதென்றும் பிரம மொன்றே. (7)

காலுகத் தோற்றுவது மசத்தே யாகுங்
தனதெனவே தோற்றுவது மசத்தே யாகு
நீநானுய்த் தோற்றுவது மசத்தே யாகு
நிகிலமெனத் தோற்றுவது மசத்தே யாகுங்
கோலுகத் தோற்றுவது மசத்தே யாகுங்
குருவெனவே தோற்றுவது மசத்தே யாகு
நாநாவாந் தோற்றமெலா மசத்தே யாகு
நாசமிலா துளதென்றும் பிரம மொன்றே. (8)

கத்துருவாய்த் தோற்றுவது மசத்தே யாகுங்
கருமமெனத் தோற்றுவது மசத்தே யாகுஞ்
சத்தருவாய்த் தோற்றுவது மசத்தே யாகுஞ்
சதசத்தாய்த் தோற்றுவது மசத்தே யாகும்
வித்தருவாய்த் தோற்றுவது மசத்தே யாகும்
விதம்விதமாய்த் தோற்றுவது மசத்தே யாகு
மெத்திறமாய்த் தோற்றுவது மசத்தே யாகு
மெப்போது மூளதுபரப் பிரம மொன்றே. (9)

கல்லதுவாய்த் தோற்றுவது மசத்தே யாகு
நலமலதாய்த் தோற்றுவது மசத்தே யாகுஞ்
சொல்லியதாய்த் தோற்றுவது மசத்தே யாகுஞ்
சொனதலதாய்த் தோற்றுவது மசத்தே யாகு
மில்லையெனத் தோற்றுவது மசத்தே யாகு
மிருப்பதெனத் தோற்றுவது மசத்தே யாகும்
புல்லியிடுந் தோற்றமெலா மசத்தே யாகும்
பூரணமா யுளதென்றும் பிரம மொன்றே. (10)

வேதமொடு மிருதிகளு மசத்தே யாகும்
வெகுவிதமா நூற்களுமே யசத்தே யாகு
மேதமொடு குணங்களுமே யசத்தே யாகு
மிச்சைகளு மனிச்சைகளு மசத்தே யாகும்
பூதமொடு பௌதிகமு மசத்தே யாகும்
புண்ணியபா வங்களெலா மசத்தே யாகும்
பேதமுறு பொருளெவையு மசத்தே யாகும்
பிரிவறவே யுளதென்றும் பிரம மொன்றே. (11)

இங்குற்ற பொருளெவையு மசத்தே யாகு
மிங்கிலதாம் பொருளெவையு மசத்தே யாகு
மங்குற்ற பொருளெவையு மசத்தே யாகு
மங்கிலதாம் பொருளெவையு மசத்தே யாகு
மெங்குற்ற பொருள்களுமே யசத்தே யாகு
மெவ்விதமாம் பொருள்களுமே யசத்தே யாகுஞ்
சங்கற்ப முற்றதெலா மசத்தே யாகுஞ்
சலியாம லுளதென்றும் பிரம மொன்றே. (12)

குறைவுற்ற பொருளெவையு மசத்தே யாகுங்
குறையாத பொருளெவையு மசத்தே யாகு
மறைவுற்ற பொருளெவையு மசத்தே யாகு
மறையாத பொருளெவையு மசத்தே யாகு
மறிவுற்ற பொருளெவையு மசத்தே யாகு
மறியாத பொருளெவையு மசத்தே யாகுஞ்
செறிவுற்ற பொருளெல்லா மசத்தே யாகுஞ்
சேதமுரு துளதென்றும் பிரம மொன்றே. (13)

விதம்விதமா மூலகமெலா மசத்தே யாகும்
விண்ணவருந் தானவரு மசத்தே யாகுஞ்
சதுர்விதமாஞ் சாதிகளு மசத்தே யாகுஞ்
சங்கரமாஞ் சாதிகளு மசத்தே யாகு
மதிசயமா மாச்சிரம மசத்தே யாகு
மங்குசெயுஞ் செய்கையெலா மசத்தே யாகுந்
திதமருவா வதன்பலமு மசத்தே யாகுந்
திடமுறவே யுளதென்றும் பிரம மொன்றே. (14)

அஞ்சனமா மஞ்ஞான மசத்தே யாகு
மைந்துமகா பூதமுமே யசத்தே யாகும்
பஞ்சவித தேவதையு மசத்தே யாகும்
பஞ்சவித கோசமுமே யசத்தே யாகும்
விஞ்சையிலாச் சீவர்களு மசத்தே யாகும்
விரிந்தபல வுபாதிகளு மசத்தே யாகுஞ்
சஞ்சலமாக் காண்பவெலா மசத்தே யாகுஞ்
சலனமிலா துளதென்றும் பிரம மொன்றே. (15)

சடுவிதமா மூர்மிகளு மசத்தே யாகுஞ்
சட்பாவ விகாரமுமே யசத்தே யாகுங்
தொடருமரி சடுவர்க்க மசத்தே யாகுங்
தொந்தமுறும் பந்தமெலா மசத்தே யாகும்
படருபல காலமுமே யசத்தே யாகும்
பலதேச வத்துகளு மசத்தே யாகு
மடமையினுற் காண்பதெலா மசத்தே யாகு
மாருமம ளுளதென்றும் பிரம மொன்றே. (16)

சொன்ன தவுஞ் சொல்லாது மசத்தே யாகுஞ்
சுதந்தரமா யுளதென்றும் பிரம மொன்றே
பின்னமுறக் காண்பதெலா மசத்தே யாகும்
பிரிவறவே யுளதென்றும் பிரம மொன்றே
பன்னியவிவ் வர்த்தத்தைப் பாங்காய்க் கேட்டுப்
பகர்ந்தபடி யுணர்ந்திடுவோன் பரமே யாவ
னின்னமுமே முத்திக்குச் சாட்சாத் தான
வேதவினை யிதமாக வியம்பக் கேளாய். (17)

சதாநந்த மயமான பிரம மெல்லாஞ்
சதாநந்த மயமான பிரமம் யாருஞ்
சிதாநந்த மயமான பிரம மேநான்
சிதாநந்த மயமான பிரமமே நீ .
நிதாகவதா லென்றுமெலாம் பிரம மென்றும்
நிரந்தரமாம் பிரமமது நானே யென்று
மெதாகினுமோ ரணுவேனு மைய மின்றி
யெப்போது மிடையறவே நிச்ச யிப்பாய். (18)

சந்ததமுஞ் சன்மாத்ர சொரூப மேநான்
சலனமிலாச் சின்மாத்ர சொரூப மேநான்
ருந்தமிலாச் சுகமாத்ர சொரூப மேநான்
றுவிதமிலாத் தூயபர சொரூப மேநான்
பந்தமிலாப் பரிசுத்த சொரூப மேநான்
பரமவுப சாந்தபர சொரூப மேநா
னந்தமிலாப் பரப்பிரம சொரூப நானென்
றறிந்திடமா யநவரத நிச்ச யிப்பாய். (19)

சத்தியசிற் சுக்கனமாஞ் சொரூப் மேநான்
சம்சார சங்கமிலாச் சொரூப மேநா
னித்தியநிர்க் குணமான சொரூப மேநா
னிரஞ்சனநிட் களமான சொரூப மேநான்
சுத்தபரி பூரணமாஞ் சொரூப மேநான்
சுயஞ்சோதி வடிவான சொரூப மேநா
னத்துவித பரப்பிரம சொரூப நானென்
றறிதிடமா யநவரத நிச்ச யிப்பாய். (20)

சகலமுமாஞ் சின்மாத்ர சொரூப மேநான்
சலனமிலாச் சின்மாத்ர சொரூப மேநான்
றுகளிலதாஞ் சின்மாத்ர சொரூப மேநான்
றுவிதமுறுச் சின்மாத்ர சொரூப மேநா
னிகரிலதாஞ் சின்மாத்ர சொரூப மேநான்
னிட்களமாஞ் சின்மாத்ர சொரூப நானென்
றகமதனி லுறுகின்ற நிச்ச யத்தா
லநவரதஞ் சின்மாத்ர மாகி நிற்பாய். (21)

விரிவுற்ற சுகங்களெலாஞ் சித்து மாத்ரம்
விதம்விதமாஞ் சீவர்லாஞ் சித்து மாத்ர
மருளுற்ற வீசனுமே சித்து மாத்ர
மயன்முதலிம் மூர்த்திகளுஞ் சித்து மாத்ரம்
பிரிவுற்ற வவர்செயலுஞ் சித்து மாத்ரம்
பின்னுமுள பேதமெலாஞ் சித்து மாத்ர
மருளுற்ற பந்தமுமே சித்து மாத்ர
மயக்கமிலா முத்தியுமே சித்து மாத்ரம். (22)

சித்தமுறு விருத்திகளுஞ் சித்து மாத்ரஞ்
சிந்தைசெயும் பொருள்களுமே சித்து மாத்ரஞ்
சுத்தமுறு சிரவணமுஞ் சித்து மாத்ரஞ்
சூக்குமமா மனனமுமே சித்து மாத்ரம்
விசித்தரமாந் தியானமுமே சித்து மாத்ரம்
விமலமதாஞ் சமாதியுமே சித்து மாத்ர
மத்துவித வநுபவமுஞ் சித்து மாத்ர
மாநந்த வநுபவமுஞ் சித்து மாத்ரம். (23)

நிசநிலையி னிற்பதுவுஞ் சித்து மாத்ர
நீக்கமற நிற்பதுவுஞ் சித்து மாத்ரம்
வசமுறவே நிற்பதுவுஞ் சித்து மாத்ரம்
வானெனவே நிற்பதுவுஞ் சித்து மாத்ர
மிசரமற நிற்பதுவுஞ் சித்து மாத்ர
மெய்யாக நிற்பதுவுஞ் சித்து மாத்ர
மசைவறவே நிற்பதுஞ் சித்து மாத்ர
மகண்டமதாய் நிற்பதுவுஞ் சித்து மாத்ரம். (24)

அனியமுறு மஞ்ஞானஞ் சித்து மாத்ர
மமலமதாம் விஞ்ஞானஞ் சித்து மாத்ர
நனிமருவுஞ் சங்கற்பஞ் சித்து மாத்ர
நாடியிடும் புவனமெலாஞ் சித்து மாத்ர
வினவியிடு நீதானுஞ் சித்து மாத்ரம்
விளம்பியிடு நான்முனுஞ் சித்து மாத்ரம்
பனுவியிடும் பலபொருளுஞ் சித்து மாத்ரம்
பரசிவ சகங்களெலாஞ் சித்து மாத்ரம். (25)

ஆனைமுக னறுமுகனுஞ் சித்து மாத்ர
மம்பிகையு மருள்சிவனுஞ் சித்து மாத்ர
மேனியுள சிவகணமுஞ் சித்து மாத்ர
மினியசிவ பத்தர்களுஞ் சித்து மாத்ர
மீனமிலா முனிவர்களுஞ் சித்து மாத்ர
மிலங்கியிடுஞ் சுரர்களெலாஞ் சித்து மாத்ர
மூனமிலாச் சகுணமுமே சித்து மாத்ர
முத்தமமா நிர்க்குணமுஞ் சித்து மாத்ரம். (26)

பரமசிவ பூசனையுஞ் சித்து மாத்ரம்
பயிலுமரி பூசனையுஞ் சித்து மாத்ர
மருவுமயன் பூசனையுஞ் சித்து மாத்ர
மற்றுமுளோர் பூசனையுஞ் சித்து மாத்ரம்
பெருகுமுமை பூசனையுஞ் சித்து மாத்ரம்
பின்னைமுதற் பூசனையுஞ் சித்து மாத்ரஞ்
சருவசுரர் பூசனையுஞ் சித்து மாத்ரஞ்
சகலமுமே சந்ததமுஞ் சித்து மாத்ரம். (27)

வானமுதற் பூதமுமே சித்து மாத்ரம்
வந்தபல பௌதிகமுஞ் சித்து மாத்ரம்
பானுமுதன் முச்சுடருஞ் சித்து மாத்ரம்
பரவியிடு முடுக்களுமே சித்து மாத்ர
மூனமிலா மேகமுமே சித்து மாத்ர
முயிர்க்கினிய வருடமுமே சித்து மாத்ரம்
வானிலுறும் பேதமெலாஞ் சித்து மாத்ரம்
வையமுறும் பேதமெலாஞ் சித்து மாத்ரம். (28)

கிருமிமுத லெவ்வுயிருஞ் சித்து மாத்ரங்
கிரிநதியுங் கானகமுஞ் சித்து மாத்ரம்
விரிவுபெறு புரங்களுமே சித்து மாத்ரம்
விசித்திரமாங் கிரியைகளுஞ் சித்து மாத்ரம்
பிரிவுபெறு பலங்களுமே சித்து மாத்ரம்
பிரமாண்ட கோடிகளுஞ் சித்து மாத்ரஞ்
சருவசரா சரங்களுமே சித்து மாத்ரஞ்
சந்ததமுஞ் சகலமுமே சித்து மாத்ரம். (29)

பதிதிண்ணன் பாரியுமே சித்து மாத்ரம்
பரவுபிகா மாத்ராவுஞ் சித்து மாத்ர
மதிசயமாம் பந்துவெலாஞ் சித்து மாத்ர
மன்னியரு மரிகளுமே சித்து மாத்ரம்
விதிமருவு மாணவுஞ் சித்து மாத்ரம்
விதிக்கின்ற சற்குருவுஞ் சித்து மாத்ரங்
திதிமருவு முயிர்களெலாஞ் சித்து மாத்ரங்
திருசியமாய்க் காண்பதெலாஞ் சித்து மாத்ரம். (30)

காரணகா ரியமெவையுஞ் சித்தே யாகுங்
கண்காது முதலெவையுஞ் சித்தே யாகு
மாரணமு மதன்முடியுஞ் சித்தே யாகு
மகண்டபர நிச்சயமுஞ் சித்தே யாகும்
பூரணமா யுறுகதியுஞ் சித்தே யாகும்
புகல்கதியைத் தருசிவனுஞ் சித்தே யாகுங்
காரணியே முதலெவையுஞ் சித்தே யாகுங்
கங்குசூடா சடங்களெலாஞ் சித்தே யாகும். (31)

அற்புதமாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகு
மயலயலாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகுந்
தற்பதமாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகுந்
தன்மயமாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகுஞ்
சிற்பதமாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகுஞ்
சித்தலதாய்க் காண்பதுவுஞ் சித்தே யாகுங்
கற்பிதமாய்க் காண்பதெலாஞ் சித்தே யாகுங்
காண்கின்ற காட்சியெலாஞ் சித்தே யாகும். (32)

மாயைமுத லுபாதியெலாஞ் சித்தே யாகு
மருவுபர சீவரெலாஞ் சித்தே யாகு
மாயபல வுலகமெலாஞ் சித்தே யாகு
மதனிலுள பேதமெலாஞ் சித்தே யாகுந்
தூயபர சிவனுருவுஞ் சித்தே யாகுந்
துவிதமிலாப் பாவடிவுஞ் சித்தே யாகு
நேயமதாந் தன்வடிவுஞ் சித்தே யாகு
நிகிலமுமே நிறைவுற்ற சித்தே யாகும். (33)

சாவதுவுஞ் சனிப்பதுவுஞ் சித்தே யாகுஞ்
சஞ்சலமாய் நிற்பதுவுஞ் சித்தே யாகும்
போவதுவும் வருவதுவுஞ் சித்தே யாகும்
புண்ணியபா வங்களெலாஞ் சித்தே யாகு
மாவதுவு மழிவதுவுஞ் சித்தே யாகு
மன்னியமா யறிவதுவுஞ் சித்தே யாகு
மோவலிலா திருப்பதுவுஞ் சித்தே யாகு
மொன்றுக வுணருவதுஞ் சித்தே யாகும். (34)

பாகமுறுஞ் சாதனமுஞ் சித்தே யாகும்
பழகியசிற் பாவனையுஞ் சித்தே யாகு
மோகமிலாப் பாவறிவுஞ் சித்தே யாகு
மூதுணர்வாம் பூசனையுஞ் சித்தே யாகுஞ்
சோகமிலாச் சுகநிலையுஞ் சித்தே யாகுஞ்
சுத்தமகா மௌனமுமச் சித்தே யாகு
மேகமதா யிருப்பதுவுஞ் சித்தே யாகு
மியங்கியிடா திருப்பதுவுஞ் சித்தே யாகும். (35)

அரியபல மந்திரமுஞ் சித்தே யாகு
மநந்தவித தந்திரமுஞ் சித்தேயாகுங்
கிரியையுபா சனையெவையுஞ் சித்தே யாகுங்
கேவலமாம் பத்தியுமச் சித்தே யாகு
மிருதயவா காயமுமச் சித்தே யாகு
மிவைமருவுஞ் சிந்தையெலாஞ் சித்தே யாகுந்
திரணமுத லெப்பொருளுஞ் சித்தே யாகுந்
திருசியமாய்த் தெரிவதெலாஞ் சித்தே யாகும். (36)

தேகமுயிர் பொறிபுலனுஞ் சித்தே யாகுந்
தியங்குமனம் புத்தியுமச் சித்தே யாகு
மாகுமகங் காரமுமச் சித்தே யாகு
மலிவுற்ற சித்தமுமச் சித்தே யாகு
மோகமுமுத் தேகமுமச் சித்தே யாகு
மூன்றினபி மானியுமச் சித்தே யாகுஞ்
சோகமிலாத் துரியனுமச் சித்தே யாகுஞ்
சொன்னதெலாந் தொகுத்தந்தச் சித்தே யாகும். (37)

தொந்தமூறு மவத்தையுமச் சித்தே யாகுந்
துரியமெனு மவத்தையுமச் சித்தே யாகு
மைந்துவித கோசமுமச் சித்தே யாகு
மவையினபி மானியுமச் சித்தே யாகுஞ்
சந்ததமுஞ் சகலமுமச் சித்தே யாகுஞ்
சமட்டியுடன் வியட்டியுமச் சித்தே யாகு
மெந்தவிதத் தோற்றமுமச் சித்தே யாகு
மீசசக சிவரெலாஞ் சித்தே யாகும். (38)

சித்ததுவே சன்மாத்ர சொரூப மாகுஞ்
சித்ததுவே சின்மாத்ர சொரூப மாகுஞ்
சித்ததுவே சுகமாத்ர சொரூப மாகுஞ்
சித்ததுவே யகண்டைக சொரூப மாகுஞ்
சித்ததுவே பரப்பிரம சொரூப மாகுஞ்
சித்ததுவே பரமசிவ சொரூப மாகுஞ்
சித்ததுவே பரிசுத்த சொரூப மாகுஞ்
சித்ததுவே பரமான்ம சொரூப மாமே. (39)

சித்ததுவே நித்தியமங் களமு மாகுஞ்
சித்ததுவே நித்தநிரஞ் சனமு மாகுஞ்
சித்ததுவே நிட்களநிர்க் குணமு மாகுஞ்
சித்ததுவே நித்தநிரா மயமு மாகுஞ்
சித்ததுவே நித்தநிரா வரண மாகுஞ்
சித்ததுவே நிரதிசயா நந்த மாகுஞ்
சித்ததுவே நிருமலநிட் கிரிய மாகுஞ்
சித்ததுவே நீக்கமற நிறைந்த தாமே. (40)

சித்ததுவே பரமவுப சாந்த மாகுஞ்
சித்ததுவே பரமபக சொரூப மாகுஞ்
சித்ததுவே பரமான சொரூப மாகுஞ்
சித்ததுவே பராற்பரமாஞ் சொரூப மாகுஞ்
சித்ததுவே பரவித்தை சொரூப மாகுஞ்
சித்ததுவே பரசித்தி சொரூப மாகுஞ்
சித்ததுவே பரசக்தா சொரூப மாகுஞ்
சித்ததுவே பரிபூன்ற சொரூப மாமே. (41)

சித்ததுவே பாவனமாஞ் சொரூப மாகுஞ்
சித்ததுவே பாதத்வ சொரூப மாகுஞ்
சித்ததுவே சுத்தசிதா காய மாகுஞ்
சித்ததுவே சுயஞ்சோதி சொரூப மாகுஞ்
சித்ததுவே விகாரமிலாச் சொரூப மாகுஞ்
சித்ததுவே விசேட மிலாச் சொரூப மாகுஞ்
சித்ததுவே யதீதபர சொரூப மாகுஞ்
சித்ததுவே யகண்டபர சொரூப மாமே. (42)

சித்ததுவே சருவசம சொரூப மாகுஞ்
சித்ததுவே சருவான்ம சொரூப மாகுஞ்
சித்ததுவே சங்கமிலாச் சொரூப மாகுஞ்
சித்ததுவே பங்கமிலாச் சொரூப மாகுஞ்
சித்ததுவே யெங்குமுள சொரூப மாகுஞ்
சித்ததுவே யேகான்ம சொரூப மாகுஞ்
சித்ததுவே பரதெய்வ சொரூப மாகுஞ்
சித்ததுவே பரப்பிரம சொரூப மாமே. (43)

சித்ததுவே யயனுடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே யரியுடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே யரனுடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே யமரருடை நிசசொ ரூபஞ்
சித்ததுவே நரருடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே நம்முடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே நின்னுடைய நிசசொ ரூபஞ்
சித்ததுவே நிகிலருடை நிசசொ ரூபம். (44)

எத்திறமா மதிட்டானத் தெவைதான் ரேன்று
மிலங்கியவவ் வாரோப மஃதே யாகுஞ்
சுத்திகையிற் கற்பிதமாய்த் தோற்றும் வெள்ளி
சுத்திகையே யாகுவதைக் கண்டோ மன்ரே
வித்திறமே சித்தினிடைத் தோன்ரு நின்ற
வீசசக சீவரெலாஞ் சித்தே யாகுஞ்
சித்தையலா லணுவுமிலை யெல்லாஞ் சித்தே
சின்மயமாஞ் சிவஞான யுண்மை சொன்னேன். (45)

ஆதலினு னீசித்து நானுஞ் சித்தே
யநந்தசக சீவேச ரனைத்துஞ் சித்தே
யோதியவா றறிதிடமா யிடைவி டாம
லொழிவறவே யுள்ளத்தி னிச்ச யிப்பாய்
பேதமறப் பெறுகின்ற நிச்ச யத்தாற்
பின்னமிலாப் பரப்பிரம ஞானம் பெற்று
மாதவவிப் பவத்துயரை விரைவின் மாற்றி
மகத்தான மோட்சசுக மருவி நிற்பாய். (46)

சித்தேநீ சித்தேநான் சித்தே யெல்லாஞ்
சித்தையலா தணுவுமிலை யெல்லாஞ் சித்தே
யித்தேக முதலியவோ ரணுவு மில்லை
யித்தேச முதலியவோ ரணுவு மில்லை
யெத்தேக முதலியவுஞ் சித்தே யாகு
மெத்தேச முதலியவுஞ் சித்தே யாகும்
பத்தேச்சை நிறைவேற்றும் பரேச ஞான
பகர்ந்ததிலோ ரையமிலை பரமார்த் தந்தான். (47)

சின்மயனுன் சின்மயனுன் சித்தே யெல்லாஞ்
சின்மயனுன் சின்மயனுன் சித்தே யெல்லாஞ்
சன்மயனுன் சன்மயனுன் சத்தே யெல்லாஞ்
சன்மயனுன் சன்மயனுன் சத்தே யெல்லாந்
தன்மயனுன் றன்மயனுன் ருனே யெல்லாந்
தன்மயனுன் றன்மயனுன் ருனே யெல்லா
நின்மலமா யிவ்வண்ண நிதாக வென்று
நீக்கமற நிரந்தரமாய் நிச்ச யிப்பாய். (48)

சாதமடைந் திறப்புற்ற சீவர்க் கெல்லாஞ்
சன்மசரா மரணபரம் பரையா யிந்தக்
கேதமுறும் பவதாப மனைத்துந் தீரக்
கிருபையினுற் பரமசிவன் பகர்ந்த வண்ணம்
வேதமுதற் சகலத்தும் பெறுவ தற்கு
வெகுவரிதா யிப்பொருளே விளம்பி னேனு
னுநியவிவ் வர்த்தத்தை யொருகா லேனு
முள்ளபடி கேட்டுணர்வோன் பிரம மாவன். (49)

சனனசரா மரணமுறுஞ் சீவ ரெல்லாஞ்
சன்மமுத லெவையுமிலாச் சிவத்தை யோர்ந்து
மனனமுடன் றியானித்தே மாயா மோக
மாற்றிமனக் கிரந்தியறுத் தபய ராகி
யனியமிலா வகண்டபர ஞானங் கொண்ட
யத்துவித பரப்பிரம மாவ ரென்றே
யனையரிபு மாமுனிவ னிதாக னுக்கங்
கரிதான பரம்பொருளே யருள்செய் தானுல். (50)

வேறு.

சகலசீவபரங்க ளசத்தென்றுஞ் சந்ததஞ்சக லங்களுஞ் சித்தென்று
மகிலபூரண சித்தநீயென்று மந்தமின்றிய சித்தது நானென்றும்
வெகுவிதந்திடமாயிக்குப்பேசியவேதவீற்றின்பொருட்களனைத்துமே
திகழுமானந்தத் தாண்டவமாடுநந் தேவன்றன்பரிபூரணரூபமே. (51)

பதின்மூன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம், 13-க்கு திருவிருத்தம்-580.

பதினான்காவது

அகண்ட சொரூபாநு சந்தான முரைக்கும்
அத்தியாயம்.

சகலமுமாஞ் சித்தாந்த ரகசி யத்தைச்
சங்கிர காகவிநிற் சாற்றக் கேளாய்
பகரலுறுந் துவிதமொடுத் துவித மில்லை
பரமவுப சாந்தமதாம் பிரம மொன்றே
யிகழ்வறவே யெப்போது முளதா மெங்கு
மேகமதாம் பிரமமதே நீயு நானு
மகிலமுமப் பரப்பிரம சொரூப மேயா
மாதலினு லவ்வண்ண மநுசந் திப்பாய். (1)

அகமென்றும் பரப்பிரம சொரூப மானே
னகமென்றும் பரமசிவ சொரூப மானே
னகமென்றும் பரமான்ம சொரூப மானே
னகமென்றும் பராற்பரமாஞ் சொரூப மானே
னகமென்றும் பரிசுத்த சொரூப மானே
னகமென்றும் பரிபூன்ற சொரூப மானே
னகமென்று மகண்டபர சொரூப னென்றே
யநவரத மநிதிடமா யநுசந் திப்பாய். (2)

அகமென்று மழிவற்ற சுத்தா கின்றே
னகமென்றுந் திகழ்வுற்ற சித்தா கின்றே
னகமென்று நிரதிசய சுகமா கின்றே
னகமென்று மகண்டைக ரசமா கின்றே
னகமென்று மெவ்விடத்து நிறைந்து நின்றே
னகமென்று மெல்லாமு மாகா நின்றே
னகமென்று மகண்டபரப் பிரம மென்றே
யநவரத மநிதிடமா யநுசந் திப்பாய். (3)

அகமென்றுங் கற்பொருளாம் பரமா கின்றே
னகமென்றுந் துவம்பொருளாம் பரமா கின்றே
னகமென்று மசிபொருளாம் பரமா கின்றே
னகமென்று மகண்டைக ரசமா கின்றே
னகமென்று மெவைகட்கு முள்ளா கின்றே
னகமென்று மெவைகட்கும் வெளியா கின்றே
னகமென்று மகண்டபரப் பிரம மென்றே
யநவரத மநிதிடமா யநுசந் திப்பாய். (4)

அகமென்று நித்தியமாஞ் சொரூப மாமே
னகமென்று நிர்க்குணமாஞ் சொரூப மாமே
னகமென்று நிரஞ்சனமாஞ் சொரூப மாமே
னகமென்று நிராவரண சொரூப மாமே
னகமென்று நிட்களமாஞ் சொரூப மாமே
னகமென்று நிராமயமாஞ் சொரூப மாமே
னகமென்று நிறைந்தபர சொரூப னென்றே
யநவரத மநிதிடமா யநுசந் நிப்பாய். (5)

அகமென்றும் விபுவான சொரூப மாமே
னகமென்றும் வீதலுரூச் சொரூப மாமே
னகமென்று மக்கரமாஞ் சொரூப மாமே
னகமென்று மாநந்த சொரூப மாமே
னகமென்று மோட்சமதாஞ் சொரூப மாமே
னகமென்று மோசகனுஞ் சொரூப மாமே
னகமென்று மகண்டபர சொரூப னென்றே
யநவரத மநிதிடமா யநுசந் நிப்பாய். (6)

அகமகில காரணமாஞ் சொரூப மாமே
னகமகில பூரணமாஞ் சொரூப மாமே
னகமகில சிவபர சொரூப மாமே
னகமணுவு மாகாத சொரூப மாமே
னகமனிச மூபசாந்த சொரூப மாமே
னகமனிச மொன்றுன சொரூப மாமே
னகமனிச மகண்டபர சொரூப னென்றே
யநவரத மநிதிடமா யநுசந் நிப்பாய். (7)

அகமகில காரியமாஞ் சொரூப மாமே
னகமகில காரகனுஞ் சொரூப மாமே
னகமகில பாலகனுஞ் சொரூப மாமே
னகமகில நாசகனுஞ் சொரூப மாமே
னகமனிச மெவையுமலாச் சொரூப மாமே
னகமகமா யமைவுற்ற சொரூப மாமே
னகமனிச மகண்டபர சொரூப னென்றே
யநவரத மநிதிடமா யநுசந் நிப்பாய். (8)

அகமகில பூதமுமாஞ் சொரூப மாமே
னகமகில பௌதிகமாஞ் சொரூப மாமே
னகமகில சாட்சியமாஞ் சொரூப மாமே
னகமகில சான்றான சொரூப மாமே
னகமனிச மனியமிலாச் சொரூப மாமே
னகமனிச மத்துவித சொரூப மாமே
னகமனிச மகண்டபர சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (9)

அகமனிச நீயென்னுஞ் சொரூப மாமே
னகமனிச நானென்னுஞ் சொரூப மாமே
னகமனிச மனியரெனுஞ் சொரூப மாமே
னகமனிச மகிலான்ம சொரூப மாமே
னகமனிச மசஞ்சலமாஞ் சொரூப மாமே
னகமனிச மசங்கபர சொரூப மாமே
னகமனிச மகண்டபர சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (10)

அகமனிசஞ் சின்மயமாஞ் சொரூப மாமே
னகமனிசஞ் சிற்கனமாஞ் சொரூப மாமே
னகமனிசஞ் சின்மாத்ர சொரூப மாமே
னகமனிசஞ் சிதம்பரமாஞ் சொரூப மாமே
னகமனிசஞ் சிதாகாய சொரூப மாமே
னகமனிசஞ் சைதன்ய சொரூப மாமே
னகமனிசஞ் சிற்பிரம சொரூப் னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (11)

அகமகில வாதார சொரூப மாமே
னகமகில வாகார சொரூப மாமே
னகமனிய மணுவுமிலாச் சொரூப மாமே
னகமகமே யாகியுள சொரூப மாமே
னகமனிச மசரீர சொரூப மாமே
னகமமல வாகாய சொரூப மாமே
னகமமல பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய் (12)

அகமகில குருவான சொரூப மாமே
னகமகில சீடனுமாஞ் சொரூப மாமே
னகமகில சாதன மாஞ் சொரூப மாமே
னகமகில சாத்தியமாஞ் சொரூப மாமே
னகமகில வேதாந்த சொரூப மாமே
னகமவையின் வேத்தியமாஞ் சொரூப மாமே
னகமமல பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மறிதிடமா யநுசந் திப்பாய். (13)

அகமென்றும் புராதனமாஞ் சொரூப மாமே
னகமென்றும் பூரணமாஞ் சொரூப மாமே
னகமென்று மச்சுதமாஞ் சொரூப மாமே
னகமென்று மவிநாச சொரூப மாமே
னகமென்றுங் கேவலமாஞ் சொரூப மாமே
னகமென்றுங் கேதமிலாச் சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மறிதிடமா யநுசந் திப்பாய். (14)

அகமென்று மகண்டபர தெய்வ மாமே
னகமென்று மமலபர போத மாமே
னகமென்றும் பரசத்தா சொரூப மாமே
னகமென்றும் பரமசுக சொரூப மாமே
னகமென்றும் பரஞ்சோதி சொரூப மாமே
னகமென்றும் பரமபத சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மறிதிடமா யநுசந் திப்பாய் (15)

அகமகில வாந்தரமாஞ் சொரூப மாமே
னகமகில வான்மாவாஞ் சொரூப மாமே
னகமகில மங்களமாஞ் சொரூப மாமே
னகமணுவு மாசிலதாஞ் சொரூப மாமே
னகமனிசந் துரியபர சொரூப மாமே
னகந்துரியா தீதபர சொரூப மாமே
னகமனிசம் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மறிதிடமா யநுசந் திப்பாய். (16)

அகமகில காலத்துக் கதீத மாமே
னகமகில தேசத்துக் கதீத மாமே
னகமகில வத்துவினுக் கதீத மாமே
னகமென்று மனத்துக்கு மதீத மாமே
னகமணுவு மகந்தையிலாச் சுபாவ மாமே
னகமணுவு மிதந்தையிலாச் சுபாவ மாமே
னகமமல பரப்பிரம மாமே னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (17)

அகமென்றுஞ் சன்மாத்ர சொரூப மாமே
னகமென்றுஞ் சின்மாத்ர சொரூப மாமே
னகமென்று நன்மாத்ர சொரூப மாமே
னகமென்று நடுவான சொரூப மாமே
னகமென்று மத்துவித சொரூப மாமே
னகமார்க்கு மான்மாவாஞ் சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (18)

அகமென்று நீங்காத சுகமா கின்றே
னகமெங்கு நிச்சலமாய் நிறைந்து நின்றே
னகமென்றுஞ் சங்கற்ப மிலாது நின்றே
னகமொன்று லறியவொணாப் பரமா கின்றே
னகமென்றும் புத்திமுத லிலாது நின்றே
னகம்புத்திக் கப்பாலாம் பதமா கின்றே
னகமென்றும் பரப்பிரம மாமே னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (19)

அகமணுவு மாயையிலாச் சொரூப மாமே
னகமாயா குணமுமிலாச் சொரூப மாமே
னகமனது முதலுமிலாச் சொரூப மாமே
னகங்காம முதலுமிலாச் சொரூப மாமே
னகமாக்கை முதலுமிலாச் சொரூப மாமே
னகமவையின் விகாரமிலாச் சொரூப மாமே
னகமமல பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யநுசந் திப்பாய். (20)

அகம்விசுவ ஞதியிலாச் சொரூப மாமே
னகநனவு முதலுழிலாச் சொரூப மாமே
னகந்துரிய வறிவான சொரூப மாமே
னகந்தூய பரமசிவ சொரூப மாமே
னகந்தோட மெவையுமிலாச் சொரூப மாமே
னகம்பவமே யின்றியசிற் சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யதுசந் திப்பாய். (21)

அகமென்றும் ப்ரபுவான சொரூப மாமே
னகமென்றும் பிரஞ்ஞான சொரூப மாமே
னகமென்றும் விபுவான சொரூப மாமே
னகமென்றும் விஞ்ஞான சொரூப மாமே
னகமென்றுஞ் சகலமுமாஞ் சொரூப மாமே
னகஞ்சச்சி தாநந்த சொரூப மாமே
னகமென்றும் பரப்பிரம சொரூப மாமே
யநவரத மதிதிடமா யதுசந் திப்பாய். (22)

அகமென்று நிரஞ்சனமாம் பிரம மாமே
னமமென்று நிட்களமாம் பிரம மாமே
னகமென்று நிராமயமாம் பிரம மாமே
னகமென்று நிருமலமாம் பிரம மாமே
னகமென்று நிர்க்குணமாம் பிரம மாமே
னகமென்று நிருபமமாம் பிரம மாமே
னகமென்று நிமலபர மாமே னென்றே
யநவரத மதிதிடமா யதுசந் திப்பாய். (23)

அகமகில நாமமுரு வான ஞால
மனைத்துக்கு மதிட்டான சொரூப மாமே
னகமுன்பின் பக்கங்கள் கீழ்மே லெங்கு
மகண்டவறி வாகியுள சொரூப மாமே
னகமனிய மணுவுமிலா தகமே யாக
வமையுற்ற வாநந்த சொரூப மாமே
னகமனிச மகண்டபர சொரூப னென்றே
யநவரத மதிதிடமா யதுசந் திப்பாய். (24)

அகமான்ம ஞானமிலா மூட ராலிங்
கடையமிக வரிதான சொரூப மானே
னகமான்ம ஞானிகளா லடைவ தற்கிங்
கறவுமெளி தானபர சொரூப மானே
னகமகில வியாபகமாய் நிறைந்து நின்ற
வகண்டசிதா காயபர சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மநிநிடமா யநுசந் நிப்பாய். (25)

அகமனிசஞ் சட்பாவ விகார மின்றி
யகண்டவடி வானபர சொரூப மானே
னகமனிசம் பந்தமிலா நித்த முக்த
மாகியுள வகண்டபர சொரூப மானே
னகமனிச மசஞ்சலமா யமர்ந்து நின்ற
வாநந்த பூரணமாஞ் சொரூப மானே
னகமமல பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மநிநிடமா யநுசந் நிப்பாய். (26)

அகமணுவுஞ் சங்கற்ப விகற்ப மின்றி
யறவுமுப சாந்தபர சொரூப மானே
னகமிரவு பகலொன்று மென்று மின்றி
யகண்டவொளி யானபர சொரூப மானே
னகமென்று மகந்தைமுத லணுவு மின்றி
யகண்டபர மாநந்த சொரூப மானே
னகமென்றும் பரப்பிரம சொரூப னென்றே
யநவரத மநிநிடமா யநுசந் நிப்பாய். (27)

அகமனிச மகங்காரமே யிலாது நின்ற
வகண்டவறி வானபரப் பிரம மானேனென்
பகருமகங் காரமதே பவமா மென்றும்
பரமார்த்த மாகவகங் காரமே யில்லை
யகமலநிங் கோரணுவு மிலவே யில்லை
யகண்டபரி பூரணமா யுள்ளோ னானே
னிகழுமகம் பரப்பிரம மானே னென்றே
நிந்தரமாய் நித்தமுநீ யநுசந் நிப்பாய். (28)

நீயுமக நானுமக மற்று முள்ள
நிகிலமக மிதிலணுவு மைய மில்லை
தூயவகம் பரப்பிரம மானே னென்றே
தொடர்பாகத் துணிதமற வநுசந் திப்பாய்
மாயையிலை மாயைசெயுஞ் செயலு மில்லை
மற்றுமொரு பேதமுமே யிலவே யில்லை
நேயமதாம் பரப்பிரம நானே யென்று
நிரந்தரமாய் நித்தமுநீ யநுசந் திப்பாய். (29)

அகமலது தற்பதமாம் பொருளு மில்லை
யகமலது துவம்பதமாம் பொருளு மில்லை
யகமலதிங் கசிபதமாம் பொருளு மில்லை
யகமலதிங் ககண்டமெனும் பொருளு மில்லை
யகமலது சத்துமிலை யசத்து மில்லை
யகமலது சித்துமிலை சடமு மில்லை
யகமலதிங் கொருபொருளு மென்று மில்லை
யகம்பிரம மென்றனிச மநுசந் திப்பாய். (30)

அகமலதிங் கிவனென்னும் பேத மில்லை
யகமலதிங் கிவளென்னும் பேத மில்லை
யகமலதிங் கிதுவென்னும் பேத மில்லை
யகமலதிங் கதுவென்னும் பேதமில்லை
யகமலதிங் கிருப்பதெனும் பேத மில்லை
யகமலதிங் கில்லையெனும் பேதமில்லை
யகமலதிங் கணுவேனும் பேத மில்லை
யகம்பிரம மென்றனிச மநுசந் திப்பாய். (31)

இதுவென்று காண்பதுவும் பிரம மேயாம்
யானென்று காண்பதுவும் பிரம மேயா
மதுவென்று காண்பதுவும் பிரம மேயா
மநேகமதாய்க் காண்பதுவும் பிரம மேயாந்
திதமென்று காண்பதுவும் பிரம மேயாந்
திரமிலதாய்க் காண்பதுவும் பிரம மேயா
மெதுவென்று காண்பதுவும் பிரம மேயாம்
யானதுவே யென்றனிச மநுசந் திப்பாய். (32)

மூலமதா மஞ்ஞானம் பிரம மேயா
முளைக்கின்ற சித்தமுதற் பிரம மேயாங்
கோலமுறுந் தேகமுதற் பிரம மேயாங்
கூறுபடும் புலன்களெலாம் பிரம மேயாங்
காலமொடு தேசமெலாம் பிரம மேயாங்
காண்கின்ற வத்துவெலாம் பிரம மேயா
மாலயமாம் பரப்பிரமந் தானே யெல்லா
மதுநானென் றறிந்திடமா யநுசந் திப்பாய். (33)

வாழுயி ரூதமெலாம் பிரம மேயாம்
வந்தபல பௌதிகமும் பிரம மேயா
நாமுனென் றெண்ணுவதும் பிரம மேயா
நானலதா யெண்ணுவதும் பிரம மேயா
நீநானென் றெண்ணுவதும் பிரம மேயா
நினைக்கின்ற நினைவெவையும் பிரம மேயா
மாமுத பரப்பிரமந் தானே யெல்லா
மதுநானென் றறிந்திடமா யநுசந் திப்பாய். (34)

வசனிக்கும் வசனமிலை வாக்கு மில்லை
வரமான கதையிலை வத்தா வில்லை
நிசமற்ற சகமில்லை சீவ ரில்லை
நேயபொரு ளளிக்கின்ற வீச னில்லை
கசடற்று நிற்குணமாய் நித்த மாகிக்
களங்கமற நிரந்தரமாய் நிறைந்து நின்ற
வசைவற்ற பரப்பிரமந் தானே யெல்லா
மதுநானென் றறிந்திடமா யநுசந் திப்பாய். (35)

அகம்பிரம மகம்பிரம் மகமே யெல்லா
மகம்பிரம மகமெல்லா மென்றிவ் வண்ண
மகம்பிரம விருத்திநிட மாகு மட்டு
மநவரத மிடையறவே யநுசந் திப்பா
யகம்பிரம விருத்திநிட் மான பின்ன
ரகம்பிரம பாவனையுந் தூரத் தள்ளி
யகம்பிரமப் பொருளாகி யகண்டா நந்த
வநுபவமுற் றசைவறவே யமர்ந்து நிற்பாய். (36)

சித்தியமாய் நிட்களமாய் நிருவி கற்ப
நிரஞ்சனமாய் நிராமயமாய் நிமல மாகிச்
சத்தியமாய்ச் சுககனமாய்ச் சலன மின்றிச்
சனதனமாய்ச் சாலவுப சாந்த மான
சித்துருவாம் பரப்பிரம நானே யென்று
சிரத்தையுட னப்யாசஞ் செய்வோ ரிங்கே
யத்துவித வறுபூதி யடைந்த வற்ரு
லகண்டபர மாகுவதி லைய மில்லை. (37)

ஆதலினு லகிலமுமே பிரம மென்று
மகமந்தப் பரப்பிரமந் தானே யென்றும்
பேதமுறுந் தோற்றமெலாம் போகு மட்டும்
பிரியமுடன் பிரிவறவே நித்த மாகச்
சாதகமாம் பாவனையே செய்த வற்ரூற்
சஞ்சலவிட் சேபமெலாந் தொலைந்த பின்ன
ரேதையுமே நினையாமற் சுகமே யாக
வெப்போதுஞ் சும்மாவே யிருக்க வேண்டும். (38)

இத்திறமே பரமசிவ னெனக்கி சைத்த
விவ்வர்த்தந் தனிலணுவு மைய மில்லை
சத்தியமே சத்தியமே சங்கை யில்லை
சம்புபதந் தன்னணை சங்கை யில்லை
யித்தையொரு காலேனுங் கேட்டு ணர்ந்தோ
னேகபரப் பிரமமதாய் முத்த னவன்
மெத்தவுமே யெவ்விடத்து மரிதா மிந்த
மெய்ப்பொருளை நினைக்கருளால் விளம்பி னேனுல். (39)

புத்திரனே பூதியுட னுருத்தி ராக்க
பூடணமே பூண்டுசிவ பத்தி கூர்ந்திங்
கத்துவித பரமசிவத் தியானந் தன்னை
யாதரவா யநவரத மனுட்டிப் போரே
யித்துனிசெய் சம்சார பாசந் தீர்ந்தவ்
வேகபர சிவவடிவா யிருப்ப ரென்றே
யுத்தமனும் ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கொருமைதரும் பாவனையே யுரைசெய் தானுல். (40)

வேறு.

தோற்றலுற்ற விசித்திரசீவருந்துவிதம்போன்ற விசித்திரஞாலமும்
போற்றலுற்ற புராதனவீசனும் பூரணப்பர மன்றியில்வேறிலை
சாற்றுமப்பரஞ்சத்தகாரனெனுஞ்சகலகாரனெனுந்தியானமுரைத்திட
லேற்றுமாநந்தத்தாண்டவமாடுமீசன்றன்பரிபூரணரூபமே. (41)

பதினைன்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 14-க்கு திருவிருத்தம்-621.

பதினைந்தாவது
சித்த ஜீவோபாய முரைக்கும்
அத்தியாயம்.

பரமமதா மோட்சத்தை யுடனே நல்கும்
பரம்பொருளே மற்றுமுனக் குரைப்பக் கேளாய்
சருவமுமே சந்ததமும் பிரமா காரஞ்
சகலமுமே சாந்தமதாம் பிரமா கார
மரியவனே யகிலமெனக் காண்ப தெல்லா
மகண்டபரி பூரணமாம் பிரமா காரம்
பிரிவுறவே யொருபொருளு மென்று மில்லை
பின்னமெனக் காண்பதெலாம் பிரமா காரம். (1)

எதுவெதுவா யிசைப்பதுவும் பிரமா கார
மெவையெவையாய் நினைப்பதுவும் பிரமா காரம்
விதிமருவு மறைவாக்கும் பிரமா காரம்
வேதாந்த வாக்கியமும் பிரமா கார
மதிசயமாங் குருவாக்கும் பிரமா கார
மகண்டமகா வாக்கியமும் பிரமா காரந்
திதமருவு யோகமுமே பிரமா காரந்
திகழ்கின்ற ஞானமுமே பிரமா காரம். (2)

பிரியமறப் பேசுவதும் பிரமா காரம்
பிரியமதாய்ப் பேசுவதும் பிரமா காரஞ்
சிரவணமே செய்வதுவும் பிசமா காரஞ்
சிந்தனையே செய்வதுவும் பிரமா காரந்
திரமருவுந் தியானமுமே பிரமா காரந்
திடமான சமாதியுமே பிரமா கார
முரமருவு நிச்சயமும் பிரமா கார
முத்தமமாஞ் சிரத்தையுமே பிரமா காரம். (3)

குரவனரு ளுபதேசம் பிரமா காரங்
குருவரனைச் சேவித்தல் பிரமா காரம்
பரவுபல சாதனமும் பிரமா காரம்
பற்றியிடுஞ் சாத்தியமும் பிரமா காரந்
திருசியமாம் பொருளெவையும் பிரமா காரந்
திருக்காகி யுளபொருளும் பிரமா காரஞ்
சருவமுமே சந்ததமும் பிரமா காரஞ்
சகசீவ பாங்களெலாம் பிரமா காரம். (4)

பிரமமலா தன்னியமாய்க் காண்ப தெல்லாம்
பீதிதருந் துயர்நல்கு மாத லாலே
திருசியமாய்க் காண்பதெலாந் திருக்கே யாகத்
திகழ்கின்ற பிரமமெனப் ரவிலா பித்துச்
சருவமுமே பிரமமெனு நினைவுந் தள்ளிச்
சலியாமல் வெறிதாக விருக்கு நிட்டை
நிரதிசய சுகநல்கும் பயத்தைத் தீர்க்கு
நிச்சயமே யதனுலந் நிட்டை சார்வாய். (5)

சகலமுமே தள்ளிவெறி தாக நிற்றல்
சகலத்தின் றியாகமெனச் சாற்ற லாகுஞ்
சகலமெனச் சாற்றியது மனதே யாகுஞ்
சலமனதைத் தள்ளுவதே சகலத் தியாக
மிகழ்மனதின் றியாகமதே யகங்கா ராதி
யாவற்றின் றியாகமுமா மஃதே மற்று
நிகிலசக சீவபரத் தியாக மாகு
நிதாகவதே நிரதிசயா நந்த நல்கும். (6)

மனதுடைய தியாகமதே மகத்தாம் வெற்றி
மனதுடைய தியாகமதே மகத்தாஞ் சித்தி
மனதுடைய தியாகமதே மகத்தா மின்ப
மனதுடைய தியாகமதே மகத்தாம் யோக
மனதுடைய தியாகமதே மகத்தா ஞான
மனதுடைய தியாகமதே மகத்தா மோட்ச
மனதுடைய தியாகமதே சகலத் தியாக
மனதுடைய தியாகமதே சித்தத் தியாகம். (7)

சித்தமதே மகத்தான மாயை யாகுஞ்
சித்தமதே யுடல்பொறிக ளுயிரு மாகுஞ்
சித்தமதே சீவனுமாஞ் சகத்து மாகுஞ்
சித்தமதே சம்சார பாச மாகுஞ்
சித்தமதே சுருதிமுத னூலு மாகுஞ்
சித்தமதே விசாரமுத லினைத்து மாகுஞ்
சித்தமதே குணதோட மினைத்து மாகுஞ்
சித்தமதே சடமசட மினைத்து மாமே. (8)

சித்தமதே மகத்தான் பாவ மாகுஞ்
சித்தமதே மகத்தான மலமு மாகுஞ்
சித்தமதே மகத்தான வாதி யாகுஞ்
சித்தமதே மகத்தான் வியாதி யாகுஞ்
சித்தமதே மகத்தான் பீதி யாகுஞ்
சித்தமதே மகத்தான் பந்த மாகுஞ்
சித்தமதே சிந்தையெலாஞ் செய்வ தாகுஞ்
சித்தமதே சகலமுமாய்த் தெரிவ தாமே. (9)

சித்தமிலாக் காலத்திற் சகசீ வாதி
சிறிதுமிலை யஃதுளதே லவையு முண்டு
புத்திரனே யாதலினுற் சித்தங் தானே
புகல்சீவ பரஞால மினைத்து மாகுஞ்
சித்தமதை யெவ்விதமுஞ் செயிக்க வேண்டுஞ்
சித்தசெய மாத்திரமே நிகரில் வெற்றி
யித்துனிசெய் சித்தத்தின் செயவு பாய
மேதென்னி லினியிதனை யியம்பக் கேளாய். (10)

சித்தமென வொருங்காலு மிலவே யில்லை
சின்மயமாம் பரப்பிரம மொன்றே யென்று
நித்தபரி பூரணமாய் நிலைத்த தென்னு
நிரந்தரமா நிச்சயமே சித்தந் தன்னைப்
புத்திரனே யெளிதாகச் செயிப்ப தற்குப்
புரையற்ற வுபாயமிதாற் சித்த நாசஞ்
சத்தியமாய்ச் சித்திக்குஞ் சித்தி யாலுற்
சகலமுமே சின்மயமாய்ப் பிரகா சிக்கும். (11)

சித்தமென வொருபொருளிங் குள்ள தென்று
சிறிதேனுஞ் சிந்தித்தா லுடனே சித்தே
சித்தமதாய்த் தோற்றியிடு மதுவே சிவ
செகபரமாய்த் தோற்றுமதாற் றுன்ப மூண்டாம்
புத்திரனே யாதலினுற் சித்த மென்றோர்
பொருளென்று மில்லையெலாஞ் சித்தே யென்னு
மித்திறமா முறுதியினுற் சித்தந் தன்னை
யெளிதாகச் செயித்தென்று மின்பஞ் சார்வாய். (12)

சித்தசெய மாத்திரமே மகத்தாம் வெற்றி
சித்தசெய மாத்திரமே மகத்தாஞ் சித்தி
சித்தசெய மாத்திரமே மகத்தாம் யோகஞ்
சித்தசெய மாத்திரமே மகத்தா ஞானஞ்
சித்தசெய மாத்திரமே மகத்தாஞ் சுத்தி
சித்தசெய மாத்திரமே மகத்தா முத்தி
சித்தசெய மாத்திரமே துன்ப நீக்கஞ்
சித்தசெய மாத்திரமே சிறந்த வின்பம். (13)

சித்தசெய மெதுவதுவே சித்தத் நியாகஞ்
சித்தத்தின் றியாகமதுஞ் சிற்சொ ரூபம்
புத்திரனின் னிசவடிவுஞ் சிற்சொ ரூபம்
புகல்சித்த முதலியதுஞ் சிற்சொ ரூபஞ்
சத்தியமாய்ச் சகலமுமே சிற்சொ ரூபஞ்
சந்ததமச் சிற்சொரூப நானே யென்னு
மித்திறமா முறுதியினுற் சித்தந் தன்னை
யெளிதாகச் செயித்தென்று மின்பஞ் சார்வாய். (14)

நானென்றுஞ் சித்தான பிரம வத்து
நவில்சித்த முதலியது மந்த நானே
நானன்றி யன்னியமா யணுவு மில்லை
நாநாவாய்க் காண்பதெலாம் பரமா நானே
நானெங்கும் பூரணமாஞ் சொரூப மானே
னானென்றும் பொன்றுத சொரூப மானே
னானென்று மொன்றுன சொரூப மென்றே
நழுவாத வுறுதியினுற் சித்தம் வெல்லாய். (15)

நானென்றும் பூதமெலா மிலாது நின்றே
ஞானென்றும் பௌதிகமு மிலாது நின்றே
ஞானென்று மாக்கைமுத லிலாது நின்றே
ஞானென்று மவத்தையெலா மிலாது நின்றே
ஞானென்றும் புராதனமாம் பொருளா நின்றே
ஞானென்றும் பூரணமா மறிவா நின்றே
ஞானென்றும் பரப்பிரம மாமே னென்றே
ஏழுவாத வுறுதியினற் சித்தம் வெல்வாய். (16)

சிதாகாய மன்றியிலோ ரணுவு மில்லை
சிதாகாய மெதுவதுவே யனைத்து மாகுஞ்
சிதாகாய மானபரப் பிரம மேநீ
சிதாகாய மானபரப் பிரம மேநான்
சிதாகாய மானபரப் பிரமம் யாருஞ்
சிதாகாய மானபரப் பிரம மெல்லாஞ்
சிதாகாய மகமென்னு நிச்ச யத்தாற்
சித்தசெயஞ் செய்தென்றுஞ் சித்தாய் நிற்பாய். (17)

சிதாகாய மெதுவதுவே நிகழா நிற்குஞ்
சிதாகாய மெதுவதுவே நிறைந்து நிற்குஞ்
சிதாகாய மெதுவதுவே சித்த மாகுஞ்
சிதாகாய மெதுவதுவே மனது மாகுஞ்
சிதாகாய மலதிங்கோ ரணுவு மில்லை
சிதாகாய மதுதானே யாவு மாகுஞ்
சிதாகாய மகமென்னு நிச்ச யத்தாற்
சித்தசெயஞ் செய்தென்றுஞ் சித்தாய் நிற்பாய். (18)

சிதாகாய மதுதானே நாரு மாகுஞ்
சிதாகாய மதுதானே சுரருமாகுஞ்
சிதாகாய மதுதானே யசுரு மாகுஞ்
சிதாகாய மதுதானே யரியு மாகுஞ்
சிதாகாய மதுதானே யரனு மாகுஞ்
சிதாகாய மதுசாட்சாத் சிவனு மாகுஞ்
சிதாகாய மதுநானென் றுறுதி கொண்டே
சித்தசெயஞ் செய்தென்றுஞ் சித்தாய் நிற்பாய். (19)

சிதாகாய மென்பதுதா னேதா மென்னிற்
சின்னமிலா தெங்குமுள சித்தே யாகுஞ்
சிதாகாய மதுதானே சீவ ராகுஞ்
சிதாகாய மதுதானே செகங்க ளாகுஞ்
சிதாகாய மதுதானே யீச ருகுஞ்
சிதாகாய மதுதானே யெல்லா மாகுஞ்
சிதாகாய மதுநானென் றுறுதி கொரண்டே
சித்தசெயஞ் செய்தென்றுஞ் சித்தாய் நிற்பாய் (20)

சத்தியசிற் சுகனமாஞ் சொரூப மேநான்
சாசுவத மானபர சொரூப மேநா
னித்தநிரா வரணபர சொரூப மேநா
னிரதிசயா நந்தகன சொரூப மேநா
னத்துவித பூரணமாஞ் சொரூப மேநா
னகிலமுமா மகண்டபர சொரூப மேநா
னுத்தமமாம் பரமான்ம சொரூப நானென்
றுறுதியினுற் சித்தசெய முறுவாய் மைந்தா. (21)

ஆன்மாவே யினையாவு மையமில்லை
யான்மாவே யுள்ளபொரு ளைய மில்லை
யான்மாவே பரமபத மைய மில்லை
யான்மாவே பரம்பொருளா மைய மில்லை
யான்மாவே நின்சொரூப மைய மில்லை
யான்மாவே பரசொரூப மைய மில்லை
யான்மாவே யகமென்னு நிச்ச யத்தை
யடைந்ததனுற் சித்தசெய மடைவாய் மைந்தா. (22)

ஆன்மாவே பூதமெலா மைய மில்லை
யான்மாவே புவனமெலா மைய மில்லை
யான்மாவே மனமாதி யைய மில்லை
யான்மாவே மற்றுளது மைய மில்லை
யான்மாவே யகிலமுமா மைய மில்லை
யான்மாவே பரப்பிரம மைய மில்லை.
யான்மாவே யகமென்னு நிச்ச யத்தை
யடைந்ததனுற் சித்தசெய மடைவாய் மைந்தா. (23)

ஆன்மாவே யுலகமெலாம் படைப்ப தாகு
மான்மாவே யுலகமெலாம் பரிப்ப தாகு
மான்மாவே யுலகமெலா மழிப்ப தாகு
மான்மாவே யகிலமுமாய் விளங்க லாகு
மான்மாவே யணுவுமிலா தகண்ட மாகு
மான்மாவே யத்துவித சொரூப மாகு
மான்மாவே யகமென்னு நிச்ச யத்தை
யடைந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்கா. (24)

ஆன்மாவே யான்மாவுக் காசா னகு
மான்மாவே யான்மாவின் சே டனகு
மான்மாவே யான்மாவை யறிவ தாகு
மரன்மாவே யான்மாவா யிருப்ப தாகு
மான்மாவே யான்மாவைப் பரிப்ப தாகு
மான்மாவே யகண்டபரி பூன்ற மாகு
மான்மாவே யகமென்னு நிச்ச யத்தை
யடைந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்கா. (25)

ஆன்மாவே மந்திரமா மான்மா வுக்கே
யான்மாவே செபமாகு மான்மாவுக்கே
யான்மாவே தீர்த்தமுமா மான்மா வுக்கே
யான்மாவே தானமுமா மான்மா வுக்கே
யான்மாவே தலமாகு மான்மா வுக்கே
யான்மாவே பலமாகு மான்மா வுக்கே
யான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்கா. (26)

ஆன்மாவே சிரவணமா மான்மா வுக்கே
யான்மாவே மனனமுமா மான்மா வுக்கே
யான்மாவே நியானமுமா மான்மா வுக்கே
யான்மாவே சமாதியுமா மான்மா வுக்கே
யான்மாவே ஞானமுமா மான்மா வுக்கே
யான்மாவே மோட்சமுமா மான்மா வுக்கே
யான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் ம்மந்கா. (27)

ஆன்மாவே நராகுஞ் சுரரு மாகு
மான்மாவே யயனகு மரியு மாகு
மான்மாவே யரனகுஞ் சிவனு மாகு
மான்மாவே யுமைமுதலாஞ் சத்தி யாகு
மான்மாவே நீயாகு நானு மாகு
மான்மாவே மற்றுமுளோ ராரு மாகு
மான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (28)

ஆன்மாவே சகசீவ பரங்க ளாகு
மான்மாவே யனேத்துக்கு மதீத மாகு
மான்மாவே யழியாத வுண்மை யாகு
மான்மாவே சுயஞ்சோதி சுபாவ மாகு
மான்மாவே நித்தியமாஞ் சுத்த மாகு
மான்மாவே நிரதிசயா நந்த மாகு
மான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (29)

ஆன்மாவே துரியபர சொரூப மாகு
மான்மாவே துரியத்து மதீத மாகு
மான்மாவே விமலபர சொரூப மாகு
மான்மாவே விபுவான சொரூப மாகு
மான்மாவே யவிநாச சொரூப மாகு
மான்மாவே யகண்டபர சொரூப மாகு
மான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (30)

ஆன்மாவே சாலவுப சாந்த மாகு
மான்மாவே சத்தியசிற் சுகமு மாகு
மான்மாவே யகண்டபரி பூன்ற மாகு
மான்மாவே யத்துவித சொரூப மாகு
மான்மாவே யலதிங்கோ ரணுவு மில்லை
யான்மாநீ யான்மாநர் னன்மா வெல்லா
மான்மாவே யகிலமுமா மதுவே நானென்
றறிந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (31)

நித்தியனு னிட்களனு னிரஞ்ச னன்னு
னிருமலனு னிகிலபரி பூன்ற னானே
சத்தியனுன் சாந்தனுநான் சனாத னன்னுன்
சகலமுநான் சாசுவத சம்பு நானே
சுத்தனுநான் சுகனனனுன் சுதந்த ரன்னுன்
சூக்குமனுன் சுயஞ்சோதி சொரூப னானே
முத்தனுநான் மோட்சமுநான் மோச கன்னுன்
மோகமிலா மூதுணர்வா மூர்த்தி நானே. (32)

புராதனனுன் புருடனுநான் பூர ணன்னுன்
புனிதனுநான் புரையற்ற பொருளு நானே
சொராமரண சூனியனுன் சிற்க னன்னுன்
சின்மயனுன் சிதாகாய சொரூப னானே
நிராமயனு னிர்க்குணனு னிரந்த ரன்னு
னிருபமனு னிரதிசயா நந்த னானே
பாரற்பரனுன் பரசிவனுன் பரமான் மாநான்
பரம்பொருணுன் பரப்பிரம சொரூப னானே. (33)

பகவனுநான் பரேசனுநான் பரிசுத் தன்னுன்
பசுபாசம் படைப்பவனு னழிப்போ னானே
சுகனனனுன் சுகமதனை நல்கு வோனுன்
சோர்விலனுன் சுயம்புவதாஞ் சொரூப னானே
நிகிலமுநா னிகிலசகத் கார ணன்னு
னிகிலமிலா நிட்கிரிய சொரூப னானே
யகமிலனுன் சனைமரண மணுகா தோனு
னகண்டமதா மத்துவித சொரூப னானே. (34)

சிவசக பரமான சொரூப நானே
சிவன்முதற் சிறிதுமிலாச் சொரூப நானே
கேவலமாம் பரப்பிரம சொரூப நானே
கெம்பீர மானபர சொரூப நானே
பாவனமாம் பரப்பிரம சொரூப நானே
பரமசிதா காயபர சொரூப நானென்
றுவலுட னகண்டபரப் பிரம ஞான
மடைந்தகனுற் சித்தசெய மடைவாய் மைந்தா. (35)

சகசீவ பரங்களெனச் சிறிது மில்லை
சகசீவ பரங்களெனச் சிறிது மில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம ரூப
மகிலமுமே யகண்டபரப் பிரம ரூப
நிகிலமுமாம் பரப்பிரம சொரூப நானே
நிகிலமுமாம் பரப்பிரம சொரூப நானென்
றகமுறவே யகண்டபரப் பிரம ஞான
மடைந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (36)

கற்போல வசைவற்றுக் களங்க மற்றுக்
கறையற்றுக் கலந்தெங்கு நிறைந்த தான
சற்போத சுகனமாம் பிரமந் தானே
சகசீவ பரங்களெனக் காண்ப தாலே
யெப்போது மெல்லாமும் பிரம மென்று
மேகபரி பூரணமா மதுநா னென்று
மிப்போதந் தனையுரமா யிசைந் திவற்ரு
லெளிதாகச் சித்தசெய மிசைவாய் மைந்தா. (37)

அனர்த்தத்தின் வித்தான வவித்தை யில்லை
யதன்செயலா மகங்கார முதலு மில்லை
யனைத்துக்குங் காரணமா மாயை யில்லை
யதனுடைய காரியமு மணுவு மில்லை
சனித்தசக சீவபரந் தானு மில்லை
சகலமுமே சந்ததமும் பாமே யென்றுந்
தனித்தபர நானென்றுந் திடஞா னத்தாற்
றப்பாது சித்தசெயஞ் சார்வாய் மைந்தா. (38)

மகிழ்வுதரு ஞானமிலை ஞேய மில்லை
மாற்றியிடும் பந்தமிலை வீடு மில்லை
யகிலமுமே யகண்டசிதா காய மான
வத்துவித பரப்பிரம சொரூப மேயா
மிகழ்வறவே யெல்லாமாய் நிறைந்து நின்ற
வேகபரி பூரணவச் சொரூப நானென்
றகமுறவே யகண்டபர ஞானந் தன்னை
யடைந்ததனற் சித்தசெய மடைவாய் மைந்தா. (39)

சித்தமில்லை சித்தமில்லை சித்தே யெல்லாஞ்
சித்தமில்லை சித்தமில்லை சித்தே யெல்லாஞ்
சத்தியமே சத்தியமே சங்கை யில்லை
சம்புபதந் தன்னுணை சங்கை யில்லை
சித்ததுநான் சித்ததுநான் சித்தே யெல்லாஞ்
சித்ததுநான் சித்ததுநான் சித்தெல் லாமென்
றித்திறமாந் திடபோத மிசைந் திவற்று
லெளிதாகச் சித்தசெய மிசைவாய் மைந்தா. (40)

எனக்கயலாய் மாயையில்லை யீச னில்லை
யெனக்கயலா யவித்தையில்லை சீவ னில்லை
யெனக்கயலாய்த் தாமதமாம் பகுதி யில்லை
யெனக்கயலாய்த் தங்கியிடுஞ் சகத்து மில்லை
யெனக்கயலாய்ப் பார்க்குமொரு பொருளு மில்லை
யெனக்கயலாய்ப் பரப்பிரமந் தானு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை யெல்லா நானென்
றித்திறமா முறுதியினற் சித்தம் வெல்வாய். (41)

எனக்கயலாய்த் தற்பதமாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்த் துவம்பதமாம் பொருளு மில்லை
யெனக்கயலா யசிபதமாம் பொருளு மில்லை
யெனக்கயலா யகண்டமதாம் பொருளு மில்லை
யெனக்கயலா வாச்சியமாம் பொருளு மில்லை
யெனக்கயலா யிலட்சியமாம் பொருளு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை யெல்லா நானென்
றித்திறமா முறுதியினற் சித்தம் வெல்வாய். (42)

எனக்கயலாய்ச் சத்தான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சித்தான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சுகமான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சுத்தமதாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்த் துவிதமெனும் பொருளு மில்லை
யெனக்கயலா யத்துவிதப் பொருளு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை யெல்லா நானென்
றித்திறமா முறுதியினற் சித்தம் வெல்வாய். (43)

எனக்கயலாய்க் காண்பதெலா மித்தை யேயா
மெனக்கயலாய்க் காண்பதெலா மசத்தே யாகு
மெனக்கயலாய்க் காண்பதெலா மிந்த்ர சால
மெனக்கயலாய்க் காண்பதெலா மிரச்சு சர்ப்ப
மெனக்கயலாய்க் காண்பதெலா மலடி மைந்த
னெனக்கயலாய்க் காண்பதெலா சசவி ஷாண
மெனக்கயலா யணுவுமில யெல்லா நானென்
றித்திறமா முறுதியினுற் சித்தம் வெல்வாய். (44)

பிரமமெலா மதுவேநா னென்றிவ் வண்ணம்
பேதமிலா வுணர்வுதிட மாகு மட்டும்
பிரமமெலாம் பிரமமெலாம் பிரம நானே
பிரமமெலாம் பிரமமெலாம் பிரம நானென்
றிருருமைதரும் பாவனையே செய்ய வேண்டு
மோதியவிப் பாவனைதா னுரக்கும் போது
சருவமுமே பிரமமெனு மதுநா னென்னுஞ்
சலனமிலாப் பரஞானஞ் சகச மாகும். (45)

ஆதலினு லகிலமுமே பிரம மென்று
மகண்டபரப் பிரமமது நானே யென்றுஞ்
சாதகமாம் பாவனையாற் சகச ஞானஞ்
சார்ந்தனுற் சித்தசெயந் தனையுஞ் சார்வா
யோதியவா சித்தசெயஞ் சார்வா யாகி
லொன்றுமுனக் கதன்பின்பு செய்வ தில்லை
யேதுமுணர் பரமசிவ னெனக் குரைத்த
வியல்பாக யாவுமுனக் குரைத்தே னன்பால். (46)

நிதாகநினக் கிவ்வண்ண முரைத்த தெல்லா
நிச்சயமே வெகுவிதமாய் நிகழ்த்தி யென்ன
சதாவுமகம் பிரமமெனு நிச்ச யத்தைச்
சற்றேனுந் தவிராது சாதிப் பாயே
லதாலெளிதிற் சித்தசெய மடைந்திங் கத்தா
லகண்டபரப் பிரமசுக மடைந்து வாழ்வா
யுதாரபரி பூரணமாஞ் சிவன்றன் ரூணை
யுரைத்ததிலோ ரையமில யுண்மை சொன்னேன். (47)

எவ்விதமாய்க் காண்பதுவும் பரமே யென்று
மேகபரி பூரணவப் பாரா மென்றுஞ்
செவ்வியதாம் பாவனையே செய்த வற்றூற்
சித்தசெயம் பெற்றவரே முத்த ராவ
ரிவ்விதமாய்ப் பரசிவனு லிசைக்கப் பட்ட
விப்பொருளே யுறுதியுட னெருகா லேனுங்
கவ்வியிடா மனதுடனே கேட்டு ணர்ந்தோர்
தப்பாது பரப்பிரமந் தாமே யாவர். (48)

நரர்சுராராய்த் திரியக்காய் நகவ ருதி
நாநாவாய் நாடியிடு நாட்ட மெல்லாந்
தெரிவுருவாய்த் திகழ்கின்ற தேவ தேவன்
றிருவுருவே யென்றுநிடத் தியானஞ் செய்தே
யிருகுணமு மிகந்தமல சத்வ மேலா
யிருக்கின்ற சூக்கமனு விருத்தி கொண்டே
பரமசிவன் பரிபூன்ற சொரூபந் தன்னைப்
பார்த்திடலா மற்றொன்றூற் பார்க்க வொண்ணு. (49)

ஆதலினு லறிவுற்றுக் காண்ப தெல்லா
மறிவுருவாம் பரசிவமே யதுவே நாமென்
றேதமிலாத் தியானத்தாற் சூக்க மான
விதயத்தின் விருத்தியினுற் சிவங்கண் டோரே
பீதிசெயுஞ் சித்தத்தைச் செயித்தெப் போதும்
பெரிதான பிரம்சுகம் பெறுவ ரென்றே
சீதளமா ரிபுமுனிவ னிதாக னுக்குச்
சித்தசெய வுபாயத்தைச் செப்பி ஞனுல். (50)

வேறு.

சித்தமூலஞ் செறிந்தசெகம்பல சீவரீசருஞ் சிற்பரமேயெனு
மத்தமின்றிய வப்பரானெனு மசலமாய்ப்பெறு நிச்சயஞானமே
மெத்தவுத்தம சித்தசெயந்தனே மேவுநல்ல வுபாயமெனச்சொலல்
நித்தியாநந்தத்தாண்டவமாடுநங் நிகரிலீசனகண்டசொரூபமே. (51)

பதினேந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 15-க்கு திருவிருத்தம்-672.

பதினேழாவது

சித்த சாந்தி யுரைக்கும்
அத்தியாயம்.

நிதாகபரா நந்தபரம் பொருளே மீண்டு
நினைக்குமிகக் கருணையினு னிகழ்த்தக் கேளா
யிதானவையெவ் வுலகத்து மரிதா மித்தை
யிதயத்திற் சிந்திப்போ ரெவ்வி தத்தஞ்
சதாநந்த கனமான பரமே யாகிச்
சலனமுறுச் சாந்தநிலை சார லாவ
ரதாலனிசு மகண்டபர நானே யென்றிங்
காதாரவாய்ச் சிந்தித்துச் சாந்த னுவாய். (1)

சந்ததமும் பரப்பிரமா நந்த நானே
சலனமிலாப் பரப்பிரமா நந்த நானே
புந்தியுறும் பரப்பிரமா நந்த நானே
பூரணமாம் பரப்பிரமா நந்த நானே
சிந்தையிலாப் பரப்பிரமா நந்த நானே
சின்மயமாம் பரப்பிரமா நந்த நானே
யந்தமிலாப் பரப்பிரமா நந்த நானென்
றநவரதஞ் சிந்தித்துச் சாந்த னுவாய். (2)

நித்தியமாம் பரப்பிரமா நந்த நானே
நிரதிசய பரப்பிரமா நந்த நானே
சத்தியமாம் பரப்பிரமா நந்த நானே
சாசுவத பரப்பிரமா நந்த நானே
யத்தமிலாப் பரப்பிரமா நந்த நானே
யகண்டமதாம் பரப்பிரமா நந்த நானே
யத்துவித பரப்பிரமா நந்த நானென்
றநவரதஞ் சிந்தித்துச் சாந்த னுவாய். (3)

சிதானந்த மயமாகு மாயை யாதி
சிதானந்த மயமாகு மீச னுதி
சிதானந்த மயமாகு மவித்தை யாதி
சிதானந்த மயமாகுஞ் சித்த மாதி
சிதானந்த மயமாகுஞ் சீவ னுதி
சிதானந்த மயமாகுஞ் சிவனே யாதி
சிதானந்த மயமெல்லா மதுநா னென்றே
சிரத்தையுடன் சிந்தித்துச் சாந்த னுவாய். (4)

சதாநந்த மயமான பிரம மெல்லாஞ்
சதாநந்த மயமான பிரம மேநான்
சிதாநந்த மயமான பிரம மெல்லாஞ்
சிதாநந்த மயமான பிரம மேநா
னுதாரபரி பூரணமாம் பரமே யெல்லா
முதாரபரி பூரணமாம் பரநா னென்றே
நிதாகமிக வருந்திவிடா முயற்சி யோடு
நித்தமுநீ சிந்தித்துச் சாந்த னுவாய். (5)

மித்தையெனுஞ் சித்தமுமே யென்று மில்லை
மிகப்பொய்யாஞ் சகமுதலு மென்று மில்லை
மித்தையெனும் வார்த்தையுமே யென்று மில்லை
மிகமிகவு மூடனெனுஞ் சனமு மில்லை
சத்தியசிற் சுகபரமே யெல்லா மென்றுஞ்
சந்ததமு மப்பரம நானே யென்று
மித்திறமே நிடமான முயற்சி யோடு
மெப்போதுஞ் சிந்தித்துச் சாந்த னுவாய். (6)

தீங்கான சித்தமுத லெவையு மில்லை
திருசியமாய்த் தெரிகின்ற சகமு மில்லை
யாங்கார முதலியதோ ரணுவு மில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம மேயாம்
நீங்காம லெங்குமொரு நிறைவாய் நின்ற
நிமலவறி வானபர நானே யென்று
தூங்காது தூங்குநிலை கிட்டு மட்டுந்
தொடர்பாகச் சிந்தித்துச் சாந்த னுவாய். (7)

இகபரமென் றிறையளவு மெங்கு மில்லை
யெல்லாமும் பரப்பிரம மான நானே
சுககனமாம் பரப்பிரம சொரூப நானே
சுத்தவறி வானபர சொரூப நானே
யகமகமென் றிலங்குபர சொரூப நானே
யகண்டவடி வானபர நானே யென்று
சகலமனே விகற்பமுமே கவிரு மட்டுஞ்
சந்ததமுஞ் சிந்தித்துச் சாந்த னுவாய். (8)

இகழ்வில்பர சத்தான சொரூப நானே
யிலங்குபர சித்தான சொரூப நானே
நிகரில்பர மாநந்த சொரூப நானே
நிகிலமுமாய் நிறைந்தபர சொரூப நானே
பகுதிமுத லெவையுமிலாச் சொரூப நானே
பராற்பரமாம் பரப்பிரம நானே யென்று
சகமுதலாய்த் தோற்றுவது மறையு மட்டுஞ்
சந்ததமுஞ் சிந்தித்துச் சாந்த ஞவாய். (9)

சகலமுமே சந்ததமும் பிரம ரூபஞ்
சகசீவ பரங்களெலாம் பிரம ரூப
நிகிலமுமாம் பரப்பிரம சொரூப நானே
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப நானே
யகமனிச மகண்டபரப் பிரமந் தானே
யகமமல பரப்பிரமந் தானே யென்று
சகமுதலாய்த் தோற்றுவது மறையு மட்டுஞ்
சந்ததமுஞ் சிந்தித்துச் சாந்த ஞவாய். (10)

சத்தியமாய்ச் சகமெவையு மென்று மில்லை
சஞ்சலமாஞ் சித்தமதே சகம்போற் ரோன்றும்
புத்திரனே யாதலினற் சித்தந் தானே
பொய்யான சகமென்று புகல லாகுஞ்
சித்தமதே மகத்தான தோட மாகுஞ்
சித்தமதே மகத்தான மாயை யாகுஞ்
சித்தமதே சிசுவென்னச் சுழல்வ தாகுஞ்
சித்தமதே தேகமுத லனைத்து மாமே. (11)

சித்தமதே சிவனெனைத் தெரிவ தாகுஞ்
சித்தமதே சகலமுமாய்த் தெரி வதாகும்
புத்திரனே யாதலினற் சகசீ வாதி
புகல்சித்த மயமேயா மந்தச் சித்த
மெத்தவுமே யசத்தாகு மித்தை யாகு
மிகப்பொய்யா மலடிமக னிகரே யாகுஞ்
சத்தலதா முயற்கோட்டின் சமான மாகுஞ்
சந்ததமுஞ் சூனியமாஞ் சங்கை யில்லை. (12)

சித்தமதே யவிசார தசையின் மைந்தா
செகசீவ பரங்களெனத் தெரிந்த போதுஞ்
சித்தமதே விசாரிக்கிற் செகசீ வாதி
சிறிதுமிலாச் சித்தான பிரம மேயாஞ்
சித்தசெய மெளிதாகச் சேர வேண்டிச்
சித்தமய மானசெக முதலாம் யாவுஞ்
சித்ததுவாம் பரமென்று மதுநா னென்றுஞ்
சிரத்தையுடன் சிந்தித்துச் சாந்த னுவாய். (13)

மனதெனவுஞ் சித்தமதே தோற்ற லாகு
மனததுவே மகத்தான மாயை யாகு
மனததுவே சீவசக மனத்து மாகு
மனததுவே தேகமுத லனைத்து மாகு
மனததுவே மகத்தான பவமு மாகு
மனததுவே மகத்தான பாச மாகு
மனததுவே மகத்தான பாவ மாகு
மனததுவே மகத்தான தன்ப மாமே. (14)

மனததுவே மகத்தான பகையு மாகு
மனததுவே மகத்தான பயமு மாகு
மனததுவே சங்கற்ப வடிவ மாகு
மனததுவே சஞ்சலமாஞ் சுபாவ மாகு
மனததுவே நரசுரர் சுரரு மாகு
மனததுவே யயனரியு மரனு மாகு
மனததுவே பிரமாண்ட கோடி யாகு
மனததுவே பின்னுமுள தெவையு மாமே. (15)

மனததுதான் சலவுணர்வு வடிவ மாகு
மனததுவே சகலமுமாய்த் தெரிவ தாகு
மனததுதான் சகலமுமாய் மறிக்க லாகு
மனததுவே சகலமெனப் புகல லாகு
மனததுதான் மெத்தவுமே மித்தை யாகு
மனதுமகேந் திரசால நிகரே யாகு
மனததுதா னெப்போது மசத்தே யாகு
மனதென்று மலடிமக னிகரே யாமால். (16)

மனததுதா னவிசார தசையின் மைந்தா
மயக்கமுறு சகமுதலாய்த் தோற்றி னது
மனதுருவை மாறுது விசாரஞ் செய்தான்
மற்றதுதான் மகத்தான சித்தே யாகு
மனததனை யெளிதாகச் செயித்தெப் போது
மகத்தான சித்துருவே யாக வேண்டி
மனதுமுத லெல்லாஞ்சித் ததுநா னென்றே
மாறுது சிந்தித்துச் சாந்த னுவாய். (17)

மனேசயமே நிடமாக மன்னுமட்டு
மற்றுள்ள வியாபார மனைத்தும் விட்டு
வினேதமதா யாவுஞ்சித் ததுநா னென்றே
விருப்பமுடன் விடாதுமிகச் சிந்தை செய்தான்
மனேசயமாய் மகத்தான வறிவு நிக்கு
மற்றதனுற் சகமுதலா மிருளி றக்கு
மினேதயமே யாகியிடி லிருளெங் கேனு
மிருப்பதனை யாரேனுங் கண்ட துண்டோ. (18)

அனகவறி வானபரப் பிரமந் தானே
யவித்தையினு லசைவுறுமேன் மனதாய்த் தோற்றும்
வினவுமறி வானபரப் பிரமந் தானே
வித்தையினு லசைவறுமேற் பரமே யாகு
மனதுவுஞ் சலனமுட னிருக்கு மாகின்
மகத்தான சீவபர சகமாய்த் தோற்று
மனதுவே சலனமிலா திருக்கு மாகின்
மாசற்ற வறிவான பரமே யாமால். (19)

ஆதலினு லறிவுற்ற மனதே யாதி
யகிலமுமே யறிவான பிரம மென்றும்
பேதமிலா வப்பிரம நானே யென்றும்
பிரிவறவே யெப்போதுஞ் சிந்தை செய்து
சாதகமாஞ் சிந்தனையான் மனதை வென்று
சலமனதின் சலனமெலாந் தவிர்ந்த பின்னை
சோதியவச் சிந்தனையு மொழிந்தெப் போது
மூணர்வுருவாம் பரமாகிச் சாந்த னுவாய். (20)

போதகன மானபரப் பிரம நானே
பூரணவா நந்தபரப் பிரம நானே
யேதுமிலா துள்ளபரப் பிரம நானே
யெப்போது மசஞ்சலமாம் பிரம நானே
யாதிமுடி வற்றபரப் பிரம நானே
யகண்டவடி வானபர நானே யென்று
சாதகமாஞ் சிந்தனையான் மனதை வென்று
சலனமிலாப் பரமாகிச் சாந்த னுவாய். (21)

ஒருவடிவா யுள்ளபரப் பிரம நானே
யுணர்வுருவா யோய்ந்தபரப் பிரம நானே
நிரதிசயா நந்தபரப் பிரம நானே
நிகிலமுமாய் நிறைந்தபரப் பிரம நானே
பரவுபரா காயபரப் பிரம நானே
பாரற்பரமாம் பரப்பிரம நானே யென்று
மருவுநிட பாவனையான் மனதை வென்று
மாசற்ற பரமாகிச் சாந்த னுவாய். (22)

நிருமலமாம் பரப்பிரம சொரூப நானே
நித்தியமாம் பரப்பிரம சொரூப நானே
சருவமுமாம் பரப்பிரம சொரூப நானே
சகலமிலாப் பரப்பிரம சொரூப நானே
கிரியையிலாப் பரப்பிரம சொரூப நானே
கேவலமாம் பரப்பிரம சொரூப நானென்
றரியநிட பாவனையான் மனதை வென்றவ்
வகண்டபர வடிவாகிச் சாந்த னுவாய் (23)

எனக்கயலாய்க் காரணமஞ் ஞான மில்லை
யெனக்கயலாய்க் காரியவாங் கார மில்லை
யெனக்கயலாய்ப் புத்தியிலை சித்த மில்லை
யெனக்கயலாய் மனதுமிலை மலமு மில்லை
யெனக்கயலா யுயிர்களிலை பொறிக ளில்லை
யெனக்கயலா யுடலுமிலை புலனு மில்லை
யெனக்கயலா யெவையுமிலை பரமே நானென்
றெப்பொதும் பாவித்துச் சாந்த னுவாய். (24)

எனக்கயலா யாச்சிரம வன்ன மில்லை
யெனக்கயலா யறம்பாவ மெமையு மில்லை
யெனக்கயலாய்த் தோடமில்லை குணமு மில்லை
யெனக்கயலாய்த் துன்பமில்லை யின்ப மில்லை
யெனக்கயலாய்ச் செபமுமில்லை தவமு மில்லை
யெனக்கயலாய் மந்திரதந் திரமு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (25)

எனக்கயலாய்த் தலமுமில்லை தீர்த்த மில்லை
யெனக்கயலாய்த் தெய்வமில்லை சேவை யில்லை
யெனக்கயலாய்ப் பத்தியில்லை பலனு மில்லை
யெனக்கயலாய் நாகமில்லை நரக மில்லை
யெனக்கயலாய்க் காலமில்லை தேச மில்லை
யெனக்கயலாய்க் கண்டிடுமோர் வத்து மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (26)

எனக்கயலாய்ச் சாதியில்லை நீதி யில்லை
யெனக்கயலாய்க் கோத்திரமுங் குலமு மில்லை
யெனக்கயலாய்த் தந்தையில்லை தாயு மில்லை
யெனக்கயலாய்த் தமருமில்லை பிறரு மில்லை
யெனக்கயலாய் நயவரில்லை பகைவ ரில்லை
யெனக்கயலாய் நிந்தையில்லை துதியு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (27)

எனக்கயலாய்க் காமமில்லை கோப மில்லை
யெனக்கயலாய் லோபமில்லை மோக மில்லை
யெனக்கயலாய் மச்சரமு மதமு மில்லை
யெனக்கயலாய் மானமவ மான மில்லை
யெனக்கயலாய்ப் பயமுமில்லை நயமு மில்லை
யெனக்கயலாய்ப் பாசமில்லை நாச மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (23)

எனக்கயலா யுயர்வுமில்லை தாழ்வு மில்லை
யெனக்கயலா யுய்யுமொரு விருத்தி யில்லை
யெனக்கயலாய்ப் போகமில்லை போத்தா வில்லை
யெனக்கயலாய்ப் போக்கியமாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்க் கருமமில்லை கர்த்தா வில்லை
யெனக்கயலாய்க் காரியமாம் பொருளு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (29)

எனக்கயலாய்த் தேகமில்லை சென்ம மில்லை
யெனக்கயலாய்ச் சைசவயவ் வனமு மில்லை
யெனக்கயலாய்ச் சரையுமில்லை மரண மில்லை
யெனக்கயலாய்ச் சிறிதுமொரு விகார மில்லை
யெனக்கயலா யுள்ளுமில்லை வெளியு மில்லை
யெனக்கயலா யடிநடுவு முடிவு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (30)

எனக்கயலாய்ப் பூதமில்லை புவன மில்லை
யெனக்கயலாய்ப் பௌதிகமாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சலனமில்லை சாந்தி யில்லை
யெனக்கயலாய்ச் சக்தியில்லை சித்தி யில்லை
யெனக்கயலாய்ப் பவமில்லை பந்த மில்லை
யெனக்கயலாய்ப் பாமுமில்லை வீடு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (31)

எனக்கயலாய்ச் சைவமுதன் மதமு மில்லை
யெனக்கயலாய்ச் சிவன்முதலாந் தெய்வ மில்லை
யெனக்கயலாய்ச் சொல்லியவா கமமு மில்லை
யெனக்கயலாய்ச் சுருதியில்லை நூலு மில்லை
யெனக்கயலாய் மிருதியில்லை புராண மில்லை
யெனக்கயலாய் மேவுமிதி காச மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (32)

எனக்கயலாய்த் தள்ளியிடும் பொருளு மில்லை
யெனக்கயலாய்க் கூட்டியிடும் பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சத்தியமாம் பொருளு மில்லை
யெனக்கயலாய் மித்தையெனும் பொருளு மில்லை
யெனக்கயலாய்த் திருஷியமாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்த் திருக்கான பொருளு மில்லை
யெனக்கயலா யெவையுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (33)

எனக்கயலாய் மூன்றுவித தேக மில்லை
யெனக்கயலாய் மொழிந்திடுமூன் றவத்தை யில்லை
யெனக்கயலாய்ப் பஞ்சவித கோச மில்லை
யெனக்கயலாய்ப் படருமபி மானி யில்லை
யெனக்கயலா வியட்டியில்லை சமட்டி யில்லை
யெனக்கயலாய்ச் சகசீவ பாமே யில்லை
யெனக்கயலா யணுவுமில்லை பரமே நானென்
றெப்போதும் பாவித்துச் சாந்த னுவாய். (34)

பிரமவடி வானவெனக் கிதர மாகப்
பிறங்கியிடு மிதுவென்னும் பொருளு மில்லை
பிரமவடி வானவெனக் கிதர மாகப்
பிறங்கியிடு மகமென்னும் பொருளு மில்லை
பிரமவடி வானவெனக் கிதர மாகப்
பிறங்குமொரு பொருளுமொரு காது மில்லை
பிரமவடி வகமென்றே யிடை விடாமற்
பிரியமுடன் பாவித்துச் சாந்த னுவாய். (35)

அன்னியமாய்க் காண்பதெலாம் பிரம மாத்ர
மாதலினு லுளதுபரப் பிரம மொன்றே
யின்னவித மிருந்திடினு நினைக்கப் போதிங்
கியம்பியிடுங் குருசீட னுலகமாதி
பின்னமெனத் தோற்றிடுமேற் பேத மெல்லாம்
பிரமமெனு மப்பிரம நானே யென்னு
மன்னுதிட பாவனையான் மனதை வென்று
மகத்தான பிரமமகாய்ச் சாந்த னுவாய். (36)

ஆன்மாவுக் கயலாக வணுவு மில்லை
யகிலமுமே யநவரத மான்மா வேயா
மான்மாவுக் கயலாகப் பிரம மில்லை
யப்பிரமந் தனக்கயலா யான்மா வில்லை
யான்மாவே யகண்டபரப் பிரம மாகு
மகண்டபரப் பிரமமதே யான்மா வாகு
மான்மாவாம் பரப்பிரம மகமே யென்றிங்
கனிசமுநீ பாவித்துச் சாந்த னுவாய். (37)

ஆன்மாவே யகிலவநிட் டான மாகு
மான்மாவே யனைத்துக்குஞ் சார மாகு
மான்மாவே யகிலமுமாஞ் சொரூப மாகு
மான்மாவே யனைத்துமிலாச் சொரூப மாகு
மான்மாவே யத்துவித சொரூப மாகு
மான்மாவே யகண்டபரப் பிரம மாகு
மான்மாவாம் பரப்பிரம மகமே யென்றிங்
கனிசமுநீ பாவித்துச் சாந்த னுவாய். (38)

ஆன்மாவே நித்தியமாஞ் சத்து மாகு
மான்மாவே நிருமலமாஞ் சித்து மாகு
மான்மாவே நிரதிசயா நந்த மாகு
மான்மாவே நிகிலபரி பூன்ற மாகு
மான்மாவே நிட்களமாஞ் சொரூப மாகு
மான்மாவே நிறைந்தபரப் பிரம மாகு
மான்மாவாம் பரப்பிரம மகமே யென்றிங்
கனிசமுநீ பாவித்துச் சாந்த னுவாய். (39)

சன்மயமாம் பரப்பிரம சொரூப மெல்லாஞ்
சன்மயமாம் பரப்பிரம சொரூப நானே
சின்மயமாம் பரப்பிரம சொரூப மெல்லாஞ்
சின்மயமாம் பரப்பிரம சொரூப நானே
நின்மலமாம் பரப்பிரம சொரூப மெல்லா
நின்மலமாம் பரப்பிரம நானே யென்று
தன்மயமாம் பாவனையான் மனதை வென்று
கற்பமே தானுகிச் சாந்த னுவாய். (40)

அகிலமுமே பரப்பிரம மைய மில்லை
யகமகந்தப் பரப்பிரம மைய மில்லை
நிகிலமுமாம் பரப்பிரம மதுநா னென்றே
நிரந்தரமாய்ப் பாவித்து மனதை வென்று
சுகனமாம் பரப்பிரமந் தானே யாகிச்
சும்மாவே யிருக்கின்ற சாந்தி தானே
தகைமைமிகும் பூசனையாந் தான மாகுந்
தவமாகுஞ் செபமாகுஞ் சமாதி யாமே. (41)

ஆதலினு லமலமதா மனதி னுலே
யநவரதம் பரப்பிரம விசாரஞ் செய்தே
போதகன பரப்பிரமந் தானே யெல்லாம்
பூரணமாம் பரப்பிரம மதுநா னென்று
சாதகமாம் பாவனையே திடமாய்ச் செய்து
சஞ்சலமா யுளமனதை நன்றாய் வென்று
சோதிமிகும் பரப்பிரமந் தானே யாகிச்
சும்மாவே யிருக்கின்ற சாந்தி சார்வாய். (42)

விக்தரமாம் வாரிதியிற் றோன்று நின்ற
விசிமுதல் வாரிதியே யாவதே போற்
சித்தருவா மென்னிடையிற் றோன்று நின்ற
செகசீவ பாங்களெலாஞ் சித்தா நானே
யத்திறமா நானென்றும் பிரம மென்றே
யநவரதம் பாவித்து மனதை வென்று
சுத்தமதாம் பரப்பிரமந் தானே யாகிச்
சும்மாவே யிருக்கின்ற சாந்தி சார்வாய். (43)

நில்லாம லெங்குமொரு நிகழ்வாய் நின்ற
நிகிலபரி பூரணமாம் பிரம ரூப
மல்லாம லோரணுவு மெங்கு மில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம மேயா
மெல்லாமாம் பரப்பிரம நானே யென்றிங்
கெப்போதும் பாவித்து மனதை வென்று
சொல்லாலுஞ் சொல்லவொணாப் பரமே யாகிச்
சும்மாவே யிருக்கின்ற சாந்தி சார்வாய். (44)

பூதமொடு பௌதிகமும் புவனம் யாவும்
புராணமுதற் புகல்கின்ற பலவா நூலும்
வேதமொடு வேதாந்த மவற்றின் கேள்வி
வேறறவே யதன்மனன நிதித்தி யாச
மீதுமுத லெப்பொருளு மென்று மில்லை
யெல்லாமும் பரப்பிரம மதுநா னென்றே
சாதகமாம் பாவனையான் மனதை வென்று
சற்றேனுஞ் சலியாது சாந்த னுவாய். (45)

அறைந்தபொரு ளனைத்தையுமே வாக்கு மாத்ர
மறக்காம லாதரவாய் மனதிற் கொண்டு
செறிந்தமன தொருமையுட னெல்லா மென்றுஞ்
சின்மயமாம் பரப்பிரம மதுநா னென்றே
நிறைந்தபர பாவனையான் மனதை வென்று
நிச்சலனு யெப்போதுஞ் சாந்த னுவா
யறைந்ததெலாஞ் சத்தியமே யைய மில்லை
யகண்ட பர சிவனுனை யையமில்லை. (46)

மனந்தனினுற் செய்வதுவே செய்த தாகு
மற்றொன்றுற் செய்வதெலாஞ் செய்த தாகா
தினந்தினமுந் திடமான மனதி னுலே
திருசியமாய்க் காண்பதெலாந் திருக்கே யான
வனந்தபரப் பிரமமெனு மதுநா னென்னு
மகண்டபர பாவனையே செய்வா யாகிற்
கனந்தருமப் பாவனையான் மனதை வென்று
கலங்காம லெப்போதுஞ் சாந்த னுவாய். (47)

மனதென்றும் வாக்கென்று மற்ற தென்று
மருவியவிப் பேதமுமே யெனக்கிங் கில்லை
கனவினுறும் பொருள்களிலெப் பொருளே யேனுங்
காண்கின்ற தனக்கயலாக் கண்ட துண்டோ
நனவினுறும் பொருள்களுமவ் விதமே யாக
நாடியிடு ஞானவடி வான நானே
யெனுமுமாம் பாவனையான் மனதை வென்றவ்
வேகபர வடிவாகிச் சாந்த னுவாய். (48)

சகலமுமே சின்மயமாம் பிரம மென்றுஞ்
சந்தமப் பரப்பிரம நாமே யென்று
மகமுறவே பாவிப்போர் மனதை வென்றவ்
வகண்டபர வடிவாகிச் சாந்த ராவர்
நிகிலசகன் ஞயகனுஞ் சிவனெ னக்கு
நிகழ்த்தியவா நிதாகநினக் குரைத்தே னெல்லாங்
ககமைமிகு மிப்பொருளைக் கேட்டு ணர்ந்தோர்
கப்பாது பரப்பிரமந் தாமே யாவர். (49)

சுருதிமுடி வாக்கியமே சொன்ன தோர்ந்து
சூக்குமநூல் வழிசென்று பரசி வத்தை
யருமையுடன் பாவித்தவ் வருள்பெற் றோரே
யலைமனதின் விகற்பமதாஞ் சகசீ வாதி
சருவமுமே பிரமமெனுஞ் சாட்சாத் காரஞ்
சார்ந்ததனன் மோட்சசுகஞ் சார்வ தென்றே
பெருமைமிகும் ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பிரிவின்மனச் சாந்தியினைப் பேசி னனல். (50)

வேறு.

கவ்வியோடு மனத்தின்விகற்பமாய்த் தங்குகின்ற சகமுதலியாவுமே
யெவ்வமின்றிய சிற்பரமாமெனு மேகமாமது நாமெனுஞ்சிந்தையா
லிவ்விகற்பமனந்தவிர்ந்தென்றுமே யேகசாந்தியிசைந்திடலாமென
லிவ்வியாகந்தத்தாண்டவமாடுகந் தேவதேவனகண்டசொரூபமே. ()

பதினாறுவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆகஅத்தியாயம்-16க்கு திருவிருத்தம்-723.

பதினேழாவது

பரசொரூப ஞானத்தாற் பரசொரூப ஸ்திதியுரைக்கும் அத்தியாயம்.

மிகமிகவும் ரகசியமாய் மேவுதற்கு
மிகவரிதாய் மெத்தவுமே வியப்புடைத்தாய்த்
ககமைமிகு மதிகாரிக் குடனே மோட்சந்
தருவதுவா யுள்ளபர நிர்ண யத்தை
மகிழ்வுடனே நிதாகநினக் கின்னஞ் சொல்வேன்
மாசற்ற மனதுடனே யிதனைக் கேளாய்
சுகனமாம் பரப்பிரம ஞான மெத்த
சுத்தமன துடையோர்க்கே சுலப மாகும். (1)

அனந்தவித சென்மத்தி லநுட்டிப் புற்ற
வறங்களெலாம் பரிபாக மான் வர்க்கே
கனந்தருமிப் பரப்பிரம ஞானஞ் சற்றுங்
கலங்காத மனதினிடை யெளிதாத் தோன்றுங்
தினந்தினமுந் தவிராம லிச்சென் மத்திற்
றிடமாகப் பரப்பிரம வப்யா சத்தை
மனந்தனிலுற் செய்வோர்க்கு மனதின் சுத்தி
மருவியபின் பரஞான மனதிற் றோன்றும். (2)

தனதுமன முயற்சியிலுற் பிரமாப் யாசந்
தவிராது செய்தமலே செயம்பெற் றோர்க்கே
யனையபர வுணர்வெளிதா யுதிக்கு மன்றி
யன்னியருக் கெளிதாக வுதியா தென்றுஞ்
சொனவுணர்வு சுகநல்குந் துயரைத் தீர்க்குஞ்
சுபத்துக்குஞ் சுபமாகுஞ் சுலப மாகுஞ்
சனனமுதல் விகாரமெலாந் தவிர்த்துத் தன்னைச்
சத்தியசிற் சுககனமாம் பரமே யாக்கும். (3)

பரவடிவாய்ப் பவமின்றி யிருப்போ ருக்கே
பகைமனதாற் பவபீதி தோன்ற லாலே
திருசியமா மனதறுக லியாவு மென்றுங்
திருக்கான பிரமமென்று மதுநா மென்றுங்
கருதுபர பாவனையான் மனதை வென்று
கலங்காம லிருப்போர்க்கே பரஞா னத்தான்
மருளுருவாம் பவபீதி நீங்கு மன்றி
மற்றோர்க்குப் பவபீதி நீங்கா தென்றும். (4)

ஆதலினுன் மனத்துடைய விகார மான
வகிலமுமே சலவுணர்வா மனதே யென்று
மோதுமன மொருகாலுஞ் சலன மில்லா
வுணர்வுருவாம் பரமென்று மதுநா னென்றும்
பேதமிலாப் பாவனையான் மனதை வென்று
பின்னமிலாப் பரப்பிரம ஞானம் பெற்றே
யேதமிகும் பவபீதி விடுத்தெப் போது
மேகபர வடிவாகி யிருப்பாய் மைந்தா. (5)

மனமுதலாய்க் காண்பதெலாம் பிரம மேயா
மனதுமில்லை மற்றுமொரு பொருளு மில்லை
கனபவமாய்க் காண்பதெலாம் பிரம மேயர்ங்
கலக்கமுறும் பவமில்லை களங்க மில்லை
நனிபயமாய்க் காண்பதெலாம் பிரம மேயா
நாடியிடும் பயமில்லை நாட்ட மில்லை
யனிசமக மனியமிலாப் பிரம மென்றே
யறிவுசெறிந் தகண்டபர வடிவே யாவாய். (6)

வகைவகையாய்க் காண்பதெலாம் பிரம மேயாம்
வகுப்புற்ற வொருபொருளு மென்று மில்லை
தொகை தொகையாய்க் காண்பதெலாம் பிரம மேயாந்
தொகுப்புற்ற வொருபொருளு மென்று மில்லை
சகமுதலாய்க் காண்பதெலாம் பிரம மேயாஞ்
சகசீவ பரங்களெலா மென்று மில்லை
யகமனிச மனியமிலாப் பிரம மென்றே
யறிவுசெறிந் தகண்டபர வடிவே யாவாய். (7)

குருமுதலாய்க் காண்பதெலாம் பிரம மேயாங்
குருசீடர் முதலியவாய் வேறொன் றில்லை
யுருமுதலாய்க் காண்பதெலாம் பிரம மேயா
முருவருவ முதலியவாய் வேறொன் றில்லை
திருசியமாய்க் காண்பதெலாம் பிரம மேயாந்
திருசியமென் றொருபொருளு மென்று மில்லை
யருவமதாம் பரப்பிரம மதுநா னென்றே
யறிவுசெறிந் தகண்டபர வடிவே யாவாய். (8)

எல்லாமு மெப்போதும் பிரம மேயா
மெல்லாமென் றொருபொருளு மென்று மில்லை
நில்லாம லெங்குமொரு நிறைவாய் நின்ற
நிகிலபரி பூரணவப் பிரம நானே
யல்லாம லயலாகா தென்றே யென்று
மகண்டபரப் பிரமமுணர் ஞானம் பெற்றிப்
பொல்லாத பவபீதி வீடுத்தெப் போதும்
பூரணமா யுள்ளபரப் பிரம மாவாய். (9)

மோகமுதற் காண்பவெலாம் பிரம மேயா
மூலத்தவதன் செயலெல்லாம் பிரம மேயா
மாகமுதற் காண்பவெலாம் பிரம மேயா
மருவுமதன் செயலெல்லாம் பிரம மேயாந்
தேகமுதற் காண்பவெலாம் பிரம மேயாந்
திரணமுத லெப்பொருளும் பிரம மேயா
மேகமதாம் பரப்பிரம மதுநா னென்னு
மிவ்வுணர்வா லெப்போதும் பரமே யாவாய். (10)

கிரியையுமுதற் சாதனமும் பிரம மேயாங்
கிட்டியிடுஞ் சாத்தியமும் பிரம மேயாம்
பிரியமதாய்ப் புசிப்பதெலாம் பிரம மேயாம்
பெறுகின்ற வுலகமெலாம் பிரம மேயாந்
திரிகுணமா முருவமெலாம் பிரம மேயாந்
திரிவிதமா மூர்த்திகளும் பிரம மேயா
பிருமையிலா விப்பிரம நானே யென்னு
மிவ்வுணர்வா லெப்போதும் பரமே யாவாய். (11)

உத்தமமாஞ் சுரரெவரும் பிரம மேயா
மூனமிலா முனிவரரும் பிரம மேயா
மத்தியமா மானுடரும் பிரம மேயா
மற்றுமுள வுயிர்களெலாம் பிரம மேயாஞ்
சித்தமுத லெப்பொருளும் பிரம மேயாஞ்
செகசீவ பரங்களெலாம் பிரம மேயா
மத்துவித பரப்பிரம மதுநா னென்னு
மறிவுசெறிந் தகண்டபர வடிவே யாவாய். (12)

பரப்பிரமந் தனக்கயலாய்க் ககன மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்க் காற்று மில்லை
பரப்பிரமந் தனக்கயலா யங்கி யில்லை
பரப்பிரமந் தனக்கயலா யப்பு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் புவியு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் புலன்க ளில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (13)

பரப்பிரமந் தனக்கயலாய்ப் பூத மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் புவன மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் போக மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் போத்தா வில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்க் கரும மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்க் கர்த்தா வில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (14)

பரப்பிரமந் தனக்கயலாய் மோக மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தேக மில்லை
பரப்பிரமந் தனக்கயலா யோக மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் ஞான மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் பந்த மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் மோட்ச மில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (15)

பரப்பிரமந் தனக்கயலா யகந்தை யில்லை
பரப்பிரமந் தனக்கயலா யிதந்தை யில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் வியட்டி யில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ச் சமட்டி யில்லை
பரப்பிரமந் தனக்கயலா யிகமு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் பரமு மில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (16)

பரப்பிரமந் தனக்கயலாய்க் காண்பா னில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்க் காட்சி யில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் நானு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் நீயு மில்லை
பரப்பிரமந் தனக்கயலா யாரு மில்லை
பரப்பிரமந் தனக்கயலா யெவையு மில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (17)

பரப்பிரமந் தனக்கயலாய்ச் செபமு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தவமு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தலமு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தீர்த்த மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தெய்வ மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ச் சேவை யில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்றே
பரபோதம் பெற்றதனற் பரமே யாவாய். (18)

பரப்பிரமந் தனக்கயலாய்க் குரவ னில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ச் சீட னில்லை
பரப்பிரமந் தனக்கயலாய் விசார மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ப் பலமு மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்க் கால மில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்த் தேச மில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்னும்
பாவனையா லுணர்வுற்றுப் பரமே யாவாய். (19)

பரப்பிரமந் தனக்கயலாய் மாயை யில்லை
பரப்பிரமந் தனக்கயலா யீச னில்லை
பரப்பிரமந் தனக்கயலா யவித்தை யில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ச் சீவ னில்லை
பரப்பிரமந் தனக்கயலாய்ச் சகத்தே யில்லை
பரப்பிரமந் தனக்கயலோ ரணுவு மில்லை
பரப்பிரம மெல்லாமா மதுநா னென்னும்
பாவனையா லுணர்வுற்றுப் பரமே யாவாய். (20)

பிரமமுடன் சமானமொரு பொருளு மில்லை
பிரமத்துக் கதிகமொரு பொருளு மில்லை
பிரமமலா தன்னியமா யணுவு மில்லை
பிரமமதே யாவையுமாய்ப் பிறங்க லாகும்
பிரமமதே யாவர்க்கும் பிரிய மாகும்
பிரமமதே பிறங்கியபே ரின்ப மாகும்
பிரமமதே யெல்லாமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (21)

பிரமமதே பிரமத்தின் சீட ருகும்
பிரமமதே பிரமத்தின் குருவு மாகும்
பிரமமதே பிரமத்தின் றெய்வ மாகும்
பிரமமதே பிரமத்தின் பூசை யாகும்
பிரமமதே பிரமத்தின் றியான மாகும்
பிரமமதே பிரமத்தின் ஞான மாகும்
பிரமமதே யெல்லாமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (22)

பிரமமதே பிரமத்தின் றந்தை யாகும்
பிரமமதே பிரமத்தின் ரூயு மாகும்
பிரமமதே பிரமத்தின் றனய ராகும்
பிரமமதே பிரமத்தின் றமரு மாகும்
பிரமமதே பிரமத்தின் பகைவ ராகும்
பிரமமதே பிரமத்தி னயவ ராகும்
பிரமமதே யெல்லாமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (23)

பிரமமதே பிரமத்தின் குற்ற மாகும்
பிரமமதே பிரமத்தின் குணமு மாகும்
பிரமமதே பிரமத்தின் பயமு மாகும்
பிரமமதே பிரமத்தின் செயமு மாகும்
பிரமமதே பேதங்க ளனைத்து மாகும்
பிரமமதே பிரிவணுவும் பெறுத தாகும்
பிரமமதே யெல்லாமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (24)

பிரமமதே யஞ்ஞான மெனவுந் தோன்றும்
பிரமமதே யகங்கார மெனவுந் தோன்றும்
பிரமமதே புத்திமன தெனவுந் தோன்றும்
பிரமமதே சித்தமுத லெனவுந் தோன்றும்
பிரமமதே சீவசக மெனவுந் தோன்றும்
பிரமமதே சிவவடிவ மெனவுந் தோன்றும்
பிரமமதே யாவையுமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (25)

பிரமமதே தூலவடி வெனவுந் தோன்றும்
பிரமமதே சூக்கவடி வெனவுந் தோன்றும்
பிரமமதே மூர்த்தவடி வெனவுந் தோன்றும்
பிரமமதே யமூர்த்தவடி வெனவுந் தோன்றும்
பிரமமதே மூலவடி வெனவுந் தோன்றும்
பிரமமதே முழுவதுமாய்த் தோன்ற லாகும்
பிரமமதே யாவையுமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (26)

பிரமமதே சத்தியெனத் தோன்ற லாகும்
பிரமமதே சித்தியெனத் தோன்ற லாகும்
பிரமமதே சடமெனவுந் தோன்ற லாகும்
பிரமமதே சித்தெனவுந் தோன்ற லாகும்
பிரமமதே வெகுவிதமாய்த் தோன்ற லாகும்
பிரமமதே தோன்றியிடுந் தோற்ற மெல்லாம்
பிரமமதே யாவையுமா மதுநா னென்னும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (27)

பிரமமதே யான்மாவா மான்மாத் தானே
பிரமமதாம் பிரமத்துக் கயலன் றுன்மா
பிரமமய மாகியவிவ் வான்மா வுக்குப்
பின்னமதா யொருபொருளு மென்று மில்லை
பிரமமய மாகியவிவ் வான்மாத் தானே
பின்னமெனப் பிறங்கியிடும் பொருள்க ளெல்லாம்
பிரமமய வான்மாவே தானென் றெண்ணும்
பின்னமிலாப் போதத்தாற் பிரம மாவாய். (28)

தான்றுனே தானுகச் சொலிக்குஞ் சோதி
தான்றுனே தானுக நிலைத்த வின்பந்
தான்றுனே தானுக விருக்கு முண்மை
தான்றுனே சகலபரி பூன்ற வத்து
தான்றுனே தனக்குநிக ரில்லாத் தெய்வந்
தான்றுனே தனக்கனிய மிலாத வத்து
தான்றுனே பிரமமெனுந் திடபோ தத்தாற்
றுனுக விருக்கின்ற பிரம மாவாய். (29)

தான்றனே தவிராது நின்ற சத்து
தான்றனே தடையறவே நிகழுஞ் சித்து
தான்றனே நிகரற்ற பரமா நந்தந்
தான்றனே நிகிலத்து நிகழ்சித் தாந்தந்
தான்றனே யகிலமகா வாக்கி னர்த்தந்
தான்றனே யகண்டபரி பூர ணன்மா
தான்றனே பிரமமெனுந் திடபோ தத்தாற்
றுணைக விருக்கின்ற பிரம மாவாய். (30)

தான்றனே சீவத்வ மிழந்த வத்து
தான்றனே யீசத்வ மிழந்த வத்து
தான்றனே யபின்னபரப் பிரம வத்து
தான்றனே யகண்டபரப் பிரம வத்து
தான்றனே யத்துவித மான வத்து
தான்றனே யகண்டபரி பூன்ற வத்து
தான்றனே தானென்னுந் திடபோ தத்தாற்
றுணைக விருக்கின்ற பிரம மாவாய். (31)

தான்றனே யுபாதியெலா மிலாத வத்து
தான்றனே யொருதகளு முறுத வத்து
தான்றனே யத்யந்தஞ் சுத்த வத்து
தான்றனே யகிலர்க்கும் பிரிய வத்து
தான்றனே யாகாயம் போன்ற வத்து
தான்றனே யகண்டபர மான்ம வத்து
தான்றனே தானென்னுந் திடபோ தத்தாற்
றுணைக விருக்கின்ற பிரம மாவாய். (32)

தான்றனே பகுதிமுதற் கதீத வத்து
தான்றனே பாற்பரமாய் நிலைத்த வத்து
தான்றனே பரிச்சேத மிலாத வத்து
தான்றனே பரிசுத்த மான வத்து
தான்றனே பிரஞ்ஞான கனமாம் வத்து
தான்றனே பரப்பிரம மான வத்து
தான்றனே தானென்னுந் திடபோ தத்தாற்
றுணைக விருக்கின்ற பிரம மாவாய். (33)

தான்றானே நித்தியமாம் பிரம ரூபந்
தான்றானே நிட்களமாம் பிரம ரூபந்
தான்றானே நிரஞ்சனமாம் பிரம ரூபந்
தான்றானே நிருமலமாம் பிரம ரூபந்
தான்றானே நிரந்தரமாம் பிரம ரூபந்
தான்றானே சீராமயமாம் பிரம ரூபந்
தான்றானே நிறைந்தபர சொரூப மென்னுந்
தவிராத போதத்தாற் பாமே யாவாய். (34)

நான்றானே சகலமுமாம் பிரம ரூப
நான்றானே சகலமிலாப் பிரம ரூப
நான்றானே சத்தியமாம் பிரம ரூப
நான்றானே சனாதனமாம் பிரம ரூப
நான்றானே சலனமிலாப் பிரம ரூப
நான்றானே சாசுவதப் பிரம ரூப
நான்றானே சாந்தபர சொரூப மென்னு
நழுவாத போதத்தாற் பரமே யாவாய். (35)

நான்றானே மாயையிலாப் பிரம ரூப
நான்றானே யவித்தையிலாப் பிரம ரூப
நான்றானே யீசனிலாப் பிரம ரூப
நான்றானே ஜீவனிலாப் பிரம ரூப
நான்றானே சகங்களிலாப் பிரம ரூப
நான்றானே சாந்தமதாம் பிரம ரூப
நான்றானே சுத்தபர சொரூப மென்னு
நழுவாத போதத்தாற் பரமே யாவாய். (36)

நான்றானே நாசமிலாப் பிரம ரூப
நான்றானே நவையற்ற பிரம ரூப
நான்றானே பாசமிலாப் பிரம ரூப
நான்றானே பராற்பரமாம் பிரம ரூப
நான்றானே யத்துவிதப் பிரம ரூப
நான்றானே யகண்டபரப் பிரம ரூப
நான்றானே சுத்தபரப் பிரம மென்னு
நழுவாத போதத்தாற் பரமே யாவாய். (37)

ஞானலது சத்துமில்லை யசத்து மில்லை
ஞானலது சதசத்தாம் பொருளு மில்லை
ஞானலது சித்துமில்லை யசித்து மில்லை
ஞானலது சிதசித்தாம் பொருளு மில்லை
ஞானலது துஷிதமொடத் துஷித மில்லை
ஞானலது தோன்றிடுமோர் பொருளு மில்லை
ஞானனிசம் பரப்பிரம மதுநா னென்னு
நழுவாத போதத்தாற் பரமே யாவாய். (38)

பிரமமக மகம்பிரமம் பிரம மெல்லாம்
பிரமமலா தயலணுவு மில்லை யென்றே
யுரமருவு முணர்வுதனை யுறுவோ ரெல்லா
முணர்வுருவாம் பிரமமதே யாவ ரன்றி
யொருபொழுது மயலாகா ருண்மை சொன்னே
னுரைத்ததிலோ ரையமில்லை சத்தி யந்தான்
சருவபரி பூரணமாஞ் சம்பு வாணை
சத்தியமே சத்தியமே சங்கை யில்லை. (39)

பிரமமலா தயலாக வணுவு மில்லை
பிரமத்துக் கயலெல்லாம் பிராந்தி யேயாம்
பிரமமலா தயலாக வணுவு மில்லை
பிரமத்துக் கயலெல்லா மித்தை யேயாம்
பிரமமலா தயலாக வணுவு மில்லை
பிரமத்துக் கயலெல்லா மசத்தே யாகும்
பிரமமலா தயலாக வணுவு மில்லை
பிரமத்துக் கயலெல்லாம் பிரம மேயாம். (40)

கனவினிடைத் திருசியமாய்க் காணப்பட்ட
கடபடமே முதலியவு மித்தை யேபோ
னனவினிடைத் திருசியமாய் நாடப் பட்ட
நாநாவாஞ் சகசீவ பரமு மித்தை
யனேயதெலா மறிகின்ற திருக்கே யான
வான்மாவுக் கபின்னமதாம் பிரம மொன்றே
யநவரத மழியாத வுண்மை வத்து
வறைந்ததிலோ ரணுவேணு மைய மில்லை. (41)

ஆகலினு லுலகமெலா மித்தை யாகு
மங்குள்ள வுயிர்களெலா மித்தை யாகும்
பேதமுறுஞ் சிவவடிவு மித்தை யாகும்
பின்னமுறு மரிவடிவு மித்தை யாகு
மீதியுள சுரர்வடிவு மித்தை யாகு
மெய்போன்ற வெப்பொருளு மித்தை யாகு
மாதிமுடி வொன்றுமிலா தகண்ட மாகி
யிழியாம லுளதென்றும் பிரம மொன்றே. (42)

சகலவதிட் டானபரப் பிரமத் தின்கட்
சகமுதலாய்த் தோற்றியவிம் மித்தை யுந்தான்
றுகளறவே சோதிக்கிற் றுவித மற்ற
தூயவதிட் டானபரப் பிரம மேயா
மிகழ்வுறவே யிரச்சுவினின் மித்தை யாக
விலங்கியிடுஞ் சர்ப்பத்தைச் சோதிக் குங்கா
லகியதனை யதிட்டான விரச்சு வன்றி
யின்னியமா யாரேனுங் கண்ட துண்டோ. (43)

இன்னவித மதிட்டான வாரோ பங்க
விரண்டையுமே நன்முகச் சோதித் திங்கு
முன்னியவா ரோபமதாஞ் சகசீ வாதி
மூலவதிட் டானமதாம் பிரம மென்றும்
பின்னமிலா வப்பிரம நானே யென்றும்
பேதமிலாப் பரப்பிரம ஞானந் தன்னைத்
தன்னுடைய துகளற்ற மனத்தாற் பெற்றுத்
தள்ர்வுதரும் பவபீதி தவிர்க்க வேண்டும். (44)

புத்திரனே தனதுமன முயற்சி யொன்றுற்
பூரணமாம் பரப்பிரம ஞானம் பேரு
மித்தகமை ஞானத்தாற் பரமா முத்தி
யாவர்க்கு மிவ்விடத்தே யெளிதா யெய்து
மத்துவித ஞானத்தி னப்பா சத்தி
லணுவேனு மொருகாலும் பயமு மில்லை
யித்திறமே யிருக்கையினு மிதனப் யாச
மியற்றுவதி லேதேனும் வருத்த முண்டோ. (45)

வருத்தமிலா திருக்கையினும் வருத்தம் போல
வருந்துற்ற மாபாவி மனதிற் றோன்றும்
விருத்தமதாம் பாவமெலாம் வீந்து மெத்த
விமலமதா மனதுடையோர்க் கிவ்வப் யாசங்
கருத்திலுற மிகவெளிதா மாத லாலே
கலங்காம லெப்போது ஞானப் யாசந்
திருத்தமுறச் செய்வோர்க்குத் தேவ தேவன்
றிருவருளாற் றிடஞானந் திகழு மன்றே. (46)

அகம்பிரமம் பிரமமக மகமெல்லா மென்
றகண்டபர ஞானத்தி னப்யா சத்தைத்
தகும்பிரம ஞானத்தாற் றிடமா மட்டுந்
தவிராது சந்ததமும் பழகு வோர்க்கே
யகம்பிரம மெனுஞான மகண்ட மான
வவ்வீசன் றிருவருளாற் சகச மாகுங்
தகும்பிரம ஞானத்தாற் சகச மானுற்
றளர்வுதரும் பவபீதி தானே நீங்கும். (47)

பாவனமாம் பரஞானஞ் சகச மானுற்
பார்ப்பதெலா மத்யந்தா பாவ மேயாம்
யாவையுமே யத்யந்தா பாவ மேயாம்
யானீயு மத்யந்தா பாவ மேயாஞ்
சீவரெலா மத்யந்தா பாவ மேயாஞ்
செகபரமு மத்யந்தா பாவ மேயாங்
கேவலமாம் பரப்பிரம மான தானே
கெம்பீர பூரணமா யுள்ள தாமே. (48)

அகிலமுமே யத்யந்தா பாவ மாகி
யகண்டபர வடிவாகித் தானே நிற்கி
லிகழ்வுறுமிப் பவபீதி மீண்டுந் தோன்ற
விடமில்லை யாதலினுன் முமுட்சு வெல்லாஞ்
சகலமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சந்ததமுஞ் சலியாம லப்யா சித்தே
துகளில்பர ஞானமடைந் ததனு லிந்தத்
துயர்மயமாம் பவபீதி தொலைக்க வேண்டும். (49)

நீக்கமிலா தெங்குமொரு நிறைவாய் நின்ற
நிகழ்வுருவாம் பரப்பிரம மெல்லா மென்றும்
வாக்குமன மொன்றுக்கு மெட்டா தான
வரையற்ற பரப்பிரம மதுநா னென்றுஞ்
சூக்கமதா மனதுடனே யப்யா சித்துச்
சுத்தமதாம் பரப்பிரம ஞானம் பெற்றுப்
போக்கவொணாப் பவபீதி யனைத்தும் போக்கிப்
பூரணமா யுள்ளபரம் பொருளே யாவாய். (50)

கல்லாத கல்வியெலாங் கற்ற போதுங்
கலக்கமிலாப் பரப்பிரம ஞான மொன்றை
யல்லாது பவபீதி விடுக்க வொண்ணு
தாதலினு லாதாவாய் நீயெப் போது
மெல்லாமும் பிரமமென்னு மதுநா னென்னு
மேகமதாம் பரப்பிரம ஞானம் பெற்றே
பொல்லாத பவபீதி யனைத்தும் போக்கிப்
பூரணமா யுள்ளபரம் பொருளே யாவாய். (51)

பிரமமய மாகியதன் னுண்ம ரூபப்
பெருமையினைப் பரமசிவ னுரைத்த வண்ணங்
கருணையினு லியாவர்க்கு மிதமே யாகக்
கலக்கமற நிதாகனினைக் குரைத்தே னன்பாற்
சருவபரி பூரணமாஞ் சிவன்றன் ஞான
சாற்றியதிற் சற்றேனுஞ் சங்கை யில்லை
யரியபொரு ளானவிதை யொருகா லேனு
மன்புடனே கேட்டுணர்வோன் பிரம மாவன். (52)

சமதமமே முதலியவாஞ் சாத னங்கள்
சார்ந்தனிசம் வேதாந்த விசாரஞ் செய்திங்
கமலமதாம் பரசிவமே யெல்லா மென்று
மச்சிவமே நாமென்று மறிவுற் றேரே
மமர்பயமாம் பவபீதி விடுத்தெப் போது
மாசற்ற பரசுகமாய்ச் சுகிப்ப ரென்றே
நிமலமதாய் ரிபுமுனிவ னிதாக னுக்கு
நிகரற்ற பரம்பொருளே நிகழ்த்தி னனல். (53)

வேறு.

துகளிலாதமனத்தின் முயற்சியாற் றூயஞானப்பழக்கந்தொடர்ந்தவர், சகலமும்பர மப்பரஞானெனுஞ் சலனமின்றியஞானஞ்செறிக்கதா, லிகலுமிப்பவ பீதிவிடித்துடனேகமாம்பரமாகுவரென்றிடன் மகிழுமாநந்தத்தாண்டவமாடுநம் மாசிலீச னகண்டசொரூபமே.(54).

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 17-க்கு திருவிருத்தம்-777.

†††

பதினெட்டாவது
அகண்ட சொரூபத்தியானம் உரைக்கும்
அத்தியாயம்.

மிகவுமகா ரகசியமாய் வேதாந் தத்து
மெத்தவுமே ரகசியமாய் விளம்ப லுற்ற
மகிமைமிகும் பரம்பொருளை மற்றுஞ் சொல்வேன்
மாசற்ற மனதுடனே யிவ்வர்த் தத்தை
யகமுறவே யாதரவாய்க் கேட்டு ணர்ந்தோ
ரகண்டபர வடிவாகிச் சீவன் முத்திச்
சுகமருவி யுபாதியெலாந் தொலைந்த பின்னர்ச்
சுத்தமகாம் பரப்பிரம சொரூப மாவர். (1).

சகமுதலாய்த் தோற்றியவித் தோற்ற மெல்லாஞ்
சத்தியசிற் சுககனமாம் பிரம ரூப
மகமகமென் றறிவுருவா யமர்ந்த சீவ
ரனைவருமே யகண்டபரப் பிரம ரூபம்
புகல்வகையே பாவித்துப் பூன்றஞானம்
பொருந்தினவர் பூரணமாம் பரமே யாவர்
பகர்வதிலோ ரணுவேனு மைய மில்லை
பரமசிவன் றன்னுணை பாமார்த் தந்தான். (2).

இதுவெனவே காண்பதுவும் பிரம ரூப
மியானெனவே காண்பதுவும் பிரம ரூப
மதுவெனவே காண்பதுவும் பிரம ரூப
மன்னியமாய்க் காண்பதுவும் பிரம ரூபந்
திகமெனவே காண்பதுவும் பிரம ரூபந்
திடமலகாய்க் காண்பதுவும் பிரம ரூப
மெதுவெனவே காண்பதுவும் பிரம ரூப
மியம்பியதி லெவ்வளவு மைய மில்லை. (3).

குருவானு மாணனும் பிரம ரூபங்
குணமேலாஞ் சாதனமும் பிரம ரூபஞ்
சிரவணமு மனனமுமே பிரம ரூபஞ்
செய்கின்ற தியானமுமே பிரம ரூப
மரியபொரு ளறிவதுவும் பிரம ரூப
மப்பொருளா யிருப்பதுவும் பிரம ரூபஞ்
சருவமுமே சந்ததமும் பிரம ரூபஞ்
சாற்றியதிற் சற்றேனுஞ் சங்கை யில்லை. (4)

சாதனமுஞ் சாத்தியமும் பிரம ரூபஞ்
சாந்திமுதற் சற்குணமும் பிரம ரூபம்
வேதனமும் வேத்தியமும் பிரம ரூபம்
வேதாந்த சாத்திரமும் பிரம ரூபம்
பேதமறப் பெறும்பேறும் பிரம ரூபம்
பின்னுமுள வெப்பொருளும் பிரம ரூப
மாதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வப்பிரம மகமெனவே தியானஞ் செய்வாய். (5)

அடிமுடிவு நடுவுகளும் பிரம ரூப
மான்மாவு மனுன்மாவும் பிரம ரூபம்
படிமுதலாம் பூதமுமே பிரம ரூபம்
பரவியிடும் பௌதிகமும் பிரம ரூபஞ்
சடமசடஞ் சகலமுமே பிரம ரூபஞ்
சத்தியமும் மசத்தியமும் பிரம ரூபம்
திடமருவு மப்பிரம நானே யென்று
திரமாக வெப்போதுந் தியானஞ் செய்வாய். (6)

அத்தமிலாப் பரப்பிரம சொரூப நானே
யகங்கார முதலியதோ ரணுவு மில்லை
சித்துருவாம் பரப்பிரம சொரூப நானே
சித்தமுத லொருபொருளு மென்று மில்லை
சத்தியமாம் பரப்பிரம சொரூப நானே
சகசீவர் முதலியதோ ரணுவு மில்லை
சுத்தபரப் பிரமமெலா மதுநா னென்றே
சுகமாக வெப்போதுந் தியானஞ் செய்வாய். (7)

ஏகமதாம் பரப்பிரம சொரூப நானே
யிதுவதுவென் றிலங்கியிடும் பொருளே யில்லை
மோகமிலாப் பரப்பிரம சொரூப நானே
முன்னியதாய் முளைக்கின்ற பொருளே யில்லை
பாகமிலாப் பரப்பிரம சொரூப நானே
பலவிதமாய்ப் பகுப்புற்ற பொருளே யில்லை
யேகபரப் பிரமமெலா மதுநா னென்றே
யிடையறவே யெப்போதுந் தியானஞ் செய்வாய். (8)

அகமெனவே தோற்றுவதும் பரமா நானே
யகமென்றிங் கயலாக வொன்று மில்லை
சகமெனவே தோற்றுவதும் பரமா நானே
சகமென்றிங் கயலாக வொன்று மில்லை
நிகழ்பரனுய்த் தோற்றுவதும் பரமா நானே
நிகழ்பரனென் றயலாக வொன்று மில்லை
சகலமுமே பரமான நானே யென்று
சலியாம லெப்போதுந் தியானஞ் செய்வாய். (9)

பூரணமா யுள்ளபரப் பிரம மன்றிப்
பூகமுத லெப்பொருளு மென்று மில்லை
காரணமா யுள்ளபரப் பிரம மன்றிக்
காரியமா யொருபொருளு மென்று மில்லை
சீரணமில் சின்மயமாம் பிரம மன்றிச்
செகசீவ பரங்களெனச் சிறிது மில்லை
யாரணவி றறிவிக்கு மகண்ட மான
வப்பிரம மகமெனவே தியானஞ் செய்வாய். (10)

சித்தமுத லெப்பொருளு மென்று மில்லை
சின்மயமாய் நிறைந்தபரப் பிரம மொன்றே
சத்தியமா யுளதாகு மற்ற வெல்லாஞ்
சத்தியமே யாகாவாஞ் சசவி ஷாண
மொத்துளதா யோதியவப் பிரமந் தானே
யுன்னுடைய வான்மாவா மதனுன் மைந்தா
வத்துவித பரப்பிரம மகமே யென்றிங்
கநவரத மநிதிடமாய்த் தியானஞ் செய்வாய். (11)

சாற்றியவப் பரப்பிரம சொரூப மொன்ருஞ்
சத்தியசிற் சுகசனமாம் பூன்ற மாகுங்
தோற்றியவிச் சகவடிவ நாநா வாகுந்
துக்கசட வசத்தியமாஞ் சின்ன மாகும்
போற்றியவிப் பரப்பிரம சொரூபந் தானே
புத்திரநின் னன்மாவா மாத லாலே
யேற்றியவப் பரப்பிரம நானே யென்றிவ்
விருமையற வெப்போதுந் தியானஞ் செய்வாய். (12)

கறையற்ற பரப்பிரம மொன்றே யுண்மை
காண்பதுவுங் கேட்பதுவு மெவையு மில்லை
நிறைவுற்ற பரப்பிரம மொன்றே யுண்மை
நினைப்பதுவு நினையாது மெவையு மில்லை
மறைவற்ற பரப்பிரம மொன்றே யுண்மை
மற்றவெலா மொருகாலு மிலவே யில்லை
குறைவற்ற வப்பிரம நானே யென்று
கோதறவே யெப்போதுந் தியானஞ் செய்வாய். (13)

சூக்கமதாம் பரப்பிரம மொன்றே யுண்மை
சொற்பொருளாய்த் தோன்றியதோ ரணுவு மில்லை
நீக்கமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
நீநானே மூதலாலே ரணுவு மில்லை
யாக்கையிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
யன்னியமா யணுவேனு மிலவே யில்லை
வாக்குமுதற் கெட்டாவப் பரநா னென்றே
வருத்தமற வெப்போதுந் தியானஞ் செய்வாய். (14)

திருசியமா யெனக்கயலோ ரணுவு மில்லை
திருக்கான வெண்ணிடையிற் ரோன்ரு நின்ற
சருவமுமே பரமான நானே யென்று
சற்குருவா மென்வாக்காற் றியானஞ் செய்வா
யிருமையற விவ்வண்ண முபதே சித்தே
னென்றணுவு மபிமான மெனக்கிங் கில்லை
குருவரனும் பரமசிவ னெனக் குரைத்த
குற்றமிலா வுபதேச வசன மீதே. (15)

சத்குருவி னுபதேச வசனத் தாலே
சகலமுமே சத்தியசித் சுகமாய் நின்ற
நிர்க்குணமாம் பிரமமென்று மதுநா னென்று
நிச்சலமாய் நீயென்றுந் தியானஞ் செய்வா
யெக்குருவி னுபதேச வசனந் தானு
மிவ்விதமே யன்றியிதின் வேறே யில்லை
முக்குணமுங் கடந்துவெறுஞ் சித்தே யான
மூலபர சிவஞ்ஞ மொழிந்த தண்மை. (16)

சற்குருவுஞ் சின்மயமாம் பிரம ரூபஞ்
சகலமுமே சின்மயமாம் பிரம ரூப
நிர்க்குணமா மப்பிரம நானே யென்று
நிச்சலமாய் நீயென்றுந் தியானஞ் செய்வாய்
சற்குருவாம் பரமசிவ னெனக்கு முன்னஞ்
சத்தியமாய்ச் சாற்றியசித் தாந்த மீதே
நிர்க்குணமோ ரணுவுமுரு வேதாந் தங்க
ணிவ்வாகச் சொல்லியசித் தாந்த மீதே. (17)

நிருமலமாம் பரப்பிரம மானே னானே
நிட்களமாம் பரப்பிரம மானே னானே
நிருபமமாம் பரப்பிரம மானே னானே
நிர்க்குணமாம் பரப்பிரம மானே னானே
நிரதிசய பரப்பிரம மானே னானே
நிரஞ்சனமாம் பரப்பிரம மானே னானே
நிரவயவ பரப்பிரம நானே யென்று
நிச்சலமாய் நீயென்றுந் தியானஞ் செய்வாய். (18)

அகிலவநி டானபரப் பிரம மேநா
னகண்டபரி பூரணமாம் பிரம மேநான்
றுகளணுவு மற்றபரப் பிரம மேநான்
றாயசித தாயபரப் பிரம மேநான்
சகமுதலோ ரணுவுமிலாப் பிரம மேநான்
சாலவுப சாந்தபரப் பிரம மேநா
னிகரிலதாம் பரப்பிரம நானே யென்று
நிச்சலமாய் நீயென்றுந் தியானஞ் செய்வாய். (19)

தித்தியமாய் நிகழ்கின்ற பிரம மேநான்
னிகிலமுமாய் நிறைகின்ற பிரம மேநான்
சத்தியமாய்ச் செறிகின்ற பிரம மேநான்
சலனமிலா திருக்கின்ற பிரம மேநான்
சுத்தசுக வடிவான பிரம மேநான்
சுபத்துக்குஞ் சுபமான பிரம மேநா
னத்துவித மானபரப் பிரம நானென்
றசஞ்சலமா யநவரதந் தியானஞ் செய்வாய். (20)

தன்னியதே காதியிலாப் பிரம நானே
துரியவறி வானபரப் பிரம நானே
வன்னமுத லெவையுமிலாப் பிரம நானே
வகையற்ற வகண்டபரப் பிரம நானே
யன்னியமோ ரணுவுமிலாப் பிரம நானே
யகண்டவடி வானபரப் பிரம நானே
பின்னமிலாப் பரப்பிரம நானே யென்று
பிரிவறவே யெப்போதுந் தியானஞ் செய்வாய். (21)

மோகமுத லெப்பொருளு மென்று மில்லை
முழுவதுமே யகண்டபரப் பிரம ரூபம்
பாகமுற வெப்பொருளு மென்று மில்லை
பகுப்புற்ற பொருளெல்லாம் பிரம ரூபந்
தேகசக முதலியவோ ரணுவு மில்லை
திருசியமாய்த் தெரிவதெலாம் பிரம ரூப
மேகமதாம் பரப்பிரம நானே யென்றிவ்
விருமையற வெப்போதுந் தியானஞ் செய்வாய். (22)

திருசியமா யொருபொருளும் வேறிங் கில்லை
தெரிவதெலாந் திருக்கான பிரம மென்று
மிருமையிலா வப்பிரம நானே யென்றும்
யானந்தப் பரப்பிரமந் தானே யென்றுஞ்
சருவமுமே யவ்விதமா நானே யென்றுஞ்
சந்ததமுஞ் சலியாமற் றியானிப் பாயேற்
பிரிவெனவே நின்மனதிற் பிறங்கா நின்ற
பெயர்க்கவொணாப் பேதமலம் யாவுந் தீரும். (23)

சகமுதலா யெண்ணுவதைத் தூரத் தள்ளிச்
சகலமுமே பிரமமெனத் தியானஞ் செய்வா
யகமுடலென் றெண்ணுவதைத் தூரத் தள்ளி
யகம்பிரம மென்றனிசந் தியானஞ் செய்வாய்
சகலமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சந்ததமுஞ் சலியாமற் றியானஞ் செய்தா
லகமனியஞ் சகமுதலீ தனிய மென்னு
மயலெல்லா மனுதினமு மடைவாய்த் தீரும். (24)

தேகமக மெனுநினைவைத் தூரத் தள்ளித்
தெரிவான பிரமமக மெனத்தியா னிப்பா
யாகமக மெனுநினைவைத் தூரத் தள்ளி
யறிவான பிரமமக மெனத்தியா னிப்பாய்
பாகமுறும் பலநினைவைத் தூரத் தள்ளிப்
பார்ப்பதெலாம் பரப்பிரம மெனத்தியா னிப்பா
யேகமகம் யானெனையு மெனத்தியா னித்தே
யிப்பேத மியாவையுநீ விடுவாய் மைந்தா. (25)

இத்தேக நானல்ல விவைநா னல்ல
வித்தேக நானல்ல விவைநா னல்ல
சித்தேயாம் பரப்பிரம நானெப் போதுஞ்
சித்தேயாம் பரப்பிரம நானெப் போது
முத்தேச முற்றபெரு ளொன்று மில்லை
யுன்னியிடத் தகுபொருளு மொன்று மில்லை
சித்தேயா மெல்லாமு மதுநா னென்றே
சிரத்தையுடன் தியானித்திப் பேதந் தீர்வாய். (26)

இத்தேக முதலியவை யணுவு மில்லை
யித்தேக முதலியவை யணுவு மில்லை
யெத்தேக முதலியவுஞ் சித்தே யாகு
மெத்தேக முதலியவுஞ் சித்தே யாகுஞ்
சித்தேநான் சித்தேநான் சித்தே யெல்லாஞ்
சித்தேநான் சித்தேநான் சித்தே யெல்லாஞ்
சித்தேயாம் பரப்பிரம மதுநா னென்றே
சிரத்தையுடன் தியானித்திப் பேதந் தீர்வாய். (27)

தகும்பிரமந் தனக்கயலா யணுவு மில்லை
தயங்கியவிச் சகசீவ பரங்க ளெல்லாந்
தகும்பிரம வடிவேயா மதுவே நீயாந்
தத்துவமாய் நவில்கின்றே னுதா லாலே
யகம்பிரம மகம்பிரம மகமே யெல்லா
மகம்பிரம மகம்பிரம மகமெல் லாமென்
றகம்பிரம பாவனையே திடமாய்ச் செய்திவ்
வயலணுவு மணுகாம லழிப்பாய் மைந்தா. (28)

செகம்பாமுஞ் சீவர்களுஞ் சிறி துமில்லை
சின்மயமாம் பரப்பிரமந் தானே யெல்லாந்
தகும்பிரம மதுநானே நானே யெல்லாந்
தகும்பிரம மதுநானே நானெல் லாமென்
றகம்பிரம பாவனையே யனிசஞ் செய்தா
லதனுலிவ் வயலெல்லா மழிந்தே போகுந்
திகம்பரனுய் நிறைந்தெங்குந் திகழா நின்ற
தெரிவுருவாஞ் சிவனுண யுண்மை சொன்னேன். (29)

அலைமனதி லொருமையிலாத் தன்மை யாலே
யகம்பிரம பாவனையே செய்யச் சத்தி
யிலதெனினு மெப்போதுஞ் சிரத்தை யோடே
யான்பிரமம் யான்பிரமம் யானே யெல்லாஞ்
சலனமிலாப் பரமேநான் பரநா னென்னுஞ்
சத்தமிதை யுரைத்தாலு மிவ்வ றத்தா
னிலைமருவா தலைமனது மெள்ள மெள்ள
நிச்சலமாய் நிகழ்த்தியபா வனையி னிற்கும். (30)

நிரந்தரமாய்ப் பாவனையின் மனது நின்று
னிச்சலமா மகண்டபர ஞான முண்டாய்த்
திரிந்தலையு மனதினிடை விகற்ப மாகத்
தெரிகின்ற பேதமெலா முடனே தீரும்
தெரிந்திடுமிப் பேதமெலாந் தீரு மட்டும்
திருசியமாய்த் தெரிவதெலாம் பரமே யென்றும்
பொருந்தியவப் பரப்பிரம நானே யென்றும்
பூரணமா யெப்போதுந் தியானஞ் செய்வாய். (31)

சகலமெனுஞ் சத்தமில்லை யருத்த மில்லை
சஞ்சலமாந் தெய்வமில்லை தீர்த்த மில்லை
பகுதியில்லை பகுதியுடை விகார மில்லை
பரனுமில்லை சீவனில்லை சகத்து மில்லை
நிகிலமுமே சின்மயமாய் நிறைந் நு நின்ற
நிட்களமாம் பரப்பிரம மதுநா னென்றே
யிகழ்வுதரும் பேதமெலா மிறக்கு மட்டு
மெப்போது மிடையறவே தியானஞ் செய்வாய். (32)

சருவமுமே மாயையிதி லில்லை
சருவமுமே மித்தையிதி லில்லை
சருவமுமே துச்சமிதி லில்லை
சருவமுமே யசத்திதனி லில்லை
சருவமுமே சந்ததமும் பிரம மென்றுஞ்
சத்தியசிற் சுகனமா மதுநா னென்றுஞ்
சருவமெனும் பேதமெலாந் தீரு மட்டுஞ்
சந்ததமுஞ் சலியாமற் றியானஞ் செய்வாய். (33)

சருவமுமே பரப்பிரம மைய மில்லை
சருவமுமே பரப்பிரம மைய மில்லை
பிரமமதே நானென்று மைய மில்லை
பிரமமதே நானென்று மைய மில்லை
சருவமெனும் பிரமமெனும் பேத மில்லை
சகலமுமே யகண்டபரப் பிரம மென்றே
மருவியவிப் பேதமெலா மாயு மட்டு
மயலறவே யெப்போதுந் தியானஞ் செய்வாய். (34)

சன்மயமாம் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சதசத்தா யொருபொருளு மென்று மில்லை
சின்மயமாம் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சித்தமுத லொருபொருளு மென்று மில்லை
கன்மயமாம் பரப்பிரமந் தானே யெல்லாந்
தயங்குசக சீவபர மொன்று மில்லை
கின்மலமாம் பரப்பிரம மதுநா னென்றே
நிச்சலமாய் நீயென்றுந் தியானஞ் செய்வாய். (35)

அத்திரமாந் தேகமிலை யதனுக் கேது
வாகியவைம் பூதமிலை பொறிக ளில்லை
புத்தியிலை சித்தமிலை மனது மில்லை
பொருந்துமகங் காரமிலை பந்த மில்லை
முத்தியிலை மோசகனு மீச னில்லை
மோட்சமுறுஞ் சீவனிலை முழுது மில்லை
யத்துவிதப் பிரமமெலா மதுநா னென்றே
யசஞ்சலமாய் நீயென்றுந் நியானஞ் செய்வாய். (36)

அறிவுருவாம் பிரமத்திற் றோன்று நின்ற
வகிலமுமே யறிவுருவா யிருப்ப தாலே
யறிவுருவா மகண்டபரப் பிரமத் துக்கிங்
கன்னியமா யணுவேனு மிலவே யில்லை
யறிவுருவாம் பரப்பிரம மெல்லா மென்று
மவ்விதமாம் பரப்பிரம நானே யென்று
மறிவுருவாம் பரநீயாய்ப் பேத மியாவு
மழியுமள வதிதிடமாய்த் நியானஞ் செய்வாய். (37)

சருவமெனு முருவத்தைத் தூரத் தள்ளிச்
சருவமுமே பிரமமென நிச்ச யித்துப்
பிரமமதே நானென்று நானே யந்தப்
பிரமமெனும் பாவனையான் மயலே யாக
மருவியவிப் பேதமதி யனைத்து மாய்த்து
மற்றந்தப் பாவனையுந் தூரத் தள்ளி
நிருமலமா நின்னுடைய நிசரூ பத்தி
னிச்சலமாய் நீயென்று நிலைத்து நிற்பாய். (38)

நிச்சலமாய் நிற்பதெனு நினைவுந் தள்ளி
நிசரூப மாத்திரமாய்த் தள்ள லென்னு
மிச்செயலு மிகழ்ந்துமனை வாக்கு கட்கிங்
கெட்டாத கேவலமாஞ் சொரூப மாகி
யுச்சமதாஞ் சகசநிலை யறுவாய் மைந்தா
வோதுவதற் கினியொன்று மிடமிங் கில்லை
நிச்சயமாய்ப் பரமசிவ னெனைக்கு முன்ன
நிகழ்த்தியதா நிசரூப நிட்டை யீதே. (39)

பேதமெலா மணுவுமிலா தறவுந் தள்ளிப்
பின்னமிலாப் பரமான வான்மா வின்க
ணேதையுமே நினையாம லின்ப மேலா
யியங்காம லிருப்பதுவே சகச நிட்டை
சாதகமா மிந்நிட்டை நிருவி கற்ப
சமாதியென வங்கங்கே சாற்ற லாகு
மோதியதே யகண்டபர சாட்சாத் கார
வுணர்வெனவு மங்கங்கே யுரைக்க லாமால். (40)

நிடமான நிட்டையிதே சீவன் முத்திக்
நிறமையென வங்கங்கே செப்ப லாகுந்
கடமான நிட்டையிதே யுபசாந் திக்குக்
குகுந்தபடி பூமிகையோர் நான்கு மாகு
மிடமான விந்நிட்டை யிசைந்தோ ருக்கே
யித்துயர்செய் பவபீதி யிறக்கு மன்றி
மடமான மற்றெதனை யிசைந்த போது
மகத்தான பவபீதி மாயா தென்றும். (41)

நிறைவுறுமிந் நிட்டையுளோர் நீச ரேனு
நிருமலமாம் பரமாகி முத்த ராவ
ரறைவதிலோ ரஞ்ஞவேனு மைய மில்லை
யறுதியிதே யாதலினுன் முமுட்சு வெல்லாங்
குறைவறவே யிந்நிட்டை கூடு மட்டுங்
கூறுபடும் பேதமெலாம் பிரம மென்று
மறிவுருவா மப்பிரம மகமே யென்று
மகண்டபர பாவனையே பழக வேண்டும். (42)

பேதமெலா நீங்கிநிச நிட்டை சேரப்
பின்னருமே பரமார்த்தம் பேசக் கேளா
யீதெனவே யொருபொருளு மென்று மில்லை
யெல்லாமு மெப்போதும் பிரம ரூபம்
பூதமொடு பௌதிகமும் பிரம ரூபம்
புவனமொடு பொருளெவையும் பிரம ரூபஞ்
சாதமுறுஞ் சகலமுமே பிரம ரூபஞ்
சகசீவ பரங்களெலாம் பிரம ரூபம். (43)

மாயையில்லை மருவுமகங் காரமில்லை
மனதுமில்லை புத்தியில்லை சித்த மில்லை
காயமில்லை கருமமில்லை கருத்தா வில்லை
காண்கின்ற பொறிகளில்லை புலன்க ளில்லை
யாயபல வுயிர்களில்லை யமர நில்லை
யயனுமில்லை யரியுமில்லை யரனு மில்லை
யேயபொரு ளெவையுமில்லை யெல்லா மென்று
மேகபரி பூரணமாம் பிரம ரூபம். (44)

மாயையிலாத் தன்மையினுன் மாயோ பாதி
மருவியிடு மீசனுடை வகுப்பு மில்லை
யாயபல வவித்தையிலாத் தன்மை யாலே
யவைமருவுஞ் சீவருடை வகுப்பு மில்லை
தூயவய னிலாமையினுற் சிருட்டி யில்லை
துலங்குமரி யிலாமையினுற் றிதியு மில்லை
நேயவர னிலாமையினு ஞச மில்லை
நிகிலமுமே நிறைந்தபரப் பிரம ரூபம். (45)

பூசனைசெய் தெய்வமிலாத் தன்மை யாலே
பூசையில்லை பூசிப்போர் தாமு மில்லை
மோசகமாந் தெய்வமிலாத் தன்மை யாலே
மோட்சமில்லை முமுட்சையுளோர் தாமு மில்லை
பேசுமொரு திருசியமு மிலாமை யாலே
பிறங்கியிடுந் திருக்குமொரு காலு மில்லை
மாசனுவு மருவாத வறிவே யாக
மன்னியிடும் பரப்பிரமந் தானே யெல்லாம். (46)

கருதியிடுங் காரணமே யிலாமை யாலே
காரியமா யொருபொருளு மென்று மில்லை
மருவியிடுங் கருத்தாவே யிலாமை யாலே
மற்றவனுன் மருவியிடும் பலனு மில்லை
சருவமெனுஞ் சத்தமுமே யிலாமை யாலே
சருவமென வொருபொருளு மென்று மில்லை
நிருமலமாய் நிட்களமாய் நிறைந்து நின்ற
நிகழ்வுருவாம் பரப்பிரமந் தானே யெல்லாம். (47)

பகுதியெனுங் காரணமு மிலவே யில்லை
பகுதிசருங் காரியமு மிலவே யில்லை
வெகுவிதமா யொருபொருளு மிலவே யில்லை
விசித்திரமா யொருபொருளு மிலவே யில்லை
சகலமெனு மொருபொருளு மிலவே யில்லை
சகசீவ பரங்களெலா மிலவே யில்லை
யகிலமுமே யகண்டபரி பூன்ற மான
வறிவுருவாம் பரப்பிரம சொரூப மேயாம். (48)

ஒருபொருளு மொருகாலு மிலவே யில்லை
யுள்ளதெலா மகண்டபரப் பிரம மாகும்
பிரமமதே நானுநு நானே யந்தப்
பிரமமெனும் பாவனையா லகண்ட ஞான
மருவினவர் பேதமெலா மூடனே மாற்றி
மகத்தான சொரூபநிலை யடைவ ரென்றே
யரியசிவ னருளியவா றறைந்தே னித்தை
யன்புடனே கேட்டுணர்வோர் பரமே யாவர். (49)

அருமையுட னகண்டபர சிவரூ பத்தை
யநவரதந் தியானித்தவ் வருள்பெற் றோர்க்கே
நிருமலமாம் பரஞான மனதிற் றோன்றி
நீக்கவொணு வஞ்ஞான மனைத்து நீங்கிப்
பரமதுவா யிருக்கின்ற முத்தி யன்றிப்
பகர்முத்தி மற்றோருக் கில்லை யென்றே
பிரியமுடன் ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பேதமிலாப் பரம்பொருளைப் பேசி ஞனல். (50)

வேறு.

கற்பிதப்பொருள் யாவையுமென்றுமே களங்கமின்றிய சிற்பரமா மெனுஞ், சிற்பரமது நானெனுந்தியானத்தாற் சின்மயாகந்த ஞான ஞ்செறிந்ததா. லற்பமும்பவ பீதியிலாமலே யகண்டமாம்பர மாயி டலாமென, றற்பராகந்தத் தாண்டவமாடுநந் தாணுவின்பரி பூரண ரூபமே. (51)

ஆக அத்தியாயம்-18-க்கு திருவிருத்தம்-828.

பத்தொன்பதாவது

ஞானியினது மகிமை யுரைக்கும்

அத்தியாயம்.

தகும்பொருளே நிதாகனினக் கின்னஞ் சொல்வேன்
றடையறவே பரஞானந் திடமா மட்டும்
மிகும்பிரிய மேவியநன் மனநி னைடே
மெய்யான விப்பொருளே யொருமை யாய்க்கேள்
சகம்பாழுஞ் சீவர்களுஞ் சுத்தப் பொய்யே
சகலமுமே சின்மயமாம் பிரம ரூபந்
தகும்பிரம மதுவேநின் னிசசொ ரூபந்
தற்பாமே சகலர்க்கு நிசசொ ரூபம். (1)

அகம்பிரம மெனக்கயலாய்ச் சித்து மில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ச் சடமு மில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ச் சத்து மில்லே
யகம்பிரம மெனக்கயலாய் மித்தை யில்லே
யகம்பிரம மெனக்கயலா யிருமை யில்லே
யகம்பிரம மெனக்கயலா யொருமை யில்லே
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (2)

அகம்பிரம மெனக்கயலாய் மாயை யில்லே
யகம்பிரம மெனக்கயலா யீச னில்லே
யகம்பிரம மெனக்கயலா யவித்தை யில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ச் சீவ னில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ச் சகத்து மில்லே
யகம்பிரம மெனக்கயலா யொன்று மில்லே
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (3)

அகம்பிரம மெனக்கயலாய்ப் பூத மில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ப் புவன மில்லே
யகம்பிரம மெனக்கயலாய் நரரு மில்லே
யகம்பிரம மெனக்கயலாய்ச் சுரரு மில்லே
யகம்பிரம மெனக்கயலாய்த் திரியக் கில்லே
யகம்பிரம மெனக்கயலா யெவையு மில்லே
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (4)

அகம்பிரம மெனக்கயலாய்ப் பாவ மில்லை
யகம்பிரம மெனக்கயலா யறமு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் துக்க மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் சுகமு மில்லை
யகம்பிரம மெனக்கயலா யிகமு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பாமு மில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (5)

அகம்பிரம மெனக்கயலாய்த் தந்தை யில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் தாய மில்லை
யகம்பிரம மெனக்கமலாய்த் தமரு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பிறரு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்க் குருவு மில்லை
யகம்பிரம மெனக்கயலா யெவரு மில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய்மைந்தா. (6)

அகம்பிரம மெனக்கயலாய்த் தீர்த்த மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் தான மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் தெய்வ மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பூசை யில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் செயலு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பயனு மில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (7)

அகம்பிரம மெனக்கயலாய்த் தேக மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் போக மில்லை
யகம்பிரம மெனக்கயலா யோக மில்லை
யகம்பிரம மெனக்கயலாய் ஞான மில்லை
யகம்பிரம மெனக்கயலாய் மோட்ச மில்லை
யகம்பிரம மெனக்கயலோ ரணுவு மில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யநவரத மறிவாய் மைந்தா. (8)

அகம்பிரம ஞானந்தா னிருவி கற்ப
மாகுமள வகிலமுமே பிரம மாகுந்
தகும்பிரம நானுகு நானே யந்தத்
தற்பரமாம் பிரமமெனு மப்யா சத்தாற்
செகம்பாமுஞ் சீவர்களுஞ் சிறிதுந் தோன்றுச்
சின்மயமா யிருக்கின்ற வகண்டா கார
வகம்பிரம ஞானத்தை யடைந்தே யத்தா
லஞ்திபவ பாசத்தை யறுப்பாய் மைந்தா. (9)

அன்னியமே தோன்றுத வகண்டா கார
வறிவுதனை யடைந்தவனே முத்த னானை
னின்னவித மகண்டபர ஞான முற்றோ
னிவ்வுலகி லெவ்விடத்து மரியனுவ
னுன்னவொணுப் பலகோடி சீவ ருக்கு
ஞரமான ஞானமுளோ னொருவன் றானே
யன்னவனைத் தரிசித்த மாத்திரத்தா
லறமேலா யகமெல்லா மழியு மன்றே. (10)

திடஞானி தெரிசனமே தீர்த்த மாடல்
திடஞானி தெரிசனமே தேவ பூசை
திடஞானி தெரிசனமே செப தபங்கள்
திடஞானி தெரிசனமே செயு மறங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின் சேவை
திடஞானி தெரிசனமே மேவு தற்குத்
திரிவிதமா முலகத்து மரிதா மியார்க்கும். (11)

வரமான ஞானிக்கு மகிழ்வி னோடே
வளமான போசனமே யளிப்ப தாலுந்
திரமான ஞானிக்குத் தேவை யான
திரவியமே சிரத்தையொடு கொடுப்ப தாலும்
பரமான ஞானிக்குப் பத்தி யோடே
பலவிதமாம் பணிவிடையே செய்வ தாலு
மரிதான மோட்சசுக மெளிதே யாக
வடைந்திடலா மணுவுமிதி லைய மில்லை. (12)

ஞானியுடை யருச்சனையே செய்வ தாலே
ஞானபல மடைந்ததனற் சீவன் முத்தி
யானபர மாநந்த மடைய லாகு
மதன்பின்பு பரமான விதேக முத்தி
தானுமதா லடைந்திடலா மாத லாலே
தளர்வுதரும் பவபீதி யனைத்துந் தள்ளி
யானியிலா முத்திநிலை யடைய வேண்டி
லறிஞனுடை யருச்சனையே செய்ய வேண்டும். (13)

நிதாகநிட ஞானியுடை நிச்ச யத்தை
நினக்குமாய் மீளவுமே நிகழ்த்தக் கேளாய்
சதாநந்த கனமான பிரம மேநான்
சலனமிலாச் சாந்தபரப் பிரம் மேநான்
நிதாகாய வடிவான பிரம மேநான்
செகசீவ பரங்களிலாப் பிரம மேநா
னுதாரபரி பூரணமாம் பரநா னென்றே
யுணர்வுடையோ னுமமான நிச்ச யங்காண். (14)

உத்தமமா யொன்றுன பிரம மேநா
னுள்ளுக்கு முள்ளான பிரம மேநா
னித்தியமாய் நீங்காத பிரம மேநா
னிறைவுக்கு நிறைவான பிரம மேநான்
சத்தியமாய்ச் சலியாத பிரம மேநான்
சருவான்ம சொரூபபரப் பிரம மேநா
னத்துவித பூரணமாம் பரநா னென்றே
யறிஞனுடை யழுத்தமுறு நிச்ச யங்காண். (15)

குணதோட மொன்றுமிலாப் பிரம மேநான்
குருவுக்குங் குருவான் பிரம மேநான்
கணமாதி காலமிலாப் பிரம மேநான்
கற்பனைக ளியாவுமிலாப் பிரம மேநா
னினையொன்று மில்லாத பிரம மேநா
னேகபரி பூரணமாம் பிரம மேநா
னனுவேனு மனியமிலாப் பரநா னென்றே
யறிஞனுடை யழுத்தமுறு நிச்ச யங்காண். (16)

திரிகுணமுங் கடந்தபரப் பிரம மேநான்
றிகழ்புத்திக் கப்பாலாம் பிரம மேநான்
சுருதியுமே கடந்தபரப் பிரம மேநான்
சுழன்மனதுக் கப்பாலாம் பிரம மேநான்
சருவமுமே கடந்தபரப் பிரம மேநான்
சரீரமுதற் கப்பாலாம் பிரம மேநா
னெருபுணர்வு மொன்றுத பரநா னென்றே
யுணர்வுடையோ னுரமான நிச்ச யங்காண். (17)

சாக்கிரமுங் கடந்தபரப் பிரம மேநான்
சார்கனவுங் கடந்தபரப் பிரம மேநான்
றாக்கமுமே கடந்தபரப் பிரம மேநான்
றுவிதமெலாங் கடந்தபரப் பிரம மேநா
னுக்கைகளுக் கப்பாலாம் பிரம மேநா
னபிமானிக் கப்பாலாம் பிரம மேநா
னீக்கமற நிறைவுற்ற பரநா னென்றே
நிகரற்ற வறிஞனுடை நிச்ச யங்காண். (18)

அலையுணர்வுக் கப்பாலாம் பிரம மேநா
னவித்தைக்கு மப்பாலாம் பிரம மேநான்
பலபொருளுக் கப்பாலாம் பிரம மேநான்
பரத்துக்கும் பாமான பிரம மேநா
னிலைமருவு முணர்வுருவாம் பிரம மேநா
னிகிலபரி பூரணமாம் பிரம மேநான்
சலனமிலாப் பரப்பிரம நானே யென்று
சாந்திமிகு மறிஞனுடை நிச்ச யங்காண். (19)

பேசியவிந் நிச்சயமுஞ் சமாதி விட்டுப்
பிரிவுற்ற காலத்தி லுள்ள தன்றிப்
பாசமிலாச் சமாதியினி லிருக்குங் காலைப்
பரவியவிந் நிச்சயமு மறிஞற் கில்லை
சாசுவத சமாதிதனிற் சலன மற்றுச்
சங்கற்ப விகற்பங்க ளனைத்து மற்றே
யாகில்பர மானந்த வநுப வத்தோ
டாவரண மின்றியசஞ் சலபாப் நிற்பன். (20)

சலனமிலாச் சிலபோலுங் காட்டம் போலுஞ்
சங்கற்ப விகற்பங்க ளொன்று மின்றிக்
கலனமுறுப் பிரமத்திற் பாலு நீருங்
கலப்பதுபோல் வேறறவே கலந்து சற்று
மலைவறவே வெறிதாகச் சுகித் திருக்கு
மறிஞனுடை யந்நிட்டை மகிமை தன்னை
நிலைமருவா மனத்தாலும் வசனத் தாலு
நினைந்திடவும் பகர்ந்திடவு மார்தாம் வல்லோர். (21)

அரனுத லரியாத லயனே யாத
லன்றியுள வநேகவித வமா ராதல்
பரஞானி மகிமைதனைக் கிஞ்சிலேனும்
பழுதறவே பாங்காகப் பகர்வ தற்கிங்
கொருபோதும் வல்லரல மனவாக் குக்க
ளொன்றுத மகிமைசொல் வார்தாம் வல்லோ
ரிருண்மேவா விவ்விதமா ஞானஞ் சார
லெவ்வுலகந் தனிலுமிக வரிதே யாமால். (22)

நிரமான வகம்பிரம மென்னு ஞானந்
திரிவிதமா மூலகத்து மரிதே யாகு
மூமமாக வகம்பிரம ஞான மேவி
யுணர்வுருவாம் பரப்பிரம சொரூப நிட்டை
பிரியாத பரஞானி தன்னைக் கண்டு
பேசுவதே மிகவரிதா மொருக்கா லந்தப்
பரஞானி பணிவிடையே கிட்டு மாகிற்
ப்ரமான மோட்சநிலை தானுங் கிட்டும். (23)

ஞானிபத தீர்த்தத்தாற் றூனஞ் செய்வோன்
ஞானகண் வடிவான பரமே யாவ
னனவெகு சென்மத்தி லநுட்டிப் புற்ற
வறங்களெல்லாம் பரிபாக மான வர்க்கே
யீனமிலா ஞானியுடைத் தெரிச னந்தி
யெளிதாக விச்சென்மந் தன்னி லெய்து
மூனமிலா ஞானியுடைத் தெரிச னந்தி
யுறுவோர்க்குப் பவபீதி மீண்டு முண்டோ. (24)

இன்னவித மியம்பியதும் பிரம மேயா
மேகபரி பூரணமாம் பிரம மல்லா
தன்னியமாய்க் காண்பதெலாஞ் சுத்தப் பொய்யே
யவையெல்லா மத்தியந்தா பாவ மேயாம்
பன்னியதி லேயமிலே யாத லாலே
பார்ப்பதெலாம் பிரமமென்று மதுநா னென்றும்
பின்னமிலா வகண்டபர ஞானம் பெற்றுப்
பேதமிலாப் பரப்பிரம வடிவே யாவாய். (25)

சங்கிரக மாகநினக் கிந்த வண்ணஞ்
சகலத்தின் சித்தாந்த மாகா நின்ற
பங்கமிலாப் பரம்பொருளைப் பகர்ந்தே னன்பாற்
பகர்ந்தபடி பழுதறவே கேட்டு ணர்ந்தோன்
சங்கமிலாப் பரப்பிரம வடிவே யாவன்
சாற்றியதை யனுதினமும் படிப்போன் முனுந்
துங்கபர ஞானத்தை யடைவாய் மேவித்
தூயபர வடிவாகிச் சுகமே சார்வன். (26)

பரஞானந் தடமாகும் பொருட்டு மீண்டும்
பழுதறவே பரமார்த்தம் பகரக் கேளா
யொருநாளு மொருபொருளு மெங்கு மில்லை
யுள்ளதெலா மகண்டபரப் பிரமா காரம்
பிரிவான வுலகமெலாம் பிரமா காரம்
பிறங்கியிடுஞ் சீவரெலாம் பிரமா காரம்
பரமான வீசனுமே பிரமா காரம்.
பரபதமு மகண்டபரப் பிரமா காரம். (27)

ஊனுகத் தோன்றுவதும் பிரமா கார
மூயிர்முதலாய்த் தோன்றுவதும் பிரமா காரங்
கோனுகத் தோன்றுவதும் பிரமா காரங்
குருமுதலாய்த் தோன்றுவதும் பிரமா காரம்
நாநாவாய்த் தோன்றுவதும் பிரமா காரம்
நவநவமாய்த் தோன்றுவதும் பிரமா காரம்
நீனுய்த் தோன்றுவதும் பிரமா காரம்
நிகழ்கின்ற தோற்றமெலாம் பிரமா காரம். (28)

அத்திறமாம் பரப்பிரம மானே னானே
யகங்கார மற்றபரப் பிரம நானே
யித்துவித மெவையுமிலாப் பிரம நானே
யேகசிதா காயபரப் பிரம நானே
சத்தியசிற் சுகசனமாம் பிரம நானே
சலனமிலாச் சாந்தபரப் பிரம நானே
நித்தியமங் களமான பரநா னென்றே
நிச்சலமா யெப்போது நிச்ச யிப்பாய். (29)

அனைத்துமிலாச் சன்மாத்ர சொரூப நானே
யனைத்துமிலாச் சின்மாத்ர சொரூப நானே
யனைத்துமிலாச் சுகமாத்ர சொரூப நானே
யனைத்துமிலாச் சுத்தபர சொரூப நானே
யனைத்துமிலா வத்துவித சொரூப நானே
யனைத்துமிலா வனுமயமாஞ் சொரூப நானே
யனைத்துமிலா வகண்டபர சொரூப நானென்
றசஞ்சலமா யநவரத நிச்ச யிப்பாய். (30)

எப்போது மழியாத சொரூப நானே
யெப்போது மட்சரமாஞ் சொரூப நானே
யெப்போது மிருமையிலாச் சொரூப நானே
யெப்போது மேகமகாஞ் சொரூப நானே
யெப்போதும் பரிசுத்த சொரூப நானே
யெப்போதும் பிரஞ்ஞான சொரூப நானே
யெப்போதும் பரப்பிரம சொரூப நானென்
றிடையறவே யெளிதாக நிச்ச யிப்பாய். (31)

எப்போது மிருக்கின்ற சொரூப நானே
யெப்போது மிலங்கியிடுஞ் சொரூப நானே
யெப்போது மினிதான சொரூப நானே
யெப்போது மின்பகன சொரூப நானே
யெப்போது மெல்லாமாஞ் சொரூப நானே
யெப்போது மெவையுமிலாச் சொரூப நானே
யெப்போதும் பரப்பிரம சொரூப நானென்
றிடையறவே யெளிதாக நிச்ச யிப்பாய். (32)

எப்போதுஞ் சித்தாந்த சொரூப நானே
யெப்போதுஞ் சின்மயமாஞ் சொரூப நானே
யெப்போதுஞ் சத்தான சொரூப நானே
யெப்போதுஞ் சாந்தபர சொரூப நானே
யெப்போதுஞ் சுத்தமதாஞ் சொரூப நானே
யெப்போதுஞ் சூக்கபர சொரூப நானே
யெப்போதும் பரப்பிரம சொரூப நானென்
றிடையறவே யெளிதாக நிச்ச யிப்பாய். (33)

எப்போதுஞ் சமமான சொரூப நானே
யெப்போதுஞ் சலியாத சொரூப நானே
யெப்போது நீலபெற்ற சொரூப நானே
யெப்போது நிச்சலமாஞ் சொரூப நானே
யெப்போது நிருமலமாஞ் சொரூப நானே
யெப்போது நிட்களமாஞ் சொரூப நானே
யெப்போது நிறைந்தபர சொரூப நானென்
றிடையறவே யெளிதாக நிச்ச யிப்பாய். (34)

எப்போது மாயையிலாச் சொரூப நானே
யெப்போது மலித்தையிலாச் சொரூப நானே
யெப்போது மீசனிலாச் சொரூப நானே
யெப்போதுஞ் சீவனிலாச் சொரூப நானே
யெப்போது மகண்டபர சொரூப நானே
யெப்போது மத்துவித சொரூப நானே
யெப்போது மேகபர சொரூப நானென்
றிடையறவே யெளிதாக நிச்ச யிப்பாய். (35)

எப்போது மான்மாவே பிரம மாகு
மெப்போதும் பிரமமதே யான்மா வாகு
மெப்போதும் பிரமத்துக் கயலன் றான்மா
வெப்போது மான்மாவுக் கயலொன் றில்லை
யெப்போது மெல்லாமு மான்மா வேயா
மெப்போது மெல்லாமும் பிரம மேயா
மெப்போது மான்மாவாம் பரமா னென்றே
யிருமையற வெளிதாக் நிச்ச் யிப்பரீய். (36)

ஓதியவிவ் வகண்டபர நிச்ச யத்தா
லுன்னுடைய மன்தினிடை யுதியா நின்ற
பேதமெலா மணுவுமிலா தொழிப்பாய் மைந்தா
பேதமதே மகத்தான பீதி யாகு
மேதமிலாச் சுழுத்தியினிற் பேத மில்லா
திருப்பதனு லெள்ளளவும் பீதி யில்லை
பேதமுறு நனவுகனு விவ்வி ரண்டிற்
பேதமிருக் கின்றதனற் பீதி கண்டோம். (37)

ஆதலினுன் மகத்தான பீதிக் கெல்லா
மாலயமா யிருக்கின்ற பேதந் தன்னைப்
பேதமிலா வகண்டபர நிச்ச யத்தின்
பிரியாத பழக்கத்தா லொழிப்பாய் மைந்தா
வோதியவிவ் வகண்டபர நிச்ச யத்தை
யுற்றவனே பவபாச முத்த னுனென்
சாதகமா விதையென்றும் பழகு வோனுஞ்
சம்சார பாசத்தான் முத்த னுவன். (38)

அநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யகண்டபர ஞானி யர்னு
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யிவ்வுலகிற் புருட னுனு
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யான்மசுக மநுப விப்போ
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யரந்தையிலாச் சீவன் முத்தன். (39)

அநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யகிலர்க்கு மேலாய் நின்னு
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே பவதுக்க மனைத்துந் தீர்ந்தோ
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே நிரதிசயா நந்தஞ் சார்ந்தோ
னநவாத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யகண்டபரப் பிரம மானேன். (40)

அநவரத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே பேதமெலா மறவி டுத்தோ
னநவரத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே பீதியெலா மறவொ ழித்தோ
னநவரத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யபயபதத் தமர்ந்து நின்றோ
னநவரத மகம்பிரம நிச்ச யத்தை
யடைந்தவனே யாநந்த வடிவா கின்றோன். (41)

பிரமமக மகம்பிரம மென்றிவ் வண்ணம்
பேதமிலா வகம்பிரம நிச்ச யத்தைச்
சரிவரவே சந்தகமும் பழகா நின்றோன்
சத்தியசிற் சுககனமாம் பரமே யாவ
னரியவனே யாதலினு னீயெப் போது
மன்புடனே யகம்பிரம நிச்ச யத்தைப்
பிரிவறவே பழகியதாற் பேதந் தீர்ந்து
பின்னமிலா வகண்டபரப் பிரம மாவாய். (42)

இருமையிலா வகண்டபர நிச்ச யத்தி
னியல்புதனை நிதாகனினக் கின்னஞ் சொல்வேன்
சருவமெனக் காண்கின்ற நாம ரூபஞ்
சற்றுமொரு காலத்து மிலவே யில்லை
பிரிவெனவே காண்கின்ற நாம ரூப
பேதமெலா மகண்டபரப் பிரம மாகுந்
தெரிவுருவா மப்பிரம நானே யென்னுந்
திடவுணர்வே யகண்டபர நிச்ச யங்காண். (43)

யானென்றுந் தேகமலன் றேகி யல்லன்
யானென்றும் பொறிகளலன் புலன்க ளல்லன்
யானென்று முயிர்களலன் வுள்ள மல்லன்
யானென்றும் புத்தியலன் சித்த மல்லன்
யானென்று மிகலுமகங் கார மல்லன்
யானென்று மிதன்மூலாஞ் ஞான மல்லன்
யானென்றும் பரப்பிரம மெனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (44)

யானென்றுஞ் சனிப்பனலன் மரிப்போ னல்லன்
யானென்று மந்தனலன் வெதிர னல்லன்
யானென்று மீனனலன் பெலவா னல்லன்
யானென்று நிஜைப்பனலன் மறப்போ னல்லன்
யானென்று மஞ்ஞனல னறிஞ னல்லன்
யானென்றும் பெத்தனலன் முத்த னல்லன்
யானென்றும் பரப்பிரம மெனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (45)

யானென்றுங் கருவியலன் கரும மல்லன்
யானெவையும் செய்கின்ற கருத்தா வல்லன்
யானென்றும் போகமலன் போக்ய மல்லன்
யானெவையும் புசிக்கின்ற போத்தா வல்லன்
யானென்று ஞானமலன் ஞேய மல்லன்
யானெவையு மறிகின்ற ஞாத்தா வல்லன்
யானென்றும் பரப்பிரம மெனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (46)

யானென்றும் பஞ்சவித கோச மல்லன்
யானென்று மவையினபி மானி யல்லன்
யானென்று மூன்றுவித தேக மல்லன்
யானென்று மவையினபி மானி யல்லன்
யானென்று மூன்றுவித வவத்தை யல்லன்
யானென்று மவையறியுஞ் சாட்சி யல்லன்
யானென்றும் பரப்பிரம மெனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (47)

யானென்றுஞ் சமட்டியலன் வியட்டி யல்லன்
யானென்று மவையினபி மானி யல்லன்
யானென்றுந் திரிபுடியா தொன்று மல்லன்
யானென்றுந் திருசியமே தொன்று மல்லன்
யானென்றுஞ் சீவனல னீச னல்லன்
யானென்றுஞ் சகமுதலே தொன்று மல்லன்
யானென்றும் பரப்பிரம மெனக்கு வேறு
யெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (48)

யானென்றுஞ் சத்தியசிற் சுகமாம் வத்து
யானென்றுஞ் சகலமுமாய் நிறைந்த வத்து
யானென்று நித்தியமங் களமாம் வத்து
யானென்று நிரதிசயா நந்த வத்து
யானென்று மத்துவித மான வத்து
யானென்று மகண்டபரி பூன்ற வத்து
யானென்றும் பரப்பிரம வத்து வேறொன்
றெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (49)

யானென்று நிச்சலமாய் நின்ற வத்து
யானென்று நிருமலமாய் நிகழும் வத்து
யானென்று மெவைக்குமினி தான வத்து
யானென்று மேகபரி பூன்ற வத்து
யானென்றுஞ் சருவான்ம சொரூப வத்து
யானென்றுஞ் சனனமிலாச் சாந்த வத்து
யானென்றும் பரப்பிரம வத்து வேறொன்
றெள்ளளவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (50)

யானென்று நிட்களமாம் பிரம ரூபம்
யானென்று நிருமலமாம் பிரம ரூபம்
யானென்று நிர்க்குணமாம் பிரம ரூபம்
யானென்று நிரஞ்சனமாம் பிரம ரூபம்
யானென்று நிராமயமாம் பிரம ரூபம்
யானென்று நிகரற்ற பிரம ரூபம்
யானென்று மகண்டபரப் பிரம ரூப
மெனக்கயலே யில்லையென நிச்ச யிப்பாய். (51)

யானென்றுஞ் சன்மயமாம் பிரம ரூபம்
யானென்றுஞ் சின்மயமாம் பிரம ரூபம்
யானென்றுஞ் சுகமயமாம் பிரம ரூபம்
யானென்றுஞ் சுத்தபரப் பிரம ரூபம்
யானென்று மிருமையிலாப் பிரம ரூபம்
யானென்று மேகபரப் பிரம ரூபம்
யானென்று மகண்டபரப் பிரம ரூப
மெனக்கயலே யில்லையென நிச்ச யிப்பாய். (52)

சாற்றியவிவ் வகண்டபா நிச்ச யத்தின்
சந்ததமுஞ் சலியாத பழக்கத் தாலே
தோற்றியவிப் பலவிதமா நாம ரூபத்
துவிதத்தின் ரூற்றமெலா மற மறந்தே
யேற்றியவிவ் வகண்டபரப் பிரமத் தின்க
ணைப்போது மேகரச மாகி நின்று
போற்றியநின் சொரூபசுக மநுப வித்துப்
பூரணமாம் பரப்பிரம வடிவே யாவாய். (53)

துவிதமெலாங் காண்கின்ற கனவே போலாந்
துவிதமெலாங் கந்தர்வ நகரே போலாந்
துவிதமெலாங் கானலினீர் நிகரே யாகுந்
துவிதமகேந் திரசால நிகரே யாகும்
துவிதமெலாஞ் சசசிருங்க நிகரே யாகுந்
துவிதமெலா நரசிருங்க நிகரே யாகுந்
துவிதமெலா மலடிமக னிகரே யாகுந்
துவிதமெலா மாகமலர் நிகரே யாமால். (54)

ஆசிரிய னடைவாகச் சீட ணுக்கிங்
கத்துவித வுபதேசஞ் செய்கா லத்தும்
பாசமுறுந் துவிதத்தை யுண்மை யாகப்
பகரவிலை யவன்மனதை யநுச ரித்தே
பேசியுடன் பரமார்த்த மாகா நின்ற
பின்னமிலா வத்துவித முபதே சிப்ப
னேசமுடன் யானுமாய் நினக்குச் சொல்லு
நீதியிதி னிகழ்த்தியவோர் திட்டாந் தங்கேள். (55)

தந்தைமுதன் மரணத்திற் பந்து வன்றித்
தளர்தனயன் ரிரவியமே தந்த ழைத்து
வந்தசன மழுகின்ற நீதி யன்ணேன்
வழங்குதனப் பொருட்டன்றி யுண்மை யன்றே
யந்தவித மாசிரியன் சீட ணுக்கிங்
கத்துவிதம் புகலுங்காற் றுவித மோதன்
மைத்தவிதி லையமிலை யதனற் ரெய்த
மறந்தென்று மத்துவித வடிவே யாவாய். (56

அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றறவாத மதிதிடமாய் நிச்ச யித்து
மிகும்பிரம பாவனையே தொடர்பாய்ச் செய்து
மேவியவித் துவிதமெலா மிக மறந்தே
யகம்பிரம ஞானமது நிருவி கற்ப
மானவுட னசஞ்சலமாய்ச் சிலையே போலத்
தகும்பிரம வடிவாகித் தளர்வு தீர்ந்து
தடையற்ற வாநந்த மநுப விப்பாய். (57)

சகம்பணியும் பரமசிவ னெனக்கு முன்னஞ்
சகலர்க்கு மிதமாக வருளிச் செய்த
வகம்பிரம ஞானத்தை நினக்கிவ் வண்ண
மருள்செய்தே னெங்குமிக வரிதா மிந்தத்
தகும்பொருளின் சிரவணமே யாதி செய்வோன்
றடையற்ற வகண்டபர ஞானம் பெற்றே
யகம்பிரம வாக்கினிலக் கியமாய் நின்ற
வகண்டபர வடிவாவ னைய மில்லை. (58)

வேதமுக லோகலினுல் யாகந் தன்னுல்
விரதத்தா லியமமுதல் யோகாங் கத்தாற்
சாதகமாந் தானத்தான் மற்று முள்ள
சகலவித கருமத்தாற் பாசி வத்தைப்
பேதமற வறிவமெனு மிச்சை யுண்டாம்
பின்னமிலாச் சிவவடிவா மகாலிங் கத்தைத்
தீதறவே யநவாதம் பூசிப் போர்க்கே
திடஞானமுண்டாகி மோகந் தீரும். (59)

அகிலபரி பூரணமா யனைத்து மூண்டா
யடங்குவதற் காலயமாஞ் சிவரூ பந்தா
னிகரின்மகா லிங்கமித னநுசந் தானம்
கிரந்தரமாய்ச் செய்வதுவே யிவற்றின் பூசை
யகமதனி லிப்பூசை செய்வோ ருக்கே
யகண்டபர சிவனருளா லறிவுண் டாமென்
றிகழ்வறவே ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கினமுரைப் பரம்பொருளே யிசைத்தா னன்றே. (60)

வேறு.

நேசமாய்ப்பர நிச்சயமேவிய நிருவிகற்பக ஞானமடைத்தா
ஞசமேவிய வீப்பலபேதமா நாமரூப மனைத்துமறத்துடன்
பாசமின்றிய சிற்பரரூபமாய்ப் பந்தம்யாவும் விடுத்திடலாமென
லாசிலாநந்தத் தாண்டவமாடுமெம் மாண்டவன்பரி பூரணரூபமே.(61)

பத்தொன்பதாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 19-க்கு நிருவிருத்தம்-889.

†††

இ ரு ப தா வ து

பரசோரூப நிச்சயத்தாற் பரமுத்தி யுரைக்கும் அத்தியாயம்.

சகலவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரிதான நிர்ண யத்தை
மிகவரிதாம் பரஞான மூரக்கும் வண்ண
மீளவுமே நிதாகநினைக் கருளக் கேளா
யிகபரமா யிலங்கியவிந் நாம ரூப
மெல்லாமு மெப்போதும் பிரம ரூப
மகிலபரி பூரணமா யகண்ட மான
வப்பிரம மகிலர்க்கு மான்ம ரூபம். (1)

நான்பிரம நீபிரம நாநா வாக
நாடியிடு முலகமெலாம் பிரம ரூபந்
தான்பிரமந் தமர்பிரமந் தனக்கு வேறுய்த்
தங்கியிடுஞ் சனங்களெலாம் பிரம ரூபங்
கோன்பிரமங் குருபிரமங் குறித்துக் கண்ட
கூறுபடும் பொருளெல்லாம் பிரம ரூபங்
கான்பிரமங் கிரிபிரமங் காணு நின்ற
காரியகா ரணமெல்லாம் பிரம ரூபம். (2)

அத்துவித பூரணமாம் பிரமத் துக்கிங்
கன்னியமா யணுவேணு மிலவே யில்லை
வித்தரமாய்க் காண்பதெலாம் பிரம ரூபம்
விபுவான பிரமமதே யான்ம ரூபம்
புத்திரனே யாதலினு லென்று மெல்லாம்
பூரணமாம் பரப்பிரம ரூப மென்று
நித்தியமா மப்பிரம நானே யென்று
நிச்சலமா முறுதியினன் முத்த னுவாய். (3)

உத்தமமாம் வேதமெலாம் பிரம ரூப
முபநிடதம் யாவையுமே பிரம ரூபம்
வித்தரமாங் கல்லமெலாம் பிரம ரூபம்
விதம்விதமாந் தேசமெலாம் பிரம ரூபஞ்
சித்திரமாம் வத்துவெலாம் பிரம ரூபஞ்
சிற்சடமாய்த் தெரிவதெலாம் பிரம ரூபஞ்
சத்தியமா மப்பிரம நானே யென்னுஞ்
சலனமிலா வுறுதியினுன் முத்த னவாய். (4)

அரனரியு மயனுருவும் பிரம ரூப
மமரர்நரர் திரியக்கும் பிரம ரூபம்
விரவுமையும் பரசிவனும் பிரம ரூபம்
விநாயகனும் வேலவனும் பிரம ரூபம்
பரமசிவ கணமெவையும் பிரம ரூபம்
பரசிவ சகங்களெலாம் பிரம ரூப
நிருமலமா மப்பிரம நானே யென்னு
நிச்சலமா முறுதியினுன் முத்த னவாய். (5)

பிரணவமா மந்திரமும் பிரம ரூபம்
பின்னுமுள மந்திரமும் பிரம ரூபம்
பரவியபஞ் சாட்சரமும் பிரம ரூபம்
பத்தியுட னதன்செபமும் பிரம ரூபம்
புரைமருவா ரேசகமும் பிரம ரூபம்
பூரகமுங் கும்பகமும் பிரம ரூபஞ்
சருவமுமா மப்பிரம நானே யென்னுஞ்
சலனமிலா வுறுதியினுன் முத்த னவாய். (6)

அஞ்சனமா மஞ்ஞானம் பிரம ரூப
மகங்கார முதலியதும் பிரம ரூபம்
பஞ்சமகா பூதமுமே பிரம ரூபம்
பலவிதமாம் பௌதிகமும் பிரம ரூப
மிஞ்சியுள பொருளெவையும் பிரம ரூப
மெய்போன்ற துவிதமெலாம் பிரம ரூபஞ்
சஞ்சலமி லப்பிரம நானே யென்னுஞ்
சலியாத வுறுதியினுன் முத்த னவாய். (7)

பேதமெனத் தோற்றியவித் துவித மெல்லாம்
பின்னமிலா வத்துவிதப் பிரம மென்றே
யோதியவிந் நிச்சயமிங் குரமா யுற்றே
னுடனிந்தப் பவபாச முத்த னுவன்
பேதமுறு மாமூட சொருகா லத்தும்
பின்னமிலா வகண்டபர முத்தி மேவா
ரேதுமிதி லையமிலை யெவையு மோர்ந்த
வெமதீச னியம்பியதி லைய முண்டோ. (8)

அற்பமுமே யறியாத சிலமா மூட
ரத்துவித மாதரியார் வெறும் பொய்யான
கற்பிதமாந் துவிதமிதே யுண்மை யென்று
கதறுவரம் மாமூட ருடனே யென்று
மற்பமுமே பேசவொணு தன்னே ருக்கோ
ரணுவேனு மளிக்கவொணு தவரைக் கண்டாற்
சொற்பமுமே வணங்கவொணு தவரெப் போதுஞ்
சுத்தமகா மூடரென வுணர வேண்டும். (9)

கற்பிதமாந் துவிதமிதே யுண்மை யென்று
கதறியிடுங் கயவர்களைக் கண்ட போது
மற்பமிலா வத்துவித மறிந்த தீர
ரக்கயவ ரொருகாலு மில்லை யென்றும்
பற்பலவாய்ப் பார்க்கின்ற துவித மெல்லாம்
பரமசிதா காயபரப் பிரம மென்றுந்
கற்பிரமந் தானென்று முறுதி கொண்டே
கமதுநிலை தவிராம லிருக்க வேண்டும். (10)

சருவமுமே சின்மாத்ர மாத லாலுஞ்
சருவமுமே சுகமாத்ர மாத லாலு
மிருமையெனுந் துவிதமொரு காலு மில்லை
யித்துவித வாதிகளு மென்று மில்லை
யொருவடிவா நமக்கயலே யிலாமை யாலே
யொருகாலு மொருபயமு மில்லை யென்றே
*தரளமிலா வத்துவித வுறுதி கொண்டே
கமதுநிலை தவிராம லிருக்க வேண்டும். (11)

* தரளம்—அசைவு.

சத்தியசிற் சுகசனமாம் பிரம மல்லாற்
சகமுதலாந் துஷ்டமொரு காலு மில்லை
சித்திரமாய்த் தோற்றியவித் துஷ்ட மெல்லாஞ்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மேயாம்
புத்திரனே பூரணமாஞ் சிவன்றன் ஞான
புகன்றதிலோ ரையமிலை யாத லாலே
யத்துஷ்ட நிச்சயமே யடைந்த வற்ரு
லகண்டபர வடிவாகி முத்த னுவாய். (12)

பலகால வாதனையாற் றுஷ்டந் தானே
பரமார்த்த மென்றுநினை வுதித்த போதுந்
தொலையாத துஷ்டவடி வாகத் தானே
துஷ்டத்தை நினையாம லவற்றை யெல்லா
மலையாத வதிட்டான வறிவாய் நின்ற
வத்துஷ்ட மானபர வடிவே யாகச்
சலியாம லெப்போது நினைத்தே யத்தாற்
சத்தியசிற் சுகவடிவாய் முத்த னுவாய். (13)

ஆலமனது முதலியதற் கதீத மாகி
சூரியகங்கா முதலியதற் கதீத மாகி
நிலைமருவாக் காலத்துக் கதீத மாகி
நிகிலசக சிவர்க்கு மதீத மாகி
யிலகுமறை யீற்றிற்கு மதீத மாகி
யித்துஷ்டம் யாவுக்கு மதீத மான
சனமிலாப் பரவடிவே யனைத்து மென்று
சந்ததமு நினைத்ததனன் முத்த னுவாய். (14)

சதாநந்த மயமான பிரம நானே
சின்மாத்ர மானபரப் பிரம நானே
சிதாநந்த மயமான பிரம நானே
சின்மாத்ர மானபரப் பிரம நானே
யுதாரபரி பூரணமா மெனக்கு வேரு
யோரணுவுந் துஷ்டமொரு காலு மில்லை
சதாவுமெலாம் பரமான நானே யென்று
சலியாது பாவித்து முத்த னுவாய். (15)

சுத்தபர மாநந்த சொரூப நானே
சூனியவா நந்தபர சொரூப நானே
நித்தபர மாநந்த சொரூப நானே
நிசாநந்த மானபர சொரூப நானே
யத்துவித வாநந்த சொரூப நானே
யகண்டபர மாநந்த சொரூப நானே
யித்துவித மணுவேணு மெனக்கு வேரு
யிலையெனவே பாவித்து முத்த னுவாய். (16)

புத்தபர மாநந்த சொரூப நானே
பூரணவா நந்தபர சொரூப நானே
முத்தபர மாநந்த சொரூப நானே
மோனமகா நந்தபர சொரூப நானே
சுத்தியஞா னுநந்த சொரூப நானே
சாந்தபர மாநந்த சொரூப நானே
யித்துவித மணுவேணு மெனக்கு வேரு
யிலையெனவே பாவித்து முத்த னுவாய். (17)

அத்துவித வடிவான வெனக்கு வேரு
யணுவுமிலை யகண்டபர நானே யென்று
மித்திறமா நிச்சயமே செய்தெப் போது
மிணையற்ற பிரமசுக மிசைவா யிங்கே
புத்திரனே திடமான நிச்ச யந்தான்
பூரணமா ஞானத்துக் கிலக்க ணங்கா
ணத்திறமா நிச்சயமே யகண்ட முத்தி
யடைந்தபய மாகுவதற் கேதுவா மால். (18)

நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனதின் சங்கையெலா மடைவாய் நீங்கு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நின்னிடையே சாந்தி மேவு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நிர்மலமாய் நிறைந்து நிற்கு
நிச்சயமே திடமாகச் செய்ய்ச் செய்ய
நின்மனது நிரதிசயா நந்தஞ் சாரும். (19)

நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது துவிதமெலா மிழந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனதிங் கத்துவித மடைந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது சிவத்வ மிறந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நிறைந்தபரப் பிரம மாமே. (20)

நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நிகரற்ற தீரஞ் சாரு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நிரதிசய நிருத்தி மேவு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நித்தியமங் களமே யாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நிசவடிவி னிலைத்த தாமே. (21)

நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நினைவெவையு மறந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது பயமெவையு மிறந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனதிங் கபயபதஞ் செறிந்த தாகு
நிச்சயமே திடமாகச் செய்யச் செய்ய
நின்மனது நின்சகச சொரூப மாமே. (22)

மனதுசதா நின்சகச சொரூப மானுன்
மற்றதுதான் மீளாது மாய்ந்து போகு
மனதுடைய மீளாத மாய்வு தானே
மகத்தான மோட்சநிலை யதனுன் மைந்தா
மனததனை மீளாது மாய்க்க வேண்டி
மகத்தான பரப்பிரம நிச்ச யத்தை
மனதொருமை யுடன்செய்து மனதை மாய்த்து
மகத்தான முத்திநிலை மருவி நிற்பாய். (23)

அகண்டபரப் பிரமத்துக் கயலே யில்லை
யகிலமுமவ் வகண்டபரப் பிரம மென்று
மகண்டபரப் பிரமமது வகமே யென்று
மகமந்த வகண்டபரப் பிரம மென்று
மகண்டபர பாவனையே திடமாய்ச் செய்திவ்
வயலனுவுந் தோன்றுமை லழிந்த பின்பவ்
வகண்டபர பாவனையுஞ் செயாது கள்ளி
யாநந்த வடிவாக வமர்ந்து நிற்பாய். (24)

உன்னியவவ் வானந்த வடிவுந் தள்ளி
யுரமாக வொருவடிவே யாகி நிற்பா
யன்னியமி லொருவடிவென் பதையுந் தள்ளி
யதன்பின்பு நிர்க்குணமே யாகி நிற்பாய்
மன்னியவந் நிர்க்குணமென் பதையுந் தள்ளி
மனவாக்குக் கெட்டாத வடிவாய் நிற்பா
யன்னதையுந் தள்ளியபின் னறிவு மாத்ர
மாயதையு மிழந்தான்ம மாத்ர மாவாய். (25)

அன்னதையுந் தள்ளியபின் பிரம மாத்ர
மாயிடுவாய் மற்றதையுந் தள்ளி யிங்குச்
சொன்னவெலா மிழந்துவெறி தாக நிற்பாய்
சொன்னதையுந் தள்ளிமிக வெறிதாய் நிற்பாய்
பின்னுளமே மூதலியவோ ருபாதி யின்றிப்
பேசவொணாச் சூனியமா நிலையி னிற்பா
யின்னவித சூனியமு மிழந்த பின்ன
ரெவ்வடிவோ வவ்வடிவே யாகி நிற்பாய். (26)

நிற்பதெனுந் தன்மையுமே யிழந்த பின்னர்
நீயா யிருக்கின்ற சுபாவந் தன்னைச்
சொற்பமுமே வாக்காலு மனத்தி னாலுஞ்
சொல்லவொணா தெண்ணவொணா தாத லாலே
கற்பமாஞ் சகசநிலை சார்ந்த பின்னர்த்
தான்றானே தானுகத் தனித் திருப்பா
யற்பமுமே விகற்பமிலா வவ்வி ருப்பை
யறைந்திடவு நினைந்திடவு மார்தாம் வல்லோர். (27)

சொல்லியவிவ் விதமாக வனைத்துந் தள்ளிச்
சுத்தபர வடிவாகிச் சுயமாய் நிற்பா
யல்லதெலாந் தள்ளலுமே யகண்ட மான
வகமெனவே யாவாத மறுசந் திப்பா
யெல்லையிலா வகண்டபர நானே யென்றிங்
கெப்போதும் பழகியவிவ் வநுசந் தானங்
கல்லெனவே திடமான நிருவி கற்பங்
கைவசமே யாகுவதிற் காரணங் காண். (28)

ஆதலினு லனைத்துக்கு மதீத மான
வகண்டபரப் பிரமமக மென்றெப் போதுஞ்
சாதகமாம் பாவனையே செய்தத் தாலே
சஞ்சலமாம் விகற்பமெலாந் தவிர்ந்தெப் போதும்
பேதமிலாப் பரப்பிரம ஞானி யாகிப்
பின்னமிலாப் பரப்பிரம வடிவே யாவா
யீதையலா லெளிதாக முத்தி சார
வேதென்று முபாயமிலை யிதுவே யுண்மை. (29)

எப்போது மகண்டபரப் பிரமந் தன்னை
யெளிதாகப் பாவித்தே யிருமை தீர்வா
யெப்போது மகண்டபரப் பிரமந் தன்னை
யெளிதாகப் பாவித்தே யொருமை சார்வா
யெப்போது மகண்டபரப் பிரமந் தன்னை
யெளிதாகப் பாவித்தே துன்பந் தீர்வா
யெப்போது மகண்டபரப் பிரமந் தன்னை
யெளிதாகப் பாவித்தே யின்பஞ் சார்வாய். (30)

எப்போதும் புத்தபரப் பிரம நானே
யெப்போதும் பூரணமாம் பிரம நானே
யெப்போது நித்தபரப் பிரம நானே
யெப்போது நிர்க்குணமாம் பிரம நானே
யெப்போதுஞ் சுத்தபரப் பிரம நானே
யெப்போதுஞ் சுகனமாம் பிரம நானே
யெப்போது முத்தபரப் பிரம நானென்
றெளிதாகப் பாவித்தே முத்த னுவாய். (31)

எப்போதுஞ் சாந்தபரப் பிரம நானே
யெப்போதுஞ் சலனமிலாப் பிரம நானே
யெப்போது மேகபரப் பிரம நானே
யெப்போது மிருமையிலாப் பிரம நானே
யெப்போதுந் தூயபரப் பிரம நானே
யெப்போதுந் தோடமிலாப் பிரம நானே
யெப்போது மகண்டபரப் பிரம நானென்
றெளிதாகப் பாவித்தே முத்த னுவாய். (32)

எப்போது மியம்பாமன் மௌன மாகி
யெவருடனுங் கூடாம லேகாந் தத்திற்
கற்போல வசையாம லிருந்து சற்றுங்
கலங்காத மனதுடனே யொருமை யாகிச்
சற்போத சுகசனமாம் பரநா னென்றே
சந்ததமும் பாவித்துச் சாந்த னுகித்
கற்போத சூனியனுய் விகற்பந் தீர்ந்து
கற்பதமே தானுகி முத்த னுவாய். (33)

தேகமுத லொருகாலு நானன் றென்றுந்
தெரிவுருவாம் பரப்பிரம நானே யென்றும்
பாகமுற வொருபொருளு மில்லை யென்றும்
பலபொருளும் பரப்பிரமந் தானே யென்று
மேகபர பாவனையே யிடைவி டாம
லெப்போது மினிமையுடன் செய்வா யாகின்
மோகமெலா மொழித்துடனே முத்த னுவாய்
மொழிந்ததிலோ ரையமில்லை சத்தி யந்தான். (34)

சத்தியசிற் சுகசனமாம் பரமே நானுஞ்
சத்தியசிற் சுகசனமாம் பரமே நீயுஞ்
சத்தியசிற் சுகசனமாம் பரமே யாருஞ்
சத்தியசிற் சுகசனமாம் பரமே யெல்லாஞ்
சத்தியசிற் சுகசனமாம் பரமே யல்லாற்
சகசிவ பரங்களெனச் சிறிது மில்லை
சத்தியசிற் சுகசனமாஞ் சிவன்றன் ஞானை
சாற்றியசிற் சங்கையில்லை சத்தி யந்தான். (35)

பூதமெலாஞ் சத்தியசிற் சுகமே யாகும்
புவனமெலாஞ் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சாதமெலாஞ் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சனியாதுஞ் சத்தியசிற் சுகமே யாகும்
வேதமெலாஞ் சத்தியசிற் சுகமே யாகும்
விரிநூலுஞ் சத்தியசிற் சுகமே யாகு
மாதவவச் சத்தியசிற் சுகநா னென்றே
மயங்காம லெப்போது மநுசந் திப்பாய். (36)

சாதனமுஞ் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சாத்தியமுஞ் சத்தியசிற் சுகமே யாகும்
வேதனமுஞ் சத்தியசிற் சுகமே யாகும்
வேத்தியமுஞ் சத்தியசிற் சுகமே யாகும்
பேதமெலாஞ் சத்தியசிற் சுகமே யாகும்
பின்னெவையுஞ் சத்தியசிற் சுகமே யாகு
மாதவவச் சத்தியசிற் சுகநா னென்றே
மயக்கமற வெப்போது மநுசந் திப்பாய். (37)

அகமெனவுஞ் சத்தியசிற் சுகமே யாகு
மயலெனவுஞ் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சகமெவையுஞ் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சிவரெலாஞ் சத்தியசிற் சுகமே யாகு
நிகழ்பாணுஞ் சத்தியசிற் சுகமே யாகு
நிகிலமுமச் சத்தியசிற் சுகமே யாகுஞ்
சகலமுமாஞ் சத்தியசிற் சுகநா னென்றே
சலனமற வெப்போது மநுசந் திப்பாய். (38)

காரணியே முதலியதாய்க் காண்ப தெல்லாங்
கற்பமாஞ் சத்தியசிற் சுகசொ ரூபங்
காரணகா ரியமாகக் காண்ப தெல்லாங்
களங்கமிலாச் சத்தியசிற் சுகசொ ரூபம்
பூரணமாம் பொருளுக்கும் பூன்ற மாகப்
புகல்பொருளுஞ் சத்தியசிற் சுகசொ ரூப
மாரணவீ றறிவிக்கு மச்சொ ரூப
மகமெனவே யநிதிடயா யநுசந் திப்பாய். (39)

இருமையென வொருமையென வியம்ப லுற்ற
வெப்பொருளுஞ் சத்தியசிற் சுகசொ ரூப
மரியமறை முதலவற்றின் சித்தாந்தங்க
ளகிலமுமச் சத்தியசிற் சுகசொ ரூபஞ்
சருவசக சீவர்க்குஞ் சாட்சி யான
சம்புவுமச் சத்தியசிற் சுகசொ ரூபஞ்
சுருதிமுடி யறிவிக்கு மச்சொ ரூபஞ்
சுயமெனவே யெப்போது மநுசந் திப்பாய். (40)

தேகமுதற் றிருசியமுந் திருக்குந் தானுந்
தெளிவான சத்தியசிற் சுகசொ ரூபம்
போகமொடு போக்கியமும் புசிப்போன் ரூனும்
பூரணமாஞ் சத்தியசிற் சுகசொ ரூபம்
பாகமிலாப் பரப்பிரம ஞானந் தானும்
பரமான சத்தியசிற் சுகசொ ரூப
மாகமவீ றறிவிக்கு மச்சொ ரூப
மகமெனவே யநவரத மநுசந் திப்பாய். (41)

சத்தியசிற் சுககனமாம் பிரமந் தானே
சகலமென்று மப்பிரம நானே யென்று
மித்திறமாந் திடமான வநுசந் தான
மெப்போது மிடையறவே செய்தே யித்தாற்
சத்தியசிற் சுகனவப் பரமே யாகிச்
சங்கற்ப விகற்பங்க ளனைத்துந் தள்ளி
யத்துவித பூரணமா யிருப்ப தான
வகண்டபர முத்திதனை யடைவாய் மைந்தா. (42)

பாமசிவன் கருணையினு லெனைக் குறைத்த
பரம்பொருளே நினக்கருளாற் பகர லுற்றே
னரியதினு மரிதான விவ்வர்த் தத்தை
யத்யந்த மூடரிடை விவேகி யாலே
யொருபொழுது முரைக்கவொணு தன்னே ரின்பா
லோதியவிப் பொருண்மிகவும் புனித மேனும்
புரைமருவு மம்மூடர் புணர்ச்சி யாலே
புனிதமிலாப் பொருளெனவே வியர்த்தமாகும். (43)

விமலபர விவேகவலி யுள்ள தீரர்
விடயாசை மிகுந்தவெறு மூட ரோடே
மமதையுட னெருகாலும் பேச வொண்ணு
மற்றவரை மனத்தாலு மநிக்க வொண்ணு
வமலபர வுணர்வுரமாய் முத்தி சேர
வகிலவிட யாசைவிட லன்றே வேது
நிமலமிலா மூடருடன் சகவா சத்தா
னீத்தவிட யாசையுமே மீளு மன்றே (44)

நற்பிரம விவேகவலி யுள்ள தீரர்
நாரிமுதற் சுகத்நிச்சை நண்ணும் போதும்
பற்பலவாய்த் தோற்றியவச் சுகத்தை யெல்லாம்
பரப்பிரம சொரூபசுக மெனவே யோர்ந்து
கற்பிதமாம் விடயசுக மநுப விக்கக்
கனவிலுமே நினையாது தைரி யத்தோ
டற்பமிலா வகண்டபர சுகமே சேர
வகண்டபர ஞானபெல மடைய வேண்டும். (45)

வேதமுத னூற்களெலா மிகவுங் கற்ற
வேதியரே யாகினுமிவ் வகண்ட ஞானம்
பேதமறப் பொருந்தாதோ ரொருகா லத்தும்
பிராமணரே யாகியிடா ரெபவீ தந்தான்
சாதியடை யாளமலாற் பிராம ணத்வஞ்
சாருவதிற் சாதகமன் றதனு லென்றும்
பேதமிலாப் பரப்பிரம வுபவீ தத்தைப்
பெற்றவரே பிராமணராய் முத்த ராவர். (46)

பேதமறப் பரப்பிரம வறிவுற் றோரே
பிராமணரென் றுங்கங்கே பேச லாகு
மீதியுளோர் சாதியினற் பிராம ணத்வ
மேனினரென் றிவ்விதமாம் ரகசி யார்த்த
மேதையுமே யெனக்கருளா லீசன் சொன்ன
வியல்பாக நிதாகநினக் கியம்பி னேனு
நேதியவிவ் வர்த்தத்தை யொருகா லேனு
முள்ளபடி கேட்டுணர்வோன் பரமே யாவன். (47)

மாதருநற் சூத்திரரு மற்றுள் ளோரு
மகிமைமிகு மிப்பொருளைக் கிரந்த வாக்காற்
பேதமறக் கேட்டுணர விச்சிப் பாரேற்
பிரமணரின் முகமாகக் கேட்க வேண்டும்
வேதமுடிப் பொருளிதனை யாவரேனும்
விதியுடனே யுரமாகக் கேட்டு ணர்ந்தாற்
பீதிசெயும் பவபந்த மனைத்துந் தீர்ந்து
பின்னமிலாப் பரவடிவே யாவ ரன்னோர். (48)

அகிலமுமே யகண்டபர சிவமே யென்று
மச்சிவமே யகமென்றும் பழகா நின்ற
மகிமைமிகுந் நியானமெனும் பூசை யாலே
மனதலைவற் றறிவுருவாய் முத்தி மேவும்
வெகுவிதமா மறையாலுங் கருமத் தாலும்
விசித்திரமாய்ப் பழகியிடும் யோகத் தாலும்
வகைவகையாய் மற்றுமுள வுபாயத்தாலும்
வரமான முத்திதனை மனது மேவா. (49)

சிரவணமு மனனமுமே செய்த பின்னர்ச்
சின்மயமாம் பரமசிவ நானே யென்று
புரையறவே பழகியிடுந் நியான மாகும்
பூசனையாற் பூரணமாஞ் சிவஞா னத்தை
யிருளறவே யெளிதாக வடைந்து மோட்ச
மிசைந்திடலா மிதிலைய மில்லை யென்றே
பிரியமுடன் ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பின்னமிலாப் பரம்பொருளைப் பேசி னனால். (50)

வேறு.

பிரமசிந்தனைசந்ததம்செய்வதாற் பேதமின்றியஞான மடைந்துடன்
றிரியுஞ்சித்த விகற்பமனைத்துமே தீர்ந்தகண்ட சொரூபம தாகவே
யிருமையின்றி யிருப்பதுவாகிய வேகமுத்தி யிசைந்திட லாமென
லரியவாநந்தத்தாண்டவமாடுநம் மாண்டவன்றனகண்டசொரூபமே.

இருபதாவது அத்தியாயம் (51)
முற்றிற்று.

ஆக அத்தியாயம்-20-க்கு திருவிருத்தம்-9140.

இருபத்தொன்றாவது

பிரமான்ம சிந்தனை யுரைக்கும் அத்தியாயம்.

அத்துவித பூரணமாம் பிரம மல்லா
லயலில்லை யென்பதனை மீண்டு மீண்டுஞ்
சத்தியசிற் சுககனமாம் பிரம ஞானஞ்
சலனமறத் திடமாகும் பொருட்டுச் சொல்வாஞ்
சித்திரமாய்த் தோற்றியவிச் சகசீ வாதி
சின்மயமாம் பிரமமலால் வேறே யில்லைச்
சுத்திகையிற் றேற்றியிடும் ரசத மந்தச்
சுத்திகையே யல்லாமல் வேறே யுண்டோ. (1)

எப்போது மசத்தான சகசீ வாதி
யிலாமையினு லியம்புவதற் கிடமே யில்லை
யெப்போதுஞ் சத்தான பிரம ரூப
மேகமதா லியம்புவதற் கிடமே யில்லை
யெப்போது மூண்மைநிலை யிவித மேனு
மிவ்விவகா ரத்தசையிற் பிரமாப் யாச
மெப்போதுஞ் செய்பவருக் கிதமே யாக
வேகபர நிர்ணயமே யிங்குச்சொல் வாம். (2)

மகிமைமிகு மகண்டபர நிர்ண யத்தை
மங்களபூ ருவமாகப் படிக்க வேண்டும்
விகலமிலா விதியுடனே படிப் போருக்கே
விக்கினமே யில்லாம லகண்ட ஞான
மகமதனி லெளிதாக வுதிக்கு மிங்கே
யாதலினு லகண்டபர நிர்ண யத்தைப்
புகல்பொழுது மங்களபூ ருவமே யாகப்
பூரணமாம் விதியுடனே புகல வேண்டும். (3)

சத்தியசிற் சுகனமாம் பிரம மல்லாற்
சகசீவ பரங்களெலா மிலவே யில்லை
யத்திரமாய்த் தோற்றியவிச் சகசீ வாதி
யகிலமுமே யகண்டபரப் பிரம மேயாம்
புத்திரனே நீநானு மற்றுள் ளோரும்
பூரணமாம் பரப்பிரம சொரூபந் தானு
மத்துவித பூரணமாஞ் சிவன்றன் ஞான
யறைந்ததனி லணுவேனு மைய மில்லை. (4)

அகிலமுமாம் பரப்பிரம சொரூப மேகா
னறிவுருவாம் பரப்பிரம சொரூப மேகான்
சகலமிலாப் பரப்பிரம சொரூப மேகான்
சாந்தமதாம் பரப்பிரம சொரூப மேகா
னிகரிலதாம் பரப்பிரம சொரூப மேகா
னீக்கமிலாப் பரப்பிரம சொரூப மேகா
னிகழ்விலதாம் பரப்பிரம சொரூப நானென்
றெப்போது மிடையறவே சிந்தை செய்வாய். (5)

சத்தியமாம் பரப்பிரம சொரூப மேகான்
சலனமிலாப் பரப்பிரம சொரூப மேகா
னித்தியமாம் பரப்பிரம சொரூப மேகா
னிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப மேகான்
சுத்தமதாம் பரப்பிரம சொரூப மேகான்
சுகனமாம் பரப்பிரம சொரூப மேகா
னத்துவித பரப்பிரம சொரூப நானென்
றழுத்தமுட னநவரதஞ் சிந்தை செய்வாய். (6)

பூரணமாம் பரப்பிரம சொரூப மேகான்
பூரணமாம் பரப்பிரம சொரூப மேகான்
சராசரமில் பரப்பிரம சொரூப மேகான்
சாசுவத பரப்பிரம சொரூப மேகான்
பராற்பரமாம் பரப்பிரம சொரூப மேகான்
பாசமிலாப் பரப்பிரம சொரூப மேகா
னிராமயமாம் பரப்பிரம நானே யென்று
நிச்சலமாய் நீயென்றுஞ் சிந்தை செய்வாய். (7)

நாதாந்த மானபரப் பிரம மேகா
னுடுவதற் கெட்டாத பிரம மேகான்
வாதாந்த மானபரப் பிரம மேகான்
வாக்குமுதற் கெட்டாத பிரம மேகான்
போதாந்த மானபரப் பிரம மேகான்
புத்திமுதற் கெட்டாத பிரம மேகான்
வேதாந்த வேத்தியமாம் பரநா னென்றே
வேறறநீ யெப்போதுஞ் சிந்தை செய்வாய். (8)

தன்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
றனக்கயலில் பரப்பிரம சொரூப மேநான்
சன்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
சதாநந்த பரப்பிரம சொரூப மேநா
னின்மலமாம் பரப்பிரம சொரூப மேநா
னிராகார பரப்பிரம சொரூப மேநான்
சின்மயமாம் பரப்பிரம நானே யென்று
சிரத்தையுட னெப்போதுஞ் சிந்தை செய்வாய். (9)

அமலமதாம் பரப்பிரம சொரூப மேநா
னகண்டமதாம் பரப்பிரம சொரூப மேநான்
விமலமதாம் பரப்பிரம சொரூப மேநான்
விகாரமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
மமதையிலாப் பரப்பிரம சொரூப மேநான்
மானமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
சமதையிலாப் பரப்பிரம நானே யென்று
சந்ததமுஞ் சலியாது சிந்தை செய்வாய். (10)

துன்னியதே காதியிலாச் சொரூப மேநான்
றூரியவரி வானபர சொரூப மேநா
னென்னதியா னென்பதிலாச் சொரூப மேநா
னேகபரி பூரணமாஞ் சொரூப மேநான்
சென்னியமோ ரணுவுமிலாச் சொரூப மேநான்
சென்மசரா மரணமிலாச் சொரூப மேநா
னன்னியமி லகண்டபர சொரூப நானென்
றறிதிடமா யநவரதஞ் சிந்தை செய்வாய். (11)

ஒருபொழுதும் பந்தமிலாச் சொரூப நானே
யொருபொழுது மோட்சமிலாச் சொரூப நானே
துரிசணுவுந் தொடராத சொரூப நானே
துவந்துவமோ ரணுவுமிலாச் சொரூப நானே
திருசியமே கொன்றுமிலாத் திகழ்வு நானே
திவ்வியசின் மாத்திரமாந் தெய்வ நானே
யிருமையிலா வேகபரம் பொருளு னென்றே
யெப்போது மிடையறவே சிந்தை செய்வாய். (12)

ஒருவடிவா யுள்ளபர சொரூப நானே
யுள்வெளிக ளொன்றுமிலாச் சொரூப நானே
பரமசிதா காயபர சொரூப நானே
பயமணுவும் பற்றியிடாச் சொரூப நானே
சருவபரி பூரணமாஞ் சொரூப நானே
சருவத்தின் சித்தாந்த சொரூப நானே
யிருமையிலா வகண்டபர சொரூப நானென்
றெப்போது மிலடையறவே சிந்தை செய்வாய். (13)

சின்மாத்ர மானபர சொரூப நானே
சின்மயமாம் பரமசிவ சொரூப நானே
சன்மாத்ர மானபர சொரூப நானே
சதாநந்த கனமான சொரூப நானே
கன்மாத்ர மானபர சொரூப நானே
கான்ரூனுய்த் தனித்தபர சொரூப நானே
நன்மாத்ர மானபரம் பொருணு னென்றே
நழுவாது தைரியமாய்ச் சிந்தை செய்வாய். (14)

கற்பிதவா காரமிலாச் சொரூப நானே
காரியமோ ரணுவுமிலாச் சொரூப நானே
யற்புதவாகாரபர சொரூப நானே
யகண்டபர மாகாய சொரூப நானே
கற்பதலட் சியமான சொரூப நானே
கன்வடிவா மகண்டபர சொரூப நானே
யற்பமிலாப் பரப்பிரம சொரூப நானென்
றநவரத மநிதிடமாய்ச் சிந்தை செய்வாய். (15)

சித்தமுத லொருபொருளு மிலவே யில்லை
சின்மயமாம் பரப்பிரம சொரூப மெல்லாஞ்
சத்தியமா யொருபொருளு மிலவே யில்லை
சன்மயமாம் பரப்பிரம சொரூப மெல்லா
மித்துவித மொருகாலு மிலவே யில்லை
யேகமதாம் பரப்பிரம சொரூப மெல்லா
மத்துவித பரப்பிரம மதுநா னென்றே
யநவரத மநிதிடமாய்ச் சிந்தை செய்வாய். (16)

புந்திமுதற் கதீதபர சொரூப நானே
பூரணமாய்ப் பொருந்தியசிற் சொரூப நானே
சந்ததமுஞ் சலனமிலாச் சொரூப நானே
சகலவுபா திகளுமிலாச் சொரூப நானே
தொந்தமிலா வத்துவித சொரூப நானே
துகளிலதா மகண்டபர சொரூப நானே
யந்தமிலாப் பரப்பிரம சொரூப நானென்
றத்துவித சித்தினையே யனிசஞ் செய்வாய் (17)

மன்னியமுத் தேகமிலாச் சொரூப நானே
மயங்கியமூன் றவத்தையிலாச் சொரூப நானே
துன்னியவைங் கோசமிலாச் சொரூப நானே
துக்கசுகத் தொடர்பிலதாஞ் சொரூப நானே
யின்னதென வியம்பவொணாச் சொரூப நானே
யிருமையிலா வேகபர சொரூப நானே
யன்னியமி லகண்டபர சொரூப நானென்
றத்துவித சிந்தினையே யனிசஞ் செய்வாய். (18)

காமாதி விருத்தியிலாச் சொரூப நானே
கலங்குமகங் காரமிலாச் சொரூப நானே
யோமாதி கருமமிலாச் சொரூப நானே
யுறுபயனே ரணுவுமிலாச் சொரூப நானே
நாமாதி விசேடமிலாச் சொரூப நானே
நாநாவாம் பேதமிலாச் சொரூப நானே
யாமாகா தென்னவொணாச் சொரூப நானென்
றத்துவித சிந்தினையே யனிசஞ் செய்வாய். (19)

ஞாலமுதற் பூதமிலாச் சொரூப நானே
ஞாதருஞா ஞேயிலாச் சொரூப நானே
காலமுதற் பேதமிலாச் சொரூப நானே
கருதுபல தேசமிலாச் சொரூப நானே
கோலமுறும் வத்துவிலாச் சொரூப நானே
குணதோட மெவையுமிலாச் சொரூப நானே
யாலயமி லகண்டபர சொரூப நானென்
றத்துவித சிந்தினையே யனிசஞ் செய்வாய். (20)

சலனமலே விருத்தியிலாச் சொரூப நானே
சந்தேக மறுவுமிலாச் சொரூப நானே
நிலமளவுந் திருசியமில் சொரூப நானே
தெரிவுருவாய்த் திகழ்கின்ற சொரூப நானே
பலவிதமாம் பேதமிலாச் சொரூப நானே
பரசிவ சகங்களிலாச் சொரூப நானே
யலைவுபெறு வகண்டபர சொரூப நானென்
றத்துவித சிந்தனையே யனிசஞ் செய்வாய். (21)

சந்ததமுஞ் சின்மயமாம் பிரம நானே
சலனமிலாச் சின்மயமாம் பிரம நானே
சிந்தையிலாச் சின்மயமாம் பிரம நானே
சின்னமிலாச் சின்மயமாம் பிரம நானே
பந்தமிலாச் சின்மயமாம் பிரம நானே
பங்கமிலாச் சின்மயமாம் பிரம நானே
யந்தமிலாச் சின்மயமாம் பிரம நானென்
றத்துவித சிந்தனையே யனிசஞ் செய்வாய். (22)

எப்போதுந் தைரியமா யிடைவி டாம
லேகபர சிந்தனையே செய்வா யாகிற்
சற்போத சுகனமாம் பரமே சீயாய்ச்
சங்கற்ப விகற்பங்க ளனைத்துந் தீர்ந்து
கற்போத சூனியனுய்த் தானே தானுய்த்
தனித்திந்தப் பவபாச முத்த ஞ்வா
யிப்போதிங் கியம்பியவிவ் வர்த்தந் தன்னி
லெள்ளளவு மையமிலை யுறுதி யீதே. (23)

அநவரத மாதரவா யிடைவி டாம
லத்துவித சிந்தனையே செய்வா யாகின்
மனதிலுள சங்கையெலா முடனே தீர்ந்து
மகத்தான சொரூபசுக மருவி நிற்பாய்
சொனவிதமாய்ச் சொரூபசுகஞ் சார்வ தற்கே
சோர்வுகருஞ் சங்கமெலாந் தூரத் தள்ளி
யனகனின தான்மாவுக் கபின்ன மான
வகண்டபரப் பிரமத்திற் சங்கஞ் செய்வாய். (24)

சத்தியமாம் பரப்பிரம சொரூப நானே
சலனமிலாப் பரப்பிரம சொரூப நானே
நித்தியமாம் பரப்பிரம சொரூப நானே
நிருமலமாம் பரப்பிரம சொரூப நானே
சுத்தமதாம் பரப்பிரம சொரூப நானே
சுககனமாம் பரப்பிரம சொரூப நானென்
றத்துவித நிச்சயமே யனிசஞ் செய்த
லகண்டபரப் பிரமத்தின் சங்க மாமே. (25)

அகமென்றுந் தேகமலன் பொறிக ளல்ல
னகமென்று மூயிர்களல னுள்ள மல்ல
னகமென்றும் புத்தியலன் சித்த மல்ல
னகமென்றும் புன்மையகங் கார மல்ல
னகமென்று மிதன்மூலாஞ் ஞான மல்ல
னகமென்று மித்துவித மெவையு மல்ல
னகமென்று மத்துவிதப் பிரம மென்னு
மகம்பிரம நிச்சயமே யகண்ட சங்கம். (26)

அகமென்று மூன்றுவித தேக மல்ல
னகமென்று மூன்றுவித வவத்தை யல்ல
னகமென்று மைந்துவித கோச மல்ல
னகமென்று மவையினின்பி மானி யல்ல
னகமென்றுஞ் சமட்டியலன் வியட்டி யல்ல
னகமென்றுஞ் சகசீவ் பாங்க ளல்ல
னகமென்று மகண்டபரப் பிரம மென்னு
மகம்பிரம நிச்சயமே யகண்ட சங்கம். (27)

அகண்டபரப் பிரமமதே சத்துக் கெல்லா
மத்யந்த சத்தாக விருப்ப தாலவ்
வகண்டபரப் பிரமத்தின் சங்கந் தானே
யறிஞரினற் சற்சங்க மென்ன லாகு
மகண்டபரப் பிரமமதே மகத்துக் கெல்லா
மத்யந்த மகத்தாக விருப்ப தாலவ்
வகண்டபரப் பிரமத்தின் சங்கந் தானே
யறிஞரினன் மகத்சங்க மென்ன லாமே. (28)

அகம்பிரம நிச்சயமே சத்தின் சங்க
மகம்பிரம நிச்சயமே மகத்தின் சங்க
மகம்பிரம நிச்சயமே யான்ம சங்க
மகம்பிரம நிச்சயமே யகண்ட சங்க
மகம்பிரம நிச்சயமே யகண்டத் தியான
மகம்பிரம நிச்சயமே யகண்ட ஞான
மகம்பிரம நிச்சயமே யகண்ட மோட்ச
மகம்பிரம நிச்சயமே யுனைத்து மாகும். (29)

அகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யகண்டபரத் தியான மாகு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யகண்டபர சமாதி யாகு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யகண்டபர ஞான மாகு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யகண்டபரப் பிரம மாமே. (30)

அகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யநாதிபவ பந்தந் தீர்க்கு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யகண்டபர மோட்ச நல்கு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே யநந்தவித துன்பந் தீர்க்கு
மகம்பிரம நிச்சயமே தொடர்பாய்ச் செய்யி
னதுதானே நிரதிசயா நந்த நல்கும். (31)

ஆகலினு லநவரத மிடைவி டாம
லதிதிடமா யகம்பிரம நிச்ச யத்தைச்
சாதகமாய்ப் பழகியதான் மனதி லுள்ள
சங்கற்ப விகற்பங்க ளனைத்துந் தீர்ந்து
பேதமிலா வகண்டபரப் பிரம ஞானம்
பெற்றதனு லகண்டசுக மநுப விப்பா
யோதியவா றகண்டசுக மநுபவித் தோர்க்
கொருகாலும் பவத்துன்ப மீண்டு மில்லை. (32)

சந்ததமு மகம்பிரம நிச்ச யத்தைச்
சலியாமற் பழகிமனே விகற்பந் தீர்ந்திங்
கந்தமிலா வகண்டசுக மநுப வித்தவ்
வகண்டபரப் பிரமவடி வானே ருக்குப்
பிந்தியுஷிப் பவத்துன்ப மடையும் வண்ணம்
பேதமுறு மேதுவணு வேணு மில்லை
தொந்தமிலா வகண்டபரப் பிரம மானோர்
துவிதமுறும் பவத்துயரைத் தொடர்வ தெங்ஙன். (33)

அகமெனவே தோற்றுவது மான்மா காரம்
மன்னியமாய்த் தோற்றுவது மான்மா காரம்
மிகழ்மனதாய்த் தோற்றுவது மான்மா காரம்
மெந்நினைவாய்த் தோற்றுவது மான்மா காரம்
பகையுடலாய்த் தோற்றுவது மான்மா காரம்
பலபுலனுய்த் தோற்றுவது மான்மா காரஞ்
சகலமுமாய்த் தோற்றுவது மான்மா காரஞ்
சகசீவ பரங்களெலா மான்மா காரம். (34)

திருவிலகங் காரமுமே யான்மா காரந்
திகழ்புத்தி சித்தமுமே யான்மா காரம்
மொருவலுறுங் காமமுமே யான்மா காரம்
முலோபமொடு கோபமுமே யான்மா காரம்
மருவலுறு மோகமுமே யான்மா காரம்
மதமான மச்சரமு மான்மா காரஞ்
சருவமனே விருத்திகளு மான்மா காரஞ்
சதசத்காய்க் காண்பதெலா மான்மா காரம். (35)

குறைவறுநாற் சாதனமு மான்மா காரங்
குருபரனு மாணவனு மான்மா காரம்
மறுவிதமா மிலிங்கமுமே யான்மா காரம்
மத்துவித நிர்ணயமு மான்மா காரம்
மறைமுடியின் சிரவணமு மான்மா காரம்
மனனமொடு நியானமுமே யான்மா காரம்
நிறைவுதரு ஞானமுமே யான்மா காரம்
நிலைபெற்ற மோட்சமுமவ் வான்மா காரம். (36)

சலனமுறு மத்யாச மான்மா காரஞ்
சம்பந்த மொருமூன்று மான்மா கார
மலைவறுசற் சாத்திரமு மான்மா கார
மதுபந்த சதுட்டயமு மான்மா காரம்
பெலமருவும் பூமிகளு மான்மா காரம்
பிராரத்த மொருமூன்று மான்மா காரம்
பலவிதமாஞ் சத்திகளு மான்மா காரம்
பழகியிடுஞ் சமாதிகளு மான்மா காரம். (37)

சருவமுமே சந்தகமு மான்மா காரஞ்
சலனமிலா வான்மாவே பிரமா காரம்
பிரமமதே பிறங்கியவிவ் வான்மா காரம்
பேசியவா பேதமொரு காலு மில்லை
சருவமுமே யான்மாவுக் கபின்ன மான
சத்தியசிற் சுககனமாம் பிரம மென்றே
யொருமையுணர் நிச்சயமே திடமாய்ப் பெற்றே
னுடனேயிப் பவபாச முத்த னுவான். (38)

பேதமுறுஞ் சகசீவ பாங்க ளெல்லா
பிரமமென்று மப்பிரம நானே யென்று
மோதியவிச் சிந்தனையைப் பிரமாப் யாசி
யொழியாம லெப்போதும் பழக வேண்டுஞ்
சாதகமாஞ் சிந்தனையின் பெலத்தி னலே
சலமனதின் விகற்பமெலாந் தவிர்ந்த பின்ன
ரீதையுமே பழகாமற் பரமே யாகி
யெந்நினைவு நினையாம லிருக்க வேண்டும். (39)

புத்திரனே யாதலினு னீயெப் போதும்
பூரணமாம் பாவனையே செய்திங் கத்காற்
சித்தமதன் விகற்பமெலாந் தீர்ந்த பின்னர்ச்
சின்மயமாம் பரப்பிரம வடிவே யாகி
யித்தனையு மிதரத்தை நினையா வண்ண
மெப்போது மியங்காது வெறித்தி ருப்பாய்
நித்தமுமே வெறிதாவிங் குளனு னென்னு
நினைவையுமே நீக்கிநிச வடிவாய் நிற்பாய். (40)

நினைவையெலா நீக்கிமனே வாக்குக் கெட்டா
நிசவடிவாய் நிற்பதுவே நிறைந்த முத்தி
நினைவனுவும் வேறுக நிகழு மாகி
னினைவதுவே மகத்தான் பந்த மாகு
நினைவறவே நிற்கின்ற நிட்டை தானே
நிசமான வத்துவித நிலைமை யாகு
நினைவறவே நிற்கின்ற நிட்டை தானே
நிரதிசய வானந்த நிலைமை யாமால். (41)

நினைவதுவே மகத்தான துன்ப மாகு
நினைவதுவே மகத்தான தோட மாகு
நினைவதுவே யநந்தவித சென்ம மாகு
நினைவதுவே யத்யந்த பீதி யாகு
நினைவதுவே நிகிலமகா பாவ மாகு
நினைவதுவே நீக்கவொணாத் தாப மாகு
நினைவதுவே யிதயமகா கிரந்தி யாகு
நினைவதுவே யித்துவிதம் யாவு மாமே. (42)

ஆதலினு லநேகவித நினைவை யெல்லா
மகண்டபர பாவனையா நினைவாற் றள்ளிச்
சாதகமாம் பாவனையா னினைவெல் லாமுஞ்
சற்றேனு முதியாது மறந்த பின்ன
ரோதியவப் பாவனையு மொழிந்தெப் போது
மூரைமனதுக் கெட்டாத வுண்மை யாகிப்
பேதமற விருப்பவனே பந்தந் தீர்ந்து
பின்னமிலா வகண்டபர முத்தி பெற்றோன். (43)

அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றகண்டபர பாவனையே செய்வோர்க் கல்லாற்
சகம்பரமே முதலியதாய்க் காண்போர்க் கென்றுஞ்
சஞ்சலமா நினைவெவையுந் தொலையா தென்றே
திகம்பரனும் பரமசிவ னெமக் குரைத்த
திடமான வகண்டபர நிர்ண யத்தைத்
தகும்பிரமாப் யாசிகளுக் கிதமே யாகத்
தத்துவமாய் நிதாகனினக் குரைத்தே னனே. (44)

சாற்றியவிவ் வகண்டபர நிர்ண யந்தான்
சகமுதலி னினைவையெலாஞ் சாந்த மாக்குஞ்
சாற்றியவிவ் வகண்டபர நிர்ண யந்தான்
சார்கின்ற துயரையெலாஞ் சாந்த மாக்குஞ்
சாற்றியவிவ் வகண்டபர நிர்ண யந்தான்
சலனமிலா மோட்சசுக முடனே நல்குஞ்
சாற்றியவிவ் வகண்டபர நிர்ண யத்தைச்
சலனமறக் கேட்டுணர்வோன் பரமே யாவன். (45)

பத்தியுட னகண்டபர சிவத்தின் றியானம்
பழகியதா னிரதிசய நிருத்தி மேவி
யித்தனையுஞ் சங்கற்ப விகற்ப மின்றி
யெப்போது மேகபர சிவமே யாகி
மெத்தவுமே சாந்தமதா மனது தானே
மெய்யான முத்திநிலை மேவு மன்றி
மத்தமதாய்ச் சங்கற்ப விகற்ப முற்ற
மனதந்த முத்திநிலை மருவா தென்றும். (46)

நித்தமுமே யகண்டபர சிவனு னென்றே
நினைப்பதுவாஞ் சிவபத்தி மிகுந்தோன் றானே
சித்தமுறும் விகற்பமெலா முடனே தீர்ந்து
சின்மயமாம் பரமசிவந் தானே யாகி
யித்தனிசெய் பவக்கடலை யெளிதாய்த் தாண்டி
யேகமதா முத்திநிலை யிசைவ னென்றே
சுத்தமதாய் ரிபுமுனிவ னிதாக னுக்குச்
சூட்சுமமாம் பரம்பொருளைச் சொன்ன னன்றே. (47)

வேறு.

அத்தமற்றவகண்ட பரம்பொரு ளகமெனச்செயுந் தியானபெலத்தி
னற்,சிந்தையுற்றவிகற்பமனைத்துமே சிறிதுமின்றிச்சிதைந்துடனிப்
பவ,பந்தமியாவும்விடுத்துயர்முத்தியைப்பற்றலாமென்விளம்புப்பகர்ந்
திடல்,சுந்தராநந்தத்தாண்டவமாடுஞ்சுத்தவீசனகண்டசொரூபமே.

இருபத்தொன்றுவது அத்தியாயம் (48)

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 21-க்கு திருவிருத்தம்-988.

இருபத்திரண்டாவது

அகண்ட சொரூப நிச்சயமுரைக்கும்

அத்தியாயம்.

சகலசரா சரங்கட்குஞ் சாட்சி யாகிச்
சகலர்க்கு மான்மாவாய்ச் சித்த மாகிச்
சகலசக தநிட்டான சொரூப மாகிச்
சகலமுமே தானுகி நிறைந்து நின்ற
சகலபரி பூரணமாம் பிரமந் தன்னே
சகலருமே யெளிதாக வறியும் வண்ணஞ்
சகலசகன் னுயகனும் பாரேசன் முன்னஞ்
சாற்றியவா நிதாகநினக் கின்னஞ் சொல்வாம். (1)

சத்தியசிற் சுகனமாய்ச் சாந்த மாகிச்
சனமிலாச் சாசுவத சொரூப மாகி
நித்தியநிட் களமாகி நிருவி கற்ப
நிரஞ்சனமாய் நிராகார சொரூப மாகி
யத்துவித மானபரப் பிரம நானே
யணுவுமிகி லயமிலை யென்றெப் போதும்
புத்திநீ நிடமாக நிச்ச யித்துப்
பூரணமாம் பிரமசுக மநுப விப்பாய். (2)

நானெனென் றறிவதுவுஞ் சிற்சொ ரூப
நானாவாய்த் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
நீனாவெனென் றறிவதுவுஞ் சிற்சொ ரூப
நிகிலமெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
ஞானென்மா வென்பதுவுஞ் சிற்சொ ரூப
ஞானகன மென்பதுவுஞ் சிற்சொ ரூபம்
பானென்மா வென்பதுவுஞ் சிற்சொ ரூபம்
பரப்பிரம மென்பதுவுஞ் சிற்சொ ரூபம். (3)

சித்தமெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூபஞ்
சீவனெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
மத்தனெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
மவன்செயலாய்த் தெரிவதுவுஞ் சிற்சொ ரூபம்
பத்தனெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூபம்
பரபதமாய்த் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
மூத்தனெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூப
மோட்சமெனத் தெரிவதுவுஞ் சிற்சொ ரூபம். (4)

மோகமுத லுடன்மூன்றுஞ் சிற்சொ ரூப
மூன்றுவித வவத்தைகளுஞ் சிற்சொ ரூப
மாகுமபி மானிகளுஞ் சிற்சொ ரூப
மறிவுற்ற தகிலமுமே சிற்சொ ரூபம்
யாகமுமுப் பரம்பொருளுஞ் சிற்சொ ரூபம்
பரப்பிரம ஞானமுமச் சிற்சொ ரூபஞ்
சோகமிலாச் சுகவடிவுஞ் சிற்சொ ரூபஞ்
சுத்தபா மாகுவதுஞ் சிற்சொ ரூபம். (5)

உத்தமமாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூப
மூனமதாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூப
மத்திமமாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூப
மகத்தாகக் காண்பதுவுஞ் சிற்சொ ரூபஞ்
சத்தியமாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூபஞ்
சஞ்சலமாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூபம்
வித்தரமாய்க் காண்பதுவுஞ் சிற்சொ ரூபம்
விதம்விதமாய்க் காண்பதெலாஞ் சிற்சொ ரூபம். (6)

ஆக்கையிலா வகண்டபர சித்து நானே
யாநந்த கனமான சித்து நானே
வாக்குமுதற் கெட்டாத சித்து நானே
வானெனவே வரையற்ற சித்து நானே
போக்குவர வெவையுமிலாச் சித்து நானே
புரையற்ற பூரணமாஞ் சித்து நானே
நீக்கமிலாச் சித்துருவாம் பரநா னென்றே
நிரந்தரமாய் நீயென்று நிச்ச யிப்பாய். (7)

சந்ததமுஞ் சாந்தமதாஞ் சித்து நானே
சாசாரமோ ரணுவுமிலாச் சித்து நானே
பந்தமிலாப் பாவடிவாஞ் சித்து நானே
பரம்பொருளாய்ப் பாவியிடுஞ் சித்து நானே
இந்தைமுதற் கெட்டாத சித்து நானே
செகசீவ பரங்களிலாச் சித்து நானே
நிந்தையுருச் சித்துருவாம் பரநா னென்றே
நிரந்தரமாய் நீயென்று நிச்ச யிப்பாய். (8)

எப்போதும் பரப்பிரமஞ் சத்தே யன்றி
யிப்பிரம மொருகாலு மசத்தே யாகா
தெப்போதுஞ் சத்தான பாரா னென்னு
மித்திறமா முறுதியுளோன் சத்தே யாவ
னெப்போதுஞ் சத்தான பாரா னென்னு
மித்திறமா முறுதியிலோ னசத்தே யாவ
னெப்போதுஞ் சத்தான பாரா னென்னு
மித்திறமா நிச்சயமே யிசைவாய் மைந்கா. (9)

சத்துமில்ல யசத்துமில்ல சகசத் தில்லை
சகலமில்ல கிஞ்சிலில்ல சனிப்ப தில்லை
சித்துமில்ல சீவனில்ல செகத்து மில்லை
செறிகின்ற நாமமில்ல ரூப மில்லை
முத்தனில்ல பெத்தனில்ல மோட்ச மில்லை
முன்னுமில்ல பின்னுமில்ல முழுது மில்லை
யத்துவித பரப்பிரம மொன்றே யுண்மை
யதுநானென் றழுத்தமுற நிச்ச யிப்பாய். (10)

நித்தமில்ல யனித்தமில்ல நிகில மில்லை
நீயுமில்ல நானுமில்ல யாரு மில்லை
சுத்தமில்ல யசுத்தமில்ல சுகமு மில்லை
சோர்வுமில்ல சுபமுமில்ல யசுப மில்லை
பத்தனில்ல பத்தியில்ல பாச மில்லை
பரவியிடும் பதியுமில்ல பலமு மில்லை
யத்துவித பரப்பிரம மொன்றே யுண்மை
யதுநானென் றழுத்தமுற நிச்ச யிப்பாய். (11)

ஒருமையில்ல யிருமையில்ல பலவு மில்லை
யுருவமில்ல யருவமில்ல யொன்று மில்லை
பெருமையில்ல சிறுமையில்ல யருமை யில்லை
பேதமில்ல யபேதமில்ல பின்ன மில்லை
கருமமில்ல காணமில்ல கர்த்தா வில்லை
காண்கின்ற காட்சியில்ல காண்பா னில்லை
யிருமையிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
யிதுநானென் றெப்போது நிச்ச யிப்பாய். (12)

தேகமிலை பொறிகளிலை யுயிர்க ளில்லை
தியங்கியிடு மனதுமிலை மதியு மில்லை
யாகுமகங் காரமிலை சித்த மில்லை
யவித்தையிலை வித்தையிலை யனைத்து மில்லை
போகமிலை போக்யமிலை போத்தா வில்லை
பூதமிலை புவனமிலை புலன்க ளில்லை
யேகமதாம் பரப்பிரம மொன்றே யுண்மை
யிதுநானென் றெப்போது நிச்ச யிப்பாய். (13)

கோலமுறுங் தெய்வமிலை சேவை யில்லை
கூடியிடுந் தீர்த்தமிலை தவமு மில்லை
சீலமுறுங் தானமிலை தரும மில்லை
செய்கின்ற செபமுமிலை தபமு மில்லை
காலமிலை தேசமிலை வத்து வில்லை
காரியகா ரணமாக வொன்று மில்லை
யாலயமில் பரப்பிரம மொன்றே யுண்மை
யதுநானென் றறிதிடமா நிச்ச யிப்பாய். (14)

கற்பிதமாய்க் காண்பதெலாம் பிரம ரூபங்
காரியகா ரணமெல்லாம் பிரம ரூப
நிற்பனவு நடப்பனவும் பிரம ரூப
நீநானு நிகிலமுமே பிரம ரூபங்
கற்பதமுந் துவம்பதமும் பிரம ரூபங்
கடையற்ற வசிபதமும் பிரம ரூப
மற்பமிலா வானந்த கனமே யான
வப்பிரம மகமெனவே நிச்ச யிப்பாய். (15)

ஐந்துவித பூதமுமே பிரம ரூப
மநந்தவித பௌதிகமும் பிரம ரூபங்
தொந்தமுறுஞ் சீவரெலாம் பிரம ரூபங்
துவிதமுறு சகங்களெலாம் பிரம ரூபம்
பந்தமிலா வீசனுமே பிரம ரூபம்
பார்க்கின்ற பார்வையெலாம் பிரம ரூப
மந்தமிலா வானந்த கனமே யான
வப்பிரம மகமெனவே நிச்ச யிப்பாய். (16)

ஐந்துவித மூர்த்திகளும் பிரம ரூப
மவருடைய செய்கையெலாம் பிரம ரூப
மிந்திரிய மியாவையுமே பிரம ரூப
மிலங்கியிடும் விடயமெலாம் பிரம ரூபஞ்
சந்ததமுஞ் சகலமுமே பிரம ரூபஞ்
சதசத்தாய்க் காண்பவெலாம் பிரம ரூபந்
தொந்தமிலா வப்பிரம நானே யென்று
தொடர்பாக வெப்போது நிச்ச யிப்பாய். (17)

பஞ்சவித கோசமுமே பிரம ரூபம்
பாவுமபி மானிகளும் பிரம ரூப
மஞ்சனமா மவித்தையுமே பிரம ரூப
மமலமதாம் வித்தையுமே பிரம ரூபம்
வஞ்சகமாம் பந்தமுமே பிரம ரூபம்
வரமான முத்தியுமே பிரம ரூபஞ்
சஞ்சலியா வப்பிரம நானே யென்று
சலியாம லெப்போது நிச்ச யிப்பாய். (18)

சகுப்பிரமாப் யாசியுமே பிரம ரூபந்
தடையற்ற ஞானியுமே பிரம ரூப
மிகவானும் வரியானும் பிரம ரூப
மேன்மையுறு வரிட்டனுமே பிரம ரூபந்
திகழ்சீவன் முத்தனுமே பிரம ரூபந்
தேகமிலா முத்தனுமே பிரம ரூப
நிகரிலதாம் பரப்பிரம நானே யென்று
நிரந்தரமாய் நீயென்று நிச்ச யிப்பாய். (19)

அலைமன தானினைப்பதுவும் பிரம ரூப
மறைவாக்கா லுரைப்பதுவும் பிரம ரூபஞ்
சலவுடலாற் செய்வதுவும் பிரம ரூபஞ்
சாற்றுமனோ வாக்குடலும் பிரம ரூபம்
பலவிதமாந் திருஷியமும் பிரம ரூபம்
பரசீவ சகங்களெலாம் பிரம ரூபங்
கலனமிலா வப்பிரம நானே யென்று
கலங்காம லெப்போது நிச்ச யிப்பாய். (20)

காமமிகுங் கருமமெலாம் பிரம ரூபங்
காமித்த பலன்களெலாம் பிரம ரூப
நேமமிகு நிட்காமம் பிரம ரூப
நிருமலமாம் பலன்களெலாம் பிரம ரூபங்
காமதமு மிராசதமும் பிரம ரூபங்
தயங்கியிடுஞ் சத்துவமும் பிரம ரூப
மேமமிலா வப்பிரம நானே யென்றிங்
கெப்போது மிடையறவே நிச்ச யிப்பாய். (21)

உச்சமதா மறைப்பொருளும் பிரம ரூப
முத்தமமா நூற்பொருளும் பிரம ரூப
நிச்சயமாங் குருவருளும் பிரம ரூப
நிருமலமா யறிவதுவும் பிரம ரூப
மச்சமிலாச் சிந்தனையும் பிரம ரூப
மகம்பிரம பாவனையும் பிரம ரூபங்
கச்சமிலா வப்பிரம நானே யென்று
தொடர்பாக வெப்போது நிச்ச யிப்பாய். (22)

மகத்தான மாயையென வகித்தை யென்ன
மகத்தான பந்தமென முத்தி யென்ன
மகத்தான சித்தமெனச் சீவ னென்ன
மகத்தான சகங்களென வீச னென்ன
மகத்தான நாமமென ரூப மென்ன
மதிக்கின்ற மனதுடைய நினைவ னைத்து
மகத்தான பரப்பிரம சொரூப மன்றி
மற்றணுவு மிலையெனவே நிச்ச யிப்பாய். (23)

நினைவதனு னிகழ்கின்ற சகசீ வாதி
நிகிலமுமே நினைவுருவா மனதே யாகு
மனததுதா னறிவுருவாய் நிகழா நின்ற
மகத்தான பரப்பிரம வடிவே யாகுங்
கனவறிவாம் பிரமமலா தயலே யில்லை
காண்பதெலாங் களங்கமிலாப் பிரம மென்று
மனியமிலா வப்பிரம நானே யென்று
மநவரத மழுத்தமுற நிச்ச யிப்பாய். (24)

அறிவுருவா மதிட்டானப் பிரமத் தின்க
ணூரோப வடிவாக வவிவே கத்தா
லறிவுறுமச் சகலமுமே யறிவா மன்றி
யன்னியமா யணுவேனு மிலவே யில்லை
மறைமுடியின் சித்தாந்த மனைத்து மீதே
மகத்துக்க ளதுபூரி நிலையு மீதே
நிறைவுறவே பரமசிவ னெனக் குரைத்த
நிசமான நிர்ணயமு நிதாக வீதே. (25)

சருவமுமே சந்ததமு மில்லை யென்னல்
சலனமிலாச் சத்தான மந்தி ரங்காண்
சருவமுமே சந்ததமும் பிரம மென்னல்
சகலத்து மேலான மந்தி ரங்காண்
சருவமுமே பிரமமென நிச்ச யித்தல்
சாலவுமே மகத்தான மந்தி ரங்காண்
சருவமுமே நினையாது வெறி நிருத்தல்
சந்ததமுஞ் சகலத்து மதித மாமே. (26)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சந்ததமு மாதேவ பூசை யாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சந்ததமு மாதேவ நாம மாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சந்ததமு மாதேவ பத்தி யாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சந்ததமு மாதேவத் நியான மாமே. (27)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சருவத்தின் நியாகமெனச் சாற்ற லாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சலமனநின் நியாகமெனச் சாற்ற லாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சதசத்தின் நியாகமெனச் சாற்ற லாகுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சமதையிலாப் பரம்பதமாய்ச் சாற்ற லாகும். (28)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சகலமனக் கற்பனையு நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சகலமலை வாதனையு நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சலமனதின் றுகளையெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சலமனதின் றுயரையெலா நாசஞ் செய்யும். (29)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சார்கின்ற பாவமெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சார்கின்ற பீதியெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சார்கின்ற வாதியெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சார்கின்ற வியாதியெலா நாசஞ் செய்யும். (30)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சதசத்தாய்க் காண்பதெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சஞ்சலமாந் துவிதமெலா நாசஞ் செய்யுஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சலனமிலா வத்துவித ஞான நல்குஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சந்ததமு நிரதிசயா நந்த நல்கும். (31)

சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சஞ்சலமாந் தேகமுத லுபாதி நீக்குஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சஞ்சலமாஞ் சீவத்வந் தனையும் போக்குஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சகசீவ பாங்களெனு நினைவைத் தீர்க்குஞ்
சருவமுமே பிரமமெனு நிச்ச யந்தான்
சத்சிதசிற் சுககனமாம் பரமே யாக்கும். (32)

சருவமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சலனமிலா நிச்சயமே செய்யச் செய்யச்
சருவமெனும் பிரமமெனு நானீ தென்னுஞ்
சங்கற்ப விகற்பமெலா மடைவாய்த் தீர்ந்து
சருவபரி பூரணமாம் பரமே யாகிச்
சலனமிலா திருப்பதுவா முத்தி பேருஞ்
சருவசகன் ஞயகனுஞ் சிவன்றன் ஞான
சாற்றியதிற் சற்றேனுஞ் சங்கை யில்லை. (33)

அகிலமுமே பிரமமென்னு மதுநா னென்னு
மதிதிடமா நிச்சயமே யப்பா சித்தல்
பகர்பரம மோட்சமுற முந்தி யேது
பழகியவந் நிச்சயமும் பின்பு தானே
சகசமதாய் நழுவியிடு மதனன் மைந்தா
சகலமுமே பிரமமென்னு மதுநா னென்னு
மிகவுரமா நிச்சயமே யப்பா சித்து
மெய்யான மோட்சநிலை மேவு வாயே. (34)

அகிலமுமே பிரமமெனக் காணு வண்ண
மன்னியமாய்க் காண்பதெலாம் பிராந்தி யேயா
மிகழ்நாக மென்பதுவும் பிராந்தி யேயா
மிதனுலே வருந்துயரும் பிராந்தி யேயா
மகிழ்சொர்க்க மென்பதுவும் பிராந்தி யேயா
மற்றதனல் வருஞ்சுகமும் பிராந்தி யேயாஞ்
சகலசக சீவர்களும் பிராந்தி யேயாஞ்
சகதிச னென்பதுவும் பிராந்தி யேயாம். (35)

விதியுடனே யரியரனும் பிராந்தி யேயாம்
விராட்டுடனே சுராட்டுமிகப் பிராந்தி யேயா
மதியிலுறுஞ் சம்ராட்டும் பிராந்தி யேயா
மற்றுமுள தேவரெலாம் பிராந்தி யேயாங்
கதிமருவு மதியினனும் பிராந்தி யேயாங்
கருதுமவர் காரியமும் பிராந்தி யேயா
கிதமுனிவர் சித்தர்களும் பிராந்தி யேயா
நிகழ்கின்ற மனுக்களெலாம் பிராந்தி யேயாம். (36)

சருவசுரா சுரர்களுமே செய்யா நின்ற
சமரமுதற் சரிதமெலாம் பிராந்தி யேயாம்
விரவுமயன் செயலான சிருட்டி யாதி
விதம்விதமாஞ் சரிதமெலாம் பிராந்தி யேயா
மரியுடைய பாலனமே முதலாஞ் செய்கை
யவதார லீலையெலாம் பிராந்தி யேயா
மரனுடைய சங்கார முதலாஞ் செய்கை
யவதார லீலையெலாம் பிராந்தி யேயாம். (37)

வன்னமுட னுச்சிரம பேத முற்ற
வகைவகையா மானிடரும் பிராந்தி யேயா
முன்னியவர் சிவவிண்டு வாதி தேவ
ருபாசனையே செய்வதுவும் பிராந்தி யேயாம்
பன்னியிடு மந்திரதந் திரமே யாதி
பலவிதமாஞ் செயலுமிகப் பிராந்தி யேயா
மன்னியமாய்க் காண்கின்ற சகசீ வாதி
யகிலமுமே யத்யந்தம் பிராந்தி யேயாம். (38)

சகலவதிட் டானபரப் பிரமத் தின்கண்
சகலவிதப் பிராந்தியுமே தோன்ற லாலே
யகிலமுமவ் வதிட்டானப் பிரம மன்றி
யன்னியமா யணுவுமில்லை யாதலாலே
நிகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
நிரந்தரமா மப்பிரம நானே யென்று
மகிலமெனப் பிரமமெனத் தோன்றும் பேத
மழியுமள வழுத்தமுற நிச்ச யிப்பாய். (39)

சருவமென வொருகாலு மிலவே யில்லை
சருவமுமே சந்ததமும் பிரம மென்று
முரைமனதுக் கெட்டாத வகண்ட மான
வுணர்வுருவா மப்பிரம நானே யென்று
மிருமையிலாத் திடமான நிச்ச யத்தை
யெப்போது மிதயத்திற் பழகு வாயேற்
பிரிவெனவே தோன்றியவிப் பேத மெல்லாம்
பெயர்ந்துடனே பவபாச முத்த னுவாய். (40)

அகிலமுமே பிரமமென்று மதுநா னென்று
மதிதிடமா முறுதியுடன் வாக்கி னுலே
புகல்பவனும் பூரணமாம் பரமே யாவன்
புகன்றபடி யகண்டபர நிச்ச யத்தை
யகமதனி லநவரதம் பழகா நின்றே
னகண்டபர மாகுவதி லைய முண்டோ
மிகவுரமா நிச்சயமே மோட்சந் தன்னை
மேவுவதின் முக்கியகா ரணமா மைந்தா. (41)

அகவரத மகம்பிரம நிச்ச யத்தை
யாதரவோ டதிதிடமா யப்யா சிக்கின்
மனதிலுள விகற்பமெலா முன்பு தீர்த்து
மற்றதுதான் விறகற்ற வன்னி யேபோற்
றனதுநிச வதிட்டானப் பிரமத் தின்கண்
டான்றனே சாந்தியுறு மாத லாலே
சொனவிதமா யகம்பிரம நிச்ச யத்தைச்
சுகமுறவே முமுட்சுவெலாம் பழக வேண்டும். (42)

இத்திறமா யெல்லோர்க்கு மிதமே யாக
வீசனரு ளகண்டபர நிச்ச யத்தைப்
புத்திரனே நினக்கருளாற் புகன்றே னன்றுய்ப்
புகன்றபடி யிப்பொருளை யொருகா லேனும்
பத்தியுடன் கேட்டுணர்வோன் பரமே யாவன்
பகர்ந்ததிலோ ரணுவேனு மைய மில்லை
யெத்துகளு மில்லாம லெவையு மோர்ந்த
வெமதீச னியம்பியதி லைய முண்டோ. (43)

அத்துவித பூரணமாம் பாசி வத்துக்
கன்னியமாய்த் தோற்றியவித் துவித மெல்லாஞ்
சித்தமதன் விகாரமலா துண்மை யன்று
சித்தந்தா னகண்டபர நிச்ச யத்தாற்
சத்தியசிற் சுகனமாம் பாசி வத்திற்
சாந்தியுறிற் சித்தத்தின் விகார மான
வித்துவிதத் தோற்றமெலா மூடனே தீரு
மேதுவலாற் காரியமற் றிருப்ப துண்டோ. (44)

சிந்துவிடை யுண்டான சைந்த வந்தான்
சிந்துவினிற் கலந்தவுடன் கரைவ தேபோற்
றொந்தமிலா வகண்டபர சிவத்நிற் பொய்யாய்த்
தோற்றியவிச் சித்தமுதற் றுவித மெல்லா
மந்தமிலா வகண்டபர நிச்ச யத்தா
லங்கொன்றுய்க் கலந்தவுடன் கரையு மென்றே
பந்தமற ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பகுப்பற்ற பரம்பொருளைப் பகர்ந்தா னன்றே. (45)

வேறு.

மதுவிலாச்சச்சி தாகத்தமாகவே மன்னுதற்பர மேயிச்சகலமும்
பிறிதிலப்பர நானெனு நிச்சயம் பெற்றதாற்பவ பந்தம்விடித்துட
னறிவுமாத்திரமாகவிருப்பதா மமலமோட்சமடைந்திடலாமெனல்
சிறிதிலாதந்தத் தாண்டவமாடுஞ் சிற்சபேச னகண்டசொரூபமே.

இருபத்திரண்டாவது அத்தியாயம் (46)
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 22-க்கு திருவிருத்தம்-1034.

இருபத்து மூன்றுவது
அத்துவித வுண்மை யுரைக்கும்
அத்தியாயம்.

சத்தியசிற் சுககனமாம் பிரம மொன்றே
சந்ததமுஞ் சலியாம லுள்ள காமற்
றித்துவித மியாவையுமே யொருகா லத்து
மில்லையெனு மேகபர நிர்ண யத்தை
யுத்தமனே யகண்டபரப் பிரம ஞான
முரமாகும் பொருட்டுநினக் கின்னஞ் சொல்வே
னத்துவித நிர்ணயமே மறை புராண
மணைத்திலுமே யத்யந்த சார மாகும். (1)

பேதமில்லை பேதமில்லை பேத மில்லை
பேதிக்கும் பொருளுமொரு காலு மில்லை
பூதமில்லை பௌதிகமாம் பொருளு மில்லை
புவனமில்லை புவனமுறும் பொருளு மில்லை
யேதமில்லை குணமுமில்லை யெவையு மில்லை
யிதுவெனவிங் கிலங்கியிடும் பொருளே யில்லை
யாதிமுடி வொன்றுமிலா சகண்ட மான
வறிவுருவாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (2)

பெரிதுமில்லை சிறிதுமில்லை நடுவு மில்லை
பின்னுமில்லை முன்னுமில்லை நடுவு மில்லை
யரிதுமில்லை யெளிதுமில்லை நடுவு மில்லை
யயலுமில்லை தனதுமில்லை நடுவு மில்லை
யொருமையில்லை யிருமையில்லை நடுவுமில்லை
யுள்ளுமில்லை வெளியுமில்லை யொன்று மில்லை
சருவபரி பூரணமாய்ச் சலியாச் சித்தாய்ச்
சாந்தமதா யுளதுபரப் பிரம மொன்றே. (3)

சகலமில்லை கிஞ்சிலில்லை யுபய மில்லை
சத்துமில்லை யசத்துமில்லை யுபய மில்லை
சுகமுமில்லை துயருமில்லை யுபய மில்லை
சுத்தமில்லை யசுத்தமில்லை யுபய மில்லை
யிகழ்வுமில்லை யுயர்வுமில்லை யுபய மில்லை
யிகமுமில்லை பரமுமில்லை யெவையு மில்லை
யகிலபரி பூரணமா யகண்ட சித்தா
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (4)

வினவியிடுஞ் சீடனில்லை குருவு மில்லை
விளங்கியிடும் வித்தையில்லை யவித்தை யில்லை
துனிமருவும் பந்தமில்லை மோட்ச மில்லை
துஷிதமில்லை யத்துஷிதந் தானு மில்லை
நனிமகிழுஞ் சுபமுமில்லை யசுப மில்லை
நானுமில்லை நீயுமில்லை யாரு மில்லை
யனியமிலா வறிவுருவா யகண்ட மாகி
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (5)

மடமையில்லை மனதுமில்லை மதியு மில்லை
மயங்குமகங் காரமில்லை சித்த மில்லை
விடயமில்லை விடயமுணர் பொறியு மில்லை
வினையுமில்லை வினையுற்ற சீவ னில்லை
யுடலுமில்லை யுடலினபி மானி யில்லை
யுயிருமில்லை யொருகாலு மொன்று மில்லை
திடவடிவாய்த் திருசியமோ ரணுவு மின்றிச்
தெரிவுருவா யுளதுபரப் பிரம மொன்றே. (6)

போகமில்லை போகமுறும் போத்தா வில்லை
போக்கியமாம் பொருளுமில்லை திருத்தி யில்லை
மோகமுறு மூடனில்லை விவேகி யில்லை
முத்தனில்லை பெத்தனில்லை முமுட்சு வில்லை
பாகமுறும் பத்தனில்லை பத்தி யில்லை
பாசமில்லை பசுவுமில்லை பதியு மில்லை
யேகபரி பூரணமா யிகழாச் சித்தா
யெப்போது முளதுபரப் பிரம மொன்றே. (7)

ஆசையில்லை யாசிக்கும் பலனு மில்லை
யாசையுடன் செய்கின்ற செயலு மில்லை
பூசையில்லை பூசிக்குந் தெய்வ மில்லை
பூசையினுற் பொருந்தியிடும் பலனு மில்லை
பேசலில்லை பேசியிடும் பொருளு மில்லை
பேசுவதாற் பெறுகின்ற பலனு மில்லை
சாசுவத பூரணமாய்ச் சலியாச் சித்தாய்ச்
சந்ததமு முளதுபரப் பிரம மொன்றே. (8)

மனதிலுள காமமுதல் விருத்தி யில்லை
மயக்கமுறுஞ் சங்கற்ப விகற்ப மில்லை
சனனமுதற் சட்பாவ விகார மில்லை
சாக்கிரமே முதலியமூன் றவத்தை யில்லை
நனவுமுதற் கப்பாலாந் துரிய மில்லை
நானாவாய் நாடியிடு நினைவே யில்லை
தினையளவுந் திருசியமே யின்றி யென்றுந்
தெரிவுருவா யுளதுபரப் பிரம மொன்றே. (9)

சாதனமுஞ் சாத்தியமு மெவையு மில்லை
சற்சங்க மசற்சங்க மெவையு மில்லை
வேதனமும் வேத்தியமு மெவையு மில்லை
விசாரணமற் றப்யாச மெவையு மில்லை
யோதுபவ னுணர்பவனிங் காரு மில்லை
யுறுகதியு முறுகலுமற் றெவையு மில்லை
போதகன வடிவாகிப் பூன்ற மாகிப்
புரையறவே யுளதுபரப் பிரம மொன்றே. (10)

தானமில்லை தீர்த்தமில்லை தலமு மில்லை
தருமமில்லை தெய்வமில்லை சேவை யில்லை
யானியில்லை விருத்தியில்லை யடைவோ னில்லை
யறமுமில்லை யகமுமில்லை யினத்து மில்லை
ஞானமில்லை பத்தியில்லை கரும மில்லை
ஞாதுருஞா ஞநிகளோ ரணுவு மில்லை
யீனமிலாச் சன்மயமா யிலங்குஞ் சித்தா
யின்புருவா யுளதுபரப் பிரம மொன்றே. (11)

படிமுதலாய்த் தோற்றியிடு முலகு மில்லை
பாதாள முதலியதா மூலகு மில்லை
கடபடமே முதலியதாம் பொருளு மில்லை
காரியகா ரணமாக வொன்று மில்லை
யடர்பலவாம் பிரமாண்டத் திரளு மில்லை
யவையவையி னபிமானி தானு மில்லை
செடமலதாய்ச் சின்மயமாய்ச் செகசீ வாதி
சிறிதுமிலா துளதுபரப் பிரம மொன்றே. (12)

குறைவதுவு நிறைவதுவு மெவையு மில்லை
குறிப்பதுவுங் குலாவுவது மெவையு மில்லை
செறிவதுவும் பிரிவதுவு மெவையு மில்லை
சேர்கின்ற செயாபசெய மெவையு மில்லை
யறிவதுவு நினைவதுவு மினத்து மில்லை
யத்யான்ம முதலியவோர் மூன்று மில்லை
நிருமலமாய் நிர்க்குணமாய் நிகழுஞ் சித்தாய்
நிரந்தரமா யுளதுபரப் பிரம மொன்றே. (13)

சத்துவமே முதலியமுக் குணமு மில்லை
சைவமுதற் பலவிதமா மதமு மில்லை
வித்தாரமாம் வேதாந்த மதமு மில்லை
விதம்விதமா மாகமநூ லெவையு மில்லை
யத்துவித மறிவிக்கும் வாக்கு மில்லை
யைக்கியமே யறிவிக்கும் வாக்கு மில்லை
சுத்தபரி பூரணமாய்ச் சொலவுக் கெட்டாச்
சுபாவமதா யுளதுபரப் பிரம மொன்றே. (14)

ஆணுமில்லை பெண்ணுமில்லை யலியு மில்லை
யசரமில்லை சரமுமில்லை யனைத்து மில்லை
சேணுமில்லை மருத்துமில்லை சிகியு மில்லை
செலமுமில்லை தலமுமில்லை புலனு மில்லை
காணலில்லை கேட்டலில்லை தோற்ற லில்லை
கற்பிதமாய்க் காண்கின்ற தெவையு மில்லை
வாணிமுதற் கதோசரமாம் வத்து வாகி
வரம்பிலதா யுளதுபரப் பிரம மொன்றே. (15)

இட்டரில்லை சிட்டரில்லை துட்ட ரில்லை
யியற்றியிடும் லௌகிகவை திகமு மில்லை
கட்டையில்லை நெடியதில்லை கடித்த தில்லை
கருமையில்லை வெண்மையில்லை செம்மை யில்லை
நட்டமில்லை லாபமில்லை நடுவு மில்லை
நாமமில்லை ரூபமில்லை நாநா வில்லை
திட்டமதாந் திருசியமோ ரணுவு மின்றித்
திகழுருவா யுளதுபரப் பிரம மொன்றே. (16)

வன்னமுட னுச்சாரண வகுப்பு மில்லை
வரமான சாந்தியில்லை காந்தி யில்லை
துன்னியிடுந் தருமமில்லை யதர்ம மில்லை
தோடமில்லை குணமுமில்லை குண்யு மில்லை
மன்னியிடும் பாவமில்லை யபாவ மில்லை
மாயையில்லை மாயைசெயுஞ் செயலு மில்லை
பின்னமிலாப் பூரணமாய்ப் பிறங்குஞ் சித்தாய்ப்
பிரிவறவே யுளதுபரப் பிரம மொன்றே. (17)

புகழ்வுமில்லை யிகழ்வுமில்லை புகழ்வோ னில்லை
பூடணமுந் தூடணமு மெவையு மில்லை
விகலமிலா விதியுமில்லை நிடேத மில்லை
விதிக்கின்ற வெகுவிதமா நூலு மில்லை
யகமுமில்லை பிறருமில்லை யயலே யில்லை
யமலமில்லை மலமுமில்லை யனைத்து மில்லை
சகலபரி பூரணமாய்ச் சலியாச் சித்தாய்ச்
சந்ததமு முளதுபரப் பிரம மொன்றே. (18)

சன்னியமாந் தூலமுதற் றேக மில்லை
சைசவமு மெவ்வனமுஞ் சரையு மில்லை
யின்னன்மிகு மரணமில்லை சனன மில்லை
யிங்குற்ற பந்துவில்லை யபந்து வில்லை
பன்னியிடுஞ் சுத்துருமித் நிரு மில்லை
பரலோக முதலியவோர் பகுப்பு மில்லை
யன்னியமோ ரணுவுமிலா தகண்ட மாகி
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (19)

விரவியிடுந் திக்குமில்லை விதிக்கு மில்லை
விரிதிக்குப் பாலகர்க டாமு மில்லை
யாணுமில்லை யரியுமில்லை யயனு மில்லை
யநந்தவித வமரரில்லை யசுர ரில்லை
நாருமில்லை நிரியக்குத் தானு மில்லை
நகவனமே முதலியதா வாமு மில்லை
பரமசிதா காயமதாய்ப் பரசத் தாகிப்
பங்கமிலா துளதுபரப் பிரம மொன்றே. (20)

விசுவன்முதல் வியட்டியபி மானி யில்லை
விராட்டுமுதற் சமட்டியபி மானி யில்லை
யசுபமிலாத் துரியமொடு துரிய னில்லை
பன்னமய முதலியவைங் கோச மில்லை
மிசிரமுறு மத்யாச மெவையு மில்லை
மெய்போன்ற சகசீவ பரமே யில்லை
நசுவரமோ ரணுவுமிலா தகண்ட மாகி
நாசமிலா துளதுபரப் பிரம மொன்றே. (21)

கற்பிதமா யொருபொருளு மிலவே யில்லை
காலமில்லை தேசமில்லை வத்து வில்லை
சிற்பிரமந் தானென்னுந் நியான மில்லை
சின்மயமே பாவிக்குஞ் சித்த மில்லை
சற்பிரமந் தானெனுமோர் பேத மில்லை
சன்மாத்ரந் தானெனுமோர் பேத மில்லை
யற்பமுமே பேதமிலா தகண்ட மாகி
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (22)

மானமில்லை மானமிகும் பொருளு மில்லை
மகத்துமில்லை யணுவுமில்லை மத்தி யில்லை
ஞானமில்லை ஞேயமில்லை ஞாதா வில்லை
ஞாபிக்குந் திரிபுடியே தொன்று மில்லை
நானமதென் றெண்ணியிடு மயலே யில்லை
நவையுற்ற சம்சார மணுவு மில்லை
வானமென வகண்டசிதா காய மாகி
வரையிலதா யுளதுபரப் பிரம மொன்றே. (23)

பிரமாத்ரு சைதன்யந் தானு மில்லை
பிரமேய சைதன்யந் தானு மில்லை
பிரமாண சைதன்யந் தானு மில்லை
பிறங்குபல சைதன்யந் தானு மில்லை
நிருமாணஞ் செயலுற்ற தெவையு மில்லை
நிருமாணஞ் செய்கின்றேன் ருணு மில்லை
பரிணமம் விவர்த்தமுத லெவையு மின்றிப்
பங்கமிலா துளதுபரப் பிரம மொன்றே. (24)

மனதுடைய வாதனைக ளெவையு மில்லை
மனதுடைய விருத்திகளு மெவையு மில்லை
நனவுமுதற் சம்சார மணுவு மில்லை
நாடியிடுஞ் சம்சாரி தானு மில்லை
அனிமருவுந் துயிதமொரு காலு மில்லை
துக்கசுக முதலியவோ ரணுவு மில்லை
யனியமிலா தகண்டபரி பூர்ண மாகி
யசஞ்சலமா யுளதுபரப் பிரம மொன்றே. (25)

துன்னுமுட னுனென்றுஞ் சகமெய் யென்றுந்
தோற்றியிடுந் துயிதமுணர் விருத்தி யில்லை
மன்னுகரி நானென்று மற்ற தெல்லா
மயலென்றுஞ் சாட்சியுணர் விருத்தி யில்லை
யன்னியமி லகண்டபர நானே யென்றிங்
கறியுமகண் டாகார விருத்தி யில்லை
பின்னமுறும் விருத்திகளே தொன்று மின்றிப்
பேதமிலா துளதுபரப் பிரம மொன்றே. (26)

சகலமனே விருத்திகளு முதிப்ப தில்லை
சகலமனே விருத்திகளு நசிப்ப தில்லை
சகலமனே விருத்திகளின் றோற்ற மில்லை
சகலமனே விருத்திகளி னடக்க மில்லை
சகலமனே விருத்திகளின் பாவ மில்லை
சகலமனே விருத்திகளி னபாவ மில்லை
சகலமனே விருத்திகளு மின்றி யென்றுஞ்
சாந்தமதா யுளதுபரப் பிரம மொன்றே. (27)

சருவமனே விருத்திகளின் சாட்சித் தன்மை
சற்றுமிலை சருவமெனு நினைவு மில்லை
பிரமமக மகம்பிரம மெனவே செய்யும்
பிரமான்ம பாவனையுஞ் சிறிது மில்லை
சருவமெனச் சாட்சியெனப் பிரம மென்னச்
சருவான்ம சொரூபமெனப் பிரிவே யில்லை
யொருபிரிவு மொன்றும மகண்ட மாகி
யோருணர்வா யுளதுபரப் பிரம மொன்றே. (28)

இருளுமிலை யொளியுமிலை வெளியு மில்லை
யிருமூன்று சமாதிகளு மிலவே யில்லை
வருபிரம வித்துமிலை வரனு மில்லை
வரியானும் வரிட்டனுமற் றாரு மில்லை
யொருபொருளு மொருகாலு மிலவே யில்லை
யுள்ளவெலா முணர்வுருவாம் பிரம மென்றும்
பிரமமதே நானென்று மகண்ட ஞானம்
பெற்றவனே பவபாச முத்த னவன். (29)

ஓதியவிவ் வகண்டபரப் பிரம ஞான
முரைதவனே மகத்தான பாவி யாவனென்
பேதமிலா வகண்டபரப் பிரம ஞானம்
பெறுதவனே மகத்தான சோகி யாவனென்
சாதகமா மகண்டபரப் பிரம ஞானஞ்
சார்ந்தவனே சம்சார முத்த னவனை
ஞதலினன் மூமுட்சுவெலா மெவ் வித்தத்தா
மகண்டபர ஞானத்தை யடைய வேண்டும். (30)

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்னு
மப்பிரம நானென்னுந் தணிவு கொண்டே
யகமுறவே நிடமான வநுப வத்தை
யடைந்தவனவ் வகண்டபர வடிவே யாகி
யிகல்மனதின் சங்கற்ப விகற்ப மெல்லா
மிழந்துடனே பவபாச முத்த னுவன்
பகர்பொருளி லணுவேனு மைய மில்லை
பரமசிவன் றன்னுணை பரமார்த் தந்தான். (31)

எல்லாமாம் பிரமமது நானே யென்னு
மேகபர ஞானத்தை யிசையா மூடன்
கல்லாத கல்வியெலாங் கற்ற போதுங்
கரையில்லாப் பவக்கடலை கடவா னென்றுஞ்
சொல்லாலுஞ் சொல்லவொணு மகிமை கூர்ந்த
சுத்தபர ஞானத்தைப் பெற்ற வன்ரூன்
பொல்லாத பவக்கடலை யெளிதாய்த் தாண்டிப்
பூரணமாம் பரப்பிரம தீரஞ் சார்வன். (32)

உமான வகண்டபர நிச்சயத்தை
யுற்றவனே யுலகத்தில் ஞானி யானேன்
பிரியாத வகண்டபர நிச்ச யத்தைப்
பெற்றவனே பரப்பிரம சொரூப மானே
னரிதான விப்பொருளைப் பரேசன் முன்ன
மருளியவா நிதாகனினக் கறைந்தே னித்தைப்
பரமான வன்புடனே யொருகா லேனும்
பங்கமறக் கேட்டுணர்வோன் பரமே யாவன். (33)

ஒருமையிலை யிருமையிலை பலவு மில்லை
யுருவமிலை யருவமிலை யொன்று மில்லை
மருளுமிலை தெருளுமிலை மனதே யில்லை
மகத்துமிலை யணுவுமிலை மற்றொன் றில்லை
கருதுசக சீவரிலை யீச னில்லை
காரியமுங் காரணமு மெவையு மில்லை
யிருண்மருவாப் பரமசிவ சோதி யொன்றே
யெப்போது மேகமதா யிருக்கும் வத்து. (34)

மாயைமுதற் கற்பிதமாம் பொருளே யின்றி
மகத்துக்கு மகத்தாகி யசங்க மாகி
மேயமொடு மாதுருமா னங்க ளின்றி
மிகப்பெரிதாம் பூமான்ம சொரூப மாகி
நேயமதாய் நிரதிசயா நந்த மாகி
நித்தபரி சுத்தமதாய் நிறைந்த சித்தா
யேகமதாம் பந்தமிலா நித்த முத்த
வியல்பான பரசிவமே யிருக்கும் வத்து. (35)

இருக்குமுதல் வேதாந்த வசனத் தாலு
மிவையருளு மாசிரிய வசனத் தாலுந்
தருக்கமெனுந் திடமான மனனத் தாலுந்
தடையறவே செய்கின்ற நியானத் தாலு
மருக்கன்முகற் சோதிக்குஞ் சோதி யான
வறிவுருவாம் பரமசிவ மறிந்த வன்ரூன்
றிருக்குருவா மகண்டபர சிவமே யாகித்
திருசியமாம் பவபந்த மினைத்நுந் தீர்வன். (36)

சித்துருவாஞ் சிவவடிவை யறிந்த வன்ரூன்
சனனமொடு சரைமரண மாதிவ் யாதி
யித்தனையு மில்லாம லிழந்தெப் போது
மித்துவிதத் தோற்றமிறை யேனு மின்றி
யத்துவித பூரணமாஞ் சிவமே யாக
வமைவதுவா மகண்டபர முத்தி சார்வன்
சத்தியமே யிதுவென்று நிதாக ணுக்குச்
சற்குருவாம் ரிபுமுனிவன் சாற்றி னனல். (37)

வேறு.

பூதபௌதிக மாதியனேத்துமே பொய்யலாலிலையில்லையதென்னவே
நேதிசெய்சபி னித்தியகிட்கள கிருவிகற்பக மானபரம்பொருண்
மீதியாயுனதென்றுமாகவே மெய்ப்பொருட்டனையிற்குவிளம்புதல்
தீதிலாநந்தத்தாண்டவமாடுநந் தேவதேவ ணகண்டசொரூபமே (38)

இருபத்துமூன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 23-க்கு திருவிருத்தம்-1072.

இருபத்திரண்டாவது

ஆனந்த சொரூப பாவனையால் ஆனந்தாப்தி யுரைக்கும் அத்தியாயம்.

அகிலசகன் முயகனும் பரேசன் முன்ன
மனுமயமா மகண்டபரப் பிரமா நந்த
மகிமைதனே மாசறவே யுரைத்த வண்ண
மைந்தனெக் கிவ்வோதத்தின் மற்றுஞ் சொல்வே
னகிலமுமே யகண்டபரி பூன்ற மான
நிரதிசயா நந்தபரப் பிரம மேயாஞ்
சுகனனயாம் பரப்பிரம மதுநா னென்று
சோர்வறவே சிந்தித்துச் சுகித் திருப்பாய். (1)

சங்கமிலாச் சனுதனவா நந்த நானே
சலனமிலாச் சாசுவதா நந்த நானே
துங்கமதாந் தூயபரா நந்த நானே
துவிதமிலா வத்துவிதா நந்த நானே
பங்கமிலாப் பரமசிவா நந்த நானே
பாசமிலாப் பரமான்மா நந்த நானே
யெங்குமுள பரப்பிரமா நந்த நானென்
றெப்போதும் பாவித்துச் சுகித் திருப்பாய். (2)

கருதியிடும் விடயமிலா நந்த நானே
காரியகா ரணமுமிலா நந்த நானே
நிருமலமாய் நிகழ்பரமா நந்த நானே
நீக்கமிலா நித்தியவா நந்த நானே
யொருவடிவா யுள்ளபரா நந்த நானே
யுணர்வுருவா யொளிர்பரமா நந்த நானே
யிருமையிலா வேகபரா நந்த நானென்
றெப்போதும் பாவித்துச் சுகித் திருப்பாய். (3)

கருத்திலுறுங் களங்கமிலா நந்த நானே
கற்பிதமோ ரணுவுமிலா நந்த நானே
விருத்தியுணர் விடலபரா நந்த நானே
விருத்திக்கு மதீதபரா நந்த நானே
திருத்திதருந் திவ்வியவா நந்த நானே
திருடியமோ ரணுவுமிலா நந்த நானே
யருத்திசெயு மகண்டபரா நந்த நானென்
றநவரதம் பாவித்துச் சுகித் திருப்பாய். (4)

அழிவற்ற வட்சயவா நந்த நானே
யகண்டபத லட்சியவா நந்த நானே
பழுதற்ற ஞானபரா நந்த நானே
பரம்பொருளா யுள்ளபரா நந்த நானே
மொழியற்ற மோனபரா நந்த நானே
மோகமிலா மோட்சபரா நந்த நானே
யொழிவற்ற பூன்றபரா நந்த நானென்
றுமாகப் பரவித்துச் சுகித் திருப்பாய். (5)

சடமருவாச் சின்மயவா நந்த நானே
சலியாத சன்மயவா நந்த நானே
மடமையுரு நிருமலவா நந்த நானே
மயக்கமிலா நிர்க்குணவா நந்த நானே
திடவடிவாய்த் திகழ்பரமா நந்த நானே
நிலமளவும் பேதமிலா நந்த நானே
டீடர்மருவா வேகபரா நந்த நானென்
றெளிதாகப் பாவித்துச் சுகித் திருப்பாய். (6)

இணையொன்று மிலாதபரா நந்த நானே
யிலதுளதென் றெண்ணமிலா நந்த நானே
குணமூன்று மிலாதபரா நந்த நானே
குய்யமதா யுள்ளபரா நந்த நானே
நணுநாம ரூபமிலா நந்த நானே
நாசமிலா நற்சொரூபா நந்த நானே
யணுவேனும் பேதமிலா நந்த நானென்
றறிதிடமாய்ப் பாவித்துச் சுகித் திருப்பாய். (7)

கலனமறக் கண்டபரா நந்த நானே
கருமத்தா லுற்றபரா நந்த நானே
பலவிதமாய்ப் பற்றியவா நந்த நானே
பத்தியினு லுற்றபரா நந்த நானே
யுலகிலுள வாநந்த மனைத்து நானே
யுரைமனதுக் ககோசரவா நந்த நானே
யிலகியிடு மகண்டபரா நந்த நானென்
றிடையறவே பாவித்துச் சுகித் திருப்பாய். (8)

மிகமிகவு மகிழ்பரமா நந்த நானே
மெய்யுணர்வாய் மேவுபரா நந்த நானே
சகலமுமாய்ச் சார்ந்தபரா நந்த நானே
சாந்தமதாய்ச் செறிந்தபரா நந்த நானே
துகண்மருவாச் சுத்தபரா நந்த நானே
தொந்தமிலா முத்தபரா நந்த நானே
யகமருவா வகண்டபரா நந்த நானென்
றுகாவாய்ப் பாவித்துச் சுகித் திருப்பாய். (9).

விமலமதாய் விளங்குபரா நந்த நானே
விசேடமிலா வேத்தியவா நந்த நானே
சமமதுவாய்ச் செறிந்தபரா நந்த நானே
சங்கற்ப விகற்பமிலா நந்த நானே
நிமலமதாய் நிலைத்தபரா நந்த நானே
நிகிலமுமாய் நிறைந்தபரா நந்த நானே
யமலமதா யமர்ந்தபரா நந்த நானென்
றனிசமுரீ பாவித்துச் சுகித் திருப்பாய். (10).

வித்தையினல் விளங்குபரா நந்த நானே
வித்தைக்கு மதீதபரா நந்த நானே
மித்தையிலாச் சத்தியவா நந்த நானே
மேவுவதற் கரியபரா நந்த நானே
யித்துவித மெவையுமிலா நந்த நானே
யேகபரி பூரணவா நந்த நானே
யத்துவித மானபரா நந்த நானென்
றனிசமுரீ பாவித்துச் சுகித் திருப்பாய். (11).

மாயைமுதற் கதீதபரா நந்த நானே
மகாவாக்கி னிலக்கியவா நந்த நானே
தூயசிதா காயபரா நந்த நானே
துக்கசுக மெவையுமிலா நந்த நானே
நேயமதாய் நிகழ்பரமா நந்த நானே
நிகரற்ற நிரதிசயா நந்த நானே
யேயமிலா வேகபரா நந்த நானென்
றிருமையறப் பாவித்துச் சுகித் திருப்பாய். (12).

ஆதிமுடி வொன்றுமிலா நந்த நானே
யான்மாவுக் கபின்னபரா நந்த நானே
சோதியிரு ளெவையுமிலா நந்த நானே
சூக்குமமாய்ச் செறிந்தபரா நந்த நானே
பேதமிலாப் பூரணவா நந்த நானே
பின்னமறப் பிறங்குபரா நந்த நானே
யேதமிலாப் பரப்பிரமா நந்த நானென்
றிருமையறப் பாவித்துச் சுகித் திருப்பாய். (13)

சந்ததமுஞ் சலனமிலா நந்த நானே
சமாதியினுற் சார்ந்தபரா நந்த நானே
பந்தமறப் பிறங்குபரா நந்த நானே
பாம்பதமாய்ப் பற்றுபரா நந்த நானே
சிந்தையறச் செறிந்தசிதா நந்த நானே
செகத்தோற்றஞ் சிறிதுமிலா நந்த நானே
யந்தமிலா வகண்டபரா நந்த நானென்
றயலறவே பாவித்துச் சுகித்திருப்பாய். (14)

பரமவுப சாந்தபரா நந்த நானே
பாரற்பரமாய்ப் பாவியவா நந்த நானே
யிருமையிலா திலகுபரா நந்த நானே
யேகமதா யிருந்தபரா நந்த நானே
சரமசர மெவையுமிலா நந்த நானே
சகசீவ பரங்களிலா நந்த நானே
யொருவடிவா யுள்ளபரா நந்த நானென்
றொழிவறவே பாவித்துச் சுகித் திருப்பாய். (15)

சொல்லவொணாச் சுபாவபரா நந்த நானே
சுயஞ்சோதி யானபரா நந்த நானே
தொல்லையதாந் துரியபரா நந்த நானே
துரியத்து மதீதபரா நந்த நானே
யல்லலிலா வகண்டபரா நந்த நானே
யனைத்துக்கு மதீதபரா நந்த நானே
யெல்லையிலா வேகபரா நந்த நானென்
றெப்போதும் பாவித்துச் சுகித் திருப்பாய். (16)

விஞ்தமதாய் விளங்கியவா நந்த நானே
விதம்விதமாய் விளங்கியவா நந்த நானே
கஞ்தயமாய்க் கண்டபரா நந்த நானே
கறையறவே நின்றபரா நந்த நானே
மஞ்செயமாய் வந்தபரா நந்த நானே
மனதாலு மதியாவா நந்த நானே
யிஞ்தயநே நிலங்குபரா நந்த நானென்
றெப்போதும் பாவித்துச் சுகித் திருப்பாய். (17)

தத்துவமாய்த் தயங்குபரா நந்த நானே
தடையற்ற தன்மயவா நந்த நானே
சுத்தமதாய்த் துலங்குபரா நந்த நானே
சுகாதீத மானபரா நந்த நானே
யெத்துனியு மிலாதபரா நந்த நானே
யெவ்விடத்து மிலங்கியவா நந்த நானே
யத்துவிதா கண்டபரா நந்த நானென்
றநவரதம் பாவித்துச் சுகித் திருப்பாய். (18)

ஒருபொருளே சன்மயமாஞ் சொரூப மாகு
மொருபொருளே சின்மயமாஞ் சொரூப மாகு
மொருபொருளே சுகமயமாஞ் சொரூப மாகு
மொருபொருளே சுத்தபர சொரூப மாகு
மொருபொருளே யத்துவித சொரூப மாகு
மொருபொருளே யகண்டபர சொரூப மாகு
மொருபொருளே பரப்பிரம மதுநா னென்றே
யொருமையுடன் பாவித்து முத்த னுவாய். (19)

ஒருபொருளே யசலமதாஞ் சொரூப மாகு
மொருபொருளே யட்சரமாஞ் சொரூப மாகு
மொருபொருளே மகத்தான சொரூப மாகு
மொருபொருளே யுவமையிலாச் சொரூப மாகு
மொருபொருளே மஞ்கரமாஞ் சொரூப மாகு
மொருபொருளே யுபசாந்த சொரூப மாகு
மொருபொருளே பரப்பிரம மதுநா னென்றே
யொருமையுடன் பாவித்து முத்த னுவாய். (20)

ஒருபொருளே யகந்தையிலாச் சொரூப மாகு
மொருபொருளே யிதந்தையிலாச் சொரூப மாகு
மொருபொருளே மமதையிலாச் சொரூப மாகு
மொருபொருளே சமதையிலாச் சொரூப மாகு
மொருபொருளே யிதரமிலாச் சொரூப மாகு
மொருபொருளே யெங்குமுள சொரூப மாகு
மொருபொருளே பரப்பிரம மதுநா னென்றே
யொருமையுடன் பாவித்து முத்த னுவாய். (21)

ஒருபொருளே காமமிலாச் சொரூப மாகு
மொருபொருளே கோபமிலாச் சொரூப மாகு
மொருபொருளே லோபமிலாச் சொரூப மாகு
மொருபொருளே போகமிலாச் சொரூப மாகு
மொருபொருளே மதமுமிலாச் சொரூப மாகு
மொருபொருளே மச்சரமில் சொரூப மாகு
மொருபொருளே பரப்பிரம மதுநா னென்றே
யொருமையுடன் பாவித்து முத்த னுவாய். (22)

சந்ததமுந் தேகமிலாச் சொரூப நானே
சத்தியசித் சுகனமாஞ் சொரூப நானே
பந்தமிலாப் பரப்பிரம சொரூப நானே
பவபாசம் பற்றியிடாச் சொரூப நானே
சிந்தைமுத லெவையுமிலாச் சொரூப நானே
சிதாகாய மானபர சொரூப நானே
யந்தமிலா வகண்டபர சொரூப நானென்
றநவரதம் பாவித்து முத்த னுவாய். (23)

நித்தியமாம் பரப்பிரம சொரூப நானே
நிருமலமாம் பரப்பிரம சொரூப நானே
சத்தியமாம் பரப்பிரம சொரூப நானே
சாந்தமதாம் பரப்பிரம சொரூப நானே
சுத்தமதாம் பரப்பிரம சொரூப நானே
சுகனமாம் பரப்பிரம சொரூப நானே
யத்துவித பரப்பிரம சொரூப நானென்
றநவரதம் பாவித்து முத்த னுவாய். (24)

உதாரபரி பூரணமாம் பிரம மேநர
னுத்தமமா யுள்ளபரப் பிரம மேநர
னெதாகினுமோர் பிரிவுமிலாப் பிரம மேநர
னேகபரி பூரணமாம் பிரம மேநான்
சிதாநந்த மயமான பிரம மேநான்
செகசீவ பரங்களிலாப் பிரம மேநான்
சதாநந்த கனமான பாநா னென்றே
சங்கையறப் பாவித்து முத்த னுவாய். (25)

இந்தவிதம் பாவனையே செய்யச் சத்தி
யிலதேனு மகண்டபர விடய மான
சுந்தரமாஞ் சத்தத்தை வாக்கி னுலே
சோர்வறவே படித்தாலு மதனுன் மெள்ளச்
சிந்தையுமே யடைவாக வொருமைப் பட்டுச்
சின்மயமாம் பாவனையுஞ் சேரு மத்தா
லந்தமிலா வகண்டபர ஞான மூண்டா
யகண்டமதா மோட்சநிலை யடைய லாமே. (26)

பாவனையாற் சீக்கிரமாய் முத்தி பேரும்
படிப்பதனு லடைவாக முத்தி பேரு
மாவதனுன் முமுட்சுவெலாஞ் சீக்கி ரத்தி
லகண்டபர மோட்சத்தை யடைய வேண்டிற்
பாவனமாம் பாவனையே யிடைவி டாமற்
பலகாலு மாதரவாய்ப் பழகல் வேண்டுங்
கேவலமாம் பாவனையா லசத்த செல்லாங்
கிளத்தியவா சத்தத்தைப் படிக்க வேண்டும். (27)

தேகமுதல் யானென்றுஞ் சகத்த னைத்துந்
திரமென்றும் வெகுகால மாகி யுற்ற
பாகமுறும் வாதனைதா னகண்ட மாகப்
பழகியிடும் பாவனையா னசிப்ப தன்றி
யேகபர வுறுதிதனை யெப்போ தேனு
மிசைந்ததனு லெளிதாக நசியா தார்க்கு
மாகையினு லநவரத மிடைவி டாம
லகண்டபர பாவனையே பழகல் வேண்டும். (28)

ஆதலினு னீயென்று மிடைவி டாம
லகண்டபர பாவனையே செய்தி மைந்தா
வீதிலதே லகம்பிரம மகமெல் லாமென்
றிதுமுதலா வியம்பியநற் சத்தந் தன்னைப்
பேதமறப் படித்திடுமற் றதனுன் ஞானம்
பெற்றவனுய்ப் பவபாச முத்த னுவா
யீதுறுதி யிதிலணுவுஞ் சங்கி யாதே
யெமதீச னியம்பியதிற் சங்கை யுண்டோ. (29)

அகிலமுமே யகண்டபரா நந்த மான
வசங்கபரப் பிரமமதா மதுநா னென்று
மகிமைமிகு மிப்பொருளை முழுட்சு வெல்லா
மதித்துடனே மோட்சநிலை மருவும் வண்ணம்
நிகிலசகன் னுயகனும் பரேசன் முன்ன
நிகழ்த்தியவா நிதாகநினக் குரைத்தே னன்பாற்
பகரலுறு மிப்பொருளை யொருகா லேனும்
பழுதறவே கேட்டுணர்வோன் பாமே யாவன். (30)

காலமுதற் சிலசிலவாங் கார ணத்திற்
காரியமாஞ் சகமெவையு முதிக்கு மென்றே
சிலமிலாச் சிலமூடர் சொல்வ ரன்னோர்
செப்பியிடும் வாதமெலாஞ் சுத்தப் பொய்யே
யாலயமாம் பரமசிவ சத்தி யாலே
யகிலமுமவ் வதிட்டான பாசி வத்திற்
கோலமுறக் கற்பிதமா மதுவு மந்தக்
கூறுபடாப் பரசிவமே யுண்மை யோரில். (31)

சுருதியினு லுகத்தா லநுப வத்தாற்
சோதிக்கிற் கற்பிதமாஞ் சகசி வாதி
சருவமுமே சகலவதிட் டான மான
சன்மயமாம் பரமசிவ சொரூப மன்றி
யொருசிறிது மன்னியமா யென்று மில்லை
யுத்தமவிங் குரைத்தகெலா முண்மை யென்றே
நிருமலமாய் நிபுமுனிவ னிதாக னுக்கு
நிகரற்ற பரம்பொருளை நிகழ்த்தி னனல். (32)

வேறு.

சருவமுஞ்சச்சிதானந்தமாகிய சங்கமற்றபரம்பொருளென்னவு, மிரு மையின்றியவப்பரமப்பொரு ளென்றுமேயகமென்னவுஞ்செய்திடும் பிரிவில்பாவனையாற் பரமுத்தியைப்பெற்றிருந் திடலாமெனப்பேசு தல், பரமவானந்தத்தாண்டவமாடுமம்பரசிவன்றனகண்டசொரூபமே.

இருபத்தினான்காவது அத்தியாயம் (33)
முற்றிற்று.

ஆக அத்தியாயம்-24-க்கு திருவிருத்தம்-1105.

++

இருபத்தைந்தாவது

சுத்தப்பிரமபாவனையாற் பரமுத்தியுரைக்கும் அத்தியாயம்.

உத்தமமா மகண்டபரப் பிரம ஞான
முரமாகும் பொருட்டுனிகக் கிந்த வோத்திற்
சுத்தபர பாவனையே மீண்டுஞ் சொல்வேன்
சொன்னவிதம் பாவனையே செய்வா யாகிற்
சித்தமுறுஞ் சங்கற்ப விகற்ப மெல்லாஞ்
சிறிதேனு மிஞ்சாமற் றீருந் தீர்ந்தாற்
புத்திரனே சங்கற்ப விகற்பந் தீர்ந்த
புந்திகனிற் பூரணமா ஞானந் தோன்றும். (1)

சின்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
சிதாகாய பரப்பிரம சொரூப மேநா
னின்மலமாம் பரப்பிரம சொரூப மேநா
னிரந்தரமாம் பரப்பிரம சொரூப மேநான்
சன்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
சதாநந்த பரப்பிரம சொரூப மேநா
னென்மயமாம் பரப்பிரம சொரூப நானென்
றெப்போதும் பாவித்தே விகற்பந் தீர்வாய். (2)

சுத்தமதாம் பரப்பிரம சொரூப மேநான்
சுகனமாம் பரப்பிரம சொரூப மேநா
னித்தியமாம் பரப்பிரம சொரூப மேநா
னிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப மேநான்
சத்தியமாம் பரப்பிரம சொரூப மேநான்
சலனமிலாப் பரப்பிரம சொரூப மேநா
னத்துவித பரப்பிரம சொரூப நானென்
றநவரதம் பாவித்தே விகற்பந் தீர்வாய். (3)

ஆதிமுடி வற்றபர சொரூப மேநா
னகண்டபரி பூரணமாஞ் சொரூப மேநான்
சாதிகுல மெவையுமிலாச் சொரூப மேநான்
சங்கமிலா வசங்கபர சொரூப மேநான்
பேதமிலா வபின்னபர சொரூப மேநான்
பீதியிலா வபயபர சொரூப மேநா
னேதுமிலா வேகபர சொரூப நானென்
றெப்போதும் பாவித்தே விகற்பந் தீர்வாய். (4)

ஒழிவற்ற ஞானகன சொரூப மேநா
னுற்பத்தி நாசமிலாச் சொரூப மேநா
னழிவற்ற வானந்த சொரூப மேநா
னகங்கார மணுவுமிலாச் சொரூப மேநான்
பழுதற்ற பரப்பிரம சொரூப மேநான்
பங்கமிலாப் பரமசிவ சொரூப மேநா
னிழிவற்ற வகண்டபர சொரூப நானென்
றிடையறவே பாவித்து விகற்பந் தீர்வாய். (5)

இந்தவித மெப்போது மிதயத் நின்க
ணேகபர பாவனையே யெளிதாச் செய்து
பந்தமுறு மனதுடைய விகற்ப மெல்லாம்
பற்றறவே யிழந்துபரப் பிரமா நந்த
சித்துவிடைப் பிரிவறவே கலந்தெப் போதுஞ்
சின்னமிலா வானந்த மநுப வித்தே
யந்தமிலாப் பவபந்த மறுத்தெப் போது
மகண்டபர வடிவாக வமர்ந் திருப்பாய். (6)

அன்னியமோ ரணுவேணு மில்லை யென்று
மகிலமுமே யகண்டபரப் பிரம மென்றும்
பின்னமிலா வப்பிரம நானே யென்றும்
பேதமிலாப் பாவனையே திடமாய்ச் செய்வாய்
சொன்னவிதஞ் செய்வாயே னீயெப் போதுஞ்
சுகித்திடுவாய் சுகித்திடுவாய் சுகித்தே நிற்பாய்
பன்னியதி லணுவேணு மைய மில்லை
பரமசிவன் றன்னாணை பரமார்த் தங்தான். (7)

ஒருகாலுங் கற்பனையோ ரணுவு மில்லை
யொருகாலுங் கற்பிக்கு மனது மில்லை
யொருகாலுஞ் சம்சார மணுவு மில்லை
யொருகாலுஞ் சம்சாரி தானு மில்லை
யொருகாலுஞ் சகத்தணுவு மிலவே யில்லை
யொருகாலுஞ் சகதீசன் ரூனு மில்லை
யொருகாலு மொன்றுமில்லை யுள்ள தெல்லா
முணர்வுருவாம் பரமெனவே நிச்ச யிப்பாய். (8)

இகழ்மனதே யொருகாலு மிலாத தாலே
விதன்செயலாஞ் சகத்தோற்ற மிருப்ப தெங்கே
சகமணுவு மொருகாலு மிலாத தாலே
சடதேக வார்த்தையுமே யிருப்ப தெங்கே
பகையுடலே யொருகாலு மிலாத தாலே
பாவியிடு மகங்கார மிருப்ப தெங்கே
யகிலமுமே யறிவுருவாம் பரமே யென்று
மதுதானே யகமென்று நிச்ச யிப்பாய். (9)

சித்தமுத லொருபொருளு மிலவே யில்லை
செகசீவர் முதலியவை யிலவே யில்லை
யித்தனையு மெதிராக விருப்ப தேனு
மிருப்பதெலா மிருக்கின்ற பரமே யாகு
நித்தியமா யிவையெல்லா நிகழ்வ தேனு
நிகழ்வதெலா நிகழ்கின்ற பரமே யாகுஞ்
சத்தியசித் கனவடிவாம் பரமல் லாது
சகத்திற்குச் சத்தையில்லை தோற்ற மில்லை. (10)

அகண்டமதா மதிட்டான சத்தை யன்றி
யாரோபந் தனக்கயலாய்ச் சத்தை யில்லை
யகண்டமதா மதிட்டான பான மன்றி
யாரோபந் தனக்கயலாய்ப் பான மில்லை
யகண்டமதா மதிட்டான வின்ப மன்றி
யாரோபந் தனக்கயலா யின்ப மில்லை
யகண்டமதா மதிட்டான சொரூப மன்றி
யாரோப மொருகாலு மிலவே யில்லை. (11)

ஆதலினு லிருப்பதென நிகழ்வ தென்ன
வாமவைதாம் பிரியமெனக் காண்ப தெல்லாம்
பேதமிலாச் சத்தியசிற் சுகமே யான
பிரமமெனும் பாவனையே பெலமாய்ச் செய்வா
யேதமுறுந் தேகாதி யானே யென்று
மிவ்வுலக மெனக்கயலா யுள்ள தென்றும்
பீதிசெயும் பாவனையை யொருகா லேனும்
பிரமித்து மனதினிடைப் பெற்றி டாதே. (12)

ஏதமுறுந் தேகமுதல் யானே யென்று
மிவ்வுலக மெனக்கயலா யுள்ள தென்றும்
பேதமுறு நிச்சயமே பொருந்து மூடன்
பெருமைமிகும் பிராமணனு யிருந்த போதுஞ்
சாதியினன் மெத்தவுமே தாழ்மை யுற்ற
சண்டாளன் முனிதனி லேய மில்லை
யாதலினு லவ்விதமா நிச்ச யத்தை
யயர்ந்துமொரு காலத்து மடைந் திடாதே. (13)

எப்போது மொருபொருளு மிலவே யில்லை
யிருப்பதெனக் கற்பிதமாய்க் காண்ப தெல்லாஞ்
சற்போத சுககனமாம் பரமே யென்றுஞ்
சந்ததமு மப்பரம நானே யென்றுங்
கற்போல வசைவற்ற நிச்ச யத்தைக்
கலங்காம லெப்போது மப்யா சித்தே
கற்போத சூனியனுய்ப் பரமே யாகித்
தளர்வுதரும் பவபந்தந் தவிர்த்து நிற்பாய். (14)

சித்தமிலை புத்தியிலை சீவ னில்லை
செகத்துமிலை செகதீசன் முனு மில்லை
யித்துவித மெள்ளளவு மிலவே யில்லை
யிருப்பதென விசைப்பதுவு மிசைத்த லேயாம்
புத்திரனே யாதலினு னீயெப் போதும்
பூரணமாம் பரப்பிரம நிச்ச யத்தோ
டுத்துவித பாவனையே யிடைவி டாம
லாதாவாய்ப் புரிந்ததனுன் முத்த னுவாய். (15)

ROYAL COURT MAHAL LIBRARY (NEAR) KARAIKUDI

எதிர்தோற்றுந் திரிபேது மென்று மில்லை
யெவ்வுயிலே யெனுள்ளுமெனு மென்று மில்லை
யிதவெனுங் கேவலமெனுஞ் சொரூபத் தோற்று
மின்வுமெனு மேகபரி பூரணமு மென்று
நிதமேவும் பாவனைசெய் சொரூப மென்றுந்
திரமான வச்சொரூப நானே யென்று
மதிமேவும் பாவனையால் விகற்ப மெல்லா
மாற்றியுடன் மகத்தான முத்தி சார்வாய். (16)

யான்றானே நிட்களமாஞ் சொரூப மானேன்
யான்றானே நிருமலமாஞ் சொரூப மானேன்
யான்றானே போதகன சொரூப மானேன்
யான்றானே பூரணமாஞ் சொரூப மானேன்
யான்றானே கேவலமாஞ் சொரூப மானேன்
யான்றானே கெம்பீர சொரூப மானேன்
யான்றானே பரப்பிரம சொரூப னென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (17)

யான்றானே சுகனமாஞ் சொரூப மானேன்
யான்றானே சுத்தபர சொரூப மானேன்
யான்றானே நிடசத்தா சொரூப மானேன்
யான்றானே நிவ்வியமாஞ் சொரூப மானேன்
யான்றானே சருவான்ம சொரூப மானேன்
யான்றானே சாந்தபர சொரூப மானேன்
யான்றானே யகண்டபர சொரூப னென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (18)

யான்றானே யகந்தையிலாச் சொரூப மானேன்
யான்றானே யான்மாவாஞ் சொரூப மானேன்
யான்றானே யிதந்தையிலாச் சொரூப மானேன்
யான்றானே யேகபர சொரூப மானேன்
யான்றானே மமதையிலாச் சொரூப மானேன்
யான்றானே மகத்தான சொரூப மானேன்
யான்றானே பரப்பிரம சொரூப னென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (19)

யான்றானே சிந்தையிலாச் சொரூப மானேன்
யான்றானே சின்மாத்ர சொரூப மானேன்
யான்றானே தொந்தமிலாச் சொரூப மானேன்
யான்றானே துரியப்ர சொரூப மானேன்
யான்றானே பந்தமிலாச் சொரூப மானேன்
யான்றானே பராற்பரமாஞ் சொரூப மானேன்
யான்றானே பரப்பிரம சொரூப னென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (20)

யான்றானே சற்குருவாஞ் சொரூப மானேன்
யான்றானே சற்சீட சொரூப மானேன்
யான்றானே யாவையுமாஞ் சொரூப மானேன்
யான்றானே யெவையுமிலாச் சொரூப மானேன்
யான்றானே யெங்குமுள சொரூப மானேன்
யான்யானு யிருக்கின்ற சொரூப மானேன்
யான்றானே யகண்டபர சொரூப னென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (21)

யானென்று மறைவுமலன் றெரிவு மல்லன்
யானென்றுஞ் சடமுமலன் சித்து மல்லன்
யானென்று மொளியுமல னிருளு மல்லன்
யானென்று மொன்றுமல னிரண்டு மல்லன்
யானென்று முண்மையல னின்மை யல்லன்
யானென்று முணர்வுற்ற வெவையு மல்லன்
யானென்று மகண்டபரப் பிரம மென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (22)

யானென்றுந் தேகமலன் பொறியு மல்லன்
யானென்று முயிருமல னுள்ள மல்லன்
யானென்று மனதுமலன் மதியு மல்லன்
யானென்றுஞ் சித்தமகங் கார மல்லன்
யானென்று மவித்தையலன் மாயை யல்லன்
யானென்றுஞ் சீவபர சகமே யல்லன்
யானென்று மகண்டபரப் பிரம மென்னு
மேகபர பாவனையான் முத்த னவாய். (23)

எப்போதும் பரப்பிரமந் னக்கு வேறு
யிலங்கியிடு மெப்பொருளுஞ் சுத்தப் பொய்யே
சற்போத சுகனமாம் பிரம மொன்றே
சந்ததமுஞ் சலியாம லிருக்கும் வத்து
விப்பேத மெவையுமிலா தெவ்வி டத்து
மேகபரி பூரணமா யிருப்ப தான
நிர்ப்பேத பரப்பிரம நானே யென்று
நிரந்தரமாய் பாவித்து முத்த னுவாய். (24)

அத்யந்த நிருமலமாம் பிரம மேநா
னத்யந்த நிர்க்குணமாம் பிரம மேநா
னத்யந்த சற்கனமாம் பிரம மேநா
னத்யந்த சிற்கனமாம் பிரம மேநா
னத்யந்த சுகனமாம் பிரம மேநா
னத்யந்த சுத்தபரப் பிரம மேநா
னத்யந்த சாந்தபரப் பிரம நானென்
றநவரதம் பாவித்து முத்த னுவாய். (25)

யானென்று மயலற்ற சொரூப மானேன்
யானென்று மகத்தான சொரூப மானேன்
யானென்று மயலற்ற சொரூப மானேன்
யானென்று மகண்டபர சொரூப மானேன்
யானின்று மெவையுமிலாச் சொரூப மானேன்
யான்மூன்று மெவையுமிலாச் சொரூப மானேன்
யானென்று மெவையுமிலாச் சொரூப னென்றே
யெப்போதும் பாவித்து முத்த னுவாய். (26)

இகழ்வறவே யிருக்கின்ற சொரூப மேநா
னெப்போது மிலங்கியசிற் சொரூப மேநா
னகிலவுபா தியுமற்ற சொரூப மேநா
னனேத்துக்கு மதீதபர சொரூப மேநான்
பகரவொணாப் பரப்பிரம சொரூப மேநான்
பரிபூன்ற மானபர சொரூப மேநா
னகமருவா வகண்டபர சொரூப நானென்
றநவரதம் பாவித்து முத்த னுவாய். (27)

ஆன்மாவுக் கயலாகத் தீர்த்த மில்லை
யான்மாவுக் கயலாகத் தான மில்லை
யான்மாவா மதிசுத்த தீர்த்தத் தின்க
ணான்மாவே யகமென்று தானஞ் செய்தே
யான்மாவா மகண்டபரா நந்தந் தன்னை
யனிசமுநீ யாவலற வநுப வித்தவ்
வான்மாவாம் பரப்பிரம சொரூப மாக
வசஞ்சலமா யநவரத மமர்ந்து நிற்பாய். (28)

ஆன்மாவுக் கயலாகப் புசிப்ப தில்லை
யான்மாவே புசிக்கின்ற வத்து வெல்லா
மான்மாவுக் கயலாக வணுவு மில்லை
யான்மாவே யறிவுற்ற வத்து வெல்லா
மான்மாவே யகமென்று திடமாய்ப் பாவித்
தான்மசக மடைந்துமிகத் திருத்தி மேவி
யான்மாவா மகண்டபர சொரூப மாகி
யநவரத மசைவறவே யமர்தி மைந்தா. (29)

ஆன்மாவிற் கற்பித்மாஞ் சகசீ வாதி
யகிலமுமவ் வான்மாவுக் கயலே யல்ல
வான்மாவுக் கயலெனவே கண்ட போது
மாய்ந்திடின்வ் வகண்டபர மான்மா வேயா
மான்மாநா ணன்மாநா ணன்மா வெல்லா
மான்மாவுக் கபின்னபாப் பிரம நானென்
ணன்மாவா மகண்டபரப் பிரமந் தன்னை
யநவரதம் பாவித்தவ் வடிவே யாவாய். (30)

சத்தியமா யிருக்கின்ற வான்மா வேநான்
சகலமுமாய்த் தெரிகின்ற வான்மா வேநா
னித்தியமாய் நிலைபெற்ற வான்மா வேநா
னிர்க்குணமாய் நிறைந்தபர மான்மா வேநா
னித்துவித மெவையுமிலா வான்மா வேநா
னேகபரி பூரணமா மான்மா வேநா
னத்துவித மானபர மான்மா நானென்
றநவரதம் பாவித்து முத்த னவாய். (31)

இந்தவிதந் நிடமான நிச்ச யத்தோ
டேகபர பாவனையே செய்தே யத்தாற்
சிந்தையுறு விகற்பமெலாந் தீர்ந்து ஞானஞ்
செறிந்ததனுற் சின்மாத்ர மாகி நிற்பாய்
சந்ததமா நிச்சயமே சொரூப நிட்டை
சார்வதனின் முந்தியதா மேது வாகு
மந்தவுர நிச்சயமும் லயித்த பின்ன
ரயலறவே தான்றனாய்ச் சுகிக்க லாமே (32)

அகிலமுமே பிரமமென்று மதுநா னென்று
மகண்டபர பாவனையே யிங்கு ரைத்த
மகிமைமிகுந் நிடமான நிச்ச யங்காண்
மற்றந்த நிச்சயமே பழுதா நின்றே
ரிகன்மனதின் விகற்பமெலா மிழந்தெப் போது
மேகபர வடிவாகி யின்பஞ் சார்வர்
பகர்வதிலோ ரணுவேனு மைய மில்லை
பகர்ந்தபடி கேட்டுணர்வோன் பரமே யாவன் (33)

ஏகபரி பூரணமாய்ச் சாச ரங்க
ளெவைக்குமதிட் டானமதாம் பரசி வத்தைச்
சாகைபல பேதத்தாற் பலவாம் வேதஞ்
சம்புவென்றும் விண்டுவென்றும் விரிஞ்ச னென்று
மாகுபுரந் தரனென்று மனல னென்று
மழிக்கின்ற காலனென்று மனில னென்றும்
பாகமுற மற்றுமுள வமர ரென்றும்
பலவிதமா யங்கங்கே பகர லாகும். (34)

பலவிதமாய்ப் பகர்கின்ற வேத வாக்கின்
பரமான தாற்பரியப் பொருளே யெல்லா
மலைவறவே நன்றுக வாயுங் காலை
யநந்தவித வேதமுமே யகண்ட மான
தகமைமிகு மேகபர சிவத்தைத் தானே
தாற்பரியப் பொருளாகச் சாற்று மென்றே
யிகழ்வறவே ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கேகபர பாவனையே யிசைத்தா னன்றே. (35)

வேறு.

கற்பதத்தனிற்கற்பிதமாகவே தயங்குகின்றசகமுதல்யாவையு, மற்ப
மின்றியசிற்பரமாகுமவ் வகண்டமானபரம் பொருணெனலுஞ்,
சொற்பமின்றியபாவனை செய்திடற்சுத்தமாம் பரமாயிடலாமெனல்,
சிற்பராநந்தத்தாண்டவமாடுநஞ் சிற்சபேசனகண்டசொரூபமே.(36)

இருபத்தைந்தாவது அத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம் 25-க்கு திருவிருத்தம்-1041.

†††

இருபத்தாறுவது
அத்துவிதசொரூபத்தில் அபேதநிட்டையுரைக்கும் அத்தியாயம்.

அன்னியமோ ரணுவுமிலா வகண்டத் தின்க
ணத்யந்தந் தன்மயமா யிருக்கு நிட்டை
தன்னைநினைக் கிவ்வோத்தி னிதாக சொல்வேன்
சாற்றியவா தன்மயமாச் சுகித்தி ருப்பாய்
பன்னுமிவை வேதத்துஞ் சாத்தி ரத்தும்
பற்றமிக வரிதாகுங் குய்ய மாகும்
பின்னுமிவை தேவர்க்கும் யோகி கட்கும்
பெறமிகவு மரிதாகும் பிரிய மாமே. (1)

சத்தியசிற் சுககனமாய்ச் சலன மின்றிச்
சகலர்க்கு மான்மாவாய்ச் சாந்த மாகி
யத்துவித பூரணமாம் பிரமத் தின்க
ணலமனதின் விகற்பங்க ளனைத்துந் தீர்ந்து
சித்தமது வேறறவே கலந்தொன் றுகிச்
சீரசெல நியாயம்போற் சேர்ந் திருக்கை
புத்திரனே தன்மயமா நிட்டை யென்று
பூரணமா மறிஞரிறைற் புகல லாகும். (2)

வெகுவிதமாய்த் தோன்றியிடும் பேத மெல்லாம்
விசாரிக்கி லொருகாலு மிலவே யில்லை
யகிலமுமே யான்மாவுக் கபின்ன மான
வகண்டபரப் பிரமமென்று மதுநா னென்றுங்
தகமைமிகுந் நிடமான நிச்ச யத்தைத்
தப்பாம லெப்போது மப்யா சித்தே
சகலமுமே யிகந்துபரப் பிரமத் தொன்றுய்ச்
சந்ததமுந் தன்மயமாய்ச் சுகித் திருப்பாய். (3)

விதம்விதமாய் விளங்கிய விந் துவித மெல்லாம்
ஜீசாரிக்கி லெதனிடையி லிலாத தாகுந்
நிதமருவாக் காரியகா ரணங்க ளெல்லாந்
நிலமளவு மெதனிடையி லிலாத தாகு
மெதனிடையின் மனதுகலந் திருக்குங் காலை
யித்துவித பயமணுவு மிலாத தாகு
மதன்பயமாய்த் துவிதபய மணுவு மின்றி
யசஞ்சலமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (4)

எதனிடையிற் சங்கற்ப விகற்ப மில்லை
யெதனிடையிற் சாந்தியிலை தாந்தி யில்லை
யெதனிடையின் மனதுமிலை மதியு மில்லை
யெதனிடையின் மயலுமிலை தணிவு மில்லை
யெதனிடையிற் பாவமிலை யபாவ மில்லை
யெதனிடையி லித்துவித வறிவே யில்லை
யதன்மயமாய்த் துவிதபய மணுவு மின்றி
யசஞ்சலமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (5)

எதனிடையிற் ரூடமிலை குணமு மில்லை
யெதனிடையிற் றுக்கசுக மெவையு மில்லை
யெதனிடையின் மோனமிலை வாக்கு மில்லை
யெதனிடையிற் றுவந்துவமே தொன்று மில்லை
யெதனிடையிற் றேகமக மெனலே யில்லை
யெதனிடையிற் றிருஷியமோ ரணுவு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (6)

எதனிடையிற் காயிகமாஞ் செயலு மில்லை
யெதனிடையில் வாசிகமாஞ் செயலு மில்லை
யெதனிடையின் மானதமாஞ் செயலு மில்லை
யெதனிடையின் மற்றுமொரு செயலு மில்லை
யெதனிடையிற் பாவமற மெவையு மில்லை
யெதனிடையிற் பற்றுபல னணுவு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (7)

எதனிடையிற் கற்பிண்யே யென்று மில்லை
யெதனிடையிற் கற்பிப்போன் றானு மில்லை
யெதனிடையிற் பிரபஞ்ச முதிக்க வில்லை
யெதனிடையிற் பிரபஞ்ச மிருக்க வில்லை
யெதனிடையிற் பிரபஞ்ச மொடுங்க வில்லை
யெதனிடையி லெவையுமொரு காலு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (8)

எதனிடையின் மாயையுடைத் தோற்ற மில்லை
யெதனிடையின் மாயைசெயுஞ் செயலு மில்லை
யெதனிடையில் வித்தையிலை யவித்தை யில்லை
யெதனிடையி லீசனிலை சீவ னில்லை
யெதனிடையிற் சத்துமிலை யசத்து மில்லை
யெதனிடையிற் சகத்தோற்ற மிறையு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (9)

எதனிடையி லநேகவித வமர ரில்லை
யெதனிடையி லிவருடைய சேவை யில்லை
யெதனிடையிற் றிரிமூர்த்தி பேத மில்லை
யெதனிடையிற் றிரிமூர்த்தித் தியான மில்லை
யெதனிடையிற் பரமசிவ வடிவு மில்லை
யெதனிடையிற் பரமசிவத் தியான மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (10)

எதனிடையிற் பாகமுறுங் கரும மில்லை
யெதனிடையிற் பத்தியிலை ஞான மில்லை
யெதனிடையிற் பற்றியிடும் பயனு மில்லை
யெதுவலது பரமபதந் தானு மில்லை
யெதனிடையிற் சாதனமே தொன்று மில்லை
யெதனிடையிற் சாத்தியமோ ரணுவு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (11)

எதனிடையி லாக்கைபொறி யுயிர்க ளில்லை
யெதனிடையின் மனதுமதி சித்த மில்லை
யெதனிடையி லகங்கார மவித்தை யில்லை
யெதனிடையி லவையின்பி மானி யில்லை
யெதனிடையிற் சமட்டியில்லை வியட்டி யில்லை
யெதனிடையிற் சம்சார லேச மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (12)

எதனிடையிற் காமமொடு கோப மில்லை
யெதனிடையி லுலோபமொடு மோக மில்லை
யெதனிடையின் மச்சரமு மதமு மில்லை
யெதனிடையின் மற்றமனத் துகளு மில்லை
யெதனிடையிற் பந்தமெனு மயலு மில்லை
யெதனிடையின் மோட்சமெனு மயலு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (13)

எதனிடையி லாதியில்லை யந்த மில்லை
யெதனிடையி லடிநடுவு முடிவு மில்லை
யெதனிடையிற் றலமுமில்லை தெய்வ மில்லை
யெதனிடையிற் ரூனமில்லை தரும மில்லை
யெதனிடையிற் காலமில்லை தேச மில்லை
யெதனிடையிற் காண்கின்ற வத்து வில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்திருப்பாய். (14)

எதனிடையிற் சாதனமோர் நான்கு மில்லை
யெதனிடையிற் சற்குருநற் சீட னில்லை
யெதனிடையில் வேறுபடா ஞான மில்லை
யெதனிடையில் விளங்கியிடு ஞானி யில்லை
யெதனிடையி லுபயவித முக்தி யில்லை
யெதனிடையி லொருகாலு மொன்று மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (15)

எதனிடையில் வேதமுத னூலு மில்லை
யெத்னிடையில் விசாரிக்கும் புருட னில்லை
யெதனிடையிற் சங்கைசமா தான மில்லை
யெதனிடையிற் சாதிக்கும் பட்ச மில்லை
யெதனிடையிற் றள்ளியிடும் பட்ச மில்லை
யெதனிடையிற் றன்னையலா தெவையு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (16)

எதனிடையிற் செய்கின்ற வாத மில்லை
யெதனிடையிற் செயாபசெய மெவையு மில்லை
யெதனிடையில் வாச்சிய வாசகமு மில்லை
யெதனிடையில் வசனிக்கும் வாக்கு மில்லை
யெதனிடையிற் சீவபா பேத மில்லை
யெதனிடையிற் செறியுமுபா திகளு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (17)

எதனிடையிற் சிரவணமே யாதி யில்லை
யெதனிடையிற் செறிகின்ற சமாதி யில்லை
யெதனிடையிற் சசாதீய பேத மில்லை
யெதனிடையில் விசாதீய பேத மில்லை
யெதனிடையிற் சுகதமெனும் பேத மில்லை
யெதனிடையிற் சொற்பொருள்க ளெவையு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (18)

எதனிடையி னரகபய மணுவு மில்லை
யெதனிடையிற் சுவர்க்கசுகந் தானு மில்லை
யெதனிடையி லயன்முதலோ ருலக மில்லை
யெதனிடையி லங்குபெறும் பேறு மில்லை
யெதனிடையிற் பின்னுமுள வுலகு மில்லை
யெதனிடையிற் பிரமாண்ட மெவையு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (19)

எதனிடையிற் பொருந்தியிடும் பூத மில்லை
யெதனிடையிற் பௌதிகமோ ரணுவு மில்லை
யெதனிடையின் மமதையில்லை யகந்தை யில்லை
யெதனின்மனே ராச்சியமோ ரணுவு மில்லை
யெதனிடையிற் சங்கமெனுந் தோட மில்லை
யெதனிடையிற் சற்றுமொரு விகற்ப மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (20)

எதனிடையின் மூன்றுவித தேகமில்லை
யெதனிடையின் மூன்றுவித வவத்தை யில்லை
யெதனிடையின் மூன்றுவித சீவ ரில்லை
யெதனிடையின் மூன்றுவித தாப மில்லை
யெதனிடையி லைந்துவித கோச மில்லை
யெதனிடையி லவையினபி மானி யில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (21)

எதனிடையி லறிவுற்ற பொருளே யில்லை
யெதனிடையி லாவரண சத்தி யில்லை
யெதனிடையில் விதம்விதமாம் பேத மில்லை
யெதனிடையில் விட்சேப சத்தி யில்லை
யெதனிடையிற் பின்னுமுள சத்தி யில்லை
யெதனிடையிற் பிரபஞ்ச மயலே யில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (22)

எதனிடையிற் காணமெலா மிலாத தாகு
மெதனிடையிற் கர்த்தாவு மிலாத தாகு
மெதனிடையி னிரதிசயா நந்தந் தோன்று
மெதுதானே நிச்சலமா நிலைமை யாகு
மெதனையறிந் தடைகின்றே ரென்று மீளா
ரெதுவானோர் பவபந்த மென்று மேவா
எதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்திருப்பாய். (23)

எதனையறிந் தனவரதஞ் சுகிப்போ ருக்கிங்
கெச்சகமுந் தற்சுகமா யிலங்கா நிற்கு
மெதையகமென் றறிதிடமா யறிந்த பின்னை
ரெள்ளளவு மன்னியமே யிலாத் தாகு
மெதையகமென் றறிதிடமா யறிந்த காலே
யெவ்விதமாஞ் சீவருமே முத்த ராவ
ரதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (24)

எதையகமென் றறிதிடமா யறிந்தான் மற்று
மெள்ளளவு மிதரத்தை யறிய வேண்டா
மெதையகமென் றறிதிடமா யறிந்த காலே
யாவையுமே யெப்போது மறிந்த தாகு
மெதையகமென் றறிதிடமா யறிந்த காலே
யெச்செயலுஞ் செய்துமுடிந் ததுவே யாகு
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (25)

எதனையகம் பிரமமெனு நிச்ச யத்தா
லிடரறவே யெளிதாக வடைய லாகு
மெதனிடையந் நிச்சயமுஞ் சாந்த மாகு
லேகபரி பூரணவா னந்தந் தோன்று
மெதனிடையின் மனதுலயித் திருக்குங்காலை
யிணையற்ற நிரதிசய திருத்தி மேவு
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (26)

எதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யெத்துயரு மெள்ளளவு மிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யானீயு மற்றுரு மிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிப்பேதம் யாவையுமே யிலாத தாகு
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (27)

எதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிருமையறத் தான்ரூ யிருக்க லாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யெள்ளளவுந் தனக்கயலே யிலாத தாகு
மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை
யிணையற்ற வாகந்த மொன்றே தோன்று
மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (28)

எதுதானே யகண்டசதா கார மாகு
மெதுதானே யகண்டசிதா கார மாகு
மெதுதானே யகண்டசுகா கார மாகு
மெதுதானே யத்துவிதா கார மாகு
மெதுதானே யான்மாவுக் கபின்ன மாகு
மெதுதானே யகண்டபரப் பிரம மாகு
மதுதானே நானென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (29)

எதுதானே யாலுகு நீயு மாகு
மெதுதானே மற்றுமுளோ ராரு மாகு
மெதுதானே யகிலவநிட் டான மாகு
மெதுதானே யணுவுமிலா தேக மாகு
மெதுதானே யத்யந்த சுத்த மாகு
மெதுதானே யகண்டபரி பூன்ற மாகு
மதுதானே நானென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (30)

எதனிடையில் விருத்தியெலா மிலாத தாகு
மெதனிடையில் வேறணுவு மிலாத தாகு
மெதனிடையி லகந்தை யெலா மடங்க லாகு
மெதனிடையி லாசையெலா மழிந்தே போகு
மெதனிடையின் மனதுமுதன் மரிப்ப தாகு
மெதனிடையின் மயக்கமெலா நசிப்ப தாகு
மதுவகமென் றறிந்திடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (31)

எதனிடையிற் றேகமுதற் றெரியா தாகு
மெதனிடையிற் றிருசியமே நிகழா தாகு
மெதனிடையிற் சித்தமுமே மரித்துப் போகு
மெதனிடையிற் சீவனுமே கலந்த தாகு
மெதனிடையி னினைவெவையும் லயித்துப் போகு
மெதனிடையி னிச்சயமு நசித்த தாகு
மதுவகமென் றறிந்திடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். (32)

எதனிடையிற் றியானமெலாம் லயிப்ப தாகு
மெதனிடையில் யோகமெலா மிறப்ப தாகு
மெதனிடையி லஞ்ஞான மரிப்ப தாகு
மெதனிடையில் ஞானமுமே நசிப்ப தாகு
மெதனிடையில் விவகார மிலாத தாகு
மெதுதானே பரமார்த்த நிலைமை யாகு
மதுவகமென் றறிந்திடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (33)

எதனிடையிற் கலந்திடுவோன் சுகமே சார்வ
னெதனிடையிற் கலந்திடுவோன் றுயரே மேவா
னெதனிடையிற் கலந்திடுவோ னெவையுங் காணு
னெதனிடையிற் கலந்திடுவோன் பிறப்பே சாரா
னெதனிடையிற் கலந்திடுவோன் பிரிவே மேவா
னெதனிடையிற் கலந்திடுவோன் பரமே யாவ
னதுவகமென் றறிந்திடமா நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (34)

எதுசாட்சாத் பரப்பிரம சொரூப மாகு
மெதுசாட்சாத் பரமசிவ சொரூப மாகு
மெதுசாட்சாத் பரிசுத்த சொரூப மாகு
மெதுசாட்சாத் பரமபத சொரூப மாகு
மெதுசாட்சாத் பிரஞ்ஞான சொரூப மாகு
மெதுசாட்சாத் பரதத்வ சொரூப மாகு
மதுதானே யகமென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (35)

எதுசாட்சாத் சுத்தபர சொரூப மாகு
மெதுசாட்சாத் சுககனமாஞ் சொரூப மாகு
மெதுசாட்சாத் ரூக்கபர சொரூப மாகு
மெதுசாட்சாத் சுயஞ்சோதி சொரூப மாகு
மெதுசாட்சா தத்துவித சொரூப மாகு
மெதுசாட்சா தகண்டார்த்த சொரூப மாகு
மதுதானே யகமென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (36)

எதுசாட்சாத் சத்தியமாஞ் சொரூப மாகு
மெதுசாட்சாத் சாந்தபர சொரூப மாகு
மெதுசாட்சாந் நித்தியமாஞ் சொரூப மாகு
மெதுசாட்சாந் நிர்க்குணமாஞ் சொரூப மாகு
மெதுசாட்சா தான்மாவாஞ் சொரூப மாகு
மெதுசாட்சா தகண்டபர சொரூப மாகு
மதுதானே யகமென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (37)

எதுதானே விவகாரத் தனைத்து மாகு
மெதுதானே பரமார்த்தத் தணுவு மாகா
தெதுதானே சத்தியசிற் சுகமே யாகு
மெதுதானே சந்தமுஞ் சாந்த மாகு
மெதுதானே தனக்கனிய மலாத தாகு
மெதுதானே தானுகத் தனித் திருக்கு
மதுதானே யகமென்னு நிச்ச யத்தா
லம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய். (38)

இந்தவித தன்மயமா நிட்டை தன்னை
யிருமையற நிதாகனினக் கிசைக்க லானேன்
சந்தமு மிடையறவே பழகா நின்ற
சலனமிலா வகண்டபர நிச்ச யத்தா
லந்தவித நிட்டை தனை யடைந்த வற்ரு
லநவரத மாநந்த மநுப விப்பாய்
பிந்தியொரு காலத்தும் பவத்தின் றுன்பம்
பிரமமய மானநினக் கிலவே யில்லை. (39)

சத்தியசிற் சுககனமாம் பரமே யெல்லாஞ்
சந்ததமு மதுநானென் றப்யா சிக்குந்
சுத்தபர வாதனையான் மலின மாகச்
சொல்லியிடும் வாதனைக ளனைத்துந் தள்ளிப்
புத்திரனே பின்பதையு மிழந்தெப் போதும்
பூரணமா யிருப்பதுவா நிட்டை மேவி
யத்துவித பரப்பிரம மயமே யாகி
யகண்டமதா யிருப்பதுவா முத்தி சார்வாய். (40)

சொலுமலின வாதனையு மனத்தின் றன்மஞ்
சுத்தபர வாதனையு மனத்தின் றன்ம
மீலியுமொரு வாதனையும் பரத்துக் கில்லை
யாதலினு லம்மயமா நிட்டை சார்ந்து
மலினமெனச் சுத்தமென மதிக்கப் பட்ட
மனதிடைய வாதனைக ளொன்று மின்றிச்
சலனமிலாச் சிலபோலுங் காட்டம் போலுஞ்
சற்றேனுஞ் சலியாமற் சுகித் திருப்பாய். (41)

அகண்டபர பாவனையே செய்த வற்ரு
லன்னியமா நினைவெவையு மறந்த பின்னர்ப்
புகன்றபர பாவனையு மறந்தெப் போதும்
பூரணமாம் பரப்பிரம மயமே யாவாய்
செகந்தனிலே யெந்தமகா பாவி யேனுஞ்
செப்பியிடு மிப்பொருளைக் கேட்டு ணர்ந்தா
லகந்தனிலே யுள்ளமகா பாவ மெல்லா
மழிந்தன்னே னகண்டபர வடிவே யாவன் (42)

எல்லையிலா வேதமெலாஞ் சித்த சுத்திக்
கேதுவதா மூபாசனையை மூன்பங் கங்கே
சொல்லியதாற் சித்தத்தின் சுத்தி யுற்றோர்
சுகமாக மோட்சநிலை சார்வ தற்கே
யல்லலிலா வானந்த கனமே யான
வகண்டபரி பூரணமாம் பரசி வத்திற்
கல்லெனவே யசையாமற் கலந்தி ருக்குங்
களங்கமிலா நிட்டையினைக் காட்டிற் றன்ரே. (43)

ஆதலினு லறிவதெலாஞ் சிவமே யென்று
மச்சிவமே நானென்றும் பழகப் பட்ட
சாதகமா முபாசனையாற் சித்த சுத்தி
சார்ந்ததனுற் றன்மயமா நிட்டை கூடிப்
பேதமிலா மோட்சநிலை பெறலா மிங்கே
பேசியது சத்தியமே யென்ப தாகப்
போதமுற ரிபுமுனிவ னிதாக னுக்குப்
பூரணமா நிட்டையினைப் புகன்றன் மன்னே. (44)

வேறு.

சச்சிதாநந்த மாகியவத்துவே சந்ததமக மென்றுபுரிந்திடு
நிச்சயந்தனி லுலகிலேகமாய் நிற்பதாகிய தன்மயநிட்டையாற்
றுச்சமாம்பவ பந்தம்விடுத்துடன் றூயமுத்தி யடைந்திடலாமென
லுச்சவாநந்தத் தாண்டவமாடுமும் முத்தமேச னகண்டசொரூபமே.

இருபத்தாறுவது அத்தியாயம் (45)

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 26-க்கு திருவிருத்தம்-1086.

இருபத்தேழாவது

சுத்தசொரூபாநு சந்தானத்தாற் சாந்தியுரைக்கும் அத்தியாயம்.

சத்தியசிற் சுககனமாம் பிரம மாத்ரஞ்
சந்ததமுஞ் சலியாம லுள்ள தென்று
மித்துவித மெள்ளளவு மில்லை யென்று
மிவ்விதமாம் பொருளினைக் கின்னஞ் சொல்வே
னுத்தமமா மிப்பொருளை யொருகா லேனு
முள்ளபடி யுரமாகக் கேட்டு ணர்ந்தோ
னத்துவித பரப்பிரம மாத்ர மாகி
யகண்டபர மோட்சத்தை யடைவ னன்றே. (1)

சத்தியமாய்ச் சமமாகிச் சாந்த மாகிச்
சலனமிலாச் சாசுவத சுபாவ மாகி
நித்தியமாய் நிர்க்குணமாய் நிமல மாகி
நிரஞ்சனமாய் நிராமயமாய் நிருவி கற்ப
சித்துருவாய்ச் செறிந்தபரப் பிரம மொன்றே
சிதையாம லெப்போது மிருக்கும் வத்து
வத்துவித பூரணமாம் பிரமத் துக்கிங்
கன்னியமா யணுவேனு மிலவே யில்லை. (2)

தொந்தமுறுந் துவிதமொரு காலு மில்லை
தோற்றியிடுந் தோற்றமெலாம் பாமே யாகும்
பந்தமுதற் பலவிதமாம் பகுப்பே யில்லை
பார்க்கின்ற பார்வையெலாம் பரமே யாகுஞ்
சந்ததமுஞ் சகலமுமே சற்று மில்லை
சகலமெனக் காண்பதெலாம் பரமே யாகு
மந்தமிலா வகண்டைக ரசமே யான
வப்பிரம மகமெனவே யநுசந் திப்பாய். (3)

தேகமுத லொருபொருளு மென்று மில்லை
திருகியமாய்த் தெரிவதெலாம் பாமே யாகும்
போகமுத லொருபொருளு மென்று மில்லை
புலமுறவே காண்ப தெலாம் பரமே யாகு
மோகமுத லொருபொருளு மென்று மில்லை
முன்னிலையாய்க் காண்பதெலாம் பரமே யாகு
மாகுமய லணுவுமிலா தகண்ட மான
வப்பிரம மகமெனவே யநுசந் திப்பாய். (4)

சத்தியஞ்ஞா னுநந்த சொரூப மேநான்
சலனமிலாச் சுத்தபர சொரூப மேநான்
நித்தியநிட் களமான சொரூப மேநா
னிரஞ்சனமாய் நிறைந்தபர சொரூப மேநா
னித்துவித மெவையுமிலாச் சொரூப மேநா
னேகபரி பூரணமாஞ் சொரூப மேநா
னத்துவித மானபர சொரூப நானென்
றயலறவே யநவரத மநுசந் திப்பாய். (5)

பேதமிலாச் சத்தான சொரூப மேநான்
பிறங்யிடுஞ் சித்தான சொரூப மேநான்
கேதமிலா வானந்த சொரூப மேநான்
கேவலமாஞ் சாந்தபர சொரூப மேநான்
சாதிகுல மெவையுமிலாச் சொரூப மேநான்
சம்சார லேசமிலாச் சொரூப மேநா
னுதியிலா வகண்டபர சொரூப நானென்
றயலறவே யனவரத மநுசந் திப்பாய். (6)

ரூக்குமமாய்ச் செறிந்தபர சொரூப மேநான்
சுத்தபர மாநந்த சொரூப மேநான்
ரூக்குமொரு பற்றுமிலாச் சொரூப மேநான்
ரூன்ரூனுய்த் தனித்தபர சொரூப மேநா
னீக்கமற நிறைந்தபர சொரூப மேநா
னிகிலபரி பூரணமாஞ் சொரூப மேநா
னுக்கைமுத லுபாதியிலாச் சொரூப நானென்
றயலறவே யநவரத மநுசந் திப்பாய். (7)

சுரூவமுமாய்த் தெரிகின்ற சொரூப மேநான்
சருவமெனுஞ் சொலவுமிலாச் சொரூப மேநா
னிருமலமாய் நிகழ்கின்ற சொரூப மேநா
னித்தியவிஞ் ஞானகன சொரூப மேநான்
சுருதிமுதற் கதோசரபாஞ் சொரூப மேநான்
சுத்தபரப் பிரமமெனுஞ் சொரூப மேநா
னிருமையிலா வேகபர சொரூப நானென்
றிடையறவே யெப்போது மநுசந் திப்பாய். (8)

சனனமுதற் சட்பாவ விகார மின்றிச்
சந்ததமுஞ் சின்மாத்ர சொரூப மாகி
மனதுமுதற் கெட்டாத வத்து வாகி
மாயைமுத லுபாதிகளோ ரணுவு மின்றிப்
பனுவியிடு மீசத்வ சீவத் வங்கள்
பற்றியிடா வகண்டபரப் பிரமந் தானே
யநவரத மகமெனவே யிடைவி டாம
லத்யந்த வாதரவோ டநுசந் திப்பாய். (9)

ஒதியிடு முடன்மூன்று மவத்தை மூன்று
முரைத்தவவற் றபிமானி மூன்று மின்றிச்
சாதிகுல முதலியவா முபாதித் தன்மஞ்
சற்றுமொரு காலத்தும் பற்று தாகி
வேதமுதற் பலவிதமாஞ் சாத்தி ராதி
விளக்கியிடும் விபுவான வறிவாய் நின்ற
வேதமிலா வகண்டபரப் பிரமந் தானே
யெப்போது மியானெனவே யநுசந் திப்பாய். (10)

ககனமுதற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
காரியகா ரணமான சகத்தே யில்லை
பகருசக சிருட்டிமுதற் செய்யா நின்ற
பதுமசனே முதலியமும் மூர்த்தி யில்லை
வெகுவிதமா யங்கங்கே விளங்கா நின்ற
வேறுபடும் வாச்சியவா சகமே யில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே யகமென்று மநுசந் திப்பாய். (11)

தக்கசெய மபசெயமற் றெவையு மில்லை
சாருமிலா பாலாப மெவையு மில்லை
துக்கசுகந் துதிநிந்தை யெவையு மில்லை
துவிதமிலை யத்துவிதந் தானு மில்லை
முக்குணமு மதன்செயலு மெவையு மில்லை
மூலமதா மஞ்ஞானந் தானு மில்லை
யக்கரமாம் பரப்பிரம மனைத்து மென்று
மதுதானே யகமென்று மநுசந் திப்பாய். (12)

காலமுதற் கற்பனையே யிலாமை யாலே
காண்கின்ற காட்சிமுத லிருப்ப தெங்கே
தூலமுதற் காத்திரமே யிலாமை யாலே
தொடர்கின்ற பவபந்த மிருப்ப தெங்கே
மூலமதா மஞ்ஞான மிலாமை யாலே
மூளைக்கின்ற வதன்செய்கை யிருப்ப தெங்கே
யாலயமாம் பரப்பிரம மனைத்து மென்று
மதுதானே யகமென்று மநுசந் திப்பாய். (13)

சஞ்சலமா மானதமே யிலாமை யாலே
சங்கற்ப விகற்பங்க ளிருப்ப தெங்கே
பஞ்சமகா பூதமுமே யிலாமை யாலே
பலவிதமாம் பௌதிகமிங் கிருப்ப தெங்கே
தஞ்சமெனுந் தேவதையே யிலாமை யாலே
தான்செய்யும் பூசைமுத லிருப்ப தெங்கே
யஞ்சனமில் பரப்பிரம மனைத்து மென்று
மதுதானே யகமென்று மநுசந் திப்பாய். (14)

சித்தமுறும் விருத்திகளே யிலாமை யாலே
செகமுதலின் சிந்தனையிங் கிருப்ப தெங்கே
புத்தியெனு நாமமுமே யிலாமை யாலே
பொருள்களுணர் நிச்சயமிங் கிருப்ப தெங்கே
யித்துவித மெள்ளளவு மிலாமை யாலே
யேகமென வியம்புதலு மிருப்ப தெங்கே
யத்துவித பரப்பிரம மனைத்து மென்று
மதுதானே யகமென்று மநுசந் திப்பாய். (15)

இங்கற்ப வகங்கார மிலாமை யாலே
யானெனதென் றெண்ணந்தா னிருப்ப தெங்கே
சங்கற்பம் யாவையுமே யிலாமை யாலே
சரீரமுதற் ரூற்றந்தா னிருப்ப தெங்கே
பொங்குற்ற பொறிகளெலா மிலாமை யாலே
புலனுனை சத்தாதி யிருப்ப தெங்கே
யெங்குற்ற வெப்பொருளும் பிரம மென்று
மிதுதானே யானென்று மநுசந் திப்பாய். (16)

சருவமுமே யகண்டபரப் பிரம மென்னுஞ்
சந்ததமு மப்பிரம நானே யென்னு
மிருமையிலாப் பாவனையே யிடைவி டாம
லெப்போது முயற்சியுடன் செய்த வற்ரூன்
மருவியவிவ் வுலகமெலா மூண்மை யென்னு
மற்றிந்தத் தேகாதி நானே யென்னு
மொருமையிலா விபரீத மொழித்தெப் போது
மூணர்வுருவாம் பரப்பிரம மாத்ர மாவாய். (17)

சருவமுமே பரப்பிரமஞ் சத்தி யந்தான்
சந்ததமு மதுவேதீ சத்தி யந்தான்
பாவியவிவ் வர்த்தத்திற் சங்கை யில்லை
பரமசிவன் றன்னுணை பரமார்த் தந்தா
னரியவனே யாதலினு னீயெப் போது
மகிலமுமே பிரமமென்னு மதுநா னென்னு
மொருமைதரும் பாவனையே செய்த வற்ரு
லுணர்வுருவாம் பரப்பிரம மாத்ர மாவாய். (18)

அகண்டபர மோட்சத்தை யடைவ தற்கிங்
கதிடமா மகம்பிரம நிச்ச யந்தான்
செகந்தனிலே முக்கியகா ரணமா மைந்தா
செப்பியது சத்தியமே சங்கை யில்லை
புகன்றருளுஞ் சற்குருவின் வசனத் தாலும்
பூரணமாய்ப் பழகியதன் பழக்கத் தாலு
மகந்தனிலே யகம்பிரம நிச்ச யந்தா
னதிடமா மற்றதனன் மோட்சம் பேரும். (19)

ஆதலினி லகம்பிரம நிச்ச யந்தா
னதிடமாய் மோட்சநிலை யடையு மட்டு
மேதமிலா வென்னுடைய வாக்கி யத்தா
லெப்போது மெவ்வளவு மிடைவி டாமற்
பேதமிலா வகம்பிரம நிச்ச யத்தைப்
பிரியமுடன் றிடமாக வப்யா சித்து
வீதலுறும் விகற்பமெலா மிகந்தெப் போதும்
வேறுபடா மோட்சநிலை மேவு வாயே. (20)

யான்ருனே யெவைக்குமதிட் டான மானேன்
யான்ருனே யாவையுமா யிலங்கா நின்ரேன்
யான்ருனே யெவையுமிலா தேக மானேன்
யான்ருனே யாவர்க்கு மான்மா வானேன்
யான்ருனே யகண்டபரப் பிரம மானேன்
யான்ருனே யத்துவித சொரூப மானேன்
யான்ருனே யானுக விருப்போ னென்னு
மேகபர பாவனையாற் சாந்த னுவாய். (21)

யான்ருனே யறிவான சொரூப மானேன்
யான்ருனே யாநந்த சொரூப மானேன்
யான்ருனே யழிவற்ற சொரூப மானேன்
யான்ருனே யகண்டபர சொரூப மானேன்
யான்ருனே யேகபர சொரூப மானேன்
யான்ருனே யிதரமிலாச் சொரூப மானேன்
யான்ருனே யானன சொரூப மென்னு
மேகபர பாவனையாற் சாந்த னுவாய். (22)

பரமசிவன் றிருவுருவ மானே னானே
பரமசிவ பூசனையு மானே னானே
யரியுடைய திருவுருவ மானே னானே
யவ்வரியின் பூசனையு மானே னானே
விரவுவிதி திருவுருவ மானே னானே
விதம்விதமா மெப்பொருளு மானே னானே
யிருமையிலாப் பரப்பிரம மானே னானென்
றேகபர பாவனையாற் சாந்த னுவாய். (23)

சுரசுரர் மாதுடரு மானே னானே
சுழல்கின்ற நிரியக்கு மானே னானே
பிரிவுபெறு முலகமெலா மானே னானே
பிரமாண்ட கோடிகளு மானே னானே
சரமசர மெப்பொருளு மானே னானே
சகசீவ பரங்களெலா மானே னானே
யிருமையிலாப் பரப்பிரம மானே னானென்
றேகபர பாவனையாற் சாந்த னுவாய். (24)

இதுவெனவே தெரிவதுவு மானே னானே
யானீயாய்த் தெரிவதுவு மானே னானே
யதுவெனவே தெரிவதுவு மானே னானே
யன்னியமாய்த் தெரிவதுவு மானே னானே
யெதுவெதுவாய்த் தெரிவதுவு மானே னானே
யெப்போது மெல்லாமு மானே னானே
யதிசயமாம் பரப்பிரம மானே னானென்
றகண்டபர பாவனையாற் சாந்த னுவாய். (25)

சித்தமுகற் றிருசியமு மானே னானே
சின்மயமாந் திருக்குருவு மானே னானே
புத்தியுறும் விருத்தியெலா மானே னானே
பொருந்துமதன் விடயமெலா மானே னானே
யித்துவித பேதமெலா மானே னானே
யில்லதுள தென்பதெலா மானே னானே
யத்துவித பரப்பிரம மானே னானென்
றகண்டபர பாவனையாற் சாந்த னுவாய். (26)

ஓருபொருளு மொருகாலுஞ் செனிக்க வில்லை
யொருகாலுஞ் செனியாதிங் கிருப்ப தெங்கே
விரிவுறவே செனியாது மற்றி ராதும்
வீதலடைந் திடுமென்ன விளம்ப லெங்கே
யரியவனே யாதலினு லகண்ட மான
வத்துவிதப் பிரமத்துக் கயலே யில்லை
சருவமுமே பிரமமென்னு மதுநா னென்னுஞ்
சலியாத பாவனையாற் சாந்த னுவாய். (27)

எப்பொருளு மெங்கேனு மிருக்கு மாகி
லிவ்விதமா யிஃதுளதென் றியம்பல் வேண்டுஞ்
சிற்பொருளே யன்றியொரு பொருளு மென்றுஞ்
சிறிதுமிலாத் தன்மையினு லியம்பு தற்கிங்
கற்பமுமே யிடமில்லை யாத லாலே
யகண்டபரப் பிரமவடி வான வென்னிற்
சொற்பொருளோ ரணுவுமில்லை யென்றெப் போதுஞ்
சும்மாவே யிருந்துமிகச் சாந்த னுவாய். (28)

சலமனதே யொருகாலு மிலவே யில்லை
சார்மனதின் விகற்பங்க ளிருப்ப தெங்கே
திலமளவு மொன்றுமொரு காலு மில்லை
திகழ்வதெலா மகண்டபர மான நானென்
றலிவில்பர பாவனையால் விகற்ப மெல்லா
மழிந்தவுட னசைவற்றே ரயலு மற்றுச்
சொலன்மருவாச் சுத்தபர சொரூப மாகிச்
சும்மாவே யிருந்துமிகச் சாந்த னுவாய். (29)

அகிலமுமே பிரமமதா மதுவே நானு
மகண்டபரி பூரணமாம் பரநா னிங்ங
னிகழுபல பேதமிலாப் பரநா னென்னு
நிரதிசயா நந்தபர நானே யென்னு
மகிழ்வுதரும் பாவனையு மறந்தெப் போது
மனவாக்குக் கெட்டாத வத்து வான
சுகனமாம் பரப்பிரம சொரூப மாகிச்
சும்மாவே யிருந்துமிகச் சாந்த னுவாய். (30)

படருமகம் விருத்திக்கு விடய மான
பலவிதமாந் துவிதமொரு காலு மில்லை
தொடருமிதம் விருத்திக்கு விடய மான
துவிதமுமே யொருகாலு மிலவே யில்லை
சடமருவாச் சின்மயமாம் பிரம மொன்றே
சந்ததமு முளதென்னு மதுநா னென்னுந்
திடமருவு மதுபூதி யடைந்தெப் போதுந்
தியங்காது மிகவுமுப சாந்த ஞவாய். (31)

சிரவணமுஞ் சிந்தனையுஞ் சிறிது மில்லை
செய்கின்ற தியானமிலை சமாதி யில்லை
விரவிலய விட்சேப கஷாய மில்லை
விளங்கிரசா ஸ்வாதமிலை வேறொன் றில்லை
சருவமுமே சன்மயமாம் பிரம மென்னுஞ்
சந்ததமு மப்பிரம நானே யென்னு
மிருமையிலா வதுபூதி யடைந்தெப் போது
மியங்காது மிகவுமுப சாந்த ஞவாய். (32)

சகலமுமே பிரமமெனு நிச்ச யத்தாற்
சகமுதலீ துண்மையெனும் பிராந்தி நீங்குந்
திகழ்பிரம நானென்னு நிச்ச யத்தாற்
றேகமுத ஞனென்னும் பிராந்தி நீங்குந்
தகுமகனே யாதலினு லெல்லா மென்றுந்
தற்பிரமந் தானென்னு மதுநா னென்னும்
வெகுதிடமா மதுபூதி யடைந்தெப் போதும்
வேறறவே மிகவுமுப சாந்த ஞவாய். (33)

மருவியிடுஞ் சீவனிலை யீச னில்லை
மாயையிலை யவித்தையிலை மற்றொன் றில்லை
யிருமையெனு மித்துவித மெவையு மில்லை
யாவைக்கு மூலமதாம் பகுதி யில்லை
யொருபொருளு மொருகாலு மிலவே யில்லை
யுள்ளதெலா மேகபரப் பிரம மென்னும்
பிரமமதே நானென்னு மதுப வத்தைப்
பெற்றதனற் பரமவுப சாந்த ஞவாய். (34)

புத்தியில்லை சித்தமில்லை மனது மில்லை
புகலுமகங் காரமில்லை பூத மில்லை
சத்தமில்லை பரிசமில்லை ரூப மில்லை
சார்கின்ற விரதமில்லை கந்த மில்லை
பத்தியில்லை ஞானமில்லை கரும மில்லை
பந்தமில்லை மோட்சமில்லை பகுப்பே யில்லை
யத்துவித பரப்பிரம மொன்றே யுண்மை
யதுநானென் றறிவுற்றம் மயமே யாவாய். (35)

முத்தனில்லை பெத்தனில்லை சுத்த னில்லை
மூடனில்லை விவேகியில்லை ஞானி யில்லை
யுத்தமனுங் குரவனில்லை சீட னில்லை
யோதியவான் மானுன்ம விவேக மில்லை
வித்தாரமாந் தியானமில்லை யோக மில்லை
விதம்விதமாம் யோகாங்கந் தாமு மில்லை
யத்துவித பரப்பிரம மொன்றே யுண்மை
யதுநானென் யறிவுற்றம் மயமே யாவாய். (36)

பதம்பதமாய்ச் சொல்லியிடு நாம மில்லை
பதார்த்தமெனத் தோற்றியிடு முருவ மில்லை
விதம்விதமாய் விளங்கியவெப் பொருளு மில்லை
விரிந்தசக சீவபர மெவையு மில்லை
சுதந்தரமா யொருகாலு மொன்று மின்றிச்
சுத்தமதா யுளதுபரப் பிரம மொன்றே
நிதந்தவிரா தப்பிரம நானே யென்னு
நிலைபெற்ற ஞானத்தான் முத்த னுவாய். (37)

இல்லையென வியம்பியிடும் பொருளு மின்றி
யிங்குளதென் றியம்பியிடும் பொருளு மின்றிச்
சொல்லியிடுஞ் சொற்பொருளோ ரணுவு மின்றிச்
சும்மாவே யிருந்தமகா மௌனி யாகி
யல்லலிலா வகண்டபரா நந்த மேவி
யநாதிபவ துக்கங்க ளனைத்துந் தீர்த்துக்
கல்லெனவே திடமான பாஞ்ச னத்தாற்
கற்பனையோ ரணுவுமிலா முத்தி சார்வாய். (38)

அறிவுற்ற தனைத்துக்கு மதீத மாகி
யறுபத்து நான்குகலைக் கதீத மாகிச்
செறிவுற்ற கலைக்கெல்லாஞ் சார மாகிச்
சின்மாத்ர வடிவாகிச் செயலொன் றின்றிக்
கறையற்றுக் குணமற்றுக் குற்ற மற்றுக்
காண்கின்ற கற்பனைக ளனைத்து மற்று
நிறைவுற்ற நிச்சலமாம் பரஞா னத்தா
னிர்ப்பயமாய் நிற்கின்ற முத்தி சார்வாய். (39)

சுருக்கமுறச் சொல்லியிடும் பொருளைக் கேளாய்
சொன்னதெலாம் பரப்பிரம சொரூப மேயா
நெருக்கமுறுஞ் சொரூபமதே நீயு நானு
நிகிலருமா நிதாகவித்தி லைய மில்லை
யிருக்குமுதன் மறைமுடியின் பொருளு மீதே
யெமதீச னெமக்கருளும் பொருளு மீதே
தருக்கமுட னுறுதியிடும் பொருளு மீதே
தத்துவஞா னிகளுணரும் பொருளு மீதே. (40)

தோற்றியிடுந் தோற்றமெலாம் பரமே யென்றுந்
துவிதமிலா வப்பரம நானே யென்றுஞ்
சாற்றியவிவ் வர்த்தத்திற் சங்கை யில்லை
சம்புபதந் தன்னுணை சத்தி யந்தான்
போற்றியவிவ் வர்த்தத்தைச் சிரத்தை யோடே
புரையறவே நித்தியமுங் கேளா நின்றோர்
வேற்றுமையில் சின்மாத்ர சொரூப மான
விமலபர வடிவாகி முத்த ராவர். (41)

சாதனமோர் நான்குமுள வதிகா ரிக்குச்
சாற்றியவிவ் வர்த்தத்தைக் கருணை யாலே
மாதவரீ புகல்வாயேன் மற்றன் னேனு
மகத்தான பரப்பிரம ஞான மேவி
யேதமுறும் பவதுக்க மனைத்துந் தீர்ந்திங்
கிணையற்ற பரப்பிரமா நந்த முற்றுப்
பேதமிலாப் பரப்பிரம வடிவே யாவன்
பேசியதிற் சந்தேக மணுவு மில்லை. (42)

இரவிமுகற் சோதியினல் விலக்க வொண்ணு
விதயவிருண் மிகுந்தவெறு மூட னேனு
நிருமலமா மிப்பொருளை நிக்க மாக
நியமமுடன் கேட்டபடி படிப்பா னுகிற்
பரமசிவ கருணையினுன் மற்றன் னேனும்
பரஞான சோதியினை யடைந்தே யத்தா
லிருதயமா ரஞ்ஞான விருளை நீக்கி
யேகபர சிவவடிவாய் முத்த னுவன். (43)

புத்திரனே வெகுவிதமாய் விளம்பி யென்ன
பூரணமாஞ் சிவகருணை பொருந்தி னேர்க்கே
யுத்தமமா மிப்பொருளைக் கேட்ப தற்கு
மூனமறத் தினந்தோறும் படிப்ப தற்கும்
பத்திவரு மற்றவரே சீவன் முத்திப்
பதமேவித் தேகமிலா முத்தி சார்வர்
சத்தியமே யென்றுரிபு நிதாக னுக்குச்
சனனமிலாப் பரம்பொருளைச் சாற்றி னனே. (44)

வேறு.

பிரமமல்லது வேறிலை யென்பதும்
பிறங்குமெப்பொரு ளும்பர மென்பது
மிருமையில்பர மேயக மென்பது
மேகபாவனை யாகுமி தென்பது
மொருமைபேசிய ஞானமி தென்பது
மோங்குமுத்நியி தென்பதும் யாவுமே
பரமவாநந்தத் தாண்டவ மாடுநம்
பரசிவன்ற னகண்ட சொரூபமே. (45)

இருபத்தேழாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம், 27-க்கு திருவிருத்தம்-1231.

இருபத்தெட்டாவது

நான்கு மகாவாக்கியார்த்த முரைக்கும்

அத்தியாயம்.

சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரிதாகிக் குய்ய மாகிச்
சுருதிமுடி யனேத்திலுநற் சார மாகிச்
சுத்தமதாம் பரப்பிரம சொரூபந் தன்னை
யிருளறவே நேராக வறிவிக் கின்ற
வியல்புள்ள நான்குமகா வாக்கி யத்தின்
பொருளினையிங் கெல்லோர்க்கு மிதமே யாகப்
பூன்றசிவன் புகன்றபடி புகலு வாமே. (1)

பெருமைமிகு மிருக்குமறை முடியி லுள்ள
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்ய மொன்று
மிருண்மருவா வெசுர்வேத முடியி லுள்ள
விலகுமகம் பிரமாஸ்மி வாக்ய மொன்று
மருண்மருவாச் சாமமறை முடியி லுள்ள
மகத்தான தத்வமசி வாக்ய மொன்று
மரியவதர் வணவேத முடியி லுள்ள
வயமான்மா பிரமமெனும் வாக்ய மொன்றும். (2)

இந்தவித நால்குமறை முடியின் கண்ணே
யிருக்கின்ற நான்குமகா வாக்கி யத்துண்
முந்தியதாம் பிரஞ்ஞானம் பிரம மென்றே
மொழிந்தமகா வாக்கினுடைப் பொருளைச் சொல்வா
மைந்தவிதிற் பிரஞ்ஞானம் பிரம மென்று
மருவுபத மிரண்டாகு மற்றி வற்றின்
முந்தியதாம் பிரஞ்ஞான பதத்தி னுக்கு
முக்கியமா மர்த்தத்தை மொழியக் கேளாய். (3)

ஞானமதே பிரஞ்ஞான மென்ன லாகு
ஞானத்தாற் சகலமுமே தெரிவ தாகு
ஞானமதிற் றெரிகின்ற சகத்த னேத்து
ஞானத்திற் கற்பிதமாய்த் தெரிவ தாலே
ஞானமல தன்னியமா யொன்று மில்லை
ஞாலமுத லெப்பொருளு ஞான மாத்ர
ஞானமதே நமதுநிச வடிவ மாகு
ஞானமதே பரப்பிரம வடிவ மாமே. (4)

சருவசக தத்திட்டான சொரூப மான
சத்தியஞா னநந்த வத்து தானே
பிரமமெனும் பதத்தினுடை யர்த்த மாகும்
பிரமமதிற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
வொருபொருளும் பிரமத்திற் கயலே யாகா
தணர்வுற்ற பொருளெல்லாம் பிரம மாத்ரம்
பிரமமதே நமதுநிச சொரூப மாகும்
பிரமமதே பிரஞ்ஞான சொரூப மாமே. (5)

பிரஞ்ஞானப் பொருடானே பிரம மாகும்
பிரமமெனும் பொருடானே பிரஞ்ஞா னங்கா
ணஞ்ஞான முதலியதா மூபாதி யாலே
யகண்டபரம் பொருடானே யிரண்டு போலாம்
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கி யார்த்தம்
பிறங்கியதா லுபாதியெலா நீங்கும் போது
விஞ்ஞான கனமான வத்து வொன்றே
வேறற்ற வகண்டார்த்த மாகி நிற்கும். (6)

பிரிவுற்ற வுபாதியுறுஞ் சீவன் றானே
பிரஞ்ஞான பதத்தினுடை வாச்சி யார்த்தம்
விரிவுற்ற வுபாதியுறு மீசன் றானே
விளம்பியிடும் பிரமபத வாச்சி யார்த்த
மொருமித்த நிருபாதி வத்துத் தானே
யுபயவித பதத்திற்கு மிலட்சி யார்த்தந்
தெரிவித்த வுபயபத லட்சி யைக்யந்
திகழுமகா வாக்கினுடை யகண்டார்த் தங்காண். (7)

அறைந்தபடி மகாவாக்கி னகண்டார்த் தத்தை
யறிந்துமன தம்மயமா யிதர மெல்லா
மறந்துதன தாவரண மனைத்து நீங்கி
மயக்கமற நிற்பதுவே யகண்டா காரஞ்
செறிந்தமனே விருத்தியெனச் செப்ப லாகுஞ்
செப்புமகண் டாகார விருத்தி தானே
யறிந்தவரா லதிசுகமாஞ் சீவன் முத்தி
யாகுமென வங்கங்கே யறைய லாமால். (8)

சத்தியசிற் சுககனமாய்ச் சாந்த மாகிச்
சலனமிலாச் சாசுவத சுபாவ மாகி
நித்தியநிர்க் குணமாகி நிருவி கற்ப
நிரவயவ நிரஞ்சனமாய் நிறைந்து நின்ற
வத்துவித பாப்பிரம மானே னெனென்
றறிவுற்றம் மயமான விருத்தி தானே
சுத்தவகண் டாகார விருத்தி யென்று
சூக்கமுணர் ஞானிகளாற் சொல்ல லாகும். (9)

சந்தகநான் பாப்பிரம சொரூப மன்றிச்
சற்றேனுஞ் சம்சாரி யல்ல னென்றே
யிந்தவித மறிவுற்றுச் சலத்திற் சேர்ந்தங்
கேகரச மாகின்ற லவண மேபோ
லந்தமிலா வகண்டபரப் பிரமத் தின்க
ணேக்கியமே யடைந்தமனே விருத்தி தானே
மைந்தவகண் டாகார விருத்தி யென்று
மாசற்ற ஞானிகளான் மதிக்க லாகும். (10)

சொன்னவகண் டாகார விருத்தி தானே
சுகமேலா யிருக்கின்ற சீவன் முத்தி
பின்னேயகண் டாகார விருத்தி நீங்கிப்
பிராரத்தம் யாவையுமே நீங்குங் காலை
யன்னியமா முபாதிகளோ ரணுவு மின்றி
யகண்டைக ரசமான வத்து வாக
மன்னியிருக் கின்றநிலை விதேக முத்தி
மற்றுமகண் டைகரச நிலைமை கேளாய். (11)

ஓதியிடும் பிரஞ்ஞான பதமுந் தள்ளி
யுரைசெய்த பிரமமெனும் பதமுந் தள்ளிப்
பேதமிலாப் பாப்பிரம நானே யென்று
பிரியமுடன் பழகியபா வனையுந் தள்ளி
யேதையுமே நினையாமல் வெறி திருந்திங்
கிவ்விதமா யிருப்பதெனு நினைவுந் தள்ளி
யீதெனவே யுணரவொணு விருப்புத் தானே
யென்றுமகண் டைகரச நிலைமை யாமே. (12)

மனதுடைய விகற்பங்க ளனைத்து மின்றி
மாயைமுத லுபாதிகளோ ரணுவு மின்றி
யனியமிலா வகண்டைக ரசசொ ரூப
மாகியிருக் கின்றநிலை விதேக முக்தி
சொனநீலைதான் சுபாவமதாய்க் கிட்டு மட்டுஞ்
சுழல்கின்ற விவகார மனைத்துந் தள்ளி
யனகவகண் டாகார விருத்தி தன்னை
யலப்பறவே யநவாத மப்யா சிப்பாய். (13)

புகலுமகண் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியிடு மியல்பைக் கேளா
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே நானென்று நான தென்று
மிகழ்வறவே யெப்போது மிடைவி டாம
லேகபா பாவனையே யிதயத் தின்கண்
விகலமறச் செய்வதுவே யகண்டா காரா
விருத்திதனைப் பழகியிடு மியல்பா மைந்தா. (14)

தேகமுத லனைன்ன றுவித விர்த்தி
திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி
யேகபர நானென்ன லகண்ட விர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி
யாகுமகண் டாகார விருத்தி தன்னை
யநவாத மாதரவா யப்யா சித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்க ளூர்த்துச்
சொன்னவகண் டைகாச சொரூப மாவாய். (15)

இன்னவிதம் பிரஞ்ஞானம் பிரம மென்னு
மிலகுமகா வாக்கினுடை யருத்தஞ் சொன்னே
முன்னியதா யிங்குரைசெய் நீதி யெல்லா
மூன்றுமகா வாக்கிலுமே தெரிந்து கொள்வாய்
பின்னையகம் பிரமாஸ்மி யென்ப தாகப்
பேசுமகா வாக்கினுடைப் பொருளைக் கேளா
யன்னவகம் பிரமாஸ்மி வாக்கி யத்தி
லகம்பிரம மஸ்மியெனப் பதமூன் றுமே. (16)

மூந்துமகம் பதத்துக்குச் சீவ னர்த்த
மொழிபிரம பதத்துக்கவ் வீச னர்த்த
மந்தமிலாச் சீவபர வயிக்யந் தானே
யஸ்மியெனும் பதத்தினுடை யருத்த மாகு
மிந்தவித மிந்தமகா வாக்கி யத்தி
னேகரச மாகியுள வகண்டார்த் தத்தைப்
புந்தியினு லாய்ந்திதனை யநுப வித்துப்
புகன்றவகண் டைகரச சொரூப மாவாய். (17)

பேதமுறு முபாதியினுற் கிஞ்சிக் ஞத்வம்
பிறங்கியசர் வஞ்ஞத்வ மாதி யாவு
மோதியசீ வேசருடைத் தன்மம் போலா
முபாதியெலாம் விசாரித்துத் தள்ளுங் காலே
யாதியிலாச் சீவபர வைக்ய மிஞ்சு
மதுதானே யகண்டார்த்த மாம வற்றை
யோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுணர்ந்தந்த வகண்டார்த்த வடிவே யாவாய். (18)

அனகவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மாசிரிய னருளியவா றறிந்த போதும்
பினையுமதை யுத்தியுடன் மனனஞ் செய்து
பிராந்திதரின் சங்கையெலாம் பெயர்க்க வேண்டுஞ்
சொனவிதமாய்ச் சங்கையெலாம் பெயர்ந்த பின்னர்ச்
சுழல்கின்ற விபரீத மனைத்துந் தீர
வனிசமகம் பிரமாஸ்மி யென்ப தாக
வாதரவோ டப்யாசஞ் செய்ய வேண்டும். (19)

சத்தியசிற் சுகனமாம் பிரம நானே
சாலவுப சாந்தபரப் பிரம நானே
நித்தியநிர்க் குணமான பிரம நானே
நிரவயவ நிரஞ்சனமாம் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானே
யகண்டமதாம் பரப்பிரம நானே யென்று
சத்துருவாம் விபரீதந் தீரு மட்டுஞ்
சந்ததமுஞ் சலியாமற் பழக வேண்டும். (20)

அகிலபரி பூரணமாம் பிரம நானே
யான்மாவுக் கபின்னபரப் பிரம நானே
சகலமுமாய்த் தெரிகின்ற பிரம நானே
சட்பாவ விகாரமிலாப் பிரம நானே
துகளறுவு மருவாத பிரம நானே
துவிதமிலாச் சுத்தபரப் பிரம நானென்
றகமருவு விபரீதந் தீரு மட்டு
மநவரத மாதரவாய்ப் பழக வேண்டும். (21)

இந்தவிதம் விசாரித்த விவேகி யெல்லா
மேகபர பாவனையே யிடைவி டாமற்
சந்ததமுஞ் செய்ததனால் விபரீ தத்தைச்
சற்றேறு மிஞ்சாது நாசஞ் செய்தே
யந்தவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மானவகண் டார்த்தத்தி னநுப வத்தைப்
புந்திதனிற் பிரதிபந்த மொன்று மின்றிப்
பூரணமா யெப்போதும் பொருந்த வேண்டும். (22)

பலவிதமாம் வாதனையுந் தூரத் தள்ளிப்
பகர்ந்தபடி யகண்டார்த்த மநுப விப்பா
யிலகுமகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மிவ்விதமா யிசைப்புற்றே மினி யுனக்குத்
திலகமதாந் தத்வமசி வாக்கி யார்த்தந்
திடமாகச் சித்தமிசைத் தெரியச் சொல்வாந்
தலைமையதாய்த் தயங்கியவிவ் வாக்கி யத்திற்
றத்வமசி யெனமூன்று பதங்க ளாமே. (23)

மாயையெனு மூபாதியுறு மீசன் ருனே
மருவியதற் பதமுரைசெய் வாச்சி யார்த்த
மாயதன தவித்தையுறுஞ் சீவன் ருனே
யறைகின்ற துவம்பதமோர் வாச்சி யார்த்த
மேயமதா மூபாதியெலா மிழந்த பின்னை
மேகவிலக் கணமான வத்துத் தானே
தூயபத மிரண்டுக்கு மிலட்சி யார்த்தந்
தொடர்புற்ற வைக்கியமே யசிப தார்த்தம். (24)

சொல்லியவிவ் வைக்கியமா மகண்டார்த் தத்தைச்
சுத்தமதாந் தத்வமசி வாக்கி யத்தாற்
கல்லெனவே திடமாக வறிந்தெப் போதுங்
கலங்காம லகண்டைக ரசமே யாவா
யெல்லையிலா வகண்டவடி வாகு மட்டு
மிதரமுணர் விருத்தியெலாந் தூரத் தள்ளிப்
புல்லுமகண் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியதாற் பூன்ற னுவாய். (25)

தற்பதலட் சியமான பிரம ரூபந்
துவம்பதலட் சியமான நீயே யாவா
யற்பமுமே யிதிலைய மமைவ தில்லை
யகண்டசிவன் றன்னுணை யறைந்த தண்மை
சொற்பமிலா வகண்டபரி பூன்ற மான
சுத்தமதாம் பரப்பிரம நீயே யென்று
செப்பியிடுங் குருபரனே குருவா கின்றேன்
செப்பியவா றறிந்தவனே சிட னுனேன். (26)

சத்தியசிற் சுகனமாம் பிரம நீயே
சகலபரி பூரணமாம் பிரம நீயே
நித்தியநிட் களமான பிரம நீயே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம நீயே
யத்துவித மானபரப் பிரம நீயென்
றையமற வுபதேசஞ் செய்கின் றனனே
யுத்தமனுங் குருவாவன் மற்றே யெல்லா
மொருகாலு முயர்வுற்ற குரவ ராகார். (27)

அலைவுற்ற வறிவான பிரம நீயே
யகண்டைக ரசமான பிரம நீயே
நிலைபெற்ற நிச்சலமாம் பிரம நீயே
நிராவரண மானபரப் பிரம நீயே
சலமற்ற சாந்தபரப் பிரம நீயே
சதாநந்த கனமான பிரம நீயென்
றலைவற்ற வுபதேசஞ் செய்கின் றனனே
யுத்தமனுங் குருவாவன் மற்றே ராகார். (28)

அகிலபரி பூரணமாம் பிரம நானே
யான்மாவுக் கபின்னபரப் பிரம நானே
சகலமுமாய்த் தெரிகின்ற பிரம நானே
சட்பாவ விகாரமிலாப் பிரம நானே
துகளணுவு மருவாத பிரம நானே
துஷ்டமிலாச் சுத்தபரப் பிரம நானென்
றகமருவு விபரீதந் தீரு மட்டு
மநவரத மாதரவாய்ப் பழக வேண்டும். (21)

இந்தவிதம் விசாரித்த விவேகி யெல்லா
மேகபர பாவனையே யிடைவி டாமற்
சந்ததமுஞ் செய்ததனால் விபரீ தத்தைச்
சற்றேனு மிஞ்சாது நாசஞ் செய்தே
யந்தவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மானவகண் டார்த்தத்தி னநுப வத்தைப்
புந்திதனிற் பிரதிபந்த மொன்று மின்றிப்
பூரணமா யெப்போதும் பொருந்த வேண்டும். (22)

பலவிதமாம் வாதனையுந் தூரத் தள்ளிப்
பகர்ந்தபடி யகண்டார்த்த மநுப விப்பா
யிலகுமகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மிவ்விதமா யிசைப்புற்றே மினி யுனக்குத்
திலகமதாந் தத்வமசி வாக்கி யார்த்தந்
திடமாகச் சித்தமிசைத் தெரியச் சொல்வாந்
தலைமையதாய்த் தயங்கியவிவ் வாக்கி யத்திற்
றத்வமசி யெனமூன்று பதங்க ளாமே. (23)

மாயையெனு மூபாதியுறு மீசன் றானே
மருவியதற் பதமுரைசெய் வாச்சி யார்த்த
மாயதன தவித்தையுறுஞ் சீவன் றானே
யறைகின்ற துவம்பதமோர் வாச்சி யார்த்த
மேயமதா மூபாதியெலா மிழந்த பின்னை
ரேகவிலக் கணமான வத்துத் தானே
தூயபத மிரண்டுக்கு மிலட்சி யார்த்தந்
தொடர்புற்ற வைக்கியமே யசிப தார்த்தம். (24)

சொல்லியவிவ் வைக்கியமா மகண்டார்த் தத்தைச்
சுத்தமதாந் தத்வமசி வாக்கி யத்தாற்
கல்லெனவே திடமாக வறிந்தெப் போதுங்
கலங்காம லகண்டைக ரசமே யாவா
யெல்லையிலா வகண்டவடி வாகு மட்டு
மிதாமுணர் விருத்தியெலாந் தூரத் தள்ளிப்
புல்லுமகண் டாகார விருத்தி கன்னைப்
புரையறவே பழகியதாற் பூன்ற னுவாய். (25)

தற்பதலட் சியமான பிரம ரூபந்
துவம்பதலட் சியமான நீயே யாவா
யற்பமுமே யிநிலைய மமைவ தில்லை
யகண்டசிவன் றன்னுணை யறைந்த துண்மை
சொற்பமிலா வகண்டபரி பூன்ற மான
சுத்தமதாம் பரப்பிரம நீயே யென்று
செப்பியிடுங் குருபரனே குருவா கின்றேன்
செப்பியவா றறிந்தவனே சீட னுனென். (26)

சத்தியசிற் சுகனமாம் பிரம நீயே
சகலபரி பூரணமாம் பிரம நீயே
நித்தியநிட் களமான பிரம நீயே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம நீயே
யத்துவித மானபரப் பிரம நீயென்
றையமற வுபதேசஞ் செய்கின் றேனே
யுத்தமனுங் குருவாவன் மற்றே யெல்லா
மொருகாலு முயர்வுற்ற குரவ ராகார். (27)

அலைவுற்ற வறிவான பிரம நீயே
யகண்டைக ரசமான பிரம நீயே
நிலைபெற்ற நிச்சலமாம் பிரம நீயே
நிராவரண மானபரப் பிரம நீயே
சலமற்ற சாந்தபரப் பிரம நீயே
சதாநந்த கனமான பிரம நீயென்
றலைவற்ற வுபதேசஞ் செய்கின் றேனே
யுத்தமனுங் குருவாவன் மற்றே ராகார். (28)

உச்சமதாங் குருவருளு மகண்டார்த் தத்தை
யுவகையுட னுள்ளபடி கேட்ட பின்னர்
நிச்சலமாம் புத்தியினு னிச்ச யித்து
நிருமலமா யகம்பிரம மானே னென்றே
துச்சமிலா வநுபூதி யடைந்த வன்ரூன்
றுகளற்ற சற்சீடன் மற்றே ரெல்லா
மெச்செயலைச் செய்யினுமே சீட ராகா
ரேகபா மறிந்தவனே சீட னுவன். (29)

சருவமகா மந்திரமு மூபதே சிப்போர்
சாமான்ய குரவரெனச் சாற்ற லாகு
மிருமையிலாப் பரப்பிரம நீயே யென்றிங்
கிணையற்ற வுபதேசஞ் செய்கின் ரூனே
பெருமைமிகுஞ் சற்குருவென் றுரைக்க லாகும்
பின்வெகுவாய்ப் பேசுவதாற் பெறும்பே றென்ன
வரியபர நீயென்போ னுசா னுனே
னகம்பிரம மெனவறிவோன் மாணு னுனேன். (30)

ஆகலினற் பரப்பிரம நீயே யென்றிங்
கருள்பவனே யாசிரிய னெனவே யோர்ந்து
சாதகமாஞ் சற்குருவி னுபதே சத்தைச்
சத்தியமா நம்பியதைச் சாதிப் போனே
பேதமிலா வகண்டபரப் பிரம ஞானம்
பெற்றதனற் பவபந்த மனைத்துந் தீர்ந்து
போதகன மானபர வடிவே யாவன்
புகன்றதிலோ ரணுவேனு மைய மில்லை. (31)

அகிலமறை முடிவுக்கு மகண்ட மான
வத்துவித பரப்பிரம சொரூபந் தானே
தகைமைமிகுந் தாற்பரியப் பொருளா மென்றுந்
தற்பிரம நீயென்று முபதே சித்த
மகிமைமிகுஞ் சற்குருவின் வாக்கி யத்தான்
மகத்தான பரம்பொருளைக் கேட்டுள் ளத்தில்
விகலமற வறிவதுவே சிரவ ணங்காண்
வேரொன்றுஞ் சிரவணமே யன்று மைந்தா. (32)

அருள்வடிவா மாசிரிய னருளிச் செய்த
வகிலமகா வாக்கினுடை யகண்டார்த் தத்தை
மருளறவே கேட்டுணர்தல் சிரவ ணங்காண்
மற்றவெலாஞ் சிரவணமே யாகா வென்றுஞ்
சிரவணமே செயலுற்ற பொருளை மீண்டுஞ்
சிரத்தையுடன் யுத்தியினுற் சிந்தை செய்தல்
பிரமையெலாந் தீர்க்கின்ற மனன மாகும்
பேசியவிம் மனனத்தின் யுத்தி சொல்வாம். (33).

திருசியமாய்ச் சிதைகின்ற வுடலு னல்ல
நியங்கியிடும் பௌதிகமாம் பொறிநா னல்ல
பிரிவுபெறு நாசாவா முயிர்நா னல்ல
பிறந்துநசிக் கின்றமன முகளு னல்ல
விருள்வடிவா மஞ்ஞான வுருநா னல்ல
விவையாவு மொருமித்த சிரணு னல்ல
நிருமலமா யாவையுமே நிகழ்த்தா நின்ற
நீக்கமிலாச் சின்மாத்ர சொரூப மேநான். (34).

தூலவுடல் சூக்குமதே கத்தி லில்லை
தூலவுடல் சூக்கவுட லிவ்வி ரண்டு
மாலயமாங் காரணதே கத்தி லில்லை
யவைமூன்றுங் துரியத்தி லிலவே யில்லை
கோலமுறுங் தேகமெலா மிலாமை யாலுங்
கூறுபடாச் சின்மாத்ர சொரூப மொன்றே
காலமொரு மூன்றிலுமே யிருப்பதாலுங்
களங்கமிலாச் சின்மாத்ர சொரூப மேநான். (35).

கனவினிடை நனவில்லை யிவ்வி ரண்டுங்
காரணமாஞ் சுழுத்திதனி லில்லை யந்த
நனவுகளுச் சுழுத்திகளுந் துரியத் தில்லை
நாலுவித வவத்தைகளுஞ் சுத்தத் தில்லை
சொனவிதமா யவத்தையெலா மிலாமை யாலுஞ்
சுத்தமதாஞ் சின்மாத்ர சொரூப மொன்றே
யநவரத மழியாம லிருப்ப தாலு
மத்துவித சின்மாத்ர சொரூப மேநான். (36).

தேகமுதற் சடமான விவைய னைத்துந்
திருசியமாய்க் கடமெனவே நசிப்ப தாலு
மேகபர சின்மாத்ர வடிவா மான்மா
வெப்போதுந் திருக்குருவா யிருப்ப தாலும்
பாகமுறுந் தேகாதி மித்தை யாகும்
பகுப்பற்ற வான்மாவே யுண்மை யாகு
மாகையினற் றேகாதித் திரணு னல்ல
வதுசூத வறிவான வான்மா வேநான். (37)

சத்தியஞா னானந்த சுபாவ மான
சகலவதிட் டானபரப் பிரமத் தின்கட்
சித்திரவ நிருதசட துக்க மான
செகத்தெல்லாங் கற்பிதமாய்த் தோற்ற லாலே
யித்துவித செகத்தெல்லா மாயுங் காலே
யிலகுமதிட் டானபரப் பிரம மேயாஞ்
சுத்திகையிற் கற்பிதமாத் தோற்றும் வெள்ளி
சோதிக்கி லதிட்டான சுத்தி தானே. (38)

இருமையெனத் தோற்றியவிச் சகத்த னைத்து
மிருக்கின்ற திலங்குகின்ற தின்ப மென்ன
மருவியவிவ் வதுபூதி யாயுங் காலே
மன்னுமதிட் டானத்தின் சுபாவ மேயாஞ்
சருவவதிட் டானபரப் பிரமத்துக்கே
சத்தியஞா னானந்தத் தன்மை யன்றி
யொருபொழுது மில்லாத வெறும் பொய்யான
வுலகத்துக் கோதியவித் தன்மை யுண்டோ. (39)

காலமொரு மூன்றிலுமே யிருக்கை யாலுங்
கற்பிதமாம் யாவையுமே விளக்க லாலுஞ்
சாலவுமே யாவையினு மினிமை யாலுஞ்
சத்தியஞா னானந்த சொரூப நானே
யாலயமா மென்னிடையிற் கனவே போல
வகிலமுமே கற்பிதமாய்த் தோற்ற லாலே
கோலமுறத் தோற்றியிடுந் தோற்ற மெல்லாங்
குறைவற்ற வதிட்டான வடிவா நானே. (40)

என்னிடையிற் கற்பிதமாய்க் கனவின் கண்ணே
யிலங்கியவை யாவையுமே யாயுங் காலை
மன்னுமதிட் டானமதா நானே யன்றி
மற்றெவையு மெனக்கயலா யிலாமை யேபோற்
பின்னமிலா வென்னிடையி னனவின் கண்ணே
பிறங்கியவை யாவையுமே யாயுங் காலை
யன்னவதிட் டானமதா நானே யன்றி
யற்பமுமே யெனக்கயலா யிலவே யில்லை. (41)

ஓதியவா றுண்மையினை யோருங் காலை
யுபாதியிலா வெனதுநிச சொரூபத் துக்கும்
பேதமிலாப் பரப்பிரம சொரூபத் துக்கும்
பேசுமிலக் கணமொன்று யிருப்ப தாலே
யாதியிலா வகண்டபர வடிவே நானென்
றறவரத மாய்வதுவே மனன யுத்தி
மாதவனே யிவ்விதமா மயக்கந் தீர
மனனத்தின் சாதகமாம் யுத்தி சொன்னேம். (42)

சந்தனமென் றோதியிடும் விருட்ச மீதே
சங்கையறக் காணென்னு மாத்தன் சொல்லைச்
சுந்தரமாக் கேட்கினுமே யதனை நன்றாச்
சோதித்தே சங்கையெலாந் தீர்ப்ப தேபோ
லந்தமிலாப் பரப்பிரம நீயே யென்றிங்
காசிரிய னருளினுமே யதனை நன்றாப்
புந்தியுறும் யுத்தியினல் விசாரஞ் செய்தே
பொருந்தியதன் சங்கையெலாம் போக்க வேண்டும். (43)

சிரவணமு மனனமுமே செய்த பின்னர்ச்
செறிவுற்ற விபரீத மனைத்துந் தீர
விரவுபக லெப்போது மிடைவி டாம
லினிமையொடு நிதித்தியாசஞ் செய்ய வேண்டும்
பாவியிடும் விசாதீய விருத்தி யின்றிப்
பரம்பரையாஞ் சசாதீய விருத்தி தானே
யிருமையிலா நிதித்தியாச மாகு மித்தா
லெய்தியதன் விபரீதம் யாவுந் தீரும். (44)

செகம்பரஞ ணீதெனவே வேறு வேரூய்ச்
செறிகின்ற விசாதீய விருத்தி யின்றி
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றநவரத மிடையறவே தொடரா நின்ற
தகும்பிரம பாவனையாம் விருத்தி தானே
தடையற்ற சசாதீய விருத்தி யாகு
மிகும்பிரிய மூற்றிதனை யப்யா சிக்கின்
மேவுவிப ரீதமெலா மடைவாய்த் தீரும். (15)

பொருந்நிநிதஞ் செய்கின்ற சிரவ ணத்தாற்
புகலுமசம் பாவனைதான் முன்பு நீங்கி
வருந்நிநிதஞ் செய்கின்ற மனனந் தன்னல்
வாளாவாஞ் சம்சயபா வனையு நீங்கி
விரிந்துநிதஞ் செய்கின்ற நிநித்நியா சத்தால்
விபரீத பாவனையு நீங்கும் போது
நிரந்தரமாம் பரப்பிரம சாட்சாத் கார
நிச்சலமாந் தன்மனநி னிகழு மன்றே. (16)

சத்துருவாம் பிரநிபந்த மொன்று மின்றிச்
சலனமிலாப் பரப்பிரம சுகத்தை மேவி
யித்துவித தினைவணுவு மிலாது நீங்கி
யிருளான வாவரண மனைத்து நீங்கிச்
சித்துருவாம் பரப்பிரம சொரூபத் தின்கட்
சேசல நியாயம்போற் சேர்ந்து நிற்கும்
புத்தியுடை விருத்தியினிற் பதிவிம் பிக்கும்
பூரணசை தன்னியமே சாட்சாத் காரம். (17)

பேசியவிப் புத்தியுடை விருத்தி தானே
பிறங்குமகண் டாகார விருத்தி யாகு
மாசறவிவ் விருத்தியினிற் பதிவிம் பிக்கு
மறிவுருவே யகண்டபர சாட்சாத் கார
நேசமொடிவ் வகண்டபர சாட்சாத் கார
நிட்டையினைப் பெற்றவரே முத்த ராவ
ரீசனுடை யுபயதிருப் பதந்தன் னினை
யியம்பியதி லெள்ளளவு மைய மில்லை. (18)

இன்னவித மூன்றுமகா வாக்கி யத்தி
னேகரச மாகுமகண் டார்த்தஞ் சொன்னேம்
பின்னையுனக் கயன்மான்மா பிரம மென்னும்
பேசுமகா வாக்கினுடைப் பொருளைச் சொல்வா
மன்னியமி லந்தமகா வாக்கி யத்தி
லயமான்மா பிரமமெனப் பதமூன் றாகும்
பன்னுபத மூன்றுக்கு மடைவே யாகப்
பகர்கின்ற வருத்தத்தைப் பரிந்து கேளாய். (49)

சித்திரமா முபாதியுறுஞ் சீவன் றானே
செப்புமயம் பதத்துக்கு வாச்சி யார்த்தம்
வித்தாரமா முபாதியுறு மீசன் றானே
விளம்பியிடு மான்மபத வாச்சி யார்த்தஞ்
சுத்தமதாஞ் சீவபர சொரூபந் தானே
சொல்லியவிவ் வுபயபத லட்சி யார்த்த
மத்திறமா முபயபத லட்சி யத்தி
னைக்கியமே பிரமமெனும் பதத்தி னர்த்தம். (50)

அறைந்தவண மிந்தமகா வாக்கி யத்தா
லக்கியமா மகண்டார்த்த மறிந்து கொண்டு
செறிந்தபர சீவருடை யுபாதி யெல்லாஞ்
செவ்வியதாம் விசாரத்தா னேதி செய்திங்
கறிந்தபடி யகண்டபர வடிவே நானென்
றசுவரத மாதாரவா யப்யா சித்து
மறந்தனின தருவான வகண்டார்த் தத்தை
மறவாம லெப்போது மநுப விப்பாய். (51)

மற்றுமொரு விதமாயிவ் வாக்கி யத்தின்
மதிக்கின்ற பொருளினையு முரைப்பக் கேளாய்
சற்றுமிருண் மருவாத சுவப்ர காச
சைதன்ய வடிவான பிரத்யக் கான்மா
வுற்றவய மான்மாவென் றுரைக்கப் பட்ட
வுபயவித பதத்துக்கு மருத்த மாகு
மூற்றுமிலா விவ்வுலகின் மூல வத்து
மொழிவுற்ற பிரமபதத் தருத்த மாமே. (52)

பாவனமாம் பதங்களுடை லட்சி யத்தின்
பகுப்பற்ற வைக்கியமே வாக்கி யார்த்தஞ்
சீவபர பேதத்துக் கேது வாகச்
செறிகின்ற வபரோட்ச பரோட் சத்வாதி
யாவையுமே யுபாதியிலுற் செற்ந்த தென்றே
யிதனையெலாம் விசாரித்து நேதி செய்திங்
கோவலற மிஞ்சுவதா மகண்டார்த் தத்தை
யுரைத்தபடி யெப்போது மநுப விப்பாய். (53)

இன்னவித மிருக்குமுதல் வேதாந் தத்தி
லிலங்கியவிந் நான்குமகா வாக்கி யத்தின்
பின்னமிலா வைக்கியமா மகண்டார்த் தத்தைப்
பேதமெனும் பிராந்தியெலாந் தீரும் வண்ண
மன்னசிவ னருளியவா றடைவாய்ச் சொன்னே
மறைந்தபடி யழுத்தமுற வப்யா சித்தே
கின்னுருவாய் நீலபெற்ற வகண்டார்த் தத்தை
நிருமலமாய் நீயென்று மநுப விப்பாய். (54)

சுயமதுவாந் தத்வமசி யென்னும் வாக்யம்
சொல்லுமுப தேசமகா வாக்ய மாகு
மியலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்ய
மிலகுமது பூதிமகா வாக்ய மாகு
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்ய
மனனத்தி னப்பியாச வாக்ய மாகு
மயமான்மா பிரமமென வறையும் வாக்ய
மவைக்கெல்லாஞ் சம்மதமாம் வாக்ய மாமே. (55)

ஆதலினுற் றத்வமசி வாக்கி யத்தா
லருளியவா றகண்டார்த்த மறிந்து கொண்டு
பேதமறப் பிரஞ்ஞானம் பிரம மென்று
பேசுமகா வாக்கதனுன் மனனஞ் செய்து
வாதகமி லயமான்மா பிரம மென்னும்
வாக்கதனுற் சரியெனவே சம்ம தித்திங்
கோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுரைத்தவகண் டார்த்தத்தை யநுப விப்பாய். (56)

அனிசமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லகண்டபர பாவனையே யப்யா சித்து
கனிமருவும் பாவனையா லும ரூப
நாட்டமெலா நன்ரு க நாசஞ் செய்து
ஞனிமருவுந் துவிதத்தின் ரெடர்பே யின்றித்
துகளற்ற வகண்டார்த்த மநுப வித்தவ்
வனியமிலா வகண்டார்த்த வடிவே யாவா
யவ்வண்ண மாகுவதே யகண்ட மோட்சம். (57)

தனதுநிச வடிவான வகண்டார்த் தத்தைத்
தவிரவெரரு பொருளுமொரு காலு மில்லை
பினையுளதாய்க் காண்பவெலாஞ் சுத்தப் பொய்யே
பேசியவப் பொய்வடிவு மாயுங் காலை
யனியமிலா வகண்டபரப் பிரமந் தானு
மறைந்ததிலோ ரணுவேனு மைய மில்லை
சொனவகையே யகண்டார்த்த ஞானம் பெற்றுச்
சுத்தபர வடிவாகி முத்த ஞவாய். (58)

சகலமறை முடிவினுமே சார மாகிச்
சாலவுமே சாருவதற் கரிய தான
மிகவுமகா ரகசியமா மிவ்வர்த் தத்தை
மெய்யுணர்வா நந்தவடி வான வீச
னிகழ்வறவே புகன்றவிதம் புகன்ரே மியாமு
மிப்பொருளை யிசைத்தபடி கேட்டு ணர்ந்தோர்
பகைமருவும் பவபந்த மனைத்துந் தீர்ந்து
பகுப்பற்ற பரப்பிரம வடிவே யாவர். (59)

அகிலசகந் நாயகனும் பரேசன் றன்னை
யநவரத மாதரவா யாரா தித்து
மிகவுமருள் பெற்றவரே மனதின் சுத்தி
மேவினராய் விளம்புமகா வாக்கி யத்தின்
றகுபொருளைத் தடையறவே யநுப வித்துத்
தன்மயமே யாவரென நிதாக னுக்கு
நிகழ்வுறவே ரிபுமுனிவன் கருணை யாலே
நிகிலமகா வாக்குகளின் பொருளுஞ் சொன்னன். (60)

வேறு.

வத்துநிர்ணய சாதகமாமகா வாக்கியங்களி னுற்பரசீவரின்
சுத்தமாயுள வைக்கியமறிந்தவர் சூழுமிப்பவ லேசுமிலாமலே
நித்தியாநந்த வத்துவதாகவே நிற்பரென்றுர மாவிங்குப்பேசுதல்
சத்தியாநந்தத் தாண்டவமாடுநஞ் சர்ம்பமூர்த்தியின் பூரணரூபமே.

இருபத்தெட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம் 28-க்கு திருவிருத்தம் 1292.

இருபத்தொன்பதாவது
சன்மாத்திர சொரூப நிதித்தியாச முரைக்கும் அத்தியாயம்.

ஒருகாலு மொருபொருளு முண்மை யில்லை
யுண்மையெனக் காண்பதெலாஞ் சுத்தப் பொய்யே
தருக்காதி மானமூட ஞுயுங் காலைத்
தயங்கியவப் பொய்யுமதிட் டான மேயா
மருக்காதி சோதிக்குஞ் சோதி யான
வதிட்டான பரப்பிரம மொன்றே யுண்மை
யிருக்காதி மறைமுடிக ளனைத்துஞ் சொல்லு
மியல்பிதுவே யென்பதனை யிங்குச் சொல்வாம். (1)

இப்பொருளைக் கேட்டுணர்வோ ருடனே முத்தி
யிசைந்திடுவ ரிதிலிறையு மைய மில்லை
சிற்பொருளிற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
செகத்துக்குச் சுதசத்தை யென்று மில்லை
யற்பமிலா வதிட்டான சத்தை தானே
யாரோப சத்தையெனத் தோற்ற லாகுங்
கற்பிதமார் சத்தையதை யாயுங் காலைக்
களங்கமிலா வதிட்டான சத்தை யேயாம். (2)

அத்துவித பரத்துக்கே சுபாவ சத்தை
யழியாம லிருப்பதனு லதுவே சத்தா
மித்துவித சகத்துக்குச் சுபாவ சத்தை
யிலாமையினு லிவையாவு மித்தை யேயா
மித்தையெனக் காண்பதுவு மாயுங் காலை
மேவுமதிட் டானபரப் பிரமந் தானு
நித்தியமாய் நிகழ்க்கியவப் பிரமந் தானே
நிருமலமா நின்னுடைய நிசசொ ரூபம். (3)

கற்பிதமாஞ் சர்ப்பத்தின் சத்தை கண்ணைக்
களங்கமறச் சோதிக்கி லந்தச் சத்தை
சர்ப்பமதி னதிட்டான வடிவாம் ரச்சு
சத்தையலாற் சர்ப்பத்தின் சத்தை யன்றே
யப்படியே யாயுங்காற் சகத்தின் சத்தை
யதிட்டானப் பிரமத்தின் சத்தை யேயா
மெப்பொழுதுஞ் சத்தாமப் பிரமந் தானே
யிருமையிலா நின்னுடைய நிசசொ ரூபம். (4)

நின்னிடையிற் கற்பிதமாய்க் கனவின் கண்ணே
நிகழ்வுற்ற சகத்துக்கு நினது சத்தை
கண்ணையலாற் சோதிக்கிற் சுபாவ சத்தை
தானணுவு மிலாததுபோ னனவின் கண்ணே
யுன்னிடையிற் கற்பிதமா யொளிரா நின்ற
வுலகுக்குஞ் சுகசத்தை யிலாமை யாலே
யன்னியமில் சத்தான பிரமந் தானே
யவ்விதமா நின்னுடைய நிசசொ ரூபம். (5)

தேகமெனப் பொறிகளென வுயிர்க ளென்னத்
தியங்கியிடு மனதென்னப் புத்தி யென்ன
வாகுமகங் காரமெனச் சித்த மென்ன
வதன்மூலாஞ் ஞானமென விவை யனைத்தும்
பாகமுற வுளவென்னும் பலவாஞ் சத்தி
பார்த்திடிலோர் பரப்பிரம சத்தை யேயா
மேகபர சத்தாமப் பிரமந் தானே
யெப்போது நின்னுடைய நிசசொ ரூபம். (6)

பூதமெனப் பௌதிகமாம் பேத மென்னப்
புலன்களெனப் புசிக்கின்ற போத்தா வென்ன
வேதமென மிருதியென நூல்க ளென்ன
விதியென்ன நிடேதமென விதிப்போ னென்னப்
பேதமுறும் போகமென மோட்ச மென்னப்
பிறங்கியவிப் பேதமெலாஞ் சுத்தப் பொய்யே
யாதியிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
யதுதானே நின்னுடைய நிசசொ ரூபம். (7)

பலவிதமாஞ் சாதியென நீதி யென்னப்
பகுப்புற்ற வாச்சிரம பேத மென்னச்
சலனமுறுங் கருமமெனக் கர்த்தா வென்னச்
சாதிக்குஞ் பலனென்னச் சதசத் தென்னக்
கலனமுறுங் காட்சியெனக் காண்போ னென்னக்
கருதியவிப் பேதமெலாஞ் சுத்தப் பொய்யே
யிலவுபெரூப் பரப்பிரம மொன்றே யுண்மை
யதுதானே நின்னுடைய நிசசொ ரூபம். (8)

பெருமைமிகுந் தலமென்னத் தீர்த்த மென்னப்
பிறங்கியிடுந் தெய்வமெனச் சேவை யென்ன
மருவியிடுந் தருமமெனப் பாவ மென்ன
மற்றுண்ணுஞ் சுவர்க்கமென நாக மென்ன
விருமையென வொருமையென நாநா வென்ன
விதமுதலாம் பேதமெலாஞ் சுத்தப் பொய்யே
யருவமதாம் பரப்பிரம மொன்றே யுண்மை
யதுதானே நின்னுடைய நிசசொ ரூபம். (9)

பாகமுற வகத்துணரு மகம் விருத்தி
பலவிதமாய்ப் புறத்துணரு மிதம் விருத்தி
தேகமுத லெனென்னுந் துவித விர்த்தி
திகழ்சாட்சி நானென்னுஞ் சாட்சி விர்த்தி
யேகபர நானென்னு மகண்ட விர்த்தி
யிவ்விதமாம் விருத்தியெலாஞ் சுத்தப் பொய்யே
யாகுமொரு விருத்தியுமில் பரமே யுண்மை
யதுதானே நின்னுடைய நிசசொ ரூபம். (10)

அமலமிலா வஞ்ஞான மனதின் றன்ம
மான்மாவின் விஞ்ஞான மனதின் றன்ம
மமர்மருவும் பவபந்த மனதின் றன்ம
மாசற்ற மோட்சநிலை மனதின் றன்ம
மமர்மனதே யிலாமையினு லவற்றின் றன்ம
மாகினவஞ் ஞானமுத லிருப்ப தெங்கே
சமமதுவாம் பரப்பிரம மொன்றே யுண்மை
சந்தகமு மதுவேனின் னிசசொ ரூபம். (11)

சாந்திமுதற் சாதனமு மனதின் றன்மஞ்
சாதிக்குஞ் சிரவணமு மனதின் றன்ம
மாந்தரமா மனனமுமே மனதின் றன்ம
மங்குற்ற நியாஞதி மனதின் றன்ம
மேந்தியிடு மனதருவே யிலாமை யாலே
யிதன்றன்ம மெனுமிவைக ளிருப்ப தெங்கே
சாந்தமதாம் பரப்பிரம மொன்றே யுண்மை
சந்ததமு மதுவேநின் னிசசொ ரூபம். (12)

கானலிடைக் கற்பிதமாம் பேய்த்தேர் போலுங்
கனவினிடைக் கற்பிதமா முலகே போலு
ஞானகன மானபரப் பிரமத் தின்கண்
ஞாலமெலாங் கற்பிதமாய்த் தோற்ற லாலே
யானவிவை யதிட்டானப் பிரம மல்லா
லன்னியமாய்த் தோற்றுவது சுத்தப் பொய்யே
யீனமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
யெப்போது மதுவேநின் னிசசொ ரூபம். (13)

உலகும்பொய் யுடலும்பொய் யுயிரும் பொய்யே
யுடலினிடை யுற்றபல கரணம் பொய்யே
மலமும்பொய் மயலும்பொய் மனதும் பொய்யே
மனோமயமாய்த் தோற்றியவை யாவும் பொய்யே
நிலமும்பொய் சலமும்பொய் யனலும் பொய்யே
நிலைமருவாக் காற்றும்பொய் விண்ணும் பொய்யே
சலனமுறுப் பரப்பிரம மொன்றே யுண்மை
சந்ததமு மதுவேநின் னிசசொ ரூபம். (14)

மனதுமுத லொருநான்கு காண மாக
மருவியிடு மத்யான்ம வடிவும் பொய்யே
பினையவையின் விடயமெனுஞ் சங்கற் பாதி
பேதமதா மநிபூத வடிவும் பொய்யே
யினியவையி னதிட்டான தெய்வ மென்னு
மிந்துமுத லதிதெய்வ வடிவும் பொய்யே
யனியமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை
யநவரத மதுவேநின் னிசசொ ரூபம். (15)

அறிவுபெறுஞ் சோத்திரமே முதலாய்த் தோன்று
மைம்பொறியா மத்யான்ம வடிவும் பொய்யே
யறியுமதன் விடயமெனுஞ் சத்த மாதி
யைம்புலனு மநிபூத வடிவும் பொய்யே
செறியுமத னநிட்டான தெய்வ மென்னுங்
நிக்குமுத லநிதெய்வ வடிவும் பொய்யே
சிறிநிலதாம் பரப்பிரம மொன்றே யுண்மை
சின்மயமா மதுவேநின் னிசசொ ரூபம். (16)

கருமமுறும் வாக்குமுதற் கருவி யைந்தாய்க்
காண்கின்ற வத்யான்ம வடிவும் பொய்யே
மருவுமதன் விடயமெனுஃ வசன மாதி
வகுப்பதுவா மநிபூத வடிவும் பொய்யே
கருதுமத னநிட்டான தெய்வ மென்னுங்
கனன்முதலா மநிதெய்வ வடிவும் பொய்யே
நிருமலமாம் பரப்பிரம மொன்றே யுண்மை
நிரந்தரமா மதுவேநின் னிசசொ ரூபம். (17)

யன்னியவா றத்யான்ம மநிபூ தங்கள்
பகுப்புற்ற வநிதெய்வ மனைத்தும் பொய்யே
மன்னியநிற் காநித்த விவேக மாதி
மாசற்ற சாதனமுஞ் சுத்தப் பொய்யே
தன்னியலு மாசிரியன் சகவா சாதி
தகமைமிகுஞ் சற்சரித மனைத்தும் பொய்யே
யன்னியமில் பரப்பிரம மொன்றே யுண்மை
யகண்டமதா மதுவேநின் னிசசொ ரூபம். (18)

முத்தியுற வேண்டுமென விச்சை செய்தன்
மோட்சத்தின் பொருட்டே தன்னுயிர் தரித்தல்
பத்தியுட னன்முக விசாரஞ் செய்தல்
பாங்காகப் பரப்பிரம ஞான மெய்த
லித்துவித சகத்தையெலா மறம றத்த
லித்தனையும் பரமார்த்த தசையிற் பொய்யே
யத்துவித பரப்பிரம மொன்றே யுண்மை
யதுவேநீ யணுவுமிநி லைய மில்லை. (19)

வீதலுறுச் சாதனமோர் நான்கு முற்றோன்
விசாரத்தி லதிகாரி யாரே னென்னல்
பேதமுறுச் சீவபர வைக்யந் தானே
பேசியிடு நூலுக்கு விடய மென்னல்
போதமறை முடிவிற்கும் பிரமத் நிற்கும்
போதகபோத் நியபாவ பந்த மென்ன
லேதமுறு மஞ்ஞான மனைத்து நீங்கி
யெப்போதுஞ் சுகிப்பதுவே பலமா மென்னல். (20)

ஈதுமுதற் பலவிதமாய்ப் பகுத்தங் கங்கே
யியம்பியதா மெப்பொருளுஞ் சுத்தப் பொய்யே
பேதமுறு மிவற்றையெலாம் பகுத்தங் கங்கே
பேசியிடுஞ் சொலவுகளுஞ் சுத்தப் பொய்யே
மாதவனே யப்பொய்யு மாயுங் காலே
மன்னுமநிட் டானபரப் பிரமந் தானு
மாதலினு லகண்டபரப் பிரமந் தானே
யநவாத மகமென்று நிநித்யா சிப்பாய். (21)

மிகமிகவுஞ் சத்தத்தை விரும்பிச் சொல்லன்
மிகவாக்கின் றுக்கத்துக் கேது வாகும்
புகல்பலவாஞ் சத்தத்தைப் பரிந்து கேட்டல்
பொருந்துமனே மயக்கத்துக் கேது வாகும்
வெகுவிதமா மர்த்தத்தை விசாரஞ் செய்தல்
விவிதமனே துக்கத்துக் கேது வாகுந்
தகுமகனே யாதலினு லனைத்துந் தள்ளித்
தற்பிரமந் தானெனவே நிநித்யா சிப்பாய். (22)

உத்தமமாம் புத்நியுறும் புருடர் முன்பிங்
குற்றுணரத் தகுபொருளை யோர்ந்து ணர்ந்து
சத்நியமா மப்பொருளின் சாட்சாத் காரஞ்
சாரநிநித் யாசத்தைச் செய்ய வேண்டு
மெத்தமே நிநித்யாச விரோத மாக
மேவியநூல் விசாரணையாற் காலந் தள்ள
லித்தனையும் புத்நியுளோர்க் குரிய தன்றென்
றிவ்விதமாய்ச் சுருதிமுடி வியம்பு தன்றே. (23)

புரையறவே யுணர்பொருளே யுணர்ந்த பின்னர்ப்
பூரணமா மப்பொருளின் சாட்சாத் கார
மருவியிட நிதித்யாசஞ் செய்வ தல்லான்
மற்றிறையு நூல்வழியே செல்ல வொண்ணு
தெரிபொருளே நூல்வழியா லறிந்த பின்னர்த்
தெரிவித்த நூன்மொழியே மீண்டுஞ் சொல்ல
வுரைதருகன் வாக்குக்குத் துக்க மென்றே
யுபநிடத வசனமெலா முரைத்த வன்றே. (24)

ஆகலினுற் றுனியத்தை யடைந்த பின்ன
ரங்குற்ற பலாலத்தை யெறித லேபோ
லேகமற வுணர்பொருளே யுணர்ந்த பின்ன
ரிங்குற்ற நூலெலா மெறிதல் வேண்டும்
வாதகமா நூலெலா மெறிந்த பின்னர்
வருந்தியுமே யநவரத மிடைவி டாமற்
போதமுறச் சாதகமா நிதித்யா சத்தைப்
புரியுடனே பூரணமாய்ப் பழகல் வேண்டும். (25)

மெய்யுணர்வா நந்தபரப் பிரமத் தின்கண்
மேவியதன் கனவெனவே சகத்த னைத்தும்
பொய்யுருவாய்த் தோற்றுமென்று மவையு மாயிற்
பூரணமாம் பிரமமென்றுந் தன்து மாணு
வுய்யவெகு விதமான நூலின் சொல்லே
யுபதேச காலத்தி லுரைப்ப தல்லான்
மையணுவு மின்றியதன் னநுப வத்தின்
மருவியவிந் நூல்வசன மிறையு மில்லை. (26)

புத்திரனே யாதலினு லுபதே சத்திற்
புகல்கின்ற நூன்மொழிக ளனைத்துந் தள்ளிச்
சுத்தியசிற் சுககனமாம் பரமே யாகச்
சலியாம லிருப்பதுவே யறவு நன்று
மத்திறமே யநவரத மிருப் பதற்கிங்
கசைவுற்ற தன்மனது வசமு றுதே
னித்தியமாம் பரப்பிரம நானே யென்று
நிரந்தரமாய் நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (27)

நிரந்தரமாய் நிதித்யாசஞ் செய்வ தற்கு
நிலையற்ற தன்மனது வசமு ருதேற்
றிரிந்தலையு மனதுவச மாகு மட்டுங்
நிடமாக விசாரணையே செய்ய வேண்டும்
பொருந்தியநூல் விசாரணையாற் சித்த மெள்ளப்
புரையற்றுப் பூரணமாம் பரத்தி லோயு
முரந்தருநூல் விசாரணையே யொழிய வேறே
ருபாயமுமே சித்தசெயந் தருவ தில்லை. (28)

சித்தசெய மாத்திரமே சீவன் முத்தி
சித்தசெய மாத்திரமே விதேக முத்தி
நித்தியமாய் நிதித்யாசஞ் செய்வோ ருக்கே
நிகழ்த்தியவச் சித்தசெய நேரே பேருஞ்
சித்தசெய மல்லாம லநந்தோ பாயஞ்
செய்யினுமே முத்தியிலை யாத லாலே
புத்திரவச் சித்தசெயம் பொருந்த வேண்டிப்
பூரணமா யெப்போது நிதித்யா சிப்பாய். (29)

சின்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
சீவனென்றும் பிரமமென்றும் பேத மில்லை
சன்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
சராசரமாய்த் தோற்றியிடும் பேத மில்லை
தன்மயமாம் பரப்பிரம சொரூப மேநான்
ஜனக்கயலாய்த் தோற்றியிடும் பேத மில்லை
யென்மயமே யெப்போது மெல்லா மென்றும்
யான்பிரமந் தானென்று நிதித்யா சிப்பாய். (30)

களங்கமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
காரியகா ரணமென்னும் பேத மில்லை
விளங்கியிடும் பரப்பிரம சொரூப மேநான்
வேத்தியவே தனமென்னும் பேத மில்லை
யுளங்கலவாப் பரப்பிரம சொரூப மேநா
னிருகாலு மோரணுவும் பேத மில்லை
விளங்கியிடும் பேதமெலாம் பரமே யென்றும்
விமலபரம் யானென்று நிதித்யா சிப்பாய். (31)

சகலமுமே யகண்டபரப் பிரம மென்றுஞ்
சந்ததமு மப்பிரம நீயே யென்றும்
விகலமற வேதமுடி விளம்ப லாலும்
விளம்பியவா சற்குருவு மருள்வ தாலு
நிகரிலது பூநிமிருஞ் சங்க ராதி
நிச்சயமு மிவ்விதமே நிற்ப தாலு
மகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மப்பிரம மகமென்று நிநித்யா சிப்பாய். (32)

ஞானகன மானபரப் பிரம மல்லான்
ஞாலமுத லெப்பொருளு மென்று மில்லை
யானசக சீவபர மீனத்து மென்று
மகண்டைக ரசமான பிரம மென்றே
யீனமற வெமதீச னெமக் குரைத்த
விப்பொருளி லிறையளவு மைய மில்லை
யானதனு லகிலமுமே பிரம மென்று
மப்பிரம மகமென்று நிநித்யா சிப்பாய். (33)

விகலமுறு வேதாந்த வாக்கி யத்தால்
விளம்பியதே யுண்மையென விசுவா சித்துச்
சகலமுணர் பரமசிவ னுரைத்த வண்ணஞ்
சாற்றியவென் வாக்கியமும் விசுவா சித்து
மிகவுரமாய்ப் பழகியிடு நின்னு கத்தான்
மேவியநின் சந்தேக மீனத்து நீக்கி
யிகழ்வுதரும் விபரீத மீனத்துந் தீர
விசைத்தவண மெப்போது நிநித்யா சிப்பாய். (34)

நினக்கயல்போற் றோற்றியவிந் நாம ரூப
நிகிலமுமே நீயலது வேறே யன்று
தனக்கயல்போற் கனவிலுணர் நாம ரூபந்
தானலது சோதிக்கில் வேறே யுண்டோ
வெனக்கயல்போற் காண்பதெலாம் யானே யென்றும்
யான்றானே யேகபரப் பிரம மென்று
மனக்கவலை யாவையுமே தீரு மட்டு
மறவாம லெப்போது நிநித்யா சிப்பாய். (35)

அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றநவரத மாதரவாய்ப் பழகப் பட்ட
தகும்பிரம பாவனையா நித்தியா சத்தாற்
றங்குமலே விகற்பமெலாந் தவிர்ந்த பின்னை
சகம்பிரம வாக்கியத்தி னிலட்சி யார்த்த
வதுபூரி யடைந்தந்த மயமே யாகிச்
சகம்பரநா னென்றறிவு நினையா வண்ணஞ்
சந்ததமுஞ் சலியாமற் சாந்த ஞவாய். (36)

சந்ததமுஞ் சலியாமற் சாந்த மாகிச்
சன்மயமாய் நிற்பதுவே சாட்சாத் கார
மைந்தவதே மாசற்ற சீவன் முத்தி
மற்றதுவே மகத்தான விதேக முத்தி
யிந்தநிலை யெமதீச னருளுள் ளோர்க்கே
யிசைத்தவண மிருமையற வெளிதா யெய்துஞ்
சுந்தாமாஞ் சுருதிமுடி வனைத்தி னுலுஞ்
சொல்லிமுடி வுற்றபொருட் சுருக்க மீதே. (37)

சுருக்கமுறப் பரமசிவ னெமக் குரைத்த
சுருதிமுடிப் பொருளிதனைச் சுருங்கச் சொன்னே
மிருக்குமுதன் மறைமுடியின் சுருக்க மான
விப்பொருளே யிருமையறக் கேட்டு ணர்ந்தோ
ரருக்கன்முதற் சோதிக்குஞ் சோதி யான
வகண்டைக ரசவடிவாம் பரமே யாவர்
நெருக்கமுற வெங்குமொரு நிறைவாய் நின்ற
நிமலபர சிவனுணை நிச்ச யந்தான். (38)

நிச்சயமா மிப்பொருளே யொருகா லேனு
நிருமலமா மன்புடனே நின்று கேட்போர்
துச்சமகா பாவங்கள் செய்தோ ரேனுந்
தொடர்புற்ற பாவமெலா முடனே தீர்ப்ப
ருச்சமதாஞ் சாதனசம் பத்தி யுள்ளோ
ருருக்கமுட னிப்பொருளைக் கேட்பா ராகி
லெச்சனன பாதகமு மெரித்தி மைப்பி
லிதயமுடிச் சிறந்தோராய் முத்த ராவர். (39)

இப்பொருளைக் கேட்டுணர்வோ ருடனே முத்தி
யினைந்திடுவ ரெள்ளளவு மின்னன் மேவா
ரற்பமிலா வானந்த மறுப விப்ப
ரானவாத மங்களமே யடைந்தோ ராவர்
கீர்ப்பயம்மா நிலைபெறுவர் பவத்தின் மீளார்
நிச்சலமாம் பரப்பிரம வடிவே யாவர்
செப்பியது சத்தியமே சங்கை யில்லை
சிவனுணை சத்தியமே சத்தி யந்தான். (40)

துகளிலதிட் டானபர சிவத்தின் கண்ணே
தோன்றியிருந் தடங்கியவிச் சகத்த னைத்தும்
புகலுமதிட் டானபர சிவமே யென்றும்
பூரணமா மச்சிவமே நாமே யென்றும்
பகரலுறு மறைமுடியா லகண்டைக் யத்தைப்
பாவித்துப் பரோட்சமிலா தநுபவித் தோர்க்
கிகழ்வுதருஞ் சோகமிலை மோக மில்லை
யிப்பேத தரிசனமோ ரிறையு மில்லை. (41)

இவ்விதமா யாவருமே யுய்யும் வண்ண
மேகபரி பூரணமாம் வத்து தானே
திவ்வியமங் களவடிவா யெழுந்தெ மக்குத்
திகழ்வுறவே தெரிவித்த வேதார்த் தத்தைச்
செவ்வியதா யிதயத்தி லநுப வித்துச்
சிறுமையெலாந் தீரும்வண மூரைத்தோ மென்றே
யெவ்வமுறு ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கிருமையிலாப் பரம்பொருளே யிசைத்தா னன்றே. (42)

வேறு.

சகலகற்பித மூஞ்சுதசித்தமாஞ் சத்தையின்மையி னுல்லெறும்பொய்
யெனு, மஃ்துமாயி லகண்டபரம்பொரு ளாமெனுமது நாமெனுமே
கமாய், நிகழுஞானஞ் செறிந்தவர்முத்தரே நிச்சயம்மெனவிங்கு நிகழ்
துத, நிகழுமாநந்தத் தாண்டவமாடுநந் தேவதேவ னகண்டசொரூ
பமே. (43)

இருபத்தொன்பதாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 29-க்கு திருவிருத்தம்-1335.

மூப்பதாவது

பரப்பிரம நிச்சயத்தாற் பரமாநந்த முரைக்கும் அத்தியாயம்.

சத்தியசிற் சுககனமாம் பிரம மாத்ரஞ்
சந்ததமுஞ் சலியாம லிருப்ப தென்று
மித்துவித சகத்தணுவு மில்லை யென்று
மிவையாவு மேகபரப் பிரம மென்று
நித்தியஞா னநந்த சுபாவ னன
நிகிலசகன் னுயகன்முன் னுரைத்த வண்ண
மத்துவித நிர்ணயமே மறித்துஞ் சொல்வா
மகண்டபர போதமுர மாவ தற்கே. (1)

சத்தியஞா னநந்த சொரூப மல்லாற்
சகத்தெவையு மொருகாலுஞ் சனிக்க வில்லை
நித்தியஞா னனந்த சொரூப மல்லா
னீக்கவொணாப் பவமென்னு நினைவு மில்லை
யெத்துவிதத் தோற்றமுமே பிரம மென்னு
மிருமையிலா வப்பிரம நானே யென்னு
மத்துவித நிச்சயமே யடைந்த வற்ரு
லகண்டபர மாநந்த மநுப விப்பாய். (2)

சதாநந்த மாத்ரபர சொரூப மேநான்
சந்ததமுஞ் சாந்தபர சொரூப மேநான்
சிதாநந்த மாத்ரபர சொரூப மேநான்
சிற்கனமாய் நிறைந்தபர சொரூப மேநா
னுதாரபரி பூரணமாஞ் சொரூப நானென்
றுமாக வத்துவித நிச்ச யத்தை
நிதாகவரை நிமிடமுநீ விடாது செய்து
நிரந்தர வானந்த மநுப விப்பாய். (3)

ஞானகன மானபரப் பிரமத் தின்கண்
ஞாலமுதற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மீனமிலவ் வநிட்டானப் பிரம மென்னு
மெப்போது மப்பிரம நானே யென்னு
மூனமிலா வத்துவித நிச்ச யத்தை
யுரமாக வநவரத மப்யா சித்தே
யானமலை விகற்பமெலா மழித்தெப் போது
மகண்டபர மாநந்த மநுப விப்பாய். (4)

நாசமிலா திருப்பதனு னானே சதத்து
நாடியெலா மறிவதனு னானே சிற்று
நேசமதாய் நிற்பதனு னானே யின்ப
நிகழ்த்தியவா சத்தியசிற் சுகபா நானே
பேசியவிவ் விலக்கணமாம் பிரம மென்றே
பேதமிலா வகண்டபர நிச்ச யத்தை
யாசறவே யதிதிடமா யடைந்த வற்ரு
லகண்டபர மாநந்த மதுப விப்பாய். (5)

இருக்கின்ற திலங்குகின்ற தின்ப மென்று
மியம்பியிடு நாமமொடு ரூப மென்றுங்
கருக்கமிடு மிவ்வமுச பஞ்ச கத்திற்
றயங்கியமூன் மூன்றமுசம் பாதத்தின் ரூபஞ்
சுருக்கமுறு மிரண்டமுசஞ் சகத்தின் ரூபஞ்
சொற்பொருளா மிவ்வமுச மிரண்டுங் தள்ளி
நெருக்கமுறுஞ் சத்தியசிற் சுகமாய் மீந்து
நின்றபர நானெனவே நிச்ச யிப்பாய். (6)

அதிட்டான சத்தியசிற் சுகமா மம்ச
மகிலபரி பூரணமா யொன்ரூய் நிற்கு
மிதிற்ரூனே கற்பிதமா நாம ரூப
மிரண்டெனவே பரிச்சின்ன மாகி நிற்கு
மதித்தாயும் விவேகத்தாற் கற்பி தத்தை
மன்னுமதிட் டானமென வுணர்ந்தெப் போது
நிதித்யாசஞ் செய்துமனே விகற்பந் தீர்ந்து
நிரதிசய வாநந்த மதுப விப்பாய். (7)

சிதாகாய மானபரப் பிரமத் தின்கட்
செகசீவ பரங்களெலாம் பொய்யாய்த் தோன்று
நிதாகவிதை விவேகத்தா னேநி செய்து
நிருமலமாய் நின்றபரப் பிரமந் தானே
சதாவுமக மகமெனவே நிதித்யா சித்துச்
சலமனதின் விகற்பமெலாந் தவிர்த் தெப்போது
மதாகியிருக் கின்றநிலை யடைந்த வற்ரு
லகண்டபா மாநந்த மதுப விப்பாய். (8)

தூலமுதன் மூன்றுவித சரீர மில்லை
தொடர்னனவு முதலியமூன் றவத்தை யில்லை
மூலமெனு முக்குணமாம் பகுதி யில்லை
மொழியுமத னபிமானி யாரு மில்லை
காலமொடு தேசமில்லை வத்து வில்லை
கற்பிதமே யில்லையென நேதி பண்ணி
யாலயமாய் நின்றபரப் பிரம நீயா
யகண்டபர மாநந்த மதுப விப்பாய். (9)

தேகமுதற் றிரளெவையும் பிரம ரூபந்
திருசியமாய்த் தெரிவதெலாம் பிரம ரூபம்
யாகமுறும் பதார்த்தமெலாம் பிரம ரூபம்
பரசீவ சகங்களெல்லாம் பிரம ரூப
மாருபொரு ளகிலமுமே பிரம ரூப
மன்னியமா யறிவதெலாம் பிரம மென்னு
மேகபர நிச்சயமே யிசைந் திவற்ரு
லிணையற்ற வாநந்த மதுப விப்பாய். (10)

சந்ததமுஞ் சிவமான பிரம நானே
சகலபரி பூரணமாம் பிரம நானே
சிந்தைமுதற் கதீதபரப் பிரம நானே
சின்மாத்ர வடிவான பிரம நானே
தொந்தமுறுத் துரியபரப் பிரம நானே
துகளற்ற தூயபரப் பிரம நானென்
றந்தமிலா வகண்டபர நிச்ச யத்தை
யடைந்ததனு லநவரதஞ் சுகித் திருப்பாய். (11)

கூறுபடா வகண்டபரப் பிரம நானே
கூடத்த வான்மாவாம் பிரம நானே
மாறுபடா மகத்தான பிரம நானே
மங்களமங் களமான பிரம நானே
வேறுபடா விமலபரப் பிரம நானே
வேதாந்த வேத்தியமாம் பிரம நானென்
றீறுபடா வேகபர நிச்ச யத்தை
யிசைந்ததனு லெப்போதுஞ் சுகித் திருப்பாய். (12)

சத்தியசிற் சுககனமாம் பிரம நானே
சாலவுப சாந்தபரப் பிரம நானே
நித்தியநிட் களமான பிரம நானே
நிரதிசயா நந்தபரப் பிரம நானே
யித்துவித மிறையுமிலாப் பிரம நானே
யேகபரி பூரணமாம் பிரம நானென்
றத்துவித மரனபர நிச்சயத்தை
யடைந்ததனு லநவரதஞ் சுகித் திருப்பாய். (13)

பரமசிவ மானபரப் பிரம நானே
பரிச்சேத ரகிதபரப் பிரம நானே
நிரவயவ மானபரப் பிரம நானே
நிட்கிரிய சுபாவபரப் பிரம நானே
சருவமுமாய்த் திகழுபரப் பிரம நானே
சகலவிலட் சணமான பிரம நானென்
றிருமையிலா வத்துவித நிச்ச யத்தை
யிசைந்ததனு லெப்போதுஞ் சுகித் திருப்பாய். (14)

பராபரமாம் பரப்பிரம சொரூப நானே
பரஞ்சோதி யானபர சொரூப நானே
நிராமயமாம் பரப்பிரம சொரூப நானே
நிருமலமாய் நிறைந்தபர சொரூப நானே
புராதனமாம் பரப்பிரம சொரூப நானே
பூரணமாம் பரப்பிரம சொரூப நானென்
றிராப்பகலு மேகபர நிச்ச யத்தை
யிடையறவே யிசைந்ததனுற் சுகித் திருப்பாய். (15)

சருவபரி பூரணமாம் பிரம நானே
சருவான்மா வானபரப் பிரம நானே
பாவுசிதா காயபரப் பிரம நானே
பரமான்மா வானபரப் பிரம நானே
சுருதிமுதற் கதீதபரப் பிரம நானே
சுயஞ்சோதி யானபரப் பிரம நானென்
றிருமையிலா வத்துவித நிச்ச யத்தை
யெப்போது மிசைந்ததனுற் சுகித் திருப்பாய். (16)

சத்தியமாம் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சதாசிவமாம் பரப்பிரமந் தானே யெல்லா
நித்தியமாம் பரப்பிரமந் தானே யெல்லா
நிரஞ்சனமாம் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சுத்தமதாம் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சுககனமாம் பரப்பிரமந் தானே யெல்லா
மத்துவித பரப்பிரம மதுநா னென்றே
யதிடமா முறுதியினு லாநந் திப்பாய். (17)

சலனமிலாப் பரப்பிரமந் தானே யெல்லாஞ்
சாசுவத பரப்பிரமந் தானே யெல்லா
மலமருவாப் பரப்பிரமந் தானே யெல்லா
மாயையிலாப் பரப்பிரமந் தானே யெல்லாங்
கலனமுறுப் பரப்பிரமந் தானே யெல்லாங்
களங்கமிலாப் பரப்பிரமந் தானே யெல்லா
மலிவுபெறுப் பரப்பிரம மதுநா னென்றே
யதிடமா முறுதியினு லாநந் திப்பாய். (18)

சொற்பொருளாய்த் தோற்றுவதும் பிரம ரூபஞ்
சுபாசுபமாய்த் தோற்றுவதும் பிரம ரூப
மெப்பொருளா யிலங்குவதும் பிரம ரூப
மில்லையுள தென்பதெலாம் பிரம ரூபங்
கற்பிதமாய்க் காண்பதெலாம் பிரம ரூபங்
காரியகா ரணமெவையும் பிரம ரூப
மற்பமிலாப் பரப்பிரம மதுநா னென்றே
யதிடமா முறுதியினு லாநந் திப்பாய். (19)

ஏதமுறு மவித்தையுமே பிரம ரூப
மிலங்கியிடும் வித்தையுமே பிரம ரூபம்
பேதமுறுஞ் சீவனுமே பிரம ரூபம்
பிறங்கியிடு மீசனுமே பிரம ரூபம்
பூதலமே முதலுலகும் பிரம ரூபம்
புலமுறவே காண்பதெலாம் பிரம ரூப
மாதியிலாப் பரப்பிரம மதுநா னென்றே
யதிடமா முறுதியினு லாநந் திப்பாய். (20)

துவிதமென்றுந் துவிதமொடத் துவித மென்றுந்
தூயபர மாத்துவித மதமீ தென்று
மிவிதமென்று மவிதமென்று மிலதுண் டென்று
விவைமுதலா யங்கங்கே யியம்ப லுற்ற
விவிதமத மிவையுரைசெய் வாதம் யாவும்
விசாரிக்கில் விமலபரப் பிரமந் தானுங்
குவிகவுருப் பரப்பிரம மதுநா னென்று
கோதறவே பாவித்துக் குறைவு தீர்வாய். (21)

சித்துளதேற் சகமுளதாஞ் சித்தில் லாதேற்
செகமுமிலை யாதலினுற் சித்தின் கண்ணே
யித்துவித சகத்தெவையுங் கற்பி தக்கா
னிதனையெலா மன்னுவய வெதிரே கத்தாற்
புத்தியுற வாய்ந்துடனே ப்ரஹிலா பித்துப்
பூரணமாய் நின்றபர சித்துத் தானே
சித்தமக மகமெனவே நிசித்யா சித்து
நிச்சலமாய் நீயென்று நிலைத்து நிற்பாய். (22)

நிதாகவெகு விதமாக நிகழ்த்தி யென்ன
நிகிலமுமே நிமலசிதா காயந் தானுஞ்
சிதாகாய மதுபிரம வடிவ மாகுஞ்
சிதாகாய மதுவேநின் வடிவ மாகு
முதாரமுறு புத்தியுரு வகைத்த வண்ண
முணர்வதெலாஞ் சிதாகாய சொரூப மென்றுஞ்
சதாவுமதே யகமென்று நிசித்யா சித்துச்
சற்றேனுஞ் சலியாது சாந்த மவாய். (23)

நிகிலவதிட் டானபர சித்துத் தானே
நிருமலமாய் நிறைவுற்ற வாகா யம்போ
லகிலபரி பூரணமா யமல மாகி
யத்யந்த சூட்சுமமா யசங்க மாகுந்
தகமைசெறிந் திருக்கின்ற தன்மை யாலே
தயங்குசிதா காயமெனச் சாற்ற லாகு
மகிமைபெருஞ் சிதாகாய மதுநா னென்றே
மறவாமற் பாவித்து மயக்கந் தீர்வாய். (24)

சன்மாத்ர மானபரப் பிரம மல்லாற்
சராசரமாய்ச் சனிக்கின்ற சகமே யில்லை
சின்மாத்ர மானபரப் பிரம மல்லாற்
சித்தமுதற் றிருசியமாஞ் சகமே யில்லை
கன்மாத்ர மானபரப் பிரம மல்லா
ஞாவாய் நாடியிடுஞ் சகமே யில்லை
சின்மாத்ர மானபரப் பிரமந் தானே
தானெனவே பாவித்துத் தளர்வு தீர்வாய். (25)

சின்மாத்ர மானபரப் பிரமந் தானே
செகசீவ பரங்களெனத் தெரிவ தாலே
யெண்மாத்ர மாகினுமிச் சகசீ வாதி
யிதரமல விவையாவுஞ் சின்மாத் ரந்தான்
பொன்மாத்ர வடிவாலை கடக மாதி
பொன்னேயலாற் சற்றுமய லாவ துண்டோ
மண்மாத்ர மானகட சராவ மாதி
மண்ணேயலான் மற்றனுவு மனிய மாமோ. (26)

அகண்டபரி பூரணமாம் பிரமந் தானே
யறிவற்றோர்க் குலகெனவே தோற்றினுலும்
புகன்றபல விதமான வுலகந் தானே
பூரணமா மறிஞருக்குப் பரமாய்த் தோற்றுந்
திகழ்ந்தெதிரே யிருக்கின்ற விரச்சுத் தானே
தெரிவற்றோர்க் கரவெனவே தோற்றி னலு
நிகழ்ந்தாலே தெரிவுற்றோர்க் கிரச்சு வாக
நிகழ்கின்ற நீதியினைக் கண்டோ மன்றே. (27)

படருற்ற நாரூனை படம்போ லாகப்
பரவியநிற் குறுக்குநெடுக் காவதே போற்
றொடர்புற்ற பரந்தானே சகம்போ லாகத்
தோன்றியநிற் குறுக்குநெடுக் காகநிற்கு
மடருற்ற விவேகத்தா லறைந்த வண்ண
மாய்ந்தெவையு மகண்டபரப் பிரம மென்றுந்
தடமுற்ற பரப்பிரம மதுநா னென்றுந்
தடையறவே பாவித்துத் தளர்வு தீர்வாய். (28)

சத்தியஞா னநந்தப் பிரமந் தானே
சலனமிலாச் சாசுவத வத்து வாகுஞ்
சத்தியஞா னநந்தப் பிரமந் தானே
சட்பாவ விகாரமிலா வத்து வாகுஞ்
சத்தியஞா னநந்தப் பிரமந் தானே
சகசீவ பரங்களிலா வத்து வாகுஞ்
சத்தியஞா னநந்தப் பிரமந் தானே
சகலபரி பூரணமாம் வத்து வாமே. (29)

சத்தியஞா னநந்தப் பிரம மல்லாற்
சகசீவ பரங்களெனச் சிறிது மில்லை
புத்திரவிச் சகசீவர் முதலா மியாவும்
பூரணமாய்ப் பொருந்தியவப் பிரமந் தானு
மத்துவித பரப்பிரம மதுவே நீயா
மறைந்தபொருள் சத்தியமே யாத லாலே
நித்தமெலாம் பிரமமென்னு மதுநா னென்னு
நிச்சலமா முணர்வுற்று நிறைந்து நிற்பாய். (30)

நிச்சலமா முணர்வுற்று நிறைந்து நிற்கு
நிலையதுவே நிகரற்ற மோட்ச மாகுந்
துச்சமிலா வந்தநிலை தொடர்ந்தோர் மீண்டுந்
துன்பமுறார் துகண்மருவார் சுகமே சார்வ
ரெச்செயலுஞ் செய்துமுடிந் தவரே யாவ
ரெப்போது மேகபர வடிவாய் நிற்ப
ருச்சபர வடிவான வன்னை ருக்கிவ்
வூனபவ விவகார மென்று மில்லை. (31)

ஆதலினு னதவரத மறைந்த வண்ண
மகண்டபர நிச்சயமே யப்யா சித்துப்
பேதமனை விகற்பமெலாம் பெயர்த்தெப் போதும்
பிரிவற்ற வகண்டபர போதம் பெற்றவ்
வேதமிலா வேகபர வடிவே யாக
விருப்பதுவா மோட்சநிலை யடைந் மைந்தா
வேதமுடிப் பொருளேனைக் கிந்த வண்ணம்
விமலசிவன் விளம்பியவா விளங்கச் சொன்னேம். (32)

பரமான பரமசிவ பத்தி யோடே
பரவியவிப் பரம்பொருளைப் பரிந்து கேட்போன்
றிரமான வகண்டபர ஞானஞ் சேர்வன்
றினையளவுந் துக்கமுறான் சுகமே லாவ
னுரமான வகண்டபர வடிவாய் நிற்ப
னுரைத்தநிலோ ரையமிலை யுண்மை யென்றே
வரமான ரிபுமுனிவ னிதாக னுக்கு
வரையற்ற வத்துவினை வகுத்துச் சொன்னான். (33)

வேறு.

சச்சிதாநந்த வத்துவையன்றியே சற்றுமொன்றுஞ் சனித்திடவே யிலை, யிச்சகம்முதல் யாவையுமென்றுமே யேகபூரண வத்துவதா மிக, வுச்சமாமது நாமெனு ஞானமிங் குற்றவர் பவமுத்தரெனச் சொல, னிச்சலாநந்தத் தாண்டவமாடுநற் சிகரிலீச னகண்ட சொரூப மே. (34)

முப்பகாவது அத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம் 30-க்கு திருவிருத்தம் 1369.

மூப்பத்தொன்றாவது

அறுபத்துநான்கு திட்டாந்தத்தோ டத்துவிதவுண்மை யுரைக்கும் அத்தியாயம்.

பாவனமாம் பரப்பிரம சாட்சாத் காரம்
பழுதறவே பற்றுவதற் கேது வாகி
யாவலுடன் கேட்பமிக வினிய தான
வத்யந்த வற்புதமாந் நிட்டாந் தத்தோ
டோவலிலா வகண்டபர நிச்ச யத்தை
யூனமற விவ்வோத்தி லுனக் குரைப்பா
மேவரிய விதனுடைய சிரவ ணத்தால்
மிகவிரைவின் மெய்ம்முத்தி மேவ லாமே. (1)

சத்தியமே சத்தியமே சகமே யில்லை
சங்கற்ப விகற்பங்கள் சிறிது மில்லை
நித்தியவா நந்தமயப் பிரம மொன்றே
நிச்சலமா யெப்போது நிலைத்த வுண்மை
யத்துவிதப் பிரமமதே யசங்க மாகு
மனுமயமா மட்சரமா மகண்ட மாகு
மித்துவித விவகார மிறைபு மில்லை
யிங்குற்ற காரியமோ ரணுவு மில்லை. (2)

பிரிவுபெரும் பரப்பிரம சொரூப மல்லாற்
பிரபஞ்ச பாவனையே யென்று மில்லை
தெரிவருவாம் பரப்பிரம சொரூப மல்லாற்
றிருசியமாஞ் சகத்தோற்றஞ் சிறிது மில்லை
சருவபரி பூரணமாம் பிரம மல்லாற்
சகமுதலோர் பொருளுமொரு காலு மில்லை
பரியவிவ் வர்த்தமுனைக் குரமாம் வண்ணம்
பலவிதமாந் திட்டாந்தம் பகரு வாமால். (3)

மலடிமகன் வசனத்தா லியார்க்கும் பிதி
மன்னிடுமேன் மாயைமுதற் சகத்துஞ் சத்தாஞ்
சலனமிகும் பரியின்கோ டுண்மை யாகிச்
சமர்தருமேற் சராசரமாஞ் சகத்துஞ் சத்தா
மலைமனுடன் கோடதுவா மம்பு கொண்டிங்
காரேனு மழிவுற்றுற் சகத்துஞ் சத்தாங்
கலனமற விசாரிக்கிற் சகத்தே யில்லை
களங்கமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை. (4)

கானலினீ ரருந்தியதாற் றிருத்தி யார்க்குங்
கலந்திடுமேற் ககனமுதற் சகத்துஞ் சத்தாம்
வானிலுறுங் கந்தருவ நகர முண்மை
வடிவாமேல் வசனிக்குஞ் சகத்துஞ் சத்தா
மீனமுறுக் ககனத்தி னீல ரூப
மிறவாம லிருந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மூனமற விசாரிக்கிற் சகத்தே யில்லை
யுணர்வுருவாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (5)

நிகழ்சுத்தி ரசதத்தாற் பணிக ளார்க்கு
நிசமாகச் சித்திரத்தாற் சகத்துஞ் சத்தாங்
திகழிரச்சு சர்ப்பத்தாற் செனங்க ளாருந்
தீண்டினராய் மரிப்புற்றுற் சகத்துஞ் சத்தாங்
ககனத்தின் குசுமத்தா லெங்கு மாருங்
கந்தசுகம் புசிப்புற்றுற் சகத்துஞ் சத்தா
மகமுற்று விசாரிக்கிற் சகத்தே யில்லை
யறிவுருவாய் நிறைந்தபர மொன்றே யுண்மை. (6)

சுடர்விட்டுச் சொலிக்குமன லாச்சி யத்தாற்
சொலியாம லடங்கிடுமேற் சகத்துஞ் சத்காங்
கடமுற்ற விருட்டிரடாஞ் சித்ர தீபங்
கன்னெளியாற் றவிர்ந்திடுமேற் சகத்துஞ் சத்கா
மிடமுற்ற கருத்திரடாம் வித்தே யன்றி
யிங்குண்டாய் வளர்ந்திடுமேற் சகத்துஞ் சத்காங்
திடமுற்று விசாரிக்கிற் சகத்தே யில்லை
தெரியுருவாய் நிறைந்தபர மொன்றே யுண்மை. (7)

அரம்பையதன் கட்டையினுற் பாக சித்தி
யார்க்கேனு மமைந்திடுமேற் சகத்துஞ் சத்காங்
குரம்பையபி மானமிகு மூட ருக்குக்
குறைவில்சுகங் கூடிடுமேற் சகத்துஞ் சத்கா
ரம்பியுள வறிவுடையோர் மனத்தி னோர்மை
நீசர்க்குத் தெரிந்திடுமேற் சகத்துஞ் சத்கா
முரம்பெறவே விசாரிக்கிற் சகத்தே யில்லை
யோருருவாய் நிறைந்தபர மொன்றே யுண்மை. (8)

இன்றுபெறுங் கன்னிகையாற் பாக சித்தி
யிசைந்திடுமே லித்துவித சகத்துஞ் சத்கா
மன்றியுமக் கன்னிகையோ டமளி யுற்றிங்
காரேனுஞ் சுகமுற்றுற் சகத்துஞ் சத்கா
கின்றபுவிப் புழுநியினு னிறைந்த சிந்து
நீர்முழுதுஞ் சோஷித்தாற் சகத்துஞ் சத்கா
நன்றுறவே விசாரிக்கிற் சகத்தே யில்லை
நமதுருவாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (9)

ஆதித்தன் சந்நிதியி லந்த கார
மழியாம லிருந்திடுமேற் சகத்துஞ் சத்தாஞ்
சோதித்த விரதத்தா லிருப்பின் ரூபஞ்
சொன்னத்வ மருவாதேற் சகத்துஞ் சத்கா
மாகத்தின் பூருவமே மரித்தோன் மீண்டு
மகிழ்வுடனே வருவானேற் சகத்துஞ் சத்காங்
கோதற்று விசாரிக்கிற் சகத்தே யில்லை
குணரீத பரப்பிரம மொன்றே யுண்மை. (10)

விந்தியவெற் படவியினற் பாய சான்னம்
வேண்டியவா கிடைத்திடுமேற் சகத்துஞ் சத்தா
முந்திமிகக் கறந்துறுபான் மீண்டு மாவின்
முலையின்மிசை யேறிடுமேற் சகத்துஞ் சத்தாங்
தந்திரமாய்க் கடைந்துறுமோர் மீண்டும் பாலாந்
தன்மையினைச் சார்ந்திடுமேற் சகத்துஞ் சத்தாம்
புந்தியுற விசாரிக்கிற் சகத்தே யில்லை
பூரணமாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (11)

மேருவினைத் தாமரையி னூலா லாரு
மிகவெளிதா யசைப்பாரேற் சகத்துஞ் சத்தாம்
பூரணமாம் வாரிதியைத் தாங்கத் தாலே
புணர்ந்தெவனும் பிணிப்பானேற் சகத்துஞ் சத்தாங்
கூர்மவுரோ மங்களினுன் மத்த மாவைக்
கொணர்ந்தெவனும் பிணிப்பானேற் சகத்துஞ் சத்தாங்
தீரமுற விசாரிக்கிற் சகத்தே யில்லை
திரிகுணமுங் கடந்தபர மொன்றே யுண்மை. (12)

உசுவாச வாயுவினு லோங்குஞ் சைல
முலைந்துசலித் திடுமாகிற் சகத்துஞ் சத்தாம்
விசையாக மேருவந்தோர் பதுமந் தன்னின்
விதையிலிருந் திடுமாகிற் சகத்துஞ் சத்தா
நசியாது சொலிக்கின்ற வன்னி யின்க
ணற்பதுமம் வளர்ந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மசையாது விசாரிக்கிற் சகத்தே யில்லை
யகண்டவடி- வானபர மொன்றே யுண்மை. (13)

சிறுமசகஞ் சிங்கத்தைச் சங்க ரித்துச்
சிக்கெனவே செயித்திடுமேற் சகத்துஞ் சத்தா
முறுவண்டு மேருவினைக் கனியே போல
வுண்டுடனே யுமிழ்ந்திடுமேற் சகத்துஞ் சத்தாம்
பெறுமணுவி னுதரத்தி லநந்த கோடி-
பிரமாண்ட மிருந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மறுவறவே விசாரிக்கிற் சகத்தே யில்லை
மகத்தான பரப்பிரம மொன்றே யுண்மை. (14)

கனவினிடைக் கண்டபொரு ணனவின் கண்ணே
கலங்காம லிருந்திடுமேற் சகத்துஞ் சத்தா
நனவிலைவி லோடியிடு நதியின் வேக
நலியாது நின்றிடுமேற் சகத்துஞ் சத்தாஞ்
சென்னமுதற் குருடர்க்கு மணியி னேர்மை
செவ்வியதாத் தெரிந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மணியமற விசாரிக்கிற் சகத்தே யில்லை
யகண்டவடி வானபர மொன்றே யுண்மை. (15)

பொரித்தவிதை விருட்சத்தி னுற்பத் திக்குப்
புகலேது வாயிடுமேற் சகத்துஞ் சத்தா
முருத்தரியா முயற்கோடான் மதமா தங்க
முயிர்நீங்கி மரித்திடுமேற் சகத்துஞ் சத்தாந்
தரித்திரர்கள் செல்வத்தோர் செல்வ வின்பந்
தனைத்தெரிந்து புசிப்பாரேற் சகத்துஞ் சத்தாந்
திருத்தமுற விசாரிக்கிற் சகத்தே யில்லை
நியக்கமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை. (16)

சுந்தரமா மன்னத்தி னடைபோற் காகஞ்
சுத்தநடை யுறுமாகிற் சுகத்துஞ் சத்தாம்
விந்தியமா வெற்பிலுறுஞ் சிங்கத் தோடு
வேசரிதான் சமர்செயுமேற் சகத்துஞ் சத்தா
மிந்துவினன் சம்பந்த மன்றி ராகு
வெங்கேனுந் தெரிவுற்றுற் சகத்துஞ் சத்தாஞ்
சிந்தையுற விசாரிக்கிற் சகத்தே யில்லை
சின்மயமாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (17)

மலடிக்குக் கருவுண்டா யதற்கு நாமம்
வடிவமெலா மருவிடுமேற் சகத்துஞ் சத்தாம்
பெலமற்ற நபுஞ்சகனுக் குரிய மைந்தன்
பிறந்துவளர்ந் நிடுவானேற் சகத்துஞ் சத்தாஞ்
சலமுற்ற வன்ஞெனுக் குரிய மாதர்
சம்போக சுகமுளதேற் சகத்துஞ் சத்தா
கிலபெற்று விசாரிக்கிற் சகத்தே யில்லை
கிருமலமாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (18)

சுனகத்தின் விந்துவிலுற் சிங்க முண்டாய்ச்
சூரத்வஞ் செறிந்திடுமேற் சகத்துஞ் சத்தாம்
பினுமத்தாற் சாகரநீர் பருகப் பட்டுப்
பெருக்கறவே சோஷித்தாற் சகத்துஞ் சத்தா
நனியுற்ற தாருசிலை மயமாம் பாவை
நல்லன்னந் துய்த்திடுமேற் சகத்துஞ் சத்தா
மனமுற்று விசாரிக்கிற் சகத்தே யில்லை
மாசற்ற பரப்பிரம மொன்றே யுண்மை. (19)

விருதாவா யாகாயஞ் சனங்க ளின்பால்
வீழ்ந்திடுமேல் வெறிதான சகத்துஞ் சத்தாம்
பெரிதான வாகாயம் புவியில் வீழ்ந்து
பினுமுயாக் கிளம்பிடுமேற் சகத்துஞ் சத்தாம்
விரிவான விண்மலரைச் சூட்டி யாரும்
வேசிவசஞ் செய்வாரேற் சகத்துஞ் சத்தாம்
பரிவாக விசாரிக்கிற் சகத்தே யில்லை
பங்கமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை. (20)

சூனியமாங் ககனத்தைக் கயிற்ரு லாருஞ்
சுருக்கமுறப் பிணிப்பாரேற் சகத்துஞ் சத்தா
மேனியுறுக் ககனத்தின் பதிவிம் பந்தான்
மெய்யாக விருந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மீனமுறு மேடத்தின் வயிற்றி லாஜை
யிருந்துபிறந் திடுமாகிற் சகத்துஞ் சத்தா
ஞானமுற விசாரிக்கிற் சகத்தே யில்லை
ஞானகன மானபா மொன்றே யுண்மை. (21)

மிகவுமகா சேறுற்ற புவியி லாரு
மேஷிடங் திடுவாரேற் சகத்துஞ் சத்தா
நிகழ்வுமிகு முகுரத்திற் பதிவிம் பந்தா
னிலைபெற்று நின்றிடுமேற் சகத்துஞ் சத்தாந்
திகழ்கனவி லிடும்பஞ்சு சாம்ப ராகாத்
திறமையினைச் செறிந்திடுமேற் சகத்துஞ் சத்தா
மிகழ்வறவே விசாரிக்கிற் சகத்தே யில்லை
யிருமையிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை. (22)

மடமைமிகு மூடர்க்கு மகத்தாம் வத்து
மகிமைதெரிந் திடுமாகிற் சகத்துஞ் சத்தாம்
படருமகண் டாகார விருத்தி யல்லாற்
பரப்பிரமந் திகழ்ந்திடுமேற் சகத்துஞ் சத்தாந்
தடமருவு மகண்டபர ஞான மல்லாற்
றகுமோட்சந் தானுளதேற் சகத்துஞ் சத்தாந்
தொடர்புறவே விசாரிக்கிற் சகத்தே யில்லை
துவிதமிலாப் பரப்பிரம மொன்றே யுண்மை. (23)

அத்துவிதப் பிரமமலாற் சுருதிக் கெல்லா
மயலெவையும் பொருளாமேற் சகத்துஞ் சத்தாம்
வத்துவுணர் ஞானமலான் மற்றொன் றுலே
வன்பவநோய் மாய்ந்திடுமேற் சகத்துஞ் சத்தா
முத்தமமா மியோகமுணர் வொன்று மின்றி
யுளமலையா திருந்திடுமேற் சகத்துஞ் சத்தாஞ்
சத்தியமாய் விசாக்கிற் சகத்தே யில்லை
சன்மயமாம் பரப்பிரம மொன்றே யுண்மை. (24)

பரமசிவன் கருணையலாற் போக மோட்சம்
பற்றினவ ருளராகிற் சகத்துஞ் சத்தா
திருமலமாய் விசாரிக்கிற் சகத்தே யில்லை
நித்தியமா யுளதுபரப் பிரம மொன்றே
யருள்வடிவாம் பரமசிவ னறைந்த வண்ண
மறுபத்து நான்குவித நிட்டாந் தத்தா
லிருமையிலாப் பரமொன்றே யுண்மை யென்னு
மிவ்விதமாம் பொருளாகினைக் கிசைத்தோ மன்றே. (25)

இன்னவிதம் பரமார்த்த விசாரஞ் செய்யி
லிலகுசக சீவபர மெவையு மில்லை
பின்னமெனக் காண்பதெலாஞ் சோதிக் குங்காற்
பிரமமலா தோரணுவும் பிறிதே யாகா
துன்னுபட ரூபத்தைச் சோதிக் குங்காற்
றொடர்புற்ற தந்துவலால் வேறங் குண்டோ
மன்னுகட ரூபத்தைச் சோதிக் குங்கான்
மண்ணையலான் மற்றெவையு மதிக்தோ ருண்டோ.(26)

ஆதலினு லனுவேனுந் துவித மில்லை
யத்துவிதந் தானுமிலை யயலே யில்லை
போதகன மானபரப் பிரமமென்றே
பூரணமா யெப்போதும் பொருந்தும் வத்து
பேதமிலா வப்பிரம நானே யென்று
பிரிவற்ற வகண்டபர ஞானம் பெற்று
வாதகமாம் பவபந்த மனைத்துந் தீர்த்து
வரமான வகண்டபர வடிவே யாவாய். (27)

சங்கற்ப காரியமாஞ் சகத்தின் மூற்றஞ்
சற்றேனுஞ் சார்ந்திடுமே லுடனே யித்தைப்
பங்கற்ற பரப்பிரம மெல்லா மென்றும்
பரமதுவே நானென்றும் பாவித் துத்தீர்
மங்குற்ற மனதென்னு மகத்தாம் வ்யாதி
மாறுது தொடர்ந்திடுமே லுடனே யித்தை
யங்குற்ற வகண்டபரத் தியான மென்னு
மதிசயமா மவுடதமுண் டதஞ்செய் மைந்தா. (28)

மாயையினுற் கற்பிதமாம் பேத மேது
மனதினிடைத் தோன்றியிடி னுடனே யத்தைத்
தூயபரப் பிரமத்தின் றியானத் தாலே
துகளறவே துடைத்துநிச சொரூப மாவா
யாயதன தவித்தையினுற் றேக மாதி
யகமெனவே தோன்றியிடி னுடனே யத்தை
நேயபர சின்மயமா மான்மத் யான
நிட்டையினு னீக்கிநிச சொரூப மாவாய். (29)

கொடியவகங் காரமெனுஞ் சத்து ருத்தான்
குறைவதரக் கூடியிடி னுடனே யத்தைச்
சடதியகம் பிரமமெனுந் தியான வாளாற்
சங்காரஞ் செய்துநிச சுபாவ மாவாய்
கடியமனக் கிரந்திதொடர்ந் திடுமே யாகிற்
கலங்காது தைரியமா யுடனே யித்தை
நெடியபர பாவனையாஞ் சக்க ரத்தா
னிமிடத்தி லறுத்துநிச நிலையி னிற்பாய். (30)

தேகமுத னுனென்னு மத்யா சந்தான்
நீராது தொடர்ந்திடுமே லுடனே யித்தை
யேகபரி பூரணமாம் பாரா னென்னு
மிவ்விதமா முறுதியினு லிறக்கச் செய்வா
யாகுமனுன் மாவென்னும் பிசாசந் தோன்றி
லமலான்மத் நியானமெனு மந்திரத்தால்
வேகமுடன் பிசாசமதை யணுகா தோட்டி
விமலான்ம வடிவாக விளங்கி நிற்பாய். (31)

பலவிதமாஞ் சந்தேக மெனும் பிசாசு
பயமுறவே தோன்றினுநீ பயப் படாம
லலவில்பா பாவனையா மந்திரத்தா
லுயமெனும் பிசாசதனை யகஞ்செய் வாயா
னிலைமருவாத் துவிதமெனும் பிசாசு மீண்டு
நிகழினுமே நீயணுவும் வெருளா வண்ணம்
விலையமிலா வத்துவிதத் நியான மாகும்
விபூதியினுல் வென்றதனை விபுவாய் நிற்பாய். (32)

இந்தவித மநந்தவித யுத்தி யோடிங்
கியம்பிய விவ்வேகபர நிச்ச யத்தைப்
புந்தியுறத் தினந்தோறும் பொருந்திக் கேட்போர்
பூரணமா மப்பிரம ஞானம் பெற்றப்
பந்தமெலாந் தீர்ந்தோராய்ப் பரமே யாவர்
பகர்ந்ததிலோ ரையமிலை பரமார்த் தந்தான்
சந்ததமுஞ் சகலமுணர் சாம்ப மூர்த்தி
சாற்றியநிற் சற்றேனுஞ் சங்கை யுண்டோ. (33)

அகிலமுமே யாக்கியளித் தழித்துந் தானே
ரணுவேணு மாறுபடா தசங்க மாகிச்
சகலபரி பூரணமாய்ச் சாந்த மான
சத்தியஞா னநந்த பரசி வத்தை
யகமெனவிங் கறிந்தவரே யகண்டா நந்த
மடைந்தப் பரமசிவ மாவ ரென்றே
நிகழ்வுறவே ரிபுமுனிவ னிதாக னுக்கு
நிகரற்ற பரம்பொருளா நிகழ்த்தி னனே. (34)

வேறு.

சச்சிதாநந்த மான பரம் பொருள் சந்ததஞ்சலி யாதுள தாமெனு, மிச்
சகம்முத லியாவையு மென்றுமே யில்லையேயெனு மேகபரபொரு
ணிச்சயந்தனை நீள்பலயுத்தியா னிகிலரும்பெற விங்குகிகழ்த்துதி;
லுச்சவாநந்தத் தாண்டவமாடுநம் மும்பர்கோன்ற னகண்டசொரூ
பமே. (35)

முப்பத்தொன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 25-க்கு நிருவிருத்தம் 1404.

மூ ப் ப த் தி ர ண் ட ா வ து

பரவத்து பாவனையாற் பரசொரூபத்திதியுரைக்கும் அத்தியாயம்.

ஒருபொருளும் பிரமத்துக் கயலின் றென்று
முள்ளதெலா மகண்டபரப் பிரம மென்று
மிருமையிலா வப்பிரம நாமே யென்று
மிவ்விதமா மகண்டார்த்த நிர்ண யத்தை
நிருமலமா நிதாகநினக் கின்னஞ் சொல்வா
நிகழ்த்தியிடு நிர்ணயமீ தூடனே மோட்சந்
தருவதுவாஞ் சுகநல்குந் தளர்வைத் தீர்க்குந்
தற்பிரமந் தானுகத் தனிக்க வைக்கும். (1)

அன்னியமா யிதுவெனவோ ரணுவு மில்லை
யான்மாவே யநவரத மழியா வுண்மை
பின்னமிலா வான்மாவே பிரம ரூபம்
பிரமமதே பிறங்கியவிவ் வான்ம ரூபம்
பன்னியவா றுன்மாவுக் கபின்ன மான
பரப்பிரம நானெனவே நிச்ச யித்திவ்
வின்னன்மிகும் பவபாசம் யாவு நீக்கி
யெப்போது மேகபரப் பிரம மாவாய். (2)

சருவமெனக் காண்பதெலாம் விசாரிக் குங்காற்
சத்தியஞா னநந்தப் பிரம மல்லா
லொருசிறிதும் வேறில்லை யுளதெப் போது
மோங்குசிதா காயபரப் பிரம மொன்றே
யிருமையிலாப் பிரமமதே நின்சொ ரூப
மிதிலிறையு மையமிலை யாத லாலே
சருவமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சங்கையறப் பாவித்துச் சாந்த னுவாய். (3)

சத்தியஞா னந்தப் பிரம நானே
சகலபரி பூரணமாம் பிரம நானே
நித்தியமங் களமான பிரம நானே
நிருமலமாய் நிறைந்தபரப் பிரம நானே
யத்தமுரு வகண்டபரப் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானே
சுத்தமதாம் பரப்பிரம நானே யென்று
சுகமுறவே பாவித்துச் சோர்வு தீர்வாய். (4)

ஆனந்த கனமான பிரம நானே
யஞ்ஞான லேசமிலாப் பிரம நானே
தானந்த முருதபரப் பிரம நானே
தத்துவமாய்த் தனித்தபரப் பிரம நானே
வானந்தன் னிகரான பிரம நானே
வரம்பற்ற வத்துவதாம் பிரம நானே
மோனந்தன் னிலையான பரநா னென்றே
மோகமறப் பாவித்து முத்த னுவாய். (5)

சந்ததமுஞ் சாந்தபரப் பிரம நானே
சகலவிலட் சணமான பிரம நானே
சிந்தைமுதற் செறியாத பிரம நானே
சின்மாத்ர வடிவான பிரம நானே
தொந்தமுருத் தூரியபரப் பிரம நானே
தூரியத்து மதீதபரப் பிரம நானே
பந்தமுருப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (6)

சங்கற்பஞ் சற்றுமிலாப் பிரம நானே
சந்தோட விதனமிலாப் பிரம நானே
மங்குற்ற மாயையிலாப் பிரம நானே
மகதத்வ மாதியிலாப் பிரம நானே
யிங்குற்ற தெவையுமிலாப் பிரம நானே
யேகபரி பூரணமாம் பிரம நானே
பங்கற்ற பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (7)

சருவமுமாய் நிறைந்தபரப் பிரம நானே
சமமாகச் செறிந்தபரப் பிரம நானே
கருமமுதற் கலவாத பிரம நானே
காலமுதற் கெட்டாத பிரம நானே
நிரிபுடியே தொன்றுமிலாப் பிரம நானே
நிடசத்தா மாத்திரமாம் பிரம நானே
பரசிவமாம் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (8)

சாசுவத மானபரப் பிரம நானே
சமூசார லேசமிலாப் பிரம நானே
மாசணுவு மருவாத பிரம நானே
மகத்துக்கு மகத்தான பிரம நானே
யாசிலகண் டாகாரப் பிரம நானே
யாதிமுடி வற்றபரப் பிரம நானே
பாசமுறுப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (9)

புராதனமாய்ப் பொருந்துபரப் பிரம நானே
பூரணமாய்ச் செறிந்தபரப் பிரம நானே
நிராமயமாய் நிறைந்தபரப் பிரம நானே
நிர்க்குணமாய் நின்றபரப் பிரம நானே
யிராப்பகலே தொன்றுமிலாப் பிரம நானே
யிருளொளிமற் றெவையுமிலாப் பிரம நானே
பராற்பரமாம் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (10)

கற்பிதமா முபாதியிலாப் பிரம நானே
களங்கமிலா வுணர்வான பிரம நானே
கற்பதலட் சியமான பிரம நானே
துவம்பதலட் சியமான பிரம நானே
யற்பமிலா வைக்கியமாம் பிரம நானே
யகண்டார்த்த மானபரப் பிரம நானே
பற்பலவாம் பேதமிலாப் பரநா னென்றே
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (11)

சன்மயமாய் நின்றபரப் பிரம நானே
சதாநந்த மானபரப் பிரம நானே
சின்மயமாய் நின்றபரப் பிரம நானே
சிதாகாய மானபரப் பிரம நானே
தன்மயமாய் நின்றபரப் பிரம நானே
தனக்கயலோ ரணுவுமிலாப் பிரம நானே
பன்மையுருப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (12)

சங்கமிலா வசங்கபரப் பிரம நானே
சலனமிலா வசலபரப் பிரம நானே
மங்கலுரு நிமலபரப் பிரம நானே
மாறுபடா நித்தபரப் பிரம நானே
யெங்குமுள வேகபரப் பிரம நானே
யெவையுமிலா துள்ளபரப் பிரம நானே
பங்கமுருப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (13)

சுத்தமுதற் கெட்டாத பிரம நானே
சகமெவையுங் கிட்டாத பிரம நானே
மத்தமன மருவாத பிரம நானே
மாசற்ற தெளிவான பிரம நானே
சுத்தமனத் தெளிவான பிரம நானே
சுயஞ்சோதி யொளியான பிரம நானே
பத்தமலாப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (14)

நிராவரண மானபரப் பிரம நானே
நித்தபரி சுத்தபரப் பிரம நானே
சராசரமோ ரணுவுமிலாப் பிரம நானே
சகசிவ பாங்களிலாப் பிரம நானே
காதகமில் சமமான பிரம நானே
தான்றுணைத் தனித்தபரப் பிரம நானே
பராபரமாம் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (15)

நிரந்தரமாய் பாவனையே செய்யா விட்டா
னிலையற்ற மனத்தினுடை விகற்பந் தீரா
நிரந்தலையு மனத்தினுடை விகற்பந் தானே
தீராத பவமெனவே தோன்று தன்றே
பரிந்துநிதம் பாவித்து மனோவி கற்பம்
பற்றறவே தீராதோர்க் கெவ்வி தத்தாற்
பொருந்தியதன் சொரூபநிலை புரையொன் றின்றிப்
பூரணமாய்ப் புந்தியினிற் பொருந்துஞ் சொல்லாய். (16)

தன்சொரூப நிலைமருவா தலைவோ ருக்குத்
தளர்வுதரும் பவபந்தந் தவிர்வ தெங்ங
னென்செயினுஞ் சொரூபநிலை யிசையா தோருக்
கீனமுறு பவபந்த மிறவா தென்றுஞ்
சஞ்சலமில் பாவனையே செய்வோ ருக்குச்
சலமனதின் விகற்பமெலாந் தவிர்வ தாலே
யஞ்சனமா மாவரண விட்சே பங்க
ளனைத்துமிலாச் சொரூபநிலை யணுகு மன்றே. (17)

ஆதலினு லநவரத மப்யா சிக்கு
மகண்டபர பாவனையான் மனோவி கற்ப
பேதமெலா மடைவாகப் பெயர்த்தெப் போதும்
பிரிவற்ற சொரூபநிலை பொருந்த வேண்டு
மோதியவிப் பாவனையும் விசார மற்றோர்க்
கொருகாலு மூள்ளத்தி லுதிக்க மாட்டா
பாதகமா மவிசாரப் பகையா லன்றே
பவக்கடலில் வீழ்ந்தெவரும் பதைக்கின் றாரால். (18)

அறிவற்ற வவிசார மஞ்ஞா னத்துக்
காலயமா யநந்தவித வாந்தை நல்குங்
கறையற்ற ஞானத்தைக் கண்ணிற் காட்டா
கடக்கவொணாக் கற்பனையே காட்டு விக்கு
நிறைவுற்ற சொரூபத்தி னிலைக்க வொட்டா
நிகிலமகா பீதிக்கு நிகரில் வித்தாஞ்
செறிவுற்ற சங்கற்ப விகற்ப மாதி
சித்தவிகா ரங்களெலாங் கணத்திற் சேர்க்கும். (19)

பலவிதமாய்ப் பகர்ந்தென்ன வவிசா ரந்தான்
பவக்கடலில் யாவரையு மூழ்கு விக்கும்
புலமருவா வவிசார நிகரா யெங்கும்
பொருந்தியிடும் பகையில்லை யாத லாலே
நிலைமருவு மகண்டபர விசாரங் கொண்டே
நிகழ்த்தியவிவ் வவிசாரப் பகையை வென்று
சலனமிலாப் பாவனையா லகண்ட போதஞ்
சார்ந்தவனுய்ச் சன்மாத்ர சொரூப மாவாய். (20)

அகண்டபர விசாரந்தா னேதா மென்னி
லகமாரிவ் வுலகாரிங் குள்ள தேது
புகன்றபர மார்த்தமெதா மென்றிவ் வண்ணம்
பூரணமாஞ் சற்குருவைக் குறித்து சாவி
யகம்பிரமஞ் சகம்பிரம மெங்கு மூள்ள
தகண்டபரப் பிரமமதே யுண்மை யென்று
தகும்பிரம நிர்ணயமே வேதாந் தத்தாற்
றவிராது செய்வதுதான் விசார மாமே. (21)

சற்குருவின் சந்நிதியி லோர்ந்த வண்ணஞ்
சாதுக்கள் சகவாசஞ் செய்தங் கங்கே
நிர்க்குணமாம் பரப்பிரம சொரூபந் தானே
நிகிலமுமா மதுவேநா மதுவே யுண்மை
யக்கரமாம் பிரமமதே வேதாந் தங்க
ளனைத்துக்கும் பொருளாகு மென்றிவ் வண்ணந்
தக்கபர நிர்ணயமே திடமாய்ச் செய்த
றளர்வையெலாந் தவிர்க்கின்ற விசார மாமே. (22)

பன்னியவா றோர்ந்தபரம் பொருளைத் தானே
பரவியதன் சங்கையெலாந் தீரும் வண்ண
மன்னியர்க ளாருமிலா வேதாந் தத்தி
லசையாம லிருந்துமன தொருமை யோடே
மன்னுபரப் பிரமமிதா நாமி தாகு
மயக்கமுறு முலகிதுவா முண்மை யீதென்
றுன்னுபல யூகத்தாற் சிந்தை பண்ணி
யுரமாக யுறுதிசெயல் விசார மாமே. (23)

அறிவுற்ற விசாரந்தா னஞ்ஞா னத்தை
யதஞ்செய்யு மாந்தையெலா மடைவாய்க் தீர்க்கு
மறுவற்ற ஞானத்தை மதியிற் சேர்க்கு
மயக்கமுறு கற்பனைக ளனைத்து மாய்க்கு
நிறைவுற்ற சொரூபத்தி னிலைக்க வைக்கு
நீக்கவொணாப் பவபீதி யனைத்து நீக்குஞ்
செறிவுற்ற வாபத்தைச் சம்பத் தாக்குஞ்
சித்தவிகா ரங்களெலாஞ் சிதைக்கு மன்றே. (24)

சோதித்த பரப்பிரம மெல்லா மென்றுஞ்
சுத்தமதாம் பரப்பிரம மதுநா மென்றுஞ்
சாதித்த விசாரமிகுஞ் சாதுக் கட்கே
சாற்றுபர பாவனைதான் சார்வ தல்லாற்
றீதுற்ற தேகாதி நாமே யென்றுங்
திருசியமாஞ் சகமுகலீ துண்மை யென்றுங்
கோதுற்ற வவிசார மேலிட் டோர்க்குக்
குறைவற்ற பாவனையெவ் விதமாய்க் கூடும். (25)

ஆதலினல் விசாரித்த தீர ருக்கே
யலைமனது பாவனையில் வசமாய் நிற்குந்
தீதணுகாப் பாவனையான் மனுவி கற்பந்
தினத்துக்குத் தினமடைவாய்த் தீருந் தீர்ந்த
போதுபரப் பிரமத்தின் சாட்சாத் காரம்
பூரணமாய்ப் பொருந்தியிடும் பின்ன வற்றூற்
கோதுமிகும் பவபந்த மனைத்து நீங்கிக்
குறைவற்ற மோட்சசுகங் கூடு மன்றே. (26)

பரமார்த்த மானபரப் பிரமத் தின்கட்
பலவிதமாய்த் தோற்றியவிச் சகசீ வாதி
விரிவான பேதமெலாம் விசாரிக் குங்கால்
விமலபரப் பிரமமலால் வேறே யன்று
சருவான்மா வானபரப் பிரம மொன்றே
சந்தகமுஞ் சலியாம லிருப்ப தாலே
திரமான பரப்பிரம மதுநா னென்றே
திடமாகப் பாவித்துத் தியக்கந் தீர்வாய். (27)

ஆவதென்று மமர்வதென்று மழிவ தென்று
மயனரியோ டரனென்று மவித்தை யென்றுஞ்
சீவனென்றுஞ் சித்தமென்றும் பந்த மென்றுஞ்
சித்திரமாஞ் சகத்தென்று மீச னென்று
மோவலுறு மாயையென்று மொன்று மில்லை
யுள்ளதெலா மகண்டபரப் பிரமந் தானும்
பாவனமாம் பரப்பிரம மதுநா னென்றே
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (28)

சுருதியென்று மிருதியென்று நூற்க ளென்றுஞ்
சூட்சுமமாம் வேதாந்த நூற்க ளென்றுங்
கருதுமிதி காசமென்றும் புராண மென்றுங்
காமிகமே முதலியவா கமங்க ளென்று
மொருமையென்று மிருமையென்று மொன்று மில்லை
யுள்ளதெலா மகண்டபரப் பிரமந் தானும்
பரவியவப் பரப்பிரம நானே யென்று
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (29)

தேகமுதற் றிருசியமே யனன்மா வென்றுங்
திருக்குருவே நின்னுடைய வான்மா வென்று
மேகமதாம் பரப்பிரம நீயே யென்று
மெப்போது மதுதானே நானே யென்றுஞ்
சோகமுறுக் குரவனென்றுஞ் சீட னென்றுஞ்
சுத்தபர ஞானமென்றுந் தோற்ற மெல்லாம்
பாகமுறுப் பரமேயா மதுநா னென்றே
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (30)

வகுப்புற்ற பஞ்சவித மூர்த்தி யென்றும்
வகுத்தவவர் பஞ்சவித கிருத்ய மென்று
மிகப்பற்று நாகநர கங்க ளென்று
மேவியிடுங் கைலைமுத லுலக மென்றுந்
தொகுப்புற்ற சீவபர சகங்க ளென்றுந்
தோற்றியவிப் பலவிதமாந் தோற்ற மெல்லாம்
பகுப்பற்ற பரமேயா மதுநா னென்றே
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (31)

கந்தமுதற் பலவிதமாம் புலன்க ளென்றுங்
ககனமுதற் பஞ்சமகா பூத மென்றுங்
தொந்தமுறுங் காரியகா ரணங்க ளென்றுந்
தொடர்புற்ற போகமென்று மோட்ச மென்று
மிந்தவிதஞ் சித்தத்தின் விகற்ப மாக
விலங்கியவிவ் வநந்தவித பேத மெல்லாம்
பந்தமுறுப் பரமேயா மதுநா னென்றே
பாவித்துப் பாவித்துப் பரமே யாவாய். (32)

சித்தமலாற் பிரபஞ்ச மென்று மில்லை
சித்தந்தான் பிரபஞ்ச மெனவே தோன்றுஞ்
சித்தமலாற் சமுசார மென்று மில்லை
சித்தந்தான் சமுசார மெனவே தோன்றுஞ்
சித்தமதைச் சோதிக்கிற் சித்தே யாகுஞ்
சித்தான சித்தமதே சிவமாய் நிற்குஞ்
சித்தமிலச் சின்மயமாஞ் சிவநா னென்றே
சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே யாவாய். (33)

மனதையலாற் சகமுதலோ ரணுவு மில்லை
மனததுவே சகமுதலாய்த் தோன்று நிற்குஞ்
சொனமனது சங்கற்ப வடிவே யாகுஞ்
சோதிக்கிற் சங்கற்பஞ் சித்தாய்த் தீரு
மனதினுடைச் சங்கற்பஞ் சித்தாய்த் தீரின்
மனததுதான் சின்மயமாஞ் சிவமே யாகுஞ்
சொனனமிலாச் சின்மயமாஞ் சிவநா னென்றே
சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே யாவாய். (34)

சின்மயமா மென்னிடையே மனது சித்துச்
சின்மயமா மென்னிடையே மற்றி ருந்து
சின்மயமா மென்னிடையே யடங்க லாலே
சின்மயமா மென்னையலான் மனதே யில்லை
சின்மயமா மென்னையலான் மனதில் லாதாற்
சின்மயமா மென்னையலா தெவையு மில்லை
சின்மயமா நானென்றுஞ் சிவமே யென்றுஞ்
சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே யாவாய். (35)

சின்மயமா மென்னையலாற் சங்கற் பத்தின்
செயலான சகத்தோற்ற மெவையு மில்லை
சின்மயமா மென்னையலாற் சங்கற் பத்தின்
செயலான சீவேச ரரு மில்லை
சின்மயமா மென்னையலாற் சங்கற் பத்தின்
செயலொன்று மொருகாலு மிலவே யில்லை
சின்மயமா நானென்றுஞ் சிவமே யென்று
சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே யாவாய். (36)

சின்மயமா மென்னிடையே கனவிற் கண்ட
சகத்துமுத லெனக்கயலா யிலாத தேபோற்
சின்மயமா மென்னிடையே நனவிற் கண்ட
சகத்துமுத லெனக்கயலா யென்று மில்லை
சின்மயமா நான்றானே யென்று மொன்றுய்ச்
செறிந்தகில பூரணமாய்ச் சிவமாய் நின்றோன்
சின்மயமா நானுனைய் நின்றே னென்றே
சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே யாவாய். (37)

பின்னமிலாப் பரப்பிரம மெல்லா மென்றும்
பிரிவற்ற பரப்பிரம மதுநா னென்றும்
பன்னியவா றநவரத மிடைவி டாமற்
பாவித்துப் பாவித்து விகற்பந் தள்ளி
யன்னியமி லகண்டபர ஞானம் பெற்றவ்
வகண்டபர மாநந்த மநுப விக்குத்
துன்னியவிப் பவதுக்க மணைத்துந் தீர்த்துத்
துகளற்ற பரப்பிரம சொரூப மாவாய். (38)

ஓரணுவு மொருகாலு மொருவி டத்து
முணர்வுருவாம் பிரமமலா தயலே யில்லை
பூரணமாம் பரப்பிரமந் தானே யெல்லாம்
பூரணமாம் பரப்பிரமந் தானே நீயுஞ்
சாரமதாச் சாற்றியவிவ் வருத்தம் யாவுஞ்
சத்தியமே சற்றுமிதிற் சங்கை யில்லை
தீரமுறும் புத்தியினு லுரைத்த வண்ணந்
திடமாகத் தெளிவுற்றுத் தியக்கந் தீர்வாய். (39)

ஏகபரி பூரணமாம் பிரமம் யாவு
மேகபரி பூரணமாம் பிரம நானென்
றாகமொடு நித்தியமாய்ப் பாஷிக் கின்றே
ருணர்வுருவாம் பரப்பிரம வடிவே யாவர்
பாகமுறுப் பரமசிவன் பகர்ந்த வண்ணம்
பகுப்பற்ற வகண்டார்த்த நிர்ண யத்தைச்
சோகமற நிதாகநினக் குரைத்தோ மித்தைச்
சொல்வகையே கேட்டுணர்வோர் சுகமே சார்வர். (40)

நிகழுமகா லிங்கவடி வாக வெங்கு
நிரந்தரமாய் நிறைவுற்ற பரசி வத்தை
யகமகமென் றநவரதம் பாஷிப் போரே
யகமனதின் விகற்பமெலா மடைவாய்த் தீர்ந்து
விகலமிலா வகண்டபர ஞானம் பெற்று
வேறுபடா மோட்சநிலை பெறுவ ரென்றே
யகமருவா ரிபுமுனிவ னிதாக னுக்கங்
ககண்டார்த்த நிர்ணயமே யருளிச் செய்தான். (41)

வேறு.

அகிலபூரண மானபரம்பொரு ளன்றியில்லணு வும்மயலன்றெனு,
நிகிலமுஞ்சச்சி தானந்தமாகிய நிட்களங்கப் பரம்பொருளாமெனும்,
புகலுமப்பொரு ளுமெனும்பூரண போதமுற்றவர் முத்தரெனச்சொல
றிகழுமாநந்தத் தாண்டவமாடுநந் தேவதேவ னகண்டசொரூபமே. ()

மூப்பத்திரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 32-க்கு திருவிருத்தம் 1446.

மூப்பத்து மூன்றாவது
அகண்டான்மஞானமகிமையுரைக்கும்
அத்தியாயம்.

இங்கிதவென் றொருபொருளு மென்று மில்லை
யாவையுமே யான்மாவுக் கபின்ன மான
பங்கமுறுப் பரப்பிரம சொரூப மென்றும்
பரவியவப் பரப்பிரம நாமே யென்றுந்
துங்கமுறு மகண்டான்ம ஞானந் தன்னைத்
துகளறவே நிதாகநினக் கின்னஞ் சொல்வா
மங்களமாம் பொருளிதனை மகிழ்ந்து கேட்போர்
மறித்திந்தப் பவக்கடலின் மூழ்கா ரென்றும். (1)

அகமெனுமிப் பதத்தினுடை யிலட்சி யார்த்த
மாருநம தருவான வான்மாத் தானே
புகலுறும் பிரமபத விலட்சி யார்த்தப்
பொருளான பரப்பிரம சொரூப மாகும்
விகலமுரு வான்மபர வைக்யந் தானே
விளம்புமகம் பிரமாஸ்மி யாதி யான
வகிலமகா வாக்குந்தாற் பரியத் தோடே
யறிவிக்கு மகண்டார்த்த மாகு மைந்தா. (2)

ஆகலினு லநிதிடமா யைய மின்றி
யகம்பிரமம் பிரமமக மென்றிவ் வண்ணம்
பேதமுரு வுறுதியினைப் பெறுத லுனே
பின்னமிலா வகண்டான்ம ஞான மாகு
மேதமிலிவ் வகண்டான்ம ஞானத் துக்கிங்
கிணையான ஞானந்தா னெங்கு மில்லை
மாதவவிவ் வகண்டான்ம ஞானம் பெற்றோர்
மறிக்தென்றும் பிறவியுறார் மகேச ஞான. (3)

அகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மாக்கைமுத லகமென்னு மயக்கந் தீர்க்கு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மகண்டபரி பூரணமாம் பிரம மாக்கு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநந்தவித வரந்தையெலா மதஞ்செய் விக்கு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மகண்டபர மாநந்த மளிக்கு மன்றே. (4)

அகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மலிவுற்ற சித்தத்தின் றியாக மாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மலிவற்ற மனோநாச வடிவ மாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மனுபவ பந்தமெலாந் தொலைப்ப தாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மகண்டபர மோட்சத்தை யளிப்ப தாமே. (5)

அகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மத்யந்த வுத்தமமாம் யோக மாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மழுக்கற்ற சுயஞ்சோதி சுபாவ மாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மஞ்ஞான விருளெலா மழிப்ப தாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநேகவித பீதியெலா மொழிப்ப தாமே. (6)

அகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநேகமகா பாவமெலா மழிப்ப தாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநந்தவித வறத்துக்கு மதீத மாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநிசயமா மங்களமே யளிப்ப தாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மநேகவித வமங்களமுந் தொலைப்ப தாமே. (7)

அகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மநிதிடமாம் விவேகத்தாற் செனிப்ப தாகு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மாசிரியன் கருணையினற் கிடைப்ப தாகு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மநவரதம் பழக்கத்தா லுரப்ப தாகு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மகண்டசிவன் கருணையினு னிலைப்ப தாமே. (8)

அகப்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே யழுத்த மாகு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே சுகஞ்செய் விக்கு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே துன்பந் தீர்க்கு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே சகச மாமே. (9)

அகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே விகற்ப நீக்கு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே களங்கந் தீர்க்கு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயச்செயவே யசல மாகு
மகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மப்யாசஞ் செயசெயவே சமாதி யாமே. (10)

அகம்பிரம மென்றுணரு மான்ம ஞான
மநவரதா ப்யர்சிக்கே யுரமாய் நிற்கு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மத்யாச மனேத்தையுமே நாசஞ் செய்யு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மசஞ்சலமாஞ் சித்தசெயந் தருவ தாகு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மயலிலகண் டாகார சுபாவ மாமே. (11)

அகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மகங்களெலாந் தவிர்ந்தோர்க்கே யெளிதா யெய்து
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மறங்களெலாங் குவிந்தோர்க்கே யினிதாய்த் தோன்று
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மதிசயமாம் பொருளேயெலா மதிச யிக்கு
மகம்பிரம மென்றுரமா மான்ம ஞான
மகண்டசிவ ஞதியது பூதி யாமே. (12)

கற்பிதமா யான்மாவிற் காண்ப தெல்லாங்
களங்கமிலா வதிட்டான வான்மா வன்றி
யற்பமுமவ் வான்மாவுக் கயலே யில்லை
யகண்டபரி பூரணவவ் வான்மா வாநான்
றற்பதலட் சியமான பிரம மென்றே
தானுணரு மகண்டான்ம ஞானத் துக்கிங்
கொப்பதுவா யொன்றுமிலை மற்ற தற்கிங்
கொப்பான தவ்வான்ம ஞானந் தானே. (13)

அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றறிந்திடமா மகண்டான்ம ஞானத் துக்குக்
காகும்பயனவ் வகண்டான்ம சொரூப மான
தானன்றித் தகும்பயன்மற் றொன்று மாகா
புகழ்ந்திடுமிவ் வகண்டான்ம ஞானந் தன்னின்
பூரணமா மகிமைதனைப் புகல்வ தற்குச்
சகந்தனினும் மகேசனலால் யாவர் வல்லோர்
சருவஞ்ஞ னவனையலா தாரு மூண்டோ. (14)

அகப்பிரம மென்றுரமாய் விசுவா சத்தோ
டறிவுற்ற வகண்டான்ம ஞானத் துக்குச்
சகந்தனிலே சனித்தநிலு மொப்பொன் றில்லை
சனித்தினிமேல் வருவநிலு மொப்பொன் றில்லை
யகம்பிரம மென்றுரமாய் நிச்சயித் தோர்க்
கவ்வுரமா நிச்சயமே யநந்த கோடி
மகந்தவநற் றீர்த்தமொடு தானஞ் சேவை
மற்றெவையு மிலனுவு மயக்க மில்லை. (15)

அகம்பிரம நிச்சயமே தவ பூசை
யகம்பிரம நிச்சயமே தெய்வ த்யான
மகம்பிரம நிச்சயமே செப தபங்க
ளகம்பிரம நிச்சயமே யறங்கள் யாவு
மகம்பிரம நிச்சயமே யகண்ட த்யான
மகம்பிரம நிச்சயமே யகண்ட யோக
மகம்பிரம நிச்சயமே யகண்ட ஞான
மகம்பிரம நிச்சயமே யகண்ட மோட்சம். (16)

அலைமனதின் சலனத்காற் சாட்சாத் காக
வகண்டான்ம வநுபூதி யணுகா காகிற்
சலமனதின் விகற்பமெலாந் தீரு மட்டுஞ்
சருவான்ம பாவனையே செய்ய வேண்டு
மூலமனது பாவனையே செய்வ தற்கு
முதவாமற் பலவிகமாய்ச் சலிக்கு மாகிற்
சலனமுரு வகண்டான்ம விடய மான
சத்தத்தை வசனத்தா லுரைக்க லாமே. (17)

வசனத்தாற் சத்தத்தை யுரைப்ப தற்கோர்
வருத்தமிலை யாதலினு லசத்த செல்லா
நிசவடிவின் பாவனையின் மனது நின்று
நிச்சலமா யதுபூரி நிலைக்கு மட்டும்
பிசகறவே சருவமுமே பிரம மென்றும்
பிரமமதே நானென்று நான தென்று
மசலமதா மகண்டான்ம சொரூபந் தன்னை
யறிவிக்குஞ் சத்தத்தை யுரைக்க வேண்டும். (18)

சாசுவத வதுபூரி யன்றி வாக்காற்
சருவமுமே பிரமமெனச் சாற்றி னலு
மாசறவே யயமேதங் கோடி செய்த
வறமொவ்வோர் நிமிடத்தி லடைய லாமே
மாசறவே யகம்பிரம மென்று சைத்தான்
மகாமேரு தானபல மருவ லாமே
நேசமுடன் பிரமமக மென்று சைத்தா
னிறைந்தபுவி தானபல நேர லாமே. (19)

பிரமமக மகம்பிரம மென்றிவ் வண்ணம்
பிரியாத நிச்சயமோ டிருப்ப தற்குச்
சருவவித வுலகத்துஞ் சாரப் பட்ட
சகலபொருட் டானமுமோ ரீடே யன்று
பிரமமக மகம்பிரம மென்றிவ் வண்ணம்
பிரியாத பாவனையோ டிருப்ப தற்கிங்
கொருசுகமு மொருகாலு மீடே யன்றங்
கொன்றியவச் சுகத்துக்கச் சுகமே யீடாம். (20)

சருவமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சந்ததநா னதுவென்று நிச்ச யித்தவ்
வுரமருவி யிருப்பவருக் கோடி யாடு
முத்தமமாந் தீர்த்தமிலை தான மில்லை
தருமமிலை கருமமிலை பத்தி யில்லை
தனக்கயலாய்ச் செயுஞ்செயலோ ரணுவு மில்லை
பிரமமெலா மென்றுரமா மதித் திருக்கும்
பெருமையினும் பின்னெவையு மதிக முண்டோ. (21)

ஆதலினற் கனவிலுமே பிரமத் துக்கிங்
கன்னியமா யணுவேனு முள்ள தென்னும்
பேதமுறும் புந்தியினைத் தூரத் தள்ளிப்
பிரமமெலா மதுவேநா னென கென்றே
சாதகமா முறுதியினைத் நிடப் படுத்திச்
சந்ததமும் பாவித்துச் சலன மின்றி
யாதிமுடி வொன்றுமிலா வகண்டா காரா
வநுபூதி யடைந்தந்த மயமே யாவாய். (22)

அகமென்று நித்தபரப் பிரம மானே
னகமென்றுஞ் சுத்தபரப் பிரம மானே
னகமென்றும் புத்தபரப் பிரம மானே
னகமென்று முத்தபரப் பிரம மானே
னகமென்று மசலபரப் பிரம மானே
னகமென்று மசங்கபரப் பிரம மானே
னகமென்று மகண்டபர மானே னென்றே
யநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (23)

அகமென்றுஞ் சன்மயமாம் பிரம மானே
னகமென்றுஞ் சாசுவதப் பிரம மானே
னகமென்றுஞ் சின்மயமாம் பிரம மானே
னகமென்றுஞ் சிதாகாரப் பிரம மானே
னகமென்று நின்மலமாம் பிரம மானே
னகமென்று நிராகாரப் பிரம மானே
னகமென்று மகண்டபர மானே னென்றே
யநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (24)

சகலபரி பூரணமாம் பிரம நானே
சங்கற்ப விகற்பமுறுப் பிரம நானே
துகளணுவுந் தொடராத பிரம நானே
துவிதமிலாத் தூயபரப் பிரம நானே
நிகரில்சிதா காயபரப் பிரம நானே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம நானே
யகமருவா வகண்டபரப் பிரம நானென்
றநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (25)

சத்தியசிற் சுககனமாம் பிரம நானே
சலனமுறுச் சாந்தபரப் பிரம நானே
நித்தியநிர்க் குணமான பிரம நானே
நிரதிசயா நந்தபரப் பிரம நானே
சுத்தபர தத்துவமாம் பிரம நானே
சுதசித்த மானபரப் பிரம நானே
யத்துவிதா கண்டபரப் பிரம நானென்
றநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (26)

சமமதுவாம் பரப்பிரம மானே னானே
சங்கமிலாப் பரப்பிரம மானே னானே
மமதையுறுப் பரப்பிரம மானே னானே
மகத்தான பரப்பிரம மானே னானே
விமலமதாம் பரப்பிரம மானே னானே
விகாரமுறுப் பரப்பிரம மானே னானே
யமலமதாம் பரப்பிரம மானே னானென்
றநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (27)

விஞசமுறுப் பரப்பிரம மானே னானே
விபுவான பரப்பிரம மானே னானே
சஞ்சனமாம் பரப்பிரம மானே னானே
சத்தான பரப்பிரம மானே னானே
மஞ்தியிலாப் பரப்பிரம மானே னானே
மாயையிலாப் பரப்பிரம மானே னானே
யஞமயமாம் பரப்பிரம மானே னானென்
றநவரதம் பாவித்தம் மயமே யாவாய். (28)

சின்மாத்ர மானபரப் பிரம மல்லாற்
சீவனிலை யீசனிலை செகத்து மில்லை
சன்மாத்ர மானபரப் பிரமந் தானே
சந்ததமுந் தான்றானாய்த் தனித்த வத்து
நன்மாத்ர மானபரப் பிரம மீதே
நானெனவே நன்றாக நிச்ச யித்துத்
தன்மாத்ர மானபரப் பிரமந் தானாய்த்
தனித்தணுவுந் தளர்வின்றிச் சுகித் திருப்பாய். (29)

சருவமுமே யான்மாவுக் கபின்ன மான
சத்தியசிற் சுககனமாம் பிரம மென்று
பிருமையிலாப் பரப்பிரம நானே யென்றும்
யான்னந்தப் பரப்பிரமந் தானே யென்று
மொருமைதரும் பாவனையே செய்க காலே
யுள்ளத்தின் விகற்பமெலா மொருங்கே தள்ளி
நிருமல்மா மகண்டானன்ம போதம் பெற்று
நீநீயாய் நின்றென்றுஞ் சுகித் திருப்பாய். (30)

அகிலபரி பூரணமா மென்னி டத்தி
லயலெனவே கற்பிதமா முபாதி யெல்லாந்
திகழ்வுறவே விசாரிக்கி லெனக்கு வேறுய்த்
திலமளவு மிலையெனவே நேதி பண்ணி
யிகழ்வறவே மிஞ்சியநான் பிரம மென்றே
யிருமையிலா வகண்டானன்ம போதம் பெற்றோர்
சுககனமாம் பரப்பிரம வடிவே யாவர்
சொல்லியது சத்தியமே சங்கை யில்லை. (31)

இந்தவிதம் யாவருமே யுய்யும் வண்ணம்
மிணையற்ற வகண்டானன்ம ஞானந் தன்னி
னந்தமிலா மகிமைதனை யகண்ட வீச
னருளியவா நிதாகனினக் கருளிச் செய்தோந்
தொந்தமெலாந் தொலைப்பதுவா மிவ்வர்த் தத்தை
துகளற்ற மனதுடனே தொடர்ந்து கேட்போர்
பந்தமற வகண்டானன்ம போதம் பெற்றுப்
பங்கமிலாப் பரப்பிரம வடிவாய் நிற்பர். (32)

துகமதன் கோடெனவே வெறும் பொய்யான
துறக்கமுதற் றுச்சசுகத் திச்சை மேவிக்
கருமமுதற் செய்வதனல் வீணுய்க் காலங்
கழியாமன் மறைமுடியின் கருத்தை யோர்ந்து
சிரவணமே முதலியதா லகண்ட மான
சிவவடிவை யுணர்பவரே முத்த ரென்று
நிருமலமாய் நிபுணிவ னிதாக னுக்கு
நிமலான்ம ஞானத்தை நிகழ்த்தி னனல். (33)

வேறு.

இயல்பிலாத வுபாதிகள்யாவையு மில்லையில்லையென் றிவ்விதநேதி செய், தயலிலான்மப ரைக்யமறிந்திடு மான்மஞான மடைந்தவரென்றுமே, பயமிலாப்பர மான்மசொரூபமாய்ப் பங்கமின்றி யிருப்பரெனச்சொலன், மயலிலாநந்தத் தாண்டவமாடும் மாசிலீச னகண்டசொரூபமே. (34)

முப்பத்துமூன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம் 33-க்கு திருவிருத்தம் 1480.

†††††††††††††††††‡††††††††††††††††††††

மு ப் ப த் தி ரு ண் கா வ து

சகலமும் பிரமமென்றும் ஆன்மாவே சகலமுமென்றுங்கூறி அகம்பிரம நிச்சயத்தின் மகிமை யுரைக்கும் அத்தியாயம்.

நிதாகநினைக் கின்னமுமவ் வகண்டார்த் தத்தி
னிர்ணயமே நிலைத்திடவிவ் வோத்திற் சொல்வா
மதானெனையி னத்யந்தங் குய்ய மாகு
மதிசயமா மனைத்தினுமே யதிக மாகுஞ்
சதாநந்த கனமான வகண்டார்த் தத்தின்
சாரத்தைச் சாற்றியவிவ் வோத்தி லுள்ள
தெதாகினுமோர் கவியேனுங் கேட்டு ணர்ந்தோ
ரின்னலெலா மிகத்துடனே முத்த ராவர். (1)

இதுவெனவே நிருசியமாய்க் காண்ப தெல்லா
மெங்குமுள நிருக்கான பிரமந் தானுந்
திகமருவாச் சித்தத்காற் றிருசி யம்போற்
றிகழினுமே விசாரிக்கிற் றிருக்கே யன்றி
யதுவிதுவென் றன்னியமா யணுவு மில்லை
யறிவினிடைக் காண்பதெலா மறிவு தானே
விதம்விதமாய் விளங்கியிடுந் தரங்க மாதி
விசாரிக்கில் வாரியலால் வேறே யுண்டோ. (2)

ஆதலினு லறிவையலா லணுவொன் றேனு
மதுவிதுவென் றன்னியமா யெங்கு மில்லை
யோதியவவ் வறிவுருவாம் பிரம மல்லா
லுலகிலுள விவகார மொன்று மில்லை
போதகன மானபரப் பிரம மல்லாற்
பொருந்தியிடுஞ் சீவபர சகந்தே யில்லை
யாதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வறிவுருவாம் பரப்பிரமந் தானே யெல்லாம். (3)

சன்மாத்ர காரியமாஞ் சகசீ வாதி
சகலமுமே சன்மாத்ரப் பிரம மல்லாற்
றன்மாத்ரப் பிரமத்துக் கயலே யன்று
தத்துவமாய் நவில்கின்றேனுஞ் சங்கை யில்லை
சன்மாத்ர மானபரப் பிரமந் தானே
சந்ததமு நமதுநிச சொரூப மாகுந்
தன்மாத்ர மானபரப் பிரம மீதே
தயங்குசக முதலவற்றி னிசசொ ரூபம். (4)

நிகழுமறி வானபரப் பிரம மல்லா
னீயுமில்லை நானுமில்லை யாரு மில்லை
திகழுமறி வானபரப் பிரம மல்லாற்
றேகமுதற் றிருவியமாந் திரளே யில்லை
சகசவறி வானபரப் பிரம மல்லாற்
சத்துமில்லை யசத்துமில்லை சதசத் தில்லை
பகருமறி வானபரப் பிரம மல்லாற்
பரசிவ சகங்களெனும் பகுப்பே யில்லை. (5)

துலங்கியிடு மறிவான பிரம மல்லாற்
றுஷிதமில்லை யத்துஷிதந் தானு மில்லை
யிலங்கியிடு மறிவான பிரம மல்லா
லிருளுமில்லை யொளியுமில்லை வெளியு மில்லை
மலங்கலவா வறிவான பிரம மல்லான்
மகத்துமில்லை யணுவுமில்லை மற்றொன் றில்லை
கலங்கலுரு வறிவான பிரம மல்லாற்
கற்பிதமாய்க் காண்கின்ற தெவையு மில்லை. (6)

உளங்கலவா வுணர்வான பிரம மல்லா
துடலுமில்லை யுயிருமில்லை யுலகு மில்லை
களங்கமுறு வுணர்வான பிரம மல்லாற்
காரியகா ரணமாக வெவையு மில்லை
விளங்கியிடு முணர்வான பிரம மல்லால்
வேத்தியவே தனமாக வெவையு மில்லை
துளங்கியிடு முணர்வான பிரம மல்லாற்
றுவிதமெனுந் தோற்றமொரு காலு மில்லை. (7)

மாரணமி லறிவான பிரம மல்லான்
மாயையில்லை யவித்தையில்லை மற்றொன் றில்லை
சீரணமி லறிவான பிரம மல்லாற்
சீவனில்லை யீசனில்லை செகத்து மில்லை
பூரணமா மறிவான பிரம மல்லாற்
பொய்யுமில்லை மெய்யுமில்லை பிறிதொன் றில்லை
காரணமா மறிவான பிரம மல்லாற்
காரியமாய்க் காண்கின்ற தெவையு மில்லை. (8)

பேதமுறு வறிவான பிரம மல்லாற்
பேதிக்கும் பந்தமில்லை மோட்ச மில்லை
சோதிமிகு மறிவான பிரம மல்லாற்
சுகதுக்க முதலியதே ராணுவ மில்லை
யேதமுறு வறிவான பிரம மல்லா
லில்லையென வியம்பியவிச் சொல்லு மில்லை
யாதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வறிவுருவாம் பரப்பிரமந் தானே யெல்லாம். (9)

இதுவெனவே யிலங்குவதும் பிரம ரூபம்
யானெனவே யிலங்குவதும் பிரம ரூப
மதுவெனவே யறிவதுவும் பிரம ரூப
மயலெனவே யறிவதுவும் பிரம ரூபந்
திதமெனவே தெரிவதுவும் பிரம ரூபந்
திதமலதாய்த் தெரிவதுவும் பிரம ரூப
மெதுவெனவே தெரிவதும் பிரம ரூப
மெப்போது மெல்லாமும் பிரம ரூபம் (10)

ஏகமெனத் தோற்றுவதும் பிரம ரூப
மிருமையெனத் தோற்றுவதும் பிரம ரூப
மாகமெனத் தோற்றுவதும் பிரம ரூப
மறிபவனுய்த் தோற்றுவதும் பிரம ரூபஞ்
சோகமெனத் தோற்றுவதும் பிரம ரூபஞ்
சுகமெனவே தோற்றுவதும் பிரம ரூபம்
பாகமறத் தோற்றுவதும் பிரம ரூபம்
பலவிதமாய்த் தோற்றுவதும் பிரம ரூபம். (11)

சரமசர மியாவையுமே பிரம ரூபஞ்
சங்கற்ப விகற்பமெலாம் பிரம ரூபம்
பரமபர மியாவையுமே பிரம ரூபம்
பகுதிமுதற் பகுப்பெவையும் பிரம ரூபந்
தாணிமுதற் றத்துவமும் பிரம ரூபந்
தாம்பிறரென் றெண்ணுவதும் பிரம ரூப
மிரவுபக லிருளொளியும் பிரம ரூப
மில்லையுள தென்பதெலாம் பிரம ரூபம். (12)

வேதமொடு மிருதிகளும் பிரம ரூபம்
விளம்புமித காசமெலாம் பிரம ரூப
மேதமுறுப் புராணமெலாம் பிரம ரூப
மியம்புபல வாகமமும் பிரம ரூப
மீதையெலா மாய்வதும் பிரம ரூப
மிசைத்தவிதன் பொருளெவையும் பிரம ரூபஞ்
சாதனமாய்ச் செய்வதும் பிரம ரூபஞ்
சாத்தியமாய்ப் பெறும்பயனும் பிரம ரூபம். (13)

சாதனசம் பத்தியுமே பிரம ரூபஞ்
சற்குருவைச் சார்வதுவும் பிரம ரூபம்
வேதமுடிச் சிரவணமும் பிரம ரூபம்
வித்தரமா மனனமுமே பிரம ரூபஞ்
சாதகமாம் பாவனையும் பிரம ரூபஞ்
சமாதியுட னநுபவமும் பிரம ரூப
மேதமிலா தூறுவீடும் பிரம ரூப
மெப்போது மெல்லாமும் பிரம ரூபம். (14)

பிரமமதே மாயையெனத் தோற்ற லாகும்
பிரமமதே மகேசனெனத் தோற்ற லாகும்
பிரமமதே சித்தமெனத் தோற்ற லாகும்
பிரமமதே சீவனெனத் தோற்ற லாகும்
பிரமமதே சகத்தெனவுந் தோற்ற லாகும்
பிரமமதே சகலமுமாய்த் தோற்ற லாகும்
பிரமமலா தொருபொருளு மென்று மில்லை
பிறங்கியிடும் பொருளெல்லாம் பிரமந் தானே. (15)

பிரமமதே மும்மூர்த்தி யெனவுந் தோன்றும்
பிரமமதே மூலசிவ னெனவுந் தோன்றும்
பிரமமதே யைம்பூத மெனவுந் தோன்றும்
பிரமமதே யநந்தவுல கெனவுந் தோன்றும்
பிரமமதே சராசரமாய்த் தோன்ற லாகும்
பிரமமதே சகமுமாய்த் தோன்ற லாகும்
பிரமமலா தொருபொருளு மென்று மில்லை
பிறங்கியிடும் பொருளெல்லாம் பிரமந் தானே. (16)

அஞ்ஞான நிசையிலொரு பிரமந் தானே
யநந்தவித சீவேச சகத்தாய்த் தோன்றும்
விஞ்ஞான நிசைமருவிற் சகசீ வாதி
விரிவதுவே விமலபர வடிவாய்த் தோன்று
மஞ்ஞான நிசையிலொரு ரச்சுத் தானே
யரவுமுதற் பலவடிவாய்த் தோன்றி னதும்
விஞ்ஞான நிசைமருவி லவைய னைத்தும்
விரவுமொரு ரச்சுவலால் வேறு யுண்டோ. (17)

ஆதலினல் விசாரமிலா வெறுமூ டர்க்கிங்
ககண்டபரி பூரணமாம் பிரமந் தானே
பூதமுதற் பலபொருளாய்த் தோற்றி னதும்
பூரணமாய் விசாரித்த தீர ருக்குப்
பேதமெனத் தோற்றியவித் தோற்ற மெல்லாம்
பிரிவற்ற வகண்டபரப் பிரமந் தானு
மாதவனே யிதிலிறையு மைய மில்லை
மகேசனெமக் குரைத்தசிது மைய முண்டோ. (18)

எப்போது மொருபொருளுஞ் சனிக்க வில்லை
யெப்போது மொருபொருளு மிருக்க வில்லை
யெப்போது மொருபொருளு மிறக்க வில்லை
யெப்போது மொருபொருளு மிலவே யில்லை
யெப்போது மெள்ளளவு மிருமை யின்றி
யேகபரி பூரணமாம் பிரமந் தானே
யெப்போது மெவ்விடத்து மிருக்கும் வத்து
வியம்பியது சத்தியமே யீச ஞானே. (19)

அகண்டபரி பூரணமாம் பிரம மல்லா
லஞ்ஞான விஞ்ஞான மெவையு மில்லை
யகண்டபரி பூரணமாம் பிரம மல்லா
லத்யாச மதனீக்க மெவையு மில்லை
யகண்டபரி பூரணமாம் பிரம மல்லா
லமருசக சீவபர மெவையு மில்லை
யகண்டபரி பூரணமாம் பிரம மொன்றே
யநவரத மகண்டைக ரசமாய் நிற்கும். (20)

அகண்டபரி பூரணமாம் பிரம மல்லா
லணுவுமில்லை யணுவுமில்லை யணுவு மில்லை
யகண்டபரி பூரணமாம் பிரமந் தானே
யநந்தவித சீவேச சகத்த னைத்து
மகண்டபரி பூரணமாம் பிரமந் தானே
யநவரத நமதுநிச சொரூப மாகு
மகண்டபரி பூரணமாம் பிரமந் தானே
யநவரத நினதுநிச சொரூப மாமே. (21)

ஆதியிலாப் பரப்பிரம சொரூபந் தானே
யான்மாவா மவ்வான்ம சொரூபந் தானே
பேதமிலாப் பரப்பிரம சொரூப மாகும்
பிரிவறவே பேசியவிவ் வைக்யந் தானே
யோதியவே தாந்தமகா வாக்கி யங்க
ளொருமித்துத் தெரிவிக்கு மகண்டார்த் தங்கா
ணுதலினு லநவரத முமுட்சு வெல்லா
மகம்பிரம நிச்சயமே யடைய வேண்டும். (22)

அகிலமுமே பரப்பிரம மைய மில்லை
யதுவேநா மணுவுமிதி லைய மில்லை
நிகிலமறைப் பொருளுமிதே யைய மில்லை
நிகிலரது பவமுமிதே யைய மில்லை
யிகழ்வில்சிவன் சொனதுமிதே யைய மில்லை
யெனததுபூ தியுமிதுவே யைய மில்லை
யகமுறவே யாதலினன் முழுட்சு வெல்லா
மகம்பிரம நிச்சயமே யடைய வேண்டும். (23)

ற்பலவாய்ப் பகர்ந்தென்ன சுருங்கச் சொல்லும்
பரமார்த்த வசனத்தைப் பரிந்து கேளாய்
கற்பிதமாய்த் தோற்றியிடுந் தோற்ற மெல்லாங்
களக்கமுறு வதிட்டானப் பிரம மன்றிச்
சொற்பமுமே யயலாக வில்லை யென்றே
சுருதியுட னுகத்தா னேதி பண்ணி
நிர்ப்பயமாய் நீலித்தபரப் பிரமந் தானே
நிகழுமக மகமதுவென் றறிய வேண்டும். (24)

சகலமுமா மிவைவேறு நான்றுன் வேறு
சற்பிரமம் வேறென்னும் பேத புத்தி
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே நானென்று நான தென்றும்
வெகுநிடமா மகண்டபர நிச்ச யத்தால்
வேறறவே யெளிதாக நீங்கு மன்றி
யிகழ்வுதருங் கருமமுபா சனையொன் றலு
மியம்பியவிப் பேதமதி யெளிதாய் நீங்கா. (25)

ஆதலினன் முழுட்சுவெலா மெளிதே யாக
வகண்டபர நிச்சயமே யடைந்த வற்று
லோதவொணா வநந்தவித பயத்திக் கங்கட்
குற்பத்திக் கானமதாம் பேத புத்தி
யீதினையெவ் விதத்திலுமே நீக்க வேண்டு
மியம்பியவிப் பேதமதி நீக்கந் தானே
பீதியிலா வபயபத நிட்டை யாகும்
பெந்தமறப் பெறுகின்ற வீடு மாமே. (26)

அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றகம்பிரம நிச்சயமே யடைந்தோர்க் கல்லாற்
செகம்பரநா னீதெனவே வேறு வேறுய்ச்
சிறுமைகரும் பேதமதி செறிந்தோர்க் கெல்லா
மகண்டபரப் பிரமமதா யிருப்ப தான
வத்துவித மோட்சநிலை யணுகா தென்றும்
புகன்றபடி யகம்பிரம நிச்ச யத்தைப்
பொருந்தினரே பூரணமா முத்தி சார்வர். (27)

ஆன்மாவிற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மதிட்டான வான்மாவுக் கயலே யாகா
தான்மாவே யகண்டபரப் பிரம மாகு
மகண்டபரப் பிரமமதே யான்மா வாகு
மான்மாவுக் கபின்னபரப் பிரமந் தன்னை
யகம்பிரம விருத்தியினு லறிந்தெப் போது
மான்மாவுக் கபின்னபரப் பிரம மாகி
யசஞ்சலமா யிருப்பதுவே யகண்ட மோட்சம். (28)

ஆன்மாவுக் கயலாக வணுவு மில்லை
யணுவுமில்லை யணுவுமில்லை யணுவு மில்லை
யான்மாவிற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மான்மாவா யான்மாவா மான்மா வேயா
மான்மாவே யகண்டசிதா காய மான
வத்துவித பரப்பிரம சொரூப மாகு
மான்மாவே யத்யந்த சாந்தமான
வகண்டபரி பூரணமாம் பிரம மாமே. (29)

ஆன்மாவே யகண்டசிவ வடிவ மாகு
மான்மாவே யருளுமுமா தேவி யாகு
மான்மாவே யயன்முதலும் மூர்த்தி யாகு
மான்மாவே யவர்சத்தி யனைத்து மாகு
மான்மாவே யமரர்நரர் நிரியக் காகு
மான்மாவே யநந்தசரா சரங்க ளாகு
மான்மாவே யணுவுமிலாத் தேக மாகு
மான்மாவே யகண்டபரப் பிரம மாமே. (30)

ஆன்மாமே சகலபரி பூன்ற மாகு
மான்மாவே சத்தியசிற் சுகமு மாகு
மான்மாவே நித்தியநிர்க் குணமு மாகு
மான்மாவே நிரந்தரநிட் களமு மாகு
மான்மாவே யத்யந்த சுத்த மாகு
மான்மாவே யமலபரா காய மாகு
மான்மாவே யத்துவித சொரூப மாகு
மான்மர்வே யகண்டபரப் பிரம மாமே. (31)

ஆன்மாவே சன்மயமாம் பிரம மாகு
மான்மாவே சதாநந்தப் பிரம மாகு
மான்மாவே சின்மயமாம் பிரம மாகு
மான்மாவே சிதாநந்தப் பிரம மாகு
மான்மாவே தன்மயமாம் பிரம மாகு
மான்மாவே தனித்தபரப் பிரம மாகு
மான்மாவே நின்மலமாம் பிரம மாகு
மான்மாவே நிறைந்தபரப் பிரம மாமே. (32)

ஆன்மாவே நித்தபரப் பிரம மாகு
மான்மாவே சுத்தபரப் பிரம மாகு
மான்மாவே புத்தபரப் பிரம மாகு
மான்மாவே முத்தபரப் பிரம மாகு
மான்மாவே யசலபரப் பிரம மாகு
மான்மாவே யசங்கபரப் பிரம மாகு
மான்மாவே யமலபரப் பிரம மாகு
மான்வே யகண்டபரப் பிரம மாமே. (33)

அகண்டபரி பூரணமா மான்மா வான
வகம்பிரம மென்றுணரு ஞானத் துக்குச்
சகந்தனிலே சமமான தெதுவு மில்லை
சார்ற்றியஷிஞ் ஞானத்துக் கதிக மேது
வகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றறிகின்ற வகண்டான்ம ஞானம் பெற்றோர்
தகும்பிரம மாத்திரமாய்த் தளர்வு தீர்ந்து
தான்றுணைத் தனிக்கின்ற முத்தி சார்வர். (34)

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே யகமென்று மகம தென்றும்
வெகுநிடமா மகம்பிரம நிச்ச யந்தான்
விமலான்ம ஞானமென விளம்ப லாகுந்
தகுமகனே யாதலினு னீயெப் போதுந்
தடையறவே யகம்பிரம நிச்ச யத்தை
மிகவுரமாய்ப் பெற்றதனற் பந்த நீக்கி
மெய்யுணர்வா நந்தபரப் பிரம மாவாய். (35)

அகம்பிரம நிச்சயமே யான்ம ஞான
மகம்பிரம நிச்சயமே பிரம ஞான
மகம்பிரம நிச்சயமே யகண்ட ஞான
மகம்பிரம நிச்சயமே யமல ஞான
மகம்பிரம நிச்சயமே துன்பந் தீர்க்கு
மகம்பிரம நிச்சயமே யின்பஞ் சேர்க்கு
மகம்பிரம நிச்சயமே பந்தம் போக்கு
மகம்பிரம நிச்சயமே பிரம மாக்கும். (36)

அகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வநேகமகா பாவமெலா மடைவாய்த் தீர்க்கு
மகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வலகில்விகற் பங்களையு மடைவாய்ப் போக்கு
மகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வநந்தவித வாதனையு மடைவாய் நீக்கு
மகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வத்யாச மனைத்தையுமே யடைவாய்த் தீர்க்கும். (37)

அகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வஞ்ஞான சந்ததக மனைத்தும் போக்கு
மகம்பிரம நிச்சயமே யகத்தி லுள்ள
வநேகவித விபரீத தோட நீக்கு
மகம்பிரம நிச்சயமே யான்மா வின்க
ணசஞ்சலமா யமர்கின்ற சமாதி நல்கு
மகம்பிரம நிச்சயமே பதிபந் தங்க
ளணுவுமிலா வபமோட்ச ஞான நல்கும். (38)

அகம்பிரம நிச்சயமே சுபாவ மான
வகண்டபர ரூபத்தி னிலைக்க வைக்கு
மகம்பிரம நிச்சயமே யனிய மற்ற
வபயபத நிட்டையினிற் சேர்த்து வைக்கு
மகம்பிரம நிச்சயமே சீவன் முத்தி
யாகுமகண் டாநந்த நிலைமை நல்கு
மகம்பிரம நிச்சயமே யகண்ட மான
வசரீர மோட்சநிலை யளிக்கு மன்றே. (39)

அகம்பிரம நிச்சயமே வேதாந் தங்க
ளனைத்தினுமே முடிவாகப் புகல்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே சாட்சாத் தாக
வலகில்மகா வாக்குகளு மறைசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யாயுங் காலை
யநேகவித வாகமமும் பகர்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யாயுங் காலை
யநந்தவித நூற்களுமே புகல்சித் தாந்தம். (40)

அகம்பிரம நிச்சயமே யுபநி டங்க
ளாகுமவை யறிவித்த பரசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யாயுங் காலை
யநேகவித மிருதிகளும் பகர்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யாயுங் காலை
யநந்தவிதி காசமுமே புகல்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யாயுங் காலை
யகிலபுரா ணங்களுமே பகர்சித் தாந்தம். (41)

அகம்பிரம நிச்சயமே யனைத்துங் கண்ட
வகிலசகன் ஞயகனுஞ் சிவன்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யகண்ட போத
மருளியிடு மம்பிகையின் றிடசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே விநாய காதி
யானசிவன் றனயருடை நிகழ்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யகண்ட ஞான
மடைந்தசிவ பத்தர்களின் றிகழ்சித் தாந்தம். (42)

அகம்பிரம நிச்சயமே யான்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யரிசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யயன்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யினன்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே சுரர்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே முனிசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யென்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே பார்சித் தாந்தம். (43)

அகம்பிரம நிச்சயமே யாசா லுலே
ரகிலருமே யறிவிக்குத் திடசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே சீட ராலே
ரகிலருமே யறிகின்ற பரசித் தாந்த
மகம்பிரம நிச்சயமே யகண்ட போத
மடைந்தவர்க ளெல்லோர்க்குந் திகழ்சித் தாந்த
மகம்பிரம நிச்சயமே சித்தாந் தங்க
ளனைத்திற்கு மேலாக நிகழ்சித் தாந்தம். (44)

அகம்பிரம நிச்சயமே மகத்தாங் கங்கை
யகம்பிரம நிச்சயமே மகத்தாந் தீர்த்த
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தான
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தன்ம
மகம்பிரம நிச்சயமே மகத்தாம் பூசை
யகம்பிரம நிச்சயமே மகத்தா மந்திர
மகம்பிரம நிச்சயமே மகத்தாந் தியான
மகம்பிரம நிச்சயமே மகத்தா நிட்டை. (15)

அகம்பிரம நிச்சயமே மகத்தாம் யோக
மகம்பிரம நிச்சயமே மனத்தி ஞச
மகம்பிரம நிச்சயமே சித்தத் தியாக
மகம்பிரம நிச்சயமே சகலத் தியாக
மகம்பிரம நிச்சயமே சுவாது பூதி
யகம்பிரம நிச்சயமே சுத்த ஞான
மகம்பிரம நிச்சயமே சீவன் முத்தி
யகம்பிரம நிச்சயமே விதேக முத்தி. (46

அகம்பிரம நிச்சயமே யடைந்தோர்க் கல்லா
லன்னியருக் கான்மநிலை யமைவ தில்லை
யகம்பிரம நிச்சயமே யடைந்தோர்க் கல்லா
லன்னியருக் கனுதிபவந் தொலைவ தில்லை
யகம்பிரம நிச்சயமே யடைந்தோர்க் கல்லா
லன்னியருக் கரந்தையெலா நசிப்ப தில்லை
யகம்பிரம நிச்சயமே யடைந்தோர்க் கல்லா
லன்னியருக் ககண்டசுகங் கிடைப்ப தில்லை. (47)

அகம்பிரம நிச்சயமே திடமாய்ப் பெற்றோர்க்
ககண்டபர வான்மநிலை யமைவ தாகு
மகம்பிரம நிச்சயமே திடமாய்ப் பெற்றோர்க்
கனுதிபவ பந்தமெலாந் தொலைவ தாகு
மகம்பிரம நிச்சயமே திடமாய்ப் பெற்றோர்க்
கநந்தவித வாந்தையெலா நசிப்ப தாகு
மகம்பிரம நிச்சயமே திடமாய்ப் பெற்றோர்க்
ககண்டபர மானந்தங் கிடைப்ப தாமே. (48)

ஆதலினு லகம்பிரம நிச்ச யத்துக்
கன்னியமா மூபாயமெலாந் தூரத் தள்ளி
பேதமனே விகற்பமெலாந் தீரு மட்டும்
பிரியமுட னனவரத மிடைவி டாமற்
சாதகமா மகம்பிரம நிச்ச யத்தைச்
சலியாது மூமுட்சுவெலாம் பழக வேண்டு
மீதையலான் மோட்சநிலை பெறுவ தற்கிங்
கெளிதான வுபாயந்தா னெவையு மில்லை. (49)

பரமான வன்புடனே பாசி வத்தைப்
பாங்காக வாராதித் தருள்பெற் றோர்க்கே
யுரமான வகம்பிரம நிச்ச யந்தா
னானமற வுள்ளத்தி லுதியா நிற்குந்
திரமான வகம்பிரம நிச்ச யத்தைத்
தியக்கமறச் செறிந்தவரே முத்த ராவர்
வரமான பரமசிவ பதந்தன் னுணை
வகுத்ததிலோ ரையமிலை வாய்மை தானே. (50)

அருள்வடிவாம் பரமசிவன் கருணை யாலே
யகிலர்க்கு மிதமாக வருளிச் செய்த
நிருமலமா மகண்டபர நிச்ச யத்தை
நிதாகனினக் கிவ்வண்ண நிகழ்த்த லாலே
மருவமிக வரிதான விவ்வர்த் தத்தை
மாசற்ற மனதுடனே கேட்டு ணர்ந்தோ
ரொருவடிவாம் பரப்பிரம சொரூப மாவ
ரோதியதி லேயமில யுண்மை தானே. (51)

பரமசிவன் கருணையினு லருளிச் செய்த
பரிசாக சிவமுனிவ னிதாக னுக்கிங்
கிருமையிலா வகண்டார்த்த நிர்ண யத்தை
யிதமாகத் தெரிவித்தா னெனவே கந்த
னுரியகுண மேலான சைகே ஷவ்யற்
குத்தமமா மிப்பொருளே யுரைத்தா னென்றே
சருவமுமே சங்கையற வறிந்த சூதன்
சகலமகா முனிவர்க்குஞ் சாற்றி னானல். (52)

வேறு.

சிற்பரந்தனிற் கற்பிதமியாவுமே சிறிதுமில்லையி லையெனநேதிசெய்
தற்பமற்றற மிஞ்சியசிற்பர மகமதாமக மப்பரமேயெனுந், தற்பத
த்தொ டகம்பதவைக்கியந் தன்னினிண்ணய மிங்குரைசெய்திட
னிர்ப்பயாநந்தத்தாண்டவமாடுநந் நிகரிலீச னகண்டசொரூபமே.(53)

முப்பத்திரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 30-க்கு நிருவிருத்தம் 1533.

மூ ப் ப த் தை ந் தா வ து

அத்துவிதநிச்சயஞானத்தி லான்மாவிலமர்கின்ற சமாதி யுரைக்கும் அத்தியாயம்.

சகலவதிட் டானபரப் பிரம மன்றிச்
சகத்தோற்றஞ் சற்றேனு மில்லை யென்று
மகிலமுமே சக்தியசிற் சுகமாய் நின்ற
வான்மாவுக் கபின்னபரப் பிரம மென்றும்
வெகுகிடமா முறுதியுட னகண்டான் மாவில்
வேறறவே நிற்பதுவா நிட்டை தன்னை
நிகிலசக லுயகளும் பரேசன் முன்ன
நிகழ்த்தியவா நிதாகனினக் கிங்குச் சொல்வாம். (1)

அருவுருமா மான்மாவுக் கபின்ன மான
வகண்டைக ரசவடிவாம் பிரமத் தின்கட்
பிரிவெனவே தோற்றியிடு நாம ரூப
பேதமெலாம் விசாரிக்கிற் பிறிதே யில்லை
சருவமுமே சாந்தபரப் பிரம மென்றுஞ்
சலனமிலா வப்பிரம நானே யென்று
நிருமலமா முறுதியினு லனைத்துந் தள்ளி
நின்னுடைய நிசவடிவி னிலைத்து நிற்பாய். (2)

சித்தமுதற் றோற்றியிடுந் தோற்ற மெல்லாஞ்
சின்மயமாம் பிரமமலா திலவே யில்லை
புத்திமுதற் றோற்றியிடுந் தோற்ற மெல்லாம்
பூரணமாம் பிரமமலா திலவே யில்லை
யெத்துவிதத் தோற்றமுமே பிரம மென்று
மேகபரி பூரணமா மதுநா னென்று
மத்துவித வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மா லமர்ந்து நிற்பாய். (3)

இருளென்று மொளியென்று மிதர மென்று
மிதுவென்று மதுவென்று நீநா னென்று
மருளென்றுந் தெருளென்று மாயை யென்று
மனதென்று மனோமயமாம் விகார மென்று
முருவென்று மருவென்று மொன்று மில்லை
யுள்ளதெலாம் பரமென்று மதுநா னென்று
மருளொன்று முறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (4)

சசனென்று மிவன்செயலாஞ் சகத்தி தென்றும்
யானிங்கோர் சீவனென்றுஞ் சனிப்போ னென்றும்
பாசமதாற் பெத்தனென்றும் பதைப்போ னென்றும்
பாலனென்றும் விருத்தனென்று நசிப்போ னென்றும்
பேசுமனோ மயக்கங்க ளிலவே யில்லை
பின்னமிலாப் பிரமமெனா மதுநா னென்றே
யாசணுகா வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (5)

சிவனென்று மரியென்றும் விரிஞ்ச னென்றுஞ்
சிருட்டியென்றுந் திதியென்று நாச மென்றுந்
தவமென்றுஞ் செபமென்றுந் தீர்த்த மென்றுந்
தானமென்றுந் தெய்வமென்றுஞ் சேவை யென்றுங்
கவருற்ற மயக்கங்க ளொன்று மில்லை
களங்கமிலாப் பிரமமெலா மதுநா னென்றே
யவமற்ற வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (6)

விதம்விதமாய் வேதத்கால் விதித்த தென்றும்
விரிவுறவே நூற்களினுல் விதித்த தென்றும்
மதமதமாய் மதிக்கின்ற பொருளீ தென்று
மாயைமுத லுளதென்று மில்லை யென்று
மிதுமுதலா மயக்கங்க ளெவையு மில்லை
யேகபரப் பிரமமெலா மதுநா னென்றே
யதிநிடமா முறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (7)

இல்லையென்று முள்ளதென்று மிருமை யென்று
மேகமென்று மநேகமென்று மெல்லா மென்றுந்
தொல்லையென்றும் புதுமையென்று மண்மை யென்றுந்
தூரமென்றுந் துக்கசுக முதலீ தென்றுஞ்
சொல்லியவிம் மயக்கமெலாஞ் சுத்தப் பொய்யே
சுகனமாம் பிரமமெலா மதுநா னென்றே
யல்லலிலா வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (8)

நனவுகனச் சுழுத்தியென்றுந் துரிய மென்று
நாடியிடுந் தூலமுதற் றேக மென்றும்
பனுவியிடு மவையினபி மானி யென்றும்
பலவிதமாம் வியட்டியென்றுஞ் சமட்டி யென்று
மனதினுடை மயக்கமெலாஞ் சுத்தப் பொய்யே
மகத்தான பிரமமெலா மதுநா னென்றே
யனகநிட வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (9)

வெகுவிதமாம் பாவமென்று மறங்க ளென்றும்
விசித்திரமாம் விதியென்று நிடேத மென்றுஞ்
சகுணவுபா சனையென்றும் பத்தி யென்றுஞ்
சகுணத்தின் ஞானமென்றுஞ் சதசத் தென்றும்
பகருமலே மயக்கங்க ளொன்று மில்லை
பங்கமிலாப் பிரமமெலா மதுநா னென்றே
யகமருவு முறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (10)

நிருமலமாஞ் சொரூபத்தின் றியான மென்று
நிர்க்குணமாஞ் சொரூபத்தின் ஞான மென்று
மிருமையினு லுறுகின்ற பந்த மென்று
மேகமதா யிருக்கின்ற மோட்ச மென்றுஞ்
சருவவித விகற்பமுமே சற்று மில்லை
சலனமிலாப் பிரமமெலா மதுநா னென்றே
யரியநிட வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (11)

சத்துடனே யசத்தினுடை விசார மென்றுஞ்
சமுடனே யசத்தின் விசார மென்றுஞ்
சித்துடனே யசித்தினுடை விசார மென்றுஞ்
சிறுமையுடன் பெருமையதன் விசார மென்று
மித்துவித விகற்பமெலா மென்று மில்லை
யேகபரப் பிரமமெலா மதுநா னென்றே
யத்துவித வுறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (12)

குணமுடனே யகுணத்தின் விசார மென்றுங்
கூடியவான் மாணன்ம விசார மென்றுந்
தூணியுடனே யத்துவித விசார மென்றுந்
துக்கசுக முதலியதின் விசார மென்று
மெணுமனதின் விகற்பமெலா மிலவே யில்லை
யிருமையுறுப் பிரமமெலா மதுநா னென்றே
யணுகியிடு முறுதியினு லனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (13)

சகமெவையு மத்யந்த மசத்தே யென்றுஞ்
சலனமிலாப் பரமொன்றே சத்தா மென்று
மகில்மூமே யத்யந்த மசத்தே யென்று
மான்மாவே யநவரதஞ் சத்தா பென்று
மிகழ்வுபெரு வான்மாவே பிரம மென்று
மிருளையுருப் பிரமமதே யான்மா வென்று
மகமருவிவ் வுறுதியுமே தூரத் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (14)

பலவிதமா மந்திரமுந் தூரத் தள்ளிப்
பஞ்சமகா வக்கரமுந் தூரத் தள்ளி
யிலகியவட் டாக்கரமுந் தூரத் தள்ளி
யிவையோதுங் குரவரையுந் தூரத் தள்ளி
கிலமருவா வசனமெலாந் தூரத் தள்ளி
நிகழ்த்தியிடா மவுனமுமே தூரத் தள்ளி
யூலமனதின் விகற்பங்க ளனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (15)

சாரமுட னசாரமுமே தூரத் தள்ளிச்
சத்துடனே யசத்தையுமே தூரத் தள்ளித்
தீரமுட னதீரமுமே தூரத் தள்ளித்
திரிகுணமோ டறுகுணமுந் தூரத் தள்ளிக்
காரணகா ரியமெவையுந் தூரத் தள்ளிக்
கற்பிதமாய்க் காண்பதெலாந் தூரத் தள்ளி
யாரணமே முதலியதா மனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (16)

கூடியிடும் பொருணினவுந் தூரத் தள்ளிக்
கூடாத பொருணினவுந் தூரத் தள்ளி
நாடியிடும் பொருணினவுந் தூரத் தள்ளி
நாடாத பொருணினவுந் தூரத் தள்ளி
பாடியிடும் பாநினவுந் தூரத் தள்ளிப்
பகுப்புற்ற விகநினவுந் தூரத் தள்ளி
யாடியிடு முளத்தினினை வனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (17)

காமமொடு கோபமுத லினைத்துந் தள்ளிக்
கருவமுட னிடம்பமுத லினைத்துந் தள்ளித்
தோமருவு மோகமுத லினைத்துந் தள்ளித்
துவிதமொடுத் துவிதமுத லினைத்துந் தள்ளி
நாமமொடு வுருவமுத லினைத்துந் தள்ளி
நாம்பரென் றிவைமுதலா மினைத்துந் தள்ளி
யாமலவென் றறிவுற்ற தினைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (18)

மோகமனம் புந்தியகங் காரஞ் சித்த
முயலுமுயி ருடல்கருவி புலன்கண் மாயை
பாகமுறுஞ் சீவபர சகங்க ளென்னும்
பலவிதமா முபாதியுமே நேதி பண்ணி
யேகமதாந் கற்பதமோ டகம்ப தத்தி
னியல்பான வைக்கியநன் கறிந்தே யத்தா
லாகுமவை விகற்பங்க ளினைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (19)

ஆன்மாவிற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மான்மாவுக் கயலாக வில்லை யென்று
மான்மாவே யகண்டபரப் பிரம மென்று
மகண்டபரப் பிரமமதே யான்மா வென்று
மான்மாவுக் கபின்னபரப் பிரமந் தானே
யகமென்று மதிதிடமா யறிந்தே யத்தா
லான்மாவுக் கயலான தினைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (20)

நிரந்தரமா மறிவான வெண்ணி டத்தி
னிகிலமுமே கற்பிதமாய்த் தோற்ற லாலே
பொருந்தியவக் கற்பிதமாந் தோற்ற மெல்லா
பூரணமா மறிவான வகமே யென்றும்
விரிந்தவறி வானவகம் பிரம மென்றும்
வேறற்ற வபேதபர ஞானத் தாலே
யருந்தவனே பேதமதி யினைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (21)

மருபுவியிற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மருபுவியே யாகின்ற நீதியே போற்
கருதுமதிட் டானமதா மென்னி டத்திற்
கற்பிதமாய்க் காண்பதெலா மகமே யென்றும்
பிரிவுபெரு வவ்வகமே பிரம மென்றும்
பின்னமிலா வபேதபர ஞானத் தாலே
யரியவனே பேதமதி யனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (22)

என்னிடமாய்க் கனவினிடைக் காண்ப தெல்லா
மெனக்கயலே யில்லாத நீதி யேபோ
லென்னிடமாய் நனவினிடைக் காண்ப தெல்லா
மெனக்கயலா யெப்போது மிலவே யில்லை
யன்னியமே யிலாதவகம் பிரம மென்றே
யயலற்ற வபேதபர ஞானத் தாலே
யன்னியமாம் பேதமதி யனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (23)

சத்தியமாய்ச் சகத்துமுத லிருக்கு மாகிற்
சலனமறச் சுழுத்தியிலு மிருக்க வேண்டு
மித்தனையுஞ் சுழுத்தியினி லிலாமை யாலே
யிவையாவுங் கனவெனவே மித்தை யென்னு
நித்தியமாய் நின்றவகம் பிரம மென்னு
நிருமலமா மபேதபர ஞானத் தாலே
யத்திரமாம் பேதமதி யனைத்துந் தள்ளி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (24)

மனதினுடை விருத்தியுதிப் பதற்கு முன்னு
மற்றந்த விருத்திநசித் திட்ட பின்னுங்
தினையளவு மில்லாத சகசீ வாதி
தியங்குமனை விருத்தியினன் மத்தி யத்திற்
கனமதுவா யிருப்பதெனக் தோற்றி னுலுங்
களங்கமறச் சோதிக்கி லில்லை யென்றே
யனியமெலா மத்யந்த நேதி பண்ணி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (25)

நித்திரையின் மனதுமில்லை சகசி வாதி
நினைவுமில்லை நிகழ்கனவின் மனது முண்டு
வித்தரமாஞ் சகத்துமுத னினைவு முண்டு
விளம்பியவிவ் வன்னுவய வெநிரே கத்தாற்
சித்தமய மாகினவிச் சகசி வாதி
சிறிதேனுஞ் சோதிக்கி லில்லை யென்றே
யத்திரமா நினைவையெலா நேதி பண்ணி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (26)

மனதுமில்லை மனோமயமாம் விகார மில்லை
மனதுமுதற் கேதுவெனு மாயை யில்லை
நனவுமில்லை கனவுமில்லை துயிலு மில்லை
நாமமில்லை ரூபமில்லை நானீ யில்லை
பினுமெவையு மெப்போது மில்லை யென்றே
பேதமெலாம் விசாரத்தா னேதி பண்ணி
யனியமிலா வகண்டபர வடிவே யாகி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (27)

சர்ப்பமுதற் கற்பிதமிங் காயுங் காலை
சகசவதிட் டானமதா மிரச்சு வன்றிச்
சொற்பமுமே வேறிலதா நீதியே போற்
சுத்தமதிட் டானமதா மென்னை யன்றிக்
கற்பிதமா மெப்பொருளு மில்லை யென்றே
களங்கமுரு வுகத்தா னேதி பண்ணி
யற்பமிலா வகண்டபர வடிவே யாகி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (28)

கடமடமென் றுணர்வுற்ற வுபாதி நீக்கிற்
கடவிண்ணு மடவிண்ணு மொன்றே போல
மடமைமுதற் சீவபர வுபாதி நீக்கின்
மாசற்ற சிவபர மிரண்டு மொன்றென்
றிடமருவு மூகத்தாற் பாசி வைக்ய
வியல்புதனை யிருமையற வறிந்தே யத்தா
லடருமகண் டாகார சொரூப மாகி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (29)

சோயமெனச் சொல்லியிடும் வாக்கி யத்திற்
சோதித்து விருத்காம்ச நீக்கும் போதங்
காயசக சைக்கியமே யறியு மர்த்த
மவ்விதமே தத்வமசி வாக்கி யத்து
மேயமதாம் விருத்தாப்ச மனைத்து நீக்கி
யியல்பான வைக்கியமே யறிந்தே யத்தா
லாயமனே பேதமெனா மிழந்தெப் போது
மசஞ்சலமா யான்மாவி லமர்ந்து நிற்பாய். (30)

கற்பிதமாஞ் சீவபர வுபாதி யெல்லாங்
களங்கமற விசாரித்து நேதி செய்து
தற்பத லட்சியமான பிரம ரூபந்
துவம்பத லட்சியமான நானே யென்னு
நிர்ப்பயமா யகண்டார்த்த போதம் பெற்று
நீக்கவொணாப் பவபந்த மனைத்து நீக்கி
யற்பமிலா வகண்டார்த்த வடிவே யாகி
யந்வாத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (31)

செகம்பரநா னீயெனவே வேறு வேறுய்ச்
செப்பியிடும் பேதங்கள் சிறிது மில்லை
தகும்பிரமந் தனக்கயலாய் நானு மில்லை
தற்பிரமந் தானுமெனக் கயலா யில்லை
புகன்றதெலா மகண்டபரப் பிரம மென்னும்
பூரணமா மப்பிரம நானே யென்னு
மகண்டபர ஞானத்தா லனைத்துந் தள்ளி
யநவாத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (32)

சுத்தியசிற் சுகனமாம் பிரம நானே
சதசத்துக் கப்பாலாம் பிரம நானே
நித்தியநிட் களமான பிரம நானே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம நானே
சுத்தவறி வானபரப் பிரம நானே
சுயஞ்சோதி யானபரப் பிரம நானென்
றத்துவித ஞானத்தா லனைத்துந் தள்ளி
யநவாத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (33)

நசுவரமாந் தேகமிலாப் பிரம நானே
ஸாநாவா மவத்தை யிலாப் பிரம நானே
விசுவன்முதல் வியட்டியிலாப் பிரம நானே
விராட்டுமுதற் சமட்டியிலாப் பிரம நானே
பசுபதிபா சங்களிலாப் பிரம நானே
பரமபர மெவையுமிலாப் பிரம நானென்
றசுகமிலா ஞானத்தா லணைத்துந் தள்ளி
யநவரத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (34)

தொந்தமுறுத் துரியபரப் பிரம நானே
துரியத்து மதீதபரப் பிரம நானே
சந்ததமுஞ் சலனமிலாப் பிரம நானே
சாந்தத்துஞ் சாந்தபரப் பிரம நானே
பந்தமுடன் மோட்சமிலாப் பிரம நானே
பரவுசிதா காயபரப் பிரம நானென்
றந்தமிலா ஞானத்தா லணைத்துந் தள்ளி
யநவரத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (35)

நாசமிலா நித்தபரப் பிரம நானே
நழுவாத சித்தபரப் பிரம நானே
மாசணுகாச் சுத்தபரப் பிரம நானே
மகத்தான புத்தபரப் பிரம நானே
பாசமிலா முத்தபரப் பிரம நானே
பரிச்சேத ரகிதபரப் பிரம நானென்
றாசணுகா ஞானத்தா லணைத்துந் தள்ளி
யநவரத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (36)

தேகமுத லனென்னுந் துவித விர்த்தி
நிகழ்சாட்சி நானென்னுஞ் சாட்சி விர்த்தி
யேகபர நானென்னு மகண்ட விர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளிப்
பாகமுறு வகண்டபர விருத்தி யொன்றுற்
பகுப்பற்ற பரப்பிரம ஞானம் பெற்றிவ்
வாகமுதற் பவபந்த மணைத்து நீக்கி
யநவரத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (37)

பூரகரே சகமுதலா மியோகந் தள்ளிப்
புரிகின்ற கருமமுபா சனையுந் தள்ளிச்
சாரபிலாச் சகலவித மதமுந் தள்ளிச்
சற்பிரம பாவனையைச் செய்தே யத்தாற்
பூரணமாம் பரப்பிரம போதம் பெற்றுப்
பொய்யான பவபாச மனைத்து நீக்கி
யாரியவவ் வகண்டபர வடிவே யாகி
யநவரத மான்மாவி லமர்ந்து நிற்பாய். (38)

தூலமுதற் றேகமெலாம் பிரம ரூபந்
துஷ்டமெனத் தெரிவதெலாம் பிரம ரூபங்
காலமொடு தேசமெலாம் பிரம ரூபங்
காண்கின்ற வத்துவெலாம் பிரம ரூப
மூலமதாம் பரப்பிரம மதுநா னென்றே
முடிவான ஞானத்தா லனைத்துந் தள்ளி
யாலயமாம் பரப்பிரமா பின்ன மான
வகண்டாண்ம மாத்திரமா யமர்ந்து நிற்பாய். (39)

ஜீவபர சகமுதலாந் தோற்ற மெல்லாஞ்
சின்மாத்ர மானபரப் பிரம மென்றும்
பாவனமா மப்பிரம நானே யென்றும்
பகுப்பற்ற நானந்தப் பிரம மென்றும்
மோவலுரூப் பாவனையா லகண்ட போத
மூற்றதனற் பேதமதி யனைத்துந் தள்ளி
யாவலறப் பரப்பிரமா பின்ன மான
வகண்டாண்ம மாத்திரமா யமர்ந்து நிற்பாய். (40)

அகிலமுமே டாப்பிரம மைய மில்லை
யதுவேநா மணுவுமிதி லைய மில்லை
சகலசகன் ஞயகனும் பரேச ஞான
சாற்றியது சத்தியமே சங்கை யில்லை
தகுமகனே யாதலினு லென்று மெல்லாந்
தற்பிரமந் தானென்று மதுநா னென்றும்
வெகுதிடமா யறிந்ததனு லனைத்துந் தள்ளி
விமலான்ம மாத்திரமாய் வெறித் திருப்பாய். (41)

சேத்தியமாய்ச் செறிவுற்ற தோற்றம் யாவுஞ்
சின்மாத்ர மானபர சிவமே யென்றும்
வேத்தியமோ ரணுவுமிலாச் சிவநா னென்றும்
வேறற்ற நானந்தச் சிவமே யென்றுஞ்
சாத்தியமாம் பாவனையா லகண்ட போதஞ்
சார்ந்ததனுற் சமூசார பாச நீக்கி
நேத்திரமாம் பரமசிவா பின்ன மான
நினதான்ம மாத்திரமாய் நிலைத்து நிற்பாய். (42)

இந்தவித மகண்டான்ம நிட்டை தன்னை
யெமதீச னியம்பியவா றிசைக்க லாலே
மைந்தவிதை யிசைத்தவண மொருகா லேனு
மாசறவே கேட்டாலும் படிப்புற் றூலு
மந்தமிலா மோட்சநிலை கிடைப்ப தாகு
மநவரதங் கேட்போரும் படிப்போர் தாமும்
பந்தமிலாப் பரமான மோட்சந் தன்னைப்
பற்றுவதிற் சற்றேனு மைய முண்டோ. (43)

அறிவுற்ற வநந்தவித நாம ரூப
மனைத்துக்கு மதிட்டான வடிவே யாக
நிறைவுற்ற வகண்டபர சிவரூ பத்தை
நிகழ்வுறவே விசாரிக்குந் தியானிப் போரே
கறையற்ற வகண்டான்ம நிட்டை பெற்றுக்
கடக்கவொணாப் பவக்கடலைக் கடப்ப ரன்றி
மறுவுற்ற மற்றவொரு செய்கை யாலு
மற்றெவரு மிக்கடலைக் கடவா ரென்றும். (44)

ஆகலினு ளான்மாவுக் கபின்ன மான
வகண்டைக ரசவடிவாம் பாசி வத்தைப்
பேதமற நன்றுக விசாரஞ் செய்து
பின்னமிலாப் பரமசிவ நாமே யென்று
சாதகமாம் பாவனையைச் செய்தே யதற்தாற்
சலனமிலா வகண்டான்ம நிட்டை பெற்றே
யேதமிகு பவக்கடலை முழுட்சு வெல்லா
மெமதீசன் றிருவருளாற் கடக்க வேண்டும். (45)

சகலசகன் ஞயகனும் பரேசன் முன்னஞ்
சாற்றியவா சிவமுனிவ னிதாக வுக்கங்
ககமுறவே யகண்டான்ம நிட்டை தன்னை
யருள்செய்தா னென்றெவையு மறிந்த கந்த
னிகழ்வணுவு மிசையாத சைவ ஷவ்யற்
கினமிலா விப்பொருளே யிசைத்தா னென்றே
யகிலமுமே யடைவாக வறிந்த சூத
னகந்தமகா முனிவர்க்கு மருள்செய் தானால். (46)

வேறு.

அகிலபூரண மாகினவத்துவே யன்றியெப்பொரு ளும்மிலையென்ன வு, மிகழ்வில்வத்துவ தேயகமென்னவு மெய்துமைக்கிய ஞானபல த்தினு, லகமிலங்கும் விகற்பமனைத்தும்விட் டான்மசிட்டையை யி ங்குப்பகர்ந்திடல், புகழுமாநந்தத் தாண்டவமாடுநம் பூரணேச ன கண்டசொரூபமே. (47)

மூப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று
ஆக அத்தியாயம் 25-க்கு திருவிருத்தம் 1580.

மூப்பத்தாறுவது

அகண்ட பரபாவனையான் மனோநாசஞ்செய்யென்றும்
அகம்பிரமபாவனையால் அஞ்ஞானதிநசிக்குமென்றும்
உரைக்கும் அத்தியாயம்

எல்லாமு மேகபரப் பிரம மென்று
மிருமையிலா வப்பிரம நானே யென்று
நில்லாத மனதுநிலை நிற்கும் வண்ண
நிமலபர பாவனையே மீண்டுஞ் சொல்வாங்
கல்லாதக் கல்வியெலாங் கற்ற போதுங்
கலக்கமற மனதுநிலை நில்லா தாகிற்
பொல்லாத பவதுக்க மொருகா லத்தும்
போகாது புகன்றதிலோ ரைய மில்லை. (1)

சத்தியசிற் சுககனமாய்ச் சாந்த மாகிச்
சகலபரி பூரணமாய்ச் சலன மின்றி
நித்தகிரா மயமாகி நிருவி கற்ப
நிராவரண நிட்கிரிய சுபாவ மான
சுத்தபரப் பிரமமலா தணுவு மில்லை
சொற்பொருளாய்க் காண்பதெலாம் பரமே யென்று
மத்துவித பரப்பிரம மதுநா னென்று
மதிதிடமாம் பாவனையான் மனதை வெல்வாய். (2)

நீக்கமிலாச் சத்தாகி நிகழுஞ் சித்தாய்
நிரதிசயா நந்தகன வடிவ மாகித்
தாக்குமொரு பற்றுமிலா வசங்க மாகித்
தான்றுனைத் தனித்தபரப் பிரம மல்லா
காக்கைமுத லொருபொருளு மென்று மில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
சூக்குமமா யுபதேச மான வெனதுறவே /
சுத்தபர பாவனையான் மனதை வெல்வாய். (3)

நிருமலமாய் நிட்களமாய் நிருவிட் சேப
நிரஞ்சனமாய் நிராகார சொரூப மாகி
நிருபமமாய் நிர்க்குணமாய் நிமலான் மாவாய்
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம மல்லா
தொருபொருளு மொருகாலு மில்லை யென்று
முள்ளதெலா மகண்டபரப் பிரம மென்று
மிருமையுரு வப்பிரம நானே யென்று
மேகபர பாவனையான் மனதை வெல்வாய். (4)

மனதுமுத லனைத்துக்கு மதீத மாகி
மாயைமக தாதிக்கு மதீத மாகி
நனவுமுத லவத்தைக்கு மதீத மாகி
நாமமுரு வெவைகட்கு மதீத மான
வனகபரப் பிரமமலா தணுவு மில்லை
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்றுங்
கனவறிவா மப்பிரம நானே யென்றுங்
கலங்காத பாவனையான் மனதை வெல்வாய். (5)

பாவனமாய்ப் பரசிவமாய்ப் பரமான் மாவாய்
பராற்பரமாய்ப் பரிபூன்ற சொரூப மாகிக்
கேவலமாய்க் கிலேசமிலாச் சுபாவ மாகிக்
கெம்பீர மானபரப் பிரம மல்லான்
மேவுபொரு ளணுவுமில்லை யென்று மெல்லா
மெய்யுணர்வா நந்தபரப் பிரம மென்று
மோவலுரு வப்பிரம நானே யென்று
மொழியாத பாவனையான் மனதை வெல்வாய். (6)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 208
(NEAR) KARAIKUDI

சகலத்தின் சான்றான பிரம நானே
சகலவிலட் சணமான பிரம நானே
நிகிலத்தும் வியாபகமாம் பிரம நானே
சித்சபரி சுத்தபரப் பிரம நானே
மிகமுத்த மானபரப் பிரம நானே
மெய்யுணர்வா நந்தகனப் பிரம நானே
யகிலத்து மதீதபரப் பிரம நானென்
றகண்டபர பாவனையான் மனதை வெல்வாய். (7)

சித்தமுதற் சிறிதுமிலாப் பிரம நானே
சின்மயமாய்ச் செறிந்தபரப் பிரம நானே
புத்திமுத லெவையுமிலாப் பிரம நானே
பூரணமாய்ப் பொருந்துபரப் பிரம நானே
யித்துவித மிறையுமிலாப் பிரம நானே
யேகபரி பூரணமாம் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானென்
றகண்டபர பாவனையான் மனதை வெல்வாய். (8)

வித்தமுதற் கெட்டாத பிரம நானே
வேறணுவுங் கிட்டாத பிரம நானே
சத்தமுதற் கோசரமாம் பிரம நானே
சதசத்துக் கப்பாலாம் பிரம நானே
சுத்தசித ரூபபரப் பிரம நானே
சுயஞ்சோதி சுபாவபரப் பிரம நானே
யத்தமுறு வமலபரப் பிரம நானென்
றகண்டபர பாவனையான் மனதை வெல்வாய். (9)

தூலமுத லொட்டாத பிரம நானே
துகளணுவும் பற்றாத பிரம நானே
காலமுதற் கெட்டாத பிரம நானே
கருத்துமுதற் சுட்டாத பிரம நானே
சாலவுப சாந்தபரப் பிரம நானே
சமுசார லேசமிலாப் பிரம நானே
யாலயமி லமலபரப் பிரம நானென்
றகண்டபர பாவனையான் மனதை வெல்வாய். (10)

ஆதிமுடி வற்றபரப் பிரம நானே
யசரீர மானபரப் பிரம நானே
சாதிகுல மற்றபரப் பிரம நானே
சட்பாவ விகாரமிலாப் பிரம நானே
போதகன மானபரப் பிரம நானே
பூரணபூ ரணமான பிரம நானே
யேதமுரு வகண்டபரப் பிரம நானென்
றேகபர பாவனையான் மனதை வெல்வாய். (11)

பழுதற்ற பரசிவமாம் பிரம நானே
பவபாச லேசமிலாப் பிரம நானே
யழிவற்ற வறிவுருவாம் பிரம நானே
யான்மாவுக் கபின்னபரப் பிரம நானே
மொழியற்ற மோனபரப் பிரம நானே
மோகமுரு மூலபரப் பிரம நானே
யிழிவற்ற வகண்டபரப் பிரம நானென்
றேகபர பாவனையான் மனதை வெல்வாய். (12)

பூதமொடு பௌதிகமும் பிரம ரூபம்
புவனமொடு பொருள்களெலாம் பிரம ரூபஞ்
சாதமுறுஞ் சகமெவையும் பிரம ரூபஞ்
சனியாத சகமெவையும் பிரம ரூபம்
பேதமெனத் தெரிவதெலாம் பிரம ரூபம்
பிரமாண்ட கோடியெலாம் பிரம ரூபம்
மாதவவப் பரப்பிரம நானே யென்று
மயக்கமறப் பாவித்தே மனதை வெல்வாய். (13)

சங்கரனு மம்பிகையும் பிரம ரூபஞ்
சண்முகனும் விநாயகனும் பிரம ரூபங்
துங்கமுறு சிவகணமும் பிரம ரூபங்
தூயசிவ பக்தர்களும் பிரம ரூபம்
பங்கமுரு சக்தியெலாம் பிரம ரூபம்
பதிபாச பசுக்களெலாம் பிரம ரூப
மங்கலுரு வப்பிரம நானே யென்று
மயக்கமறப் பாவித்தே மனதை வெல்வாய். (14)

அரனரியு மயன்வடிவும் பிரம ரூப
மவர்மருவுஞ் சத்திகளும் பிரம ரூபஞ்
சுரரசுரர் நரர்களுமே பிரம ரூபஞ்
சுழல்கின்ற திரியக்கும் பிரம ரூபஞ்
சருவசரர சரசகமும் பிரம ரூபஞ்
சகலசகத் தீசனுமே பிரம ரூப
மருண்மருவா வப்பிரம நானே யென்று
மயக்கமறப் பாவித்தே மனதை வெல்வாய். (15)

தொகுத்தாருந் தூலமுதற் பிரம ரூபந்
துவிதமொடத் துவிதமெலாம் பிரம ரூப
மிகத்தானு மன்னியரும் பிரம ரூப
மெய்யுடனே பொய்யெவையும் பிரம ரூபஞ்
சகத்தாதி தோற்றமெலாம் பிரம ரூபஞ்
சடாசடமாய்த் தெரிவதெலாம் பிரம ரூப
மகத்தான வப்பிரம நானே யென்று
மயக்கமறப் பாவித்தே மனதை வெல்வாய். (16)

ஞானகன வடிவாகும் பிரம ரூப
ஞாலமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
வானமென வடிவிலதாம் பிரம ரூபம்
வரையற்ற வத்துவதாம் பிரம ரூப
மீனமிலா வின்புருவாம் பிரம ரூப
மேகபரி பூரணமாம் பிரம ரூப
மானமுரு வப்பிரம நானே யென்று
மகிழ்வுடனே பாவித்து மனது வெல்வாய். (17)

நிறைவுக்கு நிறைவாகும் பிரம ரூப
நிகிலபரி பூரணமாம் பிரம ரூப
மறிவுக்கு மறிவாகும் பிரம ரூப
மகண்டைக ரசமாகும் பிரம ரூபங்
குறைவற்ற பொருளாகும் பிரம ரூபங்
குணாதீத வடிவாகும் பிரம ரூப
மறுவற்ற வப்பிரம நானே யென்று
மகிழ்வுடனே பாவித்து மனதை வெல்வாய். (18)

சத்தியசிற் சுககனமாம் பிரம ரூபஞ்
சாசுவதப் பொருளாகும் பிரம ரூப
நித்தியநிர்க் குணமாகும் பிரம ரூப
நிரஞ்சனநிட் களமாகும் பிரம ரூபஞ்
சுத்தசிதா காயபரப் பிரம ரூபஞ்
சுருதிமுடிப் பொருளாகும் பிரம ரூபம்
புத்திரவப் பரப்பிரம நானே யென்று
பூரணமாம் பாவனையான் மனதை வெல்வாய். (19)

காரணகா ரணமாகும் பிரம ரூபங்
களங்கமிலாப் பொருளாகும் பிரம ரூபம்
பூரணபூ ரணமாகும் பிரம ரூபம்
புரையற்ற பொருளாகும் பிரம ரூபஞ்
சீவணமில் சின்மயமாம் பிரம ரூபஞ்
சின்னமிலாப் பொருளாகும் பிரம ரூப
மாரணமி லப்பிரம நானே யென்று
மாறுத பாவனையான் மனதை வெல்வாய். (20)

கேவலகே வலமாகும் பிரம ரூபங்
கெம்பீர வடிவாகும் பிரம ரூபம்
பாவனபா வனமாகும் பிரம ரூபம்
பராற்பரமாம் பொருளாகும் பிரம ரூபஞ்
சிவபர சகமிலதாம் பிரம ரூபஞ்
சின்மாத்ர வடிவாகும் பிரம ரூப
மோவலுரு வப்பிரம நானே யென்றிங்
கொழியாத பாவனையான் மனதை வெல்வாய். (21)

ஏகபர சத்தாகும் பிரம ரூப
மெங்குமுள பொருளாகும் பிரம ரூப
மாகமிலா வறிவாகும் பிரம ரூப
மான்மாவுக் கபின்னமதாம் பிரம ரூபஞ்
சோகமிலாச் சுகமாகும் பிரம ரூபம்
சுயஞ்சோதி வடிவாகும் பிரம ரூபம்
பாகமுரு வப்பிரம நானே யென்றும்
பரப்பிரம பாவனையான் மனதை வெல்வாய். (22)

சுத்தசிதா காயமதா நிட்ப்ர பஞ்ச
சொரூபத்திற் பிரபஞ்ச மென்று மில்லை
யித்துவிதப் பிரபஞ்சம் பரமார்த் தத்தி
லிறையளவு மிலதேனும் விவகா ரத்திற்
சித்தினுடை விவர்த்தமதாஞ் சித்தங் தானே
செறிகின்ற பிரபஞ்ச மெனவே தோன்றும்
புத்திரவச் சித்தத்தைப் புகன்ற வண்ணம்
பூரணமாம் பாவனையா னுசஞ் செய்வாய். (23)

பங்கற்ற பரப்பிரம சொரூப மொன்றே
பரமார்த்த தசையிலுள வத்து வேறு
மங்குற்ற வநந்தவித சத்திக் கெல்லா
மாதார மாகவொரு மாயா சத்தி
தங்குற்ற தகுலைச் சொரூபந் தானே
தயங்கியவிச் சித்தமென விவர்த்த மாகும்
பொங்குற்ற சித்தபதே யநந்த கோடி
புவனமுதற் பொய்வடிவாய்த் தோன்று மன்றே. (24)

இருமையிலாச் சுழுத்தியினி லேக மாக
விருக்கின்ற வான்மாவே தன்னி டத்தின்
மருவியிடுஞ் சத்தியினுற் கனவின் கண்ணே
மனமுதலாய்த் தோற்றியிடு நீதி யேபோ
லொருவடிவா யுள்ளபரப் பிரமந் தானே
யொன்றியதன் சத்தியினுற் சித்தம் போலாய்ச்
சருவசக சீவபர வடிவ மாகச்
சஞ்சலமாம் விவகார தசையிற் றோன்றும். (25)

தன்னுடைய சத்தியினு லிரச்சு வொன்றே
தயங்காவு முதலிபதாய்க் காண்ப தேபோற்
றுன்னியதன் சத்தியினுற் பிரபஞ் மொன்றே
தூவிதமென விவர்த்தித்துத் தோன்றி னது
மன்னுமநிட் டானபரப் பிரமந் தன்னே
மாசறவே விசாரித்துக் காணும் போது
பின்னமென தோற்றியவிக் தேதாற்ற மெல்லாம்
பேதமிலாப் பரப்பிரம வடிவே யாகும். (26)

அரவுமுதற் பலவிதமாய்த் தோற்றி னலு
மதிட்டான விரச்சுவினை யாய்ந் தறிந்தான்
மருள்வடிவா மரவுமுத லினைத்து மந்த
மாசற்ற விரச்சுவடி வாவதே போல்
விரவுசக முதலியவாய்த் தோற்றி னலும்
விமலவதிட் டானபரப் பிரமந் தன்னை
யருமையுட னன்முக வாய்ந் தறிந்தா
லவையாவு மகண்டபரப் பிரம மாமே. (27)

அநவரத மடைவாக வாய்ந்த போது
மனுதிபவ வாதனையா லகண்ட போத
மனதினிடைப் பேதமற மருவா தாகின்
மயக்கமுறும் பேதமதி மாயு மட்டு
மனிசமெலாம் பிரமபதா மதுவே நானு
மகமந்தப் பிரமமெனு மகண்டா காரந்
தனையறியும் பாவனையைச் செய்தே யத்தாற்
றடையான பேதமதி தவிர்க்க வேண்டும். (28)

பேதமதி பொருந்தியிடுஞ் சித்தந் தானே
பிறவிமுதற் றுயர்செய்யும் பந்த நல்கு
மேதமுறும் பேதமதி யிறந்த சித்த
மின்னலெலாந் தீர்த்துடனே மோட்ச நல்கு
மாதலினு லகம்பிரம மகமெல் லாமென்
றகம்பிரம பாவனையே யனிசஞ் செய்யிற்
வாதகமாம் பேதமதி யினைத்து நீக்கி
வழுவற்ற சித்தத்தான் முத்தி சார்வாய். (29)

அகப்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றகம்பிரம பாவனையே யனிசஞ் செய்யிற்
சகம்பாரு னீதெனவே வேறு வேரூய்ச்
செறிகின்ற பேதமதி யினைத்துந் தீரும்
புகன்றவிதம் பேதமதி யினைத்துந் தீரிற்
பூரணமாம் பரப்பிரம போதந் தோன்றி
யகண்டபர வடிவாக வமர்வ தான
வத்துவித மோட்சநிலை யடைய லாமே. (30)

அகம்பிரம பாவனையாற் காமங் கோப
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லுலோப மோக
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மதமா னங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லிடம்பங் கர்வ
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (31)

அகம்பிரம பாவனையான் மனைதோ டங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மகா பாவங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மனை துக்கங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மகா பயங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (32)

அகம்பிரம பாவனையாற் றீர்த்தங் தான
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் றெய்வஞ் சேவை
யகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் றியானம் பூசை
யகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் செப தபங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை (33)

அகம்பிரம பாவனையான் மந்த்ர தந்த்ர
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மருவுங் கன்ம
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மறைக ணூற்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மனை மயக்க
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (34)

அகம்பிரம பாவனையாற் புண்ணி யங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் பொருந்து லோக
பகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் றுவந்து வங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் றுவிதத் தோற்ற
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (35)

அகம்பிரம பாவனையா லிதர சத்தை
யகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லிதர பான
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லிதர வின்ப
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லிதர சங்க
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (36)

அகம்பிரம பாவனையான் மாயா மோக
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையான் மனக் கிரந்தி
யகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லாதி வ்யாதி
யகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லத்தி யாச
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (37)

அகம்பிரம பாவனையாற் சாக்தி ராதி
யவத்தையெலா நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையா லனந்தி யான
வஞ்ஞான நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் பவபா சங்க
ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை
யகம்பிரம பாவனையாற் பாவா பாவ
மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை. (38)

அகம்பிரம பாவனையா லகண்ட ஞான
மசஞ்சலமா யடைந்திடலா மைய மில்லை
யகம்பிரம பாவனையா லனுதி தக்க
மனத்தையுமே யழித்திடலா மைய மில்லை
யகம்பிரம பாவனையா லகண்டா நந்த
மநவாத மடைந்திடலா மைய மில்லை
யகம்பிரம பாவனையா லகண்ட மோட்ச
மடைவதனி லணுவேனு மைய மில்லை. (39)

ஆதலினு லநவாத மிடைவி டாம
லகம்பிரம பாவனையைச் செய்தே யத்தாற்
பேதமதி யனத்தையுமே யிழந்தெப் போதும்
பிரிவற்ற பரப்பிரம சொரூப மாவா
யோதியதி லணுவேனு மைய மில்லை
யுத்தமமாஞ் சிவஞான யுண்மை சொன்னே
மீதகில சாத்திரமு மிசைக்கு மர்த்த
மெமதீச னியம்பியது மிவ்வர்த் தந்தான். (40)

ஆன்மாவுக் கயலான வனன்மா வென்று
மணுவுமில யணுவுமில யணுவு மில்லை
யான்மாவுக் கயலாகப் பிரம மில்லை
யப்பிரமந் தனக்கயலா யான்மா வில்லை
யான்மாவே யகண்டபரப் பிரம மாகு
மகண்டபரப் பிரமமதே யான்மா வாகு
மான்மாவா மகம்பிரம மென்னு ஞான
மடைந்தகனு லகண்டபரப் பிரம மாவாய். (41)

சகலபரி பூரணமாம் பிரம மல்லாற்
சகமுதலோ ரணுவேனு மில்லை யென்று
மகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுகானே யகமென்று மகம தென்று
நிகழ்வுறவே நித்தியமாய்ப் பழகப் பட்ட
நிமலபர பாவனையான் மனதை வென்று
மிகவுரமா மகண்டபர போதம் பெற்று
மெய்யுணர்வா நந்தபரப் பிரம மாவாய். (42)

இந்தவித மியாவர்க்கு மிதமே யாக
வேகபரி பூரணமாம் வத்துத் தானே
சுந்தரமாஞ் சிவவடிவா யெழுந்த மக்குச்
சொல்லியவிவ் வகண்டபர நிர்ண யத்தை
மைந்தனெக் குரைசெய்தே முரைத்த வண்ண
மாசற்ற விப்பொருளே யொருகா லேனும்
புந்தியுறத் திடமாகக் கேட்டு ணர்ந்தோர்
பூரணமாம் பரப்பிரம வடிவே யாவர். (43)

சருவமுமே பிரமமெனப் போதித் தாலுஞ்
சந்தகமுஞ் சருதிமுடிப் படிப்புற் றாலும்
பரமசிவன் கருணையிலா வெறுமூ டர்க்குப்
பலகால வாதனையான் மீண்டு மீண்டு
மிருமையென விதயத்திற் றெரிவ தன்றி
யாவையுமே பிரமமெனத் தெரிவ தில்லை
யரியவனே யாதலினன் முமுட்சு வெல்லா
மகண்டபர சிவகருணை யடைய வேண்டும். (44)

அமலமதாம் பூதியுட னுருத்தி ராக்க
வாரமுதற் சிவசின்ன மணித லாலு
நிமலமகா விங்கத்தி னியம மோடு
நிறைவேற்று நித்தசிவார்ச் சனையி னாலும்
விமலமதாம் வேறறவே பழகப் பட்ட
வியாபகமாம் பரமசிவத் தியானத் தாலுஞ்
சமமதுவாம் பரமசிவ கருணை யுண்டாய்ச்
சருவமுமே பிரமமெனத் தெரிவ தாமே. (45)

தெவ்வியமங் களவடிவா யெழுந்த வீசன்
றிகழ்த்தியவா ரிபுமுனிவ னிதாக னுக்குச்
செவ்வியதாய்ச் செப்பியவிந் நிர்ண யத்தைச்
சிரத்தையுடன் வினவியிடுஞ் சைகே ஷவ்யற்
கவ்விதமே சர்வஞ்ஞ னெனக் கந்த
னத்யந்த கருணையினு லறைந்தா னென்றே
தவ்வியிடா மனதுடைய முனிவர்க் கெல்லாந்
தகைமைமிகுஞ் சூதமுனி சாற்றி னனுல். (46)

வேறு.

என்றுமெங்குள வெப்பொருள்யாவையு மேகமாம்பர மப்பரநா
னென்னுங், துன்றுமைக்கிய பாவனைசெய்ததாற் றுகண்மனத்தின்
விகற்பமனைத்துமே, வென்றுபூரண போதம்பொருந்திஞல் விமல
முத்தி யடைந்திடலாமென்ன், மன்றுளாநந்தத் தாண்டவமாடுநம்
மாசிலீசனகண்டசொரூபமே. (47)

முப்பத்தாறுவது அத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம் 36-க்கு; திருவிருத்தம் 1627.

முப்பத்தேழாவது

அகண்டபரநிச்சயத்தினு லத்துவிதப்பிரம மாவாயென் றுரைக்கும் அத்தியாயம்.

சகலமறை முடிவுக்கு முடிவே யாகிச்
சாரங்க ளனைத்திற்குஞ் சார மான
மிகவுமகா ரகசியமா கிண்ண யத்தை
மெய்யுணர்வா நந்தவடி வான வீச
னகிலவித சீவர்க்கு மிதமே யாக
வுதயந்த கருணையினு லறைந்த வண்ண
நிகழ்வுறவே நிதாகநினக் கிங்குச் சொல்வா
நிச்சலமா மனதுடனே நின்று கேளாய். (1)

சருவமுமே பரப்பிரம சொரூப மன்றிச்
சருவமெனப் பிறிதாகச் சிறிது மில்லை
யிருமையுருப் பிரமமதே நஞ்சொ ரூப
மிதிலிறையு மையமிலை யீச ஞனை
யரியவனே யாதலினு லனைத்து மென்று
மகண்டபரப் பிரமமென்று மதுநா னென்றும்
பிரிவுபெருப் பூரணமா நிச்ச யத்தைப்
பெற்றதனு லெப்போதுஞ் சுகித் திருப்பாய். (2)

அகம்பிரம மென்றுரமா நிச்ச யித்தே
யாக்கைமுத லகமென்னு நினைவைத் தள்ளு
சகம்பிரம மென்றுரமா நிச்ச யித்தே
சகத்தெல்லா முண்மையெனு நினைவைத் தள்ளு
வகம்பிரமஞ் சகம்பிரம மென்றிவ் வண்ண
மநவரதந் தொடர்பாக நிச்ச யிக்கிற்
சகம்பரநா னென்னுமய றுயில்வோன் கையிற்
செறிகின்ற மலரெனவே சுயமாய் நீங்கும். (3)

வானமுதற் பூதமில்லை புவன மில்லை
வகுக்கின்ற வீசனில்லை சீவ னில்லை
நானுமில்லை நீயுமில்லை யாரு மில்லை
நாமமில்லை ரூபமில்லை யென்று மெல்லா
ஞானகன மானபரப் பிரம மென்றே
ஞானநில்லை பெறுமளவு நிச்ச யித்தாற்
பானமுறும் பேதமயல் பாத வத்தின்
பக்குவத்தின் பலமெனவே சுயமாய் நீங்கும். (4)

கேகமில்லை பொறிகளில்லை யுயிர்க்க ளில்லை
நியங்கியிடு மதியுமில்லை மனது மில்லை
யாதுமதங் காரமில்லை சித்த மில்லை
யதன்மூலாஞ் ஞானமில்லை யுணர்த்து மென்று
மேகபரப் பிரமமெனு நிச்ச யத்தை
யெப்போதுந் தப்பாம லப்யா சிக்கிற்
பாகமுறும் பலவிதமாய் பேத புத்தி
பானுவின்முன் னிருளெனவே சுயமாய் நீங்கும். (5)

நனவுமில்லை கனவுமில்லை துயிலு மில்லை
நாடியிடுந் துரியமில்லை நாநா வில்லை
பினமருவும் வியட்டியில்லை சமட்டி யில்லை
பிரிவுற்ற பிரபஞ்ச மெவையு மில்லை
யநவரத மகிலமுமே பிரம மென்று
மகண்டபர நிச்சயமிங் கடைந்தே யத்தான்
மனதினுடை விகற்பமெலா மாற்றி யென்று
மகத்தான பரப்பிரம மாத்ர மாவாய். (6)

அகிலவதிட் டானபரப் பிரமத் தின்க
ணயலெனவே கற்பிதமாய்க் காண்ப தெல்லாந்
திகழுமதிட் டானபரப் பிரம மன்றித்
தினையளவு மன்னியமா யில்லை யென்றே
தகைமைமிகும் விசாரணையா னேநி பண்ணித்
தற்பிரம நிச்சயமிங் கடைந்தே யத்தா
விகழுமலை விகற்பங்க ளனைத்து நீக்கி
யெப்போதும் பரப்பிரம மாத்ர மாவாய். (7)

அயலெனவே யறிவுற்ற துவித மென்று
மவைநீக்கு மகண்டபர விசார மென்று
மயல்வடிவாஞ் சருவமுமே மித்தை யென்று
மற்றவையு மத்யந்த மசத்தே யென்றும்
பயிலலுறு மிவ்விதமாந் தோற்ற மெல்லாம்
பகுப்பற்ற பரப்பிரம சொரூப மென்றே
யயலணுகா வகண்டபர நிச்ச யத்தா
லத்துவித பரப்பிரம மாத்ர மாவாய். (8)

நித்தமுட னனித்தத்தின் விவேக மென்று
நிகழ்கின்ற குணதோட விவேக மென்றும்
பத்தனெடு முத்தனுடை விவேக மென்றும்
பாவமுட னபாவத்தின் விவேக மென்றும்
விக்தாமாய் விளங்கியவித் தோற்ற மெல்லாம்
விபுவான விமலபர சொரூப மென்றே
யத்தமுரு வகண்டபர நிச்ச யத்தா
லத்துவித பரப்பிரம மாத்ர மாவாய். (9)

சருதிமுதற் பலவிதமா நூற்க ளென்றுஞ்
சொல்லியிடு மாசிரியர் சீட ரென்றுந்
திருசியமாந் தேகமுத லனே யென்றுந்
திருக்குருவாம் ப ப்பிரம நானே யென்றும்
பிரிவுறவே பிறங்கியவித் தோற்ற மெல்லாம்
பின்னமிலாப் பரப்பிரம சொரூப மென்றே
மருவியவிவ் வகண்டபர நிச்ச யத்தான்
மகத்தான பரப்பிரம மாத்ர மாவாய். (10)

அகமனிசம் பாசமுறுஞ் சீவ னென்று
மகமனிசம் பந்தமிலாப் பிரம மென்றும்
விகலமுறுஞ் சகமுதலீ தண்மை யென்றும்
விசித்திரமாஞ் சகமுதலீ தில்லை யென்றும்
வெகுவிதமாய் விளங்கியவித் தோற்ற மெல்லாம்
வியாபகமாம் பரப்பிரம சொரூப மென்றே
மகிமைமிகு மகண்டபர நிச்ச யத்தான்
மகத்தான பரப்பிரம மாத்ர மாவாய் (11)

தினந்தவிரா நியற்றியிடுங் கரும மென்றுந்
திடமாகச் செய்கின்ற பத்தி யென்று
மனந்தவித தெய்வவுபா சனைக ளென்று
மத்தெய்வ மூர்த்திகளின் பூசை யென்று
மனந்தனிலே மருவியவித் தோற்ற மெல்லா
மகத்தான பரப்பிரம சொரூப மென்றே
கனந்தவிரா வகண்டபர நிச்ச யத்தாற்
களங்கமிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (12)

எனதெனதென் றெண்ணியிடு மமதை யென்று
மியானியானென் றெண்ணியிடு மகந்தை யென்றும்
பினமருவும் வாகியமாம் விடய மென்றும்
பிரிவுற்ற வாந்தாமாம் விடய மென்று
மினமருவு மிவ்வித்தமாந் தோற்ற மெல்லா
மிருமையிலாப் பரப்பிரம சொரூப மென்றே
கனமருவு மகண்டபர நிச்ச யத்தாற்
களங்கமிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (13)

வானமுதற் பஞ்சமகா பூத மென்றும்
வசனமுதற் பஞ்சவித விடய மென்று
மானியுறு மநந்தவித வுலக மென்று
மளவற்ற பிரமாண்ட கோடி யென்று
மூனமுறு மிவ்வித்தமாந் தோற்ற மெல்லா
முணர்வுருவாம் பரப்பிரம சொரூப மென்றே
யீனமுறு வகண்டபர நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (14)

செறிகின்ற விதிமுதலும் மூர்த்தி யென்றுஞ்
சிருட்டிமுத லைந்துவித கிருத்யமென்று
மறிகின்ற சுரர்முனிவர் நரர்க ளென்று
மலைவுற்ற வநேகவித நியாய மென்று
நெறிகொண்ட விவ்வித்தமாந் தோற்ற மெல்லா
நிருமலமாம் பரப்பிரம சொரூப மென்றே
யிறுகின்ற வகண்டபர நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (15)

தடமருவுந் தீர்த்தங்க டலங்க ளென்றுந்
தயங்கியிடுந் தேவதைகள் சேவை யென்று
மடவிகிரி வாரிதிக ணதிக ளென்று
மங்குற்ற வநேகவித வுயிர்க ளென்றுந்
தொடர்புறுமித் துஷ்டத்தின் தோற்ற மெல்லாந்
துகளற்ற பரப்பிரம சொரூப மென்றே
யிடமருவு மகண்டபர நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (16)

புத்தியுடை நிச்சயமாம் விருத்தி யென்றும்
புகன்மனதின் சந்தேக விருத்தி யென்றும்
விதத்தரமாய்ச் சிந்தைசெயும் விருத்தி யென்றும்
விதம்விதமா மபிமான விருத்தி யென்றுஞ்
சித்திரமாய்த் தோற்றியவிவ் விருத்தி யெல்லாஞ்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மென்றே
சுத்தமுறு மகண்டபர நிச்ச யத்தாற்
சுகனமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (17)

தேகமென்றும் பொறிகளென்று முயிர்க ளென்றுந்
தியங்கியிடு மனதென்றும் புந்தியென்று
மாகுமகங் காரமென்றுஞ் சித்த மென்று
மனைத்திற்குங் காரணமா மவித்தை யென்றும்
பாகமுறத் தோற்றியவித் தோற்ற மெல்லாம்
பகுப்பற்ற பரப்பிரம சொரூப மென்றே
சோகமுறு மகண்டபர நிச்ச யத்தாற்
சுகனமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (18)

மாயையென்று மவித்தை யென்றுஞ் சீவனென்று
மகேசனென்றுஞ் சீவபர வகுப்பீ தென்று
மாயபல வியட்டியென்றுஞ் சமட்டி யென்று
மதிகமென்றுந் தாழ்விதென்றுஞ் சமமீ தென்று
மேயமுறு மிவ்விதமாந் தோற்ற மெல்லா
மிலங்கியசிற் பரப்பிரம சொரூப மென்றே
நேயமுறு மகண்டபர நிச்ச யத்தா
னிருமலமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (19)

தூலமதாம் வியட்டியென்றுஞ் சமட்டி யென்றுஞ்
சூக்குமமாம் வியட்டியென்றுஞ் சமட்டி யென்று
மூலமதாம் வியட்டியென்றுஞ் சமட்டி யென்று
முழுவதென்றுங் கிஞ்சிலென்று மிசை மென்றுங்
கோலமுறு மிவ்விதமாந் தோற்ற மெல்லாங்
குலவியசிற் பரப்பிரம சொரூப மென்றே
சாலவுறு மகண்டபர நிச்ச யத்தாற்
சன்மயமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (20)

விசுவன்முதல் வியட்டியபி மானி யென்றும்
விராட்டுமுதற் சமட்டியபி மானி யென்றும்
பசுபதிகள் பலவிதமாம் பாச மென்றும்
பகுப்புற்ற சீவபர சகங்க ளென்று
நசுவரமாய்த் தோற்றியவித் தோற்ற மெல்லா
நாசமுறுப் பரப்பிரம சொரூப மென்றே
யசுபமுறு மகண்டபர நிச்ச யத்தா
லசஞ்சலமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (21)

வகுப்புற்ற வாச்சியமாம் பொருளீ தென்றும்
வழுவற்ற விலட்சியமாம் பொருளீ தென்றும்
பகுப்பற்ற வைக்கியமாம் பொருளீ தென்றும்
பகரவொணாச் சுபாவபரம் பொருளீ தென்றுந்
தொகுப்புற்ற விவ்விதமாந் தோற்ற மெல்லாந்
துகளற்ற பரப்பிரம சொரூப மென்றே
மிகப்பற்று மகண்டபர நிச்ச யத்தான்
மெய்யுணர்வாம் பரப்பிரம மாத்ர மாவாய். (22)

பதத்தினுடை சுபாவார்த்தம் வாச்ய மென்றும்
பதமதனின் விசேடார்த்த மிலட்சிய மென்றும்
விதித்தபடி விளம்பலது சத்தி யென்றும்
விசேடமுற விளம்பலிலக் கணையா மென்றுங்
கதித்திடுமிவ் விதமான தோற்ற மெல்லாங்
களங்கமுறுப் பரப்பிரம சொரூப மென்றே
யுதித்திடுமிவ் வகண்டபர நிச்ச யத்தா
லுணர்வுருவாம் பரப்பிரம மாத்ர மாவாய். (23)

விட்டவிலக் கணையாலு மைக்யந் தோன்ற
விடாதவிலக் கணையாலு மைக்யந் தோன்ற
திட்டமதா முபயவிலக் கணையொன் றலே
யிலங்குபர சீவைக்ய மிலங்கு மென்றே
திட்டமுறத் தோற்றியவித் தோற்ற மெல்லாந்
திகழ்வுருவாம் பரப்பிரம சொரூப மென்றே
சிட்டமுறு மகண்டபர நிச்ச யத்காற்
சின்மயமாம் பரப்பிரம மாத்ர மாவாய். (24)

புரையற்ற நிருபாதி சொரூபந் தானே
புகலுமகா வாக்குகளின் பொருளா மன்றிப்
பிரிவுற்ற சோபாதி சொரூப மென்றும்
பேசுமகா வாக்குகளின் பொருளன் றென்றே
விரிவுற்ற வினைமுதலாந் தோற்ற மெல்லாம்
விமலமதாம் பரப்பிரம சொரூப மென்றே
தெரிவுற்ற வகண்டபர நிச்ச யத்காற்
றியக்கமிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (25)

சருவமுமே பரப்பிரம சொரூப மென்றே
சகலமறை முடிகளுமே சாற்ற லாலும்
பிரிவறவே பரப்பிரம ஞானம் பெற்ற
பெரியோரு மிவ்விதமே பேச லாலு
மிருளறவே பரசிவனு மெமக்கு முன்ன
மிவ்விதமே யருள்செய்த வியல்பி னாலு
முரைதருமிவ் வகண்டபர நிச்ச யத்தி
லோரணுவு மையமிலை யுறுதி யீதே. (26)

அதிட்டான மானபரப் பிரமத் தின்க
ணுரோப வடிவெனவே காண்ப தெல்லாம்
மதித்தாயின் மன்னுமதிட் டான மின்றி
மற்றணுவு மாரோப வடிவே யில்லை
நிதித்யாச நிரந்தரமாய்ச் செய்வோ ருக்கே
நிகழ்த்தியவிவ் வதிரூபி நிகழு மன்றிக்
குதித்தாடு மனநின்வச மாலை ருக்குக்
கூறியவிவ் வதிரூபி கூடா தென்றும். (27)

ஆதலினுற் கற்பிதமாய்க் காண்ப தெல்லா
மதிட்டான மானபரப் பிரம மென்று
மேதமிலா வப்பிரம மியானே யென்று
மியானதப் பரப்பிரமந் தானே யென்றுஞ்
சாதகமா யெப்போது நித்தியா சித்துச்
சலமனதின் விகற்பங்க ளனைத்துந் கள்ளிப்
பேதமிலா வகண்டபர போதம் பெற்றுப்
பின்னமிலாப் பரப்பிரம மாத்ர மாவாய். (28)

ஓதியவா றகண்டபர போதந் தன்னை
யுற்றதனுற் பரப்பிரம மாலே ருக்கே
மாதவவிவ் வுலகிபவ மாய்வ தன்றி
மற்றவருக் கிவையென்று மாய்வ தில்லை
யாதலினு லறைந்தவண மகண்ட போத
மடைந்ததனு லகண்டபரப் பிரம மாகிப்
பீதிதரும் பவதுக்க மனைத்து நீக்கிப்
பிரிவற்ற மோட்சசுகம் பெற்று வாழ்வாய். (29)

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மயலற்ற வப்பிரம நாமே யென்றும்
வெகுதிடமா யகண்டபர நிர்ண யத்தை
விமலசிவ னருளியவா விளம்பி னேமான்
மிகவுமகா ரகசியமா மிவ்வர்த் தத்தை
மேவுமனச் சுத்தியுட னெருகா லேனு
மகமுறவே யையமறக் கேட்டு ணர்ந்தோ
ரழிவற்ற மோட்சசுக மடைவ ரன்றே. (30)

நிருமலமாய் நிகழுமகா லிங்கத் தின்க
ணிறைவேற்று நித்தசிவார்ச் சனையே யாதி
பரமசிவ பத்திசெயு மன்ப ருக்கே
பகுப்பற்ற பரப்பிரம ஞானந் தோன்றுந்
நிரமுறவே பரப்பிரம ஞானம் பெற்ற
தீர்களே பவபாச முத்த ராவ
ரியவனே யணுவுமிகி லேய மில்லை
யகண்டபர சிவனுணை யறைந்த தண்மை. (31)

நிகிலசகன் மயகனும் பரேசன் முன்ன
நிகழ்த்தியவா ரிபுமுனிவ னிதாக னுக்கங்
கிகிலமுமே பிரமமென்று மதுநா மென்று
மகண்டபர நிர்ணயமே யருளி னனென்
றிகழ்வனுவு மெய்நியிடாச் சைகீ ஷவ்யற்
கெவையுமுணர் கந்தனுரை கந்தா னென்றே
சகலமுணர் சூதமுனி முனிவர்க் கெல்லாஞ்
சலனமிலாப் பரம்பொருளைச் சாற்றி னனால். (32)

வேறு.

பேதமின்றி யகண்டசொரூபமாம்பிரமமல்லது வேறிலையேயெனு
மேதமொன்றிய தோற்றமனைத்துமே யேகபூரணமாம்பரமேயெனு
மாதியின்றிய வப்பரநாமெனு மறிவினலது வாயிடலாமென
றீதிலாநந்தத் தாண்டவமாடுநந் தேவதேவ னகண்டசொரூபமே. (33)

முப்பத்தேழாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 37-க்கு நிருவிருத்தம் 1660.

மூப்பத்தெட்டாவது
இந்நூன் மகிமை யுரைக்கும் அத்தியாயம்.

சகலவித நூற்களினுஞ் சார மாகிச்
சாரங்க ளனைத்துக்குஞ் சார மாகி
மிகவுமகா ரகசியமாய் மேவு தற்கு
மெத்தவுமே யரிதான விந்த நூலின்
மகிமைதனை முடிவான வுறுதி யோடு
மயக்கமற மதிக்கும்வண மிங்குச் சொல்வாம்
சுகமைமிகு மிந்நூலைத் தகிர்ந்தி டாமற்
றற்பரனு மெப்போது மப்யா சிப்பாய். (1)

அகமென்றும் சன்மாத்ர மைய மில்லை
யகமென்றுஞ் சின்மாத்ர மைய மில்லை
யகமென்றுஞ் சுகமாத்ர மைய மில்லை
யகமென்றுஞ் சுத்தபர மைய மில்லை
யகமென்றும் பரிபூன்ற மைய மில்லை
யகமென்றும் பராற்பரமே யைய மில்லை
யகமென்றும் பரமசிவ மைய மில்லை
யகமென்றும் பரப்பிரம மைய மில்லை. (2)

திகழ்வதுவும் பரப்பிரம மைய மில்லை
திகழாதும் பரப்பிரம மைய மில்லை
நிகிலமுமே பரப்பிரம மைய மில்லை
நீநானும் பரப்பிரம மைய மில்லை
சகலமுமே பரப்பிரம மைய மில்லை
சதசத்தும் பரப்பிரம மைய மில்லை
யகிலமுமே பரப்பிரம மைய மில்லை
யகமந்தப் பரப்பிரம மைய மில்லை. (3)

சருவமுமே யான்மாவுக் கபின்ன மான
சன்மாத்ர பரப்பிரம சொரூப மேயாம்
பிரமமதே யான்மாவா மான்மாத் தானே
பேதமிலாப் பரப்பிரம சொரூப மாகு
நிருமலமாய் நிறைவுற்ற வான்மா வுக்கு
நிகிலபரி பூரணமாம் பிரமத் துக்கு
மொருசிறிதும் பேதமிலை யிரண்டு மொன்றே
யுணர்வுருவாஞ் சிவனுணை யுரைத்த வண்மை. (4)

நாமமுரு யாவையுமே பிரம மென்று
நாமந்தப் பரப்பிரமந் தாமே யென்றுஞ்
சேமமுறச் செப்பியவிவ் வருத்தந் தன்னிற்
சிறிதேனுஞ் சங்கையிலை சத்தி யந்தான்
ரூமமெலாங் கடந்தெங்கு நிறைந்து நின்ற
தத்துவமாஞ் சிவனுணை யுண்மை சொன்னே
மாமலவென் றணுவுமிதிற் சங்கி யாம
லறைந்தவண மதிடமாய் நிச்ச யிப்பாய். (5)

சராசரமாய்த் தோற்றியிடுந் தோற்ற மெல்லாஞ்
சன்மயமாம் பரப்பிரம சொரூப மென்றும்
புராதனமா மச்சொரூப நானே யென்றும்
பூரணமா நிச்சயமிங் கடைந்தே யதனால்
விராமமுரு விகற்பங்க ளனைத்து நீக்கி
விகற்பமிலா விமலபர போதம் பெற்று
நிராமயமாம் பரப்பிரம சொரூப மாகி
நிச்சலமாய் நின்னிடைநீ நிலைத்து நிற்பாய். (6)

நின்னிடையே நிச்சலமாய் நிலைத்து நிற்கு
நிலைமையிதே நிமலபர மோட்ச மாகுந்
தன்னிடையே தானுகத் தனித்தி டாமற்
றரங்கமெனச் சலிப்பதுவே பந்த மாகு
முன்னியிடி லோருருவா முன்னே யன்றி
யுலவுதருங் காரணமோ ரணுவு மில்லை
தன்னியனே யாதலினு னீயெப் போதுந்
தன்னிடையே தானுகத் தனித்து நிற்பாய். (7)

தன்னிடையே தானுகத் தனிப்ப தற்குத்
தனக்கயல்போற் றோற்றியிடுந் தோற்ற மெல்லா
மன்னியமா யொருகாலு மில்லை யென்று
மகிலமுமே யான்மாவா மகமே யென்றும்
பின்னமிலா வகண்டபர நிச்ச யத்தைப்
பெறுவதுவே காரணமா மாத லாலே
பன்னியவா றகண்டபர நிச்ச யத்தைப்
பற்றியதாற் பகுப்பற்ற பரமே யாவாய். (8)

நின்னுருவா மான்மாவுக் கயலே யில்லை
நிகிலமுநின் னுன்மாவே நிச்ச யந்தான்
பன்னுபல சாத்திரமு மாலோ சித்துப்
பகர்கின்றோம் பரமார்த்த வுறுதி யீதே
யன்னசிவ னுபயநிருப் பதங்க டொட்டே
யறைகின்றோ மையமிலா வுறுதி யீதே
சொன்னகுரு வுபயநிருப் பாதந் தொட்டே
சொல்கின்றேஞ் சுருதிமுடி யுறுதி யீதே. (9)

நாவினிடைக் காய்ந்தபர சதனை யேந்தி
நவில்கின்றோ நவின்றதிலோ ரைய மில்லை
மேவியவிவ் வகண்டபர நிச்ச யந்தான்
மெய்ஞ்ஞானி யாவருமே பெறும்பே ருகும்
பாவனனே யாதலினு னீயெப் போதும்
பகுப்பற்ற வகண்டபர நிச்ச யத்தை
யோவலற வுற்றதனற் பரமே யாகி
யுவமையிலா வானந்தம் பொருந்தி வாழ்வாய். (10

நிச்சலமா நிச்சயமே யகண்டா நந்த
நிலைமைபெற நிகரற்ற வேத வாகு
மூச்சமதா நிச்சயமே செய்யச் செய்ய
வுலகுமுதற் றுரிதத்தின் றோற்ற நீங்குஞ்
சுச்சமதாந் துரிதத்தின் றோற்ற நீங்கிற்
றுகளற்ற வாநந்தஞ் சுயமாய்த் தோன்று
மச்சமிலா நிச்சயமே செய்நிங் கத்தா
லகண்டபர மாநந்த மடைந்து வாழ்வாய். (11)

சன்மயமாம் பரப்பிரம சொரூப நீயே
சலனமிலாப் பரப்பிரம சொரூப நீயே
சின்மயமாம் பரப்பிரம சொரூப நீயே
சிதானந்த பரப்பிரம சொரூப நீயே
புன்மையுரூப் பரப்பிரம சொரூப நீயே
பூரணமாம் பரப்பிரம சொரூப நீயே
சுன்மயமாம் பரப்பிரம சொரூப நீயே
தடையற்ற பரப்பிரம சொரூப நீயே. (12)

கனியுமகா ரகசியமா மிவ்வார்த் தத்தை
நமக்கீச னவின்றபடி நவில லுற்றே
முனிவரனே மொழிந்தகிலோ ரைய மில்லை
மூன்றுதரஞ் சத்தியமா மொழிகின் றேமியா
மனியமிலா வகண்டபர நிச்ச யத்தை
யநவரத மாகாரவா யப்யா சித்தே
புனிதமதாம் பரப்பிரம சொரூப மாகிப்
பூரணமா மானந்தம் பொருந்தி வாழ்வாய். (13)

தேவதைகண் முனிவரர்கள் யோகி கட்குந்
தெரியமிக வரிதான நிர்ண யத்தைப்
பாவனமாம் பரமசிவ னெமக்கு ரைத்த
பரிசாக நிதாகனினக் குரைத்தே மன்றே
யாவதனு லகண்டபர நிச்ச யத்தை
யநவரத மாதாரவா யப்யா சித்தே
கேவலமாம் பரப்பிரம சொரூப மாகிக்
கிலேசமிலா வானந்தம் பொருந்தி வாழ்வாய். (14)

சருவசகன் ஞயகனுய் நிறைந்த வீசன்
சகலவித சீவர்க்கு மிதமே யாக
நிருமலமாங் கைலாச கிரியின் முன்ன
நிகரற்ற கருணையினு லுபதே சித்த
பரிசதுவாய்ப் பரப்பிரம ஞானந் தன்னைப்
பயமறவே நிதாகனினக் குபதே சித்தோர்
திரிவிதமா முலகத்து மிந்த ஞானந்
தெரியமிக வரிதெனவே தெரிந்து கொள்வாய். (15)

தெரிவுறவே முன்னெருகாற் றேவ ருக்குத்
தென்றிசையி னெதிர்முகமாய்த் நிகழு மீச
னெருபதினு யிரவருட மட்டு மிந்த
வுத்தமமா ஞானத்தை யுபதே சித்தா
னருள்வடிவா யெழுந்தருளு மம்பி கைக்கு
மகிலசகன் ஞயகனுஞ் சாட்சாத் தீச
னுமுறவே யொருவருட பரியந் தத்துக்
குத்தமமா ஞானமிதை யுபதே சித்தான். (16)

விரிவுறவே விநாயகனுந் தன்சீ டர்க்கு
வெகுவருட மிதனையுப தேசஞ் செய்தான்
பரிவுடனே யரியுமிதை விரிஞ்ச னுக்குப்
பலகாலம் பாற்கடலி லுபதே சித்தா
னெருபொழுதென் றந்தைக்குப் பிரம லோகத்
தானமிலா ஞானமிதை யுரைத்தேன் யானு
மிருளறவே முன்பொருகா லுரை தாதி
யிருடிகளுக் கிதைவிரிவா யிசைத்தே னுனே. (17)

இத்திறமாம் பரப்பிரம ஞானந் தன்னை
யெளிதாகத் தெளிவிக்கு மிந்த நூலை
மெத்தவுமே குறைவன்றி விரிவு மன்றி
மிகவெளிதா வீசனெனக் குரைத்த வண்ண
முத்தமனே கருணையினு லுன்னை முன்னிட்
டுலகிலுளோர் யாவர்க்கு மிதமே யாகச்
சத்தியமா யருள்செய்தே னிந்நூ லுக்குச்
சரியான நூலெவையு மெங்கு மில்லை. (18)

தன்னியவிந் நூலெனமற் றெந்த நூலுந்
தடையற்ற ஞானத்தை விரைவிற் ரூரா
தன்னியமா நூற்களெலா மடைவே யாக
வகண்டபர ஞானத்தை யளிப்ப தாகும்
பன்னியவிந் நூலொன்றே சீக்கி ரத்திற்
பகுப்பற்ற பரப்பிரம ஞான நல்கு
மின்னவித வேதுவிலு லிந்நூ லுக்கிங்
கிணையான நூலெவையு மெங்கு மில்லை. (19)

ஓதியவிந் நூலிலுள கவிதை யின்க
ணுற்றவொரு பாதத்துக் கிணையொன் றில்லை
மீதியுள பாதங்கட் கிணையே யாக
மேவுபொரு ளெவையேனு மெங்கு முண்டோ
வீதலுரு வகண்டபர ஞானந் தன்னை
விளக்கியிடும் வாக்குக்கிங் கிணையே தாகு
மாதலிரு லதிசயமா மிந்த நூலை
யத்யந்த மாதரவோ டப்யா சிப்பாய். (20)

பலகோடி யாகத்தைப் பாங்காய்ச் செய்தும்
பலகோடி தீர்த்தத்திற் ரூனஞ் செய்து
மூலவோடு பெற்றபல மிதனி னுள்ள
வொருபாதம் படித்தபலத் திணையே யாக
நிலமேவு மிந்நூலின் கவியின் கண்ணே
நிருமலமாய் நிகழ்கின்ற விரண்டு பாதஞ்
சலியாது படித்தபலன் றனக்கே டாகச்
சகலபுவி தானபலஞ் சாற்ற லாமோ. (21)

அரிதான விந்நூலின் கவியின் கண்ணே
யதிசயமா யமைவுற்ற மூன்று பாதஞ்
சரியாகப் படித்துவரும் பலந்த னக்குச்
சகலவித தானமுமே சமான மாகா
பரிவாக விதனிலுள கவிதை யொன்றைப்
படித்தபலன் றனக்கிணையா யெவையு மில்லை
யொருகால மேனுமித னநுப வத்தை
யுற்றதனற் பெறும்பேறுக் குவமை யுண்டோ. (22)

இத்திறமா மிந்நூற்றூற் பரியந் தன்னை
யியல்பாகக் கேட்டுணர வசத்த னேனு
நித்தமுமே சிரத்தையுட னியம மாக
நிருமலமா மிந்நூலைப் படித்த போது
மத்திறமாய்ப் படிப்போனு மகண்ட ஞான
மடைவாக வடைந்தகனுன் முத்த னுவன்
சத்தியமே யாதலினு லனைத்துந் தள்ளிச்
சந்ததமு மிந்நூலை யப்யா சிப்பாய். (23)

சகலவித தானமொடு தருமந் தள்ளிச்
சகலவித தீர்த்தமொடு தலமுந் தள்ளி
நிகிலவித செபமுடனே தவமுந் தள்ளி
நிகிலமகா மந்திரதந் திரமுந் தள்ளித்
திகழ்வுமிகுந் தேவதைக ளனைத்துந் தள்ளித்
தேவதையின் பூசனைக ளனைத்துந் தள்ளி
யகிலவித நூற்களையுந் தூரத் தள்ளி
யநவரத மிந்நூலே யப்யா சிப்பாய். (24)

சகலவித சரிதைகளுந் தூரத் தள்ளிச்
சகலவித தரியைகளுந் தூரத் தள்ளி
நிகிலவித யோகமுமே தூரத் தள்ளி
நிகிலவித சாங்கியமுந் தூரத் தள்ளி
வெகுவிதமாம் பத்திகளுந் தூரத் தள்ளி
விசித்திரமாம் பாவனையுந் தூரத் தள்ளி
யகிலவித நூற்களையுந் தூரத் தள்ளி
யநவரத மிந்நூலே யப்யா சிப்பாய். (25)

வெகுவிதமா மதங்களையுந் தூரத் தள்ளி
விதம்விதமா மதிகளையுந் தூரத் தள்ளிச்
சகலவித ரகசியமுந் தூரத் தள்ளிச்
சகலருடை சேவையுமே தூரத் தள்ளி
நிகிலவித புண்ணியமுந் தூரத் தள்ளி
நிகிலமகா பாக்கியமுந் தூரந் தள்ளி
யகிலவித சமுசயமுந் தூரத் தள்ளி
யநவரத மிந்நூலே யப்யா சிப்பாய். (26)

சகலவித பாடமுமே தூரத் தள்ளிச்
சகலவித பழக்கமுமே தூரத் தள்ளி
நிகிலவித வுலகமுமே தூரத் தள்ளி
நிகரற்ற குருவையுமே தூரத் தள்ளி
யிகபரமென் றிருப்பதெலாந் தூரத் தள்ளி
யிதரமென நினைப்பதெலாந் தூரத் தள்ளி
யகிலவித சமுசயமுந் தூரத் தள்ளி
யநவரத மிந்நூலே யப்பா சிப்பாய். (27)

இந்நூலே பரப்பிரம மிதனைக் தானே
யினிமையுட னெப்போது மப்பா சிப்பாய்
பன்னூலைப் படித்ததனற் பெறும்பே றென்ன
பானுவின்முன் பலவொளியாற் பலனு முண்டோ
செந்நூலி தொன்றினையே செம்மை யாகச்
சிரத்தையுடன் சந்ததமு மப்பா சிக்கி
லெந்நூலின் பலன்களுமீ தொன்றி னுலே
யெய்தியிடு மிதிலிறையு மைய மில்லை. (28)

இந்நூலா லத்யாச மனைத்து நீங்கு
மிந்நூலா லாவரண மனைத்து நீங்கு
மிந்நூலாற் சின்மாத்ர நிட்டை கூடு
மிந்நூலாற் சித்தவிசி ராந்தி யெய்து
மிந்நூலா லகண்டபர ஞான முண்டா
மிந்நூலா லஞ்ஞான மனைத்து நீங்கு
மிந்நூலா லனுபவ பந்தந் தீரு
மிந்நூலா லகண்டபர மோட்ச மெய்தும். (29)

இந்நூலா லித்துவித மனைத்து நீங்கு
மிந்நூலா லத்துவித மொன்றே தோன்று
மிந்நூலா லிதயமுடிச் சிறப்ப தாகு
மிந்நூலாற் சீவத்வ நசிப்ப தாகு
மிந்நூலாற் பவதுக்க மனைத்துந் தீரு
மிந்நூலாற் பரமான சுகமே சாரு
மிந்நூலாற் பாசமெலா நசிப்ப தாகு
மிந்நூலாற் பரமபதங் கிடைப்ப தாமே. (30)

மனந்தனிலே யிந்நூலின் பொருளே யோர்ந்து
மதித்திடநல் விற்பத்தி மருவா தோனுந்
தினந்தவிரா திதனையொரு காலமேனுந்
திடமான நியமமுடன் படிப்பா னுகி
லனந்தவித சென்மத்தி லநுச ரித்த
வகங்களெலா மச்சென்மந் தனிலே நீங்கிக்
கனந்தவிரா வகண்டபர போதம் பெற்றுக்
களங்கமிலாப் பரவடிவே யாவ னன்னேன். (31)

மருவியதன் சென்மத்தி லொருகா லேனு
மற்றினைக் கேட்போனு முத்த னுவன்
சரிவரவே நிதமிதனைப் படிப்போ னுக்குச்
சமமாகச் சகந்தனிலே யாரு மில்லை
யரியவனே யாதலினு லநந்த நூலி
லாதரவே செய்யாம லினைத்துந் தள்ளி
நிருமலமா மிந்நூலே முழுட்சு வெல்லா
நிதந்தவிரா தப்யாசஞ் செய்ய வேண்டும். (32)

சாற்றியிடு மிந்நூலே சாத்தி ரங்கள்
சகலத்துஞ் சாரமதாஞ் சித்தாந் தங்காண்
வேற்றுமையி லிந்நூலே வேதாந் தங்கள்
வேதங்க ளினைத்துக்குஞ் சித்தாந் தங்காண்
போற்றியிடு மிந்நூலே பூன்ற போதம்
பொருந்தியுள பெரியோரின் சித்தாந் தங்கா
ணேற்றியிடு மிந்நூலே யிணையொன் றற்ற
வெமதீச னெமக்கருளுஞ் சித்தாந் தங்காண். (33)

சகலவித குய்யத்துங் குய்ய மீதே
சாரங்க ளினைத்திற்குஞ் சார மீதே
யகிலவித வுலகத்து மரிய தீதே
யத்யந்த வதிசயமாம் பொருளு மீதே
நிகிலவித சமூசயமுந் தவிர்ப்ப தீதே
நிச்சலமா நிச்சயமு மளிப்ப தீதே
யிகழ்வுதருந் துவிதமெலாந் தொலைப்ப தீதே
யிருமையிலாச் சகசநிலை யிசைப்ப தீதே. (34)

மாதவனே வெகுவிதமாய் விளம்பி யென்ன
மண்ணுலகில் விண்ணுலகி லெவ்வி டத்துஞ்
சாதகமா நூலிதுதான் சார்வ தற்குச்
சாலவுமே யரிதாகுஞ் சத்தி யந்தான்
வேதமொடு மிருதியிதி காச மாதி
வெகுவிதமா நூலுக்குஞ் சார மீதே
யோதியவிந் நூலுக்குச் சமான மாக
வொரு நூலு முலகத்தி லெங்கு மில்லை. (35)

முன்னொருகா லென்றங்கை யுலகில் யாரு
முத்தரா யிந்நூலான் முடியா நிற்ப
ரென்னமனந் தனிலைய மிசைந்தே தானு
யிதைத்திருடிப் பாற்கடலி லெறிந்தான் பின்ன
ரன்னசெய லறிந்துடனே யானச் சிந்தி
னலைகளிலுற் றீரத்தி லொதுக்கப் பட்ட
வின்னதனைக் கொணர்தலுமே யென்னை நோக்கி
யெனதுபிதா மற்றுமிக முனிவு செய்தான். (36)

அன்றுமுத லியானந்த வுலகம் விட்டிவ்
வதிசயமாங் கேதாரத் தலமடைந்தே
னின்றுனது பத்தியினு லிந்த நூலை
யாவர்க்கு மிதமாக விசைக்க லானே
னன்றியுமிந் நூற்பொருளை யறிவ தற்கு
மறிந்தபடி யதிகாரிக் கறைவ தற்குந்
துன்றியவிவ் வுலகத்தி லாரு மில்லை
தூயபர போதமிக வரிய தன்றே. (37)

அத்யந்த வதிசயமா மகண்ட ஞான
மப்படியே யிந்நூலு மதிச யந்தா
னத்யந்த வதிசயமா மிந்த நூலை
யையமற வறிபவனு மதிச யந்தா
னத்யந்த வதிசயமா மிந்த நூலை
யருளுடனே யறைபவனு மதிச யந்தா
னத்யந்த வதிசயமா மிந்த நூலை
யாதரவாக் கேட்பவனு மதிச யந்தான். (38)

மாதவனே யிந்நூலைக் கேட்கத் தக்க
மாசற்ற மாணாக்க னரிய னுவன்
சாதகமா மிந்நூலை யுபதே சிக்குஞ்
சற்குருவுஞ் சாலவுமே யரிய னுவன்
பேதமுறு விந்நூலின் புத்த கத்தைப்
பெற்றவரு மெத்தவுமே யரிய ராவ
ரோதியவிவ் வேதுவிரு லிந்நூ லெங்கு
மூரமாகப் பிரசித்தி மேவ வில்லை. (39)

பலசெனனத் தநுட்டித்த வறங்க ளெல்லாம்
பக்குவமாய்ப் பாவங்க ளனைத்து நீங்கி
யிலகியதன் சொரூபநிலை யிசையத் தக்க
வினிப்பிறவா முடிவான சென்மத் திற்ரூன்
சலனமெலா மறநீக்கி யகண்ட மாக்குஞ்
சத்தியுள விந்நூலைச் சார லாகு
மலினமுறு விந்நூலைச் சார்ந்தோ ருக்கு
மறுபிறவி யென்றுமிலை மகேச னுணை. (40)

இவ்விதமா மகிமையுள விந்த நூலை
யாவர்க்கு மிதமாக வருளி னுலே
திவ்வியமங் களவடிவா யெழுந்த வீசன்
றிகழ்வுறவே முன்னமெனக் கருளிச் செய்தா
னவ்விதமே யானுமிதைக் கருணை யாலே
யழுத்தமுற நிதாகனினக் குபதே சித்தேன்
செவ்வியதா மிந்நூலைச் சேர்வோ ரெல்லாஞ்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மாவர். (41)

புகல்வதெலாம் புகன்றனனியா னினியெங் கேனும்
போதுமென ரிபுமுனிவன் புகல லோடு
மகிமைமிகும் வசனமிதை நிதாகன் கேட்டு
மகிழ்வுமிகுந் தாநந்த பாஷ்பங் கூர்ந்து
மிகவுமுறும் பத்தியினன் மெய்வி நிர்த்து
மெத்தவுமே விநயமுடன் வணங்கி யேத்திப்
பகரவுறக் கண்டமுமே தழுத ழுத்துப்
பரவசனு யிவ்வசனம் பகர்கின் றனுல். (42)

அறியவொணாப் பெருமையுறும் போதம் பெற்ற
வாசிரிய னினதுதிட கருணை யாலே
சிறியமதி பொருந்தியயான் சிறுமை நீங்கிச்
சின்னமிலா வகண்டபரி பூன்ற மானேன்
பெறவரிதா நின்னுடைய தரிச னத்தாற்
பிறவியிதிற் பெறுவதெலாம் பெற்றே னனே
இறவரிதா முனதருளாற் செய்வ தெல்லா
மூனமறச் செய்துமுடிந் தோனு மானேன். (43)

கேசிகநீ யருளியதாம் வசனங் கட்குட்
டிடமான வொருவசன மனனங் கொண்டே
பாசமெலா மறநீக்கிப் பரமா நந்தம்
பற்றினனுய்ப் பரப்பிரம சொரூப மானே
னசினிலென் பவதுன்ப மனைத்து நீக்கி
யகண்டசுக மருளியநின் கருணை யென்னே
பேசியதி லணுவேனு மைய மில்லை
பெரியோய்நின் பெருமையிதை யென்சொல் வேன்யான்.

கருணையினு லருளியநின் னுபகா ரத்தின்
கைம்மாறிவ் வுலகத்தி லெங்கு மில்லை
குருபரனே யுனதுபய பாதப் போதைக்
குறித்தடியே னநந்தவித வணங்கல் செய்வேன்
பரிவுடனே வணங்குதலு மூபசா ரந்தான்
பரமார்த்த தசையிலொரு வணங்க லுண்டோ
சருவமுமே பிரமமலாற் பரமார்த் தத்திற்
சாருமொரு பேதமுமே யில்லை யன்றே. (45)

தேசிகநின் கருணையினல் யான டைந்த
திவ்வியமாஞ் சுவானுபவ திட்டி தன்னிற்
பேசியிடு நானுமிலை நீயு மில்லை
பெருமையுடன் பேசியவிந் நூலு மில்லை
பாசமுறுஞ் சீவனிலை யீச னில்லை
பகுப்புற்ற பார்முதலாஞ் சகத்து மில்லை
யாசிரிய வகிலமுமே யகண்டா கார
மானபரப் பிரமமலா தயலே யில்லை. (46)

குருவரநின் கருணையினல் யான டைந்த
கூறுபடா வகண்டபர நிட்டி தன்னிற்
சருவமுமே பரப்பிரம சொரூப மல்லாற்
சருவமெனப் பிறிதாகச் சிறிது மில்லை
பிரமமெனச் சருவமென வேறு வேறுய்ப்
பேசியவிப் பலவிதமாஞ் சொலவு மில்லை
யொருபொருளு மொருகாலு மெங்கு மில்லை
யுள்ளதெலா முணர்வுருவாம் பிரம மொன்றே. (47)

வேகமுறத் தோற்றியிடு மகம் விருத்தி
வெகிர்முகமாய்த் தோற்றியிடு மிதம் விருத்தி
தேகமுத லகமென்னுந் துவித விர்த்தி
திகழ்சாட்சி யகமென்னுஞ் சாட்சி விர்த்தி
யேகபர மகமென்னு மகண்ட விர்த்தி
யிவ்விதமாம் விருத்திகளே தோன்று மின்றிச்
சோகமுறுச் சுத்தபர சொரூப மொன்றே
சுயஞ்சோதி வடிவாகச் சொலிக்கு தந்தோ. (48)

நின்னருளா லென்மனதி னிகழா நின்ற
நிகிலவித பேதமுமோர் கணத்தி னீங்கி
யின்னதென வியம்பவொணு வகண்ட மான
வென்சொரூப நிட்டையினை யான டைந்தேன்
பன்னியதி லணுவேனு மைய மில்லை
பரகுருவே யெனவன்போ டிறைஞ்சி யேத்திக்
கன்னுடைய சகசநிலை தன்னி லன்னேன்
யடையறவே சுகமாகத் தனித்தி ருந்தான். (49)

அரியசிவன் கருணையுமவ் வடிவே யான
வாசிரியன் கருணையுமிங் கடைந்தே ருக்கே
திருசியமாஞ் சீவபர சகத்தின் சேற்றந்
நிணையளவுந் திகழாம லுடனே நீங்கிப்
பிரிவுபெரு வகண்டபர நிட்டை கூடும்
பேசியது சத்தியமே யென்று கந்த
னுரியபர மார்த்தத்தைச் சைகி ஷவ்யற்
கோதியவா றகிலர்க்கு மூரைத்தான் ரூதன். (50)

அகிலபூரண மானபரம்பொரு ளன்றியன்னிய மில்லையனைத்துமே
நிகிலபூரண மானபரம்பொரு ணீயதேயெனநிர்ணயமோதலுஞ், சகல
மூலினு நூலிதுமெத்தவுஞ் சாரமென்றிதன் மேன்மையுரைத்தலும்
புகழுமாநந்தத்தாண்டவமாடுநம் பூரணேசனகண்ட சொரூபமே. (51)

மூப்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாம் 38-க்கு திருவிருத்தம் 1711.

மூப்பத்தொன்பதாவது

ரிபு-நிதாகனை அநுபவம் வினவ அன்னேன்-றன
தகண்டாநு பூதியினுற் குருவருளா அன்பின்
வியந்து துதிக்கும்
அத்தியாயம்.

கிருமலமாம் ரிபுமுனிவன் மீண்டு மந்த
நிதாகமுனி தனைநோக்கி யினிதாச் சொல்வான்
மருவமிக வரிதான வகண்ட ஞான
மகிமைதனை யுரைத்தவண மறித்தாய் கொல்லோ
பிரிவுபெரு மனநினைடைப் பிரமந் தன்னைப்
பேதமறத் நிடமாகப் பெற்றாய் கொல்லோ
காளமனை விகற்பமெலாந் த்விர்ந்து நன்றாய்த்
தன்மயமா நிட்டைதனைச் சார்ந்தாய் கொல்லோ. (1)

அகமருவு மஞ்ஞான மனைத்து நீங்கி
யகண்டபர விஞ்ஞான மடைந்தாய் கொல்லோ
சகமையுறுக் கருமத்நில் வெகுகா லத்காற்
றங்கியநின் விசுவாசந் தவிர்ந்தாய் கொல்லோ
கிலமுமே யுண்மையெனு நினைவு நீங்கி
நிசமான நின்வடிவி னிலைத்தாய் கொல்லோ
சகலவித துவிதத்நின் பயமு நீங்கிச்
சலனமிலா வபயபதஞ் சார்ந்தாய் கொல்லோ. (2)

ஒருபொருளும் பிரமமலா தொருகா லத்து
முண்மையுறு தென்றுரமா யுணர்ந்தாய் கொல்லோ
சருவமுமே யகண்டபரப் பிரம மென்னுஞ்
சலனமிலா வுறுதியினைச் சார்ந்தாய் கொல்லோ
வுரைதருமிவ் வுறுதியினு லுலவொன் றின்றி
யுணர்வுருவா முன்வடிவி லோய்ந்தாய் கொல்லோ
வரியவனே யகாதிபவ துக்க நீங்கி
யகண்டபர மாநந்த மடைந்தாய் கொல்லோ (3)

இதனையெலாம் விரிவுறநீ யிசைப்பா யென்றே
யிவ்விதமாய் ரிபுமுனிவ னிசைத்த லோடு
மதிசயமா மாசிரியன் கருணை யாலே
யகண்டபர விஞ்ஞானந் திடமாய்ப் பெற்ற
மதியுடனே மகத்தான மகிழ்வு கூர்ந்து
மதிக்கவொணு வன்புடனே குருவை நோக்கித்
துதமருவா வநுபூதி யனைத்துஞ் சொல்லத்
துகளற்ற நிதாகமுனி தொடங்கி னனால் (4)

மாசணுகாப் பரகுருவே யகண்ட ஞான
மகிமையெலா முரைத்தவண மதித்தே னனேன்
றேசிகனின் கருணையினுற் றிடபோ தத்தைத்
தியக்கமிலா மனத்தினிடைத் தரித்தே னனேன்
பேசவொணு வகண்டபரப் பிரமந் தன்னைப்
பிரிவுற்ற மனத்தினிடைப் பெற்றே னனேன்
பாசமுறு வெனதுநிச சொரூபத் தின்கட்
பகுப்பற்ற நிட்டையினைப் பெற்றே னனேன். (5)

சற்குருவே நினதருளா லகண்ட ஞான
சத்துருவா மஞ்ஞான மனைத்து நீங்கி
நிர்க்குணமாம் பரப்பிரம ஞானம் பெற்று
நிகிலவித கருமத்துஞ் சிரத்தை யற்றுத்
தூர்க்குணமாம் பிரபஞ்சத் துண்மை நீங்கித்
துவிதத்தாற் றொடருபய மனைத்து நீங்கி
யக்கயமாம் பரப்பிரம சொரூப மாகி
யயலற்ற வபயபத மடைந்தே னந்தோ. (6)

குருவாநின் கருணையினுற் கணமே ரத்திற்
குறைவுதரும் பேதமதி யனைத்து நீங்கிச்
சருவமுமே பிரமமெனு நிச்ச யத்தைச்
சாலவுமே திடமாகச் சாந்தே னந்தோ
பரியபவிவ் வுரமான நிச்ச யத்தாற்
பரமான வென்னிடையான் சாந்த னகி
விரவுபவ துக்கங்க ளனைத்து நீங்கி
விமலபர மாநந்த மடைந்தே னந்தோ. (7)

இதுவரையி லஞ்ஞானப் பகையாற் கெட்டே
னின்றுனது கருணையினு லபயம் பேற்றே
னிதுவரையின் மனதென்னும் பகையாற் கெட்டே
னின்றுனது கருணையினுன் மகத்தே யானே
னிதுவரையிற் கருமியெனு மதியாற் கெட்டே
னின்றுனது கருணையினுற் கலக்க மற்றே
னிதுவரையிற் சீவனெனு மதியாற் கெட்டே
னின்றுனது கருணையினுற் சிவமே யானேன். (8)

நான்முன்ன மறிவிலனு யலைந்து நின்றே
னுனின்றிங் கான்மாவென் றறிந்தோ னுனே
னுன்முன்னந் தேகமெனத் தியங்கி நின்றே
னுனின்று திருக்குருவென் றறிந்தோ னுனே
னுன்முன்னஞ் சித்தமெனச் சலித்து நின்றே
னுனின்று சின்மயனென் றறிந்தோ னுனே
னுன்முன்னஞ் சிதாபாச னெனவே நின்றே
னுனின்று சிற்பரமென் றறிந்தோ னுனேன். (9)

அகமெனவே தோற்றியதும் பிரம மாயிற்
றன்னியமாய்த் தோற்றியதும் பிரம மாயிற்
றுகமுதலாய்த் தோற்றியதும் பிரம மாயிற்
றுயிர்களெனத் தோற்றியது பிரம மாயிற்
றிகபரமாய்த் தோற்றியதும் பிரம மாயிற்
றிதுவதுவாய்த் தோற்றியதும் பிரம மாயிற்
றகிலவிதத் தோற்றமுமே பிரம மாயிற்
றற்புதமா நினதருளீ தென்னே யென்னே. (10)

இடமருவு மாயைமுதற் பிரம மாயிற்
றீசனவன் செய்கையெலாம் பிரம மாயிற்
றுடன்முதலா முபாதியெலாம் பிரம மாயிற்
றுபாதியுறுஞ் சீவனெலாம் பிரம மாயிற்
றிடர்முதலாந் தொந்தமெலாம் பிரம மாயிற்
றித்துவித சகத்தெவையும் பிரம மாயிற்
றடர்பலவாந் தோற்றமுமே பிரம மாயிற்
றற்புதமா நினதருளீ தென்னே யென்னே. (11)

முன்மலமாய்த் தோற்றியதே யின்றெ னக்கு
மோகமிலாப் பரப்பிரம மாயிற் றந்தோ
தன்மனதாய்த் தோற்றியதே யின்றெ னக்குத்
தத்துவமாம் பரப்பிரம மாயிற் றந்தோ
கன்மமெனத் தோற்றியதே யின்றெ னக்குக்
களங்கமுறுப் பரப்பிரம மாயிற் றந்தோ
புன்மையெனத் தோற்றியதே யின்றெ னக்குப்
பூரணமாம் பரப்பிரம மாயிற் றந்தோ. (12)

நினதருளான் மனதிலுள சந்தே கங்க
ணிகிலமுமே நிமிடத்தி னீங்கிற் றந்தோ
நினதருளான் மனதிலுள பவபா சங்க
ணிகிலமுமோர் நிமிடத்தி னீங்கிற் றந்தோ
நினதருளாற் சீவசக பரங்க ளென்ன
நிகழுமய னிகிலமுமே நீங்கிற் றந்தோ
நினதருளா னிகிலமுமே பிரம மென்னு
நிச்சலமா நிச்சயமே நிலைத்த தந்தோ. (13)

நிகிலமெனத் தோற்றுவதுஞ் சித்தந் தானே
நினதருளாற் சித்தமதே பிரம மாயிற்
றகிலமுமே பிரமமதா மதுநா னென்னு
மகண்டபர பாவனையே செய்நிங் கதற்தாற்
சகலமென்று நானென்றும் பேத நீங்கிச்
சலனமிலா வகண்டபர நிட்டை கூடிப்
பகரவொணாப் பவபாச மனைத்துந் தள்ளிப்
பங்கமிலாப் பரப்பிரம மானே னந்தோ. (14)

நான்றானே சன்மயமாம் பிரம மானே
னன்றானே சன்மயமாம் பிரம மானே
னன்றானே நின்மலமாம் பிரம மானே
னன்றானே நிச்சலமாம் பிரம மானே
னன்றானே பூரணமாம் பிரம மானே
னன்றானே புரையற்ற பிரம மானே
னன்றானே யகண்டபரப் பிரம மானே
னதனின தருண்மகிமை யென்னே யென்னே. (15)

ஞான்றுனே நித்தபரப் பிரம மானே
ஞன்றுனே நிகரில்பரப் பிரம மானே
ஞன்றுனே சுத்தபரப் பிரம மானே
ஞன்றுனே ரூக்கபரப் பிரம மானே
ஞன்றுனே யமலபரப் பிரம மானே
ஞன்றுனே யசங்கபரப் பிரம மானே
ஞன்றுனே யகண்டபரப் பிரம மானே
ஞகநின தருண்மகிமை யென்னே யென்னே. (16)

சதாகார பரப்பிரம மானே ஞனே
சலனமிலாப் பரப்பிரம மானே ஞனே
சிதாகார பரப்பிரம மானே ஞனே
சின்னமிலாப் பரப்பிரம மானே ஞனே
சதாநந்த பரப்பிரம மானே ஞனே
சாந்தமதாம் பரப்பிரம மானே ஞனே
யுதாரமதாம் பரப்பிரம மானே ஞனே
யுத்தமநின் னருண்மகிமை யென்னே யென்னே. (17)

பாசமிலாப் பரப்பிரம மானே ஞனே
பகுப்பற்ற பரப்பிரம மானே ஞனே
நேசமதாம் பரப்பிரம மானே ஞனே
நிகரற்ற பரப்பிரம மானே ஞனே
மாசணுகாப் பரப்பிரம மானே ஞனே
மகத்தான பரப்பிரம மானே ஞனே
சாசுவத பரப்பிரம மானே ஞனே
சாந்தநின தருண்மகிமை யென்னே யென்னே. (18)

சுத்தியசிற் சுகனமாம் பிரம மானேன்
சாலவுப சாந்தமதாம் பிரம மானே
னித்தியநிர்க் குணமான பிரம மானே
னிரஞ்சனநிட் களமான பிரம மானே
னித்துவித லேசமிலாப் பிரம மானே
னேகபரி பூரணமாம் பிரம மானே
னத்துவிதா கண்டபரப் பிரம மானே
னனகநின தருண்மகிமை யென்னே யென்னே. (19)

அகிலவதிட் டானபரப் பிரம மானே
னகிலமுமாய்த் திகழ்கின்ற பிரம மானே
னிகிலவிலட் சணமான பிரம மானே
னித்தபரி சுத்தபரப் பிரம மானேன்
சுககனமாய் நிறைந்தபரப் பிரம மானேன்
சுயஞ்சோதி சுபாவபரப் பிரம மானே
னகமருவா வகண்டபரப் பிரம மானே
னனகனின தருண்மகிமை யென்னே யென்னே. (20)

தன்மாத்ர மானபரப் பிரம மானேன்
றன்மயமாய் நின்றபரப் பிரம மானேன்
சன்மாத்ர மானபரப் பிரம மானேன்
சனுதனமாய் நின்றபரப் பிரம மானேன்
சின்மாத்ர மானபரப் பிரம மானேன்
சிதாகாய சொரூபபரப் பிரம மானே
னன்மாத்ர மானபரப் பிரம மானே
னுதனின தருண்மகிமை யென்சொல் வேன்யான். (21)

நினதருளா னித்தபரப் பிரம மானே
னினதருளாற் சுத்தபரப் பிரம மானே
னினதருளாற் புத்தபரப் பிரம மானே
னினதருளான் முத்தபரப் பிரம மானே
னினதருளா லமலபரப் பிரம மானே
னினதருளா லசலபரப் பிரம மானே
னினதருளா லகண்டபரப் பிரம மானே
னினதருளின் மகிமையினை யென்சொல்வேன்யான். (22)

நினதருளால் வியாபகமாம் பிரம மானே
னினதருளால் விசேடமிலாப் பிரம மானே
னினதருளாற் றத்துவமாம் பிரம மானே
னினதருளாற் றடையற்ற பிரம மானே
னினதருளா லெங்குமுள பிரம மானே
னினதருளா லெவையுமிலாப் பிரம மானே
னினதருளா லேகபரப் பிரம மானே
னினதருளின் மகிமையினை யென்சொல் வேன்யான். (23)

நினதருளா லயன்முதலெம் மூர்த்தி யானே
னினதருளா லசுரர்சுரர் நரரு மானே
னினதருளா லநந்தவித சகத்து மானே
னினதருளா லனைத்திற்கு மதித மானே
னினதருளா லெவையுமிலா தகண்ட மான
நிற்பரி சுத்தபர சிவமே யானே
னினதருளா லகண்டசித தா காய மாக
நிகழ்கின்ற நிமலபர சிவமே யானேன். (24)

நினதருளால் வன்னங்க ளெவையு மில்லை
நினதருளா லாச்சிரம மெவையு மில்லை
நினதருளாற் லவையினபி மானி யில்லை
நினதருளா லங்குசெயுங் கரும மில்லை
நினதருளாற் றுக்கசுக மெவையு மில்லை
நினதருளாற் றுவந்துவமே தொன்று மில்லை
நினதருளா லெப்பொருளு மெங்கு மில்லை
நினதருளால் யாவையுமே பிரமந் தானே. (25)

நினதருளா லாதியில்லை வியாதி யில்லை
நினதருளா லாபத்து சம்பத் தில்லை
நினதருளாற் றிகழுமொரு பேத மில்லை
நினதருளாற் றினையளவும் பயமு மில்லை
நினதருளா னீயுமில்லை நானு மில்லை
நினதருளாற் சிவபர சகத்தே யில்லை
நினதருளா லெப்பொருளு மென்று மில்லை
நிகில முமே யகண்டபரப் பிரமந் தானே. (26)

நினதருளா லஞ்ஞான மனைத்து நீங்கி
நிருமலமாம் விஞ்ஞான நிலைமை பெற்றே
னினதருளா லித்துவித மனைத்து நீங்கி
நிலைபெற்ற வத்துவித நிட்டை யுற்றே
னினதருளாற் பவதுக்க மனைத்து நீங்கி
நிச்சலமா மோட்சசுக மடைந்தே னானே
னினதருளா னித்தியசிற் சுகமாய் நின்ற
நிகரற்ற பரப்பிரம மானே னையா. (27)

சற்குருவே வெகுவிதமாய் விளம்பி யென்ன
சலனமிலா நினதுநிட கருணை யாலே
துர்க்குணமா மலநிபவ வாரி தன்னைத்
துடியளவி லெளிதாகக் கடந்தோ னாகி
மூக்குணமாம் விகாரங்கண் முழுது மின்றி
மூலமதா மஞ்ஞான லேச மின்றி
நிர்க்குணமாய் நித்தியசிற் சுகமாய் நின்ற
நிகரற்ற பரப்பிரம மானே னையா. (28)

இன்னவித மகண்டபரப் பிரமத் நின்க
ணிருமையறத் தான்பெற்ற வநுபவத்தை
யன்னரிபு மாமுனிவன் றனக்கு முன்பா
யத்யந்த விநயமுட னிதாக னோதிப்
பின்னணுவும் விகற்பமிலா வகண்ட மாகப்
பிறங்கியதன் வடிவான பிரமத் நின்கட்
டன்னுடைய விருத்தியினை நிலைக்க வைத்துத்
தடையற்ற வானந்த மநுப வித்தான். (29)

பொருவில்சிவ பூசனையே முதலாம் பத்தி
புரிந்தகனற் சிவகருணை பொருந்தி னோர்க்கே
சருவமுமே பிரமமென்று மதுநா னென்றுஞ்
சாற்றியவிவ் வகண்டபர ஞானந் தோன்றி
மருவமிக வரிதான முத்திப் பேரு
மற்றவருக் கிலையென்வே முன்பு கந்த
னரியசிவ பத்திமிகுஞ் சைகே சவ்யற்
கருளியவா றகிலர்க்கு மறைந்தான் சூதன். (30)

வேறு

பிரிவுபோலப் பிறங்கியயாவையும் பிரமமேயென மற்றதுநீயெனக்
குரவனோதிய வண்ணநிதாகனுங் குறைவிலாவது பூதியடைந்ததைப்
பரிவினோடவன் முன்புரமாகவே பகரலுற்றன னென்றுபகர்ந்திட
லரியவாநந்தத் தாண்டவமாடுநம் மகிலநாதனகண்டசொரூபமே (31)

மூப்பத்தொன்பதாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 39க்கு திருவிருத்தம் 1742.

நாற்பதாவது

நிதாகன்ற நுபவத்தினுற் றிருசியமே யில்லையென்றுந்
திருக்கான பிரமமே நானென்றுங் குரவனுக்கு
நமஸ்காராதி செய்ய விடமில்லை யென்று முரைக்கும்
அத்தியாயம்.

பேசவொணு வகண்டபர மாநந் தத்தைப்
பெற்றவனு நிதாகமுனி மற்றுஞ் சொல்வா
ஞசிரிய நினதுநிட கருணை யாலே
யகண்டபர மாநந்தக் கடலின் மூழ்கிப்
பாசமுறும் பவதுன்ப மனைத்து நீக்கிப்
பரப்பிரம வடிவான வென்ற னக்கிங்
கீசசக சீவரெனு மிருமைத் தோற்ற
மெள்ளளவு மில்லையிஃ தென்னே யென்னே. (1)

தூலமெனத் தோன்றியதா முடலுங் காணேன்
சூக்கமெனத் தோற்றியதா முடலுங் காணேன்
மூலமெனத் தோன்றியதா முடலுங் காணேன்
மோகமன முதலியதா மொன்றுங் காணேன்
காலமொடு தேசமுத லெவையுங் காணேன்
கற்பிதமாய்த் தோன்றியதோ ரணுவுங் காணேன்
சாலவுப சாந்தமதாய்ச் சலன மின்றிச்
சன்மயமாம் பரப்பிரம மானே னையா. (2)

சடமசட முதலியதா மெவையுங் காணேன்
சத்துடனே யசத்துமுத லெவையுங் காணேன்
கடபடமே முதலியவெப் பொருளுங் காணேன்
காரியகா ரணமான தெவையுங் காணே
னுடன்முதலா முபாதிகளோ ரணுவுங் காணே
னுபாதியுறுஞ் சீவபர ாருங் காணே
னிடர்மருவா வின்புருவா யிலங்குஞ் சித்தா
யென்றுமுள பரப்பிரம மானே னையா. (3)

அரனயன்மான் முதலியவோ ருருவுங் காணே
னவர்புரியு மைவகையாஞ் செயலுங் காணேன்
சராசரர் நரர்நிரியக் கெவையுங் காணேன்
சூரியசந் திரருடுமி னெவையுங் காணேன்
பரமிகமாய்ப் பரவியதோ ரணுவுங் காணேன்
பரசிவ சகங்களெனும் பகுப்புங் காணேன்
வரமதுவாய் வானெனவோர் வடிவுமில்லா
வத்துவதாம் பரப்பிரம மானே னையா (4)

துவிதமொடத் துவிதமுத லெவையுங் காணேன்
றுக்கசுகந் துறநிற்கை யெவையுங் காணேன்
விதிகமத பேதங்க ளனைத்துங் காணேன்
வேறெனவே விளங்கியவெப் பொருளுங் காணேன்
சுவமருவுங் குருசீட ராருங் காணேன்
சொல்லியிடு முபதேச வாக்குங் காணே
னவமருவா வகண்டபர சித்தே யாகி
யசஞ்சலமாம் பரப்பிரம மானே னையா. (5)

சலனமுறு மஞ்ஞான மணுவுங் காணேன்
சந்தேக விபரீத மனைத்துங் காணே
னிலைமருவுஞ் சிரவணமே முதலுங் காணே
னிதித்யாச முதலியவோர் நிலையுங் காணேன்
கலனமுறுந் துவிதத்தின் பயமுங் காணேன்
கடக்கவொணாப் பவபாச மனைத்துங் காணே
னலைவுபெரு வகண்டபர சித்தே யான
வத்துவித பரப்பிரம மர்னே னையா. (6)

சனனமுதல் விகாரங்க ளெவையுங் காணேன்
சரீரமுதல் விகாரிகளு மெவையுங் காணே
னனவுமுத லவத்தைகளு மெவையுங் காணே
மமமுரு குணங்களுமற் றெவையுங் காணேன்
கனவுயர்வு தாழ்வுமுத லெவையுங் காணேன்
கற்பிதமாந் துவந்தவமே தொன்றுங் காணே
னநவரத மாநந்த கனமே யான
வத்துவித பரப்பிரம மானே னையா. (7)

பூதமொடு புவனமுத லெவையுங் காணேன்
பொறிகளொடு புலன்களுமற் றெவையுங் காணேன்
வேதமொடு மிருதிமுத லெவையுங் காணேன்
விதியுடனே நிடேதமுமற் றெவையுங் காணேன்
சாதியொடு நீதிகுல மெவையுங் காணேன்
சாதிக்குங் கருமமுத லெவையுங் காணே
னீதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வத்துவித பரப்பிரம மானே னையா. (8)

இருமையெனப் பிரமமலா தெவையுங் காணே
னிருப்பதெலாம் பரப்பிரம வடிவாக் கண்டே
னொருபொருளும் பிரமமலா தயலாக் காணே
னுள்ளதெலாம் பரப்பிரம வடிவாக் கண்டேன்
சருவமெனப் பிறிதாகச் சிறிதுங் காணேன்
சகலமுமே பரப்பிரம வடிவாக் கண்டேன்
குருவரவப் பரப்பிரம நானே யானேன்
குறைவற்ற நின்கருளின் மகிமை யென்னே. (9)

சற்போத சுகனமாம் பிரம நானே
சலனமிலாச் சாந்தபரப் பிரம நானே
கற்போத சூனியமாம் பிரம நானே
தன்மயமாய் நின்றபரப் பிரம நானே
கற்போல வசைவற்ற பிரம நானே
களங்கமிலா வகண்டபரப் பிரம நானென்
றெப்போதும் பழகியவிந் நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மானே னையா. (10)

தொந்தமிலாத் தூரியபரப் பிரம நானே
துகளற்ற தூயபரப் பிரம நானே
யந்தமிலா நித்தபரப் பிரம நானே
யத்யந்த சுத்தபரப் பிரம நானே
பந்தமிலா முத்தபரப் பிரம நானே
பகுப்பற்ற புத்தபரப் பிரம நானென்
றிந்தவிதம் பழகியவிந் நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மானே னையா. (11)

நிகிலவநிட் டானபரப் பிரம நானே
நிகிலமுமாய் நிகழ்கின்ற பிரம நானே
யகிலவிலட் சணமான பிரம நானே
யனேத்துமிலா வத்துவிதப் பிரம நானே
சகலபரி பூரணமாம் பிரம நானே
சட்பாவ விகாரமிலாப் பிரம நானென்
றிகழ்வறவே பழகியவிந் நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மானே னையா. (12)

சுத்தியசிற் சுககனமாம் பிரம நானே
சதாநந்த கனமான பிரம நானே
நித்தியநிட் களமான பிரம நானே
நிராவரண மானபரப் பிரம நானே,
யத்துவித மானபரப் பிரம நானே
யகண்டபரி பூரணமாம் பிரம நானென்
றித்திறமாய்ப் பழகியவிந் நிச்ச யத்தா
லிருமையிலாப் பரப்பிரம மானே னையா. (13)

கற்பிதமோ ரணுவுமிலாப் பிரம நானே
களங்கமற நின்றபரப் பிரம நானே
சிற்பதமாய்ச் செறிந்தபரப் பிரம நானே
சிதாகாய மானபரப் பிரம நானே
நிர்ப்பயமாய் நிலைத்தபரப் பிரம நானே
நீக்கமற நிறைந்தபரப் பிரம நானென்
றற்புதமாய்ப் பழகியவிந் நிச்ச யத்தா
லகண்டமதாம் பரப்பிரம மானே னையா. (14)

பாசமிலாப் பரப்பிரம சொரூப நானே
பழுதற்ற பரப்பிரம சொரூப நானே
நாசமிலாப் பரப்பிரம சொரூப நானே
நவையற்ற பரப்பிரம சொரூப நானே
பேசவொணாப் பரப்பிரம சொரூப நானே
பிரிவற்ற பரப்பிரம சொரூப நானென்
றூசறவே பழகியவிந் நிச்ச யத்தா
லகண்டமதாம் பரப்பிரம மானே னையா. (15)

புராதனமாம் பரப்பிரம சொரூப நானே
பூரணமாம் பரப்பிரம சொரூப நானே
நிராமயமாம் பரப்பிரம சொரூப நானே
நிச்சலமாம் பரப்பிரம சொரூப நானே
பராபரமாம் பரப்பிரம சொரூப நானே
பாவளமாம் பரப்பிரம சொரூப நானென்
றிராப்பகலும் பழகியவிந் நிச்ச யத்தா
லிணையற்ற பரப்பிரம மானே னையா. (16)

நிருமலமாம் பரப்பிரம சொரூப நானே
நிர்க்குணமாம் பரப்பிரம சொரூப நானே
யொருவடிவாம் பரப்பிரம சொரூப நானே
யுவமையிலாப் பரப்பிரம சொரூப நானே
பெருமைமிகும் பரப்பிரம சொரூப நானே
பேதமிலாப் பரப்பிரம சொரூப நானென்
றிருமையறப் பழகியவிந் நிச்ச யத்தா
லிணையற்ற பரப்பிரம மானே னையா. (17)

நித்தமதாம் பரப்பிரம சொரூப நானே
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப நானே
சுத்தமதாம் பரப்பிரம சொரூப நானே
சூட்சுமமாம் பரப்பிரம சொரூப நானே
யுத்தமமாம் பரப்பிரம சொரூப நானே
யுணர்வுருவாம் பரப்பிரம சொரூப நானென்
றித்தமறப் பழகியவிந் நிச்ச யத்தா
லழிவற்ற பரப்பிரம மானே னையா. (18)

னைதருளா லியான் பெற்ற வநுப வத்தை
நிகழ்வுறவே யிவ்வண்ண நிகழ்த்த லானேன்
கனகருணை வாரிதியே யாணை னக்குக்
கைம்மாறு செய்திடவிங் கொன்றுமில்லை
மனதுடனே யெனதுடலு நினக்க ளித்தேன்
மற்றதனை நிமிடத்தி னீறு செய்தா
யனகவென தான்மாவை நினக்க ளித்தே
னதனையுநின் னன்மாவே யாக்கிக் கொண்டாய். (19)

இனியெதனைக் கைம்மாறு செய்வே னெல்லா
மிருமையிலா நினதுநிச சொரூபந் தானே
யனியமிலா நீநானுய் நானே நீயா
யமர்கின்ற வைக்கியமா மாழி யின்க
ணனியுமகம் பிரமாஸ்மி ஞானத் தாலே
நான்மூழ்கி யொன்றுகக் கலந்தே னன்றே
தனியுருவாய்த் தான்றுனைத் தனித்த விந்தத்
தகமையினிற் றனக்கயலோ ரணுவு மூண்டோ. (20)

ஆதலினுல் யான்கைம்மா றளிப்ப தற்கு
மதனையடைந் தெங்கணுநீ போவ தற்கு
மேதுவிலை யெப்போது மெவ்வி டத்து
மிருப்பதெலா மேகசிதா காயந் தானே
யோதியவா ரூரணுவு மயலில் லாதா
லொன்றினைநீ யுபதேசஞ் செய்வ தற்கு
மீதினையா னினிமையுடன் கேட்ப தற்கு
மிடமதிலை யிவ்விதிக்ர மென்னை யையா. (21)

சற்குருவா யருளியிடு நீயு மில்லை
சற்சீட ருகியுள நானு மில்லை
மூக்குணமாய்த் தோற்றியவோர் பிரிவு மில்லை
மூலமதா மவித்தையிலை மாயை யில்லை
தூர்க்குணமாய்த் தோற்றியவோர் சகத்து மில்லை
தொடர்வுற்ற சீவேச ராரு மில்லை
நிர்க்குணமாம் பரப்பிரம சொரூப மொன்றே
நீக்கமற நிலைபெற்று நிகழ்ந்த தன்றே. (22)

ஏகமதாம் பரப்பிரம சொரூப மென்னு
மிணையற்ற வானந்த சாக ரத்திற்
ருகமற மூழ்கிவிளை யாடி நன்ருய்த்
தாபமெலாந் தவிர்ந்தந்த மயமே யாகிப்
பாகமற நிலைநின்ற வென்ற னக்குப்
பார்க்கவொரு பொருளேனு மயலே யில்லை
சோகமெலாந் தவிர்த்தென்னை யாளா நின்ற
சுகருருவே நினதருளின் பெருமை யென்னே. (23)

இன்றடியே னுனைநோக்கி வணங்கு வேனே
ரிரண்டுபடு மதனுலவ் வணக்கங் கூடா
தன்றியெனை யாளுக்கி வணங்கு வேனே
லணுகுபல னிலாமையினு லதுவுங் கூடா
தென்றுமொரு வடிவான வுன்னை நோக்கி
யிருமையுற யானின்று வணங்கு வேனே
னின்றவெனை யஞ்ஞானி யெனநீ சொல்வாய்
நிருமலமாந் தன்னிலையி லிருமை யுண்டோ. (24)

நிருமலமாஞ் சற்குருவே நானிப் போது
நீயென்று நானென்றும் பேத மெண்ணிப்
பரிவுடனை யுனைநோக்கி வணங்கு வேனேற்
பரிச்சேதப் படுவதனல் யானெ னக்கே
பிரபலமா மபசாரஞ் செய்தே னுவேன்
பேதமுறு மதியன்றே பயத்துக் கேது
பரகுருவே யாதலினு லாயுங் காலைப்
பண்ணியிடு முபசார மொன்றுங் காணேன். (25)

எப்போது மெல்லாமு மேக சித்தா
யிருப்பதனு லத்யந்த மௌனி யாகிக்
கற்போல வசைவற்றுக் களங்க மற்றுக்
கற்பிதமாஞ் சங்கற்ப விகற்ப மற்றுத்
தற்போத சூனியனுய்த் தானே தானுய்த்
தனித்தரமாய் நிற்பதுவே யறநன் றன்றி
யெப்பேத மதியினையு முன்போன் மற்று
மெய்தியிட லெனக்கிதமாய்த் தோற்ற வில்லை. (26)

சோகமெலா மறநீக்கி யென்னை யாண்ட
சுககுருவே நீயருளு முபதே சத்தாற்
பாகமுறத் தோற்றியிடுந் தோற்ற மெல்லாம்
பரப்பிரம வடிவான நானே யாகு
மேகபரி பூரணமா மென்னை யல்லா
லெப்போது மெள்ளளவு மெவையு மில்லை
யாகையினு லன்னியமா முபசா ரத்தை
யன்புடன்யான் செய்திடவோ ரிடமு மில்லை. (27)

குறைவுதரு மஞ்ஞான தசையின் முன்பு
குருசீடர் முதலியதாம் பேதங் கண்டே
னிறைவுதரு விஞ்ஞான தசையி லின்று
நினதருளா லெப்பேத மயலுங் காணேன்
சிறுமைதரும் பேதமல மனைத்து நீங்கிச்
சின்மயமாம் பரப்பிரம சொரூப மாகி
மறைவறவே தான்ஞனுய்த் தனித்த வென்றன்
மகத்தான மகிமைதனை யென்சொல் வேன்யான். (28)

உற்பவமா ருலகங்க ளெவையு மின்றி
யோதியிடுங் குருசீட ராரு மின்றிக்
கற்பிதமா மாயைமுத லுபாதி யின்றிக்
கருதியிடுஞ் சீவேச ராரு மின்றி
நிர்ப்பயமாய் நிலைபெற்று நிகரொன் றின்றி
நிகிலமகா வாக்குகளின் பொருளாய் நின்ற
வற்பமிலாப் பரப்பிரம மான வென்ற
னதிசயமா மகிமைதனை யென்சொல் வேன்யான். (29)

குறைவின்றி நிறைவின்றிக் குற்ற மின்றிக்
குணங்குறிகண் முதலியவை யெவையு மின்றி
மறைவின்றித் தெரிவின்றி மனது மின்றி
மனோமயமா மயக்கங்க ளனைத்து மின்றிப்
பிறிதின்றித் தனதின்றிப் பிரிவொன் றின்றிப்
பேதமுறு மெப்பொருளு மென்று மின்றி
யறிவொன்றே வடிவான பிரம மாக
வமைவுற்ற வென்மகிமை யென்சொல் வேன்யான். (30)

சன்மாத்ர மானபரப் பிரம மாகிச்
சலனமற நிலைநின்ற வென்ற னக்குச்
சின்மாத்ர மாகியுள வென்னை யல்லாற்
சிறிதுமொரு விகற்பமுமே பிறிதா யில்லை
யென்மாத்ர மாகியுள வென்னை யல்லா
லெவையேனு மிருந்திடுமே லிலகு மன்றே
தன்மாத்ர மலதெவையுந் தோற்ற தக்காற்
றான்ஞனுய்த் தனித்தென்று நிற்கின் றேன்யான். (31)

விரிவுறவே வெகுவிதமாய் விளம்பி யென்ன
வேறறவே நீயருளு முபதே சக்காற்
சருவமுமே பிரமமென்று மதுவா னென்றுந்
சலனமிலா வகண்டபர போதம் பெற்றுத்
திருசியமாம் பேதமய லனைத்துந் தீர்த்துத்
திகழ்வுருவாம் பரப்பிரம வடிவே யானே
னருளுருவா யெழுந்தருளி யென்னை யாண்ட
வாசிரிய னினதருளீ தென்னே யென்னே. (32)

அகோபேத மயலணுவு மெங்கு மில்லை
யகோமாயை மகத்தி யெவையு மில்லை
யகோசித்த முதலியதோ ரணுவு மில்லை
யகோசீவர் முதலியவ ராரு மில்லை
யகோமோக மணுவேணு மெங்கு மில்லை
யகோபாச மணுவேணு மெங்கு மில்லை
யகோவென்று மெப்பொருளு மெங்கு மில்லை
யகோவெவையு மகண்டபரப் பிரமந் தானே. (33)

அகோதருவின் மகிமையினை யென்சொல் வேன்யா
னகோநூலின் மகிமையினை யென்சொல் வேன்யா
னகோஞான மகிமையினை யென்சொல் வேன்யா
னகோஞானி மகிமையினை யென்சொல் வேன்யா
னகோசாது மகிமையினை யென்சொல் வேன்யா
னகோசாந்தி மகிமையினை யென்சொல் வேன்யா
னகோபிரம சுகமகிமை யென்சொல் வேன்யா
னகோவெனது சுகமகிமை யென்சொல் வேன்யான். ()

அகோநித்த பரப்பிரம நானே யானே
னகோசுத்த பரப்பிரம நானே யானே
னகோபுத்த பரப்பிரம நானே யானே
னகோமுத்த பரப்பிரம நானே யானே
னகோவமல பரப்பிரம நானே யானே
னகோவசல பரப்பிரம நானே யானே
னகோகுறைவில் பரப்பிரம நானே யானே
னகோகுவ னினதருளீ தென்னே யென்னே. (35)

கற்பிதமாந் தோற்றமெலாம் பிரம மென்றே
காண்பதலான் மற்றணுவு மயலாக் காணேன்
செப்பியவிவ் வதிநிடமா நிச்ச யத்காற்
சின்மயமாம் பரப்பிரம மாகி நின்றே
னிப்படியென் மனதிலுள நிர்ண யத்தை
யிசைப்புற்றே னிதிலிறையு மையு மில்லை
நிர்ப்பயமா வெனைமுழுது மாளுந் தன்மை
நிகரற்ற சற்குருவே நினது பாரம். (36)

இன்னவித நிதாகமுனி யிசைத்த பின்ன
ரிணையற்ற தன்சொரூப சுகத் திருந்தான்
மன்னுசிவ பத்தியுடன் குருவின் பத்தி
மருவினவ ரேமகத்தா மோட்சஞ் சார்வ
ரன்னியர்க ளொருகாலு மதனைச் சாரா
ரணுவுமிதி லையமிலை யெனவே கந்த
னுன்னவொணாக் கருணையுடன் சைகே ஷவ்யற்
கோதியவா றகிலர்க்கு முரைத்தான் சூதன். (37)

வேறு.

அரியதான வகண்டபரம்பொரு ளநுபவத்தை யடைந்திதாகனிங்
குரியதன்னது பூதியுரைப்பது மொன்றுமேபரமன்றி யிலாமையாற்
குரவனுக்குபசாரங்கள் செய்திடக் கூடுமாறிலையென்று குறிப்பதும்
பரமவானந்தத் தாண்டவமாடுநம் பரசிவன்ற னகண்டசொரூபமே.

நாற்பதாவது அதிகாரணம்

முற்றிற்று.

ஆக அதிகாரணம் 40-க்கு திருவிருத்தம் 1780.

நாற்பத்தொன்றாவது

நிதாகன் றன்னநுபவத்திலுல் நானேசராசரப்
பிரபஞ்சமெல்லா மானேனென்றும்நானே
சத்தியக்ஞாந வனந்தாநந்தப்பிரம
மானேனென்றும் உரைக்கும்
அத்தியாயம்.

ஆசிரிய நினதுதிட கருணை யாலே
யகண்டமதாம் பரப்பிரம வநுப வத்தை
மாசறவே நானுரமாய் மதித்த வண்ண
மகிழ்வுடனே மயக்கமற மற்றுஞ் சொல்வேன்
பாசமுறுஞ் சித்தமுத லுபாதி யின்றிப்
பகுப்புற்ற மாயையுத லுபாதி யின்றி
யீசசக சீவரெனு மிருமை யின்றி
யேகமதாம் பரப்பிரம நானே யானேன். (1)

நான்முனே சன்மயமாம் பிரம மானே
னான்முனே சின்மயமாம் பிரம மானே
னான்முனே நன்மயமாம் பிரம மானே
னான்முனே தன்மயமாம் பிரம மானே
னான்முனே நின்மலமாம் பிரம மானே
னான்முனே நிர்க்குணமாம் பிரம மானே
னான்முனே யத்துவிதப் பிரம மானே
னான்முனே யகண்டபரப் பிரம மானேன். (2)

நான்முனே கேவலமாம் பிரம மானே
னான்முனே கெம்பீரப் பிரம மானே
னான்முனே பாவனமாம் பிரம மானே
னான்முனே பரிசுத்தப் பிரம மானே
னான்முனே யோவலிலாப் பிரம மானே
னான்முனே யுத்தமமாம் பிரம மானே
னான்முனே யாவலிலாப் பிரம மானே
னான்முனே யகண்டபரப் பிரம மானேன். (3)

நான்ருனே சத்தியமாம் பிரம மானே
ஞன்ருனே சலனமிலாப் பிரம மானே
ஞன்ருனே நித்தியமாம் பிரம மானே
ஞன்ருனே நிட்களமாம் பிரம மானே
ஞன்ருனே சுத்தகாம் பிரம மானே
ஞன்ருனே சுககனமாம் பிரம மானே
ஞன்ருனே யத்தமிலாப் பிரம மானே
ஞன்ருனே யகண்டபரப் பிரம மானேன். (4)

நான்ருனே விகாரமிலாப் பிரம மானே
ஞன்ருனே விமலமதாம் பிரம மானே
ஞன்ருனே விசேடமிலாப் பிரம மானே
ஞன்ருனே வியாபகமாம் பிரம மானே
ஞன்ருனே விநாசமிலாப் பிரம மானே
ஞன்ருனே விபுவதுவாம் பிரம மானே
ஞன்ருனே விவர்த்தமிலாப் பிரம மானே
ஞன்ருனே விசுத்தபரப் பிரம மானேன். (5)

நான்ருனே நிராமயமாம் பிரம மானே
ஞன்ருனே நிரவயவப் பிரம மானே
ஞன்ருனே நிராவரணப் பிரம மானே
ஞன்ருனே நிட்கிரியப் பிரம மானே
ஞன்ருனே நிருமலமாம் பிரம மானே
ஞன்ருனே நிச்சலமாம் பிரம மானே
ஞன்ருனே நிருபமமாம் பிரம மானே
ஞன்ருனே நிகரில்பரப் பிரம மானேன். (6)

நான்ருனே சிந்தையிலாப் பிரம மானே
ஞன்ருனே சிற்கனமாம் பிரம மானே
ஞன்ருனே தொந்தமிலாப் பிரம மானே
ஞன்ருனே துகளற்ற பிரம மானே
ஞன்ருனே பந்தமிலாப் பிரம மானே
ஞன்ருனே பழுதற்ற பிரம மானே
ஞன்ருனே யந்தமிலாப் பிரம மானே
ஞன்ருனே யகண்டபரப் பிரம மானேன். (7)

நான்முனே புராதனமாம் பிரம மானே
ஞன்முனே பூரணமாம் பிரம மானே
ஞன்முனே சாதியிலாப் பிரம மானே
ஞன்முனே சற்கனமாம் பிரம மானே
ஞன்முனே யனாமயமாம் பிரம மானே
ஞன்முனே யசங்கபரப் பிரம மானே
ஞன்முனே சனாதனமாம் பிரம மானே
ஞன்முனே சாந்தபரப் பிரம மானேன். (8)

நான்முனே லட்சியமாம் பிரம மானே
ஞன்முனே லயமற்ற பிரம மானே
ஞன்முனே யட்சரமாம் பிரம மானே
ஞன்முனே யழிவற்ற பிரம மானே
ஞன்முனே சித்துருவாம் பிரம மானே
ஞன்முனே சிதம்பரமாம் பிரம மானே
ஞன்முனே விக்கிரமாம் பிரம மானே
ஞன்முனே விதேகபரப் பிரம மானேன். (9)

நான்முனே சங்கமிலாப் பிரம மானே
ஞன்முனே சுகோதிகமாம் பிரம மானே
ஞன்முனே பங்கமிலாப் பிரம மானே
ஞன்முனே பரசிவமாம் பிரம மானே
ஞன்முனே துங்கமதாம் பிரம மானே
ஞன்முனே துவிதமிலாப் பிரம மானே
ஞன்முனே யெங்குமுள பிரம மானே
ஞன்முனே யேகபரப் பிரம மானேன். (10)

நான்முனே மூலமிலாப் பிரம மானே
ஞன்முனே மொழிவற்ற பிரம மானே
ஞன்முனே காலமிலாப் பிரம மானே
ஞன்முனே கரையற்ற பிரம மானே
ஞன்முனே கோலமிலாப் பிரம மானே
ஞன்முனே குறைவற்ற பிரம மானே
ஞன்முனே ஞானமிலாப் பிரம மானே
ஞன்முனே நவையில்பரப் பிரம மானேன். (11)

நான்முனே தேகமிலாப் பிரம மானே
னென்முனே தெரிவுருவாம் பிரம மானே
னென்முனே போகமிலாப் பிரம மானே
னென்முனே புரைமருவாப் பிரம மானே
னென்முனே தாகமிலாப் பிரம மானே
னென்முனே தணிந்தபரப் பிரம மானே
னென்முனே சோகமிலாப் பிரம மானே
னென்முனே சுத்தபரப் பிரம மானேன். (12)

நான்முனே யகிலவதிட் டான மானே
னென்முனே யாரோப மனைத்து மானே
னென்முனே யயன்முகலம் மூர்த்தி யானே
னென்முனே யவர்செய்கை யனைத்து மானே
னென்முனே யமரர்நரர் நிரியக் கானே
னென்முனே யசலமுத லனைத்து மானே
னென்முனே யகிலசரா சரமு மானே
னென்முனே யகண்டபர மானே னையா. (13)

நான்முனே மாயைமக தாதி யானே
னென்முனே மன்னியிடு மீச னானே
னென்முனே யவித்தையக மாதி யானே
னென்முனே யநேகவித சீவ ரானே
னென்முனே தாமதபாம் பகுதி யானே
னென்முனே தயங்குசக மெவையு மானே
னென்முனே யறிவுற்ற தனைத்து மானே
னென்முனே யகண்டபர மானே னையா. (14)

நான்முனே யயனானே னரியு மானே
னென்முனே யரனானேன் மகேச னானே
னென்முனே சதாசிவமா மூர்த்தி யானே
னென்முனே சாட்சாத்தாஞ் சிவனு மானே
னென்முனே கருதுமுமா தேவி யானே
னென்முனே கந்தவிநா யகரு மானே
னென்முனே பரசிவ கணங்க ளானே
னென்முனே பத்தர்குழு வனைத்து மானேன். (15)

நான்முனே சுரசுர ராரு மானே
ஞன்முனே சுர்பதியா மகவா னானே
ஞன்முனே திக்கணைத்தின் பதிக ளானே
ஞன்முனே திகழ்முனிவர் குழுவு மானே
ஞன்முனே யரக்கருட னியக்க ரானே
ஞன்முனே யநேகசுர பேத மானே
ஞன்முனே விண்ணிலுளோ ராரு மானே
ஞன்முனே மண்ணிலுளோ ரெவரு மானேன். (16)

நான்முனே பூதங்க ளணைத்து மானே
ஞன்முனே புவனங்க ளணைத்து மானே
ஞன்முனே சாதங்க ளணைத்து மானே
ஞன்முனே சரிதைகழுக ளணைத்து மானே
ஞன்முனே வேதங்க ளணைத்து மானே
ஞன்முனே விநிழுதலா மணைத்து மானே
ஞன்முனே பேதங்க ளணைத்து மானே
ஞன்முனே பிரிவற்ற தணைத்து மானேன். (17)

நான்முனே வாரிதிக ளணைத்து மானே
ஞன்முனே வருநதிக ளணைத்து மானே
ஞன்முனே யடவிதரி யணைத்து மானே
ஞன்முனே யங்குள்ள தணைத்து மானே
ஞன்முனே யவனிபுன லணைத்து மானே
ஞன்முனே யங்கிமருத் தணைத்து மானே
ஞன்முனே யாகாய மணைத்து மானே
ஞன்முனே யத்தன்முக லாரு மானேன். (18)

நான்முனே யுடல்பொதிக ளணைத்து மானே
ஞன்முனே யுயிர்களுள பணைத்து மானே
ஞன்முனே மனதுமதி யணைத்து மானே
ஞன்முனே மயல்சித்த மணைத்து மானே
ஞன்முனே யகங்கார மணைத்து மானே
ஞன்முனே யாவரண மணைத்து மானே
ஞன்முனே விட்சேப மணைத்து மானே
ஞன்முனே விளங்குபொரு ளணைத்து மானேன். (19)

நான்ரூனே நான்குவித தேக மானே
ஞன்ரூனே நனவுமுத லவத்தை யானே
ஞன்ரூனே யைந்துவித கோச மானே
ஞன்ரூனே யவையினபி மானி யானே
ஞன்ரூனே விசுவன்முதல் வியட்டி யானே
ஞன்ரூனே விராட்டுமுதற் சமட்டி யானே
ஞன்ரூனே யறிவுற்ற தனைத்து மானே
ஞன்ரூனே யறியாத தனைத்து மானேன். (20)

பூதமொடு பௌதிகமு மானே ஞனே
புவனமுறும் பொருளெவையு மானே ஞனே
பேதமுறு முலகமெலா மானே ஞனே
பிரமாண்ட கோடிகளு மானே ஞனே
சாதமுறு மெப்பொருளு மானே ஞனே
சகசீவ பரங்களெலா மானே ஞனே
யோதுபல வுபாதிகளு மானே ஞனே
யுபாதியிலா வுண்மையுமின் ருனே ஞனே. (21)

வெகுவிதமாய் விளம்பியென்ன விவகா ரத்தில்
வேறெனவே காண்பதெலா மானே ஞனே
சகமைமிகும் பரமார்த்தத் தெவையு மின்றித்
தன்மயமாய் நின்றபர மானே ஞனே
யகமருவுந் தோடமெலா மறவு நீங்கி
யகண்டபரப் பிரமமதாய் நின்ற வென்ற
னிகழ்வுபெரு மகிமைதனை யென்சொல் வேன்யா
னீசமெலா நின்கருணைத் திறமை யன்ரே. (22)

சுத்தியளா ஞநந்தப் பிரம மானேன்
சகலபரி பூரணமாம் பிரம மானே
னித்தியளா ஞநந்தப் பிரம மானே
னிச்சலமாய் நிலைபெற்ற பிரம மானேன்
சுத்தசித காயபரப் பிரம மானேன்
சொற்பொருளோ ரிறையுமிலாப் பிரம மானே
னத்துவித கண்டபரப் பிரம மானே
னேயநின தருண்மகிமை யென்னே யென்னே (23)

சகலமிலாச் சாந்தபரப் பிரம மானேன்
சருவான்மா வானபரப் பிரம மானேன்
விகலமிலா விமலபரப் பிரம மானேன்
வியாபகமாய் நின்றபரப் பிரம மானேன்
றுகளணுகாத் துரியபரப் பிரம மானேன்
றுரியத்து மதீதபரப் பிரம மானே
னகமருவா வகண்டபரப் பிரம மானே
னேயகின தருண்மகிமை யென்னே யென்னே. (24)

உருவமெலா மொழிந்தபரப் பிரம மானே
லேருருவாய் நின்றபரப் பிரம மானே
னருவமதா யமர்ந்தபரப் பிரம மானே
னசஞ்சலமாய் நின்றபரப் பிரம மானே
னிருமலமாய் நிறைந்தபரப் பிரம மானே
னிரஞ்சனமாய் நின்றபரப் பிரம மானே
னிருமையிலா வேகபரப் பிரம மானே
னீசகின தருண்மகிமை யென்னே யென்னே. (25)

நித்தியமும் புத்தபரப் பிரம மானே
னித்தியமுஞ் சுத்தபரப் பிரம மானே
னித்தியமு முத்தபரப் பிரம மானே
னித்தியமுங் திருத்தபரப் பிரம மானே
னத்துவித முற்றபரப் பிரம மானே
லகா மற்றபரப் பிரம மானே
னித்துவித மிற்றபரப் பிரம மானே
னீசகின தருண்மகிமை யென்னே யென்னே. (26)

ஒருமூன்று வடிவுமிலாச் சொரூப மானே
ணுணர்வுருவாய் நின்றபர சொரூப மானேன்
வருமூன்றெ னவத்தையிலாச் சொரூப மானேன்
வானெனவே நின்றபர சொரூப மானே
னிருமூன்று விகாரமிலாச் சொரூப மானே
னேகமதாய் நின்றபர சொரூப மானேன்
பரிபூன்ற மானபர சொரூப மானேன்
பரமகின தருண்மகிமை யென்னே யென்னே. (27)

ஆசரிய னீயருளிச் செய்த வண்ண
மகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றேசணுகா வகண்டபர நிச்ச யத்தை
யெப்போது மிடையறவே யப்யா சித்துப்
பாசமதாம் விகற்பங்க ளனைத்துந் தீர்த்துப்
பழுதற்ற பரப்பிரமா நந்தம் பெற்று
மாசணுகாச் சொரூபநீலை மன்னி நின்றேன்
மகத்தான நின்மகிமை யென்சொல் வேன்யான். (28)

இன்னவித மகண்டபர நிச்ச யத்தை
யான்பெற்ற விதமாக வியம்ப லுற்றேன்
பன்னியவித் நிடமான நிச்ச யத்தைப்
பற்றினவ ராரேனுஞ் சுகமே சார்வர்
பின்னுமிதைப் பரிவுடனே நிதமுங் கேட்போர்
பெந்தமெலாந் தீர்ந்துபர வடிவே யாவர்
சொன்னதெலா முண்மையென நிதாக ணேநிச்
சுத்தபர சொரூபத்திற் சுகித் திருந்தான். (29)

தேசிகனற் கருணையினு லுபதே சித்த
திகழுமகா வாக்குகளின் பொருளைக் கேட்டு
மாசறவே மற்றுமதை மனனஞ் செய்து
மயக்கமறச் சந்ததமு நிதித்யா சித்நிங்
காசணுகா வகண்டபர சிவமே நாமென்
றறிந்தவரே பவமுக்த ராவ ரென்றே
யேசணுகா வறுமுகவன் சைகே ஷவ்யற்
கியம்பிவா றகிலர்க்கு மிசைத்தான் சூதன். (30)

வேறு

அகிலமான சராசரத்தோற்றமு மகமலாதணு வுப்பிறிதன்றெனு
நிகிலபூரண மாகிநிறைந்தபா னித்தநிட்கள மாம்பரமேயெனு
மிகழ்விறேசிகன் முன்புரிதாகனிங் கிணையிலா வநுபூதியிசைத்திட
றிகழுமாநந்தத் தாண்டவமாடுநந் தேவதேவ னகண்டசொரூபமே. ()

நாற்பத்தொன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 41-க்கு திருவிருத்தம் 1811.

†††

நாற்பத்திரண்டாவது

நிதாகன் றன்னநு பவத்தி னால் இந்நூன்மகிமையையும்
இந்நூலநுக்கிரகிக்குங் குருமகிமையும் இந்நூலிற்
சொன்னஞானஞ் சிவகிருபையால் வர
வேண்டுமென்றும் உரைக்கும்
அத்தியாயம்.

மகிழ்வுடனே நிதாகமுனி மற்றுஞ் சொல்வான்
மாசற்ற சற்குருவே மகேசன் முன்ன
மிகவுமகா ரகசியமா மிந்த நூலை
மெத்தவுமே கருணையினி னைக்குரைத்தான்
பகரவொணாக் கருணையினி லிதனை மற்றும்
பரமதயா நிதியான நீயெ னக்கிங்
கிகழ்வறவே யுரைசெய்தா யுரைத்த வண்ண
மியானுமிதை யிதயத்தி லிசைந்தோ னேன். (1)

தேசிகவிந் நூலிலொரு வத்தி யாயந்
நிடமாக மனதிலுறக் கேட்ட தாலே
மாசுமிகு மனதினிடை மருவா நின்ற
மாமாயை யெனுமிருளின் றிரளை யெல்லா
மாசதனில் விலக்கியிடு மருக்க னென
வகண்டபர சிவஞான மடைந்தோ னேனே
னீசவித்தி லொருகவிதை கேட்ட போது
மிருமையிலா மோட்சசுக மிசைய லாமே. (2)

இதனிலொரு கவியேனுங் கேட்டு ணர்ந்தோ
நிருமையிலா வீடுறுவர் சத்தி யந்தா
னிதமுமெலாம் பிரமமென்று மதுநா மென்று
நிகழ்த்தியவோர் கவியிலுள பொருளு ணர்ந்தால்
விதம்விதமா நூலினமற் றென்பொ ருட்டால்
வீணுக விசாரித்து வருந்த வேண்டு
மதிசயமா யிதனிலுள கவியொன் றாலே
யகண்டபர ஞானத்தை யடைய லாமே. (3)

இத்திறமா மிந்நூலை யுபதே சிக்கு
மியல்புள்ள குருவானே குரவ னேனென்
வித்தாரமாய்ப் பன்னூலை யுபதே சிக்கும்
விசித்திரமாங் குரவர்களாற் பெறும்பே றென்ன
வுத்தமமா மிந்நூலை யுபதே சிப்போ
ணுணர்வுருவாய்நின்றபரப் பிரமந் தானுஞ்
சத்தியமே யணுவுமிற்சங்கை யில்லை
சம்புபதந் தன்னுணை சங்கை யில்லை. (4)

இந்நூலைக் கருணையினு லுபதே சிப்போ
னிணையற்ற பரசிவனே யைய மில்லை
யிந்நூலைக் கருணையினு லுபதே சிப்போ
னிணையற்ற வம்பிகையே யைய மில்லை
யிந்நூலைக் கருணையினு லுபதே சிப்போ
னிருமைமிகும் விநாயகனே யைய மில்லை
யிந்நூலைக் கருணையினு லுபதே சிப்போ
னிலங்கியிடுஞ் சண்முகனே யைய மில்லை. (5)

அருளுடனே யெவனிதனை யுபதே சிப்ப
னவநந்தி கேசனிதி லைய மில்லை
யருளுடனே யெவனிதனை யுபதே சிப்ப
னவன்றத்தாத் திரேயனிதி லைய மில்லை
யருளுடனே யெவனிதனை யுபதே சிப்ப
னவன்றட்ச ணுமூர்த்தி யைய மில்லை
யருளுடனே யெவனிதனை யுபதே சிப்ப
னகண்டபர சிவனவனே யைய மில்லை. (6)

வித்தாரமாய் விளம்பியென விந்த நூலை
வெருளறவே யருள்செய்வோன் பரசி வன்ரு
னித்திறமா மிந்நூலை யியம்பு தற்கு
மிதன்பொருளை யெளிதாகத் தெரிவித் தற்கு
முத்தமனே நின்னையலா துலகத் தின்க
ணும்பரிது முனிவரிது மொருவ ரேனுஞ்
சத்தாய்ல சந்தேக மணுவு மில்லை
சத்தியமே சம்புபதந் தொட்டுச் சொல்வேன். (7)

அருளுடனே யிந்நூலை யுபதே சிக்கு
மாசிரியன் பரசிவமே யாத லாலக்
குருவரனுக் கொருகாலு மபகா ரத்தைக்
குறைவறவே யுபதேசம் பெற்ற மாணன்
றிரிவிதமாங் கருவிகளாற் செய்யக் கூடா
நிரவியமே முதலியதாற் சத்தி யுள்ள
வரையிலவன் பூசனையே செய்ய வேண்டும்
வழுவற்ற குருவையலாற் பந்து வுண்டோ. (8)

கந்தமுதற் பந்துவெலா மநந்த தேகங்
கருவதலா லனுதிபவ பந்தந் தீர்க்கார்
சிந்தையினு லாய்ந்திடிலப் பந்து வெல்லாஞ்
சிறுமைதருஞ் சத்துருவே யாகா நிற்ப
ரந்தமிலா வருள்வடிவாங் குருவோ வென்று
லகண்டபர ஞானத்தை யருளா னல்கித்
தொந்தமதா மனுதிபவ பந்த மெல்லாந்
துப்பறவே நன்முகத் துடைத்துக் காப்பன். (9)

குருபரனே பரமசிவன் பரேசன் முனே
குருபரனு மாகினுமே யொருகா லத்தி
னிருமலமாம் பரமசிவன் மூனிவுற் முறு
நிகரில்தயா நிதியான குரவன் காப்ப
னருள்வடிவே திருவுருவா யெழுந்து நின்ற
வாசிரிய னென்றேனு மூனிவுற் முனேற்
றிரிவிதமா முலகத்து மம்மா னுனைத்
தியக்கமெலாந் தீர்த்தெவருங் காப்ப தில்லை. (10)

ஆதலினுற் குருவின்பா லிந்நூ லின்பா
லகிலசகன் னுயகனும் பரேசன் றன்பா
லேதமிலாச் சித்தைமிகுந் திருப்போர் தாமே
யிந்நூலைப் பழகுவதற் குரிய ராவ
ரோதியவா சித்தையுறு மூர்க்க ரெல்லா
மொருகாலு மிந்நூலிற் கவியொன் றேனுஞ்
சாதகமாய்ச் சாருவதற் குரிய ராகார்
சத்தியமே யதிலனுவுஞ் சங்கை யில்லை. (11)

சிவபர வைக்யமுணர் ஞானஞ் சேரச்
சிரத்தையலான் மற்றெவையு மேது வாகா
தாவலுடன் பெறுகின்ற சிரத்தை யொன்று
லனைத்துமிலை யகண்டபரப் பிரம மொன்றே
கேவலமா யுளதென்று மதுநா மென்றுங்
கிலேசமிலாப் பரஞானங் கிடைப்ப தன்றி
மேவியமற் றொன்றுலு மகண்ட ஞான
மேவவொணு தென்றுமறை விளம்பிற் றன்றே. (12)

பரமசிவன் கருணையினைப் பற்றி னோரே
பரவியவிந் நூற்பொருளை யறிவ ரன்றி
யரியசிவன் கருணையுறு மூர்க்க ரென்று
மரிதான விதன்பொருளை யறிய மாட்டார்
சருவமுமே யிழந்துபர சிவனைத் தானே
சந்தகமுஞ் சிரத்தையுடன் றியானித் தன்னோன்
கருணையினைப் பெற்றவரே யகண்ட ஞானங்
கலப்பரெனச் சுருதிமுடி விநித்த தன்றே. (13)

ஆதலினற் சிரத்தையுட னனைத்துந் தள்ளி
யகண்டபர வடிவான சிவத்தைத் தானே
தீதறவே யிந்நூலி லுரைத்த வண்ணந்
தியானித்துச் சிவகருணை பற்றினோரே
யேதமுறு விந்நூலின் பொருளா கின்ற
விருமையிலா வகண்டபர ஞானஞ் சார்வ
ரோதியவிந் நூற்பொருளா ஞானத் துக்கிங்
கொப்பான ஞானமொரு விடத்து மில்லை. (14)

வெகுவிதமாம் யோகங்கள் சாங்கி யங்கள்
வேறுபடு முபாசனைக ளெவையு மின்றிச்
சகலமறை முடிவிலுநற் சார மாகச்
சருவஞ்ஞ சிகாமணியாம் பரேசன் றானே
நிகழ்வுறவே நேராக நிகழ்த்தா நின்ற
நிருமலமா மிந்நூலின் ஞானம் போல
வகிலவித புராணங்க ளிதிகா சங்க
ளனைத்திலுமே யெளிதான ஞான மில்லை. (15)

சுத்தமதா யிந்நூலிற் சொல்லப் பட்ட
சூட்சுமமா மகண்டபர சிவஞா னந்தான்
பத்தியுடன் பழுதறவே பழகப் பட்ட
பாவனையி தொன்றுலிங் கெளிதா யெய்துஞ்
சித்தினிடைத் தோற்றியிடுந் தோற்ற மெல்லாஞ்
சின்மயமாஞ் சிவமென்று மதுதா மென்று
மத்துவித பாவனையும் வருத்த மல்ல
வாதலினு லிஞ்ஞான மெளிது தானே. (16)

இவ்விதமா மிந்நூலா லெய்து ஞான
மித்துவிதம் யாவையுமே நாசஞ் செய்யுந்
திவ்வியமா மிந்நூலாற் றிகழு ஞானந்
திட்டமதிட் டங்களெலா நாசஞ் செய்யுஞ்
செவ்வியதா மிந்நூலாற் செறியு ஞானஞ்
செகசீவ பரங்களெலா நாசஞ் செய்யு
மவ்விதமா மிந்நூலா லறியு ஞான
மகண்டபர மாநந்த மளிக்கு மன்றே. (17)

கனத்தவிராப் பரமசிவ பத்தியே போற்
களங்கமறச் சற்குருவின் பத்தி தன்னைக்
கினத்தவிரா தெவன்செய்வ னன்னே னுக்கே
திகழ்த்தியவா றிந்நூலின் ஞானந் தோன்று
மனத்தனிலே மருவியவிந் நூலின் ஞான
மகத்தான தன்பமெலா முடனே தீர்க்கு
மனத்துவிதம் பகர்ந்தென்ன விஞ்ஞா னந்தா
னகண்டபர மோட்சநிலை யளிப்ப தாமே. (18)

நிருமலமா மிந்நூலைக் குருவின் முன்பாய்
நேசமுடன் கேட்கின்ற மாணு னந்தக்
குருவரனைத் தனக்குள்ள சத்தி கொண்டு
கோதறவே பூசைசெபா திருப்பா னுகிற்
புரைமருவு மம்மாணு னாறு சன்மம்
புன்மைமிகுஞ் சுனகத்தின் யோனி சார்வன்
சருவவித சாதிக்கு மிகக் கீழான
சண்டாள சன்மமுமோர் கோடி சார்வன். (19)

மொழிவுற்ற விந்நூலைக் குருவின் முன்பாய்
மோதமுடன் கேட்கின்ற மாலு னந்தப்
பழுதற்ற குருவரனைப் பழிப்பா னுகிற்
பலசென்மம் வேசரியாய் நரகஞ் சார்வ
னழிவற்ற விந்நூலைக் கேட்ட பின்ன
ராசரனைப் பரசிவமாய்ப் பாவி யாதோ
னிழிவுற்ற பாவத்தா லநேக சன்ம
மீனமுறுஞ் சூகரமாய் நரகஞ் சார்வன். (20)

அரிதான விந்நூலை யருளிச் செய்யு
மற்புதமா மாசரனை மகிழ்ந்தி டாமல்
விருதாவாய் மச்சரமே செய்வன் யாவன்
வெகுகற்ப மவன்மலத்திற் கிருமி யாவ
னரிதான விந்நூலை யுபதே சிக்கு
மாசிரிய னகண்டபரப் பிரமந் தானே
விருதாவா யன்னேன்பான் மச்சரிப் போன்
விசித்திரமாம் பாவத்தை யென்சொல் வேன்யான். (21)

அநந்தவித மறைந்தென்ன வாசான் பாலு
மகிலசகன் முயகனும் பரேசன் பாலுந்
தினந்தவிராப் பத்தியுட னிருப்போ ருக்கே
திகழ்த்தியவிந் நூன்ஞானந் திடமாய்த் தோன்று
மனந்தனிலே தோன்றியவிஞ் ஞானங் கொண்டே
மகத்தான மோட்சசுக மருவ லாகுங்
கனந்தவிராச் சிரத்தையுட னிதைகேட் போருங்
களங்கமெலாந் தவிர்ந்துபரப் பிரம மாவர். (22)

எவையுமுணர் பரசிவனு லியம்ப லுற்ற
விந்நூலை யொருமையுட னிருந்து கேட்போ
ரவனியின்மற் றெந்நூலும் விரும்ப வேண்டா
மநேகவித நூற்களிலுற் பெறும்பே றென்ன
புவியிலுள பதரையெலாங் குத்தி னலும்
புசிக்கவொரு தண்டுலமுங் கிடைப்ப துண்டோ
வசிதமெலா நூற்களிலுங் கேட்ட போது
மகண்டபர சிவஞான மமைவ தில்லை. (23)

ஆதலினு லெந்நூலுந் தூரத் தள்ளி
யதிசயமா மிந்நூலைப் பழகு வோர்க்கே
பேதமிலா வகண்டபர போத முண்டாய்ப்
பிரிவற்ற மோட்சநிலை விரைவிற் பேரு
மீதிலிறை யளவுமிலை யைய நேரே
யான்பெற்ற வநுபூதி யிவித மன்றே
வேதமிலா விந்நூலின் பெருமை யென்னே
யிவையருளுந் தேசிகரின் பெருமை யென்னே. (24)

இவ்விதமாய் நிதாகமுனி தான டைந்த
வினையற்ற வநுபூதிப் பலத்தி னலே
நிவ்வியமாஞ் சற்குருவின் பெருமை யோடு
திகழ்த்தியிடு மிந்நூலின் பெருமை யெல்லாஞ்
செவ்வியதா யாசிரியன் முன்பா யோதிச்
சின்னமிலாச் சொரூபசுகஞ் செறிந்தா னென்றே
யவ்விதமா மறுமுகவன் சைகை வவ்யற்
கருளியவா றகிலர்க்கு மறைந்தான் சூதன். (25)

வேறு.

அகமுறுத நிதாகனகண்டமா மநுபவத்தை யடைந்தபலத்தினுன்
மிகவுமேன்மை பொருந்தியவிந்தநூன் மெய்மைதன்னை விளம்பிய
தேசிகன், மகிமை யோடிலந்த நூலின்மகத்துவ மற்றநூல்களுக்
கில்லையெனச்சொல, னிகரிலாநந்தத் தாண்டவமாடுநற் சின்மலேச
னகண்டசொரூபமே. (26)

நாற்பத்திரண்டாவது

அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 42-க்கு திருவிருத்தம் 1837.

++

நாற்பத்துமூன்றுவது

நீதாகன், ஆசாரியர் கிருபையால் அவித்தை முதலான
வுபாதிநீங்கி நித்த சுத்த புத்த முத்த சிதாகாய
சொரூபமாய்ச் சீவன்முத்தித் தன்மை
யடைந்ததை உரைக்கும்
அத்தியாயம்

அகமுறவே யகண்டபரப் பிரம ஞான
மடைந்ததனு லாநந்த நிருத்த னான
மகிமைமிகு நிதாகமுனி குருவை நோக்கி
மகிழ்வுடனே மீளவுமிவ் வசனஞ் சொல்வான்
தகமைமிகுந் தேசிகவோர் நிமித்த மன்றிக்
தயையொன்று னீயருளு முபதே சத்தாற்
சகமுதலா மயக்கங்க ளணைத்து நீங்கிச்
சத்தியஞா நாநந்தப் பிரம மானேன். (1)

குருவானே நீயருளு முபதே சத்தாற்
குறைவுதரு மவித்தைமுத லுபாதி நீங்கி
நிருமலமாய் நிட்களமாய் நீங்காச் சத்தாய்
நிகழுணர்வாய் நிரதிசயா நந்த மாகிச்
சருவபரி பூரணமாய்ச் சாந்த மாகிச்
சனுதனமாய்ச் சலனமிலாச் சுபாவ மாகி
யருவமதா யயலிலதா யமர்ந்து நின்ற
வகண்டசிதா காயபரப் பிரம மானேன். (2)

உத்தமனே நீயருளு முபதே சத்தா
லுண்மையுறு மாயைமுத லுபாதி நீங்கிச்
சுத்தமதாய்ச் சுகனமாய்ச் சோர்வில் லாதாய்ச்
சுதந்தரமாய்ச் சுயஞ்சோதி சுபாவ மாகி
நித்தியமாய் நிர்க்குணமாய் நிகரில் லாதாய்
நிரஞ்சனமாய் நிராமயமாய் நிமல மாகி
யத்துவித பூரணமா யமர்ந்து நின்ற
வகண்டசிதா காயபரப் பிரம மானேன். (3)

தேசிகனே நீயருளு முபதே சத்தாற்
றிருசியமாய்த் திகழுமய லணைத்து நீங்கி
மாசிலதாய் மனமிலதாய் மலமில் லாதாய்
மகத்துக்கு மகத்தாகி மதிக்கெட் டாதாய்ப்
பாசமிலாப் பரசிவமாய்ப் பரமான் மாவாய்ப்
பராற்பரமாய்ப் பரவிண்ணைப் பகுப்பில் லாதா
யாசணுகா வறிவுருவா யமர்ந்து நின்ற
வகண்டசிதா காயபரப் பிரம மானேன். (4)

ஆசிரிய நீயருளு முபதே சத்தா
லாவரணம் விட்சேப மணைத்து நீங்கிச்
சாசுவத சுபாவமதாய்ச் சலியாச் சித்தாய்ச்
சதாநந்த கனமாகிச் சகசான் மாவாய்ப்
பேசவொணாப் பேரொளியாய்ப் பிரிவில் லாதாய்ப்
பெரிதுக்கும் பெரிதாகிப் பிரமான் மாவா
யீசன்முத லெவையுமிலா தகண்ட மான
வேகசிதா காயபரப் பிரம மானேன். (5)

பாகுருவே நீயருளு முபதே சத்தாற்
பாசவ சகங்களெனும் பகுப்பு நீங்கி
யொருவடிவா யுத்தமமா யொழிவில் லாதா
யுரைமனதுக் கெட்டாத வுண்மை யாகிப்
புரையிலதாய்ப் பூரணமாய்ப் பூமான் மாவாய்ப்
புராதனமாய்ப் புனிதமதாய்ப் பொருவில் லாதா
யிருளொளிமற் றெவையுமிலா வகண்ட மான
வேகசிதா காயபரப் பிரம மானேன். (6)

அற்புதனே நீயருளு முபதே சத்தா
லகத்திலுள பேதமய லணைத்து நீங்கிச்
சிற்பதமாய்ச் சின்மயமாய்ச் சிறிதில் லாதாய்ச்
சிதம்பரமாய்ச் சிதாநந்த கனமே யாகித்
தற்பதமாய்த் தடையிலதாய்த் தளர்வில் லாதாய்த்
தத்துவமாய்த் தான்றுணைத் தணித்த தாகி
நிர்ப்பயமாய் நிரந்தரமாய் நிறைந்து நின்ற
நிகரில்சிதா காயபரப் பிரம மானேன். (7)

மெய்த்தவனே நீயருளு முபதே சத்தான்
மேவுமலே வாதனைக ளனைத்து நீங்கிச்
சுத்தியசிற் சுககனமாய்ச் சலன மின்றிச்
சமமாகிச் சாலவுப சாந்த மாகி
நித்தியநின் மலமாகி நிருவிட் சேப
நிராவரண நிட்கிரிய சுவாப மாகி
யத்துவிதா கண்டபரி பூன்ற மான
வமலசிதா காயபரப் பிரம மானேன். (8)

மாதவனே நீயருளு முபதே சத்தான்
மனதிலுள மயக்கமெலாங் கணத்தி னீங்கிக்
கோதிலதாய்க் குணமிலதாய்க் குறியில் லாதாய்க்
குறைவிலதாய்க் குணிதித சுபாவ மாகி
யேதுமொரு விகற்பமுமே யென்று மின்றி
யேகபரி பூரணமா யிகழ்வில் லாதா
யாதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வமலசிதா காயபரப் பிரம மானேன். (9)

வெகுவிதமாய் விளம்பியென்ன சுருங்கச் சொல்வேன்
வேறறவே தேசிகநீ யுபதே சித்த
தகமைமிகுந் தத்வமசி யாதி வாக்ய
தாற்பரியப் பொருளேயெலா நன்று யாய்ந்திங்
ககமறவே யகப்பிரம மென்னு ஞான
மடைந்ததனா லகண்டபர மாநந் தத்தை
மிகமிகவும் புசித்தவனுய்த் திருத்த னாகி
மெய்யுணர்வா நந்தபரம் பொருளாய் நின்றேன். (10)

சற்குருவின் முன்பாக விந்த நூலின்
சாரமதாம் பரம்பொருளைக் கேட்ட பின்னர்த்
தூர்க்குணமா முலோபமெலாந் தூரத் தள்ளித்
தொடர்புற்ற திரவியமே முதலா லந்தச்
சற்குருவைத் தன்றேக முள்ள மட்டுஞ்
சலியாத பத்தியுடன் பூசிப் போர்க்கே
விக்கினமே யின்றியகம் பிரம மென்னும்
வேறுபடா வகண்டபர ஞானந் தோன்றும். (11)

அன்றியுமே விதியுடனே நியம மாக
வமலமதாம் விபூதியினு லங்க மெல்லா
நன்றுறவே யணிந்துதிரி புண்ட ரத்தை
நலமாகச் சந்தகமுந் தரிப்போ ருக்கே
துன்றியநற் பரமசிவ கருணை யுண்டாந்
தோன்றியவக் கருணையினுற் சித்தந் தூய்தா
யென்றுமொரு விக்கினமு மின்றி நன்று
யிருமையிலா வகம்பிரம ஞானந் தோன்றும். (12)

பத்தியுடன் விபூதியுடைத் தார ணந்தான்
பாசுபத விரதமெனப் பகர லாகுஞ்
சத்தியமாம் விபூதியுடைத் தார ணத்தாற்
சடிதியினி லகண்டபர ஞான முண்டா
முத்தமவிப் பாசுபத விரதந் தன்னை
யொருவருட மநுட்டித்துன் பாதம் பெற்றே
னத்தகின கருளாலின் றகண்ட ஞான
மடைந்தவனு யான்மாவி லமர்ந்து நின்றேன். (13)

சுத்தமதாய் நீயருளு முபதே சத்தைச்
சூட்சமமாம் புத்தியினுன் மனனஞ் செய்து
நித்தமுமே யாதரவா யிடைவி டாம
னிச்சலமா யெப்போது நிதித்யா சித்துச்
சத்துருவா மாவரண விட்சே பங்கள்
சற்றுமிலா வகண்டபர ஞானம் பெற்றிங்
கத்துவித பரப்பிரம சொரூப மாகி
யதிவன்ன வாச்சிரமி யானே னையா. (14)

குறைவறவே செய்கின்ற நிதித்யா சத்தாற்
கோரமூ டங்களெனும் விருத்தி நீங்கி
மறைவறவே சத்துவமாம் விருத்தி யொன்றுன்
மாசற்ற வகண்டபர போதம் பெற்று
நிறைவுறவே யாநந்த மநுப விக்து
நித்தியஞா நாநந்த வடிவே யாகி
யறிவுறுமோ ராச்சிரம வன்ன மின்றி
யதிவன்ன வாச்சிரமி யானே னையா. (15)

சற்குருவே நீயருளிச் செய்த வண்ணஞ்
சந்ததமுஞ் சலியாமற் சித்தை யோடே
நிர்க்குணமாம் பரப்பிரம நானே யென்று
நேசமுட னிரந்தரமாய் நிதித்யா சித்து
முக்குணமுங் கடந்தபர போதம் பெற்று
மூதுணர்வாம் பரப்பிரம நானே யாகித்
தூர்க்குணமா மெக்குணமுந் தூரத் தள்ளித்
துகளற்ற குணாதீத னானே னையா. (16)

ஆசிரிய நீயருளிச் செய்த வண்ண
மனிசமகம் பிரமாஸ்மி யென்ப தாக
நேசமுட னிரந்தரமாய்த் தியானஞ் செய்து
நிகிலமலை விகற்பமுமே நீங்கி னைனைப்
சாசுவத சொரூபத்தி னிருவி கற்ப
சமாதிநிலை பெற்றவனைச் சாந்த னாகிப்
பேசவொணாப் பரப்பிரம போதம் பெற்றுப்
பெருமைமிகும் பிராமணனை னானே னையா. (17)

*கலனழுறுப் பாவனையால் லயவிட் சேப
கஷாயரசாஸ் வாதமெனும் பதிபந் தங்கள்
பலவகையு மிழந்துபரப் பிரமத் தின்கட்
பாலிலுறு நீரெனவே கலந்தொன் றாகி
நிலைமருவு நிச்சலமா நிருவி கற்ப
நிட்டையினைப் பெற்றுநிசா நந்தங் கூர்ந்து
நிலையளவும் பேதமிலா வகண்ட ஞானத்
திறமையுடன் றிடப்பிரக்ஞ னானே னையா. (18)

அங்கமுத லணுவுமிலா தகண்டா காரா
மாகியுள வத்துவித பாசி வத்தைச்
சங்கமறச் சந்ததமுஞ் சிவோக மென்னுஞ்
சலியாத பாவனையாற் பூசை செய்து
துங்கபர சிவகருணை நிடமாய்ப் பெற்றுத்
தொடருமலை விகற்பமெலா முடனே தீர்ந்து
பங்கமிலாப் பரமசிவ போதங் கூர்ந்து
பரமசிவ பக்தனுநா னானே னையா. (19)

*(கலனம்=தோஷம்)

எங்குமுள வெப்பொருளுஞ் சிவமே யென்று
மேகபரி பூரணவச் சிவநா னென்றுங்
துங்கமுறும் பாவனையா லச்சி வத்தைத்
துகளறவே யெப்போதும் பூசை செய்து
தங்கியிடும் பதிபந்த மனைத்துந் தீர்ந்து
தடையற்ற வானந்த மநுப விக்துப்
பங்கமிலாப் பரமசிவ போதங் கூர்ந்து
பரமசிவ பத்தனுநா னுனே னையா. (20)

பின்னமறக் கருணையினு னீயு ரைத்த
பிரஞ்ஞானம் பிரமமுதல் வாக்கி யார்த்த
மன்னுவண நன்முக மனதிற் கொண்டு
மாசறவே மற்றதனை மனனம் பண்ணி
யன்னதனைப் பின்னையுமே யநுசந் தானித்
தஞ்ஞான சந்தேக விபரீ தங்கண்
மன்னியிடா வகண்டார்த்த போத மேவி
மகிழ்சீவன் முத்தனுநா னுனே னையா. (21)

சிரவணமே முதலியதி னப்யா சத்தாற்
சிறுமைதருந் தேகான்ம புத்தி நீக்கிப்
பெருமைமிகும் பிரமான்ம புத்தி மேவிப்
பின்பந்தப் புத்தியுமே யிழந்தோ னகிக்
கருதவொணு வகண்டான்ம போதம் பெற்றுக்
கர்த்திருத்வ முதலான பந்தந் தீர்ந்து
நிரதிசய வானந்த மநுப விக்து
நிகழ்சீவன் முத்தனுநா னுனே னையா. (22)

ஈனமிலாச் சமாதியினி லிருமை யின்றி
யேகபரி பூரணமா யிருப்போ னகி
யூனமிலாச் சமாதிபிரிந் திருக்குங் காலை
யுலகத்தி னுதாசீன விருத்தி மேவி
மானமவ மானமுத லெவையு மின்றி
மைத்திரியே முதலான குணந்நி றைந்து
தீனமுறுக் கெம்பீர சுபாவ மாகித்
திகழ்சீவன் முத்தனுநா னுனே னையா. (23)

சந்தமுஞ் சமாதியினைச் சார்ந்தோ ஞகிச்
சகலமனே விகற்பமுமே தீர்ந்தோ ஞகித்
தொந்தமுறும் பந்தமெலாந் தவிர்ந்தோ ஞகித்
தூயபிர மாநந்தந் தொடர்ந்தோ ஞகிச்
சிந்தைமுதற் கரணசரமாஞ் சுபாவ ஞகிச்
செகசீவ பரங்களெலா மிழந்தோ ஞகி
யந்தமிலா மகிமைமிகுஞ் சீவன் முத்தி
யடைந்தவனு யான்மாவி லமர்ந்தே னையா. (24)

அனிசமகம் பிரமமென்று மதுநா னென்று
மதிதடமா நிலைபெற்ற வுறுதி தானே
துனிமருவாச் சமாதியெனச் செப்ப லாகுந்
துவிதத்தின் றோற்றமெலா மறவு நீங்கி
நினைவெவையு மில்லாத நிருவி கற்ப
நிட்டையுமே சமாதியென நிகழ்த்த லாகுஞ்
சொனவுபய சமாதியினுற் சீவன் முத்திச்
சுகமேவிச் சுத்தபர மானே னையா. (25)

அகிலவித வுபாதியுமில் விதேக முத்தி
யடையுமள வுஞ்ஞான லேசத் தாலே
வெகுவிதமாம் பிராரத்தந் தொலையு மட்டும்
விதம்விதமாந் துவிதத்தி னுபா சங்க
ணிகழினுமே நிச்சலமாஞ் சீவன் முத்தி
நிலையிலுள நானென்றுஞ் சலித்தி டாம
லிகழ்வறவே நேரிட்ட போகந் துய்த்திங்
கென்னிடைநா னின்பமுற விசைந்து நிற்பேன். (26)

புகல்சீவன் முத்தர்க்கும் பிராரத் தத்தாற்
பூடணமுந் தூடணமு மெங்கு முண்டே
யகமேவு மகம்பிரம நிச்ச யத்தா
லவர்சீவன் முத்தரலான் மற்றோர் செய்யும்
வெகுவான பூடணதூ டணங்க ளாலே
விமலமதா நிலைபெற்ற வன்னோர்க் கென்று
மிகழ்வான தெவையுமிலை யெனுமு ரத்தோ
டென்னிடைநா னின்பமுற விசைந்து நிற்பேன். (27)

அகமனிச நித்தபரப் பிரம ரூப
மகமனிசஞ் சுத்தபரப் பிரம ரூப
மகமனிசம் புத்தபரப் பிரம ரூப
மகமனிச முத்தபரப் பிரம ரூப
மகமனிச மசலபரப் பிரம ரூப
மகமனிச மசங்கபரப் பிரம ரூப
மகமனிச மகண்டபரப் பிரம மென்னு
மகம்பிரம நிச்சயவான் சீவன் முத்தன். (28)

மனமுதலாம் வியட்டியுபா திகளு மின்றி
மாயைமுதற் சமட்டியுபா திகளு மின்றி
நனவுமுத ஞநாவா மவத்தை யின்றி
நாடியிடு நாமமுரு வெவையு மின்றி
யனவரத மன்னியமோ நிறையு மின்றி
யகம்பிரம நிச்சயமு மறவு மின்றிக்
கனவறிவாம் பரப்பிரம மாத்ர மாகிக்
களங்கமற நிற்பவனே விவேக முத்தன். (29)

மாதவரின் கருணையினு ணிப் போது
மகிழ்சீவன் முத்நிலை மருவா நின்றேன்
பேதமுறும் பிராரத்த முள்ள மட்டும்
பிரிவறவே யகம்பிரம நிச்ச யத்தைச்
சாதகமாய்ச் சந்ததமுஞ் சாதிப் போனுய்ச்
சங்கற்ப விகற்பங்கட் கிடங் கொடாம
லாநிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வான்மாவி லநவரத மமர்ந்து நிற்பேன். (30)

பேதமுறும் பிராரத்தந் தொலைந்த பின்னர்ப்
பிரிவற்ற பரப்பிரம மாத்ர மாகி
யேதமொரு விகற்பமுமே யின்றி யென்று
மேகபரி பூரணமா யிருப்போ ஞவேன்
சீதளமாஞ் சற்குருவே நானிப் போது
செய்வதெலாஞ் செய்துமுடிந் தவனே யானே
னேதெனினின் கருணையினு லெளிதே யாக
வேகபர ஞானத்தை யிசைந்தே னன்றே. (31)

அகமகில வநிட்டான சொரூப மாகி
யகிலமுமாய்த் நிகழ்கின்ற பிரம மானே
னகமனிய மெவையுமிலா தகண்ட மாக
வமர்கின்ற வத்துவிதப் பிரம மானே
னகமனிச மத்யந்த சுத்த மான
வகண்டசிதா காயபரப் பிரம மானே
னகமனிசஞ் சத்தியசிற் சுகமாய் நின்ற
வகண்டபரி பூன்றபரப் பிரம மானேன். (32)

அகமனிச நிர்க்குணமாம் பிரம மானே
னகமனிச நிட்களமாம் பிரம மானே
னகமனிச நிரஞ்சனமாம் பிரம மானே
னகமனிச நிட்கிரியப் பிரம மானே
னகமனிச நிராமயமாம் பிரம மானே
னகமனிச நிராவரணப் பிரம மானே
னகமனிச நிச்சலமாம் பிரம மானே
னகமனிச நிமலபரப் பிரம மானேன். (33)

சகலமுநின் னருளெனவே நிதாக ணேதிச்
சற்குருவாம் ரிபுமுனியை யிறைஞ்சி யேத்தி
நிகிலமனே விகற்பமுமே நீங்கி நின்ற
நிச்சலமாந் தன்சொரூப நிட்டை யோடு
சுகமுறவே சுதந்தரமா யிருந்தா னென்றே
சோகமெலாந் தீரும்வணஞ் சைகே ஷவ்யற்
கிகழ்வறவே சண்முகனு லியம்பப் பட்ட
விப்பொருளே யாவர்க்கு மிசைத்தான் சூதன். (34)

வேறு.

பேதமின்றிநற் றேசிகன்சொன்னவா பிரமஞானத்தைப் பெற்றநிதாக
னிங், கேதமின்றிய சிற்பரரூபமா யினமார்பவ தாபமிலாமலே
சீதளாநந்த மேவியசித்தனுய்ச் சீவன்முத்தி செறிந்ததைச் செப்புத
நீதிலாநந்தத்தாண்டவமாடுநந் தேவதேவ னகண்டசொரூபமே. (35)

நாற்பத்து மூன்றுவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 43-க்கு திருவிருத்தம் 1872.

†††

நாற்பத்திஞன்காவது.

பரமசிவகருணைக்கு முக்கியவேதுவான நிதித்யாசனமுடன்
இந்நூலின் மகத்துவஞ்சொல்லி முடிக்கும்
அத்தியாயம்.

இந்தவிதந் தான்செய்த வுபதே சத்தா
லிருமையிலா வகண்டபர போதம் பெற்றுக்
தொந்தமுறும் பந்தமெலா முடனே தீர்ந்து
தூயபர மாநந்த மதுப வித்துப்
புந்தியிலோர் சலனமிலா நிதாகன் றன்னைப்
புரையற்ற நிபுமுனிவன் பரிவாய் நோக்கிச்
சந்ததமுஞ் சகலர்க்கு மிகமே யாகச்
சாரமதாய் மீளவுமிவ் வசனஞ் சொல்வான். (1)

உத்தமமா மகண்டபர ஞானம் பெற்றிவ்
வுலகமுதல் வாதனைக ளனைத்து நீங்கி
யத்துவிதா நந்தமிகுஞ் சீவன் முத்தி
யடைந்தவனுய்க் க்ருதகிருத்ய னுனுய் மைந்தா
புத்திமிகுந் துலகிலுள முமுட்சு வெல்லாம்
பூரணமாஞ் சிவகருணை பொருந்து மட்டு
நித்தமுமே யாதரவா யிடைவி டாம
னிதித்யாசஞ் செயும்வகையை நிகழ்த்தக் கேளாய். (2)

நான்ருனே யழிவற்ற சற்சொ ரூப
நான்ருனே யமலமதாஞ் சிற்சொ ரூப
நான்ருனே யாநந்த கனசொ ரூப
நான்ருனே யகண்டைக ரசசொ ரூப
நான்ருனே யகண்டபர மான்ம ரூப
நான்ருனே யமலபர சிவசொ ரூப
நான்ருனே யகண்டபரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (3)

நான்ருனே நிர்க்குணமாம் பிரம ரூப
நான்ருனே நிருமலமாம் பிரம ரூப
நான்ருனே நிட்களமாம் பிரம ரூப
நான்ருனே நிட்கிரியப் பிரம ரூப
நான்ருனே நிச்சலமாம் பிரம ரூப
நான்ருனே நிரஞ்சனமாம் பிரம ரூப
நான்ருனே நிறைந்தபரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (4)

நான்ருனே நிராமயமாம் பிரம ரூப
நான்ருனே நிராவரணப் பிரம ரூப
நான்ருனே நிரந்தரமாம் பிரம ரூப
நான்ருனே நீக்கமிலாப் பிரம ரூப
நான்ருனே நிர்ப்பயமாம் பிரம ரூப
நான்ருனே நிரதிசயப் பிரம ரூப
நான்ருனே நிகரில்பரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (5)

நான்ருனே நித்தியமாம் பிரம ரூப
நான்ருனே நிலைபெற்ற பிரம ரூப
நான்ருனே சுத்தியமாம் பிரம ரூப
நான்ருனே சலமற்ற பிரம ரூப
நான்ருனே யத்துவிதப் பிரம ரூப
நான்ருனே யயலற்ற பிரம ரூப
நான்ருனே சுத்தபரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (6)

நான்ருனே நாசமிலாப் பிரம ரூப
நான்ருனே நவைமருவாப் பிரம ரூப
நான்ருனே பாசமிலாப் பிரம ரூப
நான்ருனே பங்கமுறுப் பிரம ரூப
நான்ருனே சாசுவதப் பிரம ரூப
நான்ருனே சங்கமிலாப் பிரம ரூப
நான்ருனே நேசபரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (7)

நான்முனே யகிலமுமாம் பிரம ரூப
நான்முனே யனைத்துமிலாப் பிரம ரூப
நான்முனே யிகழ்வில்லதாம் பிரம ரூப
நான்முனே யேகபரப் பிரம ரூப
நான்முனே சுகனமாம் பிரம ரூப
நான்முனே சுத்தபரப் பிரம ரூப
நான்முனே துகளில்பரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (8)

நான்முனே சன்மயமாம் பிரம ரூப
நான்முனே சதாநந்தப் பிரம ரூப
நான்முனே சின்மயமாம் பிரம ரூப
நான்முனே சிதாகாயப் பிரம ரூப
நான்முனே நன்மயமாம் பிரம ரூப
நான்முனே நானன பிரம ரூப
நான்முனே நின்மலமாம் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (9)

நான்முனே நித்தபரப் பிரம ரூப
நான்முனே சுத்தபரப் பிரம ரூப
நான்முனே யுத்தபரப் பிரம ரூப
நான்முனே முத்தபரப் பிரம ரூப
நான்முனே நிருத்தபரப் பிரம ரூப
நான்முனே சித்தபரப் பிரம ரூப
நான்முனே நிமலபரப் பிரம மென்றே
நழுவாது நிதித்யாசஞ் செய்ய வேண்டும். (10)

வெகுவிதமாய் விளம்பியென்ன வேதாந்தத்தில்
விதித்தமகா வாக்குகளின் பொருளே யோர்ந்திங்
ககமனிச மகண்டபரப் பிரம மென்று
மகண்டபரப் பிரமமதே யகம தென்றும்
விகலமற வெகுகாலம் பிரிய மோடு
வேறறவே நிதித்யாசஞ் செய்வோ ருக்கே
மிகவரிதாம் பரமசிவ கருணை யுண்டாய்
மெய்யுணர்வா நந்தபர ஞானந் தோன்றும். (11)

ஆதலினு லுலகிலுள முமுட்சு வெல்லா
மத்யந்த வாதரவோ டாசான் முன்பாய்
வேதமுடி விதித்தமகா வாக்கி யத்தின்
வேறற்ற வகண்டார்த்த நிர்ண யத்தை
நீதியுடன் கேட்டதனை மனனஞ் செய்து
நிரந்தரமாய் மற்றதனை நிதித்யா சித்தே
சாதகமாஞ் சிவனருளா லகண்ட ஞானஞ்
சார்ந்ததனன் மோட்சசுகஞ் சாரு வேண்டும். (12)

ஆசிரியன் முன்பாக வகண்டார்த் தத்தை
யடைவாக வறிவுற்ற மாணு னந்தத்
தேசிகனைத் திரியமே முகலி ருத்துந்
நிடமான லோபத்காற் பூசி யானேன்
மோசனமே யிலாதவனுய்க் நும்பி பாக
முதலியநில் வீழ்ந்திடுவ னுதலாலே
தேசிகனை யாவிபொரு ளாக்கை யாலே
தினந்தினமும் பூசிக்க வேண்டு மாணுன். (13)

இந்தவித மருள்வடிவா யெழுந்த வீசன்
யாவர்க்கு மிதமாக வருளிச் செய்த
வந்தமிலா வகண்டபர சிவஞா னத்தை
யழுக்கறவே நிதாகனைக் குரைத்தே னன்பாய்ப்
பந்தமெலா மழிப்பதுவா மிஞ்ஞா னத்தைப்
பகர்ந்தபடி பங்கமறக் கேட்ட டைந்தோர்
சிந்தைமுதற் பந்தமெலா முடனே தீர்ந்து
சின்மயமா மகண்டபர சிவமே யாவர். (14)

இன்னவித மருளியிடு மாசான் வாக்கை
யீனமிலா நிதாகமுனி கேட்ட லோடு
மன்னியநல் லன்புடனே யெழிந்தி றைஞ்சி
மஹமக்கள் யாவையுமே குருவுக் கீந்து
தன்னையுமே சுதனுக வுதகத் தோடு
தன்குருவுக் கீந்தவனுய்த் தனதான் யாதி
யின்னுமுள வெப்பொருளு மன்னே னுக்கே
பிரியமுட னர்ப்பித்துப் போற்ற லுற்றுன். (15)

அனுதினவ வாரிதியி லழிந்த வென்னை
யகண்டபர ஞானமெனு நாவாய் கொண்டு
சனுதனமாம் பரப்பிரம தீரத் தின்கட்
சகசமதா யேற்றியசற் குருவே போற்றி
விநாசமுறுந் தேகாதி நானென் றெண்ணி
விதம்விதமாந் துன்பமிகுந் திருந்த வென்னை
யனுமயமாம் பரப்பிரம நீயென் றேற்றி
யகண்டசுக நல்கியசற் குருவே போற்றி. (16)

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே நீயென்று முபதே சித்துச்
சகமுதலீ துண்மையதாஞ் சடநா னென்றுஞ்
சங்கையெலா நீக்கியசற் குருவே போற்றி
விகலமுறுங் கருமத்காற் கதியுண் டென்று
வெகுகால மயக்கமுடன் சுழன்ற வென்னைத்
தகமைமிகு மகண்டபர ஞானந் தந்து
தற்பரமே யாக்கியசற் குருவே போற்றி. (17)

அருள்வடிவா யெழுந்தருளி யென்னை யாண்ட
வகண்டபர வுருவான குருவே போற்றி
சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரியபர குருவே போற்றி
நிருமலமாய் நிட்களமாய் நிகரில் லாதாய்
நீக்கமற நிறைந்தபர குருவே போற்றி
பரசிவமாய்ப் பாற்பரமாய் பரமான் மாவாய்ப்
பரப்பிரம மானபர குருவே போற்றி. (18)

விமலமதாய் வேறற்ற வகண்டா கார
விருத்தியினில் விளங்கியசற் குருவே போற்றி
யமலமதா யகண்டபர வித்தை யாகி
யவித்தையெலா நீக்கியசற் குருவே போற்றி
நிமலமதாம் வித்தைக்கு மப்பா லாகி
நிச்சலமாய் நின்றபர குருவே போற்றி
சமமதுவாய்ச் சற்றுமொரு சங்க மின்றிச்
சன்மாத்ர மானபர குருவே போற்றி. (19)

சத்தியசிற் சுககனமாங் குருவே போற்றி
சலனமிலாச் சாந்தபர குருவே போற்றி
நித்தியநிர்க் குணமான குருவே போற்றி
நிரஞ்சனமாய் நின்றபர குருவே போற்றி
சுத்தபர வெளியான குருவே போற்றி
சூட்சுமமாய் நிறைந்தபர குருவே போற்றி
யத்துவித பூரணமாங் குருவே போற்றி
யகண்டமதாஞ் சற்குருவே போற்றி போற்றி. (20)

சகலமுமே தட்சணையாக் குருவுக் கீந்து
சலனமிலாப் பத்தியுட னிறைஞ்சி யேத்தி
நிகரிலதாம் பணிவிடைகள் செய்யு மந்த
நிதாகமுனி தனைநோக்கிக் குரவன் சொல்வான்
மகிழ்வுடனீ பணிவிடைகள் செய்ததா லியான்
மகத்தான சந்தோட மருவ லானேன்
றருமகனே யினியெவையு முன்னுற் செய்யத்
தக்கதிலை தன்யகிரு தார்த்த னீயே. (21)

புத்திரனே யத்யந்த நிடமே யாகப்
பூரணமாம் பரப்பிரம போதம் பெற்றாய்
மித்தையதாஞ் சம்சார மினத்து நீங்கி
மெய்யுணர்வா நந்தபரப் பிரம மானாய்
சத்தியமே யாகினீ விதேக முத்தி
சாருமள வகம்பிரம நிச்ச யத்தை
நித்தமுமே யாதரவா யிடைவி டாம (22)
னிரந்தரமாய்ப் பழகுநிச நிலையி னிற்பாய்.

அநிதிடமா மகம்பிரம நிச்ச யத்துக்
கயலெவையு மோட்சத்துக் கேது வல்ல
வநிதிடமா மகம்பிரம நிச்ச யந்தா
னகண்டபர மோட்சத்துக் கேது வாகு
மநிதிடமா மகம்பிரம நிச்ச யத்தை
யநவரத மாதரவாய்ப் பழகு வோர்க்கே
யநிதிடமா மகம்பிரம நிச்ச யத்தா
லரிதான மோக்ஷநிலை யெளிதா யெய்தும். (23)

பேதமுறு வகம்பிரம நிச்ச யந்தான்
பின்னமிலா வகண்டபர மோட்ச நல்கு
மேதுமிதி லியமியே சத்தி யந்தா
னீசனிரு பதத்தாணை சத்தி யந்தா
னுகலினுன் முழுட்சுவெலா மறைந்த வண்ண
மநவரத மகம்பிரம நிச்ச யத்தைச்
சாதகமாய்ச் சாதித்தே யகண்ட போதஞ்
சார்ந்ததனுன் மோட்சநிலை சார வேண்டும். (24)

கலனமிலா வகண்டபர மோட்சத் துக்குக்
காரணமா மகம்பிரம நிச்ச யத்தைச்
சலனமறத் திடமாகத் தருவ தற்குச்
சாற்றியவிந் நூலெனமற் றெவையு மில்லை
நிலைமருவும் பரமசிவ னெனக்கு நேரே
நிகழ்த்தியவிந் நூலுக்கு நிகரொன் றுண்டோ
பலவிதமா முலகத்து மிந்த நூலே
பரமியவெந் நூலுக்குஞ் சார மாகும். (25)

சகலவித மறையிலுநற் சார மீதே
சகலமறை முடிவிலுநற் சார மீதே
சகலவித நூற்களிலுஞ் சார மீதே
சகலவிதி காசத்துஞ் சார மீதே
சகலவித குருவருளுஞ் சார மீதே
சகலசெப தவங்களிலுஞ் சார மீதே
சகலவித புவனத்துஞ் சார மீதே
சகலபொருட் களிலுமகா சார மீதே. (26)

சகலவித சனனத்தின் மோட்ச மீதே
சகலர்க்குஞ் சுலபமதா மோட்ச மீதே
சகலவித துயருமிலா மோட்ச மீதே
சந்ததமுஞ் சுகமான மோட்ச மீதே
சகலவித புலனுமிலா மோட்ச மீதே
சந்ததமும் பூரணமா மோட்ச மீதே
சகலமதின் சாரமதா மோட்ச மீதே
சந்ததமுஞ் சாம்பிராச்ய மோட்ச மீதே. (27)

சிரவணமே முதலியதைச் செய்த லாலே
சின்மாத்ர மாகுவதா மோட்ச மீதே
தாளமலே விகற்பமெலாந் தவிர்த்த லாலே
தன்மாத்ர மாகுவதா மோட்ச மீதே
விரவுசக முதலியதை விடுத லாலே
விசேடமற நிற்பதுவா மோட்ச மீதே
சரமசர மெவையுமிலா திகழ்த லாலே
சத்தியசிற் சுககனமா மோட்ச மீதே. (28)

இவ்விதமா மகிமைமிகு மிந்த நூலே
யாவர்க்கு மிதமாகக் கருணை யாலே
திவ்வியமங் களவடிவா யெழுந்த வீசன்
றிகழ்த்தியவா நிதாகரினைத் தலைமை யாக்கிச்
செவ்வியவிச் சுகர்முதலா முனிவர்க் கெல்லாஞ்
சிந்தையினிற் செறியும்வணஞ் செப்பி னேனிங்
கவ்விதமா மிதைக்கேட்ட விவரெல் லோரு
மகண்டபர போதத்தா லதுவே யானார். (29)

இந்தவிதங் கெம்பீர வாக்கி னலே
யாவரையு நோக்கிரிபு விசைத்த லோடு
மந்தமிலா மகிழ்வுடனே நிதாக ரங்கே
யாநந்த வாரிதியி லபர்ந்து நின்றான்
சுந்தரமா நிதாகரிபு சம்வா தத்தைச்
சுகராதி முனிவரெலாங் கேட்டங் கத்தாற்
பந்தமிலாப் பரப்பிரம போதம் பெற்றப்
பரப்பிரம வடிவாகிப் பாசந் தீர்ந்தார். (30)

பிந்திமகா முனிவரெலா மகிழ்வு கூர்ந்து
பிரியமுடன் ரிபுமுனியை வணங்கிச் சொல்வார்
பந்தமிலாப் பரகுருவே கருணை யாலே
பரமசிவ னருளியவா றகண்ட ஞான
சிந்துவினை யெங்கட்கின் றுபதே சித்துச்
சிந்தைமுதற் பந்தமெலா முடனே தீர்த்தவ்
வந்தமிலா வகண்டபர மாநந் தத்தை
யளித்தனைநின் கருணையினை யென்சொல் வோமியாம். ()

சலனமிலாச் சற்குருவே நின்பா தத்தைச்
சரணமதாச் சார்கின்ற வெம்மை யெல்லா
மலைவில்பர மாநந்த மடையும் வண்ண
மவித்தைமுத லனுதிபவ வாரி நின்று
முலைவுபெரு வகண்டபரப் பிரம ஞான
வுபதேச மென்னுமகா நாவாய் கொண்டே
யிலகுபரப் பிரமமெனுந் தீரத் தேற்றி
யிப்பவமீண் டணுகாம லாண்டா யன்றே. (32)

ஆதலினுற் றந்தையுநீ தாயு நீயே
யதிசயமா மற்றுமுள பந்து நீயே
சாதகமாஞ் சற்குருநீ சகாவு நீயே
சகலமுமே நீயென்று வணங்கி யேத்திச்
சீதளமா மனதுடனே பவதா பங்கள்
சிறிதுமிலாச் சின்மாத்ர நிட்டை கூடி
யாதிமுடி வொன்றுமிலா வகண்டா நந்த
வாழியினி லசஞ்சலமா யமர்ந்தா ரன்னோர். (33)

இந்தவிதம் ரிபுமுனிவன் கைலா சத்தி
லைமதீசன் கருணையினு லடைந்த நூலைப்
பந்தமற நிதாகன்முதன் முனிவர்க் கெல்லாம்
பகர்ந்தவரைப் பாவடிவாய்ச் செய்த பின்ன
ரந்தமிலா வானந்தத் தமர்ந்து நின்று
னவ்விதமே நினக்கிதனைச் சைகே ஷவ்யா
சுந்தரமா யருள்செய்தே னினிஞா னுங்களு
சூட்சுமமா யருள்செய்வே னிதனைக் கேளாய். (34)

உலகினிடை யந்தணரே யாதி யாக
வுற்பத்தி பொருந்தியிடுஞ் சீவ னெல்லா
மிலகுமறை விதித்தபடி முன்பு கன்ம
மிகழாது செயவேண்டுஞ் செய்யுங் காலைத்
திலகமதா மறைமுடியில் விதிக்கப் பட்ட
நிவ்வியமாம் விபூதியினை நியம மோடு
சலனமற்ச் சந்ததமுந் தரிக்க வேண்டுஞ்
சற்றுமிது லனுசரவே செய்ய வொண்ணு. (35)

பூதியிலு லங்கமெலா நன்முய்ப் பூசிப்
பொருவிறிரி புண்டரமு மணிந்து கொண்டு
மாதவனே நியமமுட னுருத்தி ராக்க
மாலைகளுஞ் சிரமுதலிற் றரித்துக் கொண்டிங்
கோதியிடு முருத்திரபஞ் சாட்ச ராதி
யுத்தமமா மந்திரமுஞ் செபித்துக் கொண்டு
நீதியுட னிகழுமகா லிங்கத் தின்க
ணித்தியமா யர்ச்சனையுஞ் செய்ய வேண்டும். (36)

அத்தனுடைப் பூசனைபோ லன்பர் பூசை
யதுதினமு மாதரவா யியற்ற வேண்டு
முத்தமமா யோதியவோர் சிவத லத்தி
லுடனுள்ள பரியந்தம் வசிக்க வேண்டுஞ்
சுத்தமதாஞ் சிவநாம கீர்த்த னத்தைச்
சோர்வறவே சந்ததமுஞ் செய்ய வேண்டு
மெத்தவுமே யுத்தமமாஞ் சாம்ப மூர்த்தி
மேனியுடைப் பாவனையும் பண்ண வேண்டும். (37)

வேதவதி காரமுளோர் விதித்த வண்ணம்
விகலமற யாவையுமே செய்ய வேண்டு
மீதிலதி காரமிலாச் சூத்தி ராதி
யாவருமே சிசுரூடை யாதி கன்ம
நீதியொடு நழுவாது செய்து கொண்டே
நிருமலமாம் விபூதியுடைத் தார ணுதி
சாதனமோ டேதுமொரு சிவத லத்திற்
சந்ததமுஞ் சலியாது வசிக்க வேண்டும். (38)

தகைமைமிகும் விபூதியுடைத் தார ணத்துந்
தவிராம லுருத்திராக்க தார ணத்து
மகிமைமிகுஞ் சிவநாம கீர்த்த னத்து
மகேசனுடைத் தியானத்துஞ் சிவத லத்தி
லிகழ்வறவே வாசத்து முலகி லுள்ளோ
ரியாவர்க்கு மதிகார மிருப்ப தாலே
சகமதனின் முழுட்சுவெலா முறையா யிங்குச்
சாற்றியவிச் செய்கையினைச் செய்ய வேண்டும். (39)

மாதவனே யோதியஷிச் செய்கை யெல்லா
மகத்தான ஞானுங்க மென்ன லாகு
மோதியஷிவ் வங்கமுடன் சிரவ ணுதி
யுற்றவரே பரமசிவ னருளி னுலே
யாதிமுடி வொன்று;மிலா வகண்ட ஞான
மடைந்ததனு லஞ்ஞான மனைத்து நீங்கிப்
பீதிசெயு மனுதிபவ பந்தந் தீர்ந்து
பின்னமிலாப் பரப்பிரம சொரூப மாவர். (40)

பூதியினு லணிந்ததிரி புண்ட ராதி
பொருந்தினரே வேதாந்த விசாரந் தன்னி
லேதமிலா வதிகார மிசைந்தோ ராவ
ரிதரரெலா மதிகார ராக மாட்டார்
வேதமுடி யிவ்விதமே விதிப்ப தாலே
வேதவிதிக் கயலான விதியொன் றுண்டோ
வாதலினு லறைந்தவதி காரம் பெற்றே
யகண்டபர விசாரணையைச் செய்ய வேண்டும். (41)

அருந்தவனே விபூதியுடைத் தார ணுதி
யங்கமெலா மில்லாபற் சமத மாதி
விரிந்ததிட சந்யாசி யான போதும்
விசாரணையி லதிகாரி யாகா னன்னுனே
பொருந்தியவன் விசாரணையே செய்த போதும்
பூரணமாம் பரமசிவ னருளி லாதா
னிரந்தரமாம் பரப்பிரம ஞானஞ் சாரா
னிகழ்த்தியது நிச்சயமே யைய மில்லை. (42)

பலவிதமா யுரைத்தென்ன பகர்ந்த வண்ணம்
பழுதற்ற ஞானுங்கம் பற்றி னோராய்ச்
சலனமற விந்நூலை விசாரிப் போரே
சம்புவினுற் சாற்றியவிந் நூலின் ஞான
மலைவறவே யடைந்ததனு லகண்டா நந்த
மமைவுற்றவ் வகண்டபர மாவ ரென்றே
யிலகியிடுஞ் சண்முகவன் சைகே ஷவ்யற்
கிணையற்ற விந்நூலை யுபதே சித்தான். (43)

அவ்விதமே சூதமுனி யிந்த நூலை
யகிலமகா முனிவர்க்கு மருளிச் செய்தான்
செவ்வியதா மிந்நூலைக் கேட்ட லோடுஞ்
சின்மயமாம் பரப்பிரம ஞான மேவித்
திவ்வியமா மானந்த மநுப வித்துத்
திருத்தியொடம் முனிவரெலாங் குருவை நோக்கித்
தெவ்வியிடா வன்புடனே யிறைஞ்சி யேத்திக்
கற்பரமே தாமாகிச் சுகித்தி ருந்தார். (44)

சூதமகா முனிவரனு மிந்த வண்ணஞ்
சூட்சுமமா மிந்நூலை முனிவர்க் கெல்லாம்
பேதமற வுபதேசித் தவரை யெல்லாம்
பின்னமிலாப் பரப்பிரம வடிவே யாக்கிப்
போதகன மானபர சிவத்தை நோக்கிப்
பூரணமா மன்புடனே யிறைஞ்சி யேத்தி
யாதிமுடி வொன்றுமிலா தகண்ட மான
வானந்த சிந்துவினி லமர்ந்து நின்றான். (45)

கற்பிதமாம் பேதமெலாம் போக்கு மிந்நூல்
களங்கமிலாப் பரப்பிரம மாக்கு மிந்நூ
னிற்பயமா நிட்டையினை யளிக்கு மிந்நூ
னிரதிசயா நந்தத்தை நல்கு மிந்நூ
லற்புதமா மிந்நூலின் கவியி லக்க
மாயிரமோ டொன்பானூற் றறுநான் காகும்
பற்பலவா நூலையெலாம் விட்டிந் நூலைப்
பரிவுடனே முழுட்சுவெலாம் பார்க்க வேண்டும். (46)

சுகமுறவே யிந்நூலை யுபதே சித்த
சூதமகா முனிவனிரு பதங்கள் போற்றி
விகலமற வன்னேனுக் குபதே சித்த
வியாசமகா முனிவனிரு பதங்கள் போற்றி
யகமறவே வினவியிடுஞ் சைகே ஷவ்ய
ஞானமகா முனிவரரின் பதங்கள் போற்றி
திகழ்வுறவே யன்னேருக் குபதே சித்துத்
தெரிவித்த சண்முகவன் பதங்கள் போற்றி. (47)

அருளுடனே யன்னைனுக் குபதே சித்த
வம்பிகையின் றிவ்வியநற் சரணம் போற்றி
நிருமலமாய் வினவியிடு நிதாக ணுதி
நிகிலமகா முனிவரரின் சரணம் போற்றி
யிருளறவே யன்னைருக் குபதே சித்த
விணையற்ற சிபுமுனிவன் சரணம் போற்றி
பரிவுடனே யன்னைனுக் குபதே சித்த
பாற்பரமாம் பரமசிவன் சரணம் போற்றி. (48)

அகிலவதிட் டானபர சொரூபம் போற்றி
யனைத்துமிலா வத்துவித சொரூபம் போற்றி
துகளணுகாத் துரியபர சொரூபம் போற்றி
துரியத்து மதீதபர சொரூபம் போற்றி
யகமருவா வகண்டபர சொரூபம் போற்றி
யான்மாவுக் கபின்னபர சொரூபம் போற்றி
நிகரிலதாய் நின்றபர சொரூபம் போற்றி
நீக்கமற நிறைந்தபர சொரூபம் போற்றி. (49)

சற்போத சுகனமாஞ் சொரூபம் போற்றி
சலனமிலாச் சாந்தபர சொரூபம் போற்றி
தற்போத சூனியமாஞ் சொரூபம் போற்றி
தன்மயமாய்த் தனித்தபர சொரூபம் போற்றி
கற்போல நிச்சலமாஞ் சொரூபம் போற்றி
களங்கமிலா நிட்களமாஞ் சொரூபம் போற்றி
யெப்போது மிருமையிலாச் சொரூபம் போற்றி
யேகமதாம் பரப்பிரம சொரூபம் போற்றி. (50)

சத்தியஞா னந்த சொரூபம் போற்றி
சகலபரி பூரணமாஞ் சொரூபம் போற்றி
நித்தியஞா னந்த சொரூபம் போற்றி
நிரஞ்சனநிர்க் குணமான சொரூபம் போற்றி
யித்துவித லேசமிலாச் சொரூபம் போற்றி
யேகசிதா காயபர சொரூபம் போற்றி
யத்துவித மானபர சொரூபம் போற்றி
யகண்டமதாம் பரசொரூபம் போற்றி போற்றி. (51)

வேறு.

தேசிகன்றெரி வித்த திறப்படி
தீரமாய்நிந்தித் யாசம் புரிந்ததா
லீசனல்லருள் பெற்றவர் முத்தியை
யெய்தலாமென முன்பு விளம்பிமற்
றேசிலாவிந்த நூலின் மகத்துவ
நியாவுமோதி யிகணை முடித்திட
லாசிலாநந்தத் தாண்டவ மாடுந
மம்பிகேச னகண்ட சொரூபமே. (52)

நாற்பத்துநான்காவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 44-க்கு திருவிருத்தம் 1924.

திருச்சிற்றம்பலம்.

ரிபுகீதை முற்றிற்று.

விளம்பரம்

இப்புத்தகம், சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிகர் மடாலயத்திலும்,
கோட்டையூர் க. வீ. சொ. அழகப்ப செட்டியார் கடைத்திலும்,
புதுக்கோட்டை சீமை பனையப்பட்டி சி. மு. சி. சின்னையாசெட்டியார் கடத்திலும்,
மதுரை வெங்கலக்கடைத் தெரு ஜவுளிக்கடை சி. மு. ஷண்முகம் பிள்ளை யிடத்திலும்,
விற்பனைக்குத் தயாராகவிருக் கின்றபடியால் வேண்டியவர்கள் மேி விலாசங்களுக்கு எழுதி வி. பீ. மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ரிபுகீதை பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	22	முறுதீர	தீரமுறு
9	29	முத	முதல்
10	3	நேரப்	நோய்ப்
10	12	திசை	தசை
10	28	மவை	மது
24	26	டய	டா
25	16	சொருப	சொரூப
26	4	மிலரச்	மிலாச்
28	14	தெரிவி	தெரிவு
31	29	ததைதைச்	தத்தைச்
32	14	கார்த்தா	கர்த்தா
34	18	ஒதிய	ஒதிய
34	20	ாதி	யாதி
42	3	றிலோர்	றியிலோர்
42	9	சோருப	சொரூப
43	17	சாஞ்	சாசஞ்
45	5	யிகழ்ந்	யிகந்
46	2	அண்ட	அகண்ட
50	7	செர	செர
51	16	மதிலங்	மலதிங்
53	29	தயர	தபர
55	19	காப்பா	கப்பா
57	15	சொரூம	சொரூப
60	2	ஏதமினி	ஏதமனி
66	19	மதுமே	மதுவே
71	8	மென்னு	னென்னு
71	22	சொரூ	சொரூப
73	21	மணு	மணுவு
79	9	னிகழ்	நிகழ்
79	18	சிவ	சிவன்
83	5	தோன்றி	தோற்றி
86	3	யாகு	யாகுஞ்
90	23	மான்மா	மான்ம
95	21	னந்	னந்த
100	3	வறிவ	வறிவு
101	22	யாக	பாக
105	27	மான்ம	யான்ம
106	17	ஷி	ஷி
110	3	மென்னும்	மென்றும்
110	20	வெளி	யொளி
119	2	வெனவே	தெனவே

பக்கம்.	வ்ரி.	பிழை.	திருத்தம்.
120	20	மேநான்	மேநா
121	6	வித்தி	வித்த
122	28	தறிவு	வறிவு
125	11	பதின்	பதி
126	25	சித்ர	சித்திர
127	7	தமே	தழுமே
134	11	யறறு	யற்று
138	32	சச்தே	சத்தே
141	24	ரனு	ரணு
142	14	மேநான்	மேநா
142	18	சுகங்	சநங்
143	13	மாத்ர	மாத்ரம்
149	22	கொண்ட	கொண்டே
155	16	மாஞ்ஞ	னென்றே
155	17	யதுசங்	யநுசங்
155	19	னம	னக
155	31	வமையு	வமைவு
160	29	காஞ்	காரஞ்
164	5	கின்ரே	நின்ரே
171	7	தெலா	தெலாஞ்
171	21	தனற்	தநனற்
171	32	ரூணை	ஞூணை
177	19	மேன்	மென்
178	26	மஞ்	வஞ்
178	33	பொதும்	போதும்
179	3	மெமை	யெவை
179	15	மில்லை	வில்லை
184	11	மறக்	மரக்
192	8	யுமா	யுமா
197	12	னத்தாற்	னந்தான்
200	23	சத்தியமும்	சத்தியமு
201	30	யோதி	மோதி
204	2	மேநான்	மேநா
208	28	மிகழ்	மிக
213	11	தாய	தாயு
220	7	கபா	கபர
222	28	ளலன் வுள்	னல னுள்
225	26	வன்றித்	வின்றித்
238	7	லன்ரே	லன்ரே
242	19	வரி	வறி
244	9	சித்த	சிந்த

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
244	33	செப்	செய்
249	18	ளெல்லா	ளெல்லாம்
252	10	பரே	பரே
260	16	யப்பா	யப்யா
273	24	யுல்ள	யுள்ள
275	18	நந்ந	நந்த
276	13	பாா	பரா
282	22	சித்து	சிந்து
283	11	விதன்	யிதன்
287	2	னக்கு	தனக்கு
301	11	தமக	தம்மக
302	27	பிறங்	பிறங்கி
310	17	யறி	றறி
319	26	அலவு	அலவ
325	4	கயன்மா	கயமா
338	29	நிகழ்	நிகழ்த்
341	25	சகித்	சுகித்
344	5	விவை	மிவை
344	9	த்துச்	த்துக்
349	9	தெரியு	தெரிவு
351	19	சுகத்	சகத்
353	16	விசாக்	விசாரிக்
354	4	பிரம்மென்	பிரம மொன்
355	27	வேணு	வேணு
356	4	ரபொ	ரம்பொ
361	28	வேதாந்	வேகாந்
361	33	யுறு	வுறு
375	17	னெவையி	ரணத்தி
377	32	வதும்	வதுவும்
379	15	சகமு	சகலமு
379	18	நிசை	தசை
381	28	பயத்து	பயது
382	32	மிலாத்	மிலா
383	2	மாமே	மாவே
383	25	மான்	மான்மா
384	32	மகம	மகம்
386	28	சித்தத்	சித்த
386	29	சகலத்	சகல
388	35	சக	சகன்
389	17	யான்மா	யான்மாவி
393	28	மெல்லா	மெல்லாம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
395	21	சுத்தம	சுத்தவ
396	13	யென்னு	யென்று
398	21	மென்றும்	மென்று
404	25	மனது	மனதை
406	27	லிபதா	லியதா
411	22	மதாம்	தமாய்
412	4	னென்னுங்	னெனுங்
413	16	தமாய்	தமாம்
418	28	மின்றி	மன்றி
424	7	தோர்	தோங்
425	21	யாக	யாகா
426	19	திரியை	கிரியை
432	15	தோன்று	தொன்று
432	25	யடை	றடை
434	15	பிரிவு	பிரிவ
434	29	சாங்	சார்ங்
435	21	றியது	றியதும்
436	27	சன்ம	சின்ம
438	1	அதத	அத்தி
440	22	முத்திப்	முத்தி
440	24	சைகீ	சைகீ
441	2	நுப	னநுப
442	26	விகா	விகார
445	7	பாவள	பாவன
445	21	சூட்ச	சூட்சு
455	31	மனேக்து	மனேத்து
458	2	ஆசரிய	ஆசிரிய
458	27	வுப்பிறி	வும்பிறி
459	2	மையை	மை
460	19	னவந	னவன
464	24	னிதை	னிதைக்
465	11	பூதிப்	பூதி
465	25	யாம்	யாயம்
466	11	மன்றி	மின்றி
468	7	வாப	பாவ
470	25	பிரக்ஞ	பிரஞ்ஞ
473	17	விவேக	விதேக
477	20	யுத்த	புத்த
478	28	யெழி	யெழு
479	2	லழிங்	லாழ்ங்
480	16	றரு	றரு